ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்ரம் பகுதி-I

சேங்காலிபுரம் ப்ரம்ஹஸ்ரீ

அனந்தராம தீக்ஷிதர்



।। श्रीकृष्णाय परस्मै ब्रह्मणे नमः ।।



।। श्री जयमङ्गल स्तोत्रम् ।।

ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்ரம்

முதல் பகுதி

(1ம் பாகம் முதல் 7ம் பாகம் வரை)

அம்ருதவாக்வர்ஷீ, உபன்யாஸக சக்ரவர்த்தி, வைதிக தர்ம ஸம்ரக்ஷக, ப்ரவசன துரீண, வேத யாக பரிபாலக, ராமாயண தத்வ உபதேசக, ராமாயண கேஸரி, பாரத ஸிம்ஹம்

சேங்காலிபுரம்

ப்ரம்ஹஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

அவர்களால் தொகுக்கப்பட்டு, அவர்களது தமிழ் உரையுடன் கூடியது.

காப்பிரைட்] 2011 (2 பகுதிகள்) விலை ₹600/-

முகவுரை

மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் மிகுந்தது நம் பாரத தேசம். ஸ்ரீ ஆதிசங்கரர் முதலிய அவதார புருஷர்கள், தாங்கள் தர்சனம் செய்து, ஸ்ரீபகவானின் திவ்ய மூர்த்தங்களை மனமுருகி ஸ்தோத்ரம் செய்து, நாமும் பயன் பெறும்படி, ஆனந்தப்பட்டுள்ளார்கள். இம்மாதிரி அபூர்வமான ஸ்தோத்ரங்களின் தொகுப்புதான் இந்த ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்ரம்.

மதுரமானதும், காம்பீர்யம் நிறைந்ததுமான தனது வாக்கால் ஆஸ்தீக ப்ரசாரம் செய்து எத்தனையோ மனிதர்களுக்கு ஆஸ்தீக உணர்வை வ்ருத்தி செய்து, இன்றும் ஆஸ்திகர்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் எனது ஸ்ரீ பெரிய தகப்பனார் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், ஆஸ்தீக உலகிற்கு பெரும் பொக்கிஷமாக தொகுத்து அளித்துள்ள ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்ரத்தை, கம்ப்யூட்டர் கொண்டு டைப் செட்டிங் செய்து பெரிய எழுத்துகளைக் கொண்ட புதிய பதிப்பு அச்சிட்டு வெளியிடு-வதை பெரும் பாக்யமாகக் கருதுகிறேன்.

இதில் ஒவ்வொருவருக்கும் எவ்வித கஷ்டங்களும் வராமல், மேன்மேலும் க்ஷேமத்தைத் தந்து ரக்ஷிக்கக்கூடிய ஸ்தோத்ரங்கள், அர்த்தத்துடன் (பதிமூன்று பாகங்களும் இரண்டு வால்யூம்களாக) இருக்கிறது. ஜோஸ்ய சாஸ்த்ரத்தின் மூலமாக அறியப்படும் அனேக குறைகளுக்கு பரிஹாரங்களான பல அரிய ஸ்தோத்ரங்களையும் கொண்டது.

ஆஸ்திகர்களுக்கு உபயோகமாகும் வகையில், ஒவ்வொரு ஸ்தோத்ரத்தின் பலன்களும் பொருளடக்கத்திலேயும் சேர்த்துள்ளது. ஸம்ஸ்க்ருத ச்லோகங்களை தமிழில் படிக்கும்போது உச்சரிப்பு சரியாக வருவதற்கு உதவியாக, தமிழில் உள்ள ச்லோகங்களை குறியீட்டு எண்களுடன் சேர்த்து வெளியிட்டுள்ளது.

அச்சிடுவதற்கு தேவையான தரமான பேப்பரை கொடுத்த ஈரோடு, சேஷசாயி பேப்பர் கம்பெனி சி.எம்.டி. ஸ்ரீ.கோபாலரத்னம் அவர்களுக்கும், டைரக்டர் ஸ்ரீ.பிச்சை அவர்களுக்கும், மற்றுமுள்ள நிர்வாகிகளுக்கும், சுலோங்களை தேவநாகரியிலும், தமிழிலும் கம்ப்யூட்டரில்

டைப் செய்த, ஸ்ரீதீக்ஷிதரின் பூர்வாச்ரம புத்ரர் சிர.எஸ். ஏ.ராமக்ருஷ்ணனுக்கும், மிகுந்த பக்தியுடனும், ச்ரத்தையுடனும் ப்ரூஃப் பார்த்து உதவிய பெங்களூர், ஸ்ரீ.எல்.விஜயராகவன் அவர்களுக்கும், மிகுந்த பொறுப்பு எடுத்துக்கொண்டு, மிக நல்ல முறையில் இந்த புஸ்தகத்தை அச்சிட்டுக் கொடுத்த சிவகாசி, பாப்கோ ப்ரிண்டர்ஸுக்கும், அதன் பங்குதாரர் ஸ்ரீ.சுந்தருக்கும், கம்ப்யூட்டரில் டி.டி.பி அச்சுக்கோப்பு பணியை நல்ல முறையில் செய்து கொடுத்த சேலம், எஃப்.ஒன் நிறுவன உரிமையாளர் ஸ்ரீ.சந்திரனுக்கும், ஸ்ரீ பகவானின் பரிபூரண அனுக்ரஹம் ஏற்பட ப்ரார்த்திக்கிறேன்.

ஆஸ்தீக அன்பர்கள் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து, பக்தியுடன் பாராயணம் செய்து, தெய்வ அனுக்ரஹம் பெற்று, சந்தோஷம் நிறைந்து நீடூழி வாழ ப்ரார்த்திக்கிறேன்.

உபன்யாஸக சக்ரவர்த்தி

சேங்காலிபுரம். என்.ராம தீக்ஷிதர்

வடகுடி (போஸ்ட்)

(வயா) நன்னிலம். 610 105

09443409121

Copies are available at

N.Subhadra and co
1, Second Cross
Maravaneri
SALEM 636 007
Phone;0427-2415873

Sri.N.Rama Deekshithar
Vadagudi (Post)
(Via) Nannilam
Nagai District. 610 105
Phone: 094434 09121

Giri Trading Agency
(Also at their branches)
58/2, T.S.V.Koil Street
Mylapore, CHENNAI 600 004
Phones : 044-24942530,

R.S.Vadhyar and Sons
Kalpathi
Palakkad 678 003
Kerala
Phone: 0471-2577513

Agasthiar Book Depot
9-A, Clive's Building
33, Nandi Koil Street
Teppakulam, Trichy 620 002
Phone: 0431-226061

Vijay Musicals
24,Kaliamman Koil Street,
Chinthamani,
Trichirappalli-620 002.
Ph:0434-2706896,2716261

Bhavani Book Centre
No.19, Station Road
West Mambalam
Chennai - 600 033
Ph : 044-24748124

Sri Vidhya Book Centre
No.7, Sannadhi Street
Mylapore
Chennai - 600 004.
Ph:044-24611345

Kalaimagal Traders
7, Ponnambala Vadhyar Street
Near Kapaleeswarar Temple
Mylapore
Chennai-600 004.
Ph: 044-24953032

Chakra Traders
7,Ponnambala Vadhyar Street
Mylapore,
Chennai-600 004
Ph No-044-24613114

Vijaya Stores
& Book Sellers
No.24/1, South Mada Street
Mylapore
Chennai-600 004.
Ph: (044) 4940007

Sri Markandeya
Book Gallery
42.43.44,Kumbeswarar
Sannathi
Kumbakonam-612 001
PH No-0435-2422779

Jayalakshmi Indulogical
Book House
6, Apparsamy Koil Street
Opp Samskrite College
Mylapore
Chennai 600 004
Ph No : 044-24990539

Chandra Book Shop
5, Car Street,
Salem-636 001
Ph : 0427 2265635

Sri Surabhi Jagathguru Sathapathi Puplications
158/12,Lake View Road
West Mambalam
Chennai-600 033
Ph No : 044-42668005

M/s.Cheran Book House
No.218, Periyakadai Veethi
Coimbatore-641001.
Ph No : 0422-2396623
0422-4355453

ஸ்ரீராமஜயம்

சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

சேங்காலிபுரம் கிராமம், வேதவித்துக்களும், தபஸ்விகளும், நித்யாக்னிஹோத்ரிகளும் வாஸம்செய்யும் க்ஷேத்ரமாக இன்றுவரை விளங்கிவருகிறது. இந்த க்ஷேத்ரம், கும்பகோணம் திருவாரூர் மார்கத்தில் உள்ள புதுக்குடியிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்திலும், குடவாசலிலிருந்து மூன்று கி.மீ தூரத்திலும் உள்ளது. இந்த கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக நித்யாக்னிஹோத்ரிகளாக விளங்கியவர்களின் பரம்பரையில் 1830-ஆம் ஆண்டு ஸ்ரீமுத்தண்ணாவாள் என்கிற ஸ்ரீவைத்யநாத தீக்ஷிதர் அவதரித்தார்கள். இவர்களது திவ்ய சரித்ரம் ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் உள்ளது. இவர்களது புத்ரர் ஸ்ரீ ஸுப்ரம்மண்ய தீக்ஷிதர் அவர்களும் நித்யாக்னிஹோத்ரி.

ஸ்ரீ ஸுப்ரம்மண்ய தீக்ஷிதர், மாதுஸ்ரீ. சுப்பலக்ஷ்மி அம்மாள் தம்பதிகளுக்கு, ஶோபக்ருத் வருஷம், ஆடி மாதம், 18-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை (02.07.1903) தனது மாமாவின் கிருஹத்தில், பத்தூர் க்ராமத்தில், ஸ்ரீஅனந்தராம தீக்ஷிதர் சுப ஜனனம் செய்தார்கள். ஸ்ரீமுத்தண்ணாவாளின் ப்ரிய சிஷ்யரான பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்கள் ஸ்ரீ தீக்ஷிதருக்கு மூன்றாவது வயதில் அக்ஷராப்யாஸம் செய்து வைத்தார்கள். (பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்களைப்பற்றி, ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் ஸ்ரீமுத்தண்ணாவாளின் திவ்ய சரித்ரத்தில் உள்ளதைக் காணலாம்) ஸ்ரீதீக்ஷிதரின் ஐந்தாவது வயதில் இவரது பெரிய தகப்பனார் ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்கள் ப்ரம்மோபதேசம் செய்தார்கள். தனது தகப்பனார் மற்றும் பெரிய தகப்பனாரிடம் வேதாத்யயனம் செய்தார்கள். காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு சிறுவயதில் சாஸ்த்ரங்களை போதித்த விஷ்ணுபுரம் ஸ்ரீஸ்வாமிநாத சாஸ்த்ரிகளிடம், ஸ்ரீஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் சாஸ்த்ரங்களை ஸ்ரீ தீக்ஷிதர் படித்தார். ஸ்ரீ சாஸ்த்ரிகள், தனது முதிர்ந்த வயது காரணமாக, தான் ஓய்வு எடுக்கும் சமயம், தன்னிடம் படிக்கவரும் மற்ற வித்யார்த்திகளுக்கு ஸ்ரீ தீக்ஷிதரையே காவ்ய பாடம் எடுக்கச்சொல்வார். அப்படி காவ்ய பாடம் எடுக்கும்போது, ஒருநாள் நைஷதத்தில் உள்ள ஶ்லோகத்திற்கு ஸ்ரீ தீக்ஷிதர் இரண்டு மூன்று விசேஷ அர்த்தங்களை விளக்கிச்சொல்லவும், அதைக்கேட்டுக்கொண்டே வந்த ஸ்ரீசாஸ்த்ரிகள், தனக்கும் தோன்றாத விசேஷ அர்த்தங்களை ஸ்ரீ தீக்ஷிதர் கூறுவதற்கு, தலைமுறை தலைமுறையாக அக்னியை ஆராதித்ததே காரணம் என்று சொல்லி சந்தோஷப்பட்டார்கள்.

ஸ்ரீதீக்ஷிதரின் தகப்பனார் ஸ்ரீஸுப்ரமண்ய தீக்ஷிதர், விஷ்ணுபுரத்தில் ஹாலாஸ்ய மாஹாத்ம்யம் தொடர்ந்து உபன்யஸித்து வரும்போது, நடுவில் ஒருநாள் தனக்கு வெளியூர் போக நேர்ந்ததால், ஸ்ரீதீக்ஷிதரை உபன்யஸிக்கச் சொன்னார். அதுவே ஸ்ரீதீக்ஷிதர் செய்த முதல் உபன்யாஸம். காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சேங்காலிபுரம் விஜயம் செய்தபோது, இளவயது ஸ்ரீதீக்ஷிதருக்கு 'ப்ரஸன்ன ராக'வம்' என்ற புஸ்தகத்தை அனுக்ரஹித்துக் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். இதனால்தான், தனக்கு பலமுறை ஸ்ரீராமனைப்பற்றி உபன்யஸிக்கும் பாக்யம் கிடைத்தது என்று ஸ்ரீ தீக்ஷிதர் நம்பினார். பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள், ஸ்ரீமுத்தண்ணாவாளின் மற்றொரு சிஷ்யரான சய்யானம் ஸ்ரீராமஸ்வாமி சாஸ்த்ரிகள், மாயவரம் ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்த்ரிகள், ப்ரஸங்கபா'னு ஸ்ரீ வைத்யநாத சாஸ்த்ரிகள், ராமாயணம் ஸ்ரீ நடேச சாஸ்த்ரிகள், ஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்த்ரிகள், குடவாசல் ஸ்ரீ நரஸிம்மாசாரியார் போன்ற பெரியவர்களின் உபன்யாஸங்களைக் கேட்டு, ஸ்ரீதீக்ஷிதருக்கு உபன்யஸிக்கும் ஆர்வம் அதிகமானது.

கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் தம்பதிகள் ஒருமுறை ஸ்ரீஶ்ருங்கேரி 33-வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீநரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளை தர்சனம் செய்யச் சென்றபோது, தம்பதிகளுக்கு பெண் குழந்தை பிறக்கும் என்றும், அந்தப் பெண்ணுக்கு சாரதாம்பா என்று நாமகரணம் வைக்கும்படியும், அந்தப்பெண்ணை ஆஹிதாக்னி குடும்பத்தில் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்படியும் சொல்லி ஆசீர்வதித்தார்கள். அதற்குப்பிறகு சாஸ்த்ரிகளின் தர்மபத்னி ஸ்நானம் செய்யாமல் இருந்து பெண்குழந்தை பிறந்தது. கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் தனது மூத்த புத்ரி ஸ்ரீமதி சாரதாம்பாளை, ஸ்ரீதீக்ஷிதரின் பதினாறாவது வயதில் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். விவாஹம் திருவாரூரில் நடந்தது.

ஸ்ரீதீக்ஷிதர் தம்பதிகளுக்கு சுபத்ரா என்ற பெண் பிறந்தாள். இந்த பெண்ணை திருச்சி ஜில்லா மஹாதான புரத்தைச் சேர்ந்த ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் போர்டு என்ஜினியர் ஸ்ரீ.எம்.கே. துரைஸ்வாமி ஐயரின் கனிஷ்ட புத்ரரான ஸ்ரீ.நாகரத்னம் ஐயருக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தார். இந்த தம்பதிகளுக்கு இரண்டு புத்ரர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். முதல் புத்ரன் பிறந்து மூன்று வருஷம் கழித்து தனது புத்ரி கர்பமாக இருக்கும் தகவல் வந்த உடனேயே, மஹாதானபுரம் நேரில் சென்று, பிறக்கப் போவது ஆண் குழந்தை என்றும், தனக்கு அந்த குழந்தையை ஸ்வீகாரம் கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்றும் தனது ஸம்பந்தியிடம் ஸ்ரீதீக்ஷிதர் கேட்டுக்கொண்டார். இதே ஸமயம்,

மிக ப்ரஸித்தமாக விளங்கிய பந்துக்களான ஜோஸ்யர் ஒருவர், ஸ்ரீதீக்ஷிதரின் மாப்பிள்ளை, புத்ரி மற்றும் அவர்களது முதல் புத்ரனின் ஜாதகங்களைப்பரிசோதித்து, இரண்டாவது குழந்தை பெண் குழந்தையாக இருக்கும் என்று கூறியிருந்தார். ஆனால் ஸ்ரீ தீக்ஷிதரோ பிறக்கப்போவது ஆண் ப்ரஜை என்றும், தனக்கு ஸ்வீகாரம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பிறந்தது ஆண் குழந்தை. இந்த குழந்தையையே 27-01-1955 அன்று, சேங்காலிபுரத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு, தானே ப்ரும்மோபதேசமும் (உபநயனம்) செய்தார்கள். ஆண் குழந்தை பிறந்தபிறகு ஸ்ரீ தீக்ஷிதரின் மாப்பிள்ளையை சந்தித்த ஜோஸ்யர், தான் சொன்ன ஜோஸ்ய பலன், ஜோஸ்ய சாஸ்த்ரப்படி மிகச்சரியானதுதான் என்றும், பிறந்தது ஆண் ப்ரஜை என்பது ஸ்ரீதீக்ஷிதரின் தபஸ் மற்றும் வாக்ஸித்தியைக் காட்டுகிறது என்றும் கூறினார்.

கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் எழுதியுள்ள ஸ்ரீமத்பாகவத உரையில் பல வ்யாக்யானங்களைக் கையாண்டதோடு, ஸ்ரீநாராயணீயம் என்ற க்ரந்தத்தையும் கண்டு எழுதியிருந்தார்கள். இதைப்படித்த ஸ்ரீதீக்ஷிதருக்கு ஸ்ரீநாராயணீயத் தில் ஈடுபாடு ஏற்பட்டது. இது ஸமயம், 1930-களில் கேரளாவில் உள்ள ஆலத்தூரில் உபன்யஸிக்கச் சென்றபோது, அதை ஏற்பாடு செய்திருந்த ஆலத்தூர் பாங்கர் ஸ்ரீ.எம்என்.ராமஸ்வாமி ஐயர் குடும்பத்தார், ஸ்ரீதீக்ஷிதரை ஸ்ரீகுருவாயூருக்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீ தீக்ஷிதர் ஸ்ரீகுருவாயூரப்பனை தர்சித்தது இதுவே முதல் முறையாகும். அந்த மூர்த்தியிடம் ஆகர்ஷிக்கப்பட்டு பலமுறை தர்சனம் செய்யும் ஈர்ப்பு ஏற்பட்டது. அதுமுதல் எந்த உபன்யாஸம் ஆனாலும், நடுநடுவே ஸ்ரீநாராயணீயத்திலிருந்து ஶ்லோகங்கள் சொல்லி, ஸ்ரீ குருவாயூரப்பனின் மஹிமையை ஸ்ரீ தீக்ஷிதர் சொல்லாமல் இருந்ததில்லை.

கொச்சி இளையராஜா ஸ்ரீ குருவாயூரப்பனின் பக்தராவார். தன் உள்ளத்தில் ஸ்ரீகுருவாயூரப்பனை நிறுத்திவைக்கும் வகையில் உபன்யஸிக்கக்கூடியவரிடமிருந்து ஸ்ரீமத்பாகவதத்தை தான் கேட்கும் பாக்யம் தனக்கு கிடைக்கவேண்டும் என்று ஸ்ரீகுருவாயூரப்பனிடம் மனமுருக ப்ராத்தித்துக்கொண்டபோது, ஸ்ரீதீக்ஷிதரைக் காண்பித்துக்கொடுத்து, ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹ உபன்யாஸம் தன் ஸன்னிதியில் நடக்கப்போவதை ஸ்ரீகுருவாயூரப்பன் அருளினார். இதற்கு முன்பாக கோயம்புத்தூர் அயர்ன் அண்ட் ஸ்டீல் வ்யாபாரம் செய்து வந்த ஸ்ரீ நரஸிம்ம ஐயரின் கனவில், ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹ உபன்யாஸம் தன் ஸன்னிதியில் நடத்த ஸ்ரீகுருவாயூரப்பன் ஆக்ஞையிட்டார்.

ஸ்ரீதீக்ஷிதரும் தனக்கு கிடைத்த மஹத்தான பாக்யம் என்று புளகாங்கிதம் அடைந்து, குறிப்பிட்ட நாளில் குருவாயூருக்கு ஸ்ரீநரஸிம்ம ஐயருடன் வந்து சேர்ந்தபோது, கொச்சி இளையராஜா, ஸ்ரீகுருவாயூரப்பன் தனக்கு காண்பித்துக்கொடுத்த உபன்யாஸகரான ஸ்ரீதீக்ஷிதரை நேரில் முதல்முறையாக தர்சித்தார். ஆஞ்ஜம் ப்ரும்மஸ்ரீ மாதவன் நம்பூத்ரி மற்றும் பல மஹனீயர்களுடன் அமர்ந்து, கண்களில் தாரை தாரையாக ஆனந்த பாஷ்பம் கொட்ட ஸ்ரீபாகவத ஸப்தாஹ உபன்யாஸத்தை ஶ்ரவணம் செய்தார்.

ஸ்ரீ தீக்ஷிதர் பல க்ஷேத்ரங்களிலுள்ள தெய்வங்களைக்குறித்து ஸ்தோத்ரங்கள் க'வனம் (இயற்றி) செய்துள்ளார்கள். ஸ்ரீகுருவாயூரப்பன், திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி பெருமாள், சிதம்பரம் ஸ்ரீநடராஜா, திருக்கருகாவூர் ஸ்ரீ கர்பரக்ஷாம்பிகை, ஸ்வாமிமலை ஸ்ரீ ஸ்வாமிநாதன், காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி, ஶ்ருங்கேரி ஸ்ரீசாரதாம்பிகை, ஸ்ரீ தீக்ஷிதரின் குலதெய்வமான ஸ்ரீ பாலசாஸ்தா, மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி, திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி பெருமாள், வைதீஶ்வரன்கோவில் ஸ்ரீ வைதீஶ்வரன் மற்றும் ஸ்ரீ பாலாம்பிகை, மயிலாப்பூர் ஸ்ரீகற்பகாம்பாள் ஆகிய தெய்வங்கள் பற்றிய ஸ்தோத்ரங்கள் இதில் அடங்கும். இவை தவிர, ஸ்ரீ முத்தண்ணாவாள், ஸ்ரீத்யாகப்ரம்மம் மேலும் ஸ்தோத்ரங்கள் இயற்றி உள்ளார். ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவாளின் ஆக்ஞைப்படி 'காமகோடி' பத்ரிகையில் ஸ்ரீ முத்தண்ணாவாளின் திவ்ய சரித்ரத்தை ஸ்ரீ தீக்ஷிதர் எழுதியதை, ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் காணலாம்.

ஸ்ரீகுருவாயூரப்பன் மீது இவர் செய்த பஞ்சரத்ன ஸ்தோத்ரம், ஒவ்வொரு ஶ்லோக முடிவிலும் பதினாறு நாராயண நாமாக்களுடன் கூறுவது மிகவும் பிரஸித்தமானது. திருக்கோயிலூர் தபோவனம் ஸ்ரீஞானானந்தகிரி ஸ்வாமிகள் ஆஶ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிகளின் காலம் முதல்கொண்டு, தினமும் விடியற்காலையில் ப்ராதஸ்மரண ஸ்தோத்ரமாக ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீகுருவாதபுரீச பஞ்சரத்ன ஸ்தோத்ரம் பாடப்பட்டு வருகிறது. முதலில் இயற்றியபோது ஐந்து ஶ்லோகங்களாக இருந்ததில், இந்த ஸ்தோத்ரத்தைப் படித்து பலன் அடைந்த பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ப²லஶ்ருதியாகவும், இன்னாரால் பாடப்பட்டது என்பதை விளக்கும் இரண்டு ஶ்லோகங்கள் ஸ்ரீதீக்ஷிதராலேயே சேர்க்கப்பட்டு மொத்தம் ஏழு ஶ்லோகங்களாக தற்போது பாடப்பட்டு வருகிறது. ஸ்ரீதீக்ஷிதர் இயற்றிய, கீழ்க்கண்ட ஸ்ரீகுருவாயூரப்பனின் த்யான ஶ்லோகம் மிக ப்ரஸித்தமானது. தற்போதும் பலராலும் கூறப்பட்டு வருகிறது.

पीताम्बरं करविराजित शङ्ख चक्र
कौमोदकी सरसिजं करुणासमुद्रम् ।
राधासहायं अतिसुन्दर मन्दहासं
वातालयेशं अनिशं हृदि भावयामि ।।

பீ^{1}தா^{1}ம்ப^{3}ரம் க^{1}ரவிராஜித ஶங்க^{2} சக்ர
கௌ^{1}மோத^{3}கீ^{1} ஸரஸிஜம் கருணா ஸமுத்^{3}ரம்।
ராதா^{4}ஸஹாயம் அதிஸுந்த^{3}ர மந்த^{3}ஹாஸம்
வாதாலயேஶம் அநிஶம் ஹ்ருதி^{3} பா^{4}வயாமி।।

இதன் அர்த்தம்- 'பொன்னாடை தரித்தவரும், கைகளில் ஶங்க^{2}ம், ச^{1}க்ரம், க^{3}தை^{3} (गदा), தாமரை இவைகளை தரித்தவரும், கருணைக் கடலானவரும், ஸ்ரீ ராதா தேவியுடன் கூடியவரும், மிக அழகான புன்சிரிப்புடன்கூடியவருமான ஸ்ரீ குருவாயூரப்பனை எப்பொழுதும் ஹ்ருதயத்தில் த்யானம் செய்கிறேன்.'

ஸ்ரீபாகவதத்தின் ஸாரமான ஸ்ரீநாராயணீயத்தில், அதை எழுதிய ஸ்ரீநாராயண பட்டத்ரி, ஏதோ காரணத்தினால், ஸ்ரீ பாகவதத்தில் முக்யமான ஜடபரத சரித்ரத்தை எழுதவில்லை. இந்த சரித்ரத்தை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீபட்டத்ரியின் ஶ்லோக நடையிலேயே தானே இயற்றியதை, (ஸ்ரீ தீக்ஷிதர் தமிழ் உரையுடன் கூடிய) ஸ்ரீநாராயணீய புஸ்தகத்தில் சேர்த்து வெளியிட்டுள்ளது. இயற்றியதை, சிஷ்யர்களுடன்கூட ஸ்ரீகுருவாயூரில், ஸ்ரீகுருவாயூரப்பன் ஸன்னிதியில் நிர்மால்ய தர்சன காலத்தில் ஸ்ரீதீக்ஷிதர் சொல்லி ஸ்ரீகுருவாயூரப்பன் ஸன்னிதியியே அரங்கேற்றமும் ஆனது.

1967-ஆம் வருஷம், ஸ்ரீகுருவாயூரப்பனுக்கு வழங்கும் அரிசியை அப்போதைய கேரள அரசாங்கம் குறைத்துவிட்டது. வெளி மாநிலங்களிலிருந்து அரிசியை வரவழைப்பதற்கும் பல தடைகள். ஸ்ரீகோயில் மேல்சாந்திக்கும். தேவஸ்வம் போர்டு சேர்மனுக்கும், கோவில் ட்ரஷரருக்கும், ஒரே ராத்ரியில், ப்ரம்மசாரி பாலகனாகத் தோன்றி, அப்போது மதராஸில் (சென்னை) உபன்யஸித்துவரும் ஸ்ரீதீக்ஷிதரை நேரில் போய்ப்பார்த்து, நிவேதனத்திற்கு அரிசி தேவையான விஷயத்தைத் தெரிவிக்கும்படி, ஸ்ரீகுருவாயூரப்பன் உத்தரவிட்டார். கோயில் நிர்வாகிகள் மறுநாள் மதராஸில் ஸ்ரீதீக்ஷிதரை சந்தித்து விஷயத்தைக்கூறவே, பரபரப்படைந்த ஸ்ரீதீக்ஷிதர், அப்போதைய சீஃப் செக்ரட்டரி ஸ்ரீ.கே. சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ், அவர்களை அணுகலாம் என்றால், கேம்ப் சென்றுள்ள அவர் மதராஸ் திரும்ப நாள் ஆகும் என்று தெரியவந்தது. இதனால் அப்போதைய முதல் மந்திரி ஸ்ரீ.அண்ணாதுரை அவர்களுக்கு ஸ்ரீதீக்ஷிதர் ஒரு லெட்டர் கொடுத்தார். மறுநாள் முதல்

மந்த்ரியை சந்திக்க கோயில் நிர்வாகிகள், காலை எட்டு மணிக்கே சென்று லெட்டரை அங்குள்ள உதவியாளரிடம் கொடுத்து காத்திருந்தார்கள். வெகுநேரமாகியும் பதில் இல்லாததைக்கண்டு, முதலமைச்சருக்கு அரிசி அனுப்புவதில் ஸம்மதம் இல்லைபோ என்று நினைத்து, கோயில் நிர்வாகிகள் திரும்பிக்கிளம்ப எத்தனித்தபோது, முதல்வரின் உதவியாளர் இவர்களை உள்ளே அழைத்தார். இவர்களை வரவேற்ற முதலமைச்சர், ஒரு வேகன் லோடு அரிசி, முதல் தவணையாக சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து திருச்சூருக்கு கிளம்பிய தகவல் வந்தவுடன் அவர்களை உள்ளே அழைத்துச் சொல்லுவதற்காக காத்திருந்ததாகத் தெரிவித்தார். இதைத்தொடர்ந்தும் அரிசி அனுப்பியது தமிழ்நாடு அரசாங்கம்.

ஒரு வருஷத்திற்கும் முன்பாகவே உபன்யாஸத்திற்கு தேதிகள் ஒப்புக்கொள்ளப்படுவது வழக்கமாக இருந்துவந்த போதிலும், பம்பாய் ஆஸ்திக ஸமாஜம், சென்னை ஆஸ்திக ஸமாஜம், கொல்லங்கோடு முதலிய எல்லா இடங்களிலும், மறுவருஷம் வேறு பல நல்ல வளர்ந்துவரும் உபன்யாஸகர்களை அழைத்து நடத்தும்படி ஸ்ரீதீக்ஷிதர் 1968-ல் கூறியதின் அர்த்தத்தை அழைத்தவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் 1969-ஆம் வருஷம் நடந்த ஸ்ரீவைதீஸ்வரன்கோயில் கும்பாபிஷேகத்தில் செய்ததே கடைசி உபன்யாஸம். அதன்பிறகு தேஹ அஸௌக்யம் காரணமாக சேலம் திரும்பினார். வைத்யர்களின் ஆலோசனையின் பேரில் சென்னை வி.எச்.எஸ்.ஆஸ்பத்ரியில் அனுமதிக்கப்பட்டார். ஏழு வாரங்கள் சிகித்ஸைக்குப்பிறகு தேஹ நிலையில் முன்னேற்றம் தெரிந்த ஸமயம், 21.10.1969 அன்று எவரும் எதிர்பாராமல், ஸன்யாஸம் பெற்றுக்கொண்டார். உடன், 'கல்கி' பத்ரிகையில் வெளிவந்த கட்டுரை பின்வருமாறு.

துறவியானார்

வாக்கில் ஊறிய உண்மை இறுகி ஏதோ ஒரு விநாடியில் வாழ்க்கையாகி விடுகிறது. அறிவில் ஊறிய தத்துவம் முறுகி ஏதோ விநாடியில் அனுபவமாகிவிடுகிறது. 'ஏதோ ஒரு விநாடி' அருமையிலும் அருமையாக எவரோ ஒருவருக்குத்தான் வாய்க்கிறது. சேங்காலிபுரம் தீக்ஷிதரவர்கள் அப்படிப்பட்ட அருமையிலும் அருமையான ஒருவராகிவிட்டார். வாழ்க்கையின் உட்பொருள், வாழ்க்கையைத் துறக்கும் சந்நியாசத்திலேயே உள்ளது என்று நீண்டநெடுங்காலமாக உபதேசித்துவந்துள்ள அவர், இன்று அந்த உபதேசத்துக்குத் தாமே பாஷ்யமாகி விட்டார்.

அடையாறு வி.ஹெச்.எஸ்.மருத்துவமனையில் ஏழு வாரங்களாக சிகித்ஸை பெற்று வந்த தீக்ஷிதர், அக்டோபர் 21ந் தேதி, ஏகாதசி புண்ணிய தினத்தன்று ஓர் அற்புதமான திடசங்கல்பம் கொண்டார்.

உடல், உடல் நோய், சிகித்ஸை இவற்றிலிருந்து மனத்தை அப்படியே விடுவித்துவிட்டார். 'இனி எனக்கு மருந்தும் மாயமும் வேண்டாம்' என்றார். சிகித்ஸை அளித்துவந்த மருத்துவர்களைத் திருப்பி அனுப்பினார். 'சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போகிறேன்' என்று அழுத்தமாகக் கூறினார்.

அந்திம காலத்தில் 'ஆபத் சந்நியாசம்' என்று வாங்கிக் கொள்வதுண்டு. துறவியாகி தேக வியோகமாவது, புண்ணியம் என்ற கருத்தில், ஒரு வேளை தீக்ஷிதரவர்களும் இப்படித்தான் எண்ணிவிட்டாரோ என உறவினர் நினைத்தனர். பிற்பாடு உடல் குணமானால் அவர் இல்லத்தையும், செல்வத்தையும் துறந்து வாழ நேருமே என்பதை அவர் எண்ணிப்பார்த்தாரோ என சம்சயித்து அவரிடமே கேட்டனர். ஆனால் மெலிந்த உடலிலும் தளராத உறுதியோடு அவர், வியாதி, மரணம், இவற்றை நினைத்துத் தாம் சந்நியாசம் மேற்கொள்ளவில்லை என்பதையும், சந்நியாசியாக வேண்டும் என்பதற்காகவே துறவறம் ஏற்பதையும் தெளிவு செய்தார். முற்றிலும் சத்தியமான வார்த்தை. ஏனெனில், எவ்விதமான உடல் உபாதையும் இன்றி, அவர் சொஸ்தமாக இருந்தபோதே, இரண்டாண்டுகளுக்கு முன்னமே சேலத்தருகே தமது சமாதிக்கென ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்துவிட்டார். கடைசிக் காலத்தில் துறவறம் மேற்கொண்ட மூதாதை முத்தண்ணாவின் ரத்தம் அல்லவா அவர் மேனியில் ஓடுகிறது.

வேதவித்துக்களை வரவழைத்தார். மந்திரங்களை ஓதச்சொன்னார். தாமும் திரும்பச்சொன்னார். அவர்கள் தயங்கிய இடத்தில் தாமே எடுத்துக்கொடுத்தார். நினைவு வருவதும் தப்புவதுமாக இருந்த அவருக்கு இவ்வளவு திடமான பிரக்ஞ உண்டானதே அதிசயம்.

மலை போன்ற மேனியில் சிற்றருவி போல் ஓடும் புனிதப் பூணூல் அறுந்தது. புன்சிரிப்பு மாறாத முகத்தில், காதுகளில் புன்னகை புரியும் கடுக்கன் கழற்றப்பட்டது. துவராடை உடலை அணைத்தது. தண்டமும் வந்தது. பிரணவ ஜபம் தொடங்கிவிட்டார் புதிய சந்நியாசி.

'சிகித்ஸை வேண்டாம்' என்றபின் மருத்துவமனையில் இருக்கவேண்டியதில்லையன்றோ. இனி இல்லம் அவருடையது அல்ல. இல்லத்தினரைத் தம்மவராக அவர் எண்ணவும் இல்லை.

எனினும் மிகவும் சுகவீனமுற்ற நிலையில் அவரைச் சேலத்தில் இல்லத்துக்கு அழைத்துச்செல்வதே யுக்தம் எனக்கருதி அதற்கு அநுமதி கேட்டார். அவரது குடும்பத்தில் ஒருவராகிவிட்ட ஸ்ரீ.எஸ்.ஜி.ரத்தினம் அய்யர் அவரும் தயவுடன் சம்மதம் தந்தார். எனினும் சுசுரூஷை செய்ய உறவினரை அனுமதியாமல் சீடர்களுக்கே அனுமதி தந்தார். 'மாமா' என்று யாரோ உறவுமுறை சொல்லி அழைத்தார்கள். 'மாமா இல்லை. ராமா என்று சொல்' என்றார்.

சேலத்துக்குப் புறப்படுகிற சமயம். இனி உபன்யாஸக அனந்தராம தீக்ஷிதராக அவர் சென்னை திரும்ப மாட்டார் என்று அனைவரும் உருகிய சமயம். தீக்ஷிதர் அவர்களின் ஆசீர்வாதத்துக்கு மிகவும் பாத்திரமாகியுள்ள ஸ்ரீமதி எம்.எஸ். அவர்கள் மனம் நெகிழ்ந்து. அவருக்கு மிகவும் விருப்பமான சில பாடல்களைப் பாடினார். 'மரிப்போரின் செவியில் எந்த ராமனின் பெயரைச் சிவபெருமான் காசியில் மொழிகிறானோ. அந்த ஏகனை. பரமனை. தாரக ப்ரம்மனை வணங்குகிறேன்' என்ற ஆதிசங்கரரின் சுலோகத்தைப் பாடுகையில் உணர்ச்சிப் பெருக்கில் 'பரமனை' என்ற இடத்தில் தடைப்பட்டது. 'பரம்' என்று பளிச்சென எடுத்துக் கொடுத்தார் துறவி. மிகவும் நோயுற்ற தருணத்தில் அந்திம சமயம் பற்றிய சுலோகத்தைக் கேட்பதால் ஏற்படக்கூடிய கலக்கத்தின் சாயல்கூட இல்லை. எதற்கும் தயாராகிவிட்ட விரக்தி.

'ஏதேனும் சொல்ல வேண்டுமெனத் தோன்றுகிறதா?' என்று பரிந்து பரிந்து கேட்டார் ஸ்ரீ.சதாசிவம். 'தோணலை' என்று நிச்சயமாகக் கூறிவிட்டார் சந்நியாசி.

மனிதத் தன்மைக்கும் வாஞ்சைக்கும் பெயரெடுத்த தீக்ஷிதரவர்கள் பற்றற்ற துறவு நிலையை மனமார ஏற்ற நெகிழ்ச்சி. இன்றைய பாப உலகில் மறக்கவொண்ணாத புண்ணிய சம்பவமாகும்.

ஸன்யாசம் பெற்ற பின்பு அவ்வப்போது பிரணவ ஜபம் செய்துவந்து, ஏழாவது நாள் ஸ்ரீ நாராயணீயத்தில் கடைசி தசகத்தில் 'ஹருத்[3]யம் பூர்ணாநுகம்பார்ணவ . . . . க்ஷிப்யதாம் மய்யநாதே[2]' என்னும் ஶ்லோகத்தை உரக்கக்கூறி, அதன் அர்த்தத்தையும் சொல்லி, ஸ்ரீகுருவாயூரப்பன் அநாதனான தன்னை ரக்ஷிக்க வேண்டும் என ப்ரார்த்தித்து மூடிய கண்களைத் திரும்ப திறக்கவில்லை. பத்தாவது நாள் 30.10.1969 அன்று ஸாயங்கால

வேளை, உள்ளூர் வைதீகர்களும், பக்தர்களும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை ஒரு முறை கூறி, இரண்டாவது முறை கோஷிக்க ஆரம்பித்த போது, மூன்று முறை உள்ளுக்கிழுத்த பிராணன் மறுபடி வெளிவராமல் அப்படியே அடங்கியது.

அதைத்தொடர்ந்து 'கல்கி' வெளியிட்ட தலையங்கம்.

ஆஸ்திக ஜோதி அஸ்தமித்தது

கலியின் இருளிடையே ஒளி கூட்டி வந்த தர்ம ஜோதிகளில் ஒன்று அணைந்து விட்டது.

நாஸ்திகமும், விபரீத விஞ்ஞானமும், வெற்றுப் பகுத்தறிவும் பரவி வந்தபோது, பகவந்நாம ஒளியைப் பரப்பிவந்த பக்திப்பிழம்பு அணைந்து விட்டது.

துராசாரமும், பாரதப்பண்புக்கு ஒவ்வாத நடைமுறைகளும் கிளர்ந்தெழுந்தபோது, ஆசார அனுஷ்டான கிரணங்களைப் பரப்பிவந்த ஆஸ்திகத் திருவிளக்கு அணைந்துவிட்டது.

துவேஷமும், பொறாமையும், வசைமொழியும் மலிந்த இவ்வுலகில் அன்புமயமாக, வஞ்சனையற்ற வாஞ்சை மயமாக, மதுர வாக்கின் மூர்த்தியாகத் திகழ்ந்த உயிர்ச்சுடர் அணைந்துவிட்டது.

இல்லறத்தை நீத்துத் துறவியான சேங்காலிபுரம் பெரியவர்கள் இவ்வுலகையேவிட்டு மறைந்து விட்டார்கள்.

சநாதன தர்மத்தின் மறுமலர்ச்சிக்கு ஓர் ஆணிவேராக, பக்தி மண்டபத்துக்கு ஒரு மைய ஸ்தம்பமாக விளங்கிய சேங்காலிபுரம் பெரியவர்களின் மறைவை ஒருகாலும் ஈடு செய்யவே இயலாது. அவரோடு ஒரு சகாப்தமே முடிந்துவிட்டது.

'*ஶ்ருதி ஸாக³ரம்*' என்று ராஜாஜி குறிப்பிட்ட அந்த வேதக் கடலைக் காணோம் என்று எண்ணும்போதே 'சொரேல்' என்கிறது. தர்ம தத்துவங்களை, ஆசார நெறிகளை விட்டுக்கொடுக்காமல், அடித்துச் சொல்லும்போதே, தமது அன்புப் பான்மையால் தாய்போல அணைத்தும் சொல்கிற இங்கிதம் வாய்ந்த அம்மகானைப் போல் ஒருவரை இனி எங்கு காண்போம்?

ஞானத்தின் கம்பீரமும், பக்தியின் கசிவும் ஒருங்கேகூடிய சாரீரத்தால் உணர்ச்சிபொங்க உத்கோஷிக்கப்பட்ட அந்தத் தேவ பாஷை சுலோகங்களை இனி எங்கு கேட்போம்?

பரிவு சொட்டச் சொட்ட அனைவரையும் விசாரித்துத் துயர் நீக்கும் இன்முகத்தை எங்கு காண்போம்?

பரமனிடம் பக்தி. ஜன சமூகம் அனைத்திடமும் அன்பு. ஒருவரிடம் எவ்வளவு குற்றம் இருப்பனும். அதைப்பொருட்படுத்தாமல். அவரிடமுள்ள சிறிதளவு குண நலனை மதித்து. அதைப்பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டாடுகிற பெருந்தன்மை. அதன் மூலம் தோஷமுள்ளவர்களையும் வெகு பக்குவமாக குணசீலர்களாக்கிய ஆற்றல் இதையெல்லாம் எவரிடம் காண்போம்?

சேங்காலிபுரம் பெரியவர்கள் எடுத்துரைத்த உண்மைகளில் அவரது அறிவு மட்டும் பிரகாசிக்கவில்லை. அவரது இதயமும் அவற்றில் ஆழ மூழ்கித்திளைத்திருந்தது. இது காரணமாகவே அவரது வாக்குக்கு ஓர் அற்புத மந்திர சக்தி இருந்தது. பக்தியும். வைதிக ஆசரணைகளும் மிக நலிந்துவந்த தருணத்தில் மீண்டும் அவற்றுக்கு நவஜீவனம் தந்து. பாரதத்தை மெய்யாகவே பாரதமாக்கும் மகத்தான புண்ணியத் திருப்பணியில் அதிமுக்கியமான ஸ்தானம் வகித்தவர் சேங்காலிபுரம் பெரியவர்கள்.

இது முடிவுபெறாத திருப்பணி. பணி முடிவுபெறும் வரையில் அதில் அர்ப்பணமாக ஈடுபட்ட உயிருக்கும் முடிவில்லை.

சேங்காலிபுரம் பெரியவர்கள் உடலைத் துறந்துவிட்டாலும் தர்ம உத்தாரணத்தையே கருதிய அவர்களின் அன்புச்சக்தி என்றென்றும் நம் தேசத்தைக் காத்துவரும். நம் சிற்றறிவுக்கு எட்டாத சூட்சுமமான முறையில் காத்துவரும். ஐயமில்லை.

'அழிவு உடலுக்கே. ஆன்மாவுக்கு அல்ல. இதை உணர்ந்தவன் உடலின் அழிவைக்கண்டு துக்கிப்பதில்லை' என்று சேங்காலிபுரம் பெரியவர்களின் உள்ளத்தில் குடிகொண்ட குருவாயூரப்பன் கூறிய மொழிகளே இன்று நமக்கு ஆறுதல் தரவேண்டும்.

ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் அதிஷ்டானம், சேலம் டவுன் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்று கி.மீ. தூரத்தில், சின்னதிருப்பதி ஸ்ரீவெங்கடேச பெருமாள் கோயிலின் வடக்கு புறத்தில் உள்ள குளத்தின் கிழக்கு கரையில் உள்ளது. இந்த இடத்தை சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே தேர்ந்து எடுத்திருந்தார். ஸ்ரீஅதிஷ்டானத்தில் நித்ய பூஜையும் வருஷாவருஷம், ஐப்பசி மாதம், க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டிக்கு மறுநாள், வேத பாரயணம், நாமஸங்கீர்த்தனத்துடன் ஆராதனை நடந்து வருகிறது.

உ

தமிழில் தேவநாக^{3}ரி எழுத்துக்கள்

ஸம்ஸ்க்ருதச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் பிழையின்றி உச்சரிக்க உதவியாக, ஆங்கில எண்களின் துணைகொண்டு ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் உச்சரிப்புகளுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்கள் 1, 2, 3, 4 என்ற குறியீடுகளுடன் தரப்பட்டுள்ளன.

(ka) क க^{1}, (kha) ख க^{2}, (ga) ग க,^{3} (gha) घ க^{4},
(ca) च ச^{1}, (cha) छ ச^{2}, (ja) ज ஜ, (jha) झ ஜ^{4},
(ta) ट ட^{1}, (tha) ठ ட^{2}, (da) ड ட^{3}, (dha) ढ ட^{4},
(ta) त த^{1} (tha) थ த^{2} (da) द த^{3} (dha) ध த^{4}
(pa) प ப^{1} (pha) फ ப^{2} (ba) ब ப^{3} (bha) भ ப^{4}
(sha) श ஶ

1 என்ற குறியீட்டு எண் தேவையான இடங்களில் மட்டும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு குரு என்ற சொல். கு^{1}ரு என்றும் கு^{3}ரு என்றும் இருவேறு பொருள் கொண்ட ஸம்ஸ்க்ருதச் சொற்களைக் குறிக்கும் வகையில் குறிக்கப்பட்டுள்ளன.

ஶ என்ற எழுத்தை, சங்கரர் எனும் சொல்லில் வரும் "ச" வைப்போல் உச்சரிக்க வேண்டும்.

ஸம்ஸ்க்ருத சுலோகங்களில் சில சொற்களுக்கு நடுவே ऽ அல்லது ऽऽ என்னும் குறியீடுகள் வரும். இதற்கு அவக்^{3}ரஹம் என்று பெயர். இந்த இடங்களில் முறையே **அ, ஆ** என்ற எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்பதைக் குறிப்பதாகும். உதாரணத்திற்கு, **ஸங்கர்ஷணோऽநிருத்^{3}த^{4}ஶ்ச** என்பது, **ஸங்கர்ஷண: அநிருத்^{3}த^{4}ஶ்ச** என்ற சொற்களை சேர்த்துப் படிக்கும்போது வரும் கூட்டுச் சொல்லாகும்.

பொருளடக்கம்

முதல் பகுதி

இரண்டாம் பாகம்

மூன்றாம் பாகம்

நான்காம் பாகம்

ஐந்தாம் பாகம்

ஆறாம் பாகம்

ஏழாம் பாகம்



श्रीकृष्णाय परस्मै ब्रह्मणे नमः

।। श्री जयमङ्गल स्तोत्रम् ।।

ஜயமங்கள ஸ்தோத்திரம்

முதல் பாகம்

குந்தியால் செய்யப்பட்ட

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்ரம்.

कुन्त्युवाच-

नमस्ये पुरुषं त्वाद्यं ईश्वरं प्रकृतेः परम् ।

अलक्ष्यं सर्वभूतानां अन्तर्बहिरवस्थितम् ।। १

கு^{1}ந்த்^{1}யுவாச-

நமஸ்யேபுருஷம் த்வாத்^{3}யம் ஈஸ்வரம் ப்ரக்ருதே:பரம்।

அலக்ஷ்யம் ஸர்வபூ^{4}தானாம் அந்தர்ப^{3}ஹிரவஸ்தி^{2}தம்।। 1

(கருத்துரை) ஆதி^{3}புருஷனும் **(आदिपुरुषः)**, ஈச்வரனும்,மாயையை விட்டு விலகினவரும், எல்லா ப்ராணிகளுக்கும் உள்ளும் புறமும் இருக்கிறவரும், அப்படி இருந்த போதிலும் கண்டுபிடிக்க முடியாதவருமான உம்மை நமஸ்கரிக்கிறேன்.

मायाजवनिकाच्छन्नं अज्ञाऽधोक्षजं अव्ययम् ।

न लक्ष्यसे मूढदृशा नटो नाट्यधरो यथा ।। २

மாயாஜவநிகாச்ச^{2}ன்னம் அஞாऽதோ^{4}க்ஷஜம் அவ்யயம்।

ந லக்ஷ்யஸே மூட^{4}த்^{3}ருஶா நடோ நாட்யத^{4}ரோ யதா^{2}।।

(க-ரை) மாயையாகிற திரையினால் மறைக்கப்பட்டவரும், அழிவற்றவரும், திவ்யஞானம் உள்ளவருமான தங்களை, பக்தி யோகமறியாதவளான நான் நமஸ்காரத்தை மாத்திரம் செய்கிறேன். (உண்மையறியாத மனிதன்) வேஷம் தரித்த நடனை (நடிகனை) எவ்விதம் அறிவதில்லையோ அவ்விதம் தேஹாபிமானமுள்ள மனிதன் தங்களை அறிகிறதில்லை.

तथा परमहंसानां मुनीनां अमलात्मनाम् ।
भक्तियोग विधानार्थं कथं पश्येमहि स्त्रियः ।। ३

ததா[2] பரமஹம்ஸானாம் முனீனாம் அமலாத்மனாம் ।
ப[4]க்தியோக[3] விதா[4]நார்த[2]ம்
க[1]த[2]ம் பஶ்யேமஹி ஸ்த்ரிய: ।। 3

(க-ரை) நிர்மலமான மனமுடையவர்களும், மனன சீலர்களுமான ஸன்யாஸிகளுக்கு உத்தமமான பக்தி யோகத்தை உபதேசம் செய்யவந்த தங்களை, ஸ்த்ரீ ஜாதியில் பிறந்தவர்களான நாங்கள் எப்படி அறிவோம்?

कृष्णाय वासुदेवाय देवकी नन्दनाय च ।
नन्दगोप कुमाराय गोविन्दाय नमो नमः ।। ४

க்ருஷ்ணாய வாஸுதே[3]வாய தே[3]வகீ நந்த[3]னாய ச ।
நந்த[3]கோ[3]ப[1] குமாராய கோ[1]விந்தா[3]ய நமோ நம: ।।4

(க-ரை) வஸுதேவரின் பிள்ளையும், தேவகியின் குழந்தையும், நந்தகோபரின் குமாரரும், கோ[3](பசு)க்களைப் பரிபாலித்தவருமான க்ருஷ்ணனான தங்களுக்குப் பல தடவை நமஸ்காரங்களைச் செய்கிறேன்.

नमः पङ्कज नाभाय नमः पङ्कज मालिने ।
नमः पङ्कज नेत्राय नमस्ते पङ्कजाङ्घ्रये ।। ५

நம: பங்கஜ நாபா[4]ய நம: பங்கஜ மாலினே ।
நம: பங்கஜ நேத்ராய நமஸ்தே பங்கஜாங்க்[4]ரயே ।। 5

(க-ரை) நாபி[4]யில் **(नाभि)** தாமரையை உடையவரும், தாமரை மாலையை தரித்தவரும், தாமரை போன்ற கண்களை உடையவரும், பத்ம ரேகையைக் காலில் அடைந்தவருமான

தங்களுக்குப் பலதடவை நமஸ்காரம் செய்கிறேன்.

(அ-கை) ஸ்ரீ பகவான் செய்த உபகாரத்தைச் சொல்லுகிறாள்.

यथा हृषीकेश खलेन देवकी
कंसेन रुद्धाऽधिचिरं शुचार्पिता ।
विमोचिताहं च महात्मजा विभो
त्वयैव नाथेन मुहुर्विपद्गणात् ।। ६

யதா[2] ஹ்ருஷீகேஶ க[1]லேந தே[3]வகீ
கம்ஸேன ருத்[3]தா[4]ऽதி[4]சிரம் ஶுசா[1]ர்பி[1]தா ।
விமோசிதா[1]ஹம் ச மஹாத்மஜா விபோ[4]
த்வயைவ நாதே[2]ன முஹுர்விப[1]த்[3]க[3]ணாத் ।। 6

(க-ரை) இந்திரியங்களுக்கு நாயகனான ஹே ப்ரபோ! துஷ்டனான கம்ஸனால் ஜெயிலில் அடைக்கப்பட்டு வெகுகாலம் சோகத்தை அனுபவித்த தேவகியை ரக்ஷித்தது போலவா என்னை ரக்ஷித்தாய்? பின்னையோவெனில் குழந்தைகளுடன் கூடிய என்னை நாதனான தாங்களே வெகு ஆபத்துக்களிலிருந்தும் ஒவ்வொரு ஸமயமும் ரக்ஷித்தீர்.

(அதாவது ஸ்ரீ பகவான், தனது தாயான தேவகியின் ஆறு குழந்தைகளைக் கம்ஸன் வதம் செய்த காலத்தில் ரக்ஷிக்காமல் தேவகியை மட்டும் காத்தார். ஸ்ரீ க்ருஷ்ணனை நாதனாக நம்பிய தன்னை, தன் குழந்தைகளான பாண்டவர்களுடன் கூட ஒவ்வொரு ஸமயத்திலும் வந்து ரக்ஷித்தார் என்ற உபகாரத்தை நினைக்கிறாள்.)

विषान् महाग्नेः पुरुषाददर्शनाद्
असत् सभाया वनवासकृच्छ्रतः ।
मृधेमृधेऽनेक महारथास्त्रतो
द्रौण्यस्त्रतश्चास्म हरेऽभिरक्षिताः ।। ७

விஷான் மஹாக்[3]னே: புருஷாத[3]த[3]ர்ஶனாத்
அஸத் ஸபா[4]யா வனவாஸ க்ருச்ச்[2]ரத: ।

ம்ருதே4ம்ருதே4ऽனேக1 மஹாரதா2ஸ்த்ரதோ
த்3ரௌண்யஸ்த்ரத1ஶ்சாஸ்ம ஹரேऽபி4ரக்ஷிதா: ।।7

(க-ரை) ஹே ஹரே! பீமனுக்கு விஷம் கொடுத்த பொழுதும், அரக்கு மாளிகையில் நெருப்பு வைத்தபொழுதும், ஹிடிம்பன் முதலிய ராக்ஷஸர்கள் வந்த பொழுதும், சூதாட்ட சபையில் த்ரௌபதியின் வஸ்த்ராபஹரண காலத்திலும், காட்டில் வஸித்த பொழுது நேர்ந்த கஷ்ட காலத்திலும், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களுடைய **(महारथा:)** *மந்திரத்துடன் கூடிய பா3ணம்* **(बाणम्)** *விழுந்தபொழுதும், இப்பொழுதும் அச்வத்தாமாவினுடைய அபாண்ட3வாஸ்த்ரத்திலிருந்தும்* **(अपाण्डवास्त्रम्)** *நாங்கள் நன்கு ரக்ஷிக்கப்பட்டோம்.(எ.று)*

ஸ்ரீ கோபாலன் வரம் கேட்கும்படிச் சொல்ல.
குந்தி வரம் கேட்கிறாள்.

विपदःसन्तु नः शश्वत् तत्र तत्र जगद्गुरो ।
भवतो दर्शनं यत्स्याद् अपुनर्भव दर्शनम् ।। ८

விபத3:ஸந்து ந: ஶஶ்வத் தத்ர தத்ர ஜக3த்3கு3ரோ ।
ப4வதோ த3ர்ஶனம் யத்ஸ்யாத் அபுனர்ப4வ த3ர்ஶனம் ।।

(க-ரை) ஜகத்குருவான ஹே க்ருஷ்ணா! மறு பிறப்பை பாராமலிருக்கும்படிச் செய்யக்கூடிய தங்களுடைய தர்சனமானது எந்த ஆபத்துக்கள் வந்தால் எனக்குக் கிடைக்குமோ, அப்படிப்பட்ட ஆபத்துக்கள் அடிக்கடி உண்டாகட்டும். அதாவது ஆபத்து வந்தாவது பகவத் தர்சனம் கிடைக்கவேண்டும்.

जन्मैश्वर्य श्रुतश्रीभिरेधमानमदः पुमान् ।
नैवार्हत्यभिधातुं वै त्वामकिञ्चन गोचरम् ।। ९

ஜன்மைஶ்வர்ய ஶ்ருத ஸ்ரீபி4ரேதமானமத: புமான் ।
நைவார்ஹத்யபி4தா4தும் வை த்வாமகிஞ்சன கோ3சரம் ।।9

(க-ரை) நல்ல குலத்தில் பிறப்பு, ஈச்வரனாக இருக்கும் தன்மை, அதாவது எல்லோரையும் அடக்கும் தன்மை, கல்வி, தனம் இவைகளால் வளர்ந்த மத3த்தையுடைய **(मदम्)** *புருஷன் பற்றற்றவர்களுக்குப் புலப்படுபவரான தங்களை ''ஹரே*

முகுந்தா'' க்ருஷ்ணா! வாஸுதேவா!'' என்று சொல்லக்கூட மாட்டான்.

नमोऽकिञ्चन वित्ताय निवृत्त गुण वृत्तये ।
आत्मारामाय शान्ताय कैवल्यपतये नमः ।। १०

நமோऽகிஞ்சன வித்தா1ய நிவ்ருத்த கு3ண வ்ருத்த1யே।
ஆத்மாராமாய ஶாந்தாய கைவல்ய பத1யே நம: ।। 10

(க-ரை) ஏழைகளான பக்தர்களையே ஸர்வ சொத்தாக நினைக்கிறவரும், தர்மார்த்த காம மயமான வ்ருத்1தி1 **(வ்ருத்தி)** *அற்றவரும், மோக்ஷத்தைக் கொடுக்கின்றவருமான தங்களை நமஸ்கரிக்கின்றேன்.(எ.று)*

செல்வத்தை விரும்புவோர்கள்
ஜபிக்க வேண்டிய சுலோகங்கள்.

या हि वैश्रवणे लक्ष्मीः या चेन्द्रे हरिवाहने ।
सा रावण गृहे सर्वा नित्यमेवानपायिनी ।।१

या च राज्ञः कुबेरस्य यमस्य वरुणस्य वा ।
तादृशी तद्विशिष्टा वा ऋद्धी रक्षोगृहेष्विह ।।२

स्वर्गोऽयं देवलोकोयं इन्द्रस्येयं पुरीमिमाम् ।
सिद्धिर्वेयं पराहि स्याद् इत्यमन्यत मारुतिः ।।३

யாஹி வைஶ்ரவணே லக்ஷ்மீ:
யாசேந்த்3ரே ஹரி வாஹனே ।
ஸா ராவண க்3ருஹே ஸர்வா நித்யமேவாநபாயினீ।। 1
யா ச ராஜ்ஞ: கு1பே3ரஸ்ய யமஸ்ய வருணஸ்ய வா।
தாத்3ருஶீ தத்3 விஶிஷ்டா வா
ரித்3தீ4 ரக்ஷோ க்3ருஹேஷ்விஹ ।। 2
ஸ்வர்கோ3ऽயம் தே3வ லோகோ1யம்
இந்த்3ரஸ்யேயம் புரீமிமாம் ।
ஸித்3தி4ர்வேயம் பராஹி ஸ்யாத் இத்யமன்யத மாருதி:।।3

(க-ரை) எந்த லக்ஷ்மியானது குபேரனுடைய வீட்டிலும் ஹரிவாஹனனான இந்த்ரனுடைய வீட்டிலும் இருக்கிறதோ அந்த எல்லா லக்ஷ்மியும் ராவணனுடைய க்ருஹத்தில் எப்பொழுதும் அழிவில்லாமல் இருக்கிறது.

ராவணனுடைய க்ருஹத்தில் இருக்கும் லக்ஷ்மியானது குபேரனுடையவும், யமனுடையவும், வருணனுடையவும் வீட்டில் இருக்கும் லக்ஷ்மிபோலவும், அதைக்காட்டிலும் மேலாகவும் இருக்கிறது.

இது புண்யம் செய்தவர்கள் அனுபவிக்கும் இடமோ, அல்லது வருணன் முதலான தேவர்கள் வசிக்கும் இடமோ, அல்லது இந்த்ரனுடைய அமராவதியோ, அல்லது தபஸ்ஸினுடைய மேலான ஸித்3தி1யோ (सिद्धि) என்று ஹனுமார் லங்கையைப் பார்த்து எண்ணினார்.

மூக பஞ்ச ஶதியிலுள்ள (मूकपञ्चशति) காமாக்ஷி ஸ்தோத்ரம்

ஶ்ரீ, வித்யை, புத்திரன், கீர்த்தி, உத்யோகம் இவைகளை விரும்புவோர்கள் ஜபிக்கவேண்டிய ச்லோகம்.

श्रियं विद्यां दद्यात् जननि नमतां कीर्तिममिताम्
सुपुत्रं प्रादत्ते तव झटिति कामाक्षि! करुणा ।
त्रिलोक्यामाधिक्यं त्रिपुरपरिपन्थि प्रणयिनि!
प्रणामः त्वत् पादे शमितदुरिते किं न कुरुते ।।

ஶ்ரியம் வித்3யாம் த3த்3யாத்
ஜனனி நமதா1ம் கீ1ர்திமமிதாம்
ஸுபுத்ரம் ப்ராத3த்தே தவ ஜ4டிதி காமாக்ஷி கருணா ।
த்ரிலோக்யாமாதி4க்யம் த்ரிபுர பரிபந்தி2 ப்ரணயினி
ப்ரணாம: த்வத் பாதே3 ஶமித து3ரிதே கிம் ந கு1ருதே ।।

(க-ரை) ஹே காமாக்ஷி! நமஸ்கரிக்கின்றவர்களுக்கு உனது கருணையானது தனம், வித்யை, அளவற்ற கீர்த்தி, நல்ல புத்ரன், மூவுலகிலும் மேன்மையாக இருக்கும் தன்மை இவைகளைச் சீக்கிரமாகவே கொடுக்கிறது. ஹே த்ரிபுர ஸம்ஹாரம் செய்த பரமேச்வரரின் ப்ரிய பத்னியே! பக்தர்களின் பாபத்தைப் போக்குகிற தங்கள் சரணத்தில் செய்த நமஸ்காரமானது எதைத்தான் கொடாது!(எ.று)

வைராக்கியத்தை விரும்புவோர்கள் ஜபிக்க வேண்டிய சுலோகம்

कदा वारणस्यां अमरतटिनी रोधसि वसन्
वसानः कौपीनं शिरसि निदधानोऽञ्जलिपुटम् ।
अये गौरीनाथ ! त्रिपुर ! हर शंभो ! त्रिनयन!
प्रसीदेत्याक्रोशन् निमिषमिव नेष्यामि दिवसान् ।।

கதா[3] வாரணஸ்யாம் அமரத[2]டினீ ரோத[3]ஸி வஸன்
வஸான: கௌ[1]பீ[1]னம் ஶிரஸி நித[3]தா[4]நோऽஞ்ஜலிபுடம் ।
அயே கௌ[3]ரீநாத[2] த்ரிபுர ஹர ஶம்போ[4] த்ரிநயன
ப்ரஸீதே[3]த் யாக்ரோஶன்
நிமிஷமிவ நேஷ்யாமி தி[3]வஸான் ।।

(க-ரை) நான் எப்பொழுது காசியில் கங்கையின் கரையில் வஸித்துக்கொண்டும், கௌ[1]பீ[1]னம் **(कोपीनम्)** *தரித்துக் கொண்டும் சிரஸின் மேல் கைகளைக் கூப்பிக்கொண்டும், ஹே பார்வதீபதே* **(पार्वतीपते)**! *த்ரிபுராஸுரர்களை ஸம்ஹரித்தவனே! சம்போ[4]* **(शम्भो)**! *மூன்று கண்கள் படைத்தவனே! அனுக்ரஹம் செய் என்று கதறிக்கொண்டு நாட்களை ஒரு நிமிஷம் போல் போக்குவேன்!*

விவாஹம் ஆகவேண்டிய கன்னிகைகள் ஜபிக்கவேண்டிய மந்த்ரம்.

कात्यायनि! महामाये! महायोगिन्यधीश्वरि! ।
नन्दगोपसुतं देवि! पतिं मे कुरु ते नमः ।।

காத்யாயனி மஹாமாயே மஹாயோகி3ன்யதீ4ஶ்வரி ।
நந்த3கோ3ப ஸுதம் தே3வி ப1தி1ம் மே கு1ருதே நம: ।।

(க-ரை) கத கோத்திரத்தில் பிறந்தவளும், மாயைகளுக்கெல்லாம் இருப்பிடமும், மஹத்தான யோக ஸித்திகளை அடைந்தவளுமான ஹே தேவி! எனக்கு நந்த கோபருடைய புத்திரரான க்ருஷ்ணனைக் கணவனாகச் செய்வாயாக! உன்னை நமஸ்கரிக்கிறேன்.

மஹா பா4ரதம் விராடபர்வம் 8 வது அத்தியாயத்திலுள்ள

த4ர்மபுத்திரர் செய்த து3ர்கா3 ஸ்தோத்ரம்.

இதை கடன், வ்யாதி, தாரித்திரியம், சத்ரு பயம், மனோ விசாரம்(மனக் கவலை), ஜெயில் வாஸம் முதலிய கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள விரும்புபவர்கள் ஜபிக்க வேண்டும்.

विराट नगरं रम्यं गच्छमानो युधिष्टिरः ।
अस्तुवन् मनसा देवीं दुर्गां त्रिभुवनेश्वरीम् ।। १

விராட1 நக3ரம் ரம்யம் க3ச்ச2மானோ யுதி4ஷ்டிர: ।
அஸ்துவன் மனஸா தே3வீம்
து3ர்காம் த்ரிபு4வனேஶ்வரீம் ।। 1

यशोदा गर्भसंभूतां नारायण वरप्रियाम् ।
नन्दगोपकुले जातां मङ्गल्यां कुलवर्धिनीम् ।। २

யஶோதா3 க3ர்ப4ஸம்பூ4தாம் நாராயண வரப்ரியாம் ।
நந்த3கோ3பகுலே ஜாதாம் மங்க3ல்யாம் குலவர்தி4னீம் ।।2

कंसविद्रावणकरीं असुराणां क्षयङ्करीम् ।
शिलातट विनिक्षिप्तां आकाशं प्रतिगामिनीम् ।। ३

கம்ஸவித்[3]ராவணக[1]ரீம் அஸுராணாம் க்ஷயங்க[1]ரீம் ।
ஶிலாதட விநிக்ஷிப்தாம் ஆகாஶம் ப்ரதிகா[3]மிநீம் ।। 3

वासुदेवस्य भगिनीं दिव्य माल्यविभूषिताम् ।
दिव्याम्बर धरां देवीं खड्गखेटक धारिणीम् ।। ४

வாஸுதே[3]வஸ்ய ப[4]கி[3]நீம் தி[3]வ்ய மால்ய விபூ[4]ஷிதாம் ।
தி[3]வ்யாம்ப[3]ர த[4]ராம் தே[3]வீம்
க[2]ட்[3]க[3] கே[2]டக தா[4]ரிணீம் ।। 4

(க-ரை) 1. மனோஜ்ஞமான விராட நகரத்தைக் குறித்துச் செல்லுகின்ற தர்மபுத்திரர் மூவுலகங்களுக்கும் ஈச்வரியும், 2.யசோதையின் கர்பத்தில் தோன்றியவளும், நாராயணனுடைய உத்தமமான ப்ரீதிக்குப் பாத்திரமானவளும், நந்த கோபருடைய வம்சத்தில் (கிருஹத்தில்) உதித்தவளும், மங்களத்தைச் செய்பவளும், வம்ச விருத்தியைச் **(वंशवृद्धि)** *செய்பவளும், 3.(கம்ஸனால்) கல்லில் மோதப்பட்டவுடன் ஆகாசத்தை நோக்கிச் சென்றவளும், 4. ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸஹோதரியும், திவ்ய புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவளும், திவ்ய வஸ்திரம் உடுத்தியவளும், சத்ரு ஸம்ஹாரமாகிற விளையாட்டை உடைவளும், கத்தி, கே[2]டகம்* **(खेटकम्)** *இவைகளைத் தரிப்பவளுமான துர்கா தேவியை மனதினால் ஸ்தோத்ரம் செய்தார். (1-4)*

भारावतरणे पुण्ये ये स्मरन्ति सदा शिवाम् ।
तान्वै तारयते पापात् पङ्के गामिव दुर्बलाम् ।। ५

பா[4]ராவத[1]ரணே புண்யே யே ஸ்மரந்தி ஸதா[3] ஶிவாம் ।
தா[1]ன்வை தா[1]ரயதே பாபாத் பங்கே காமிவ துர்ப[3]லாம் ।।

(க-ரை) எவர்கள் எப்பொழுதும் மங்கள ஸ்வ ரூபியாக இருக்கின்ற துர்கா தேவியை பாபங்களுடைய பாரத்தை இறக்குவதற்காகவும், புண்யத்திற்காகவும் நினைக்கின்றார்களோ அவர்களை அவள் சேற்றில் அகப்பட்ட பலஹீனமான பசுவை கரையேற்றுவதுபோல் பாபத்தினின்றும் கரையேற்றுகிறாள். (5)

स्तोतुं प्रचक्रमे भूयो विविधैः स्तोत्र सम्भवैः ।
आमन्त्र्य दर्शनाकाङ्क्षी राजा देवीं सहानुजः ।। ६

ஸ்தோதும் ப்ரசக்ரமே பூ4யோ
விவிதை4: ஸ்தோத்ர ஸம்ப4வை: ।
ஆமந்த்ர்ய த3ர்ஶனாகாங்க்ஷீ
ராஜா தே3வீம் ஸஹாநுஜ: ।। 6

(க-ரை) யுதிஷ்டிர மஹாராஜன் தன் இளைய ஸஹோதரர்களுடன் கூடியவராய் துர்கா தேவியை அழைத்து பிரத்யக்ஷமாக தர்சிப்பதில் விருப்பம் கொண்டு ஸ்தோத்ரம் செய்வதற்காக ஏற்பட்ட பலவிதமான நாமங்களினால் பலவிதமாக ஸ்துதிக்கத் தொடங்கினார். (6)

नमोऽस्तु वरदे! कृष्णे! कुमारी! ब्रह्मचारिणि! ।
बालार्क सदृशाकारे! पूर्णचन्द्र निभानने! ।।७
चतुर्भुजे! चतुर्वक्त्रे! पीनश्रोणि पयोधरे! ।
मयूर पिञ्छवलये! केयूराङ्गद धारिणि ।।८

நமோऽஸ்து வரதே3 க்ருஷ்ணே குமாரீ ப்3ரஹ்மசாரிணி ।
பா3லார்க ஸத்3ருஶாகாரே பூர்ணசந்த்3ர நிபா4னனே ।। 7
ச1துர்பு4ஜே சதுர்வக்த்ரே பீ1னஶ்ரோணி பயோத4ரே ।
மயூர பி1ஞ்ச2வலயே கேயூராங்க3த3 தா4ரிணி ।। 8

(க-ரை)(7) வரன் கொடுப்பவளே ! கருநிறம் உடையவளே! ஹே குமாரியே! வேதத்தில் சஞ்சரிப்பவளே! பா3ல ஸூர்யனுக்கு **(बालसूर्यः)** *ஒப்பான வடிவமுள்ளவளே! (8) நான்கு கைகளை உடையவளே! நான்கு முகங்களை உடையவளே! பெருத்திருக்கின்ற பின் தட்டு, ஸ்தனங்கள் இவைகளை உடையவளே! மயிலினுடைய தோகையின் நிறம்போன்ற கங்கணங்களை உடையவளே! கடகங்களையும், தோள் வளைகளையும் தரித்தவளே! உனக்கு நமஸ்காரம். (7,8)*

भासि देवि यथा पद्मा नारायण परिग्रहः ।
स्वरूपं ब्रह्मचर्यं च विशदं तव खेचरि ।।९

பா4ஸி தே3வி யதா2 பத்3மா நாராயண பரிக்3ரஹ: ।
ஸ்வரூபம் ப்3ரஹ்மசர்யம் ச விஶத3ம் தவ கே2ச1ரி ।। 9

(க-ரை) ஹே தேவீ! ஶ்ரீமன் நாராயணனுக்குப் பத்னியாயிருக்கின்ற ஶ்ரீ மஹாலக்ஷ்மிபோல் விளங்குகிறாய். ஆகாசத்தில் சஞ்சரிப்பவளே! உன்னுடைய ஸ்வரூபமும் ப்ரம்ஹசர்யமும் நிர்மலமானவை. (9)

कृष्णच्छविसमा कृष्णा संकर्षण समानना ।
बिभ्रती विपुलौ बाहू शक्रध्वज समुच्छ्रयौ ।। १०

க்ருஷ்ணச்ச2விஸமா க்ருஷ்ணா ஸங்கர்ஷண ஸமாநனா।
பி3ப்4ரதீ விபுலௌ பா3ஹூ ஶக்ரத்4வஜ ஸமுச்2ரயௌ।।

(க-ரை) நீ, நீலமேகம் போல் கருநிறமுடையவளும், ஸங்கர்ஷணனுடைய முகம் போன்ற முகமுடையவளும், இந்திரத்4வஜம்போல் **(इन्द्रध्वजम्)** *நீண்டும் பெருத்துமிருக்கின்ற இரண்டு கைகளை தரித்தவளுமாக இருக்கின்றாய். (10)*

पात्री च पङ्कजी घण्टी स्त्रीविशुद्धा च या भुवि।
पाशं धनुर्महाचक्रं विविधान्यायुधानि च ।।११

பாத்ரீ ச பங்கஜீ க4ண்டீ1 ஸ்த்ரீவிஶுத்3தா4 ச யா பு4வி।
பாஶம் த4னுர் மஹாசக்ரம் விவிதா4ன்யாயுதா4னி ச ।।11

(க-ரை) பாத்திரம், தாமரைப்பூ, மணி, பாசம், வில், மஹாசக்ரம், மற்றும் ஆயுதம் இவைகளைத் தரித்தவளாயும், பரிசுத்த ஸ்திரீயாயும் பூமியில் இருக்கின்றாய். (11)

कुण्डलाभ्यां सुपूर्णाभ्यां कर्णाभ्यां च विभूषिता।
चन्द्र विस्पर्धिना देवि मुखेन त्वं विराजसे ।।१२

குண்ட3லாப்4யாம் ஸுபூர்ணாப்4யாம்
கர்ணாப்4யாம் ச விபூ4ஷிதா ।
சந்த்3ர விஸ்பர்தி4னா தே3வி முகே2ன த்வம் விராஜஸே।।

(க-ரை) ஹே தேவீ! நீ குண்டலங்களால் நிறைந்த காதுகளால் அலங்கரிக்கப்பட்டவளாகவும், சந்திரனுக்கொப்பான முகமுள்ளவளாகவும் விளங்குகிறாய். (12)

मुकुटेन विचित्रेण केशबन्धेन शोभिना ।
भुजङ्गाभोगवासेन श्रोणीसूत्रेण राजता ।।१३
विभ्राजसे चाऽऽबद्धेन भोगेनेवेह मन्दरः ।
ध्वजेन शिखिपिच्छानां उच्छ्रितेन विराजसे ।।१४

முகுடேன விசித்ரேண கேஶப3ந்தே4ன ஶோபி4னா ।
பு4ஜங்கா3போ4க3வாஸேன ஶ்ரோணீஸூத்ரேண ராஜதா ।।
விப்4ராஜஸே சாऽऽப3த்3தே4ன போ4கே3நேவேஹ மந்த3ர:
த்4வஜேன ஶிகி2பிச்சா2னாம் உச்2ரிதேன விராஜஸே ।। 14

(க-ரை) விசித்திரமான மகுடத்தோடும், அழகியதும் முடியப்பட்டுள்ளதுமான கூந்தலோடும் விளங்குகிறாய். பாம்பினுடைய உடல் போன்றதும், பிரகாசிக்கின்றதுமான ஸூத்திரத்தினால் **(सूत्रम्)**, *வாஸுகியினுடைய தேஹத்தினால் சுற்றப்பட்டிருக்கின்ற மந்த3ர பர்வதம்போல்* **(मन्दरपर्वतम्)** *இப்புவியில் விளங்குகிறாய். மயில் தோகைகளால் செய்யப் பட்டதும், உயரத் தூக்கிக் கட்டப்பட்டதுமான கொடி யினாலும் விளங்குகிறாய். (13,14)*

कौमारं व्रतमास्ताय त्रिदिवं पावितं त्वया ।
तेन त्वं स्तूयसे देवि त्रिदशैः पूज्यसेऽपि च ।।१५

கௌ1மாரம் வ்ரதமாஸ்தாய த்ரிதி3வம் பா1விதம் த்வயா ।
தேனத்வம் ஸ்தூயஸே தே3வி த்ரித3ஶை: பூஜ்யஸேऽபிச ।।

(க-ரை) ஹே தேவீ! கௌ1மார விரதத்தில் **(कौमारव्रतम्)** *இருந்துகொண்டு தேவலோகமானது உன்னால் பரிசுத்த மாக்கப்பட்டது. ஆதலால் நீ தேவர்களால் ஸ்துதிக்கப் படுகிறாய். பூஜிக்கவும் படுகிறாய். (15)*

त्रैलोक्य रक्षणार्थाय महिषासुर नाशिनि! ।
प्रसन्ना मे सुरश्रेष्ठे! दयां कुरु शिवा भव ।।१६

த்ரைலோக்ய ரக்ஷணார்த்தா2ய மஹிஷாஸுர நாஶினி ।
ப்ரஸன்னா மே ஸுரஶ்ரேஷ்டே2 த3யாங்கு1ரு ஶிவா ப4வ ।।

(க-ரை) மூவுலகங்களையும் ரக்ஷிப்பதற்காக மஹிஷாசுரனைக் கொன்றவளே! எனக்கு நீ பிரஸன்னையாக ஆக வேண்டும். தேவர்களுள் மேன்மை பெற்றவளே! நீ கருணை புரிய வேண்டும். நீ மங்களத்தை உண்டுபண்ணுகிறவளாக ஆக வேண்டும். *(16)*

जया त्वं विजया चैव संग्रामे च जयप्रदा ।
ममापि विजयं देहि वरदा त्वं च सांप्रतम् ।।१७

ஜயா த்வம் விஜயா சைவ ஸங்க்3ராமே ச ஜயப்ரதா3 ।
மமாபி விஜயம் தே3ஹி வரதா3 த்வம் ச ஸாம்ப்ரத1ம் ।। 17

(க-ரை) நீ ஜயம், விஜயம் இவற்றின் ஸ்வரூபமாக இருந்துகொண்டு யுத்தத்தில் ஜயத்தைக் கொடுப்பவளாக விளங்குகிறாய். வரங்களைக் கொடுப்பவளாகிய நீ இப்போழுது எனக்கு விஜயத்தைக் கொடுக்க வேண்டும்.

विन्ध्ये चैव नगश्रेष्ठे तव स्थानं हि शाश्वतम् ।
कालि कालि महाकालि शीधुमांस पशुप्रिये ।।
कृतानुयात्रा भूतैस्त्वं वरदा कामचारिणी ।।१८

விந்த்4யே சைவ நக3 ஶ்ரேஷ்ட்டே2
தவ ஸ்தா2னம் ஹி ஶாஶ்வதம் ।
காளி காளி மஹாகாளி ஶீது4மாம்ஸ ப1ஶுப்ரியே ।।
க்ருதானுயாத்ரா பூ4தைஸ்த்வம் வரதா3 காமசாரிணீ ।। 18

(க-ரை) ஹே காளி! மஹாகாளி! சாராயம், மாம்ஸம், பசு இவைகளில் ப்ரியமுள்ளவளே! பர்வதங்களுள் ச்ரேஷ்டமான விந்திய பர்வதம் உனக்கு சாஸ்வதமான வாஸ ஸ்தானம். நீ பூதங்களால் அனுசரிக்கப்பட்டவள். இஷ்டங்களைக் கொடுப்பவள். இஷ்டப்படி ஸஞ்சரிப்பவள்.

भारावतारे ये च त्वां संस्मरिष्यन्ति मानवाः ।
प्रणमन्ति च ये त्वां हि प्रभाते तु नरा भुवि ।।
न तेषां दुर्लभं किंचित् पुत्रतो धनतोऽपि वा ।।१९

பா4ராவதாரே யே ச த்வாம் ஸம்ஸ்மரிஷ்யந்தி மானவா: ।
ப்ரணமந்தி ச யே த்வாம் ஹி ப்ரபா4தே து நரா பு4வி ॥
நதேஷாம் து3ர்லபா4ம் கிஞ்சித் புத்ரதோ த4னதோऽபிவா ॥

(க-ரை) எந்த மனிதர்கள் கஷ்டத்தை நீக்கிக் கொள்வதற்காக உன்னை நினைக்கிறார்களோ! பூமியில் எந்த மனிதர்கள் விடியற்காலத்தில் உன்னை நமஸ்கரிக்கிறார்களோ அவர்களுக்குப் புத்திரர்கள், தனம் முதலியன கிடைப்பது அரிதன்று. *(19)*

दुर्गात्तारयसे दुर्गे! तत्वं दुर्ग स्मृता जनैः ।
कान्तारेष्ववसन्नानां मग्नानां च महार्णवे ।
दस्युभिर्वा निरुद्धानां त्वं गतिः परमा नृणाम् ॥ २०

து3ர்கா3த்தாரயஸே து3ர்கே3தத்வம் து3ர்க3ஸ்ம்ருதா ஜனை: ।
காந்தாரேஷ்வவஸன்னானாம் மக்3நாநாம் ச மஹார்ணவே ।
த3ஸ்யுபி4ர்வா நிருத்3தா4நாம் த்வம்க3தி:பரமா ந்ருணாம் ॥20

(க-ரை) ஹே துர்கே! நீ ஜனங்களால் நினைக்கப்பட்டால், கஷ்டத்திலிருந்து பிராணிகளைக் கரையேற்றுவதனால் துர்கை என்ற பெயரை அடைந்திருக்கிறாய். காடுகளில் கஷ்டப்படுகிறவர்களும், பெரிய ஸமுத்திரத்தில் மூழ்குகின்றவர்களும், திருடர்களால் வழி மறிக்கப்படுகிறவர்களுமான மனிதர்களுக்கு நீ உத்தம க3தியாக **(उत्तमःगति)** *(ரக்ஷகியாக) இருக்கிறாய்.*

जलप्रतरणे चैव कान्तारेष्वटवीषु च ।
ये स्मरन्ति महादेवि! न च सीदन्ति ते नराः ॥२१

ஜலப்ரத1ரணே சைவ கா1ந்தாரேஷ் வடவீஷு ச ।
யே ஸ்மரந்தி மஹாதே3வி ந ச ஸீத3ந்தி தே நரா: ॥ 21

(க-ரை) ஹே மஹாதேவி! ஜலத்தைத் தாண்டவேண்டிய ஸமயத்திலும், காடுகளிலும், ப்ரவேசிக்க முடியாத மலை, காடு இவைகளில் எந்த மனிதர்கள் உன்னை நினைக்கிறார்களோ, அவர்கள், கஷ்டத்தை அடைய மாட்டார்கள்.

त्वं कीर्तिः श्रीर्धृतिः सिद्धिर्ह्रीर्विद्या संततिर्मतिः ।
संध्या रात्रिः प्रभा निद्रा
ज्योत्स्ना कान्तिः क्षमा दया ।। २२

த்வம் கீர்த்தி: ஶ்ரீர்த்4ருதி:
ஸித்3தி4ர் ஹ்ரீர் வித்3யா ஸந்த1திர்மதி1: ।
ஸந்த்4யா ராத்ரி: ப்ரபா4 நித்3ரா
ஜ்யோத்ஸ்னா கா1ந்தி: க்ஷமா த3யா ।। 22

(க-ரை) நீயே கீர்த்தி, ஶ்ரீதேவி, தைர்ய லக்ஷ்மி, கார்யஸித்தி, வெட்கம், கல்வி, ஸந்ததி (संतति), புத்தி, ஸந்த்யா, ராத்திரி, ஒளி, உறக்கம், நிலவு, காந்தி (कान्ति), பொறுமை, த3யை (दया) இவைகளாக இருக்கின்றாய்.

नृणां च बन्धनं मोहं पुत्रनाशं धनक्षयम् ।
व्याधिं मृत्युं भयं चैव पूजिता नाशयिष्यसि ।। २३

ந்ருணாம் ச ப3ந்த4னம் மோஹம் புத்ரநாஶம் த4னக்ஷயம் ।
வ்யாதி4ம் ம்ருத்யும் ப4யம் சைவ
பூஜிதா நாஶயிஷ்யஸி ।।23

(க-ரை) நீ பூஜிக்கப்படுவாயேயாகில் மனிதர்களுடைய ப3ந்த1ம் (बन्धम्), மோஹம், மக்களழிவு, பொருளழிவு, வ்யாதி,(அகால) மரண பயம் இவற்றை விலக்குவாய்.

सोहं राज्यात् परिभ्रष्टः शरणं त्वां प्रपन्नवान् ।
प्रणतश्च यथा मूर्ध्ना तव देवि! सुरेश्वरि ।।२४

ஸோஹம் ராஜ்யாத் பரிப்4ரஷ்ட:
ஶரணம் த்வாம் ப்ரபன்னவான் ।
ப்ரணதஶ்ச யதா2 மூர்த்4னா தவ தே3வி ஸுரேஶ்வரி ।। 24

(க-ரை) ஹே தேவி! தேவர்களுக்குத் தலைவியே! ராஜ்யத்தை இழந்த நான், உன்னை உள்ளபடி சரணமடைகிறேன். உன்னை முடியினால் வணங்கினவனாயும் இருக்கிறேன்.

त्राहि मां पद्म पत्राक्षि सत्ये सत्या भवस्व नः ।
शरणं भव मे दुर्गे! शरण्ये! भक्त वत्सले! ।।२५

த்ராஹிமாம் பத்^{3}மப^{4}த்^{3}ராக்ஷி ஸத்யே ஸத்யா ப^{4}வஸ்வன: ।
ஶரணம் ப^{4}வ மே து^{3}ர்கே^{3} ஶரண்யே ப^{4}க்த வத்ஸலே ।।

(க-ரை) தாமரை இதழ்போன்ற கண்களை உடையவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக. ஹே ஸத்ய ஸ்வரூபிணி! நீ எங்கள் விஷயத்தில் ஸத்யமாக இருப்பாயாக. ஹே துர்கே! பக்தர்களைக் காப்பாற்றுபவளே! பக்தர்களிடத்தில் அன்புடையவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக என்று ஸ்துதி செய்தார்.

एवं स्तुता हि सा देवि दर्शयामास पाण्डवम् ।
उपागम्य तु राजानं इदं वचनं अब्रवीत् ।।२६

ஏவம் ஸ்துதா ஹி ஸா தே^{3}வி த^{3}ர்ஶயாமாஸ பாண்ட^{3}வம் ।
உபாக^{3}ம்ய து ராஜானம் இத^{3}ம் வச^{1}னம் அப்^{3}ரவீத் ।। 26

(க-ரை) இவ்விதம் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட அந்த தேவி, பாண்டு புத்ரரான யுதிஷ்டிர ராஜனுக்குத் தன் ஸ்வரூபத்தைக் காண்பித்து, அருகில் வந்து, அவரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றாள்.

देव्युवाच-
शृणु राजन् महाबाहो मदीयं वचनं प्रभो ।
भविष्यत् अचिरादेव संग्रामे विजयस्तव ।। २७

தே^{3}வ்யுவாச-
ஶ்ருணு ராஜன் மஹாபா^{3}ஹோ மதீ^{3}யம் வச^{1}னம் ப்ரபோ^{4} ।
ப^{4}விஷ்யத் அசி^{1}ராதே^{3}வ ஸங்க்^{3}ராமே விஜயஸ்தவ ।। 27

(க-ரை) ஹே ராஜனே! மிக்க பா^{3}ஹு ப^{3}லமுள்ளவனே **(बाहुबलम्)**! *ப்ரபுவே! என் வார்த்தையைக் கேள். யுத்தத்தில் சீக்கிரமாகவே உனக்கு வெற்றி உண்டாகப்போகிறது.*

मम प्रसादान् निर्जित्य हत्वा कौरव वाहिनीम् ।
राज्यं निष्कण्टकं कृत्वा मोक्ष्यसे मेदिनीं पुनः ।।२८

மம ப்ரஸாதா[3]ன் நிர்ஜித்ய ஹத்வா கௌ[1]ரவ வாஹினீம்।
ராஜ்யம் நிஷ்க[1]ண்ட[1]க[1]ம் க்ருத்வா
மோக்ஷயஸே மேதி[3]நீம் புன: ॥ 28

(க-ரை) என்னுடைய அனுக்கிரஹத்தினால் கௌ[1]ரவ (कौरव) ஸேனையை ஜெயித்து ராஜ்யத்தில் சத்ருக்களில்லாமல் செய்து மறுபடியும் பூமியை அனுபவிக்கப்போகிறாய்.

भ्रातृभिः सहितो राजन् प्रीतिं प्राप्स्यसि पुष्कलाम्।
मत्प्रसादाच्च ते सौख्यं आरोग्यं च भविष्यति।। २९

ப்[4]ராத்ருபி[4]: ஸஹிதோ ராஜன்
ப்ரீதிம் ப்ராப்ஸ்யஸி புஷ்கலாம் ।
மத் ப்ரஸாதா[3]ச்ச தே ஸௌக்[2]யம்
ஆரோக்[3]யம் ச ப[4]விஷ்யதி ॥ 29

(க-ரை) ஹே ராஜனே! ப்ராதாக்களுடன் கூடினவராய் பூர்ணமான ப்ரீதியை அடையப் போகிறாய், என்னுடைய அனுக்ரஹத்தினால் உனக்கு ஸௌக்கியமும் ஆரோக்கியமும் உண்டாகப் போகிறது.

ये च संकीर्तयिष्यन्ति लोके विगत कल्मषाः।
तेषां तुष्टा प्रदास्यामि राज्यमायुर्वपुः सुतम् ।।३०

யே ச ஸங்கீர்த[1]யிஷ்யந்தி லோகே விக[3]த க[1]ல்மஷா:।
தேஷாம் து[1]ஷ்டா ப்ரதா[3]ஸ்யாமி ராஜ்யமாயுர்வபு:ஸுதம்॥

(க-ரை) உலகத்தில் எவர்கள் தோஷமற்றவர்களாய் (ஸந்தோஷமற்றவர்களாய்) என்னை ஸ்தோத்திரம் செய்வார்களோ அவர்கள் விஷயத்தில் நான் ஸந்தோஷமடைந்து, அவர்களுக்கு ராஜ்யத்தையும், ஆயுளையும், ரோகமற்ற சரீரத்தையும், புத்திரனைம் கொடுப்பேன்

प्रवासे नगरे वाऽपि संग्रामे शत्रुसङ्कटे ।
अटव्यां दुर्गकान्तारे सागरे गहने गिरौ ।।३१
ये स्मरिष्यन्ति मां राजन् यथाहं भवता स्मृता ।
न तेषां दुर्लभं किंचिद् अस्मिन् लोके भविष्यति।।३२

ப்ரவாஸே நக³ரே வாऽபி ஸங்க்³ராமே ஶத்ருஸங்கடே ।
அடவ்யாம் து³ர்க³ காந்தாரே ஸாக³ரே க³ஹனே கி³ரௌ ।
யேஸ்மரிஷ்யந்தி மாம்ராஜன் யதா²ஹம் ப⁴வதா ஸ்ம்ருதா ।
ந தேஷாம் து³ர்லப⁴ம் கிஞ்சித்
அஸ்மின் லோகே ப⁴விஷ்யதி ।। 32

(க-ரை) ராஜனே! உன்னால் நான் எவ்வாறு நினைக்கப் பட்டேனோ, அவ்வாறு எவர்கள் தேசாந்தரத்திலோ, நகரத்திலோ, அல்லது யுத்தத்திலோ, சத்ருக்களால் சங்கடம் நேர்ந்த காலத்திலோ, காட்டிலோ, ப்ரவேசிக்க முடியாத கானகத்திலோ, ஸமுத்திரத்திலோ, கொடிகளாலும் செடிகளாலும் அடர்ந்த மலையிலோ நினைப்பார்களோ. அவர்களுக்கு இவ்வுலகில் எவ்வஸ்துவும் கிடைக்க அரிதாக இராது.

इदं स्तोत्रवरं भक्त्या शृणुयाद्वा पठेत वा ।
तस्य सर्वाणि कार्याणि
सिद्धिं यास्यन्ति पाण्डवाः ।। ३३

இத³ம் ஸ்தோத்ரவரம் ப⁴க்த்யா
ஶ்ருணுயாத்³வா படே²த வா ।
தஸ்ய ஸர்வாணி கார்யாணி
ஸித்³தி⁴ம் யாஸ்யந்தி பாண்ட³வா: ।। 33

(க-ரை) ஓ பாண்டவர்களே! இந்த உத்தமமான ஸ்தோத்திரத்தை எவன் பக்தியுடன் கேட்பானோ அல்லது படிப்பானோ அவனுடைய கார்யங்கள் யாவும் ஸித்³தி **(सिद्धि)** *பெறும்.*

मत्प्रसादाच्च वः सर्वान् विराट नगरे स्थितान् ।
न प्रज्ञास्यन्ति कुरवो नरा वा तन्निवासिनः ।।३४

மத்ப்ரஸாதா³ச்ச வ: ஸர்வான் விராட நக³ரே ஸ்த்தி²தான்।
ந ப்ரஜ்ஞாஸ்யந்தி கு¹ரவோ நரா வா தன் நிவாஸின: ।।34

(க-ரை) விராட நகரத்திலிருக்கிற உங்கள் அனைவரையும் கௌரவர்களோ, அல்லது அங்கு வஸிக்கிற மனிதர்களோ, என்னுடைய ப்ரஸாதத்தினால் அறியமாட்டார்கள்.

इत्युक्त्वा वरदा देवी युधिष्टिरमरिन्दमम् ।
रक्षां कृत्वा च पाण्डूनां तत्रैवान्तरधीयत ॥३५

இத்யுக்த்வா வரதா[3] தே[3]வீ யுதி[4]ஷ்டிர மரிந்த[3]மம் ।
ரக்ஷாம் க்ருத்வா ச பாண்டூ[3]னாம் தத்ரைவாந்தரதீ[4]யத ॥35

(க-ரை) வரன்களைக் கொடுப்பவளான துர்காதேவி சத்ருக்களை ஸம்ஹரிக்கும் திறமையுள்ள யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு பாண்டவர்களுக்கு ரக்ஷையைச் செய்து அவ்விடத்திலேயே மறைந்தாள்.

விராட பர்வாவிலுள்ள து[3]ர்கா[3] ஸ்தோத்ரம் முற்றிற்று.

மஹாயுத்த ஆரம்ப காலத்தில் அர்ஜுனன் செய்த

து[3]ர்கா[3] ஸ்தோத்ரம்

இது ஆத்மஞானம், இந்திரிய ஜயம், சத்ரு ஜயம், ஆயுள் விருத்தி, மங்களம் இவைகளைத் தரக்கூடியது.

सञ्जय उवाच-
धार्तराष्ट्र बलं दृष्ट्वा युद्धाय समुपस्थितम् ।
अर्जुनस्य हितार्थाय कृष्णो वचनमब्रवीत् ॥ १

ஸஞ்ஜய உவாச-
தார்[4]தராஷ்ட்ர ப[3]லம் த்[3]ருஷ்ட்வா
யுத்[3]தா[4]ய ஸமுபஸ்தி[2]தம் ।
அர்ஜுனஸ்ய ஹிதார்த்தா[2]ய க்ருஷ்ணோ வசனமப்[3]ரவீத் ॥1

(க-ரை) ஸஞ்ஜயன் சொல்லலுற்றார். ஸ்ரீ கிருஷ்ணன் யுத்தத்திற்காக வந்திருக்கும் துர்யோதன ஸைன்யத்தைப் பார்த்து அர்ஜுனனுடைய நன்மையின்(ஜயத்தின்) பொருட்டு பின்வரும் வாக்கியங்களைக் கூறினார்:

श्री भगवानुवाच-
शुचिर्भूत्वा महाबाहो! संग्रामाभिमुखे स्थितः ।
पराजयाय शत्रूणां दुर्गास्तोत्रमुदीरय ॥२

ஸ்ரீ ப4க3வானுவாச-
ஶுசிர்பூ4த்வா மஹாபா3ஹோ ஸங்க்3ராமாபி4முகே2ஸ்தி2த:।
ப1ராஜயாய ஶத்ரூணாம் து3ர்கா3 ஸ்தோத்ர முதீ3ரய ।। 2

(க-ரை) ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்: நீண்ட கைகளை உடையவனே! பரிசுத்தவானாகி யுத்த பூமியின் எதிர்முகமாக இருந்துகொண்டு சத்ருக்களுடைய தோல்வியின் பொருட்டு துர்கா தேவியின் ஸ்தோத்திரத்தைச் சொல்லுவாயாக.

एवमुक्तोऽर्जुनः सङ्ख्ये वासुदेवेन धीमता ।
अवतीर्य रथात् पार्थः स्तोत्रमाह कृताञ्जलिः ।।३

ஏவமுக்தோऽர்ஜுன: ஸங்க்2யே வாஸுதே3வேன தீ4மதா।
அவதீர்ய ரதா2த் பார்த்த2: ஸ்தோத்ரமாஹ க்ருதாஞ்ஜலி:।।

(க-ரை) ஸஞ்ஜயர் சொல்லலுற்றார். மஹா புத்திமானான வாஸுதேவனால் இவ்விதம் சொல்லப்பட்ட குந்தியின் புத்திரனாகிய அர்ஜுனன், தேரிலிருந்து இறங்கி கைகூப்பியவனாய் இருந்துகொண்டு யுத்த பூமியில் ஸ்தோத்திரத்தைப் படித்தான்.

अर्जुन उवाच-
नमस्ते सिद्धसेनानि! आर्ये! मन्दर वासिनि! ।
कुमारि! कालि! कापालि! कपिले! कृष्णपिङ्गले! ।।

அர்ஜுன உவாச-
நமஸ்தே ஸித்3த4ஸேனானி ஆர்யே மந்த3ர வாஸினி।
குமாரி காளி கா1பாலி க1பிலே க்ருஷ்ணபிங்க3ளே ।। 4

(க-ரை) அர்ஜுனன் சொல்லலுற்றான்: - ஸித்தர்களின் ஸேனைகளை நடத்துகிறவளே! பூஜிக்கத்தக்கவளே! மந்த3ர பர்வதத்தில் **(मन्दरपर्वतम्)** *வஸிக்கின்றவளே! ப்ரம்ஹசர்ய வ்ரதம் உள்ளவளே! அல்லது கெட்டவர்களை நாசம் செய்பவளே! கால சக்தி ரூபமாக இருப்பவளே! கபாலியான பரமேச்வரனுடைய பத்னியே, கபிலையின் (காறாம்பசுவின்) ரூபமுள்ளவளே! கருநிறம், பொன்னிறம், இவைகளுடையவளே! உனக்கு நமஸ்காரம்.*

भद्रकालि! नमस्तुभ्यं महाकालि! नमोस्तु ते ।
चण्डि चण्डे! नमस्तुभ्यं तारिणि! वरवर्णिनि ।।५

ப^{4}த்^{3}ரகாளி நமஸ்துப்^{4}யம் மஹாகாளி நமோஸ்து தே।
ச^{1}ண்டி^{3} ச^{1}ண்டே^{3} நமஸ்துப்^{4}யம் தா^{1}ரிணி வரவர்ணினி।। 5

(க-ரை) மங்களத்தை பக்தர்களுக்குக் கொடுப்பவளே! உனக்கு நமஸ்காரம். காலாந்த^{1}கருடைய **(कालान्तकः)** பத்தினியே! துஷ்டர்களிடம் மிகுந்த கோபமுடையவளே! ஸங்கடங்களினின்றும் கரை ஏற்றுபவளே! ஸர்வ ஸௌபாக்ய லக்ஷணங்களுடன் கூடியவளே! உனக்கு நமஸ்காரம்.

कात्यायनि! महाभागे! करालि! विजये! जये!।
शिखिपिच्छध्वजधरे! नानाभरण भूषिते! ।। ६
अट्टशूलप्रहरणे! खड्ग खेटक धारिणि! ।
गोपेन्द्रस्यानुजे! ज्येष्ठे! नन्दगोप कुलोद्भवे! ।। ७
महिषासृक् प्रिये! नित्यं कौशिकि पीतवासिनि।
अट्टहासे! कोकमुखे! नमस्तेऽस्तु रणप्रिये! ।। ८

காத்யாயனி மஹாபா^{4}கே^{3} கராலி விஜயே ஜயே ।
ஶிகி^{2}பிச்ச^{2} த்^{4}வஜத^{4}ரே நானாப^{4}ரண பூ^{4}ஷிதே ।। 6
அட்டஶூல ப்ரஹரணே க^{2}ட்^{3}க^{3} கே^{2}டக தா^{4}ரிணி ।
கோ^{3}பேந்த்^{3}ரஸ்யாநுஜே ஜ்யேஷ்ட்டே^{2}
நந்த^{3}கோ^{3}ப^{1} கு^{1}லோத்^{3}ப^{4}வே ।। 7
மஹிஷாஸ்ருக் ப்ரியே நித்யம் கௌஶிகி பீ^{1}தவாஸினி।
அட்டஹாஸே கோ^{1}க^{1}முகே^{2} நமஸ்தேऽஸ்து ரணப்ரியே।।8

எங்கு தாமரைக்குளம் இருக்கிறதோ, எங்கு விஷ்ணு பக்தர்கள் வசிக்கிறார்களோ அந்த இடத்தில் ஸ்ரீ நாராயணன் அருகிலேயே வசிக்கிறார். புஷ்கரம் **(पुष्करम्)** முதலிய தீர்த்தங்களும், கங்கை முதலிய நதிகளும், ஸ்ரீ கோபாலன் முதலிய தேவர்களும் துளஸி வனத்தில் வசிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். லக்ஷ்மிக்குத் தோழியும், மங்களத்தைக் கொடுப்பவளும், பாபத்தைப் போக்குகிறவளும், புண்ணியத்தைக் கொடுக்கிறவளும், நாரதரால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவளும், ஸ்ரீ நாராயணனுடைய மனதிற்குப் பிரியையுமான ஹே துளஸி! உனக்கு நமஸ்காரம் என்று நமஸ்காரம் செய்யவும்.

।। गो वन्दनम् ।।

கோ3 (பசு) வந்த3னம்

கோ3வை (பசுவை) நமஸ்கரித்துப் பிரதக்ஷிணம் செய்வதால் ஸர்வ பாபங்களும் விலகி ஏழு தீவையும் ப்ரதக்ஷிணம் செய்த புண்ணியமும் ஸர்வாபீஷ்டமும் உண்டாகும்.

गां च दृष्ट्वा नमस्कृत्य कृत्वा चैव प्रदक्षिणम् ।
प्रदक्षिणीकृता तेन सप्तद्वीपा वसुन्धरा ।।
सर्वकामदुघे देवि सर्वतीर्थाभिषेचिनी ।
पावने सुरभिश्रेष्टे देवि तुभ्यं नमोस्तु ते ।।

கா3ம் ச த்3ருஷ்ட்வா நமஸ்க்ருத்ய
க்ருத்வா சைவ ப்ரத3க்ஷிணம் ।
ப்ரத3க்ஷிணீக்ருதா தேன ஸப்த த்3வீபா வஸுந்த4ரா ।।
ஸர்வகாமது3கே4 தே3வி ஸர்வ தீர்த்தா2பி4ஷேசி1னீ ।
பா1வனே ஸுரபி4 ஶ்ரேஷ்ட்டே
தே3வி துப்4யம் நமோஸ்து தே ।।

பசுவுக்கு சமீபம் சென்று கோ3(பசு)வைப் பார்த்து நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம் செய்தால் அந்த புருஷனால் ஏழு தீவுகளுடன் கூடின பூமியைப் பிரதக்ஷிணம் செய்த புண்யம் அடையப்படுகிறது. ஸர்வகாமத்தையும் (ஆசைகளையும்) கறக்கக் கூடியவளும், ஸர்வ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த புண்யத்தை கொடுக்கக் கூடியவளும், பரிசுத்தம் செய்யக் கூடியவளும், காமதேனு ஶ்ரேஷ்டையுமான ஹே தேவி! உனக்கு நமஸ்காரம் என்று நமஸ்கரிக்க வேண்டும்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய
ஸ்ரீ பாண்டு³ரங்க³ அஷ்டகம்

இதை பாராயணம் செய்வதால் ஸர்வாபீஷ்டங்களும் உண்டாகி, அந்திம காலத்தில் யமபயம் நீங்கி வைகுண்டம் கிடைக்கும். ஸ்ரீ ஆதி சங்கரரால் செய்யப்பட்டது

।। श्री गणेशाय नमः ।।

महायोगपीठे तटे भीमरथ्या वरं पुण्डरीकाय दातुं मुनीन्द्रैः।
समागत्य तिष्ठन्तं आनन्दकन्दं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।।१

तडिद्वाससं नीलमेघावभासं रमामन्दिरं सुन्दरं चित्प्रकाशम्।
वरं त्विष्टकायां समन्यस्तपादं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।। २

प्रमाणं भवाब्धेरिदं मामकानां
नितम्बः कराभ्यां धृतो येन तस्मात् ।
विधातुर्वसत्यै धृतो नाभिकोशः
परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ।। ३

स्फुरत् कौस्तुभालङ्कृतं कण्ठदेशे
श्रिया जुष्टकेयूरकं श्रीनिवासम् ।
शिवं शान्तमीड्यं वरं लोकपालं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।।

शरच्चन्द्रबिंबाननं चारुहासं लसत्कुण्डलाक्रान्त गण्डस्थलाङ्गम्।
जपारागबिंबाधरं कञ्जनेत्रं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।। ५

किरीटोज्ज्वलत् सर्वदिक्प्रान्तभागं सुरैरर्चितं दिव्यरत्नैःअनर्घ्यैः।
त्रिभङ्गाकृतिं बर्हमाल्यावतंसं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।। ६

विभुं वेणुनादं चरन्तं दुरन्तं स्वयं लीलया गोपवेषं दधानम् ।
गवां बृन्दकानन्दनं चारुहासं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम्।।७

अजं रुक्मणीप्राण सञ्जीवनं तं परंधाम कैवल्यमेकं तुरीयम् ।
प्रसन्नं प्रपन्नार्तिहं देवदेवं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरङ्गम् ।। ८

स्तवं पाण्डुरङ्गस्य वै पुण्यदं ये
पठन्त्येकचित्तेन भक्त्या च नित्यम् ।
भवांभोनिधिं तेऽपि तीर्त्वाऽन्तकाले
हरेरालयं शाश्वतं प्राप्नुवन्ति ।।९

।। इति श्रीमच्छङ्कर भगवत्पाद विरचितं
पाण्डुरङ्गाष्टकं संपूर्णम् ।।

மஹா யோக3பீடே2 தடே பீ4மரத்2யா
வரம் புண்ட3ரீகாய தா3தும் முனீந்த்3ரை: ।
ஸமாக3த்ய திஷ்ட்ட2ந்தம் ஆனந்த3 க1ந்த3ம்
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 1
தடி3த்3வாஸஸம் நீலமேகா4வபா4ஸம்
ரமா மந்தி3ரம் ஸுந்த3ரம் சித் ப்ரகாஶம் ।
வரம் த்3விஷ்டகாயாம் ஸமன்யஸ்த பாத3ம்
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 2
ப்ரமாணம் ப4வாப்3தே4ரித3ம் மாமகானாம்
நிதம்ப:3 கராப்4யாம் த்4ருதோ யேந தஸ்மாத்।
விதா4துர் வஸத்யை த்4ருதோ நாபி4கோஶ:
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 3
ஸ்பு2ரத் கௌஸ்துபா4லங்க்ருதம் கண்ட2 தே3ஶே
ஶ்ரியா ஜுஷ்ட கேயூரகம் ஶ்ரீநிவாஸம் ।
ஶிவம் ஶாந்தமீட்3யம் வரம் லோக பா1லம்
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 4
ஶரச்சந்த்3ர பி3ம்பா3னனம் சாருஹாஸம்
லஸத்குண்ட3லாத்ராந்த க3ண்ட3ஸ்த2லாங்க3ம்।
ஜபாராக3 பி3ம்பா3த4ரம் கஞ்ஜ நேத்ரம்
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 5
கிரீடோஜ் ஜ்வலத் ஸர்வதி3க் ப்ராந்த பா4க3ம்
ஸுரைரர்சிதம் தி3வ்யரத்னை: அநர்க்4யை:।
த்ரிப3ங்காக்ருதிம் ப3ர்ஹமால்யாவ தம்ஸம்
பரப்3ரஹ்மலிங்க3ம் ப4ஜே பாண்டு3ரங்க3ம் ।। 6
விபு4ம் வேணுநாத3ம் சரந்தம் து3ரந்தம்
ஸ்வயம் லீலயா கோ3பவேஷம் த3தா4னம் ।

க[3]வாம் ப்[3]ருந்த[3]கானந்த[3]னம் சாருஹாஸம்
பரப்[3]ரஹ்மலிங்க[3]ம் ப[4]ஜே பாண்டு[3]ரங்க[3]ம் ।। 7
அஜம் ருக்மணீ ப்ராண ஸஞ்ஜீவனம் தம்
பரந்தா[4]ம கைவல்யமேக[1]ம் துரீயம் ।
ப்ரஸன்னம் ப்ரபன்னார்த்திஹம் தே[3]வ தே[3]வம்
பரப்[3]ரஹ்மலிங்க[3]ம் ப[4]ஜே பாண்டு[3]ரங்க[3]ம் ।। 8
ஸ்தவம் பாண்டு[3]ரங்க[3]ஸ்ய வை புண்யத[3]ம் யே
பட[2]ந்த்யேக சித்தேன ப[4]க்த்யா ச நித்யம் ।
ப[4]வாம்போ[4]நிதி[4]ம் தேऽபி தீர்த்வாऽந்த காலே
ஹரேராலயம் ஶாஶ்வதம் ப்ராப்நுவந்தி ।। 9

।। இதி ஸ்ரீமச்சங்கர ப[4]கவத்பாத[3] விரசிதம்
பாண்டு[3]ரங்காஷ்டகம் ஸம்பூர்ணம் ।।

மஹா யோக பீடத்தில் பீ[4]மரதி **(भीमरति)** *என்ற நதியின் கரையில் புண்ட[3]ரீகன்* **(पुण्डरीकः)** *என்ற பக்தனுக்கு வரம் கொடுப்பதற்காக மஹரிஷிகளுடன் கூடவந்து வசிப்பவரும், ஆனந்தத்திற்குக் காரணமானவரும், பரப்பிரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். (1)*

மின்னல் போன்ற வஸ்திரம் தரித்தவரும், நீருண்ட மேகம் போன்றவரும், மஹா லக்ஷ்மிக்கு இருப்பிடமானவரும், அழகு வாய்ந்தவரும், சித்ப்ரகாஶ ரூபியுமான **(चित्प्रकाश रूपि)** *பாண்டுரங்கனை பஜிக்கிறேன். (2)*

என்னை அண்டின பக்தர்களுக்கு ஸம்ஸார ஸமுத்ரம் இவ்வளவு(ஆழம்)தான் என்பதைக் காட்டுவதற்காக இடுப்பில் இரண்டு கைகளை வைத்தவரும், பிரம்மதேவன் வசிப்பதற்காக நாபியில் பத்மத்தை தரித்தவரும், பரப்பிரும்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். (3)

க[1]ண்ட[2]தே[3]சத்தில் **(कण्ठदेशम्)** *பிரகாசிக்கின்ற கௌஸ்துப[4]த்தினால்* **(कौस्तुभम्)** *அலங்கரிக்கப்பட்டவரும், தோள்வளை தரித்தவரும், மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமானவரும் க[4]ண்டாகர்ணனுக்குச்* **(घण्टाकर्णः)**

ஶிவலிங்க ரூபியாய் தரிசனம் அளித்தவரும், ஶாந்தரும், ஸ்தோத்ரம் பண்ணத் தகுந்தவரும், சிறந்தவரும், லோகங்களைக் காப்பவரும், பரப்பரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். (4)

ஶரத்கால சந்திரபிம்பத்தைப் போன்ற முகத்தை உடையவரும், அழகிய புன்சிரிப்புள்ளவரும், ப்ரகாசிக்கின்ற குண்டலத்தினால் ஆக்ரமிக்கப்பட்ட கன்னப் பிரதேசத்தை உடையவரும், செம்பரத்தம்பூ போலச் சிவந்த உதட்டை உடையவரும், தாமரை போன்ற கண்களை உடையவரும் பரப்ரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின்றேன். (5)

கிரீடத்தினால் ப்ரகாசிக்கின்ற சகல திக்குகளை உடையவரும், விலை மதிக்கத்தகாத திவ்ய ரத்தினங்களினால் தேவர்களால் அர்ச்சிக்கப்பட்டவரும், மூன்று மடிப்பு சதையுடன் கூடின-வரும், மயில் தோகையினால் அலங்கரிக்கப்பட்டவரும், பரப்ரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின்றேன். (6)

ப்ரபுவும், வேணுநாதம் செய்கின்றவரும், முடிவில்லாதவரும், தானாக வேடிக்கையாய் கோ³பவேஷம் **(गोपवेष:)** தரித்தவரும், பசுக்களின் கூட்டத்திற்கு ஆனந்தத்தை அளிப்பவரும், அழகிய சிரிப்புள்ளவரும், பரப்பரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின்றேன். (7)

பிறப்பற்றவரும், ருக்மிணீ ப்ராணநாத²ரும் **(रुक्मिणी प्राणनाथ:)**, பரஞ்ஜோதிஸ்ஸுரும், மோக்ஷ ரூபியும், முக்யனும், து¹ரீயனும் **(तुरीयम्)**, நமஸ்கரித்தவர்களுடைய மனக்கவலையை நீக்குகிறவரும், தேவர்களுக்குத் தேவனும், பரப்ரம்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின்றேன்.(8)

புண்யத்தைக் கொடுக்கும் பாண்டுரங்க ஸ்தோத்ரத்தை எவர்கள் ஒருமைப்பட்ட மனதுடனும், பக்தியுடனும் படிக்கிறார்களோ அவர்களும் மரண காலத்தில் ஸம்சார சமுத்ரத்தைக் கடந்து அழிவற்றதான ஹரியின் வீடாகிய ஶ்ரீ வைகுண்டத்தை அடைகின்றனர். (9)

।। श्री मीनाक्षी पञ्चरत्नम् ।।

ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்னம்

இதை நித்யம் பாராயணம் செய்வதால் ஸகல வித்யை, ராஜ்யலாபம், ஆரோக்கியம், தீர்க ஸௌமாங்கல்யம் முதலிய க்ஷேமங்கள் உண்டாகும். ஸ்ரீ ஆதி சங்கரரால் செய்யப்பட்டது

उद्यद्भानु सहस्त्र कोटि सदृशां केयूरहारोज्वलां
बिम्बोष्ठीं स्मितदन्त पङ्क्ति रुचिरां पीताम्बरालंकृताम् ।
विष्णु ब्रह्म सुरेन्द्र सेवितपदां तत्त्वस्वरूपां शिवां
मीनाक्षीं प्रणतोस्मि संततमहं कारुण्यवारानिधिम् ।। १
मुक्ताहार लसत्किरीट रुचिरां पूर्णेन्दु वक्त्रप्रभां
शिञ्जन्नूपुर किङ्किणी मणिधरां पद्म प्रभा भासुराम् ।
सर्वाभीष्ट फलप्रदां गिरिसुतां वाणी रमासेवितां
मीनाक्षीं प्रणतोस्मि संततमहं कारुण्यवारानिधिम् ।। २
श्रीविद्यां शिव वामभाग निलयां ह्रींकार मन्त्रोज्वलां
श्रीचक्राङ्कित बिन्दुमध्य वसतीं श्रीमत् सभानायकीम् ।
श्रीमत् षण्मुख विघ्नराज जननीं श्रीमज्जगन् मोहिनीं
मीनाक्षीं प्रणतोस्मि संततमहं कारुण्यवारानिधिम् ।। ३
श्रीमत् सुन्दर नायिकां भयहरां ज्ञानप्रदां निर्मलां
श्यामाभां कमलासनार्चितपदां नारायणस्यानुजाम् ।
वीणा वेणु मृदङ्ग वाद्यरसिकां नानाविधाडम्बिकां
मीनाक्षीं प्रणतोस्मि संततमहं कारुण्यवारानिधिम् ।।४
नानायोगि मुनीन्द्र हृन्निवसतीं नानार्थ सिद्धि प्रदां

नानापुष्प विराजिताङ्घ्रियुगलां नारायणेनार्चिताम्।
नादब्रह्ममयीं परात्परतरां नानार्थ तत्त्वात्मिकां
मीनाक्षीं प्रणतोस्मि संततमहं कारुण्यवारानिधिम्।। ५

உத்3யத்3பா4னு ஸஹஸ்ர கோடி ஸத்3ருஶாம்
கேயூர ஹாரோஜ் ஜ்வலாம்
பி3ம்போ3ஷ்ட்டீம் ஸ்மித த3ந்த பங்க்தி ருசிராம்
பீ1தாம்ப3ராலங்க்ருதாம் ।
விஷ்ணு ப்3ரஹ்ம ஸுரேந்த்3ர ஸேவித பதா3ம்
தத்த்வ ஸ்வரூபாம் ஶிவாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராநிதி4ம் ।। 1

முக்தாஹார லஸத் கிரீட ருசிராம்
பூர்ணேந்து3 வக்த்ர ப்ரபா4ம்
ஶிஞ்ஜன்னூபுர கிங்கிணீ மணித4ராம்
பத்3ம ப்ரபா4 பா4ஸுராம் ।
ஸர்வாபீ4ஷ்ட்ட ப2ல ப்ரதா3ம் கி3ரிஸுதாம்
வாணீ ரமா ஸேவிதாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராநிதி4ம் ।। 2

ஸ்ரீவித்3யாம் ஶிவ வாமபா4க நிலயாம்
ஹ்ரீங்கார மந்த்ரோஜ் ஜ்வலாம்
ஸ்ரீசக்ராங்கித பி3ந்து3மத்4ய வஸதீம்
ஸ்ரீமத் ஸபா4நாயகீம் ।
ஸ்ரீமத் ஷண்முக2 விக்4நராஜ ஜனனீம்
ஸ்ரீமஜ்ஜகன் மோஹினீம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராநி4திம் ।। 3

ஸ்ரீமத் ஸுந்த3ர நாயிகாம் ப4யஹராம்
ஞான ப்ரதா3ம் நிர்மலாம்
ஶ்யாமாபா4ம் கமலாஸநார்ச்சித பதா3ம்
நாராயணஸ் யானுஜாம் ।

வீணா வேணு ம்ருத³ங்க³ வாத்³ய ரஸிகாம்
நாநாவிதா⁴ட³ம்பி³காம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராநிதி⁴ம் ।। 4

நாநாயோகி³ முநீந்த்³ர ஹ்ருன் நிவஸதீம்
நாநார்த்த² ஸித்³தி⁴ ப்ரதா³ம்
நாநாபுஷ்ப விராஜிதாங்க்⁴ரி யுக³ளாம்
நாராயணேநார்ச்சிதாம் ।
நாத³ ப்³ரஹ்ம மயீம் பராத்பர தராம்
நாநார்த்த² தத்வாத்மிகாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராநிதி⁴ம் ।। 5

உதயமாகின்ற ஆயிரம் கோடி சூர்யனுக்கு ஒப்பானவளும், கேயூரம் ஹாரம் இவைகளால் பிரகாசிக்கின்றவளும், கோவைப்பழம் போன்ற உதட்டை உடையவளும், புன்சிரிப்புடன் கூடிய பல் வரிசையின் காந்தியை **(कान्ति)** உடையவளும், பீதாம்பரத்தினால் அலங்கரிக்கப்பட்டவளும், விஷ்ணு, பிரம்ஹா, இந்திரன், இவர்களால் ஸேவிக்கப்பட்ட பாதத்தை உடையவளும், தத்வ ஸ்வரூபியும், மங்களத்தைச் செய்பவளும், கருணைக்கடலுமான ஸ்ரீ மீனாக்ஷியை எப்பொழுதும் நான் நமஸ்கரிக்கிறேன். (1)

முக்தா ஹாரத்தினால் பிரகாசிக்கின்ற கிரீடத்தினால் அழகுள்ளவளும், பூர்ண சந்திரன் போன்ற முக² காந்தியை **(मुखकान्ति)** உடையவளும், சப்தத்துடன் கூடின நூபுரத்திலுள்ள சின்ன மணிகளை தரித்தவளும், செந்தாமரைப் புஷ்பத்தின் காந்தியினால் பிரகாசிக்கிறவளும், ஸர்வாபீ⁴ஷ்ட ப²லத்தைக் **(सर्वाभीष्ट फलम्)** கொடுப்பவளும், பர்வதராஜ குமாரியும், ஸரஸ்வதி, லக்ஷ்மி இவர்களால் ஸேவிக்கப்பட்டவளும், கருணைக்கடலுமான ஸ்ரீ மீனாக்ஷியை நான் எப்பொழுதும் ஸேவிக்கிறேன். (2)

ஸ்ரீவித்யா ரூபிணியும், பரமசிவனின் இடது பாகத்தில் வசிப்பவளும், ஹ்ரீம்கார மந்திரத்தில் பிரகாசிப்பவளும், ஸ்ரீசக்ரத்தின் பி[3]ந்து[3]வின் (**बिन्दु**) நடுவில் வசிப்பவளும், ஸ்ரீசி[1]த்[1]ஸபை[4]நாயகியும் (**श्रीचित्सभा नायकी**), ஸ்ரீமானான ஷண்முகன், கணபதி இவர்களுக்குத் தாயும், ஜகத்தை மோஹிக்கச் செய்கின்றவளும், கருணைக் கடலுமான ஸ்ரீ மீனாக்ஷியை நான் எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன். *(3)*

ஸ்ரீ சுந்தர நாயகியும், பயத்தைப் போக்குகிறவளும், ஞானத்தை அளிப்பவளும், நிர்மலையும் (**निर्मला**), கறுத்த நிறமுள்ளவளும், நாராயணனுக்குச் சகோதரியும், வீணை, வேணு, மிருதங்க வாத்தியத்தில் ரஸமுள்ளவளும், நானாவிதமான ஆடம்பரத்துடன் கூடினவளும், கருணைக் கடலுமான மீனாக்ஷியை நான் எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன். *(4)*

வெகு யோகிகள், முனி சிரேஷ்டர்கள் இவர்கள் ஹ்ருதயத்தில் வசிப்பவளும், ஸர்வார்த்த[2] ஸித்[3]தி[4]யைக் (**सवर्थि सिद्धि**) கொடுப்பவளும், வெகுவிதமான புஷ்பங்களினால் பிரகாசிக்கின்ற இரண்டு கால்களை உடையவளும், நாராயணனால் பூஜிக்கப்பட்டவளும், நாத பிரஹ்ம ரூபிணியும், எல்லாப் பொருள்களுக்கும் மேற்பட்டவளும், ஸர்வ வேதாந்த வாக்கியத்தின் ஸாரபூ[4]தையும் (**सारभूता**), கருணைக் கடலுமான ஸ்ரீ மீனாக்ஷியை நான் எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன்.*(5)*

இந்திரனால் செய்யப்பட்ட

।। श्री लक्ष्मी स्तोत्रम् ।।

ஸ்ரீலக்ஷ்மி ஸ்தோத்ரம்

இதை ஜபிப்பதினால் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ப்ரஸாதம் பரிபூர்ணமாய் உண்டாகும்.

।। इन्द्र उवाच ।।

नमस्तेस्तु महामाये श्रीपीठे सुरपूजिते ।
शङ्ख चक्र गदा हस्ते महालक्ष्मि नमोऽस्तु ते ।। १
नमस्ते गरुडारूढे कोलासुर भयङ्करि ।
सर्व पाप हरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ।। २
सर्वज्ञे सर्व वरदे सर्वदुष्ट भयङ्करि ।
सर्व दुःखहरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ।। ३
सिद्धि बुद्धि प्रदे देवि भुक्ति मुक्ति प्रदायिनि ।
मन्त्रमूर्ते सदा देवि महालक्ष्मि नमोऽस्तु ते ।। ४
आद्यन्त रहिते देवि आद्यशक्ति महेश्वरि ।
योगजे योगसंभूते महालक्ष्मि नमोऽस्तु ते ।। ५
स्थूलसूक्ष्म महारौद्रे महाशक्ति महोदरे ।
महापापहरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ।। ६
पद्मासनस्थिते देवि परब्रह्म स्वरूपिणि ।
परमेशि जगन्मातः महालक्ष्मि नमोऽस्तु ते ।। ७
श्वेताम्बरधरे देवि नानालङ्कार भूषिते ।
जगत्स्थिते जगन्मातः महालक्ष्मि नमोऽस्तु ते ।। ८
महालक्ष्म्यष्टकं स्तोत्रं यः पठेन् भक्तिमान्नरः ।
सर्वसिद्धिं अवाप्नोति राज्यं प्राप्नोति सर्वदा ।। ९

एककालं पठेन्नित्यं महापाप विनाशनम् ।
द्विकालं यः पठेन्नित्यं धनधान्य समन्वितः ।।१०
त्रिकालं यः पठेन्नित्यं महाशत्रु विनाशनम् ।
महालक्ष्मीः भवेन्नित्यं प्रसन्ना वरदा शुभा ।।११

।। இந்த்3ர உவாச ।।

நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே2 ஸுரபூஜிதே ।
ஶங்க2 சக்ர க3தா3 ஹஸ்தே
மஹாலக்ஷ்மி நமோऽஸ்து தே ।। 1
நமஸ்தே கருடா3ரூடே4 கோலாஸுர ப4யங்கரி ।
ஸர்வ பாப ஹரே தே3வி மஹாலக்ஷ்மி நமோऽஸ்து தே ।।2
ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே3 ஸர்வது3ஷ்ட ப4யங்கரி ।
ஸர்வ து3:க2 ஹரே தே3வி மஹாலக்ஷ்மி நமோऽஸ்துதே ।।3
ஸித்3தி4 புத்3தி4 ப்ரதே3 தே3வி பு4க்தி முக்தி ப்ரதா3யினி ।
மந்த்ரமூர்த்தே ஸதா3தே3வி மஹாலக்ஷ்மி நமோऽஸ்துதே ।।
ஆத்3யந்த ரஹிதே தே3வி ஆத்3ய ஶக்தி மஹேஶ்வரி ।
யோக3ஜே யோக3 ஸம்பூ4தே
மஹாலக்ஷ்மி நமோऽஸ்துதே ।। 5
ஸ்தூ2லஸூக்ஷ்ம மஹாரௌத்3ரே மஹாஶக்திமஹோத3ரே ।
மஹா பாப ஹரே தே3வி மஹாலக்ஷ்மி நமோऽஸ்து தே ।।6
பத்3மாஸன ஸ்த்தி2தே தே3வி பரப்3ரஹ்ம ஸ்வரூபிணி ।
பரமேஶி ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோऽஸ்து தே ।। 7
ஶ்வேதாம்ப3ர த4ரே தே3வி நாநாலங்கார பூ4ஷிதே ।
ஜகத்ஸ்த்தி2தே ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோऽஸ்துதே ।।8
மஹாலக்ஷ்ம்யஷ்டகம் ஸ்தோத்ரம் ய:படே2ன் ப4க்திமாந்நர:
ஸர்வஸித்3தி4ம் அவாப்னோதி
ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா3 ।। 9
ஏக காலம் படே2ன் நித்யம் மஹாபாப விநாஶனம் ।
த்3விகாலம் ய:படே2ன் நித்யம் த4னதா3ன்ய ஸமன்வித: ।।10
த்ரிகாலம் ய: படேன் நித்யம் மஹாஶத்ரு விநாஶனம் ।
மஹாலக்ஷ்மீ: ப4வேன்நித்யம் ப்ரஸன்னா வரதா3 ஶுபா4 ।।11

இந்திரன் சொல்லுகிறார்

மஹாமாயையும், ஸ்ரீபீடத்தில் வசிப்பவளும், தேவர்களால் பூஜிக்கப்பட்டவளும், சங்கம், சக்ரம், க^{3}தை^{3} **(गदा)** இவைகளைக் கையில் தரித்தவளுமான மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (1)

கருட வாஹனத்தில் அமர்ந்தவளும், கோலாஸுரனுக்குப் **(कोलासुरः)** பயத்தைக் கொடுப்பவளும், ஸர்வ பாபத்தைப் போக்குகிறவளுமான ஓ மஹாலக்ஷ்மீ! உமக்கு நமஸ்காரம். (2)

ஸர்வஜ்ஞையும், எல்லோருக்கும் வரனை அளிப்பவளும், எல்லா துஷ்டர்களுக்கும் பயத்தைக் கொடுப்பவளும், ஸர்வ துக்கத்தைப் போக்குகிறவளுமான ஓ மஹாலக்ஷ்மீ! உமக்கு நமஸ்காரம். (3)

ஸித்^{3}தி^{4} **(सिद्धि)**, பு^{3}த்^{3}தி^{4} **(बुद्धि)** இவைகளைக் கொடுப்பவளும், தேவியும், போ^{4}க^{3}ம் **(भोगम्)**, மோக்ஷம் இவைகளைக் கொடுப்பளும், மந்த்ர மூர்த்தியும், எப்பொழுதும் பிரகாசிக்கின்றவளுமான ஓ மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (4)

ஆதி^{3} அந்தம் **(आद्यन्तम्)** அற்றவளும், தேவியும், முதல் சக்தியும், மஹேஶ்வரியும், யோகத்தினால் உண்டானவளும், யோகத்திற்குப் ப^{2}லமுமான **(फलम्)** ஓ மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (5)

ஸ்தூலமாயும், ஸூக்ஷ்மமாயும், மிக பயங்கரமாயும் உள்ளவளும், மஹா சக்தியும், விசாலமான வயிற்றை உடையவளும், மஹா பாபங்களைப் போக்குகிறவளும், தேவியுமான ஓ மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (6)

பத்மாஸனத்தில் அமர்ந்தவளும், தேவியும், பரப்ரம்ஹ ஸ்வரூபிணியும், பரமேஶ்வரியும், உலகிற்குத் தாயுமான ஓ மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (7)

வெளுப்பு வஸ்திரம் தரித்தவளும், தேவியும், வெகு அலங்காரங்களினால் அலங்கரிக்கப்பட்டவளும், உலகெல்லாம் உள்ளவளும், உலகிற்குத் தாயுமான ஓ மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம். (8)

எந்த மனிதன் பக்தியுடன் மஹாலக்ஷ்மி அஷ்டகமென்ற ஸ்தோத்ரத்தைப் படிக்கிறானோ அவன் ஸர்வ ஸித்தியையும், ராஜ்யத்தையும் அடைவான். (9)

ஒரு காலம் படித்தால் மஹா பாபங்கள் விலகும், இரண்டு காலம் படித்தால் செல்வம், தான்யம் இவை உண்டாகும்.

மூன்று காலம் படித்தால் மஹா சத்ருக்களைப் போக்கும். நித்யம் ஶ்ரீ மஹாலக்ஷ்மி, பிரஸன்னையாயும், வரதை³யாகவும் **(वरदा)**, மங்களத்தைச் செய்பவளாயும் ஆவாள். *(11)*

।। श्री शीतलाष्टकम् ।।

ஶ்ரீ ஶீதலாஷ்டகம்

(ஶ்ரீ ஸ்காந்தத்திலுள்ளது)

வைசூரியினால் (அம்மை) ஏற்படும் உபாதையை **(बाधा)** அடைந்த பொழுதும், ஸர்வ க்ஷேம லாபங்களைக் கோரியும் மஹாமாயை என்ற சீதளையின் ஸ்தோத்திரத்தை நித்யம் பாராயணம் செய்ய வேண்டும்.

श्री गणेशाय नमः ।। अस्य श्री शीतलास्तोत्रस्य महादेव ऋषिः । अनुष्टुप् छन्दः । शीतला देवता । लक्ष्मीः बीजम् । भवानी शक्तिः । सर्व विस्फोटक निवृत्यर्थे जपे विनियोगः ।

।। ईश्वर उवाच ।।

वन्देऽहं शीतलां देवीं रासभस्थां दिगम्बराम् ।
मार्जनी कलशोपेतां शूर्पालंकृत मस्तकाम् ।। १
वन्देऽहं शीतलां देवीं सर्व रोग भयापहम् ।
यामासाद्य निवर्तेत विस्फोटक भयं महत् ।। २
शीतले शीतले चेति यो ब्रूयाद्दाहपीडितः ।
विस्फोटक भयं घोरं गृहे क्षिप्रं तस्य प्रणश्यति ।। ३
यस्त्वामुदक मध्ये तु ध्यात्वा संपूजयेन् नरः ।
विस्फोटक भयं घोरं गृहे तस्य न जायते ।। ४

शीतले ज्वरदग्धस्य पूतिगन्धयुतस्य च ।
प्रनष्ट चक्षुषः पुम्सस्त्वामाहुर्जीवनौषधम् ।। ५
शीतले तनुजान् रोगान् नृणां हरसि दुस्त्यजान् ।
विस्फोटक विदीर्णानां त्वमेकामृत वर्षिणी ।। ६
गलगण्डग्रहा रोगा ये चान्ये दारुणा नृणाम् ।
त्वदनुध्यान मात्रेण शीतले यांति संक्षयम् ।। ७
न मन्त्रो नौषधं तस्य पापरोगस्य विद्यते ।
त्वामेकां शीतले धात्रीं नान्यां पश्यामि देवताम् ।। ८
मृणालतंतु सदृशीं नाभिहृन्मध्य संस्थिताम् ।
यस्त्वां संचिन्तयेद्देवि तस्य मृत्युः न जायते ।। ९
अष्टकं शीतला देव्या यो नरः प्रपठेत् सदा ।
विस्फोटक भयं घोरं गृहे तस्य न जायते ।। १०
श्रोतव्यं पठितव्यं च श्रद्धा भक्ति समन्वितैः ।
उपसर्ग विनाशाय परं स्वस्त्ययनं महत् ।। ११
शीतले त्वं जगन् माता शीतले त्वं जगत् पिता ।
शीतले त्वं जगद्धात्री शीतलायै नमो नमः ।। १२
रासभो गर्दभश्चैव खरो वैशाख नन्दनः ।
शीतला वाहनश्चैव दूर्वाकन्द निकृन्तनः ।। १३
एतानि खर नामानि शीतलाग्रे तु यः पठेत् ।
तस्य गेहे शिशूनां च शीतलारुङ् न जायते । १४
शीतलाष्टकमेवेदं न देयं यस्य कस्यचित् ।
दातव्यं च सदा तस्मै श्रद्धा भक्तियुताय वै ।।१५

।। इति श्रीस्कान्दपुराणे शीतलाष्टक स्तोत्रं संपूर्णम् ।।

ஸ்ரீ க3ணேஶாய நம: ।। அஸ்ய ஸ்ரீ ஶீதலா ஸ்தோத்ரஸ்ய மஹாதே3வ ரிஷி: । அநுஷ்ட்டுப் ச2ந்த: । ஶீதலா தே3வதா। லக்ஷ்மீ: பீ3ஜம் । ப4வானீ ஶக்தி: । ஸர்வ விஸ்ப்போ2டக நிவ்ருத்யர்த்தே2 ஜபே விநியோக:3 ।

।। ஈஶ்வர உவாச ।।

வந்தே3ऽஹம் ஶீதலாம் தே3வீம்
ராஸப4ஸ்த்தா2ம் தி3க3ம்ப3ராம்।
மார்ஜநீ கலஶோபேதாம் ஶூர்பாலங்க்ருத மஸ்தகாம் ।। 1
வந்தே3ऽஹம் ஶீதலாம் தே3வீம் ஸர்வ ரோக3 ப4யாபஹம்।
யாமாஸாத்3ய நிவர்த்தேத விஸ்போ2டக ப4யம் மஹத்।। 2
ஶீதலே ஶீதலே சேதி யோ ப்3ரூயாத் தா3ஹ பீடி3த: ।
விஸ்ப்போ2டக ப4யம் கோ4ரம்
க்ஷிப்ரம் தஸ்ய ப்ரணஶ்யதி ।। 3
யஸ்த்வாமுத3க மத்4யே து த்4யாத்வா ஸம்பூஜயேன் நர:।
விஸ்ப்போ2டக ப4யம் கோ4ரம்
க்3ருஹே தஸ்ய ந ஜாயதே ।। 4
ஶீதலே ஜ்வர த3க்3த4ஸ்ய பூதிக3ந்த4யுதஸ்ய ச ।
ப்ரநஷ்ட சக்ஷுஷ: பும்ஸஸ்
த்வாமாஹுர் ஜீவநௌஷத4ம் ।। 5
ஶீதலே தநுஜான் ரோகா3ன்
ந்ருணாம் ஹரஸி து3ஸ்த்யஜான் ।
விஸ்ப்போ2டக விதீர்ணானாம் த்வமேகா4ம்ருதவர்ஷிணீ।।6
க3லக3ண்ட3க்3ரஹா ரோகா3
யே சான்யே தா3ருணா ந்ருணாம் ।
த்வத3நுத்4யான மாத்ரேண ஶீதலே யாந்தி ஸங்க்ஷயம்।। 7
ந மந்த்ரோ நௌஷத4ம் தஸ்ய பாபரோ3கஸ்ய வித்3யதே।
த்வாமேகாம் ஶீதலே தா4த்ரீம்
நான்யாம் பஶ்யாமி தே3வதாம் ।। 8

ம்ருணால தந்து ஸத்3ருஶீம்
நாபி4 ஹ்ருன் மத்4ய ஸம்ஸ்தி2தாம் ।
யஸ்த்வாம் ஸஞ்சிந்தயேத் தே3வி
தஸ்ய ம்ருத்யு: ந ஜாயதே ।। 9
அஷ்டகம் ஶீதலா தே3வ்யா யோ நர: ப்ரபடே2த் ஸதா3 ।
விஸ்ப்போ2டக ப4யம் கோ4ரம்
க்3ருஹே தஸ்ய ந ஜாயதே ।। 10
ஶ்ரோதவ்யம் படி2தவ்யம் ச ஶ்ரத்தா4ப4க்தி ஸமன்விதை: ।
உபஸர்க3 விநாஶாய பரம் ஸ்வஸ்த்யயனம் மஹத் ।। 11
ஶீதலே த்வம் ஜகன் மாதா ஶீதலே த்வம் ஜக3த் பிதா ।
ஶீதலே த்வம் ஜகத்3தா4த்ரீ ஶீதலாயை நமோ நம: ।। 12
ராஸபோ4 க3ர்த3ப4ஶ்சைவ க2ரோ வைஶாக2 நந்த3ன: ।
ஶீதலா வாஹனஶ்சைவ தூ3ர்வாகந்த3 நிக்ருந்தன: ।। 13
ஏதானி க2ர நாமானி ஶீதலாக்3ரே து ய: படே2த் ।
தஸ்ய கே3ஹே ஶிஶூநாம் ச ஶீதலாருங் ந ஜாயதே ।। 14
ஶீதலாஷ்டகமேவேத3ம் ந தே3யம் யஸ்ய கஸ்யசித் ।
தா3தவ்யம் ச ஸதா3 தஸ்மை
ஶ்ரத்3தா4 ப4க்தியுதாய வை ।। 15

।। இதி ஶ்ரீஸ்காந்த3 புராணே
ஶீதலாஷ்டக ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ।।

அர்த்தம்

ஸ்ரீ ஶீதளா ஸ்தோத்திரத்திற்கு ரிஷி மஹாதேவன், சந்தஸ் அனுஷ்டுப், ஶீதளை தேவதை, லக்ஷ்மீர்பீஜம், பவானீ ஶக்தி:

எல்லாவிதமான கொப்புளங்களும் போவதற்கு இந்த ஜபத்தைச் செய்யவும்.

பரமசிவன் சொல்லுகிறார்:-

கழுதையை வாஹனமாக உடையவளும், திக்கை (திசையை) வஸ்திரமாக உடையவளும், மார்ஜனீயையும், குடத்தையும் வைத்துக் கொண்டவளும், முறத்தினால் அலங்கரிக்கப்பட்ட

சிரஸை உடையவளும், தேவியுமான ஶீதளை என்ற மஹாமாயையை நான் நமஸ்கரிக்கின்றேன். (1)

எவளை அடைந்தால் கொப்புளத்தினால் ஏற்பட்ட மஹத்தான பயம் நீங்குமோ, அப்படிப்பட்டவளும், ஸர்வரோக பயத்தைப் போக்குகிறவளும், தேவியுமான ஶீதளையை நான் நமஸ்கரிக்கிறேன். (2)

வசூரி காலத்தில் தாகத்தினால் பீடிக்கப்பட்டவன் 'ஶீதளே, ஶீதளே' என்று கூவினால் கொடூரமான கொப்புளத்தால் ஏற்பட்ட பயமானது சீக்கிரமாக அவனுக்கு நாசத்தை அடையும். (3)

எவன் ஜலத்தின் நடுவிலிருந்து உன்னை தியானித்துக் கொண்டு பூஜிக்கிறானோ, அவன் வீட்டில் கொப்புளத்தால் ஏற்படும் பயம் உண்டாவதில்லை. (4)

ஓ ஶீதளே! ஜ்வரத்தினால் தாபத்தை **(तापम्)** அடைந்தவனுக்கும், கெட்ட நாற்றத்தை அடைந்தவனுக்கும், கண்ணை இழந்தவனுக்கும், ஜீவனத்திற்கும், மருந்தாகத் தங்களை மஹரிஷிகள் சொல்லுகின்றனர். (5)

ஓ ஶீதளே! மனுஷ்யர்களுக்குச் சரீரத்தில் ஏற்பட்ட நிவிருத்தி செய்யமுடியாத வியாதிகளை நீ போக்குகிறாய். கொப்புளத்தினால் கஷ்டப்படுகிறவர்களுக்குத் தாங்கள் ஒருவரே அமிர்தத்தை வர்ஷிக்கிறவள். (6)

கழுத்து முதலிய இடங்களில் கட்டி கட்டியாக வரும் கண்டமாலை என்ற ரோகங்களும், இன்னும் மனுஷ்யர்களுக்கு வரக்கூடிய கொடூரமான ரோகங்களும், தங்களை த்யானம் செய்த மாத்திரத்தினால் ஓ ஶீதளே! நசித்து விடுகின்றன. (7)

அந்த பாப ரோகத்திற்கு மந்த்ரமோ மருந்தோ கிடையாது. ஓ ஶீதளே! தாங்கள் ஒருவரே தாய். வேறு தேவதையை நான் காணவில்லை. (8)

எவனொருவன், ஓ தேவி! நாபியின் நடுவிலும், ஹ்ருதயத்தின் நடுவிலும், தாமரைத்தண்டு நூலுக்கு சமானமாய் தாங்கள் இருப்பதாக நினைக்கிறானோ, அவனிடத்தில் ம்ருத்யு வருவதில்லை. (9)

எந்த மனிதன் ஶீதளாதேவியின் அஷ்டகத்தை எப்பொழுதும் படிக்கிறானோ அவன் வீட்டில் வசூரியினால் ஏற்படும் பயம் உண்டாவதில்லை. ஆபத்துக்கள் நிவிருத்தியாவதற்காக

சிரத்தையுடனும், பக்தியுடனும் கேட்க வேண்டும், படிக்க வேண்டும். இந்த ஸ்தோத்ரமானது மஹத்தான மங்களத்தைக் கொடுக்கும். ஓ ஶீதளே! நீ உலகத்திற்குத் தாய். ஓ ஶீதளே! நீ உலகத்திற்கு தகப்பன். ஓ ஶீதளே நீ உலகத்திற்கு காவற்காரி. ஶீதளையின் பொருட்டு வெகு நமஸ்காரங்கள். ராஸப[1]ம்(**रासभः**), க[3]ர்த[3]ப[4]ம் (**गर्दभः**), க[2]ரம் (**खरः**), வைசாக[2] நந்த[3]னன் (**वैशाख नन्दनः**), ஶீதளா வாஹனன், தூ[3]ர்வாகந்த[3] நிக்ருந்த[1]னன் (**दूर्वाकन्द निकृन्तनः**) என்ற ஶீதளாதேவியின் வாஹனத்தின் பெயர்களை ஶீதளா தேவிக்கு முன்பு எவன் ஒருவன் படிக்கிறானோ அவன் வீட்டில் குழந்தைகளுக்கும் மஹாமாயையினால் ஏற்படும் வியாதி உண்டாவதில்லை. ஶீதளா அஷ்டகத்தை கண்டவனுக்கும் உபதேசிக்க கூடாது. சிரத்தை, பக்தி உள்ளவனுக்கே எப்பொழுதும் உபதேசிக்க வேண்டும். *(10-15)*

கோ[3]பிகா கீ[3]தம்

கோபிகா கீதத்தை கானம் செய்வதற்கு முன்பு இந்த இரண்டு சுலோகத்தையும் படிப்பது மஹான்களின் வழக்கம்.

तन्मनस्काः तदालापाः तद्विचेष्टाः तदात्मिकाः।
तद्गुणानेव गायन्त्यो नात्मागाराणि सस्मरुः ।। १

தன்மனஸ்கா: ததா[3]லாபா: தத்[3]விசேஷ்டா: ததா[3]த்மிகா: ।
தத்[3]கு[3]ணானேவ கா[3]யந்த்யோ நாத்மாகா[3]ராணி ஸஸ்மரு: ।।

கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் சென்ற மனதுள்ளவர்களாகவும், கிருஷ்ண விஷயமான வார்த்தைகளையே பேசுகின்றவர்களாகவும், கிருஷ்ணன் போலவே நடிக்கின்றவர்களாகவும், அவருடைய தாதாத்ம்யத்தை (**तातात्म्यम्**) அடைந்தவர்களாகவுமாகி, அவருடைய குணங்களையே கானம் செய்து கொண்டு தமது சரீரங்களையும் வீடுகளையும் மறந்து விட்டனர்.

पुनः पुलिनमागत्य कालिन्द्याः कृष्ण भावनाः।
समवेता जगुः कृष्णं तदागमनकाङ्क्षिताः ।।२

புன: புலினமாக³த்ய காலிந்த்³யா: க்ருஷ்ண பா⁴வனா:।
ஸமவேதா ஜகு:³ க்ருஷ்ணம் ததா³க³மன காங்க்ஷிதா:।। 2

மறுபடியும் யமுனையின் மணல் குன்றுக்கு வந்து மறைந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய வரவில் ஆசை கொண்டவர்களாகவும், ஸ்ரீ கிருஷ்ணனையே தியானம் செய்கின்றவர்களாகவுமாகி எல்லாக் கோபிகைகளும், ஒன்று கூடி ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து கானம் செய்ய ஆரம்பித்தனர்.

।। श्री गोपिका गीतम् ।।
ஸ்ரீ கோ³பிகா கீ³தம்

(ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தத்தில் உள்ளது)

இதை நித்யம் பாராயணம் செய்வதால் ஸர்வமங்களங்களும் உண்டாகும். ஸ்ரீ காமகோடி பீடத்தில் பிரகாசித்த பிரம்ஹ நிஷ்டர்களான ஜகத்குரு ஸ்ரீ போதேந்த்ராள் மஹாபுண்யசாலினிகளான கோபிகைகளால் கானம் செய்யப்பட்ட இந்த சுலோகங்களில் ஒவ்வொரு பாதத்திலும் 'கிருஷ்ணா' என்ற நாமத்தை சேர்த்து கா³னம் **(गानम्)** செய்ய வேண்டுமென்று உபதேசித்ததாய் மஹான்கள் கூறுகின்றனர். இப்பொழுதும் இம்மாதிரியே வெகு பக்தர்கள் கானம் செய்கின்றனர்.

கோபிகைகளின் கீதத்தையே கங்காதீரத்தில் **(गङ्गातीरम्)** ஸ்ரீ சுகாசார்யாள் பரீக்ஷித் சக்ரவர்த்திக்கு உபதேசித்து, காமாதி ஸர்வ தோஷங்களும் போகுமென்றும் அனுக்கிரஹித்திருக்கின்றனர்.

।। गोप्य ऊचुः ।।

जयति तेऽधिकं कृष्ण जन्मना व्रजः
श्रयत इन्दिरा कृष्ण शश्वदत्र हि ।
दयित दृश्यतां कृष्ण दिक्षु तावकाः
त्वयि धृतासवः कृष्ण त्वां विचिन्वते।। १

।। கோ3ப்ய ஊசு1: ।।

ஜயதி தே꠰தி4கம் க்ருஷ்ண ஜன்மனா வ்ரஜ:
ஶ்ரயத இந்தி3ரா க்ருஷ்ண ஶஶ்வத3த்ர ஹி ।
த3யித த்3ருஶ்யதாம் க்ருஷ்ண தி3க்ஷு தாவகா:
த்வயி த்4ருதாஸவ: க்ருஷ்ண த்வாம் விசின்வதே ।। 1

ஓ க்ருஷ்ணா! தங்கள் பிறப்பினால் ஸ்ரீ மஹாலக்ஷ்மி எப்பொழுதும் எங்கள் இடைச்சேரியில் வசிக்கிறாள். அதனால் கோகுலமானது வைகுண்டத்திற்கு மேல் அதிகமாக பிரகாசிக்கிறது. உம்மிடத்தில் உயிரை வைத்து, திக்குகளில் (திசைகளில்) தேடும் எங்களைப் பார்க்க வேண்டும்.

शरदुदाशये कृष्ण साधुजातसत्-
सरसिजोदर कृष्ण श्रीमुषा दृशा ।
सुरतनाथ ते कृष्ण अशुल्कदासिकाः
वरद निघ्नतो कृष्ण नेह किं वधः ।।२

ஶரது3தா3ஶயே க்ருஷ்ண ஸாது4ஜாதஸத்-
ஸரஸிஜோத3ர க்ருஷ்ண ஸ்ரீமுஷா த்3ருஶா ।
ஸுரதநாத2 தே க்ருஷ்ண அஶுல்கதா3ஸிகா:
வரத3 நிக்4நதோ க்ருஷ்ண நேஹ கிம் வத:3 ।। 2

ஸம்போக பதியான ஹே கிருஷ்ணா! ஶரத்கால ஓடையில் நன்கு அழகாக மலர்ந்த தாமரைப் புஷ்பத்தின் நடுவிலுள்ள ஸ்ரீயைத் திருடும் கண்ணினால் சம்பளமில்லாத வேலைக்காரிகளான எங்களைக் கொல்லுவதானது ஹே வரதா! இது வத4மல்லவா **(वधम्)***!*

विषजलाप्ययात् कृष्ण व्याल राक्षसान्
वर्षमारुतात् कृष्ण वैद्युतानलात् ।
वृषमयात्मजात् कृष्ण विश्वतो भयात्
ऋषभ ते वयं कृष्ण रक्षिता मुहुः ।। ३

விஷ ஜலாப்யயாத் க்ருஷ்ண வ்யால ராக்ஷஸான்
வர்ஷமாருதாத் க்ருஷ்ண வைத்3யுதாநலாத் ।

வ்ருஷமயாத்மஜாத் க்ருஷ்ண விஸ்வதோ ப[4]யாத்
ரிஷப[4] தே வயம் க்ருஷ்ண ரக்ஷிதா முஹு: ।। 3

ஶ்ரேஷ்டரான ஹே கிருஷ்ணா! காளீயனின் விஷ ஜலத்தினால் ஏற்பட்ட மரணத்திலிருந்தும், அகா[4]ஸுரனிடத்திலிருந்தும் **(अघासुर:)**, மழை, காற்று, இடி, இவைகளிலிருந்தும், அரிஷ்டாசுரன், மயன், வ்யோமாஸுரன் இவர்களிடத்திலிருந்தும் இன்னும் எல்லா பயத்திலிருந்தும், எங்களை அடிக்கடி காப்பாற்றிவிட்டு, இப்பொழுது கைவிடக்கூடாதென்று பிரார்த்திக்கின்றனர்.

न खलु गोपिका कृष्ण नन्दनो भवान्
अखिलदेहिनां कृष्ण अन्तरात्मदृक् ।
विखनसार्थितो कृष्ण विश्वगुप्तये
सख उदेयिवान् कृष्ण सात्त्वतां कुले।।४

ந க[2]லு கோ[3]பிகா க்ருஷ்ண நந்த[3]னோ ப[4]வான்
அகி[2]லதே[3]ஹிநாம் க்ருஷ்ண அந்தராத்மத்[3]ருக் ।
விக[2]னஸார்த்தி[2]தோ க்ருஷ்ண விஸ்வ கு[3]ப்தயே
ஸக[2] உதே[3]யிவான் க்ருஷ்ண ஸாத்வதாம்குலே।।4

(உலக ரக்ஷணத்திற்காக அவதரித்த நீர் பக்தர்களான எங்களைக் கைவிடக்கூடாதென்று பிரார்த்திக்கின்றனர்.)

ஹே கிருஷ்ணா ! நீர் இடைச்சியான யசோதையின் பிள்ளை அல்ல. எல்லா ஜீவர்களுக்கும் உள்ளிருக்கும் அந்தர்யாமி **(अन्तर्यामि)** (புத்தி ஸாக்ஷி) பிரும்மாவினால் ப்ரார்த்திக்கப்பட்டு உலக ரக்ஷணத்திற்காக யது[3]குலத்தில் **(यदुकुलम्)**, ஏ தோழனே! நீர் அவதரித்திருக்கிறீர்.

विरचिताभयं कृष्ण वृष्णिधुर्य ते
चरणमीयुषां कृष्ण संसृतेर्भयात् ।
करसरोरुहं कृष्ण कान्त कामदं
शिरसि देहि नः कृष्ण श्रीकरग्रहम् ।। ५

விரசிதா ப[4]யம் க்ருஷ்ண வ்ருஷ்ணிது[4]ர்ய தே
சரணமீயுஷாம் க்ருஷ்ண ஸம்ஸ்ருதேர்ப[4]யாத்।

கரஸரோருஹம் க்ருஷ்ண கா[1]ந்த காமத[3]ம்
ஶிரஸி தே[3]ஹி ந: க்ருஷ்ண ஶ்ரீகரக்[3]ரஹம் ।। 5

ஹே யது[3]ச்ரேஷ்டா(यदुश्रेष्ठ)! ஹே காந்தா (कान्ता)! ஸம்ஸார பயத்தினால் உமது ச[1]ரணத்தில் (चरणम्) ஶரணம் (शरणम्) அடைந்த பக்தர்களுக்கு அப[4]ய ப்ரதா[3]னம் (अभयप्रदानम्) செய்கிறதும், அபீஷ்டத்தை கொடுக்கிறதும், ஸ்ரீ மகாலக்ஷ்மியின் கையை பிடித்ததுமான உமது தாமரை போன்ற கையை எங்கள் ஶிரஸில் வைக்க வேண்டும்.

व्रज जनार्तिहन् कृष्ण वीर योषितां
निज जनस्मय कृष्ण ध्वंसनस्मित ।
भज सखे भवत् कृष्ण किङ्करीः स्म नो
जलरुहाननं कृष्ण चारु दर्शय ।।६

வ்ரஜ ஜநார்த்திஹன் க்ருஷ்ண வீர யோஷிதாம்
நிஜ ஜனஸ்மய க்ருஷ்ண த்[4]வம்ஸ நஸ்மித ।
ப[4]ஜ ஸகே[2] ப[4]வத் க்ருஷ்ண கிங்கரீ: ஸ்ம நோ
ஜல ருஹானனம் க்ருஷ்ண சாரு த[3]ர்ஶய ।। 6

நந்த கோகுலத்திலுள்ள ஜனங்களின் மனக்கவலையைப் போக்குகிறவரும், வீரனும், தோழனும், சொந்த ஜனங்களின் கர்வத்தைப் போக்கும் புன் சிரிப்பு உள்ளவருமான ஹே கிருஷ்ணா! உமது வேலைக்காரிகளான எங்களிடம் நிச்சயம் வர வேண்டும். பத்மம் போன்ற அழகிய முகத்தை முதலில் ஸ்திரீகளான எங்களுக்கு காண்பிக்க வேண்டும்.

प्रणत देहिनां कृष्ण पापकर्शनं
तृणचरानुगं कृष्ण श्रीनिकेतनम् ।
फणिफणार्पितं कृष्ण ते पदाम्बुजं
कृणु कुचेषु नः कृष्ण कृन्धि हृच्छयम् ।।७

ப்ரணத தே[3]ஹினாம் க்ருஷ்ண பாபகர்ஶனம்
த்ருணசரானுக[3]ம் க்ருஷ்ண ஶ்ரீ நிகேதனம் ।
ப[2]ணிப[2]ணார்ப்பிதம் க்ருஷ்ண தே பதா[3]ம்பு[3]ஜம்
க்ருணு குசேஷு ந: க்ருஷ்ண க்ருந்தி[4] ஹ்ருச்ச[2]யம் ।।7

எந்த ஜாதியாக இருந்தாலும், தன்னை நமஸ்கரித்த பிராணிகளுடைய பாபத்தைப் போக்குகிறதும், பசுக்களுடன் கூட செல்லுகிறதும், மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமும், காளியனின் சிரஸ்ஸுகளில் வைக்கப்பட்டதுமான உமது பாத கமலத்தை எங்கள் ஸ்தனங்களில் வைத்து, மனத்தை ஆஶ்ரயித்த காமத்தைப் போக்க வேண்டும்.

मधुरया गिरा कृष्ण वल्गुवाक्यया
बुधमनोज्ञया कृष्ण पुष्करेक्षण ।
विधिकरीरिमाः कृष्ण वीर मुह्यतीः
अधरशीधुना कृष्ण प्यायस्व नः ।।८

மது⁴ரயா கி³ரா க்ருஷ்ண வல்கு³ வாக்யயா
புத⁴ மனோஜ்ஞயா க்ருஷ்ண புஷ்கரேக்ஷண ।
விதி⁴கரீரிமா: க்ருஷ்ண வீர முஹ்யதீ:
அத⁴ர ஶீது⁴னா க்ருஷ்ண ப்யாயயஸ்வ ந: ।। 8

செந்தாமரைக் கண்ணனான ஹே வீரா! மதுரமும் அழகிய வாக்யங்கள் உள்ளதும் வித்வான்களுடைய மனத்தையும் கவரக்கூடியதுமான உமது வார்த்தையினால் மோஹத்தை அடைந்த தங்கள் வேலைக்காரிகளான எங்களை அத⁴ராம்ருதத்தினால் **(अधरामृतम्)** திருப்தி செய்விக்க வேண்டும்.

तव कथामृतं कृष्ण तप्तजीवनं
कविभिरीडितं कृष्ण कल्मषापहम् ।
श्रवणमङ्गलं कृष्ण श्रीमदाततं
भुवि गृणन्ति ते कृष्ण भूरिदा जनाः ।। ९

தவ கதா²ம்ருதம் க்ருஷ்ண தப்த ஜீவனம்
கவிபி⁴ரீடி³தம் க்ருஷ்ண கல்மஷாபஹம் ।
ஶ்ரவண மங்க³ளம் க்ருஷ்ண ஶ்ரீமதா ததம்
பு⁴வி க்⁴ருணந்தி தே க்ருஷ்ண பூ⁴ரிதா³ ஜனா: ।। 9

(உமது பிரிவினால் எங்களுக்கு மரணம் நிச்சயம் ஏற்பட்டிருக்கும், ஆனால் புண்ய புருஷர்கள் தங்கள் கதா²ம்ருதத்தைப் **(कथामृतम्)** பானம் செய்துவைத்து வஞ்சித்து விட்டனர்) தாபத்தை **(तापम्)** அடைந்தவர்களுக்கு உயிர்

அளிப்பதும், வ்யாஸ, ஶுக (शुक:), வால்மீகி முதலியவர்களால் கொண்டாடப்பட்டதும், காம கர்மங்களைப் போக்கக் கூடியதும், கேட்ட மாத்திரத்தினால் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதும், அஷ்டைஶ்வர்யத்தைக் கொடுக்கக் கூடியதுமான உமது கதையாகிற அம்ருதத்தை எவர்கள் சொல்லுகிறார்களோ, அல்லது அனுபவிக்கிறார்களோ, அந்த மனிதர்கள் ஜன்மாந்தரத்தில் (जन्मान्तरम्) மஹா தானங்களை செய்தவர்களாக இருக்க வேண்டும். அல்லது மஹா தானங்களின் பலன்களை அடைகின்றனர்.

प्रहसितं प्रिय कृष्ण प्रेम वीक्षणं
विहरणं च ते कृष्ण ध्यानमङ्गलम् ।
रहसि संविदो कृष्ण या हृदिस्पृहः
कुहक नो मनः कृष्ण क्षोभयन्ति हि ।। १०

ப்ரஹஸிதம் ப்ரிய க்ருஷ்ண ப்ரேம வீக்ஷணம்
விஹரணம் ச தே க்ருஷ்ண த்[4]யான மங்க[3]ளம்।
ரஹஸி ஸம்விதோ[3] க்ருஷ்ண யா ஹ்ருதி[3] ஸ்ப்ருஹ:
குஹக நோ மன: க்ருஷ்ண க்ஷோப[4]யந்தி ஹி।।10

ஹே ப்ரியா! ஹே கபடா! உன்னுடைய மந்தஹாஸமும், ப்ரேமை நிரம்பிய பார்வையும், சிந்தித்தால் மங்களத்தைத் தரும் உமது விளையாட்டும், ஹ்ருதயத்தைத் தொடுகின்ற ரஹஸ்யத்திலுள்ள உமது ஸம்க்ஞைகளும் எங்களுடைய மனதைக் கலக்குகின்றன.

चलसि यद्व्रजात् कृष्ण चारयन् पशून्
नलिन सुन्दरं कृष्ण नाथ ते पदम् ।
शिलतृणांकुरैः कृष्ण सीदतीति नः
कलिलतां मनः कृष्ण कान्त गच्छति ।। ११

சலஸி யத்[3]வ்ரஜாத் க்ருஷ்ண சாரயன் பஶூன்
நலின ஸுந்த[3]ரம் க்ருஷ்ண நாத[2] தே பத[3]ம்।
ஶில த்ருணாங்குரை: க்ருஷ்ண ஸீத[3]தீதி ந:
கலிலதாம் மன: க்ருஷ்ண காந்த க[3]ச்ச[2]தி ।। 11

ஹே நாதா ! எப்பொழுது நீர் கோகுலத்திலிருந்து பசுக்களை ஓட்டிக் கொண்டு புறப்படுகிறீரோ, அப்பொழுது தாமரை

போல் அழகான உமது சரணம் **(चरणम्)**, சிறு கற்களாலும், புற்களின் நுனிகளாலும் குத்தப்படுமே என்று எங்கள் மனதானது கலங்குகின்றது.

दिनपरिक्षये कृष्ण नीलकुन्तलैः
वनरुहाननं कृष्ण बिभ्रदावृतम् ।
घनरजस्वलं कृष्ण दर्शयन् मुहुः
मनसि नः स्मरं कृष्ण वीर यच्छसि।। १२

தி3ன பரிக்ஷயே க்ருஷ்ண நீல குந்த1லை:
வனருஹானனம் க்ருஷ்ண பி3ப்4ரதா3வ்ருதம் ।
க4ன ரஜஸ்வலம் க்ருஷ்ண த3ர்ஶயன் முஹு:
மனஸி ந: ஸ்மரம் க்ருஷ்ண வீர யச்ச2ஸி ।। 12

நீங்கள் ஸாயங்காலத்தில் கறுத்த முன் நெற்றி மயிரினால் சூழப்பட்டதும், அதிகமான கோ3தூ4ளியினால் **(गोधूळि)** மறைக்கப்பட்டதுமான, தாமரை போன்ற முகத்தை தரித்துக் கொண்டும், அதை அடிக்கடி காண்பித்துக் கொண்டும், எங்கள் மனதில் காமத்தைக் கொடுக்கிறீர்.

प्रणत कामदं कृष्ण पद्मजार्चितं
धरणि मण्डनं कृष्ण ध्येयमापदि ।
चरणपङ्कजं कृष्ण शन्तमं च ते
रमण नः स्थनेषु कृष्ण अर्पयाधिहन् ।।१३

ப்ரணத காமத3ம் க்ருஷ்ண பத்3மஜார்ச்சிதம்
த4ரணி மண்ட3னம் க்ருஷ்ண த்4யேயமாபதி3 ।
சரண பங்கஜம் க்ருஷ்ண ஶந்தமம் ச தே
ரமண ந: ஸ்த2னேஷு க்ருஷ்ண அர்பயாதி4ஹன் ।।13

மனோ வ்யாதியைப் போக்கும் ஹே ரமணா! பிரம்ம தேவனால் பூஜிக்கப்பட்டதும், ஆபத்து காலத்தில் அவசியம் த்யானம் பண்ண வேண்டியதும், நினைத்த மாத்திரத்தில் ஆபத்தைப் போக்கக்கூடியதும், ஸேவிக்கும் ஸமயத்திலேயே ஸுகத்தைக் கொடுக்க கூடியதுமான உமது ச1ரண பங்கஜத்தை **(चरण पङ्कजम्)** எங்களுடைய ஸ்தனங்களில் வைக்க வேண்டும்.

सुरतवर्धनं कृष्ण शोक नाशनं
स्वरित वेणुना कृष्ण सुष्टु चुम्बितम् ।
इतरराग कृष्ण विस्मारणं नृणां
वितर वीर नः कृष्ण तेऽधरामृतम् ।।१४

ஸுரத வர்த⁴னம் க்ருஷ்ண ஶோக நாஶனம்
ஸ்வரித வேணுனா க்ருஷ்ண ஸுஷ்டு சு'ம்பி³தம் ।
இதர ராக³ க்ருஷ்ண விஸ்மாரணம் ந்ருணாம்
விதர வீர ந: க்ருஷ்ண தேऽத⁴ராம்ருதம் ।। 14

ஹே வீரா! காமத்தை விருத்³தி⁴ (वृद्धि) செய்வதும், சோகத்தைப் போக்குவதும், சப்திக்கின்ற வேணுவினால் (புல்லாங்குழல்) நன்கு முத்தமிடப்பட்டதும், மனிதர்களுக்கு வேறு ஆசைகளை மறக்கச் செய்வதுமான உமது அத⁴ராம்ருதத்தை **(अधरामृतम्)** எங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

अटति यद्भवान् कृष्ण अह्नि काननं
त्रुटिर्युगायते कृष्ण त्वां अपश्यताम् ।
कुटिलकुन्तलं कृष्ण श्रीमुखं च ते
जड उदीक्षतां कृष्ण पक्ष्मकृद् दृशाम् ।। १५

அடதி யத்³ப⁴வான் க்ருஷ்ண அன்ஹி கானனம்
த்ருடிர் யுகா³யதே க்ருஷ்ண த்வாம் அபஶ்யதாம் ।
குடில குந்தலம் க்ருஷ்ண ஶ்ரீமுக²ம் ச தே
ஜட³ உதீ³க்ஷதாம் க்ருஷ்ண பக்ஷ்மக்ருத்³ த்³ருஶாம் ।।15

(ஒரு க்ஷணம் உம்மைப் பாராமல் போனால் துக்கமும், பார்த்தால் ஸுகமும் ஏற்படுவதைக் கண்டு ஸர்வ ஸங்க³ பரித்யாக³ம் **(सर्वसङ्ग परित्यागम्)** செய்த ஸன்னியாசிகள் போல், உம்மை வந்து நாங்கள் அடைந்தோம் அப்படிப்பட்ட எங்களைக் கைவிடலாகுமா என்று மிகக் கவலையுடன் பிரார்த்திக்கின்றனர்.) எப்பொழுது நீர் பிருந்தாவனத்தை நோக்கிப் போகிறீரோ, அப்பொழுது உம்மைப் பாராத பிராணிகளுக்கு அரை க்ஷணமும் கூட, யுகம் போல் ஆகிறது. பிறகு ஸாயங்காலத்தில் வக்ரமான முன் நெற்றி மயிர்களுடன் கூடியிருக்கும் ஸ்ரீ முகத்தை நிமிர்ந்து பார்க்கின்ற எங்களுடைய கண்களுக்கு இமைகளைச் செய்த பிரம்மா ஜடமாவார்.

पतिसुतान्वय कृष्ण भ्रातृ बान्धवान्
अतिविलङ्घ्य ते कृष्ण अन्त्यच्युतागताः।
गतिविदस्तवोत् कृष्ण गीतमोहिताः
कितव योषितः कृष्ण कस्त्यजेन्निशि ।।१६

பதி ஸுதான்வய க்ருஷ்ண ப்4ராத்ரு பா3ந்த4வான்
அதிவிலங்க்4ய தே க்ருஷ்ண அந்த்யச்யுதாக3தா:।
க3திவிதஸ் தவோத் க்ருஷ்ண கீ3த மோஹிதா:
கிதவ யோஷித: க்ருஷ்ண கஸ்த்யஜேந்நிஶி ।। 16

ஹே அச்1யுத (अच्युत)! புருஷன், குழந்தை, வம்சம், கூடப்பிறந்தவர்கள், ப3ந்து4க்கள் (बन्धु), இவர்களை மீறி உமது ஸமீபத்தில் நாங்கள் நல்லகதி ஏற்படுமென்று வந்து விட்டோம். உமது கானத்தால் மோஹத்தை அடைந்த ஸ்திரீ-களை, இரவில் எவன்தான் கைவிடுவான்.

रहसि संविदं कृष्ण हृच्छयोदयं
प्रहसिताननं कृष्ण प्रेमवीक्षणम् ।
बृहदुरः श्रियो कृष्ण वीक्ष्य धाम ते
मुहुरतिस्पृहा कृष्ण मुह्यते मनः ।। १७

ரஹஸி ஸம்வித3ம் க்ருஷ்ண ஹ்ருச்ச2யோத3யம்
ப்ரஹஸிதானனம் க்ருஷ்ண ப்ரேம வீக்ஷணம் ।
ப்3ருஹது3ர: ஶ்ரியோ க்ருஷ்ண வீக்ஷ்ய தா4ம தே
முஹுரதிஸ்ப்ருஹா க்ருஷ்ண முஹ்யதே மன:।। 17

காமத்தைக் கொடுக்கும் ஏகாந்தத்தில் செய்த உமது ஸங்கேத வார்த்தைகளையும், புன் சிரிப்புள்ள முகத்தையும், பிரிய-மான பார்வையையும், மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமான உமது விரிந்த மார்பையும் நினைத்து எங்கள் மனமானது அதிக ஆவல் கொண்டு அடிக்கடி மோஹத்தை அடைகிறது.

व्रजवनौकसां कृष्ण व्यक्तिरङ्ग ते
वृजिनहन्त्र्यलं कृष्ण विश्वमङ्गलम् ।
त्यज मनाक्च नःकृष्ण त्वत् स्पृहात्मनां
स्वजन हृद्रुजां कृष्ण यन्निषूदनम् ।।१८

வ்ரஜ வனௌகஸாம் க்ருஷ்ண வ்யக்திரங்க³ தே
வ்ருஜின ஹந்த்ர்யலம் க்ருஷ்ண விஶ்வமங்க³ளம் ।
த்யஜ மனாக்ச ந: க்ருஷ்ண த்வத் ஸ்ப்ருஹாத்மனாம்
ஸ்வஜன ஹ்ருத்³ருஜாம் க்ருஷ்ண யந்நிஷூதி³னம் ।।18

ஹே அங்கா³ (अङ्ग)! உனது ஸ்வரூபத்தைப் பார்ப்பதானது கோகுலத்திலுள்ள பிராணிகளுக்குப் பாபத்தைப் போக்குகிறதாகவும், உலகுக்கு மிகுந்த மங்களகரமானதாகவும் இருக்கிறது. உம்மிடம் ஆசை கொண்ட மனதுள்ளவர்களான எங்களுடைய ஹ்ருதய ரோகங்களுக்கு நிவிருத்தியைத் தருகின்ற மருந்து எதுவோ அதைக் கொஞ்சம் தருவீராக. (அதிக ப்ரேமையினால் அழுது கொண்டு சொல்லுகின்றனர்.)

यत्ते सुजात चरणाम्बुरुहं स्तनेषु
भीताः शनैः प्रियदधीमहि कर्कशेषु ।
तेनाटवीमटसि तद्व्यथते न किंस्वित्
कूर्पादिभिः भ्रमति धीर्भवदायुषां नः ।। १९

யத்தே ஸுஜாத சரணாம்பு³ருஹம் ஸ்தனேஷு
பீ⁴தா: ஶனை: ப்ரியத³தீ⁴மஹி கர்க்கஶேஷு ।
தேநாடவீம் அடஸி தத்³ வ்யத²தே ந கிம்ஸ்வித்
கூர்ப்பாதி³பி:⁴ ப்⁴ரமதி தீ⁴ர் ப⁴வதா³யுஷாம் ந: ।। 19

ஹே அழகுள்ள பிரியனே! எந்த உமது ச¹ரணாரவிந்த³த்தைக் **(चरणारविन्दम्)** *கடினங்களான எங்களது ஸ்தனங்களில் வைத்தால் (தங்கள் சரணம்) நோகுமோ என்று பயந்து, மெள்ள வைத்துக் கொள்ளுவோமோ, அப்படிப்பட்ட காலினால் காட்டில் சுற்றுகின்றாயே. சின்ன கற்களினால் அந்தச் ச¹ரணம்* **(चरणम्)** *நோகாதோ என்று தங்களையே உயிராக உடைய எங்களுடைய புத்தியானது கலங்குகிறது.*

इति गोप्यः प्रगायन्त्यः प्रलपन्त्यश्च चित्रधा ।
रुरुदुः सुस्वरं राजन् कृष्ण दर्शनलालसाः ।।२०

இதி கோ³ப்ய: ப்ரகா³யந்த்ய: ப்ரலபந்த்யஶ்ச சித்ரதா⁴ ।
ருருது:³ ஸுஸ்வரம் ராஜன் க்ருஷ்ண த³ர்ஶன லாலஸா: ।।

ஸ்ரீ சுகாசார்யாள் இந்த கோபிகைகளின் பக்தியைக் கண்டு மகிழ்ந்து பரீக்ஷித்தை ஓ ராஜன்! என்று அழைத்துச் சொல்லுகிறார். இம்மாதிரி கோபிகைகள் (ஸுஸ்வரத்தில்) நல்ல குரலில் உரத்து கானம் செய்து விசித்ரமாய் புலம்பி ஸ்ரீ கோபாலனைக் காண ஆவல் கொண்டு அழுதார்கள்.

तासां आविरभूत् शौरिः स्मयमान मुखाम्बुजः।
पीताम्बरधरः स्रग्वी साक्षान् मन्मथ मन्मथः।।२१

தாஸாம் ஆவிரபூ4த் ஶௌரி: ஸ்மயமான முகா2ம்பு3ஜ:।
பீதாம்ப3ரத4ர: ஸ்ரக்3வீ ஸாக்ஷான் மன்மத2 மன்மத2:।।21

ஸ்ரீ பகவான் அந்த கோபிகைகளுக்கு முன்னிலையில் புன்சிரிப்புடன் கூடிய தாமரை போன்ற முகத்துடனும், பீதாம்பரம் தரித்தும், புஷ்பமாலை அணிந்தும், மன்மதன் கூட ஆசைப்படும் ரூபத்துடனும் ஆவிர்பவித்தார் (தோன்றினார்).

तं विलोक्यागतं प्रेष्ठं प्रीत्युत्फुल्ल दृशोऽबलाः।
उत्तस्थुर्युगपत् सर्वास्तन्वः प्राणमिवागतम् ।।२२

தம் விலோக்யாக3தம் ப்ரேஷ்ட்ட2ம்
ப்ரீத்யுத்பு2ல்ல த்3ருஶோऽப3லா: ।
உத்தஸ்து2ர்யுக3பத் ஸர்வாஸ்தன்வ: ப்ராணமிவாக3தம்।।

அங்கு ஆவிர்பவித்த அந்த கோபாலனைக் கண்டு கோபிகைகள் ஸந்தோஷத்தால் மலர்ந்த கண்களை உடையவர்களாய் இருந்து கொண்டு, உட்கார்ந்து கானம் செய்த இடத்திலிருந்து ஒரே சமயத்தில் எல்லோருமாக உயிர் வந்த சரீரங்கள் போல் துள்ளி எழுந்தார்கள்.

கோ3பிகா கீ3தம் முற்றிற்று.

।। श्री सूर्यकवच स्तोत्रम् ।।

ஸ்ரீ ஸூர்ய க[1]வச[1] ஸ்தோத்ரம்

(ஸ்ரீ யாக்ஞவல்க்ய மஹரிஷியால் செய்யப்பட்டது)

ஸர்வரோக நிவ்ருத்தி, நீண்ட ஆயுள், சௌக்யம், சரீர பலம், இவைகளைக் கோருகிறவர்கள் நித்யம் ஜபிக்க வேண்டியது. ஸ்னானம் செய்து, ஏகாக்ர மனதுடன் ஜபிக்கவேண்டியது.

याज्ञवल्क्य उवाच-

शृणुष्व मुनिशार्दूल सूर्यस्य कवचं शुभम् ।
शरीरारोग्यदं दिव्यं सर्व सौभाग्य दायकम् ।।१
देदिप्यमान मुकुटं स्फुरन् मकर कुण्डलम् ।
ध्यात्वा सहस्र किरणं स्तोत्रं एतदुदीरयेत् ।।२
शिरो मे भास्करः पातु ललाटं मेऽमितद्युतिः ।
नेत्रे दिनमणिः पातु श्रवणे वासरेश्वरः ।।३
घ्राणं घर्मवृणिः पातु वदनं वेदवाहनः ।
जिह्वां मे मानदः पातु कण्ठं मे सुरवन्दिनः ।।४
स्कन्धौ प्रभाकरः पातु वक्षः पातु जनप्रियः ।
पातु पादौ द्वादशात्मा सर्वाङ्गं सकलेश्वरः ।।५
सूर्य रक्षात्मकं स्तोत्रं लिखित्वा भूर्जपत्रके ।
दधाति यः करे तस्य वशगाः सर्वसिद्धयः ।।६
सुस्नातो यो जपेत् सम्यग् योऽधीते स्वस्थमानसः ।
स रोगमुक्तो दीर्घायुः सुखं पुष्टिं च विन्दति ।।७

।।इति श्रीमद्याज्ञवल्क्य मुनिविरचितं सूर्यकवचस्तोत्रं संपूर्णम्।।

ஶ்ருணுஷ்வ முனிஶார்தூ[3]ல ஸூர்யஸ்ய கவசம் ஶுப[4]ம் ।
ஶரீராரோக்[3]யத[3]ம் தி[3]வ்யம்
ஸர்வ ஸௌபா[4]க்[3]ய தா[3]யகம் ।। 1
தே[3]தி[3]ப்யமான முகுடம் ஸ்பு[2]ரன் மகர குண்ட[3]லம் ।

த்^{4}யாத்வா ஸஹஸ்ர கிரணம் ஸ்தோத்ரம் ஏதது^{3}தீ^{3}ரயேத் ।।2
ஶிரோ மே பா^{4}ஸ்கர: பாது லலாடம் மேऽமிதத்^{3}யுதி: ।
நேத்ரே தி^{3}னமணி: பாது ஶ்ரவணே வாஸரேஶ்வர: ।। 3
க்^{4}ராணம் கர்மவ்ருணி: பாது வத^{3}னம் வேத^{3} வாஹன: ।
ஜிஹ்வாம் மே மானத^{3}: பாது
கண்ட^{2}ம் மே ஸுரவந்தி^{3}ன: ।। 4
ஸ்கந்தௌ^{4} ப்ரபா^{4}கர: பாது வக்ஷ: பாது ஜனப்ரிய: ।
பாது பாதௌ^{3} த்^{3}வாத^{3}ஶாத்மா
ஸர்வாங்க^{3}ம் ஸகலேஶ்வர: ।। 5
ஸூர்ய ரக்ஷாத்மகம் ஸ்தோத்ரம் லிகி^{2}த்வா பூ^{4}ர்ஜ பத்ரகே ।
த^{3}தா^{4}தி ய: கரே தஸ்ய வஶகா^{3}: ஸர்வ ஸித்^{3}த^{4}ய: ।। 6
ஸுஸ்னாதோ யோ ஜபேத் ஸம்யக்
யோऽதீ^{4}தே ஸ்வஸ்த மானஸ: ।
ஸ ரோக^{3}முக்தோ தீ^{3}ர்கா^{4}யு: ஸுக^{2}ம் புஷ்டிம்ச விந்த^{3}தி ।।7

।। இதி ஸ்ரீமத்^{3}யாஞவல்க்ய முனி விரசி^{1}த^{1}ம் ஸூர்யகவச^{1} ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ।।

யாக்ஞயவல்க்யர் சொல்லுகிறார்:-

ஓ *முனிஶ்ரேஷ்டா!* சரீரத்திற்கு ஆரோக்யத்தைக் கொடுக்கக்கூடியதும், சிறந்ததும், ஸர்வ பாக்கியங்களைக் கொடுக்கக்கூடியதும் மங்களகரமுமான சூர்ய கவசத்தைக் கேளும். *(1)*

ரொம்பவும் பிரகாசிக்கின்ற கிரீடத்தை உடையவரும், பிரகாசிக்கின்ற மகர குண்டலம் உள்ளவரும், ஆயிரக்கணக்கான கிரணங்களை உடையவருமான ஸூர்யனை த்யானம் செய்து கொண்டு இந்த ஸ்தோத்திரத்தை ஜபிக்க வேண்டும். *(2)*

என் தலையை பா^{4}ஸ்கரன் **(भास्कर:)** ரக்ஷிக்க வேண்டும். என் நெற்றியை அளவற்ற காந்தி **(कान्ति)** உள்ளவன் காக்க வேண்டும். கண்களை தினமணியானவன் ரக்ஷிக்க வேண்டும். காதுகளை ஜனங்களுக்கு ஈச்வரன் ரக்ஷிக்க வேண்டும். *(3)*

என் மூக்கை உஷ்ணமான கிரணமுள்ளவன் ரக்ஷிக்க வேண்டும். முகத்தை வேதங்களைக் குதிரையாக உடையவன் காக்க வேண்டும். என் தொண்டையைத் தேவர்களால் பூஜிக்கப் பட்டவன் ரக்ஷிக்க வேண்டும். (4)

என் தோள்களை காந்தியைச் **(कान्ति)** செய்கிறவன் காக்க வேண்டும். மார்பை ஜனங்களுக்குப் பிரியன் ரக்ஷிக்க வேண்டும். கால்களை பன்னிரண்டு உருவமுள்ளவன் ரக்ஷிக்க வேண்டும். எல்லா அவயவத்தையும் எல்லாவற்றிற்கும் ஈஶ்வரன் ரக்ஷிக்க வேண்டும். (5)

எவனொருவன் ஸூர்ய ரக்ஷாரூபமான ஸ்தோத்திரத்தை பூ⁴ர்ஜ ப¹த்¹ரத்தில் **(भूर्ज पत्रम्)** (பூ⁴ர்ஜ் எனப்படுகின்ற மரம் காசியிலும், ஆந்த்ராவிலும் இருப்பதாகக் கூறுகிறார்கள்) எழுதி கையில் தரித்துக் கொள்ளுகிறானோ அவனுக்கு எல்லா ஸித்திகளும் வசமாக இருக்கும். (6)

எவன் நன்கு ஸ்நானம் செய்து ஜபிக்கிறானோ, எவன் ஏகாக்ர மனதுடன் கூட நன்கு இதை அத்⁴யயனம் **(अध्ययनम्)** செய்கிறானோ அவன் ரோகம் அற்றவனாகயும், நீண்ட ஆயுள் உள்ளவனாயும், சுகத்தையும், பலத்தையும் அடைகிறான். (7)

।। नवग्रह सोत्रम् ।।

நவக்³ரஹ ஸ்தோத்ரம்

வியாஸரால் செய்யப்பட்டது. இதை நித்யம் ஸூர்ய நமஸ் காரத்துடன் ஒவ்வொரு கிரஹங்களுக்கும் நமஸ்கரிக்கலாம். ஒருமுகப்பட்ட மனதுடன் பாராயணமும் செய்யலாம். ஸர்வ அரிஷ்டமும் நிவிருத்தியாகி நவக்ரஹ ப்ரஸாதமும் உண்டாகும்.

जपा कुसुम संकाशं काश्यपेयं महाद्युतिम् ।
तमोरिं सर्व पापघ्नं प्रणतोऽस्मि दिवाकरम् ।। १
दधि शङ्खतुषाराभं क्षीरोदार्णव संभवम् ।
नमामि शशिनं सोमं शंभोर्मुकुट भूषणम् ।। २
धरणी गर्भ संभूतं विद्युत् कान्ति समप्रभम् ।

कुमारं शक्तिहस्तं तं मङ्गलं प्रणमाम्यहम् ।। ३
प्रियङ्गुकलिका श्यामं रूपेणाप्रतिमं बुधम् ।
सौम्यं सौम्य गुणोपेतं तं बुधं प्रणमाम्यहम् ।।४
देवानां च ऋषीणां च गुरुं काञ्चन सन्निभम् ।
बुद्धिभूतं त्रिलोकेशं तं नमामि बृहस्पतिम् ।। ५
हिमकुन्द मृणालाभं दैत्यानां परमं गुरुम् ।
सर्व शास्त्र प्रवक्तारं भार्गवं प्रणमाम्यहम् ।। ६
नीलाञ्जन समाभासं रविपुत्रं यमाग्रजम् ।
छायामार्ताण्ड संभूतं तं नमामि शनैश्चरम् ।। ७
अर्धकायं महावीर्यं चन्द्रादित्य विमर्दनम् ।
सिंहिका गर्भ संभूतं तं राहुं प्रणमाम्यहम् ।। ८
पलाश पुष्प संकाशं तारकाग्रह मस्तकम् ।
रौद्रं रौद्रात्मकं घोरं तं केतुं प्रणमाम्यहम् ।। ९
इति व्यास मुखोद्गीतं यः पठेत् सुसमाहितः ।
दिवा वा यदि वा रात्रौ विघ्न शान्तिः भविष्यति।।१०
नरनारी नृपाणां च भवेद्दुःख प्रनाशनम् ।
ऐश्वर्यमतुलं तेषां आरोग्यं पुष्टि वर्धनम् ।।११
ग्रह नक्षत्रजाः पीडाः तस्कराग्नि समुद्भवाः ।
ताः सर्वाः प्रशमं यान्ति व्यासो ब्रूते न संशयः ।।१२

ஜபா குஸும ஸங்காஶம் காஶ்யபேயம் மஹாத்3யுதிம் ।
தமோரிம் ஸர்வ பாபக்4னம் ப்ரணதோऽஸ்மி தி3வாகரம் ।।1
த3தி4 ஶங்க2துஷாராப4ம் க்ஷீரோதா3ர்ணவ ஸம்ப4வம் ।
நமாமி ஶஶினம் ஸோமம்
ஶம்போ4ர் முகுட பூ4ஷணம் ।। 2

த4ரணீ க3ர்ப ஸம்பூ4தம் வித்3யுத் கா1ந்தி1 ஸமப்ரப4ம் ।
குமாரம் ஶக்திஹஸ்தம் தம் மங்க3ளம் ப்ரணமாம்யஹம் ।।3
ப்ரியங்கு3கலிகா ஶ்யாமம் ரூபேணா ப்ரதிமம் பு3த4ம் ।
ஸௌம்யம் ஸௌம்ய கு3ணோபேதம்
தம் பு3த4ம் ப்ரணமாம்யஹம் ।। 4
தே3வானாம்ச ரிஷீணாம் ச கு3ரும் காஞ்சன ஸந்நிப4ம் ।
பு3த்தி4பூ4தம் த்ரிலோகேஶம் தம் நமாமி ப்3ருஹஸ்பதிம் ।।5
ஹிமகுந்த3ம்ருணாளாப4ம் தை3த்யானாம் பரமம் கு3ரும் ।
ஸர்வஶாஸ்த்ர ப்ரவக்தாரம் பா4ர்க3வம் ப்ரணமாம்யஹம் ।।6
நீலாஞ்ஜன ஸமாபா4ஸம் ரவிபுத்ரம் யமாக்3ரஜம் ।
சா2யா மார்த்தாண்ட3 ஸம்பூ4தம் தம்நமாமி ஶநைஶ்சரம் ।।7
அர்த3காயம் மஹாவீர்யம் சந்த்3ராதி3த்ய விமர்த3னம் ।
ஸிம்ஹிகா க3ர்ப4 ஸம்பூ4தம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம் ।। 8
பலாஶ புஷ்ப ஸங்காஶம் தாரகா க்3ரஹ மஸ்தகம் ।
ரௌத்3ரம் ரௌத்3ராத்மகம் கோ4ரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம் ।। 9
இதி வ்யாஸ முகோ2த் கீ3தம் ய:படே2த் ஸுஸமாஹித: ।
தி3வா வா யதி3வா ராத்ரௌ
விக்4ன ஶாந்தி: ப4விஷ்யதி ।।10
நர நாரீ ந்ருபாணாம் ச ப4வேத் து3:க2 ப்ரநாஶனம் ।
ஐஶ்வர்யமதுலம் தேஷாம் ஆரோக்3யம் புஷ்டிவர்த4னம் ।।
க்3ரஹ நக்ஷத்ரஜா: பீடா:3 தஸ்கராக்3னி ஸமுத்3ப4வா: ।
தா: ஸர்வா: ப்ரஶமம் யாந்தி
வ்யாஸோ ப்3ரூதே ந ஸம்ஶய: ।।12

செம்பரத்தம் புஷ்பம் போன்றவரும், காஶ்யபருடைய பிள்ளையும், அதிக காந்தி **(कान्ति)** *உள்ளவரும், இருட்டுக்குச் சத்ருவும், ஸர்வ பாபஹரனுமான* **(पापहरः)** *ஸூர்யனை நமஸ்கரிக்கிறேன். (1)*

தயிர், சங்கம், பனிக்கட்டி இவைகள் போன்ற நிறமுள்ளவரும், பால் கடலில் உண்டானவரும், பரமசிவனுக்கு ஶிரோபூ4ஷணமுமான **(शिरोभूषणम्)** *சந்திரனை நமஸ்கரிக்கிறேன். (2)*

பூமியின் புத்ரனும், மின்னல் போன்ற காந்தி **(कान्ति)** உள்ளவரும், குமாரனும், சக்தியைக் கையில் வைத்தவரும், மங்களகரனுமான அங்காரகனை நமஸ்கரிக்கிறேன். (3)

ஞாழல் மொட்டுப்போல் கறுத்தவரும், ரூபத்தினால் ஒப்பற்றவரும், புத்திமானும், சந்திர புத்திரனும், சாந்த குணம் உள்ளவருமான அந்த புதனை நான் நமஸ்கரிக்கிறேன். (4)

தேவதைகளுக்கும் மஹறிஷிகளுக்கும் குருவும், சுவர்ண காந்தி **(कान्ति)** உள்ளவரும், நல்ல புத்தியுள்ளவரும், மூவுலகத்திற்கு ஈச்வரனுமான அந்த பிரஹஸ்பதியை நமஸ்கரிக்கிறேன். (5)

பனி, தும்பைப்பூ, தாமரைத் தண்டு, இவைகளுடைய காந்தி **(कान्ति)** உள்ளவரும், அஸுரர்களுக்கு பரமகுருவும், ஸர்வ சாஸ்திரங்களையும் உபதேசிப்பவருமான சுக்ராசாரியரை நான் நமஸ்கரிக்கிறேன். (6)

நீலமான மை போன்ற காந்தி **(कान्ति)** உள்ளவரும், ஸூர்ய புத்ரனும், யமனுக்குத் தமயனும், சா²யா தே³வியிடம் **(छायादेवि)** ஸூர்யனுக்குப் பிறந்தவருமான அந்த ஶனீஶ்வரனை நமஸ்கரிக்கிறேன். (7)

பாதி சரீரமுள்ளவனும், மஹா வீர்யம் உள்ளவனும், சந்திரஸூர்யர்களை எதிர்ப்பவனும், ஸிம்ஹிகையின் கர்பத்தில் பிறந்தவருமான அந்த ராஹுவை நமஸ்கரிக்கிறேன். (8)

பலாஶ புஷ்பம் **(पलाश पुष्पम्)** போன்றவரும், நக்ஷத்திரம், கிரஹம் இவைகளுக்குத் தலைவனும், ரௌத்ரனும், ரௌத்ரமான உருவம் உள்ளவனும், பயங்கரமான அந்த கேதுவை நமஸ்கரிக்கிறேன். (9)

வியாஸரால் சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை எவன் ஏகாக்³ர சி'த்'த'னாய் **(एकाग्रचित्तः)** பகலிலோ, இரவிலோ, படிக்கிறானோ அவனுக்கு விக்⁴ன நிவிருத்தி **(विघ्ननिवृत्ति)** ஏற்படுகிறது. (10)

மனுஷ்யர்கள், ஸ்திரீகள், அரசர்கள் இவர்களுக்குக் கெட்ட ஸ்வப்னங்கள் போகின்றன. அளவற்ற ஐஶ்வர்யமும், ஆரோக்யமும் புஷ்டியும் ஏற்படுகின்றது. (11)

நவக்ரஹம் நக்ஷத்ரம் இவர்களால் ஏற்பட்ட பீடைகளும், திருடர்கள், அக்னி இவர்களால் ஏற்பட்ட பீடைகளும், மற்றுமுள்ள எல்லா ஆபத்துக்களும் நிவர்த்தியாகுமென்று வியாஸர் சொல்லுகிறார். இதில் சந்தேஹமில்லை. (12)

நித்ய சூர்ய நமஸ்காரம்

ஆரோக்யம், ஐச்வர்யம், புத்ரலாபம், பாபநிவிருத்தி
முதலியவைகளைக் கொடுக்கும்.

शुक्लाम्बरधरं ... ओं भूः (पुरुषाः - प्राणायामं)... ममोपात्त... प्रीत्यर्थं, श्री छाया देवि समेत सूर्यनारायण प्रसाद सिध्यर्थं, श्रीसूर्य नम्सकारं करिष्ये ।।

गजाननं भूत गणादि सेवितं कपित्त जम्बू फलसार भक्षितं ।
उमासुतं शोकविनाश कारणं नमामि विघ्नेश्वर पादपङ्कजम्।।

श्री महागणपतये नमः

२. उमाकोमल हस्ताब्ज सम्भावित ललाटकम् ।
हिरण्य कुण्डलं वन्दे कुमारं पूष्करस्त्रजम् ।।

३. गुरवे सर्व लोकानां भिषजे भव रोगिनाम् ।
निधये सर्व विद्यानां दक्षिणामूर्तये नमः ।।

श्री दक्षिणामूर्तये नमः

४. गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात् परंब्रह्म तस्मै श्री गुरवे नमः ।।

५. मित्राय नमः ।

६. रवये नमः ।

७. सूर्याय नमः ।

८. भानवे नमः ।

९. खगाय नमः ।

१०. पूष्णे नमः ।

११. हिरण्यगर्भाय नमः ।

१२. मरीचये नमः ।

१३. आदित्याय नमः ।
१४. सवित्रे नमः ।
१५. अर्काय नमः ।
१६. भास्कराय नमः ।
१७. नमः पूर्वाय गिरये पश्चिमे गिरये नमः ।
१८. ज्योतिर्गणानां पतये दिनाधिपतये नमः ।
१९. जयाय जयभद्राय हर्यश्वाय ते नमः ।
२०. नमो नमः सहस्रांशो आदित्याय नमो नमः ।
२१. नम उग्राय वीराय सारङ्गाय नमो नमः ।
२२. नमः पद्मप्रबोधाय मार्ताण्डाय नमो नमः ।
२३. ब्रह्मेशानाच्युतेशाय सूर्यायादित्य वर्चसे ।
भास्वते सर्वभक्षाय रौद्राय वपुषे नमः ॥
२४. तमोघ्नाय हिमघ्नाय शत्रुघ्नायामितात्मने ।
कृतघ्नघ्नाय देवाय ज्योतिषां पतये नमः ॥
२५. तप्तचामीकराभाय वन्हये विश्वकर्मणे ।
नमस्तमोभि निघ्नाय रवये लोकसाक्षिणे ॥
२६. सौरमण्डल मध्यस्थं साम्बं संसार भेषजम् ।
नीलग्रीवं विरूपाक्षं नमामि शिवमव्ययम् ॥
२७. आदित्यादि नवग्रह देवताभ्यो नमः ।
२८. नक्षत्र देवताभ्यो नमः ॥

सम्पूर्णम्

ஶுக்லாம்ப[3]ரத[4]ரம் ...। ஓம் பூ:[4] (புருஷர்கள் ப்ராணாயாமம் செய்யவும்)...। மமோபாத்த ... ப்ரீத்யர்த்த[2]ம், ஶ்ரீ சா[2]யா தே[3]வி ஸமேத ஸூர்யநாராயண ப்ரஸாத[3] ஸித்[4]யர்த்த[2]ம், ஶ்ரீஸூர்ய நம்ஸகாரம் கரிஷ்யே ..।

க^{3}ஜானனம் பூ^{4}த க^{3}ணாதி^{3} ஸேவிதம்
கபித்த^{2} ஜம்பூ^{3} ப^{2}லஸார ப^{4}க்ஷிதம் ।
உமாஸுதம் ஶோக விநாஶ காரணம்
நமாமி விக்^{4}னேஶ்வர பாத^{3}பங்கஜம் ।।
ஶ்ரீ மஹா க^{3}ணபதயே நம:

2. உமாகோமல ஹஸ்தாப்^{3}ஜ ஸம்பா^{4}வித லலாடகம் ।
ஹிரண்யகுண்ட^{3}லம் வந்தே^{3} குமாரம் பூஷ்கரஸ்ரஜம் ।।
ஶ்ரீ த^{3}க்ஷிணாமூர்த்தயே நம:

3,கு^{3}ரவே ஸர்வ லோகாநாம் பி^{4}ஷஜே ப^{4}வரோகி^{3}நாம் ।
நித^{4}யே ஸர்வ வித்^{3}யாநாம் த^{3}க்ஷிணாமூர்தயே நம: ।।

4. கு^{3}ருர் ப்^{3}ரும்ஹா கு^{3}ருர் விஷ்ணு:
கு^{3}ருர் தே^{3}வோ மஹேஶ்வர: ।
கு^{3}ருஸ்ஸாக்ஷாத் பரம்ப்^{3}ரஹ்ம தஸ்மை ஶ்ரீகு^{3}ரவே நம: ।।

5. மித்ராய நம: ।
6. ரவயே நம: ।
7. ஸூர்யாய நம: ।
8. பா^{4}னவே நம: ।
9. க^{2}கா^{3}ய நம: ।
10. பூ^{1}ஷ்ணே நம: ।
11. ஹிரண்ய க^{3}ர்பா^{4}ய நம: ।
12. மரீசயே நம: ।
13. ஆதி^{3}த்யாய நம: ।
14. ஸவித்ரே நம: ।
15. அர்க்காய நம: ।
16. பா^{4}ஸ்கராய நம: ।
17. நம: பூர்வாய கி^{3}ரயே பஶ்சிமே கி^{3}ரயே நம: ।
18. ஜ்யோதிர்க^{3}ணாநாம் பதயே தி^{3}னாதி^{4}பதயே நம: ।
19. ஜயாய ஜயப^{4}த்^{3}ராய ஹர்யஶ்வாய தே நம: ।
20. நமோ நம: ஸஹஸ்ராம்ஶோ ஆதி^{3}த்யாய நமோ நம: ।
21. நம உக்^{3}ராய வீராய ஸாரங்கா^{3}ய நமோ நம: ।

22. நம: பத்^{3}ம ப்ரபோ^{3}தா^{4}ய
மார்தாண்டா^{3}ய நமோ நம: ।

23. ப்^{3}ரஹ்மேஶாநாச்யுதேஶாய
ஸூர்யாயாதி^{3}த்ய வர்ச்சஸே
பா^{4}ஸ்வதே ஸர்வப^{4}க்ஷாய ரௌத்^{3}ராய வபுஷேநம: ।

24. தமோக்^{4}நாய ஹிமக்^{4}நாய ஶத்ருக்^{4}நாயாமிதாத்மனே ।
க்ருதக்^{4}நக்^{4}நாய தே^{3}வாய
ஜ்யோதிஷாம் பதயேநம: ।

25. தப்தசாமீகராபா^{4}ய வன்ஹயே விஶ்வ கர்மணே ।
நமஸ்தமோபி^{4} நிக்^{4}நாய
ரவயே லோகஸாக்ஷிணே ॥

26. ஸௌரமண்ட^{3}ல மத்^{4}யஸ்த்த^{2}ம்
ஸாம்ப^{3}ம் ஸம்ஸார பே^{4}ஷஜம் ।
நீலக்^{3}ரீவம் விரூபாக்ஷம் நமாமி ஶிவமவ்யயம் ॥

27. ஆதி^{3}த்யாதி^{3} நவக்ரஹ தே^{3}வதாப்^{4}யோ நம: ।

28. நக்ஷத்ர தே^{3}வதாப்^{4}யோ நம: ॥

ஸம்பூர்ணம்


ஸௌந்த³ர்ய லஹரீ

।। सौन्दर्य लहरी ।।

இங்கு குறிப்பிட்ட ஸௌந்தர்ய லஹரியில் உள்ள 15 சுலோகங்களை அந்தந்த பயனைக் கோருகிறவர்கள் அததற்கு குறிப்பிட்ட யந்த்ரங்களைத் **(यन्त्रम्)** தயாரித்து. ஆசாரத்துடன் பூஜித்து. சிரத்தையாக ஜபம் செய்து தரித்துக் கொள்ள வேண்டும். அப்படி முடியாதவர்கள். நல்ல உபாஸகர்களைக்கொண்டு பூஜை. ஜபம் முதலியவற்றை செய்யச்செய்து தரித்துக்கொள்ளளலாம்.

1. நபும்ஸகத்வத்தைப் **(नपुंसकत्वम्)** போக்கி நல்ல புத்ரனை அடைய ஜபிக்க வேண்டிய ஶ்லோகம்.

தங்கத் தகட்டில் இங்கு கண்டபடி யந்த்ரம் **(यन्त्रम्)** போட்டு 21 நாட்கள் பூஜை செய்து. கரும்புத் துண்டுகளை நிவேதனம் செய்து கிழக்கு முகமாய் உட்கார்ந்து. நித்யம் 500 தடவை இந்த லோகத்தை ஜபித்து. பிறகு இதை ரக்ஷையாக தரித்துக் கொள்ள வேண்டும். இதனால் நபும்ஸகத்வம் விலகி உத்தம புத்ரலாபம் உண்டாகும்.



धनुः पौष्पं मौर्वी मधुकरमयी पञ्चविशिखाः
वसन्तः सामन्तः मलयमरुदायोधनरथः ।
तथाप्येकः सर्वं हिमगिरिसुते कामपि कृपां
अपाङ्गात्ते लब्ध्वा जगदिदमनङ्गो विजयते ।। १

த⁴நு: பௌஷ்பம் மௌர்வீம் மது⁴கரமயீ பஞ்சவிஶிகா²:
வஸந்த: ஸாமந்த: மலய மருதா³ யோத⁴ன ரத:² ।

ததா^{2}ப்யேக: ஸர்வம் ஹிமகி^{3}ரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்கா^{3}த்தே லப்^{3}த்^{4}வா
ஜகதி^{3}த^{3}மனங்கோ^{3} விஜயதே ॥ 1

இதில் மன்மத ப்ரஸ்தாரம் **(मन्मथप्रस्तारम्)** என்ற வித்யை சொல்லப்படுகிறது.

ஹே! பர்வத ராஜபுத்ரியான பராசக்தியே! எந்த மன்மதனுக்கு வில்லானது புஷ்பமோ, நாணானது வண்டுகளின் வரிசையோ, ஐந்து பாணங்களோ, வஸந்த ருது மந்திரியோ, யுத்த ரதமானது மலய பர்வதக் காற்றோ, அவ்விதமிருந்தும் மன்மதன் ஸகாயமில்லாதவனாய், உன்னுடைய கடைக்கண்ணிலிருந்து அபாரமான தயையை **(दया)** அடைந்து, எல்லா லோகத்தையும் ஜெயிக்கிறான். அம்பாள் கடாக்ஷத்திற்கு பாத்திரனாக ஆகிவிட்டால் எல்லாம் கிடைக்கும்.

❁ ❁ ❁ ❁ ❁

2. மலடித் தன்மையைப் போக்கி புத்ர லாபத்தைக்
கொடுக்கும் ஶ்லோகம்.

தங்கத் தகட்டில் இங்கு கண்டபடி யந்த்ரம் **(यन्त्रम्)** போட்டு 81 நாட்கள் பூஜை செய்து, வெல்லம் போட்ட பாயஸத்தை நிவேதனம் செய்து நித்யம் 1000 தடவை ஜபித்து பிறகு இதை ஸ்திரீயானவள் தரித்துக் கொள்ள வேண்டும். அல்லது வெண்ணையை எதிரில் வைத்துக் கொண்டு ஜபித்து சாப்பிடவும். இதனால் மலடித்தனம் நீங்கி ஸத்புத்ர ப்ராப்தி உண்டாகும்.



चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शंभोः नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशत् वसुदळ कलाश्रत्रिवलय
त्रिरेखाभिः सार्धं तव शरणकोणाः परिणताः ।।२


சதுர்பி:4 ஶ்ரீகண்டை:2 ஶிவயுவதிபி:4 பஞ்சபி4ரபி
ப்ரபி4ந்நாபி4: ஶம்போ4: நவபி4ரபி மூலப்ரக்ருதிபி4: ।
சதுஶ்சத்வாரிம்ஶத் வஸுத3ள கலாஶ்ரத்ரிவலய
த்ரிரேகா2பி: ஸார்த4ம் தவ ஶரணகோணா: பரிணதா: ।।2

ஹே பகவதி! ஶிவ ஸ்வரூபமான நாலு சக்ரங்களாலும் அவைகளிலிருந்து மிகவும் வேறுபட்ட சக்தி ஸ்வரூபமான ஐந்து சக்ரங்களாலும் ஆகிய உலகின் மூல காரணமான ஒன்பது மூல ப்ரக்ருதிகளோடு **(मूलप्रकृति)** *கூடின உன்னுடைய இருப்பிடமான ஸ்ரீசக்ரமானது, எட்டு த3ளம்* **(दळम्)**, *பதினாறு தளம், மூன்று மேகலை (ஒட்யாணங்கள்) நாலு திக்கிலும் த்வாரமுள்ள மூன்று ப்ராகாரங்கள் இவைகளோடு கூடின 44 கோணங்களோடு கூடினதாக இருக்கிறது.*

❁ ❁ ❁ ❁ ❁

3. பிரிந்த புருஷனை அடையவும், கர்பம் தரிக்கவும் ஜபிக்க வேண்டிய ஶ்லோகம்.

தங்கத் தகட்டில் இங்கு கண்டபடி யந்த்ரத்தை எழுதி 45 நாட்கள் பால் பாயஸம், தேன் இந்த நிவேதனத்துடன் பூஜை செய்து, நித்தியம் 1000 தடவை ஜபித்து தரித்துக் கொள்ளவும். இதனால் மனஸ்தாபம் நீங்கி பர்த்தாவினுடைய சேர்க்கையும், புத்ரலாபமும் உண்டாகும்.



ललाटं लावण्यद्युति विमलमाभाति तव यत्
द्वितीयं तन्मन्ये मकुटघटितं चन्द्र शकलम्।
विपर्यासन्यासात् उभयमपि संभूय च मिथः
सुधालेपस्यूतिः परिणमति राकाहिमकरः।।३

கீ3ர் தே3வதேதி க3ருட3 த்4வஜ ஸுந்த3ரீதி
ஶாகம்ப3ரீதி ஶஶி ஶேக2ர வல்லபே4தி ।
ஸ்ருஷ்டி ஸ்த்தி2தி ப்ரலயகேலிஷு ஸம்ஸ்தி2தா யா
தஸ்யை நமஸ்த்ரிபு4வனைக கு3ரோஸ்தருண்யை ।।10

ஸரஸ்வதி தேவி என்றும், கருட வாஹனனுடைய மனைவி என்றும், ஶாகம்ப3ரியாகிற **(शाकम्बरी)** பூமிதேவி என்றும், பார்வதி என்றும் ப்ரஸித்தி பெற்று, ஸ்ருஷ்டி, ரக்ஷணம், நாசம் என்ற விளையாட்டான கார்யங்களில் அமர்ந்தவளும், மூவுலகிற்கும் குருவான நாராயணனுடைய யுவதியுமான அந்த மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம்.

श्रुत्यै नमोस्तु शुभकर्म फलप्रसूत्यै
रत्यै नमोस्तु रमणीय गुणार्णवायै ।

शक्त्यै नमोस्तु शतपत्र निकेतनायै
पुष्ट्यै नमोस्तु पुरुषोत्तम वल्लभायै ।। ११

ஶ்ருத்யை நமோஸ்து ஶுப⁴கர்ம ப²லப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீய கு³ணார்ணவாயை ।
ஶக்த்யை நமோஸ்து ஶத பத்ர நிகேதனாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தம வல்லபா⁴யை ।।11

நல்ல கர்மாவின் பலனைக் (फलम्) கொடுக்கின்ற வேத ரூபிணியான தங்களுக்கு நமஸ்காரம். அழகிய குணங்களுக்கு இருப்பிடமான ரதிதேவியான தங்களுக்கு நமஸ்காரம். தாமரையில் அமர்ந்த சக்தி ரூபிணீயான தங்களுக்கு நமஸ்காரம். புருஷோத்தமருடைய மனைவியாகிற, புஷ்டி தேவியாகிற தங்களுக்கு நமஸ்காரம்.

नमोस्तु नालीक निभाननायै
नमोस्तु दुग्धोदधि जन्म भूम्यै ।
नमोस्तु सोमामृत सोदरायै
नमोस्तु नारायण वल्लभायै ।। १२

நமோஸ்து நாலீக நிபா⁴னனாயை
நமோஸ்து து³க்தோ⁴ த³தி⁴ ஜன்ம பூ⁴ம்யை ।
நமோஸ்து ஸோமாம்ருத ஸோத³ராயை
நமோஸ்து நாராயண வல்லபா⁴யை ।। 12

தாமரை போன்ற முகமுள்ள தேவிக்கு நமஸ்காரம். பாற்கடலில் பிறந்த தேவிக்கு நமஸ்காரம். சந்திரன், அமிருதம் இவைகளோடு (பாற்கடலில்) தோன்றிய தேவிக்கு நமஸ்காரம். ஸ்ரீமன் நாராயணனுடைய ப்ரிய தேவிக்கு நமஸ்காரம்.

नमोस्तु हेमाम्बुज पीठिकायै
नमोस्तु भूमण्डल नायिकायै ।
नमोस्तु देवादि दयापरायै
नमोस्तु शार्ङ्गायुध वल्लभायै ।। १३

நமோஸ்து ஹேமாம்பு3ஜ பீ1டி2காயை
நமோஸ்து பூ4மண்டல நாயிகாயை ।
நமோஸ்து தே3வாதி3 த3யா பராயை
நமோஸ்து ஶார்ங்கா3யுத4 வல்லபா4யை ।। 13

தங்கத் தாமரையை ஆஸனமாக உடைய தேவிக்கு நமஸ்காரம். தேவர்கள் முதலியவர்களுக்கு த3யை **(दया)** *செய்கின்ற தேவிக்கு நமஸ்காரம். ஶாரங்க3பாணியாக* **(शार्ङ्गपाणिः)** *உள்ள மகாவிஷ்ணுவின் ப்ரிய தேவிக்கு நமஸ்காரம்.*

नमोस्तु देव्यै भृगु नन्दनायै
नमोस्तु विष्णोरुरसि स्थितायै ।
नमोस्तु लक्ष्म्यै कमलालयायै
नमोस्तु दामोदर वल्लभायै ।। १४

நமோஸ்து தே3வ்யை ப்4ருகு3 நந்த3னாயை
நமோஸ்து விஷ்ணோருரஸி ஸ்த்தி2தாயை ।
நமோஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோஸ்து தா3மோத3ர வல்லபா4யை ।। 14

ப்4ருகு3 **(भृगुः)** *ரிஷியின் புத்ரியான தேவிக்கு நமஸ்காரம். மஹாவிஷ்ணுவின் மார்பில் இருக்கும் தேவிக்கு நமஸ்காரம். தாமரையை இருப்பிடமாக உடைய லக்ஷ்மிக்கு நமஸ்காரம். தா3மோத3ர* **(दामोदरः)** *மூர்த்தியான மஹாவிஷ்ணுவின் ப்ரிய பா4ர்யைக்கு* **(प्रियभार्या)** *நமஸ்காரம்.*

नमोस्तु कान्त्यै कमलेक्षणायै
नमोस्तु भूत्यै भुवन प्रसूत्यै ।
नमोस्तु देवादिभिरर्चितायै
नमोस्तु नन्दात्मज वल्लभायै ।। १५

நமோஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோஸ்து பூ4த்யை பு4வன ப்ரஸூத்யை ।
நமோஸ்து தே3வாதி3பி4ரர்சிதாயை
நமோஸ்து நந்தா3த்மஜ வல்லபா4யை ।। 15

ஜ்யோதி ஸ்வரூபிணியும், தாமரை போன்ற கண்களை உடையவளுமான தேவிக்கு நமஸ்காரம். ஐச்வர்ய ஸ்வரூபிணியாயும், உலகங்களைப் படைத்தவளாயும்

உள்ள தேவிக்கு நமஸ்காரம். தேவர்கள் முதலியவர்களால் பூஜிக்கப்பட்ட தேவிக்கு நமஸ்காரம். நந்த குமாரனான கோபாலனின் ப்ரிய நாயகியின் பொருட்டு நமஸ்காரம்.

सम्पत् कराणि सकलेन्द्रिय नन्दनानि
साम्राज्यदान विभवानि सरोरुहाक्षि ।
त्वद्वन्दनानि दुरिताहरणोद्यतानि
मामेव मातरनिशं कलयन्तु मान्ये ।। १६

ஸம்பத் கராணி ஸகலேந்த்[3]ரிய நந்த[3]னானி
ஸாம்ராஜ்யதா[3]ன விப[4]வானி ஸரோருஹாக்ஷி।
த்வத்[3] வந்த[3]னானி து[3]ரிதா ஹரணோத்[3]யதானி
மாமேவ மாதரநிஶம் கலயந்து மான்யே ।। 16

தாமரை போன்ற கண்களை உடையவளே, பூஜிக்கப் படுகின்றவளே, தாயே, ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கின்றவையும், எல்லா இந்திரியங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பவையும், ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும் திறமை வாய்ந்தவையும், பாபங்களைப் போக்குவதில் முயற்சி உள்ளவையுமான தங்களுக்குச் செய்யும் நமஸ்காரங்கள் எப்பொழுதுமே என்னை அடையட்டும்.

यत्कटाक्ष समुपासना विधिः
सेवकस्य सकलार्थ संपदः ।
संतनोति वचनाङ्गमानसैः
त्वां मुरारि हृदयेश्वरीं भजे ।। १७

யத்கடாக்ஷ ஸமுபாஸனா விதி[4]:
ஸேவகஸ்ய ஸகலார்த்த[2] ஸம்பத[3]: ।
ஸந்தநோதி வசனாங்க[3] மானஸை:
த்வாம் முராரி ஹ்ருத[3]யேஶ்வரீம் ப[4]ஜே ।। 17

எந்த தேவியின் கடைக்கண்களின் உபாஸனையானது, அவைகளை ஸேவிப்பவருக்கு எல்லா ஸம்பத்துக்களையும் ஏராளமாகக் கொடுக்குமோ, அந்த முராரியான மஹா விஷ்ணுவின் ஹ்ருதயத்துக்கு நாயகியான உன்னை வாக்கு, காயம், மனஸ் இவைகளால் நமஸ்கரிக்கிறேன்.

सरसिज निलये सरोज हस्ते
धवलतमांशुक गन्धमाल्य शोभे ।
भगवति हरिवल्लभे मनोज्ञे
त्रिभुवन भूतिकरि प्रसीद मह्यम् ।। १८

ஸரஸிஜ நிலயே ஸரோஜ ஹஸ்த்தே
த4வலதமாம்ஶுக க3ந்த4மால்ய ஶோபே4 ।
ப4க3வதி ஹரிவல்லபே4 மனோக்3ஞே
த்ரிபு4வன பூ4திகரி ப்ரஸீத3 மஹ்யம் ।। 18

தாமரையை இருப்பிடமாக உடையவளே, தாமரையைக் கையில் உடையவளே, அதிக வெண்மையான வஸ்திரம், சந்தனம், மாலை இவைகளால் ப்ரகாசிப்பவளே, மஹிமை வாய்ந்தவளே, மஹாவிஷ்ணுவின் ப்ரிய நாயகியே, மனதை ரமிக்கச் செய்பவளே, மூவுலகத்திற்கும் ஐச்வர்யத்தைக் கொடுப்பவளே, எனக்குக் கருணை செய்.

दिग्धस्तिभिः कनक कुम्भ मुखावसृष्ट
स्वर्वाहिनी विमल चारु जलाप्लुताङ्गीम् ।
प्रातर्नमामि जगतां जननीमशेष
लोकाधिनाथ गृहिणीं अमृताब्धि पुत्रीम् ।। १९

தி3க்த4ஸ்த்திபி4: கனக கும்ப4 முகா2வஸ்ருஷ்ட
ஸ்வர்வாஹினீ விமல சாரு ஜலாப்லுதாங்கீ3ம் ।
ப்ராதர்நமாமி ஜக3தாம் ஜனனீமஶேஷ
லோகாதி4னாத2 க்3ருஹிணீம் அம்ருதாப்தி4 புத்ரீம் ।। 19

தி3க்3க3ஜங்களினால் (दिग्गजाः), தங்கக் குடங்களினால் விடப்பட்ட தேவ கங்கையின் நிர்மலமானதும், பரிசுத்தமானதுமான ஜலத்தினால் நனைக்கப்பட்ட சரீரத்தை உடையவளும், உலகங்களுக்குத் தாயும், எல்லா உலகத்திற்கும் நாயகனான மஹாவிஷ்ணுவின் மனைவியும், பாற்கடலின் புத்ரியுமான தங்களை காலையில் நமஸ்கரிக்கின்றேன்.

कमले कमलाक्ष वल्लभे त्वं
करुणापूरतरङ्गितैः अपाङ्गैः ।

अवलोकय मामकिञ्चनानां
प्रथमं पात्रमकृत्रिमं दयायाः ।। २०

கமலே கமலாக்ஷ வல்லபே4 த்வம்
கருணாபூர தரங்கி3தை: அபாங்கை3: ।
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரத2மம் பாத்ரமக்ருத்ரிமம் த3யாயா: ।। 20

தாமரை போன்ற கண்களை உடைய மஹாவிஷ்ணுவின் ப்ரியமான லக்ஷ்மியே, நீ, கருணை வெள்ளத்தில் அலை மோதும் உன் கடைக்கண் பார்வைகளால், தரித்ரர்களில் முதல்வனாயும், உன்னுடைய தயைக்கு உண்மையான பாத்திரமாகவும் உள்ள என்னைப் பார்.

स्तुवन्ति ये स्तुतिभिरमीभिरन्वहं
त्रयीमयीं त्रिभुवन मातरं रमाम् ।
गुणाधिका गुरुतर भाग्य भागिनः
भवन्ति ते भुवि बुधभाविताशयाः ।। २१

ஸ்துவந்தி யே ஸ்துதிபி4ரமீபி4ரன்வஹம்
த்ரயீமயீம் த்ரிபு4வன மாதரம் ரமாம் ।
குணாதி4கா கு3ருதர பா4க்ய பா4கி3ன:
ப4வந்தி தே பு4வி பு3த4பா4விதாஶயா: ।। 21

மூன்று வேதங்களின் ஸ்வரூபிணியும், மூவுலகத்திற்குத் தாயுமான மஹாலக்ஷ்மியை இந்த ஸ்தோத்ரங்களினால் நித்யம் எவர்கள் துதிக்கின்றனரோ, அவர்கள், இவ்வுலகில் எல்லா குணங்களாலும் நிறைந்தவர்களாகவும், மிகுந்த பாக்யசாலிகளாகவும், வித்வான்கள் கொண்டாடும் புத்திசக்தி உள்ளவர்களாகவும் ஆகின்றனர்.

ஸ்ரீ கனகதா4ரா ஸ்தோத்ரம் முற்றிற்று.

ஸ்ரீ ஆதிசங்கரரால் செய்யப்பட்ட

ஸ்ரீ ஆனந்த3லஹரீ ஸ்தோத்ரம்

ஜனன மரண துக்கத்தைப் போக்கி, ஸர்வ
ஸம்பத்துக்களையும் கொடுக்கக்கூடியது.

भवानि स्तोतुं त्वां प्रभवति चतुर्भिर्न वदनैः
प्रजानां ईशानस्त्रिपुर मथनः पञ्चभिरपि ।
न षड्भिः सेनानीः दशशत मुखैरप्यहिपतिः
तदान्येषां केषां कथय कथमस्मिन् अवसरः ।। १

ப4வானி ஸ்தோதும் த்வாம் ப்ரப4வதி சதுர்பி4ர்ன வதனை:
ப்ரஜானாம் ஈஶானஸ் த்ரிபுர மத2ன: பஞ்சபி4ரபி ।
ந ஷட்3பி4: ஸேனானீ: த3ஶஶத முகை2ரப்யஹிபதி:
ததா3ன்யேஷாம் கேஷாம் கத2ய கத2மஸ்மின் அவஸர: ।।1

ஓ அம்பிகையே, உலகத்தை ஸ்ருஷ்டித்த பிரும்ம தேவன், தனது நான்கு முகங்களினாலும்கூடத் தங்களை ஸ்தோத்ரம் செய்ய சக்தி உடையவனாக இல்லை. த்ரிபுர ஸம்ஹாரம் செய்த ஸ்ரீ பரமசிவன் ஐந்து முகங்களாலும் துதிக்க சக்தியற்றவன். தேவசேனாதிபதியான ஸ்ரீசுப்ரமண்யன் தனது ஆறுமுகங்களினாலும் துதிக்க சக்தி அற்றவன். ஆதிசேஷனும் ஆயிரம் முகங்களாலும் ஸ்துதிக்க சக்தி இல்லாதவன். அப்படி இருக்கும்பொழுது மற்றவர்களுக்கு ஸ்தோத்ரம் செய்வதில் எப்படி சக்தி இருக்கும்? சொல்.

घृतक्षीर द्राक्षामधु मधुरिमा कैरपि पदैः
विशिष्यानाख्येयो भवति रसनामात्र विषयः ।
तथा ते सौन्दर्यं परमशिव दृङ्मात्र विषयः
कथंकारं ब्रूमः सकल निगमागोचरगुणे ।। २

க்4ருத க்ஷீர த்3ராக்ஷா மது4 மது4ரிமா கைரபி பதை3:
விஶிஷ்யானாக்2யேயோ ப4வதி ரஸனாமாத்ர விஷய: ।
ததா2 தே ஸௌந்த3ர்யம் பரமஶிவ த்3ருங்மாத்ர விஷய:
கத2ங்காரம் ப்3ரூம: ஸகல நிக3மா கோ3சர கு3ணே ।। 2

நெய், பால், திராக்ஷை, தேன் இவைகளின் தித்திப்பானது எவ்வித வார்த்தைகளாலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல், நாவிற்கு மட்டிலும் விஷயமாக ஆகிறது. அதைப்போல் எல்லா வேதங்களுக்கும் விஷயமாகாத குணங்களை உடைய ஹே அம்பிகே, தங்களுடைய அழகானது, பரமசிவனுடைய கண்களுக்கு மட்டும்தான் விஷயமாகும். அப்படிப்பட்ட அழகை எப்படி வாக்கினால் உரைப்போம்?

मुखे ते ताम्बूलं नयन युगले कज्जलकला
ललाटे काश्मीरं विलसति गले मौक्तिक लता ।
स्फुरत् काञ्ची शाटी पृथुकटितटे हाटकमयी
भजामित्वां गौरीं नगपति किशोरीं अविरतम् ।। ३

முகே^{2} தே தாம்பூ^{3}லம் நயன யுக^{3}ளே கஜ்ஜல கலா
லலாடே காஷ்மீரம் விலஸதி க^{3}லே மௌக்திக லதா।
ஸ்பு^{2}ரத் காஞ்சீ ஶாடீ ப்ருது^{2} க^{1}டித^{1}டே ஹாடகமயீ
ப^{4}ஜாமித்வாம் கௌ^{3}ரீம் நக^{3}பதி கிஶோரீம் அவிரதம்।।3

உன்னுடைய முகத்தில் தாம்பூலமும், இரண்டு கண்களிலும் மையும், நெற்றியில் குங்குமமும், கழுத்தில் முத்துமாலையும், பெருத்த இடுப்பில் ப்ரகாசிக்கின்ற ஒட்டியாணத்துடன் கூடிய பீதாம்பரமும் விளங்குகின்றது. இப்படிப்பட்ட பர்வத ராஜனின் குமாரியான கௌ^{3}ரியான (**गौरी**) தங்களை எப்பொழும் பஜிக்கின்றேன்.

विराजन् मन्दार द्रुम कुसुम हारस्तनतटी
नदद्वीणा नाद श्रवण विलसत् कुण्डलगणा ।
नताङ्गी मातङ्गी रुचिरगतिभङ्गी भगवती
सती शंभोरम्भोरुहचटुल चक्षुर्विजयते ।। ४

விராஜன் மந்தா^{3}ர த்^{3}ரும குஸும ஹார ஸ்தனதடீ
நத^{3}த்^{3}வீணா நாத^{3} ஶ்ரவண விலஸத் குண்ட^{3}ல க^{3}ணா।
நதாங்கீ^{3} மாதங்கீ^{3} ருசிரக^{3}தி ப^{4}ங்கீ^{3} ப^{4}க^{3}வதீ
ஸதீ ஶம்போ^{4}ரம்போ^{3}ருஹசடுல சக்ஷுர்விஜயதே।। 4

ப்ரகாசிக்கின்ற மந்தா^{3}ர புஷ்பத்தின் (**मन्दारपुष्पम्**) மாலையை உடைய ஸ்தன ப்ரதேசத்தில் சப்திக்கின்ற

வீணையினுடைய நாதத்தைக் கேட்கின்ற காதுகளில், ஒளியுடன் கூடிய குண்டலங்களை உடையவளும் (அம்பாள் தனது மார்பில் வீணையை வைத்து வாசித்துக்கொண்டு கேட்கிறாள் என்பது கருத்து) வணங்கிய சரீரத்தை உடையவளும், மதங்க3 (**मतङ्गः**) முனிவரின் புத்ரியும், அழகிய நடைகளை உடையவளும், ஷாட்குண்ய பரிபூர்ணையும் (**षाड्गुण्यपरिपूर्णा**), செந்தாமரை போன்ற அழகிய கண்களை உடையவளும், பரமசிவனு டைய பத்னியுமான அம்பாள் ப்ரகாசிக்கின்றாள்.

नवीनार्कभ्राजन् मणि कनक भूषापरिकरैः
वृताङ्गी सारङ्गी रुचिर नयनाङ्गी कृतशिवा ।
तटित्पीता पीताम्बर ललित मञ्जीर सुभगा
ममापर्णा पूर्णा निरवधि सुखैरस्तु सुमुखी ।। ५

நவீனார்க்க ப்4ராஜன் மணி கனக பூ4ஷா பரிகரை:
வ்ருதாங்கீ3 ஸாரங்கீ3 ருசிர நயனாங்கீ3 க்ருத ஶிவா।
தடித்பீதா பீதாம்ப3ர லலித மஞ்ஜீர ஸுப4கா3
மமாபர்ணா பூர்ணா நிரவதி ஸுகை2ரஸ்து ஸுமுகீ2।। 5

உதய கால சூர்யன் போல் ப்ரகாசிக்கின்ற ரத்னங்களால் இழைக்கப்பட்ட ஸ்வர்ண ஆபரணங்களை உடையவளும், பெண்மானின் கண்களைப் போன்ற அழகிய கண்களினால் தனது வசமாக்கிக் கொள்ளப்பட்ட பரமசிவனை உடையவளும், மின்னல் கொடி போன்றவளும், பீதாம்பரத்தினாலும் அழகிய பாத ஸரத்தாலும் ப்ரகாசிக்கின்றவளும், அளவற்ற ஆனந்த பூர்ணையுமான பார்வதி தேவியானவள் எனக்கு ப்ரஸன்ன முகத்துடன் இருந்து அனுக்ரஹம் செய்ய வேண்டும்.

हिमाद्रेः संभूता सुललितकरैः पल्लवयुता
सुपुष्पा मुक्ताभिः भ्रमरकलिता चालकभरैः ।
कृतस्थाणुस्थाना कुचफलनता सूक्तिसरसा
रुजां हन्त्री गन्त्री विलसति चिदानन्द लतिका ।। ६

ஹிமாத்3ரே: ஸம்பூ4தா ஸுலலிதகரை: பல்லவயுதா
ஸுபுஷ்பா முக்தாபி4: ப்4ரமர கலிதா சா1லக ப4ரை: ।

க்ருதஸ்தாணுஸ்த்தா[2]னா குசப[2]லனதா ஸூக்தி ஸரஸா
ருஜாம் ஹந்த்ரீ க[3]ந்த்ரீ விலஸதி சிதானந்த[3] லதிகா।। 6

ஹிமயமலையில் உண்டானாதும், அழகிய கைகளினால் தளிர்களுள்ளதும், முக்தாபரணங்களினால் அழகான புஷ்பங்களை உடையதும், அளக பா[4]ரங்களினால் (अलकभारम्) வண்டுகள் உள்ளதும், பரமசிவனாகிற தூணில் படர்ந்தவளும், ஸ்தனங்களாகிற பழத்தை உடையதும், அழகியதும், வார்த்தைகளால் ரஸமுள்ளதும், ஸர்வரோகங்களை போக்குகின்றதும், நடக்கின்றதுமான சிதானந்த ரூபிணியான கொடியாக அம்பாள் ப்ரகாசிக்கிறாள். அதாவது ஸ்ரீ அம்பாளை வியாதியைப் போக்கும் நடமாடும் பச்சிலைக் கொடியாக வர்ணிக்கப்பட்டது.

सपर्णामाकीर्णां कतिपयगुणैः सादरमिह
श्रयन्त्यन्ये वल्लीं मम तु मतिरेवं विलसति ।
अपर्णैका सेव्या जगति सकलैः यत्परिवृतः
पुराणोऽपि स्थाणुः फलति किल कैवल्यपदवीम्।।७

ஸபர்ணாமாகீர்ணாம் கதி பயகு[3]ணை: ஸாத[3]ரமிஹ
ப்ஸ்ரயந்த்யன்யே வல்லீம் மம து மதிரேவம் விலஸதி।
அபர்ணைகா ஸேவ்யா ஜக[3]தி ஸகலை: யத்பரிவ்ருத:
புராணோऽபி ஸ்த்தா[2]ணு:
பல[2]தி கில கைவல்யபத[3]வீம் ।।7

இவ்வுலகில் மற்றவர்கள், இலையுடன் கூடியதும், சில குணங்களால் சூழப்பட்டதுமான கொடியை அன்புடன் ஆச்ரயிக்கின்றனர். எனக்கோவெனில் இம்மாதிரித் தோன்றுகிறது. அதாவது உலகில் இலைகள் இல்லாத அந்தக் கொடி ஒன்றே (அம்பாள் ஒருவளே) எல்லோராலும் ஸேவிக்கத் தகுந்தது. எந்த கொடியினால் சூழப்பட்ட பட்டுப்போன மரமும் (புராணனான பரமசிவனும்) மோக்ஷ பதவி என்ற பழத்தைக் கொடுக்கின்றதோ அதாவது அபர்ணை (अपर्णा) என்ற கொடியினால் சூழப்பட்ட மரமும் கூடப் பழுக்கின்றது. (அபர்ணை என்ற அம்பாளுடன் கூடிய பரமசிவன் மோக்ஷ ப[2]லத்தை (मोक्षफलम्) அளிக்கிறான் என்பது கருத்து)

विधात्री धर्माणां त्वमसि सकलाम्नाय जननी
त्वमर्थानां मूलं धनद नमनीयाङ्घ्रि कमले ।
त्वमादिः कामानां जननि कृत कन्दर्प विजये
सतां मुक्तेर्बीजं त्वमसि परम ब्रह्ममहिषी ॥ ८

விதா[4]த்ரீ த[4]ர்மாணாம் த்வமஸி ஸகலாம்னாய ஜனனீ
த்வமர்த்தா[2]னாம் மூலம் த[4]னத[3] நமனீயாங்க்[4]ரி கமலே।
த்வமாதி[3]: காமானாம் ஜனனி க்ருத க[1]ந்த[3]ர்ப்ப விஜயே
ஸதாம் முக்தர்பீ[4]ஜம் த்வமஸி பரம ப்[3]ரஹ்ம மஹிஷீ॥8

ஹே அம்பிகே, ஸகல வேதங்களுக்கும் காரண பூ[4]தையான **(कारणभूता)** நீ, வர்ணாச்ரம தர்மங்களை உண்டு பண்ணினவள். குபேரனாலும் நமஸ்கரிக்கத் தகுந்த பாத பத்மங்களை உடையவளே, நீ செல்வங்களுக்கும் காரணமானவள். மன்மதனை ஜெயித்தவளே, தாயே, நீ காமங்களுக்கும் காரணமானவள். பரமசிவனின் மஹிஷியே, நீ ஸாதுக்களுடைய மோக்ஷத்திற்கும் விதையாக ஆனவள்.

प्रभूता भक्तिस्ते यदपि न ममालोल मनसः
त्वया तु श्रीमत्या सदयं अवलोक्योऽहमधुना ।
पयोदः पानीयं दिशति मधुरं चातकमुखे
भृशं शंके कैर्वा विधिभिरनुनीता मम मतिः ॥ ९

ப்ரபூ[4]தா ப[4]க்திஸ்தே யத[3]பி ந மமாலோல மனஸ:
த்வயா து ஸ்ரீமத்யா ஸத[3]யம் அவலோக்யோऽஹமது[4]னா।
பயோத[3]: பாநீயம் தி[3]ஶதி மது[4]ரம் சாதக முகே[2]
ப்[4]ருஶம் ஶங்கே கைர்வா விதி[4]பி[4]ரநுநீதா மம மதி:॥ 9

மிகவும் சஞ்சலமான மனமுடைய எனக்கு உன்னிடம் மிகுந்த பக்தி இல்லாமற் போனாலும், நான் இப்பொழுது ஸர்வ ஸ்ரீஸம்ருத்தியும் **(श्रीसमृद्धि)** அடைந்த உன்னால் கருணையுடன் கூடப் பார்க்கப்படத் தகுந்தவன். நீருண்ட மேகமானது சா[1]த[1]கப் பக்ஷியின் **(चातकपक्षि)** வாயில் இனிமையான ஜலத்தைக் கொடுக்கின்றதல்லவா. என்னுடைய மனமானது (தங்கள் கருணை நிறைந்த பார்வையைத் தவிர வேறு) எந்தக் காரியங்களினால் வசமாகும் என்றும் நான் மிகவும் ஸந்தேஹப்படுகிறேன்.

कृपापाङ्गालोकं वितर तरसा साधुचरिते
न ते युक्तोपेक्षा मयि शरणदीक्षां उपगते ।
न चेदिष्टं दद्यादनुपदमहो कल्प लतिका
विशेषः सामान्यैः कथमितरवल्ली परिकरैः ।। १०

க்ருபாபாங்கா3லோகம் விதர தரஸா ஸாது4சரிதே
ந தே யுக்தோபேக்ஷா மயி ஶரணதீ3க்ஷாம் உபக3தே ।
ந சேதி3ஷ்டம் த3த்3யா த3னுபத3மஹோ கல்ப லதிகா
விஶேஷ: ஸாமான்யை: கத2மிதரவல்லீ பரிகரை: ।। 10

நல்ல நடத்தை உள்ளவளே, உன்னைச் ஶரணமாக **(शरणम्)** அடைந்த என்னிடத்தில் கருணையுடன் கூடிய கடைக்கண் பார்வையை சீக்கிரமாகக் கொடுக்க வேண்டும். என்னை நீ உபேக்ஷிப்பது உசிதமல்ல. கல்பக விருக்ஷமானது, தன்னை அண்டினவர்களின் இஷ்டத்தை உடனே கொடுக்காவிடில், மற்ற மரங்களைக் காட்டிலும் அதற்கு என்ன விசேஷம் ஏற்படும்?

महान्तं विश्वासं तव चरण पङ्केरुहयुगे
निधायान्यन् नैवाश्रितमिह मया दैवतमुमे ।
तथापि त्वच्चेतो यदि मयि न जायेत सदयं
निरालम्बो लम्बोदर जननि कं यामि शरणम् ।।११

மஹாந்தம் விஶ்வாஸம் தவ சரண பங்கேருஹயுகே3
நிதா4யான்யன் நைவாஶ்ரிதமிஹ மயா தை3வதமுமே ।
ததா2பி த்வச்சேதோ யதி3 மயி ந ஜாயேத ஸத3யம்
நிராலம்போ3 லம்போ3த3ர ஜனனி கம் யாமி ஶரணம் ।।11

ஹே உமையே, உன்னுடைய பாத கமலங்களில் அளவற்ற நம்பிக்கையை வைத்து, மற்ற தெய்வத்தை நான் ஆச்ரயிக்க வில்லை. அப்படியிருந்தும் என்னிடத்தில் உன் மனதானது கருணை செய்யாவிடில், கணபதியின் தாயான ஹே தேவி, கதியில்லாத நான் யாரைச் ஶரணம் **(शरणम्)** அடைவேன்?

अयस्पर्शे लग्नं सपदि लभते हेमपदवीं
यथा रथ्यापाथः शुचि भवति गंगौघमिलितम् ।

तथा तत्तत् पापैः अतिमलिनमन्तर्मम यदि
त्वयि प्रेम्णासक्तं कथमिव न जायेत विमलम् ।।१२

அயஸ்பர்ஶே லக்3னம் ஸபதி லப4தே ஹேம பத3வீம்
யதா2 ரத்2யாபாத2: ஶுசி ப4வதி க3ங்கௌ3க4 மிலிதம்।
ததா2 தத்தத் பாபை: அதிமலினமந்தர்மம யதி3
த்வயி ப்ரேம்ணா ஸக்தம் கத2மிவ ந ஜாயேத விமலம்।।12

ஹே அம்பிகே, எப்படி இரும்பானது ஸ்பர்ஶமென்ற மணியில் **(स्पर्शमणि)** *சம்பந்தப்பட்டவுடன் பொன்னாக ஆகிறதோ, தெருவில் ஓடும் ஜலமானது கங்கா ப்ரவாஹத்தில் சேர்ந்து சுத்தமாக ஆகிறதோ, அப்படி ஒவ்வொரு பாபங்களினாலும் ரொம்பவும் மலினமான என்னுடைய மனமானது உன்னிடத்தில் பக்தியுடன் ஸம்பந்தப்பட்டு விட்டால் எப்படி நிர்மலமாக ஆகாமலிருக்கும்?*

त्वदन्यस्मादिच्छा विषयफल लाभे न नियमः
त्वमज्ञानामिच्छाधिकमपि समर्था वितरणे ।
इति प्राहुः प्राञ्चः कमल भवनाद्यास्त्वयि मनः
त्वदासक्तं नक्तं दिवमुचितं ईशानि कुरु तत् ।। १३

த்வத3ன்யஸ்மாத் இச்சா2விஷய ப2ல லாபே4 ந நியம:
த்வமஞானாமிச்சா2தி4கமபி ஸமர்த்தா2 வித1ரணே ।
இதி ப்ராஹு: ப்ராஞ்ச: கமல ப4வனாத்யாஸ்த்வயி மன:
த்வதா3ஸக்தம் நக்தம் தி3வமுசிதம் ஈஶானி கு1ருதத்।।13

உன்னைத் தவிர வேறிடத்திலிருந்து கோரிய பொருளை அடைவதற்கில்லை. நீயோவென்றால் அறிவற்றவர்களுக்குக்கூட விருப்பத்திற்குமேல் கொடுப்பதில் சக்தி உள்ளவளாக இருக்கிறாய் என்று ப்ராசீனர்களான ப்ரும்மதேவன் முதலியவர்கள் நிச்சயமாகச் சொல்லுகின்றனர். ஆகையால் ஹே, ஈச்வரனுடைய மனைவியே, என் மனதை இரவு பகல் உன்னிடத்தில் பற்றுள்ளதாகச் செய்ய வேண்டும். அதுவே உனக்கும் உசிதமாகும்.

स्फुरन् नानारत्न स्फटिकमयभित्ति प्रतिफलत्
त्वदाकारं चञ्चच्छशधर कलासौध शिखरम्।

मुकुन्द ब्रह्मेन्द्र प्रभृति परिवारं विजयते
तवागारं रम्यं त्रिभुवन महाराज गृहिणि ।। १४

ஸ்பு2ரன் நானாரத்ன ஸ்ப2டிகமயபி4த்தி ப்ரதி ப2லத்
த்வதா3காரம் சஞ்சச்ச2ஶ த4ர கலாஸெளத4 ஶிக2ரம்।
முகுந்த3 ப்3ரஹ்மேந்த்3ர ப்ரப்4ருதி பரிவாரம் விஜயதே
தவாகாரம் ரம்யம் த்ரிபு4வன மஹாராஜ க்3ருஹிணி।।14

மூவுலகத்திற்கும் மகாராஜாவான பரமசிவனுடைய பத்னியே, உன்னுடைய அழகிய வீடானது ப்ரகாசிக்கின்ற பலவித ரத்னங்கள், ஸ்படிகங்கள் இவைகளால் கட்டப்பட்ட சுவற்றில் ப்ரதிபிம்பிக்கின்ற உன் உருவத்தை உடையதாயும், சந்திரகலை செல்லக்கூடிய மாளிகையின் சிகரத்தை உடையதாயும், மஹாவிஷ்ணு, ப்ரம்மா, இந்திரன், முதலியவர்களை காவல்காரர்களாக உடையதாயும் ப்ரகாசிக்கின்றது.

निवासः कैलासे विधिशतमखाद्याः स्तुतिकराः
कुटुम्बं त्रैलोक्यं कृतकरपुटः सिद्धि निकरः।
महेशः प्राणेशः तदवनिधराधीश तनये
न ते सौभाग्यस्य क्वचिदपि मनागस्ति तुलना।।१५

நிவாஸ: கைலாஸே விதி4ஶதமகா2த்3யா: ஸ்துதிகரா:
குடும்ப3ம் த்ரைலோக்யம் குதகரபுட: ஸித்3தி4 நிகர: ।
மஹேஶ: ப்ராணேஶ: தத3வனி த4ராதீ4ஶ தனயே
நதே ஸெளபா4க்3யஸ்ய க்வசித3பி மனாக3ஸ்தி துலனா।।15

உனக்கு வாஸமோ கைலாஸத்தில். ஸ்தோத்ரம் செய்கின்றவர்களோ ப்ரும்மதேவன், இந்திரன் முதலியவர்கள். உன் குடும்பமோ மூவுலகமும். அணிமாதி அஷ்ட ஸித்திகளும் உன்னிடத்தில் கைகூப்பிக் கொண்டு நிற்கின்றன. பரமசிவனோ ப்ராணநாதன். ஹே பர்வதராஜகுமாரி, உன்னுடைய ஸௌபாக்கியத்திற்கு எங்கும் கொஞ்சம் கூட ஈடு கிடையாது.

वृषो वृद्धो यानं विषमशनं आशा निवसनं
श्मशानं क्रीडाभूः भुजग निवहो भूषण विधिः।

समग्रा सामग्री जगति विदितैव स्मररिपोः
यदेतस्यैश्वर्यं तव जननि सौभाग्य महिमा ।। १६

வ்ருஷோ வ்ருத்^{3}தோ^{4} யானம்
விஷமஶனம் ஆஶா நிவஸனம்
ஶ்மஶானம் க்ரீடாபூ^{4}: பு^{4}ஜக^{3} நிவஹோ பூ^{4}ஷண விதி^{4}:।
ஸமக்^{3}ரா ஸாமக்^{3}ரீ ஜக^{3}தி விதி^{3}தைவ ஸ்மரரிபோ:
யதே^{3}தஸ்யைஶ்வர்யம் தவ ஜனனி ஸௌபா^{4}க்யமஹிமா।।

மன்மதனை நிக்ரஹம் செய்த பரமசிவனுக்கு கிழக் காளைமாடு வாஹனம், ஆஹாரமோ விஷம், வஸ்திரமோ திசைகள், விளையாடுமிடமோ ருத்ர பூமி, ஆபரண வரிசை யோ பாம்புக் கூட்டம். இந்த விஷயத்தை உலகம் நன்கு அறியும். ஹே தாயே, இப்படிப்பட்ட பரமசிவனுக்கு ஐச்வர்யம் இருப்பதானது உன்னுடைய ஸௌபாக்கியத்தின் பெருமையன்றோ!

अशेषब्रह्माण्ड प्रलय विधिनैसर्गिकमतिः
श्मशानेष्वासीनः कृतभसितलेपः पशुपतिः ।
दधौ कण्ठे हालाहलं अखिलभूगोल कृपया
भवत्याः संगत्याः फलमिति च कल्याणि कलये।।१७

அஶேஷ ப்^{3}ரஹ்மாண்ட^{3} ப்ரலய விதி^{4} நைஸர்கி^{3}க மதி:
ஶ்மஶாநேஷ்வாஸீன: க்ருதப^{4}ஸிதலேப: பஶுபதி: ।
த^{3}தௌ^{4} கண்டே^{2} ஹாலாஹலம் அகி^{2}லபூ^{4}கோ^{3}ள க்ருபயா
ப^{4}வத்யா: ஸங்க^{3}த்யா: ப^{2}லமிதி ச கல்யாணி கலயே ।। 17

ஹே கல்யாணி, எல்லா ப்ரும்மாண்டங்களையும் அழிப்பதில் இயற்கையாக மனம் உள்ளவரும், ருத்ர பூமியில் வசிப்பவரும், சாம்பலைப் பூசிக் கொண்டவரும், பஶுபதியுமான **(पशुपति)** பரமசிவன் எல்லா உலகத்தினிடத்தில் உள்ள கருணையினால் காலகூட விஷத்தை **(कालकूटविषम्)** தரித்துக் கொண்டாரென்பது தங்கள் சேர்க்கையின் பயன் என்றே நினைக்கிறேன்.

त्वदीयं सौन्दर्यं निरतिशयं आलोक्य परया
भियैवासीद्गङ्गा जलमयतनुः शैलतनये ।

तदेतस्यास्ताम्यद् वदन कमलं वीक्ष्य कृपया
प्रतिष्ठामातेन निजशिरसि वासेन गिरिशः ।। १८

த்வதீ3யம் ஸௌந்த3ர்யம் நிரதிஶயம் ஆலோக்ய பரயா
பி4யைவாஸீத்3 க3ங்கா3 ஜலமய தநு: ஶைல தனயே ।
தடே3தஸ்யாஸ்தாம்யத்3 வத3ன கமலம் வீக்ஷ்ய க்ருபயா
ப்ரதிஷ்ட்டா2மாதேன நிஜஶிரஸி வாஸேன கி3ரிஶ: ।। 18

ஹே பர்வத ராஜகுமாரியே, உம்முடைய அளவற்ற அழகைப் பார்த்து, கங்காதேவி அதிக பயத்தினால் ஜலரூபமான சரீரத்தை அடைந்தவளானாள். அப்படிப்பட்ட கங்கையின் வாடிய முக கமலத்தைப் பார்த்து, பரமசிவன் தன்னுடைய தலையில் கருணையினால் வஸிக்கும்படி செய்து கவலையற்ற நிலையைச் செய்தார்.

विशाल श्रीखण्डद्रव मृगमदाकीर्णघुसृण
प्रसूनव्यामिश्रं भगवति तवाभ्यङ्ग सलिलम् ।
समादाय स्रष्टा चलित पदपांसून्निजकरैः
समाधत्ते सृष्टिं विबुध पुरपङ्केरुह दृशाम् ।। १९

விஶால ஶ்ரீக2ண்டத்3ரவ ம்ருக3மதா3கீர்ணகு4ஸ்ருண
ப்ரஸூநவ்யாமிஶ்ரம் ப4க3வதி தவாப்4யங்க3 ஸலிலம் ।
ஸமாதா3ய ஸ்ரஷ்டா சலித பத3பாம்ஸூன் நிஜகரை:
ஸமாத4த்தே ஸ்ருஷ்டிம்
விபு3த4 புரபங்கேருஹ த்3ருஶாம் ।। 19

ஹே பாக்கியம் பெற்ற அம்பிகையே, ப்ரும்மதேவனானவன், சிவப்பு சந்தனக்குழம்பு, கஸ்தூரி கலந்த குங்குமம், புஷ்பம் இவைகள் கலந்த தங்களுடைய அப்4யங்க3 ஸ்நானம் **(अभ्यङ्गस्नानम्)** செய்த ஜலத்தையும், தங்களுடைய பாதங்களிலிருந்து விழுந்த தூசுகளையும், தன் கைகளால் எடுத்து தேவலோகத்துக் கன்னிகைகளின் ஸ்ருஷ்டியைச் செய்து வருகிறார்.

वसन्ते सानन्दे कुसुमित लताभिः परिवृते
स्फुरन् नानापद्मे सरसि कलहंसालि सुभगे ।

सखीभिः खेलन्तीं मलय पवनान्दोलित जले
स्मरेद्यस्त्वां तस्य ज्वर जनित पीडापसरति ।। २०

வஸந்தே ஸானந்தே[3] குஸுமித லதாபி[4]: பரிவ்ருதே
ஸ்பு[2]ரன் நானாபத்[3]மே ஸரஸி கலஹம்ஸாலி ஸுப[4]கே[3]।
ஸகீ[2]பி: கே[2]லந்தீம் மலய ப[1]வனாந்தோ[3]லித ஜலே
ஸ்மரேத்[3]யஸ்த்வாம் தஸ்ய ஜ்வர ஜனித பீடா[3]பஸரதி ।।20

எங்கும் ஆனந்தத்தைக் கொடுப்பதும், புஷ்பித்த கொடிகளால் சூழப்பட்டதுமான வஸந்த காலத்தில், மலர்ந்த பலவிதமான தாமரைகளோடு கூடியதும், மதுரமான சப்தங்களைச் செய்கின்ற ஹம்ஸப் பக்ஷிகளின் கூட்டங்களால் அழகியதும், தென்றல் காற்றினால் அசைகின்ற அலைகளோடு கூடிய ஜலத்தை உடையதுமான குளத்தில், தோழிகளுடன் விளையாடுகின்ற உன்னை எவன் நினைக்கிறானோ அவனுக்கு ஜ்வரத்தால் உண்டான பீடை போகிறது. அதாவது ஜனன மரண தாபமே விலகுமென்று கருத்து.

ஸ்ரீ ஆதி[3] சங்கராச்சார்யரவர்களால் செய்யப்பட்ட
ஆனந்த[3]லஹரீ ஸ்தோத்ரம் முற்றிற்று.

।। श्री स्तुति ।।
ஸ்ரீ ஸ்துதி

ஸ்ரீ வேதாந்த தேசிகரால் செய்யப்பட்டது. இதை நித்யம்
பாராயணம் செய்வதால் தாரித்ரியம் விலகி சகல
சம்பத்துக்களும், ஆயுள், ஆரோக்யம்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் கடாக்ஷம் முதலியவைகளும் உண்டாகும்.

श्रीमान्वेङ्कट नाथार्य कवि तार्किक केसरी ।
वेदान्ताचार्य वर्यो मे संनिधत्तां सदा हृदि ।।

ஸ்ரீமான் வேங்கட நாதா[2]ர்ய கவி தார்கிக கேஸரீ ।
வேதா[3]ந்தாசார்ய வர்யோ மே
ஸந்நித[4]த்தாம் ஸதா[3] ஹ்ருதி[3]।।

ஸ்ரீமானும், கவிகள், தார்க்கிகர்கள், இவர்களுக்குள் சிங்கம் போன்றவரும், (மிகச் சிறந்தவரும்), வேதாந்தாச்சாரியருமான ஸ்ரீ வெங்கடநாதார்ர்யர் என் மனதில் எப்பொழுதும் ஸாந்நித்யத்தைச் செய்யட்டும்.

मानातीत प्रथित विभवां मङ्गलं मङ्गलानां
वक्षः पीठीं मधुविजयिनो भूषयन्तीं स्वकान्त्या ।
प्रत्यक्षानुश्रविक महिम प्रार्थिनीनां प्रजानां
श्रेयोमूर्तिं श्रियमशरणस्त्वां शरण्यां प्रपद्ये ।। १

மானாதீத ப்ரதி2த விப4வாம் மங்க3ளம் மங்க3ளானாம்
வக்ஷ: பீட2ம் மது4விஜயிநோ பூ4ஷயந்தீம் ஸ்வகாந்த்யா।
ப்ரத்யக்ஷானுஶ்ரவிக மஹிம ப்ரார்தி2னீனாம் ப்ரஜானாம்
ஶ்ரேயோமூர்த்திம் ஶ்ரிய மஶரணஸ்
த்வாம் ஶரண்யாம் ப்ரபத்3யே।। 1

அளவிட முடியாததும் பிரஸித்தமுமான மஹிமையை உடையவளும், மங்களத்தை கொடுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் மங்களத்தை உண்டு பண்ணுகிறவளும், மதுவைக் கொன்ற ஸ்ரீமன் நாராயணனுடைய மார்பை தனது கா1ந்தியினால் **(कान्ति)** அலங்கரிக்கிறவளும், இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் வேண்டிய க்ஷேமங்களைக் கோருகின்ற பிரஜைகளுக்கு ஶ்ரேயஸ்ஸின் உருவமானவளும், காப்பாற்றுவதில் ஸமர்த்தையுமான லக்ஷ்மியாகிய தங்களை கதியற்றவனான நான் ஶரணம் **(शरणम्)** அடைகிறேன்.

आविर्भावः कलशजलथावध्वरे वापि यस्याः
स्थानं यस्याः सरसिजवनं विष्णु वक्षस्थलं वा ।
भूमा यस्या भुवनमखिलं देवि दिव्यं पदं वा
स्तोकप्रज्ञैरनवधिगुणा स्तूयते सा कथं त्वम् ।। २

ஆவிர்பா4வ: கலஶஜலதா2 வத்4வரே வாபி யஸ்யா:
ஸ்தா2னம் யஸ்யா: ஸரஸிஜ வனம்
விஷ்ணு வக்ஷஸ்த்த2லம் வா ।
பூ4மா யஸ்யா பு4வனமகி2லம் தே3வி தி3வ்யம் பத3ம் வா
ஸ்தோக ப்ரஜ்ஞை ரனவதி4 கு3ணா
ஸ்தூயதே ஸா கத2ம் த்வம் ।। 2

ஹே தேவி, எந்த உங்கள் உற்பத்தியானது பாற்கடலிலும், ஜனக ராஜனுடைய யாக சாலையிலுமோ, எந்த உங்களுக்கு இருப்பிடமானது தாமரை வனமும், ஸ்ரீ விஷ்ணுவின் மார்புமோ, எந்த உங்கள் விபூதியானது எல்லா பிரபஞ்சமும், பரமபத3முமோ **(परमपदम्)**, அப்படிப்பட்ட அளவற்ற குணமுள்ள நீங்கள் ஸ்வல்ப அறிவுள்ளவர்களால் எப்படி ஸ்தோத்ரம் செய்யப்படுவீர்?

स्तोतव्यत्वं दिशति भवति देहिभिः स्तूयमाना
तामेव त्वामनितरगतिः स्तोतुं आशंसमानः ।
सिद्धारम्भः सकल भुवन श्लाघनीयो भवेयं
सेवापेक्षा तवचरणयोः श्रेयसे कस्य न स्यात् ।। ३

ஸ்தோதவ்யத்வம் தி3ஶதி ப4வதி தே3ஹிபி: ஸ்தூயமானா
தாமேவ த்வாம் அநிதரக3தி: ஸ்தோதும் ஆஶம்ஸமான:।
ஸித்3தா4ரம்ப:4 ஸகல பு4வன ஶ்லாக4னீயோ ப4வேயம்
ஸேவாபேக்ஷா தவ ச1ரணயோ:
ஶ்ரேயஸே கஸ்ய ந ஸ்யாத் ।। 3

ஹே தேவி! நீர் சரீரம் படைத்தவர்களால் ஸ்துதிக்கப்பட்டவளாய்க் கொண்டு, அவர்களை எல்லோரும் ஸ்தோத்ரம் செய்யும்படிக்குச் செய்துவிடுகிறீர். அப்படிப்பட்ட தங்களையே வேறு கதியற்ற நானும் ஸ்தோத்ரம் செய்ய ஆசைப்பட்ட மாத்திரத்திலேயே ஆரம்பித்த கார்யங்களின் ஸித்தியை அடைந்தவனாகவும் ஆவேன். தங்கள் சரணங்களில் ஸேவை செய்ய வேணுமென்ற ஆசையானது எவனுக்குத்தான் ஶ்ரேயஸ்ஸின் பொருட்டு ஆகாது?

यत्सङ्कल्पात् भवति कमले यत्र देहिन्यमीषां
जन्मस्थेम प्रलय रचना जङ्गमाजङ्गमानाम् ।
तत्कल्याणं किमपि यमिनां एकलक्ष्यं समाधौ
पूर्णं तेजः स्फुरति भवतीपादलाक्षा रसाङ्कम् ।।४

யத்ஸங்கல்பாத் ப4வதி கமலே யத்ர தே3ஹின்யமீஷாம்
ஜன்மஸ்தே2ம ப்ரலய ரசனா ஜங்க3மாஜங்க3மானாம் ।
தத்கல்யாணம் கிமபி யமினாம் ஏகலக்ஷ்யம் ஸமாதௌ4
பூர்ணம் தேஜ: ஸ்பு2ரதி ப4வதீபாத3லாக்ஷா ரஸாங்கம் ।। 4

ஹே லக்ஷ்மிதேவியே, சித் (**चित्**), அசித் (**अचित्**) ரூபமான உலகத்தைச் சரீரமாகக் கொண்ட எந்த பகவானிடத்தில், எந்த அவனுடைய சங்கல்பத்தினால் இந்த அசையும் பொருள், அசையாப் பொருள் இவைகளுக்குப் பிறப்பு, ரக்ஷணம், பிரளயம் என்ற காரியமானது ஏற்படுகிறதோ, அப்படிப்பட்டவரும், கல்யாண ஸ்வரூபரும், வாக்குக்கு எட்டாதவரும், யோகிகளுக்கு ஸமாதியில் ஒரே விஷய-மாக புலப்படுபவரும், பரிபூரணரும், தேஜோரூபியுமான பெருமாள் தங்களுடைய காலில் உள்ள செம்பஞ்சுக் குழம்பை அடையாளமாகக் கொண்டிருக்கிறார்(ரோ).

निष्प्रत्यूह प्रणयघटितं देवि नित्यानपायं
विष्णुस्त्वं चेत्यनवधिगुणं द्वन्द्वं अन्योन्य लक्ष्यम्।
शेषश्चित्तं विमल मनसां मौलयश्च श्रुतीनां
संपद्यन्ते विहरण विधौ यस्य शय्याविशेषाः।। ५

நிஷ்ப்ரத்யூஹ ப்ரணய க[4]டிதம் தே[3]வி நித்யானபாயம்
விஷ்ணுஸ் த்வம் சேத்யனவதி[4] கு[3]ணம்
த்[3]வந்த்[3]வம் அன்யோன்ய லக்ஷ்யம் ।
ஶேஷஶ் சித்தம் விமல மனஸாம்
மௌலயஶ்ச ஶ்ருதீனாம்
ஸம்பத்[3]யந்தே விஹரண விதௌ[4]
யஸ்ய ஶய்யா விஶேஷா: ।। 5

ஓ தேவியே! இடையூறில்லாத அன்பினால் பிணைக்கப் பட்டதும், எக்காலத்திலும் அழிவற்றதும், அளவற்ற குணங்கள் உள்ளதுமான விஷ்ணு, நீ, என்ற இருவர்கள் அடங்கிய இரட்டையானது, ஒருவருக்கொருவரை இலக்கா கக் கொண்டது. ஆதிசேஷனும், நிர்மலமான மனதுடையவர்களுடைய சி[1]த்[1]த[1]மும் (**चित्तम्**), வேதாந்தங்களும், இந்த இரட்டையின் விளையாட்டு கார்யத்திற்கு உயர்ந்த படுக்கைகளாக இருக்கின்றன.

उद्देश्यत्वं जननि भजतोरुज्झितोपाधि गन्धं
प्रत्यग्रूपे हविषि युवयोः एकशेषित्व योगात् ।
पद्मे पत्युस्तव च निगमैः नित्यं अन्विष्यमाणो
नावच्छेदं भजति महिमा नर्तयन् मानसं नः ।। ६

உத்[3]தே[3]ஶ்யத்வம் ஜனனி ப[4]ஜதோ
ருஜ்ஜி[4]தோபாதி[4] க[3]ந்த[4]ம்
ப்ரத்யக்[3]ரூபே ஹவிஷி யுவயோ: ஏகஶேஷித்வயோகா[3]த்।
பத்[3]மே பத்யுஸ்தவ ச நிக[3]மை:
நித்யம் அன்விஷ்யமாணோ
நாவச்சே[2]த[3]ம் ப[4]ஜதி மஹிமா நர்த்தயன் மானஸம் ந: ।। 6

ஓ தாயே! மஹாலக்ஷ்மியே! தங்களுக்கும், தங்கள் பதியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கும், பிரபஞ்சத்துக்கு ஒரே ஶேஷி **(शेषि)** என்ற பதம் ஸமமானதால் ஆத்ம ஸமர்ப்பண ரூபமான ஹவிஸ்ஸில், காரணாந்தரமின்றி **(कारणान्तरम्)** உத்தேசிக்கப் படும் தன்மையை அடையும் உங்களிருவர்களுடைய, வேதங்களால் தேடப்படும் மஹிமையானது, எங்கள் மனதை நர்த்தனம் செய்வித்துக் கொண்டும், அளவிட முடியாததாயும் இருக்கிறது. (ஆத்ம ஸமர்ப்பணம்) என்பது உங்களிருவர்களையும் உத்தேசித்தே ஆகிறது.

குறிப்பு;- உபநிஷத்தில் ஜீவாத்மாவை பரமாத்மாவினிடத்தில், ஹவிஸ்ஸை அக்னியில் ஹோமம் செய்வது போல் செய்யும் முறை கூறப்பட்டிருக்கிறது. அந்த ஹோமத்திற்கு தேவதை ஸ்ரீ பரமாத்மாவும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியுமே ஆவார்கள். தனித்து ஸ்ரீ நாராயணன் மட்டும் தேவதையல்ல. ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் தேவதை என்று இந்த சுலோகத்தினால் கூறப்படுகிறது.

पश्यन्तीषु श्रुतिषु परितः सूरिबृन्देन सार्धं
मध्येकृत्य त्रिगुण फलकं निर्मितस्थान भेदम् ।
विश्वाधीश प्रणयिनि सदा विभ्रमद्यूत वृत्तौ
ब्रह्मेशाद्या दधति युवयोः अक्षशार प्रचारम् ।। ७

பஶ்யந்தீஷு ஶ்ருதிஷு பரித:
ஸூரி ப்[3]ருந்தே[3]ன ஸார்த[4]ம்
மத்[4]யேக்ருத்ய த்ரிகு[3]ண ப[2]லகம் நிர்மிதஸ்தா[2]ன பே[4]த[3]ம்।
விஶ்வாதீ[4]ஶ ப்ரணயினி ஸதா[3] விப்[4]ரமத்[3]யூத வ்ருத்தெள
ப்[3]ரஹ்மேஶாத்[3]யா த[3]த[4]தி யுவயோ:அக்ஷஶார ப்ரசாரம்।।7

உலகத்திற்கெல்லாம் ஈச்வரனான ஸ்ரீமன் நாராயணனுடைய மனைவியே! நித்யஸூரிக் **(नित्यसूरि)** கூட்டங்களுடன் வேதங்கள் நான்கு பக்கங்களிலும் வேடிக்கை பார்க்கும்

பொழுது, பிரம்மலோகம் முதலான பலவித ஸ்தானங்கள் அமைந்ததும், ஸத்வ, ரஜஸ், தமோ மயமான (பிரக்ருதி என்ற) சூதாட்டப் பலகையை நடுவில் வைத்து நீங்களிருவரும் எப்பொழுதும் வேடிக்கையாய் செய்யும் சூதாட்டத்தில், பிரம்மா, ஈசன் முதலிய தேவர்கள் சூதாட்டப் பாச்சக்காய்களின் நிலைமையை அடைகிறார்கள்.

अस्येशाना त्वमसि जगतः संश्रयन्ती मुकुन्दं
लक्ष्मीः पद्मा जलधि तनया विष्णुपत्नीन्दिरेति।
यन्नामानि श्रुतिपरिपणान्येवं आवर्तयन्तो
नावर्तन्ते दुरित पवन प्रेरिते जन्म चक्रे ।। ८

அஸ்யேஶானா த்வமஸி ஜக³த: ஸம்ஶ்ரயந்தீ முகுந்த³ம்
லக்ஷ்மீ: பத்³மா ஜலதி⁴ தனயா விஷ்ணு பத்னீந்தி³ரேதி।
யந்நாமானி ஶ்ருதி பரிபணான்யேவம் ஆவர்தயந்தோ
நாவர்த்தந்தே து³ரித பவன ப்ரேரிதே ஜன்ம சக்ரே।। 8

நீங்கள் முகுந்தனை ஆச்ரயித்தவளாக இருந்து கொண்டு, இவ்வுலகத்திற்கு நாயகியாக இருக்கிறீர்கள். லக்ஷ்மியென்றும், பத்மா என்றும் பாற்கடலின் புத்ரி என்றும், விஷ்ணுபத்னீ என்றும், இந்திரா என்றும், வேதங்களுக்கு மூலதனம் போன்ற யாதொரு தங்களுடைய நாமங்களை இம்மாதிரி ஜபம் செய்கிறார்களோ, அவர்கள் பாபமாகிற காற்றினால் சுழற்றப்படுகிற ஸம்ஸார சக்கிரத்தில் சுழலமாட்டார்கள்.

त्वामेवाहुः कतिचितपरे त्वत्प्रियं लोकनाथं
किं तैरन्तः कलहमलिनैः किंचिदुत्तीर्य मग्नैः ।
त्वत्संप्रीत्यै विहरति हरौ संमुखीनां श्रुतीनां
भावारूढौ भगवति युवां दैवतं दंपती नः ।। ९

த்வாமேவாஹு: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாத²ம்
கிம் தைரந்த: கலஹ மலினை: கிஞ்சிது³த்தீர்ய மக்³னை:।
த்வத் ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ
ஸம்முகீ²னாம் ஶ்ருதீனாம்
பா⁴வாரூடௌ⁴ ப⁴க³வதி யுவாம் தை³வதம் த³ம்பதீ ந:।।9

ஓ தேவியே, சிலர் தங்களையே உலகிற்கும் நாயகியாகச் சொல்லுகின்றனர். மற்றும் சிலர் தங்கள் புருஷனைச் சொல்லுகின்றனர். ஒருவருக்கொருவர் கலஹத்தினால் மலினமானவர்களும், ப்ரவாஹத்தில் அகப்பட்டுக் கொண்டு மேலே கொஞ்சம் கிளம்பி மறுபடியும் மூழ்கிப்போனவர்கள் போலிருக்கும் அவர்களால் என்ன பிரயோஜனம்? தங்களுடைய பிரியத்தின் பொருட்டு லீலைகளைச் செய்கின்ற ஸ்ரீ நாராயணனிடத்தில் பொருள் கொண்ட வேதங்களுடைய அபிப்ராயத்தில் ஏறியிருக்கும் தம்பதிகளான தாங்கள் இருவரும், எங்களுக்கு தெய்வமாக ஆவீர்களாக.

आपन्नार्ति प्रशमन विधौ बद्धदीक्षस्य विष्णोः
आचख्युस्त्वां प्रियसहचरीं ऐकमत्योपपन्नाम् ।
प्रादुर्भावैरपि समतनुः प्राक् त्वमन्वीयसे त्वं
दूरेक्षिप्तैरिव मधुरता दुग्धराशेस्तरङ्गैः ।। १०

ஆபன்னார்தி1 ப்ரஶமன விதௌ4
ப3த்3த4 தீ3க்ஷஸ்ய விஷ்ணோ:
ஆசக்2யுஸ்த்வாம் ப்ரியஸஹசரீம் ஐகமத்யோப பன்னாம்।
ப்ராது3ர்பா4வைரபி ஸமதனு: ப்ராக் த்வமன்வீயஸே த்வம்
தூ3ரேக்ஷிப்தைரிவ மது4ரதா து3க்3த4ராஶேஸ்தரங்கை:3 ।।10

ஆபத்தை அடைந்தவர்களுடைய கஷ்டங்களைப் போக்கும் விஷயத்தில் தீக்ஷை கொண்ட ஸ்ரீ விஷ்ணுவுக்கு, தங்களை ஒரே அபிப்ராயம் கொண்ட பிரியபத்னியாக மஹான்கள் சொல்லுகிறார்கள். கரைகடந்து செல்லுகின்ற பாற்கடலினுடைய அலைகளுடன் பாலின் தித்திப்பானது எப்படி கலந்து கூடச் செல்லுகிறதோ அதுபோல், பகவானுடைய அவதாரங்களுடன் அந்தந்த அவதாரங்களுக்குத் தக்கவாறு உருவம் எடுத்துக் கொண்டு தாங்கள் அவதாரங்களுக்கு அனுகூலமாக இருக்கும்படி (பகவானை) பின் தொடருகிறீர்கள்.

धत्ते शोभां हरिमरकते तावकी मूर्तिराद्या
तन्वी तुङ्गस्तन भरनता तप्तजाम्बूनदाभा ।
यस्यां गच्छन्त्युदय विलयैः नित्यमानन्द सिन्धा
विच्छावेगोल्लसित लहरी विभ्रमं व्यक्तयस्ते ।। ११

த⁴த்தே ஶோபா⁴ம் ஹரிமரகதே தாவகீ மூர்திராத்³யா
தன்வீ துங்க³ஸ்தன ப⁴ரனதா தப்த ஜாம்பூ³னதா³பா⁴।
யஸ்யாம் க³ச்ச²ந்த்யுத³ய விலயை: நித்யமானந்த³ ஸிந்தா⁴
விச்சா²வேகோல் லஸித லஹரீ
விப்⁴ரமம் வ்யக்தயஸ்தே ॥ 11

மெலிந்ததாயும், பெருத்த ஸ்தன பாரங்களால் (**स्तनभारम्**) வளைந்ததாயும், உருகிய தங்கம் போல் காந்தியை (**कान्ति**) உடையதாயும் இருக்கிற தங்களுடைய எல்லா அவதாரங்களுக்கும் மூலமான, தங்களுடைய மூர்த்தியானது, மரகதம் போன்ற ஸ்ரீ நாராயணனுடைய சரீரத்தில் அழகைச் செய்கிறது. ஆனந்தக்கடலாகிய யாதொரு மூர்த்தியில் தங்களுடைய அவதாரங்கள், எப்பொழுதும் தோன்றுதல் மறைதல் இவைகளாலே தங்கள் ஸங்கல்பம் என்ற வேகத்தால் உண்டான அலைகளுடைய ரீதியை அடைகின்றனவோ!

குறிப்பு;- ஸ்ரீ பகவானுக்கு ஐந்து ரூபங்கள் உண்டு, 1.ப்ர வாஸுதே³வ ரூபம் (**परवासुदेवरूपम्**), 2.வ்யூஹ ரூபம் (**व्यूहरूपम्**), 3. விப⁴வ ரூபம் (**विभवरूपम्**) 4.ஹார்த³ ரூபம் (**हार्द रूपम्**), 5. அர்ச்சா ரூபம் (**अर्चारूपम्**) என்பதாம். பர வாஸுதே³வ ரூபம் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டபடி நித்ய விபூதியில் நித்ய ஸூரிகளால் அனுபவிக்கப்படுகிற ஆனந்தரூபமான நிலை. 2. வ்யூஹ ரூபம் பாற்கடலில் ஆதிசேஷன்மேல் பள்ளி கொண்டிருக்கும் நிலை. இந்த ரூபமே வாஸுதேவ, ஶங்கர்ஷண, ப்ரத்³யும்ன (**प्रद्युम्न**), அனிருத்³த⁴ (**अनिरुद्ध**) என்ற நான்கு பிரிவுகளாக இருந்து உலகங்களுக்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், இவைகளைச் செய்கின்றன. 3. விபவ ரூபம், மத்ஸ்ய, கூர்மாதி அவதாரங்களாகும். 4. ஹார்த³ ரூபம் ஒவ்வொரு வஸ்துவினுடைய உள்ளில் அந்தர்யா மியாய் இருப்பதே யாகும். 5. அர்ச்சா ரூபம் பக்தனுடைய இஷ்டப்படி உபசாரங்களை பெற்றுக் கொள்வதற்காக ஏற்பட்ட விக்ரஹ ரூபமேயாகும். மேற்சொன்ன ஐந்து ரூபங்களில் முதலில் சொன்ன பர வாஸுதேவ ரூபமானது, வ்யூஹம் முதலிய நான்கு ரூபங்களுக்குக்

காரணமேயாகும். அதாவது சமுத்ரத்தில் அலைகளுண்டாகி முடிவில் சமுத்ரத்திலேயே மறைவதுபோல், வ்யூஹம் முதலிய ரூபங்கள் பரவாஸுதேவ ரூபத்திலேயே தோன்றி அதிலே-யே மறைகின்றன. இந்த ரீதி மஹாலக்ஷ்மிக்கும் உண்டென்று இந்த சுலோகத்தினால் சொல்லுகிறார்.

आसंसारं विततं अखिलं वाङ्मयं यद्विभूतिः
यद्भ्रूभङ्गात् कुसुम धनुषः किङ्करो मेरुधन्वा ।
यस्यां नित्यं नयन शतकैरेक लक्ष्ये महेन्द्रः
पद्मे तासां परिणतिरसौ भावलेशैस्त्वदीयैः ।। १२

ஆஸம்ஸாரம் விததம் அகி²லம் வாங்மயம் யத்³விபூ⁴தி:
யத்³ப்⁴ரூப⁴ங்கா³த் குஸும த⁴னுஷ:
கிங்கரோ மேரு த⁴ன்வா ।
யஸ்யாம் நித்யம் நயன ஶதகை:
ஏக லக்ஷ்யே மஹேந்த்³ர:
பத்³மே தாஸாம் பரிணதி ரஸௌ
பா⁴வ லேஶைஸ் த்வதீ³யை: ।। 12

எல்லா உலகங்களிலும் பரவியிருக்கும் எல்லா சப்தங்களும் எந்த ஸரஸ்வதியின் ஸம்பத்தோ, மேருவை வில்லாகப் பிடித்த சிவனும் எந்த பார்வதியின் புருவத்தின் நெரித்தலால் புஷ்ப பாணனான மன்மதனுக்கு ஊழியனோ, தேவேந்திரனும் யாதொரு இந்திராணியிடத்தில் நூற்றுக்கணக்கான கண்களால் எப்பொழுதும் ஒரே பார்வையை உடையவ-னோ, அந்தந்த ஸ்திரீகளுடைய இம்மாதிரியாக புருஷனை வசம் பண்ணும் சக்தியானது, ஹே லக்ஷ்மியே, தங்களுடைய இச்சா² லேஶங்களாலேதான் **(इच्छालेशम्)**.

अग्रे भर्तुः सरसिजमये भद्रपीठे निषण्णां
अम्भोराशेः अधिगतसुधा संप्लवादुत्थितां त्वाम् ।
पुष्पासारस्थगित भुवनैः पुष्करावर्तकाद्यैः
क्लृप्तारम्भाः कनक कलशैः अभ्यषिञ्चन् गजेन्द्राः ।।१३

அக்3ரே ப4ர்து: ஸரஸிஜமயே ப4த்3ர பீடே2 நிஷண்ணாம்
அம்போ4ராஶே: அதி4க3த ஸுதா4
ஸம்ப்லவாது3த்தி2தாம் த்வாம் ।
புஷ்பாஸாரஸ்த2கி3த பு4வனை: புஷ்கராவர்த்தகாத்3யை:
க்லுப்தாரம்பா4: கனக கலஶை:
அப்4யஷிஞ்சன் க3ஜேந்த்3ரா: ।। 13

அம்ருதத்துக்கு உற்பத்தி ஸ்தானமாகிய பாற்கடலிலிருந்து அவதரித்தவளும், பர்த்தாவுக்கு எதிரில் தாமரை புஷ்ப ரூபமான மங்கள ஆஸனத்தில் உட்கார்ந்தவளுமான தங்களை திக்கஜங்கள் புஷ்பமாரியினால் மறைக்கப்பட்ட உலகங்களை உடைய புஷ்கராவர்த்தகம் (पुष्करावर्तकम्) முதலிய மேகங்களாலே செய்யப்பட்ட ஆரம்பத்தை உடையவைகளாய் கொண்டு தங்கக் குடங்களால் அபிஷேகம் செய்தன.

आलोक्यत्वां अमृतसहजे विष्णुवक्षःस्थलस्थां
शापाक्रान्ताः शरणमगमन् सावरोधाः सुरेन्द्राः ।
लब्ध्वा भूयस्त्रिभुवनमिदं लक्षितं त्वत् कटाक्षैः
सर्वाकारस्थिर समुदयां संपदं निर्विशन्ति ।। १४

ஆலோக்யத்வாம் அம்ருத ஸஹஜே
விஷ்ணு வக்ஷ:ஸ்த2லஸ்த்தா2ம்
ஶாபாக்ராந்தா: ஶரணமக3மன்
ஸாவரோதா:4 ஸுரேந்த்3ரா: ।
லப்த்4வா பூ4யஸ் த்ரிபு4வன மித3ம்
லக்ஷிதம் த்வத் கடாக்ஷை:
ஸர்வாகாரஸ்த்தி2ர ஸமுத3யாம் ஸம்பத3ம் நிர்விஶந்தி ।।14

ஹே அம்ருதத்திற்கு சகோதரியே (துர்வாஸரின்) சாபத்தினால் பீடிக்கப்பட்டவர்களும், பத்னிகளுடன் கூடினவர்களுமான தேவ ச்ரேஷ்டர்கள், விஷ்ணுவின் மார்பிலிருக்கும் தங்களைப் பார்த்து சரணமடைந்தனர். தங்களுடைய கடாக்ஷங்களினால் பார்க்கப்பட்ட இந்த மூவுலகையும் மறுபடி அடைந்து எல்லா விதத்திலும் நிலைத்ததான ஸம்பத்தை அனுபவிக்கிறார்கள்.

आर्तत्राणव्रतिभिरमृता सारनीलाम्बुवाहैः
अम्भोजानां उषसि मिषतां अन्तरङ्गैरपाङ्गैः ।

यस्यां यस्यां दिशि विहरते देवि दृष्टिस्त्वदीया
तस्यां तस्यां अहमहमिकां तन्वते संपदोघाः ।। १५

ஆர்த்த த்ராண வ்ரதிபி4ரம்ருதா ஸாரநீலாம்பு3வாஹை:
அம்போ4ஜானாம் உஷஸி மிஷதாம்
அந்தரங்கை3ரபாங்கை:3 ।
யஸ்யாம் யஸ்யாம் தி3ஶி விஹரதே
தே3வி த்3ரிஷ்டிஸ் த்வதீ3யா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம்
தன்வதே ஸம்பதோ3கா:4 ।। 15

கஷ்டத்தை அடைந்தவர்களுடைய ரக்ஷணத்தை விரதமாகக் கொண்டவைகளும், அமிருதத்தை வர்ஷிக்கும் கார்மேகம் போன்றவைகளும், விடியற்காலையில் மலர்ந்த தாமரைப் பூக்களுக்கு தோழர்கள் போன்றதுமான கடைக்கண்களினால் தங்களுடைய பார்வையானது எந்த எந்த திக்கில் (திசைகளில்) செல்லுகிறதோ, அந்த அந்த திக்கில் ஸம்பத்துக்களின் பிரவாஹங்கள் நான் முன்பு போகிறேன், நான் முன்பு போகிறேன் என்பதைச் செய்கின்றன.

योगारम्भ त्वरित मनसो युष्मदैकान्त युक्तं
धर्मं प्राप्तुं प्रथममिह ये धारयन्ते धनायाम् ।
तेषां भूमेर्धनपति गृहाद् अम्बरादम्बुधेर्वा
धारा निर्यान्त्यधिकमधिकं वाञ्छितानां वसूनाम् ।। १६

யோகா3ரம்ப4 த்வரித மனஸோ யுஷ்மதை3காந்த யுக்தம்
த4ர்மம் ப்ராப்தும் ப்ரத2மமிஹ யே தா4ரயந்தே த4னாயாம் ।
தேஷாம் பூ4மேர் த4னபதி3க்3ருஹாத்
அம்ப3ராத3ம்பு3தே4ர்வா
தா4ரா நிர்யாந்த்யதி4க மதி4கம்
வாஞ்சி2தானாம் வஸூனாம் ।। 16

எவர்கள் கர்ம யோகம் முதலியவைகளை ஆரம்பிப்பதில் வேகத்தை அடைந்த மனம் உடையவர்களாய் கொண்டு தங்களையும், ஸ்ரீ மந்நாராயணனையுமே அடைவதற்குரிய தர்மத்தை முதலில் செய்வதற்கு பணத்தில் ஆசையை அடைகிறார்களோ, அவர்களுக்கு பூமியிலிருந்தோ, குபேரன்

வீட்டிலிருந்தோ, ஆகாசத்திலிருந்தோ, சமுத்ரத்திலிருந்தோ, கோரப்பட்ட செல்வங்களுடைய பெருக்குகள் மேலும் மேலும் வந்து குவிகின்றன. (பூமியிலிருந்து புதையல் மூலமாகவோ, குருதக்ஷிணைக்காக ரகுவை அடைந்த கௌத்ஸ முனிவருக்கு குபேரனின் வீட்டிலிருந்து வந்தது போலவோ, குசேலருக்கு ஆகாசத்திலிருந்து வந்தது போலவோ, சமுத்திரத்திலிருந்து வரும் கப்பல் மூலமாக-வோ, கோரியதற்குமேல் கிடைத்து விடுகிறது.)

श्रेयस्कामः कमलनिलये चित्रं आम्नायवाचां
चूडापीडं तव पदयुगं चेतसा धारयन्तः ।
छत्रच्छाया सुभग शिरसश्चामर स्मेरपार्श्वाः
श्लाघा शब्द श्रवणमुदिताः स्रग्विणः संचरन्ति ।।१७

ஶ்ரேயஸ்காம: கமல நிலயே சித்ரம் ஆம்னாய வாசாம்
சூடா^{3}பீட^{3}ம் தவ பத^{3}யுக^{3}ம் சே^{1}தஸா தா^{4}ரயந்த: ।
ச^{2}த்ரச்சா^{2}யா ஸுப^{4}க^{3} ஶிரஸஶ் சாமர ஸ்மேர பார்ஶ்வா:
ஶ்லாகா^{4} ஶப்த^{3} ஶ்ரவணமுதி^{3}தா:
ஸ்ரக்^{3}விண: ஸஞ்சரந்தி ।। 17

தாமரைப் பூவிலிருக்கும் ஓ தாயே, சம்பத்துக்களை கோருகின்றவர்கள், வேதங்களுக்கு அழகிய சூடா^{3} மணிகளாய்க் **(चूडामणि)** கொண்டு, வெண்குடையின் நிழலினால் அழகிய சிரஸை உடையவர்களாகவும், வெண் சாமரங்கள் வீசுவதினால் அழகிய இரண்டு பக்கங்களை உடையவர்களாகவும், தங்களைக் கொண்டாடுகின்றவர் களுடைய சப்தங்களைக் கேட்பதினால் சந்தோஷத்தை அடைந்தவர்களாகவும், புஷ்பமாலை தரித்தவர்களாகவும், (யானை, குதிரை முதலிய வாஹனங்களில் ஏறி) சஞ்சரிக்கின்றனர்.

ऊरीकर्तुं कुशलमखिलं जेतुमादीनरातीन्
दूरीकर्तुं दुरित निवहं त्यक्तुं आद्यामविद्याम् ।
अम्ब स्तम्बावधिक जननग्राम सीमन्तरेखां
आलम्बन्ते विमलमनसो विष्णुकान्ते दयां ते ।। १८

ஊரீகர்தும் குஶலமகி2லம் ஜேதுமாதீ3னராதீ1ன்
தூ3ரீகர்தும் து3ரிதநிவஹம் த்யக்தும் ஆத்3யாமவித்3யாம்।
அம்ப3 ஸ்தம்பா3வதி4க ஜனன க்3ராம ஸீமந்த ரேகா2ம்
ஆலம்ப3ந்தே விமல மனஸோ
விஷ்ணு காந்தே த3யாந்தே ।। 18

தாயான ஹே விஷ்ணுவின் பத்னியே, நிர்மலமான மனதை உடையவர்கள் எல்லா க்ஷேமங்களை அடைவதற்கும், நித்ய சத்ருக்களான காமக்ரோதாதிகளை ஜெயிப்பதற்கும், பாபக் கூட்டத்தைத் துரத்துவதற்கும், மூலப்ரகிருதியை விடுவதற்கும், ஸ்தம்பம் என்ற சிறு பூச்சி வரையிலுள்ள ஸர்வ பிராணிகளுடைய பிறப்பாகிற கிராமத்தின் எல்லையைத் தாண்டிச் செல்லும் ஒற்றையடிப்பாதை போன்ற தங்களுடைய த3யையை **(दया)** *அவலம்பிக்கின்றனர்.*

जाताकाङ्क्षा जननि युवयोः एकसेवाधिकारे
मायालीढं विभवं अखिलं मन्यमानास्तृणाय।
प्रीत्यै विष्णोस्तव च कृतिनः प्रीतिमन्तो भजन्ते
वेलाभङ्ग प्रशमन फलं वैदिकं धर्मसेतुम् ।। १९

ஜாதா காங்க்ஷா ஜனனி யுவயோ: ஏகஸேவாதி4காரே
மாயாலீட4ம் விப4வம் அகி2லம்
மன்யமானாஸ் த்ருணாய ।
ப்ரீத்யை விஷ்ணோஸ் தவ ச க்ருதின:
ப்ரீதிமந்தோ ப4ஜந்தே
வேலாப4ங்க3 ப்ரஶமன ப3லம்
வைதி3கம் த4ர்ம ஸேது1ம் ।। 19

ஓ தாயே, தங்களிருவர்களுடைய முக்யமான ஸேவையாகிற பலனில் **(फलम्)** *ஆசை கொண்ட புண்ணியசாலிகள், மாயையால் சூழப்பட்ட எல்லா ஐச்வர்யங்களையும் புல்லாக நினைத்து தங்களுடையவும், ஸ்ரீ விஷ்ணுவினுடையவும் பிரியத்தின் பொருட்டு சாஸ்திர மரியாதையை மீறாமலிருப்பதையே பலனாகக் கொண்ட வேதங்களில் சொல்லப்படும் தர்மமென்ற அணையை பிரியத்துடன் அவலம்பிக்கிறார்கள். (அதாவது தர்மசாஸ்திரப்படி நடக்கிறார்கள்).*

सेवे देवि त्रिदश महिला मौलिमालार्चितं ते
सिद्धिक्षेत्रं शमित विपदां संपदां पादपद्मम् ।
यस्मिन्नीषन्नमित शिरसो यापयित्वा शरीरं
वर्तिष्यन्ते वितमसि पदे वासुदेवस्य धन्याः ।। २०

ஸேவே தே³வி த்ரித³ஶ மஹிலா மௌலி மாலார்சிதம் தே
ஸித்³தி⁴ க்ஷேத்ரம் ஶமித விபதா³ம்
ஸம்பதா³ம் பாத³ பத்³மம் ।
யஸ்மின்னீஷன்னமித ஶிரஸோ யாபயித்வா ஶரீரம்
வர்தி'ஷ்யந்தே வித'மஸி பதே³
வாஸுதே³வஸ்ய த⁴ன்யா: ।। 20

ஹே தேவியே, தேவ ஸ்த்ரீகளுடைய சிரஸ்ஸுகளின் வரிசைகளால் அர்ச்சிக்கப்பட்டதும், போக்கப்பட்ட விபத்தை உடைய ஐச்வர்யங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாகிய தங்களுடைய பாத கமலத்தை ஸேவிக்கிறேன். எந்த பாத கமலத்தில் கொஞ்சம் தலை வணங்கியவர்கள் கூட கிருதார்த்தர்களாக ஆகி, சரீரம் விலகிய பின் ஸ்ரீ வாஸுதேவனுடைய சுத்த ஸத்வமான ஸ்தானத்தில் (வைகுண்டத்தில்) நித்யவாஸம் செய்வார்களோ, (அந்த பாத கமலத்தை ஸேவிக்கிறேன்).

सानुप्रास प्रकटितदयैः चान्द्र वात्सल्यदिग्धैः
अम्ब स्निग्धैः अमृतलहरी लब्धसब्रह्मचर्यैः ।
धर्मे तापत्रय विरचितो गाढतप्तं क्षणं मां
आकिञ्चन्यग्लपितं अनघैः आर्द्रयेथाः कटाक्षैः ।। २१

ஸாநுப்ராஸ ப்ரகடித த³யை: சாந்த்³ர வாத்ஸல்ய தி³க்³தை:⁴
அம்ப³ ஸ்நிக்³தை:⁴ அம்ருதலஹரீ
லப்த⁴ ஸப்³ரம்ஹம ச'ர்யை: ।
த⁴ர்மே தாபத்ரய விரசிதோ கா³ட⁴தப்தம் க்ஷணம் மாம்
ஆகிஞ்சன்யக்³லபிதம் அனகை:⁴
ஆர்த்³ரயேதா: கடாக்ஷை: ।। 21

ஹே தாயே, மேலும் மேலும் காட்டப்படும் தயையுடன் கூடியவைகளும், ஸ்நேகம் நிறைந்தவைகளும்,

அம்ருதப் பெருக்கு போன்றவைகளும், மிகவும் பரிசுத்தமானவைகளுமான தங்களுடைய கடாக்ஷங்களால், தாப த்ரயத்தால் **(तापत्रयम्)** உண்டான கடும் வெய்யிலில் நன்றாகத் தபித்தவனும், ஒன்றுமில்லாமையால் வாட்டப்படுகிறவனுமான என்னை ஒரு க்ஷண நேரம் குளிர நனைக்க வேண்டும்.

संपद्यन्ते भवभय तमो भानवः त्वत् प्रसादाद्
भावाः सर्वे भगवति हरौ भक्तिं उद्वेलयन्तः ।
याचे किं त्वां अहमिह यतः सीतलोदार शीलाः
भूयो भूयो दिशसि महतां मङ्गलानां प्रबन्धान् ।।२२

ஸம்பத்[3]யந்தே ப[4]வ ப[4]ய தமோ பா[4]னவ: த்வத்ப்ரஸாதா[3]த்
பா[4]வா: ஸர்வே ப[4]க[3]வதிஹரௌ ப[4]க்திம் உத்[3]வேலயந்த:।
யாசே கிம் த்வாம் அஹமிஹ யத: ஸீதலோதா[3]ர ஶீலா:
பூ[4]யோ பூ[4]யோ தி[3]ஶஸி மஹதாம்
மங்க[3]ளானாம் ப்ரப[3]ந்தா[4]ன் ।। 22

ஜனன மரணத்திலுள்ள பயமாகிற இருட்டிற்கு சூரியன் போன்றவைகளும், தங்களுடைய ப்ரஸாதத்தினால் ஸ்ரீ பகவானான நாராயணனிடத்தில் பக்தியை பெருகச் செய்கின்றவையுமான எல்லா பா[4]வங்களும் **(भावाः-** எண்ணங்களும்) உண்டாகின்றன. இப்படி சிந்திக்கும் பொழுது, எதனால் தயையால் நனைந்ததும், உதாரமுமான ஸ்வபாவம் உள்ளவளான தாங்கள் மஹத்தான மங்களங்களுடைய வரிசைகளை அடிக்கடி கொடுக்கிறீரோ, அதனால் நான் தங்களை எதை யாசிப்பேன்?

கருத்து;- ஜனன மரண பயரூபமான நல்லிருளைப் போக்கும் ஸூர்யன்கள் போன்றவைகளும், ஸ்ரீமன் நாராயணனிடத்தில் கரைபுறண்ட பக்தியை உண்டாக்குகின்றவைகளுமான எண்ணங்கள் தங்களுடைய அனுக்ரஹத்தால் நன்றாக ஏற்படுகின்றன. தங்களை நான் இனி பிரார்த்திக்க வேண்டியது ஒன்றுமில்லை. ஏனென்றால் குளிர்ந்ததும், பரந்ததுமான சீலமுள்ள தாங்கள், உயர்ந்த மங்களங்களுடைய தொடர்புகளை மேன்மேலும் கொடுக்கிறீர்கள்.

माता देवि त्वमसि भगवान् वासुदेवः पिता मे
जातः सोहं जननि युवयोः एकलक्ष्यं दयायाः ।
दत्तो युष्मत् परिजनतया देशिकैरप्यतस्त्वं
किं ते भूयः प्रियमिति किल स्मेरवक्त्रा विभासि ।।२३

மாதா தே[3]வி த்வமஸி ப[4]க[3]வான் வாஸுதே[3]வ: பிதா மே
ஜாத: ஸோஹம் ஜனனி யுவயோ: ஏக லக்ஷ்யம் த[3]யாயா:।
த[3]த்தோ யுஷ்மத் பரிஜனதயா தே[3]ஶிகை ரப்யதஸ்த்வம்
கிம் தே பூ[4]ய: ப்ரியமிதி கில ஸ்மேரவக்த்ரா விபா[4]ஸி।।23

ஹே தேவி, தாங்கள் எனக்குத் தாயாகின்றீர்கள், பகவான் பிதாவாகிறார். தாயே, அப்படிப்பட்ட நான், தங்கள் இருவர்களுடைய த[3]யைக்கு (दया) முக்கிய லக்ஷிய-மாக ஆகிவிட்டேன். தங்களுக்கு வேலைக்காரனாக ஆசார்யர்களால் நான் கொடுக்கப்பட்டேன். 'உனக்கு இன்னும் என்ன ஆசை?' என்பது போல் புன்சிரிப்புடன் கூடின முகத்தை உடையவளாகக் கொண்டு பிரகாசிக்கிறீர்கள்.

कल्याणानां अविकलनिधिः कापि कारुण्यसीमा
नित्यामोदा निगम वचसां मौलिमन्दार माला।
संपद्दिव्या मधुविजयिनः संनिधत्तां सदा मे
सैषा देवी सकलभुवन प्रार्थना कामधेनुः ।। २४

கல்யாணானாம் அவிகல நிதி:[4] காபி காருண்ய ஸீமா
நித்யாமோதா[3] நிக[3]ம வசஸாம் மௌலிமந்தா[3]ர மாலா ।
ஸம்பத்[3]தி[3]வ்யா மது[4]விஜயின: ஸந்நித[4]த்தாம் ஸதா[3] மே
ஸைஷாதே[3]வீ ஸகலபு[4]வன ப்ரார்த்த[2]னா காமதே[4]னு:।।24

மங்களங்களுக்கு அழிவற்ற நிதியும், வாக்குக்கு எட்டாததும், காருண்யத்திற்கு எல்லையும், நித்யானந்தத்தை அடைந்ததும், வேதங்களுடைய சிரஸிற்கு (உபநிஷத்துக்களுக்கு) மந்தாரப்பூமாலை போன்றதும், ஸ்ரீமன் நாராயண-னுடைய திவ்ய ஸம்பத்தும், எல்லா உலகத்து ஜனங்களுடைய வேண்டுகோளுக்கு காமதேனுவுமான அந்த மகாலக்ஷ்மியானவள் எனக்கு எப்போதும் தோன்றட்டும்.

उपचित गुरुभक्तेः उत्थितं वेङ्कटेशात्
कलिकलुष निवृत्यै कल्प्यमानं प्रजानाम् ।
सरसिज निलयायाः स्तोत्रमेतत् पठन्तः
सकल कुशलसीमास्सार्वभौमा भवन्ति ।। २५

உபசித கு[3]ருப[4]க்தே: உத்தி[2]தம் வேங்கடேஶாத்
கலி கலுஷ நிவ்ருத்யை கல்ப்யமானம் ப்ரஜானாம் ।
ஸரஸிஜ நிலயாயா: ஸ்தோத்ரமேதத் பட[2]ந்த:
ஸகல குஶல ஸீமாஸ் ஸார்வபௌ[4]மா ப[4]வந்தி ।। 25

விருத்[3]தி[4] **(वृद्धि)** *அடைந்த ஆசார்ய பக்தியை உடைய வெங்கடேசனென்ற தேசிகனிடத்தினின்று உண்டானதும், பிரஜைகளுடைய பாபங்களைப் போக்குவதில் சக்தியுள்ளதுமான ஸ்ரீ மகாலக்ஷ்மியினுடைய இந்த மஹா ஸ்தோத்ரத்தை பாராயணம் செய்கிறவர்கள், எல்லா க்ஷேமங்களுக்கும் இருப்பிடமான சக்ரவர்த்திகளாக ஆகின்றனர்.*

।। श्री अन्नपूर्णा स्तोत्रम् ।।

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்தோத்ரம்

ஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கராச்சார்யர்களால் செய்யப்பட்டது. துர்பிக்ஷத்தையும், தாரித்ரியத்தையும் போக்கி, ஸர்வ மங்களங்களையும் கொடுக்கக்கூடியது.

नित्यानन्दकरी वराभयकरी सौन्दर्य रत्नाकरी
निर्धूताखिल घोरपापनिकरी प्रत्यक्ष माहेश्वरी ।
प्रालेयाचल वंशपावनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। १

நித்யானந்த[3]கரீ வரா ப[4]யகரீ ஸௌந்த[3]ர்ய ரத்னாகரீ
நிர்தூ[4]தாகி[2]ல கோ[4]ரபாப நிகரீ ப்ரத்யக்ஷ மாஹேஶ்வரீ ।
ப்ராலேயாசல வம்ஶ பா[1]வனக[1]ரீ காஶீ புராதீ[4]ஶ்வரீ
பி[4]க்ஷாம் தே[3]ஹி க்ருபாவலம்ப[3]னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 1

சாச்வதமான ஆனந்தத்தை உண்டு பண்ணுபவளும், வரத ஹஸ்தத்தையும், அபய ஹஸ்தத்தையும் உடையவளும், அழகுக் கடலாக இருப்பவளும், ஸகலமான பயத்தைத் தரும் பாபக்கூட்டங்களையும் நாசம் செய்பவளும், ஸாக்ஷாத் மஹேச்வரியும், ஹிமவானுடைய வம்சத்தைப் பரிசுத்தம் செய்பவளும், காசீ நகரத்து நாயகியும், பக்தர்களுக்கு கிருபையாகிற பிடிக்கோலைக் கொடுப்பவளுமான ஹே தாயாகிய அன்னபூர்ணையே, பிக்ஷையைக்கொடு.

नानारत्न विचित्र भूषणकरी हेमाम्बराडम्बरी
मुक्ताहारविलम्बमान विलसद् वक्षोजकुम्भान्तरी ।
काश्मीरागरुवासिता रुचिकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। २

நானா ரத்ன விசித்ர பூ4ஷணகரீ ஹேமாம்ப3ராட3ம்ப3ரீ
முக்தாஹார விலம்ப3மானவிலஸத் வக்ஷோஜ கும்பா4ந்தரீ।
காஶ்மீரா க3ருவாஸிதா ருசிகரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 2

பலவித ரத்னங்களால் விசித்ரமான ஆபரணங்களைக் கையில் தரிப்பவளும், பீதாம்பரத்தால் அழகு செய்யப்பட்டவளும், தொங்குகின்ற முத்து மாலையால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தனகும்ப மத்யப்ரதேசத்தை உடையவளும், காஷ்மீரத்து அகில் தூபத்தினால் நல்ல மணம் உடையவளும், அழகை உண்டு பண்ணுகிறவளுமான ஹே, காசீபுர நாயகியான தாயே, அன்னபூர்ணேஶ்வரீ, பிக்ஷையைக் கொடு.

योगानन्दकरी रिपुक्षयकरी धर्मैकनिष्ठाकरी
चन्द्रार्कानल भासमानलहरी त्रैलोक्य रक्षाकरी ।
सर्वैश्वर्यकरी तपः फलकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ३

யோகா3னந்த3கரீ ரிபு க்ஷயகரீ த4ர்மைக நிஷ்ட்டா2கரீ
சந்த்3ரார்காநல பா4ஸமானலஹரீ த்ரைலோக்ய ரக்ஷாகரீ।

ஸர்வைஶ்வர்யகரீ தப: ப2லகரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 3

அஷ்டாங்க யோகத்தால் ஏற்படும் ஆனந்தத்தைக் கொடுப்பவளும், சத்ருக்களை அழிப்பவளும், தர்மம் ஒன்றிலேயே நிலைத்தலைச் செய்பவளும், சந்திரன், சூர்யன், அக்னி இவர்களின் காந்திக்கு **(कान्ति)** *ஸமமான காந்தியை* **(कान्ति)** *உடையவளும், மூவுலகையும் ரக்ஷிக்கின்றவளும், எல்லா ஐசுவரியங்களையும் கொடுப்பவளும், தபஸ்ஸின் பயனை* **(फलम्)** *அளிப்பவளுமான, ஹே தாயான அன்னபூரணீ, பிக்ஷையைக் கொடு.*

कैलासाचल कन्दरा लयकरी गौरीह्युमा शङ्करी
कौमारी निगमार्थ गोचरकरी ह्योंकार बीजाक्षरी ।
मोक्षद्वार कवाटपाटनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ४

கைலாஸாசல க1ந்த3ரா லயகரீ கௌ3ரீஹ்யுமா ஶங்கரீ
கௌமாரீ நிக3மார்த2 கோ3சரகரீ ஹ்யோங்கார பீ3ஜாக்ஷரீ।
மோக்ஷ த்3வார கவாட பாடனகரீ காஶீ புராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 4

கைலாஸ பர்வத குஹையை வீடாகக் கொண்டவளும், பொன்னிறம் உள்ளவளும், உமாதேவியும், சங்கரனை அடைந்தவளும், எப்பொழுதும் யௌவனத்துடன் கூடியவளும், வேதார்த்தத்தை நன்கு அறியும்படி செய்கிறவளும், ஓங்காரத்தை பீஜாக்ஷரமாகக் **(बीजाक्षरम्)** *கொண்டவளும், மோக்ஷ வாசற்கதவைத் திறப்பவளும், காசீபுர நாயகியும், கருணையைப் பிடிக்கோலாக பக்தர்களுக்குக் கொடுப்பவளுமான ஹே தாயான அன்னபூர்ணேச்வரி, பிக்ஷையைக் கொடு.*

दृश्यादृश्य विभूति वाहनकरी ब्रह्माण्ड भाण्डोदरी
लीला नाटक सूत्र खेलनकरी विज्ञान दीपाङ्कुरी।

श्री विश्वेश मनः प्रसादनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ५

த்3ரிஶ்யா த்3ருஶ்ய விபூ4தி வாஹனகரீ
ப்3ரஹ்மாண்ட3 பா4ண்டோ3த3ரீ
லீலா நாடக ஸூத்ர கே2லனகரீ விஜ்ஞான தீ3பாங்குரீ ।
ஶ்ரீ விஶ்வேஶ மன: ப்ரஸாத3னகரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்3பனகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 5

ஸ்தூல ஸூக்ஷ்மமான ப்ரபஞ்சத்தின் வைபவத்திற்கு காரணமானவளும், (இஹ, பர ஸுகங்களை அடைவிப்பவளும்), பிரும்மாண்டத்தை வயிற்றில் தரித்தவளும், வேடிக்கையாக உலக நாடகத்தை நடத்தும் ஸூத்ர தா4ரிணியாக (**सूत्रधारिणी**) இருப்பவளும், அனுபவ ஞானமாகிற விளக்கின் கொழுந்தாக இருப்பவளும், ஸ்ரீ பரமசிவனுடைய மனதைச் சந்தோஷிக்கச் செய்கிறவளுமான ஹே காசீபுரநாயகி, அன்னபூர்ணேச்வரி, பிக்ஷையைக் கொடு.

आदिक्षान्त समस्त वर्णनकरी शम्भोस्त्रिभावाकरी
काश्मीरा त्रिपुरेश्वरी त्रिनयनी विश्वेश्वरी शर्वरी।
स्वर्ग द्वार कवाटपाटनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ६

ஆதி3க்ஷாந்த ஸமஸ்த வர்ணனகரீ
ஶம்போ4ஸ் த்ரிபா4வாகரீ
காஶ்மீரா த்ரிபுரேஶ்வரீ த்ரிநயநீ விஶ்வேஶ்வரீ ஶர்வரீ।
ஸ்வர்க3 த்3வார கவாட பாடனகரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 6

'அ'காரம் முதல் 'க்ஷ'காரம் வரையில் உள்ள அக்ஷரங்களைச் செய்தவளும், பரமசிவனின் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று காரியங்களின் தோற்றத்துக்கு இருப்பிடமானவளும், குங்குமத்தை தரித்தவளும், த்ரிபுரஸம்ஹாரம் செய்த பரமசிவனின் மனைவியும், முக்கண்ணனின் பத்னியும், உலகத்துக்கு ஈச்வரியும், ராத்ரி

தேவதா ஸ்வரூபிணியும், ஸ்வர்க லோகத்தின் வாசற் கதவைத் திறப்பவளுமான ஹே அன்னபூர்ணேஶ்வரி, பிக்ஷையைக் கொடு.

उर्वी सर्वजनेश्वरी जयकरी माता कृपासागरी
वेणी नील समान कुन्तलधरी नित्यान्नदानेश्वरी।
साक्षान् मोक्षकरी सदा शुभकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ७

உர்வீ ஸர்வ ஜனேஶ்வரீ ஜயகரீ மாதா க்ருபா ஸாக3ரீ
வேணீ நீல ஸமான குந்தலத4ரீ நித்யான்ன தா3னேஶ்வரீ।
ஸாக்ஷான் மோக்ஷகரீ ஸதா3 ஶுப4கரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 7

பூமியின் ரூபமாக இருப்பவளும், ஸர்வ ஜனங்களுக்கும் ஈச்வரியும், ஜெயத்தைக் கொடுப்பவளும், தாயும், கருணைக் கடலும், அழகிய பின்னலுடன் கூடியவளும், கறுத்த கேசங்களை உடையவளும், நித்யம் அன்னதானம் செய்யும் நாயகியும், தானே மோக்ஷத்தைக் கொடுப்பவளும், எப்பொழுதும் மங்களத்தைக் கொடுப்பவளும், காசிநாயகியுமான ஹே அன்னபூரணி! பிக்ஷையைக் கொடு.

देवी सर्वविचित्र रत्न रचिता दाक्षायणी सुन्दरी
वामा स्वादुपयोधरा प्रियकरी सौभाग्य माहेश्वरी।
भक्ताभीष्टकरी सदा शुभकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ८

தே3வீ ஸர்வ விசித்ர ரத்ன ரசிதா தா3க்ஷாயணீ ஸுந்த3ரீ
வாமா ஸ்வாது3 பயோத4ரா ப்ரியகரீ
ஸௌபா4க்3ய மாஹேஶ்வரீ ।
ப4க்தாபீ4ஷ்டகரீ ஸதா3 ஶுப4கரீ காஶீபுராதீ4ஶ்வரீ
பி4க்ஷாம் தே3ஹி க்ருபாவலம்ப3னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 8

பிரகாசிக்கிறவளும், பலவித ரத்னங்களினால் அலங்கரிக்கப் பட்டவளும், தக்ஷனின் புத்ரியும், அழகு வாய்ந்தவளும்,

அழகிய ஸ்தன பா⁴ரத்துடன் (स्तनभारम्) கூடியவளும், ப்ரியத்தைச் செய்கிறவளும், ஸௌபாக்யத்துடன் கூடிய மஹேச்வர பத்னியும், பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுக்கிறவளும், எப்பொழுதும் மங்க³ளகரையும் (मङ्गलकरा), காசீபுரத்திற்கு நாயகியுமான ஹே தாயே, பிக்ஷையைக் கொடு.

चन्द्रार्कानल कोटिकोटि सदृशी चन्द्रांशु बिम्बाधरी
चन्द्रार्काग्नि समान कुण्डलधरी चन्द्रार्क वर्णेश्वरी।
मालापुस्तक पाशसाङ्कुशधरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।। ९

சந்த்³ரார்க்கானல கோடி கோடி ஸத்³ரிஶீ
சந்த்³ராம்ஶு பி³ம்பா³த⁴ரீ
சந்த்³ரார்காக்³னி ஸமான குண்ட³ல த⁴ரீ
சந்த்³ரார்க வர்ணேஶ்வரீ ।
மாலா புஸ்தக பாஶஸாங்குஶ த⁴ரீ காஶீபுராதீ⁴ஶ்வரீ
பி⁴க்ஷாம் தே³ஹி க்ருபாவலம்ப³னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 9

கோடி கோடி சந்திரன், சூர்யன், அக்னிக்கு ஒப்பானவளும், சந்திர கிரணம் போன்றதும், கோவைப்பழம் போன்றதுமான உதட்டை உடையவளும், சந்திரன், சூர்யன், அக்னி இவைகளுக்கு ஒப்பான குண்டலங்களை தரித்தவளும், சந்திரன், சூர்யன், இவைகளின் காந்தியை (कान्ति) உடையவளும், மாலை, புஸ்தகம், பாசம், அங்குசம், இவைகளைக் கைகளில் தரித்தவளும், காசீபுரத்திற்கு நாயகியுமான ஹே தாயே, அன்னபூர்ணேஶ்வரி, பிக்ஷையைக் கொடு.

क्षत्र त्राणकरी महाऽभयकरी माता कृपासागरी
सर्वानन्दकरी सदाशिवकरी विश्वेश्वरी श्रीधरी ।
दक्षाक्रन्दकरी निरामयकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ।।१०

க்ஷத்ர த்ராணகரீ மஹாऽப⁴யகரீ மாதா க்ருபாஸாக³ரீ
ஸர்வானந்த³கரீ ஸதா³ஶிவகரீ விஶ்வேஶ்வரீ ஶ்ரீத⁴ரீ ।
த³க்ஷாக்ரந்த³கரீ நிராமயகரீ காஶீபுராதீ⁴ஶ்வரீ
பி⁴க்ஷாம் தே³ஹி க்ருபாவலம்ப³னகரீ
மாதான்னபூர்ணேஶ்வரீ ।। 10

க்ஷத்ரிய ஜாதியைப்போல் காக்கிறவளும், மிகுந்த பயத்தைப் போக்குகிறவளும், தாயும், கருணை ஸமுத்திரமும், எல்லோருக்கும் ஆனந்தத்தைச் செய்கிறவளும், எப்பொழுதும் மங்களத்தைச் செய்கிறவளும், ஸ்ரீவிஶ்வேஶ்வரனுடைய பத்னியும் (श्रीविश्वेश्वरपत्नी), ஸ்ரீ லக்ஷ்மி ஸ்வரூபிணியும், தக்ஷ ப்ரஜாபதியைக் கதறச் செய்தவளும், ரோகங்களைப் போக்குகிறவளும், காசீபுரத்திற்கு நாயகியும், பக்தர்களுக்கு கருணையாகிற பிடிக்கோலைக் கொடுப்பவளுமான ஹே அன்னபூர்ணேஶ்வரி, பிக்ஷையைக் கொடு.

अन्नपूर्णे सदापूर्णे शङ्कर प्राणवल्लभे ।
'ஹே புத்ரா! எனது அங்கத்திலிருந்து நீ உண்டானாய், நீண்ட காலம் ஜீவித்திரு' என்ற மந்திரத்தை ஆறு முறை ஜபம் செய்து கொண்டு பரமசிவன் சந்தோஷத்துடன் எந்தத் தலைகளில் முகர்ந்து பார்க்கிறாரோ, அப்படிப்பட்டவைகளும், உலகத்தைக் காக்கின்றவைகளும், கிரீடங்களால் ப்ரகாசிக்கின்றவைகளுமான தங்கள் தலைகளுக்கு, ஓ ஜகன்னாதா நமஸ்காரம். 16

திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமேச்வரனின் புத்ரன், ப்ரகாசிக்கின்ற ரத்னமயமான தோள்வளை, முக்தாஹாரம் இவற்றால் அழகு வாய்ந்தவனாகவும், அசைகின்ற குண்டலங்களின் காந்தியால் **(कान्ति)** ப்ரகாசிக்கின்ற கன்னப் பிரதேசங்களை உடையவனாகவும், இடுப்பில் பீதாம்பரத்தை தரித்தவனாகவும், கையில் அழகிய வேலைப் பிடித்தவனாகவும் என் முன்னிலையில் காக்ஷியளிக்க வேண்டும். (இங்கு இம்மாதிரி ஸ்ரீ ஆசார்யாள் கோரியதும், ஸ்ரீ முருகப் பெருமான் அவ்விதமே காக்ஷியளித்தார் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்) 17

ஸ்ரீ பரமசிவன் கைகளை விரித்து,'ஹே குழந்தாய்! இங்கே வா' என்று அன்புடன் அழைக்கையில், தாயின் மடியிலிருந்து துள்ளி ஓடிவந்து தகப்பனாரை அடைந்தவரும், குழந்தை உருவம் உள்ளவரும், பரமசிவனால் அணைக்கப்பட்ட சரீரத்தை உடையவருமான முருகனை பஜிக்கிறேன். இம்மாதிரியே ஸ்ரீ முருகன் ஸ்ரீஆசார்யாளுக்கு தர்சனம் அளித்ததாகக் கருத்து. 18

ஹே குமாரா! ஹே ஈசபுத்ரா! ஹே குஹா! ஹே ஸ்கந்தா! ஹே ஸேனாபதே **(सेनापते)**! ஹே வேல் தரித்தவனே! ஹே மயில் மேலிருப்பவனே! ஓ வள்ளியின் நாயகனே! பக்தர்களின் மனக்கவலையைப் போக்குகிறவனே! பிரபுவே! தாரகனைக் **(तारकासुरः)** கொன்றவனே! எப்பொழுதும் என்னை நீ ரக்ஷிக்க வேண்டும். 19

ஹே தயை மிக்கவரே! நான் கதியற்றவனாய், கண் முதலிய இந்திரியங்கள் ஒடுங்கி நினைவு அற்றவனாகவும், அசைவற்றவனாகவும், வாயிலிருந்து கபத்தைக் கக்குகின்றவனாகவும், பயத்தால் நடுங்குகின்ற சரீரத்தை உடையவனாகவும் இருந்து கொண்டு உயிரை விடும்பொழுது, ஹே குஹா! நீ அப்பொழுது என் முன்னிலையில் சீக்கிரமாக வரவேண்டும். 20

பயங்கரர்களான யமதூதர்கள் கோபத்தால், 'பொசுக்கு, வெட்டு, பிள' என்று என்னை அதட்டும்பொழுது தாங்கள் மயில்மீதேறிக் கொண்டு வேலாயுதத்துடன், பயப்படாதே என்று சொல்லிக் கொண்டு என் முன்னிலையில் சீக்கிரம் வர வேண்டும். 21

ஹே ப்ரபோ! தங்கள் கால்களில் பலமுறை விழுந்து நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டு பலமுறை ப்ரார்த்திக்கிறேன். ஹே கருணைக்கடலே! அப்பொழுது எனக்குப் பேசமுடியாது. மரணத்தருவாயில் தாங்கள் கொஞ்சமும் என்னை அலக்ஷ்யம் செய்யக் கூடாது. 22

ஹே ப்ரபோ! ஆயிரம் ப்ரம்மாண்டத்தை ஆண்ட ஶூரபத்[3]மன் **(शूरपद्मः)**, தாரகன் **(तारकासुरः)**, ஸிம்ஹ வக்த்ரன் **(सिंहवक्त्रन्)** என்ற அஸுரர்கள் தங்களால் கொல்லப்பட்டார்கள். எனது ஹ்ருதயத்திலிருக்கும் மனக்கவலையை மட்டும் கொல்லவில்லையே! நான் என்ன செய்வேன்? 23

ஹே பார்வதீ புத்ரா! நான் எப்பொழுதும் துக்கச் சுமையால் பீடிக்கப்பட்டவன். தாங்களோ தீ[3]னபந்து[4] **(दीनबन्धुः)**. தங்களைத் தவிர பிறரிடம் யாசிக்கமாட்டேன். தங்கள்(மீதான) பக்திக்கு இடையூறு செய்கின்றதும் எப்பொழுதும் தொந்திரவு கொடுக்கின்றதுமான என் மனக்கவலையை நீர் நாசம் செய்ய வேண்டும். 24

தாரகனைக் கொன்றவரே, காக்கைவலிப்பு, குஷ்டம், க்ஷயம், மூலம், மூத்ர ரோகம், ஜ்வரம், பைத்தியம், வயிற்றுவலி, முதலிய மஹா ரோகங்களும், எல்லா பிசாசங்களும், தங்கள் சரணத்தில் **(चरणम्)** வைத்துக் கொடுக்கப்படும் பன்னீர் இலை விபூதியைக் கண்டு பயந்து ஓடுகின்றன. 25

எனது கண்ணில் ஸ்கந்தனின் மூர்த்தியும், காதில் ஸ்கந்தனின் கீர்த்தியும், முகத்தில் எப்பொழுதும் பாவனமான அவன் சரித்ரமும் **(पावन चरित्रम्)**, கையில் அவனுடைய அர்ச்சனையும், சரீரத்தில் அவனுக்குப் பணிவிடை செய்தலும் இருக்கட்டும். எனது எல்லாக் கருத்துக்களும் குஹனிடத்தில் லயத்தை அடைந்து விடட்டும். 26

தேவர்கள் எங்கும் மஹரிஷிகளுக்கோ, பக்தி படைத்த மனிதர்களுக்கோ, கோரிய பொருளைக்

கொடுக்கின்றவர்களாக இருக்கின்றனர். சண்டாளர்களுக்கும் கோரிய பொருளைக் கொடுப்பதில் குஹனைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறியவே இல்லை. 27

ஹே குமாரா! என் வீட்டிலுள்ள பத்னி, புத்ரர்கள், ப[3]ந்து[4]க்கள் **(बन्धुवर्गः)**, பசுக்கள், மற்றுமுள்ள ஸ்த்ரீ புருஷர்கள், எல்லோரும் தங்களை பூஜிக்கின்றவர்களாகவும், நமஸ்கரிக்கின்றவர்களாகவும், ஸ்தோத்ரம் செய்கின்றவர்களாகவும், த்யானிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். 28

க்ரௌஞ்ச மலையைப் **(क्रौञ्चशैलम्)** பொடியாகச் செய்த ஓ ஸ்கந்தா, பொல்லாத மிருகங்கள், பக்ஷிகள், ஈக்கள், அவ்விதமே எனது சரீரத்தில் பாதித்துக் கொண்டிருக்கும் கொடிய வியாதிகள் இவைகளெல்லாம் தங்களது சக்தியின் கூர்மையான நுனியால் குத்தப்பட்டு வெகு தூரத்திற்கு அப்பால் போய் நாசத்தை அடைய வேண்டும். 29

ஹே தே[3]வஸேனாபதே **(देवसेनापते)!** தாயும் தகப்பனும், தனது குழந்தைகள் செய்யும் குற்றத்தை ஸஹித்துக் கொள்ளவில்லையா? நானோ மிகச் சிறிய குழந்தை. தாங்களோ உலகத்திற்கெல்லாம் பிதா. மிகச்சிறந்த தெய்வமாகிய ஓ முருகா! எல்லா குற்றங்களையும் பொறுத்துக் கொண்டு அனுக்ரஹிக்க வேண்டும். 30

ஓ ஸ்கந்தனின் வாஹனமாகிய மயிலே! உனக்கு நமஸ்காரம். ஆயுதமாகிய வேலே, உனக்கு நமஸ்காரம். ஒரு ஸமயம் வாகனமாகிய ஆடே, உனக்கு நமஸ்காரம். கொடியாக விளங்கும் கோழியே, உனக்கு நமஸ்காரம். ஸமுத்ரமே, உனக்கு நமஸ்காரம். ஸமுத்ரக்கரையே, நமஸ்காரம். ஓ ஸ்கந்த மூர்த்தியே, தங்களுக்கு பல நமஸ்காரங்கள். 31

ஓ ஆனந்தத்திற்கு இருப்பிடமானவரே, தாங்கள் விளங்க வேண்டும். அளவற்ற காந்தி **(कान्ति)** உடையவரே, தாங்கள் விளங்க வேண்டும். அமோகமான (பலனைக் கொடுக்கும்) சரித்ரத்தை உடையவரே, தாங்கள் விளங்க வேண்டும். ஆனந்தத்தைக் கொடுக்கும் உருவத்தை உடையவரே, தாங்கள் விளங்க வேண்டும். ஓ ஆனந்தக்கடலே, தாங்கள் விளங்க வேண்டும். எல்லோருக்கும் ப[3]ந்து[4]வே **(बन्धु)**, தாங்கள் விளங்க வேண்டும். ஓ முக்தி அளிக்கும் ஈசபுத்ரா, தாங்கள் எப்பொழுதும் விளங்க வேண்டும்.32

பு[4]ஜங்க[3] ப்ரயாத[3]ம் என்ற விருத்தத்தில் (भुजङ्गप्रयातवृत्तम्) செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை எவன் பக்தியுடன் பாராயணம் செய்கிறானோ அவன் புத்திரர்களையும், பத்னியையும், தனத்தையும், நீண்ட ஆயுளையும் அடைவான். அவன் முடிவில் ஸ்கந்த ஸாயுஜ்யத்தையும் அடைவான். 33

ஆதி[3]சங்கரர் செய்த ஸ்ரீ ஸுப்[3]ரமண்ய பு[4]ஜங்க[3] ஸ்தோத்ரம் முற்றிற்று.

।। इन्द्र कृतं श्रीराम स्तोत्रम् ।।

இந்த்[3]ரன் செய்த ஸ்ரீராம ஸ்தோத்ரம்

இது அத்[4]யாத்ம ராமாயணத்தில் (अध्यात्म रामायणम्) உள்ளது. இதைப் பாராயணம் செய்வதால் ஐச்வர்யம், புத்ரலாபம், ஆரோக்யம், உத்யோக லாபம், வியாபார லாபம் முதலியவை உண்டாகும். முடிவில் மோக்ஷமும் கிடைக்கும்.

श्री गणेशाय नमः ।।

इन्द्र उवाच ।
भजेहं सदा राममिंदीवराभं
भवारण्य दावानलाभाभिधानम् ।
भवानीहृदा भावितानन्द रूपं
भवाभावहेतुं भवादिप्रपन्नम् ।। १

सुरानीकदु:खौघ नाशैकहेतुं
नराकारदेहं निराकारमीड्यम् ।
परेशं परानन्दरूपं वरेण्यं
हरिं राममीशं भजे भारनाशम् ।। २

प्रपन्नाखिलानन्ददोहं प्रपन्नं
प्रपन्नार्ति निःशेषनाशाभिधानम् ।

तपो योग योगीश भावाभि भाव्यं
कपीशादि मित्रं भजे राममित्रम् ।। ३

सदा भोगभाजां सुदूरे विभातं
सदायोगभाजां अदूरे विभातम् ।
चिदानन्दकन्दं सदा राघवेशं
विदेहात्मजानन्द रूपं प्रपद्ये ।। ४
महायोग माया विशेषानुयुक्तो
विभासीश लीला नराकारवृत्तिः ।
त्वदानन्द लीला कथा पूर्ण कर्णाः
सदानन्दरूपा भवन्तीह लोके ।। ५

अहं मानपानाभि मत्त प्रमत्तो
न वेदाखिलेशाभि मानाभिमानः ।
इदानीं भवत्पादपद्म प्रसादात्
त्रिलोकाधिपत्याभिमानो विनष्टः ।। ६

स्फुरद्रत्न केयूर हाराभिरामं
धराभार भूतासुरानीकदावम् ।
शरच्चन्द्र वक्त्रं लसत्पद्मनेत्रं
दुरावारपारं भजे राघवेशम् ।। ७

सुराधीश नीलाभ्र नीलाङ्गकान्तिं
विराधादि रक्षो वधाल्लोक शांतिम् ।
किरीटादिशोभं पुरारातिलाभं
भजे रामचन्द्रं रघूणामधीशम् ।। ८

लसच्चन्द्र कोटि प्रकाशादि पीठे
समासीनमेकं समाधाय सीताम् ।
स्फुरद्धेम वर्णां तडित्पुञ्जभासां
भजे रामचन्द्रं निवृत्तार्ति तन्द्रम् ।। ९

।। इति श्रीमदध्यात्म रामायणे युद्ध काण्डे
इन्द्रकृत राम स्तोत्रं संपूर्णम् ।।

ஸ்ரீ க3ணேஶாய நம: ।।

இந்த்3ர உவாச।

ப4ஜேஹம் ஸதா3 ராமம் இந்தீ3வராப4ம்
ப4வாரண்ய தா3வாநலாபா4பி4தா4னம் ।
ப4வானீ ஹ்ருதா3 பா4விதானந்த3 ரூபம்
ப4வாபா4வஹேதும் ப4வாதி3 ப்ரபன்னம்।। 1

ஸுரானீக து3:கௌ2க4 நாஶைக ஹேதும்
நராகார தே3ஹம் நிராகார மீட்3யம் ।
பரேஶம் பரானந்த3 ரூபம் வரேண்யம்
ஹரிம் ராமமீஶம் ப4ஜே பா4ரநாஶம் ।। 2

ப்ரபந்நாகி2லானந்த3தோ3ஹம் ப்ரபன்னம்
ப்ரபன்னார்த்தி நி:ஶேஷ நாஶாபி4தா4னம்।
தபோ யோக3 யோகீ3ஶ பா4வாபி4 பா4வ்யம்
கபீஶாதி3 மித்ரம் ப4ஜே ராம மித்ரம் ।। 3

ஸதா3 போ4க பா4ஜாம் ஸுதூ3ரே விபா4தம்
ஸதா3 யோக3பா4ஜாம் அதூ3ரே விபா4தம்।
சிதானந்த3 க1ந்த3ம் ஸதா3 ராக4வேஶம்
விதே3ஹாத்மஜானந்த3 ரூபம் ப்ரபத்3யே।। 4

மஹாயோக3 மாயா விஶேஷானு யுக்தோ
விபா4ஸீஶ லீலா நராகார வ்ருத்தி: ।
த்வதானந்த3 லீலா கதா2 பூர்ண கர்ணா:
ஸதானந்த3ரூபா ப4வந்தீஹ லோகே ।। 5

அஹம் மானபானாபி4 மத்த ப்ரமத்தோ
ந வேதா3கி2லேஶாபி4 மாநாபி4மான: ।
இதா3நீம் ப4வத் பாத3 பத்3ம ப்ரஸாதா3த்
த்ரிலோகாதி4பத்யாபி4மாநோ விநஷ்ட: ।। 6

ஸ்பு2ரத் ரத்ன கேயூர ஹாராபி4 ராமம்
த4ராபா4ர பூ4தா ஸுரானீகதா3வம் ।
ஶரச்சந்த்ர வக்த்ரம் லஸத் பத்3ம நேத்ரம்
து3ராவாரபாரம் ப4ஜே ராக4வேஶம் ।। 7

ஸுராதீ4ஶ நீலாப்4ர நீலாங்க3 காந்திம்
விராதா4தி3 ரக்ஷோ வதா4ல்லோக ஶாந்திம் ।
கிரீடாதி3 ஶோப4ம் புராராதி லாப4ம்
ப4ஜே ராமசந்த்3ரம் ரகூ4ணாமதீ4ஶம் ।। 8

லஸச்சந்த்ர கோடி ப்ரகாஶாதி3 பீடே2
ஸமாஸீன மேக1ம் ஸமாதா4ய ஸீதாம் ।
ஸ்பு2ரத் ஹேம வர்ணாம் தடி3த் புஞ்ஜ பா4ஸாம்
ப4ஜே ராமசந்த்3ரம் நிவ்ருத்தார்தி தந்த்3ரம் ।।9

।। இதி ஶ்ரீமத் அத்4யாத்ம ராமாயணே யுத்3த4 காண்டே3
இந்த்3ரக்ருத ராம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ।।

இந்திரன் கூறுகிறான்:-

நீலோத்பலம் போன்ற காந்தி **(कान्ति)** உள்ளவரும், ஸம்ஸாரமாகிற காட்டிற்கு காட்டுத் தீ போன்ற தன் நாமாவை உடையவரும், (அதாவது ஸ்ரீ ராம நாமாவானது ஸம்ஸாரமாகிற காட்டை எரிக்க வல்லது என்பது கருத்து). பார்வதியினால் பா4விக்கப்பட்ட **(भावम्)** ஆனந்த ரூபத்தை உடையவரும், தன்னை அண்டியவரின் ஸம்ஸார பா4ரத்தைப் **(संसारभारम्)** போக்குகிறவருமான பரமேச்வரன் முதலியோர்களால் ஸேவிக்கப்பட்டவருமான ஸ்ரீ ராமனை நான் எப்பொழுதும் பஜிக்கிறேன். 1

தேவ ஸைன்யத்தின் துக்கத்தை அழிப்பவரும், மனித உருவ சரீரம் படைத்தவரும், உண்மையில் உருவமற்றவரும், ஸகலராலும் ஸ்தோத்ரம் செய்யத் தக்கவரும், பரமாத்மாவும், பரமானந்த ஸ்வரூபியும், மிகச் சிறந்தவரும், பாபங்களை அபஹரிப்பவரும், பக்தர்களின்

ஸம்ஸார பா[4]ரத்தை **(संसारभारम्)** அழிப்பவரும், ஸ்வயம் சக்தரும், எல்லோரையும் ஆனந்திக்கச் செய்கிறவருமான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியை பஜிக்கிறேன். 2

தன்னைச் சரணமடைந்தவர்களுக்கு ஸகல ஆனந்தங்களையும் கொடுப்பவரும், ப[1]க்த பராதீ[3]னரும் **(भक्तपरादीनः)**, தன்னைச் சரணடைந்தவர்களின் பீடை-யை அடியோடு அழிக்கும் பெயரை உடையவரும், தபஸ், யோகம் இவற்றை ஸாதனமாகக் கொண்டு யோகீச்வரர்களால் த்யானிக்கத் தக்கவரும், வானராதிபதிக-ளான ஸுக்ரீவாதிகளுக்கு மித்ரரும், மிகச் சிறந்த நண்பருமான ஸ்ரீ ராமனை பஜிக்கிறேன். 3

போகிகளுக்கு வெகு தூரத்திலும், யோகிகளுக்கு ஸமீபத்திலும் ப்ரகாசிப்பவரும், சித் **(चित्)**, ஆனந்தம் இவற்றின் வடிவமாக உள்ளவரும், விதே[3]ஹாதி[4]பதியின் **(विदेहाधिपति)** புத்ரியான ஸ்ரீ ஸீதாதேவிக்கு ஆனந்தத்தை கொடுக்கும் ரூபத்தை உடையவருமான ஸ்ரீ ராகவனை எப்பொழுதும் சரணடைகிறேன். 4

ஹே ப்ரபோ, தாங்கள் மஹத்தான யோகமாயயின் விசேஷத்தோடு கூடியவரும், விளையாட்டாக மனித உருவம் படைத்தவருமாக விளங்குகின்றீர்கள். தங்களுடைய ஆனந்தமயமான அவதாரக் கதைகளைக் கேட்டு ஜனங்கள் உலகில் ஆனந்த ரூபிகளாக ஆகிறார்கள். 5

நான் இதுவரை அஹங்காரமென்ற பானத்தால் **(पानम्)** மத[3]ம் **(मदम्)** பிடித்தவனாகவும், நாமே த்ரிலோகாதி[4]பதி **(त्रिलोकाधिपति)** என்ற கர்வம் கொண்டவனாகவுமிருந்து தங்கள் பெருமையை அறியவில்லை. இப்பொழுது தங்கள் ச[1]ரண கமலங்களை ஸேவித்ததின் பலனாக த்ரிலோகாதி[4]பதி **(त्रिलोकाधिपति)** என்ற கர்வம் தொலைந்தது. 6

நன்கு ப்ரகாசிக்கும் ரத்னமயமான ஹாரத்தால் ப்ரகாசிப்பவரும், பூமிக்குப் பா[4]ரமாக **(भूभारम्)** இருக்கும் அஸுர ஸைன்யங்களுக்கு காட்டுத் தீ போன்றவரும், சரத்கால சந்திரனை ஒத்த முகம் படைத்தவரும், மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவரும், தாண்ட முடியாத ஸம்ஸாரக் கடலுக்குக் கரை போன்றவருமான ஸ்ரீ ராகவனைப் பஜிக்கிறேன். 7

இந்திர நீலக்கல், நீலமேகம் போன்ற அங்க[3] காந்தியை **(अङ्गकान्ति)** உடையவரும், விராத[4]ன் **(विराधः)** முதலிய ராக்ஷஸர்களைக் கொன்று அதன் மூலம் லோகத்தில் சாந்தியை ஏற்படுத்தியவரும், கிரீடம் முதலியவற்றின் சோபையை உடையவரும், த்ரிபுராந்தகரான **(त्रिपुरान्तकः)** பரமேச்வரனுடைய அனுக்ரஹம் பெற்றவரும், ரகு வம்சத்து அரசர்களுக்குத் தலைவருமான ஸ்ரீ ராமச்சந்திரனை பஜிக்கிறேன். 8

ப்ரகாசிக்கும் கோடி சந்திரர்களின் காந்தியை **(कान्ति)** உடையதான பீடத்தில் **(पीठम्)**, ஸ்வர்ணத்தின் காந்தி **(स्वर्णकान्ति)** படைத்தவளும், மின்னல் கொடிபோல் ப்ரகாசிப்பவளுமான ஸ்ரீ ஸீதாதேவியை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவரும், நிகரற்றவரும், பக்தர்களின் கஷ்டங்களை அழிப்பவருமான ஸ்ரீ ராமச்சந்திரனை பஜிக்கிறேன். 9

அத்[4]யாத்ம ராமாயணத்திலுள்ள ஸ்ரீ ராம ஸ்தோத்ரம் முற்றிற்று.

।। श्री शास्तृ स्तवम् ।।

ஸ்ரீ ஐயப்பன் ஸ்தோத்ரம்

தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூகா, த்ரியம்ப[3]கபுரம் **(त्र्यंबकपुरम्)** எனும் எருமத்தலைக் கிராமத்தில் (சேங்காலிபுரத்திற்கு இரண்டு மைல் கிழக்கே, வயலின் நடுவில்) ஐயனார் என்றும் ஐயப்பன் என்றும் கூறப்படும் ஹரிஹர புத்ரரான சாஸ்தா என்றழைக்கப்படும் தெய்வத்தின் ஆலயம் அமைந்திருக்கிறது. பக்தர்கள் இதன் மஹிமையைப் பல முறைகளில் அனுபவித்து வருகிறார்கள். அங்கு இளம் குழந்தையாய் யானைமேல் அமர்ந்து ஸ்ரீ ஐயனார் ப்ரகாசிக்கிறார். இவரை ஸ்ரீபா[3]லசாஸ்தா **(श्रीबालशास्ता)** என்றும், யானைமேலழகர் என்றும் பெயரிட்டு அழைப்பது உண்டு. இந்த மூர்த்தியின் பரிபூர்ண அனுக்ரஹத்தைக் கொடுக்கக்கூடிய சிறந்த ஸ்தோத்ரம் இது. ஜாதகத்தில் சனி, ராஹு முதலிய க்ரஹங்கள் தோஷமுள்ளவர்களாக இருந்தாலும் சத்ரு பயம், மனக்கவலைகள் இருந்தாலும் இதைப் படிப்பது நலம். ஸர்வ காரிய ஸித்தியையும் கொடுக்கும்.

இதை மார்க[3]ப[3]ந்து[4] ஸ்தோத்ர விருத்தத்தில் (**मार्गबन्धु स्तोत्र वृत्तम्**)-அதாவது 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்ற விருத்தத்தில் படிக்க வேண்டும்.

शास्तारमीडे पवित्रं - बाल शास्तारमिष्टं हरीशान पुत्रं
।। शास्तारमीडे पवित्रं ।।

त्रातारं आपत्सु नित्यं- भक्त वृन्दाय सर्वं प्रदातारमिष्टं।
वक्तारमेकान्त भक्तेः-शत्रुहन्तारं अस्मत्कुलस्यादि दैवम्।।१
।।शास्तारमीडे पवित्रं।।

नित्यं गजारूढगात्रं-लोकविख्यात माङ्गल्य शुद्धस्वगोत्रम्।
भक्तावनायात्तवेत्रं - चारुनेत्रं शरच्चन्द्र सन्मित्र वक्त्रं।। २
।।शास्तारमीडे पवित्रं।।

बालोचिताकल्पवेषां- संहताशेष पाषण्ड षण्डोत्थदोषम् ।
सङ्कल्प सद्भक्तपोषं-वेदघोषाभिषेके सुतोषं जुषन्तम्।।३
।।शास्तारमीडे पवित्रं।।

श्री त्र्यंबकाख्ये पुराग्र्ये-क्षेत्रमध्ये वसन्तं चरन्तं च लोके ।
गच्छन्तमापत्सु भक्तान्-भक्तचित्त प्रवेशेन सर्वं वदन्तम्।।४
।।शास्तारमीडे पवित्रं।।

मीनोत्सवे पेशलांगं- वीवधक्षीर संसिक्त दिव्योत्तमाङ्गम् ।
कारुण्यनिष्यन्द्यपाङ्गं-आहिताग्नि द्विजैर्मन्त्र संपूजिताङ्घ्रिम्।।
।।शास्तारमीडे पवित्रं।।

ஶாஸ்தாரமீடே[3] பவித்ரம் -
பா[3]ல ஶாஸ்தாரமிஷ்டம் ஹரீஶான புத்ரம்
।।ஶாஸ்தாரமீடே[3] பவித்ரம்।।

த்ராதாரம் ஆபத்ஸு நித்யம்-
ப4க்த வ்ருந்தா3ய ஸர்வம் ப்ரதா3தாரமிஷ்டம்।
வக்தாரமேகாந்த ப4க்தே:-
ஶத்ரு ஹந்தாரம் அஸ்மத் குலஸ்யாதி3 தை3வம்। 1
।।ஶாஸ்தாரமீடே3 பவித்ரம்।।

நித்யம் க3ஜாரூட2 கா3த்ரம் -
லோகவிக்2யாத மாங்க3ல்ய ஶுத்3த4 ஸ்வகோ3த்ரம்।
ப4க்தாவநாயாத்த வேத்ரம் -
சாரு நேத்ரம் ஶரச்சந்த்3ர ஸன்மித்ர வக்த்ரம்।। 2
।।ஶாஸ்தாரமீடே3 பவித்ரம்।।

பா3லோசிதா கல்ப வேஷாம்-
ஸம்ஹதாஶேஷ பாஷண்ட3 ஷண்டோ3த்த தோ3ஷம்।
ஸங்கல்ப ஸத் ப4க்த போஷம்-
வேத3கோ4ஷாபி4ஷேகே ஸுதோஷம் ஜுஷந்தம்।।3
।।ஶாஸ்தாரமீடே3 பவித்ரம்।।

ஶ்ரீ த்ர்யம்பகாக்2யே புராக்3ர்யே-
க்ஷேத்ர மத்4யே வஸந்தம் சரந்தம் ச லோகே ।
கச்சந்தமாபத்ஸு ப4க்தான்-
ப4க்த சித்த ப்ரவேஶேன ஸர்வம் வத3ந்தம் ।।4
।।ஶாஸ்தாரமீடே3 பவித்ரம்।।

மீனோத்ஸவே பேஶலாங்க3ம்-
வீவத4க்ஷீர ஸம்ஸிக்த தி3வ்யோத்தமாங்க3ம் ।
காருண்ய நிஷ்யந்த்3ய பாங்க3ம்-
ஆஹிதாக்3னி த்3விஜைர் மந்த்ரஸம்பூஜிதாங்க்4ரிம்।।5
।।ஶாஸ்தாரமீடே3 பவித்ரம்।।

காப்பவரும், பாபத்தைப் போக்குகிறவரும், அன்பு வைக்கத் தகுந்தவரும், சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவரும், நித்யம் ஆபத்துகளிலிருந்து காப்பவரும், பக்தர்களின் கூட்டத்திற்குக் கோரியவற்றை எல்லாம் கொடுப்பவரும், அவரையே நம்பிய சிறந்த பக்தன் விஷயத்தில் நேரில் பேசுகிறவரும், சத்ருக்களை அழிப்பவரும், எங்கள் குலத்திற்கு முதல் தெய்வமுமான குழந்தை உருவம் கொண்ட ஐயனாரை துதிக்கிறேன்.

எப்பொழுதும் யானைமேல் அமர்ந்திருப்பவரும், உலக ப்ரசித்தமான மங்களத்தைக் கொடுக்கும் சுத்தமான தன் கோத்ரத்தை உடையவரும், பக்த ரக்ஷணத்துக்காக கையில் பிரம்பு வைத்திருப்பவரும், அழகிய கண்களை உடையவரும், சரத்கால சந்திரனுக்கு ஒப்பான முகத்தை உடையவருமான குழந்தை உருவம் கொண்ட ஐயனாரைத் துதிக்கிறேன்.

குழந்தைக்கேற்ற ஆபரணம் அணிந்தவரும், நாஸ்திகக் கூட்டங்களால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்குகிறவரும், பக்தர்களை வளர்ப்பவரும், வேத மந்திரங்கள் சொல்லி செய்யும் அபிஷேகத்தில் மிக சந்தோஷத்தை அடைகிறவருமான குழந்தை உருவம் கொண்ட ஐயப்பனைத் துதிக்கிறேன்.

த்ரியம்பகபுரமென்னும் சிறந்த ஊரில், வயல்களின் நடுவில் வஸிப்பவரும், உலகில் ஸஞ்சரிப்பவரும், ஆபத்து காலங்களில் பக்தர்களுடன் செல்லுகிறவரும், பக்தர்களின் மனதில் புகுந்து எல்லாவற்றையும் சொல்லுகிறவருமான குழந்தை உருவம் கொண்ட ஐயனாரை துதிக்கிறேன்.

பங்குனி மாதத்தில் நடக்கும் உற்சவத்தில் சிறந்த அலங்காரங்களால் அழகிய உருவத்தை உடையவரும், பால் காவடியின் பாலால் அபிஷேகம் செய்யப்பட்ட தலை முதலிய அவயவங்களை உடையவரும், கருணை பெருகும் கடைக்கண்களை உடையவரும் ஆஹிதாக்[3]னிகளான **(आहिताग्नि)** வேதவித்துக்களால் மந்திரங்கள் சொல்லி பூஜிக்கப்பட்ட சரணங்களை உடையவருமான குழந்தை உருவம் கொண்ட ஐயனாரைத் துதிக்கிறேன்.

ஸ்ரீ ஐயப்பன் (சாஸ்தா) ஸ்தோத்ரம் முற்றிற்று.

குறிப்பு:- இந்த பால சாஸ்தாவிற்கு அபிஷேகமோ, அர்ச்சனையோ செய்ய விரும்பும் பக்தர்கள் தங்களால் இயன்ற பொருளை ''ஸ்ரீ.ஜி.ஸத்குரு குருக்கள், (ஸ்ரீ ஞானஸ்கந்த குருக்கள் குமாரர்), கிழக்கு அக்ரஹாரம், சேங்காலிபுரம் (post) பின். 612604'' என்ற விலாசத்துக்கு அனுப்பிப் பிரஸாதத்தைப் பெறலாம். போன்.04366-260268.

।। श्री शास्ता स्तोत्रम् ।।

ஸ்ரீ மஹா சாஸ்தாவின் த்4யானம்

இதைப்படிப்பதால் சத்ரு பயம், ரோகம், மனக்கவலை சனி, ராஹு தோஷம் முதலியவைகளும் விலகும்.

शास्तारं जगतां प्रपन्न जनता संरक्षणे दीक्षितं
त्रातारं सकलात् भयात् हरिहर प्रेमास्पदं शाश्वतम् ।
गन्तारं निशिरक्षणाय करिराड्वाहं द्रुतं क्षेमदम्
प्रत्यक्षंतु कलौ त्रियंबकपुराधीशं भजे भूतये ।।

ஶாஸ்தாரம் ஜக3தாம் ப்ரபன்ன ஜனதா
ஸம்ரக்ஷணே தீ3க்ஷிதம்
த்ராதாரம் ஸகலாத் ப4யாத் ஹரிஹர
ப்ரேமாஸ்பத3ம் ஶாஶ்வதம் ।
க3ந்தா1ரம் நிஶி ரக்ஷணாய கரிராட்-
வாஹம் த்3ருதம் க்ஷேமத3ம்
ப்ரத்யக்ஷந்து கலௌ த்ரியம்ப3க புரா-
தீ4ஶம் ப4ஜே பூ4தயே ।।

உலகங்களைக் காப்பவரும், தன்னை நமஸ்கரித்த ஜனசமூகத்தை ரக்ஷிப்பதில் தீக்ஷை கொண்டவரும், எல்லா பயத்திலிருந்தும் காப்பவரும், விஷ்ணு, சிவன் இரண்டு பேர்களுடைய அன்புக்கும் பாத்ரமானவரும், அழிவற்றவரும், இரவில் பக்தர்களைக் காப்பதற்காக உடன் செல்பவரும், யானையின் மேல் அமர்ந்தவரும், சீக்ரம் க்ஷேமத்தைக் கொடுப்பவரும், கலியில் ப்ரத்யக்ஷமானவரும், த்ரியம்ப3கபுரம் **(त्रियम्बकपुरम्)** என்கிற (எருமத்தலை) க்ஷேத்திரத்திற்கு ஈஶ்வரனுமான ஸ்ரீ மஹா ஶாஸ்தாவை (ஸ்ரீ ஐயனாரை) பஜிக்கிறேன்.

।। नवग्रह स्तोत्रम् ।।

நவக்^{3}ரஹ ஸ்தோத்ரம்

ஸூர்யன் முதலிய ஒன்பது கிரஹங்களின் பரிபூரண பிரஸாதத்தை இந்த ஒரு ச்லோகத்தைப் படிப்பதால் அடையலாம். ஒன்பது க்ரஹங்களில் ஏதாவது ஒரு க்ரஹம் கெட்ட இடத்திலிருந்தாலும் அந்த க்ரஹங்களின் தசாபுக்திகள் நேர்ந்தாலும் இந்த ச்லோகத்தை ஒன்பது தடவை படித்து ஒவ்வொரு தடவையும் நமஸ்கரிப்பது நலம்.

आरोग्यं प्रददातु नो दिनकरः चन्द्रो यशो निर्मलं
भूतिं भूमिसुतः सुधांशुतनयः प्रज्ञां गुरुर्गौरवम् ।
काव्यः कोमल वाग्विलासं अतुलं मन्दो मुदं सर्वदा
राहुर्बाहुबलं विरोधशमनं केतुः कुलस्योन्नतिम् ।।

ஆரோக்^{3}யம் ப்ரத^{3}தா^{3}து நோ தி^{3}னகர:
சந்த்^{3}ரோ யஶோ நிர்மலம்
பூ^{4}திம் பூ^{4}மிஸுத: ஸுதா^{4}ம்ஶு தனய:
ப்ரஜ்ஞாம் கு^{3}ருர் கௌ^{3}ரவம் ।
கான்ய: கோமள வாக்^{3} விலாஸம் அதுலம்
மந்தோ^{3} முத^{3}ம் ஸர்வதா^{3}
ராஹுர் பா^{3}ஹுப^{3}லம் விரோத^{4} ஶமனம்
கேது: குலஸ்யோன்னதிம் ।।

ஆரோக்யத்தை ஸூர்யனும், சுத்தமான கீர்த்தியை சந்த்ரனும், ஐஶ்வர்யத்தை அங்கா^{3}ரகனும் **(अङ्गारकः)**, நல்ல புத்தியை புதனும், நல்ல மதிப்பை பிருஹஸ்பதி பகவானும், இணையற்றதும், அழகியதுமான பேசும் திறமையை சுக்ரனும், எப்பொழுதும் ஸந்தோஷத்தை ஶனைஶ்சரனும் **(शनैश्चरः)**, புஜ பலத்தையும், சத்ரு நிக்ரஹத்தையும் ராஹுவும், குலத்தின் அபிவிருத்தியை கேதுவும் நம் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

ஜயமங்கள ஸ்தோத்ரம் நான்காம் பாகம் முற்றிற்று.



ஸ்ரீ கணேசாய நம:

।। श्री कृष्णाय परस्मै ब्रह्मणे नमः ।।

।। श्री जयमङ्गल स्तोत्रम् ।।

ஜயமாங்க^{3}ள ஸ்தோத்ரம்

ஐந்தாம் பாகம்

।। श्री गणेशाय नमः ।।

।। श्री विष्णु सहस्रनाम स्तोत्रम् ।।

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्न वदनं ध्यायेत् सर्व विघ्नोपशान्तये ।। १

ஶுக்லாம்ப^{3}ரத^{4}ரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்பு^{4}ஜம்।
ப்ரஸன்ன வத^{3}னம் த்^{4}யாயேத்
ஸர்வ விக்^{4}னோப ஶாந்தயே ।। 1

வெண்மையான வஸ்திரம் தரித்தவரும், எங்கும் நிறைந்தவரும், சந்திரன் போன்ற நிறமுள்ளவரும், நான்கு கைகள் உள்ளவரும், யானை முகத்துடன் கூடியவருமான வினாயகரை ஸர்வ விக்னங்களையும் போக்கிக் கொள்ள த்யானம் செய்ய வேண்டும்.

यस्य द्विरद वक्त्राद्याः पारिषद्याः परश्शतम् ।
विघ्नं निघ्नन्ति सततं विष्वक्सेनं तमाश्रये ।। २

யஸ்ய த்^{3}விரத^{3} வக்த்ராத்^{3}யா: பாரிஷத்^{3}யா: பரஶ்ஶதம்।
விக்^{4}னம் நிக்^{4}னந்தி ஸததம்
விஷ்வக்ஸேனம் தமாஶ்ரயே ।। 2

யானை முகத்துடன் கூடிய விநாயகர் முதலிய தேவர்கள் எவருடைய வசத்தில் இருந்துகொண்டு நூற்றுக்கணக்கான இடையூறுகளைப் போக்குகின்றனரோ அந்த விஷ்வக்ஸேனரை (**विष्वक्सेनः**) ஆச்ரயிக்கிறேன்.

व्यासं वशिष्ठनप्तारं शक्तेः पौत्रमकल्मषम् ।
पराशरात्मजं वन्दे शुकतातं तपोनिधिम् ।। ३

வ்யாஸம் வஶிஷ்ட[2] நப்தாரம்
ஶக்தே: பௌத்ர மகல்மஷம் ।
பராஶராத்மஜம் வந்தே[3] ஶுக தாதம் தபோ நிதி[4]ம் ।। 3

வஸிஷ்டரின் கொள்ளுப்பேரனும், சக்தியின் பேரனும், குற்றமற்றவரும், பராஶரரின் புத்ரனும் (**पराशरपुत्रः**), ஶுகருடைய பிதாவும், த[1]போ[1]நிதி[1]யுமான (**तपोनिधिः**) வ்யாஸரை வணங்குகிறேன்.

व्यासाय विष्णुरूपाय व्यासरूपाय विष्णवे ।
नमो वै ब्रह्म निधये वासिष्ठाय नमो नमः ।। ४

வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே।
நமோவை ப்[3]ரஹ்ம நித[4]யே வாஸிஷ்டா[2]ய நமோநம:।।4

விஷ்ணு ரூபியான வ்யாஸரும், வ்யாஸ ரூபியான விஷ்ணுவும், ஸர்வ வேதங்களுக்கும் இருப்பிடமானவரும், வஸிஷ்ட குலத்தில் உதித்தவருமான வ்யாஸரை பலமுறை நமஸ்கரிக்கிறேன்.

अविकाराय शुद्धाय नित्याय परमात्मने ।
सदैकरूपरूपाय विष्णवे प्रभविष्णवे ।। ५

அவிகாராய ஶுத்[3]தா[4]ய நித்யாய பரமாத்மனே ।
ஸதை[3]கரூபரூபாய விஷ்ணவே ப்ரப[4]விஷ்ணவே।। 5

விகாரமற்றவரும், ஶுத்[3]த[4]ரும் (**शुद्धः**), நித்யரும், பரமாத்மாவும், ஒரே மாதிரியான ஸ்வரூபம் உள்ளவரும், எல்லாவற்றையும் ஜெயிக்கும் ஸ்வபாவம் உள்ளவருமான விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

यस्य स्मरण मात्रेण जन्म संसार बन्धनात् ।
विमुच्यते नमस्तस्मै विष्णवे प्रभविष्णवे ॥ ६
ओं नमो विष्णवे प्रभविष्णवे॥

யஸ்ய ஸ்மரண மாத்ரேண ஜன்ம ஸம்ஸார ப³ந்த⁴னாத்।
விமுச்யதே நமஸ்தஸ்மை
விஷ்ணவே ப்ரப⁴ விஷ்ணவே॥ 6
ஓம் நமோ விஷ்ணவே ப்ரப⁴ விஷ்ணவே ॥

எவரை ஸ்மரித்த மாத்திரத்தினால் ஜனன மரண ப³ந்த⁴த்திலிருந்து (**जनन मरण बन्धम्**) ஜீவன் விடுபடுவா-னோ, அந்த ஸர்வ சக்தி வாய்ந்த விஷ்ணுவுக்கு நமஸ்காரம். ப்ரணவ ஸ்வரூபியான ஸர்வ சக்தி வாய்ந்த விஷ்ணுவுக்கு மறுபடியும் நமஸ்காரம்.

श्री वैशम्पायन उवाच -

श्रुत्वा धर्मानशेषेण पावनानि च सर्वशः ।
युधिष्ठिरः शान्तनवं पुनरेवाभ्यभाषत ॥ ७

ஸ்ரீ வைஶம்பாயன உவாச -
ஶ்ருத்வா த⁴ர்மானஶேஷேண பாவநானி ச ஸர்வஶ:।
யுதி⁴ஷ்டி²ர: ஶாந்தனவம் புனரேவாப்⁴யபா⁴ஷத ॥ 7

ஸ்ரீ வைஶம்பாயனர் ஜனமேஜயருக்குச் சொல்லுகிறார்:- பாபத்தைப் போக்குகின்றவையும், ஸர்வ க்ஷேமங்களையும் கொடுக்க கூடியவையுமான ஸகலவித தர்மங்களையும் முழுவதும் கேட்டபிறகு மறுபடியும் தர்மபுத்திரர் ஶந்தனு புத்திரரான பீஷ்மரைக் கேட்கிறார்.

(இங்கு ஸ்ரீ ஶங்கர பா⁴ஷ்யத்தில் (**श्रीशङ्कर भाष्यम्**)

युधिष्ठिरः-धर्मपुत्रः शान्तनवं - शन्तनु सुतं भीष्मं सकल पुरुषार्थ साधनं सुखसम्पाद्यं अल्प प्रयासं अनल्प फलं अनुक्तमिति कृत्वा पुनः भूय एव अभ्यभाषत प्रश्नं कृतवान्॥

யுதி4ஷ்டி2ர: - த4ர்மபுத்ர: ஶாந்தனவம் - ஶந்தனுஸுதம் பீ4ஷ்மம் ஸகல புருஷார்த்த2 ஸாத4னம் ஸுக2 ஸம்பாத்3யம் அல்ப ப்ரயாஸம் அநல்ப ப2லம் அநுக்தமிதி க்ருத்வா புன: பூ4ய ஏவ அப்4யபா4ஷத ப்ரஶ்னம் க்ருதவான்॥

தர்மபுத்ரர் ஶந்தனு புத்ரரான பீஷ்மரை தர்ம அர்த்த காம மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களைக் கொடுக்கக்கூடியதும், ஸுகமாக அடையக்கூடியதும், அதிக சிரமம் இல்லாததும், சிறந்த பலனைக் கொடுக்கக் கூடியதுமான தர்மம் சொல்லப்படவில்லையென மறுபடியும் அதைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டார்.

(இங்கு, மேற்கொண்டு தர்மபுத்திரர் கேட்கும் கேள்விக்குப் பதிலாக பீஷ்மர், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தையே உபதேசிக்கப்போகிறார். ஆதலால் பக்தர்கள், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்தை மிகச் சிறந்த தர்மம் என உணர்ந்து பாராயணம் செய்து வரவேண்டும் என்பது புலப்படுகிறது)

युधिष्ठिर उवाच -
किमेकं दैवतं लोके किं वाप्येकं परायणम् ।
स्तुवन्तः कं कमर्चन्तः प्राप्नुयुर्मानवाश्शुभम् ॥ ८

யுதி4ஷ்ட்டி2ர உவாச -
கிமேகம் தை3வதம் லோகே கிம் வாப்யேகம் பராயணம்।
ஸ்துவந்த: கம் கமர்ச்சந்த: ப்ராப்நுயுர் மானவாஶ்ஶுபம்॥8

யுதிஷ்டிரர் சொல்லுகிறார்:- (1) எல்லா சாஸ்திரங்களிலும் எது ஒன்றே தெய்வம் என்று சொல்லப்பபட்டிருக்கிறது? (2) ஜன்மாவை அடைந்தவர்கள் எந்த ஒன்றையே அடைய வேண்டியது? (3) எந்த தெய்வத்தை துதிப்பவர்களும் (4) எந்த தெய்வத்தை அர்ச்சிப்பவர்களுமான மனிதர்கள் க்ஷேமத்தை அடைவார்கள்?

को धर्मः सर्व धर्माणां भवतः परमो मतः ।
किं जपन् मुच्यते जन्तुः जन्म संसार बन्धनात् ॥९

கோ1த4ர்ம: ஸர்வ த4ர்மாணாம் ப4வத: பரமோ மத: ।
கிம் ஜபன் முச்யதே ஜந்து: ஜன்ம ஸம்ஸார ப3ந்த4நாத்॥9

(5) ஸர்வ தர்மங்களுள் எது சிறந்த தர்மமென தாங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள்? (6) ஜன்மாவை அடைந்த ஜீவன் எதனை ஜபித்தால் ஜனன மரண ரூபமான ஸம்ஸார ப³ந்த⁴த்திலிருந்து **(संसारबन्धम्)** *விடுபடுவான்?*

श्री भीष्म उवाच -

जगत्प्रभुं देवदेवं अनन्तं पुरुषोत्तमम् ।
स्तुवन्नाम सहस्रेण पुरुषः सततोत्थितः ।। १०

ஸ்ரீ பீ⁴ஷ்ம உவாச -
ஜகத் ப்ரபு⁴ம் தே³வ தே³வம் அனந்தம் புருஷோத்தமம்।
ஸ்துவன் நாம ஸஹஸ்ரேண புருஷ: ஸததோத்தி²த: ।। 10

ஸ்ரீ பீஷ்மர் சொல்லுகிறார்:- (ஆறாவது கேள்விக்கு இதில் பதில் கூறப்படுகிறது.) உலகங்களுக்கு பிரபுவும், பிரம்மாதி தேவர்களுக்கும் தேவனும், முடிவற்றவனுமான ஸ்ரீ புருஷோத்தமனை, மனிதன் எப்பொழுதும் முயற்சியுடன், ஆயிரம் நாமாக்களால் ஸ்தோத்ரம் செய்வதால் ஸகல துக்கங்களினின்றும் விடுபடுகிறான்.

तमेव चार्चयन्नित्यं भक्त्या पुरुषमव्ययम् ।
ध्यायंस्तुवन् नमस्यंश्च यजमानस्तमेव च ।। ११

தமேவ சார்ச்சயன் நித்யம் ப⁴க்த்யா புருஷமவ்யயம் ।
த்⁴யாயம் ஸ்துவன் நமஸ்யம்ஶ்ச யஜமானஸ்தமேவ ச।।11

(இந்த ச்லோகத்தில் நான்காவது கேள்விக்கு பதில் கூறப்படுகிறது). அழிவற்ற அந்த புருஷனையே பக்தியுடன் எக்காலமும் அர்ச்சிப்பவனும், அப்பகவானையே மனதினால் த்யானிப்பவனும், வாக்கினால் துதிப்பவனும், நமஸ்கரிப்பவனுமான யஜமானன் (பூஜகன், பக்தன்) ஸர்வ துக்கங்களிலிருந்தும் விடுபட்டவனாக ஆகிறான்.

अनादि निधनं विष्णुं सर्वलोक नमस्कृतम् ।
लोकाध्यक्षं स्तुवन्नित्यं सर्वदुःखातिगो भवेत् ।। १२

அநாதி³ நித⁴னம் விஷ்ணும் ஸர்வலோக நமஸ்க்ருதம் ।
லோகாத்⁴யக்ஷம் ஸ்துவன் நித்யம்
ஸர்வது:³கா²திகோ ப⁴வேத் ।। 12

(அடுத்த மூன்று பாதங்களால் மூன்றாவது கேள்விக்கு பதில் கூறுகிறார்). ஆதி³ அந்த¹ம் **(आदि अन्तम्)** அற்றவரும், எங்கும் நிறைந்தவரும், எல்லா உலகத்திற்கும் நாயகனும், எல்லா உலகங்களையும் தனது இயற்கையான அறிவினால் நேரில் பார்ப்பவருமான பகவானை எப்பொழுதும் ஸ்தோத்ரம் செய்பவன் எல்லா துக்கங்களினின்றும் விடுபடுவான்.

ब्रह्मण्यं सर्व धर्मज्ञं लोकानां कीर्ति वर्धनम् ।
लोकनाथं महद्भूतं सर्व भूत भवोद्भवम् ।। १३

ப்³ரஹ்மண்யம் ஸர்வ த⁴ர்மஜ்ஞம்
லோகானாம் கீர்த்தி வர்த⁴னம் ।
லோகநாத²ம் மஹத்³பூ⁴தம் ஸர்வ பூ⁴த ப⁴வோத்³ப⁴வம் ।।13

(ஸ்துதிக்க வேண்டிய அதே தெய்வத்தை மறுபடியும் விளக்குகிறார்)

வேதம், வேதவித்துக்கள், தவம், ச¹துர்முக² பி³ரம்மன் **(चतुर्मुखब्रह्मा)** இவர்களுக்கு நன்மையைச் செய்பவரும், ஸர்வ தர்மங்களையும் அறிந்தவரும், உலகத்தோரின் கீர்த்தியை விருத்³தி⁴ **(वृद्धि)** செய்பவரும், உலகத்திற்கு அதிபரும், மிகச்சிறந்ததும், உண்மைப் பொருளும், எல்லா பிராணிகளின் உற்பத்திக்குக் காரணமானவருமான பகவானைத் துதிப்பவன், எல்லா துக்கங்களிலிருந்தும் விடுபடுவான்.

एष मे सर्व धर्माणां धर्मोऽधिकतमो मतः ।
यद्भक्त्या पुण्डरीकाक्षं स्तवैरर्चेन्नरः सदा ।। १४

ஏஷ மே ஸர்வ த⁴ர்மாணாம் த⁴ர்மோऽதி⁴கதமோ மத:।
யத்³ப⁴க்த்யா புண்ட³ரீகாக்ஷம் ஸ்தவைரர்சேன்நர:ஸதா³।।14

(ஐந்தாவது கேள்விக்கு இதில் பதில் கூறுகிறார்)

ஹ்ருதயத் தாமரையில் இருக்கும் ஸ்ரீமன் நாராயணனை பக்தியுடன் மனிதன் எப்பொழுதும் ஸ்தோத்ரங்களால் அர்ச்சிக்க வேண்டும் என்பதுவே ஸர்வ தர்மங்களிலும் சிறந்த தர்மமென பீஷ்மர் கூறுகிறார்.

परमं यो महत्तेजः परमं यो महत्तपः ।
परमं यो महद्ब्रह्म परमं यः परायणम् ।। १५

பரமம் யோ மஹத்தேஜ: பரமம் யோ மஹத்தப: ।
பரமம் யோ மஹத் ப்³ரஹ்ம பரமம் ய: பராயணம் ।। 15

(இரண்டாவது கேள்விக்கு பதில் கூறுகிறார்)

எந்த தேவன் மிகச் சிறந்த பெரிய தேஜஸோ, எந்த தேவன் மிகச் சிறந்தவனாக இருந்து உலகத்தை அடக்கி ஆளுகின்றானோ, எந்த தேவன் மிகப் பெரிய ப்ரம்மமோ, எந்த தேவன் சிறந்த அடைய வேண்டிய க³தியோ **(गति)**, *அது ஒன்றே முக்தர்கள் அடைய வேண்டிய ஸ்தானம்.*

पवित्राणां पवित्रं यो मङ्गलानां च मङ्गलम् ।
दैवतं देवतानां च भूतानां योऽव्ययः पिता ।। १६

பவித்ராணாம் பவித்ரம் யோ மங்க³ளானாம் ச மங்க³ளம்।
தை³வதம் தே³வதானாம் ச
பூ⁴தானாம் யோऽவ்யய: பிதா ।। 16

(இதனால் முதல் கேள்விக்கு பதில் கூறுகிறார்)

எவர் பவித்ரமான கங்கை முதலியவற்றையும் புனிதமாக்குகிறவரோ, ஸுகம், அதன் காரணம், அதை உபதேசிக்கும் சாஸ்திரம், ஆகிய இவை எல்லாவற்றிற்கும் மங்களமானவரோ, தெய்வங்களுள் மிகச்சிறந்த தேவரோ, எவர் ஸர்வ பிராணிகளுக்கும் அழிவற்ற பிதாவோ, அவரே சிறந்த தெய்வம்,

यतः सर्वाणि भूतानि भवन्त्यादि युगागमे ।
यस्मिंश्च प्रलयं यान्ति पुनरेव युगक्षये ।। १७

யத: ஸர்வாணி பூ⁴தானி ப⁴வந்த்யாதி³ யுகா³க³மே ।
யஸ்மிம்ஶ்ச ப்ரலயம் யாந்தி புனரேவ யுக³க்ஷயே ।।17

யுகத்தின் ஆரம்பத்தில் ஸர்வ பூதங்களும் எவரிடமிருந்து தோன்றிற்றோ, மத்ய காலத்தில் எவரிடம் இருக்கின்றனவோ, யுக முடிவில் எவரிடம் லயத்தை அடைகின்றனவோ;

तस्य लोकप्रधानस्य जगन्नाथस्य भूपते ।
विष्णोर्नाम सहस्त्रं मे शृणु पापभयापहम् ।। १८

தஸ்ய லோக ப்ரதா4னஸ்ய ஜக3ன்நாத2ஸ்ய பூ4பதே।
விஷ்ணோர் நாம ஸஹஸ்ரம் மே
ஶ்ருணு பாப ப4யாபஹம் ।। 18

சாஸ்திரங்களில் மிகச் சிறந்தவராகக் கூறப்படுகின்றவரும், உலகத்திற்கெல்லாம் அதிபருமான விஷ்ணுவினுடையவையும், பாபம், பயம், இவற்றைப் போக்குகின்றவையுமான ஆயிரம் நாமாக்களை, ஓ அரசனே கேள் (என, தர்மரைப் பார்த்து பீஷ்மர் கூறுகிறார்)

यानि नामानि गौणानि विख्यातानि महात्मनः।
ऋषिभिः परिगीतानि तानि वक्ष्यामि भूतये ।। १९

யானி நாமானி கௌ3ணானி விக்2யாதானி மஹாத்மன:।
ரிஷிபி:4 பரிகீ3தானி தானி வக்ஷ்யாமி பூ4தயே ।। 19

மஹாத்மாவான பகவானுடைய குணங்களை ஒட்டி பிரஸித்தமானவைகளும், மந்திரங்களாலும், மந்திரங்களைக் கண்டறிந்த ரிஷிகளாலும், நன்கு சொல்லப்பட்டவைகளுமான பகவானுடைய யாதொரு ஆயிரம் நாமாக்கள் உண்டோ, அவற்றை நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்காகச் சொல்லப் போகிறேன்.

ऋषिर्नाम्नां सहस्रस्य वेदव्यासो महामुनिः ।
छन्दोनुष्टुप् तथा देवो भगवान् देवकीसुतः ।। २०
अमृतांशूद्भवो बीजं शक्तिर्देवकि नन्दनः ।
त्रिसामा हृदयं तस्य शान्त्यर्थे विनियुज्यते ।। २१

ரிஷிர் நாம்நாம் ஸஹஸ்ரஸ்ய
வேத3வ்யாஸோ மஹா முனி: ।
ச2ந்தோனுஷ்டு2ப் ததா2 தே3வோ
ப4க3வான் தே3வகீ ஸுத: ।। 20
அம்ருதாம்ஶூத்3ப4வோ பீ3ஜம் ஶக்திர்தே3வகி நந்த3ன:।
த்ரிஸாமா ஹ்ருத3யம் தஸ்ய
ஶாந்த்யர்த்தே2 வினியுஜ்யதே ।। 21

பகவானின் இந்த ஆயிரம் நாமாக்களுக்கும், வேதவ்யாஸ முனிவர் ரிஷியாவார். (அதாவது மந்திரத்தைக் கண்டறிந்தவர்) அநுஷ்டுப் ச2ந்த3ஸ், அப்படியே தேவகீ புத்ரரான ஸ்ரீ பகவான்

தேவதை, அம்ருதாம்சூத்³ப⁴வ: (अमृतांशूद्भवः) என்பது பீ³ஜம். தே³வகீ நந்த³ன: (देवकी नन्दनः) என்பது ஹ்ருதயம். சாந்தியின் பொருட்டு இது ஜபிக்கப்படுகிறது.

विष्णुं जिष्णुं महाविष्णुं प्रभविष्णुं महेश्वरम्।
अनेक रूप दैत्यान्तं नमामि पुरुषोत्तमम् ।। २२

விஷ்ணும் ஜிஷ்ணும் மஹாவிஷ்ணும்
ப்ரப⁴ விஷ்ணும் மஹேஶ்வரம் ।
அனேக ரூப தை³த்யாந்தம் நமாமி புருஷோத்தமம் ।।22

எங்கும் வ்யாபித்தவரும், ஜயசீலரும், ஸர்வ ஶக்தரும் (सर्वशक्तः), மஹாவிஷ்ணுவும், மஹேச்வரரும், பல ரூபங்களை உடையவரும், அஸுரர்களுக்கு எமனுமான புருஷோத்த- மனை நமஸ்கரிக்கிறேன்.

अस्य श्री विष्णोर्दिव्य सहस्त्र नाम स्तोत्र महामन्त्रस्य श्री वेदव्यासो भगवान् ऋषिः। अनुष्टुप् छन्दः। श्री महाविष्णुः परमात्मा श्रीमन्नारायणो देवता। अमृतांशूद्भवो भानुरिति बीजम् । देवकीनन्दनः स्त्रष्टेति शक्तिः। उद्भवः क्षोभणो देव इति परमो मन्त्रः। शङ्खभृन्नन्दकी चक्रीति कीलकम्। शार्ङ्गधन्वा गदाधर इत्यस्त्रम्। रथाङ्गपाणि रक्षोभ्य इति नेत्रम्।। त्रिसामा सामगः सामेति कवचम्। आनन्दं परब्रह्मेति योनिः। ऋतुः सुदर्शनः काल इति दिग्बन्धः। श्री विश्वरूप इति ध्यानम् । श्री महाविष्णु प्रीत्यर्थे सहस्त्र नाम जपे विनियोगः ।।

அஸ்ய ஸ்ரீ விஷ்ணோர் தி³வ்ய ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய ஸ்ரீ வேத³வ்யாஸோ ப⁴க³வான் ரிஷி: । அநுஷ்டு²ப் ச²ந்த³: । ஸ்ரீ மஹாவிஷ்ணு: பரமாத்மா ஸ்ரீமன் நாராயணோ தே³வதா । அம்ருதாம்ஶூத்³ப⁴வோ பா⁴னுரிதி பீ³ஜம் । தே³வகீ நந்த³ன: ஸ்ரஷ்டேதி ஶக்தி:।

உத்3ப4வ: க்ஷோபணோ தே3வ இதி பரமோ மந்த்ர: । ஶங்க2 ப்4ருன் நந்த3கீ சக்ரீதி கீலகம் । ஶார்ங்க3 த4ன்வா க3தா3த4ர இத்யஸ்த்ரம் । ரதா2ங்க3பாணி ரக்ஷோப்4ய இதி நேத்ரம்।। த்ரிஸாமா ஸாமக:3 ஸாமேதி கவசம் । ஆனந்த3ம் பரப்3ரஹ்மேதி யோனி: । ரிது: ஸுத3ர்ஶன: கால இதி தி3க்3 ப3ந்த:4 । ஶ்ரீ விஶ்வரூப இதி த்4யானம் । ஶ்ரீ மஹாவிஷ்ணு ப்ரீத்யர்த்தே2 ஸஹஸ்ர நாம ஜபே விநியோக:3 ।।

।। ध्यानम् ।।

क्षीरोदन्वत्प्रदेशे शुचिमणि विलसत् सैकतैर्मौक्तिकानां
मालाक्लृप्तासनस्थः स्फटिक मणिनिभैः
मौक्तिकैर्मण्डिताङ्गः ।
शुभ्रैरभ्रैरदभ्रैः उपरि विरचितैः मुक्त पीयूषवर्षैः
आनन्दी नः पुनीयादरिनलिन गदा
शङ्खपाणिर्मुकुन्दः ।।२३

।। த்4யானம் ।।

க்ஷீரோத3ன்வத் ப்ரதே3ஶே ஶுசி1மணி விலஸத்
ஸைகதைர் மௌக்திகானாம்
மாலா க்லுப்தாஸனஸ்த்த:2 ஸ்ப2டிக மணி நிபை:4
மௌக்திகைர் மண்டி3தாங்க:3 ।
ஶுப்4ரைரப்4ரைரத3ப்4ரை: உபரி விரசிதை:
முக்த பீயூஷ வர்ஷை:
ஆனந்தீ3 ந: புநீயாத3ரிநலின க3தா3
ஶங்க2 பா1ணிர் முகுந்த:3 ।। 23

சுத்தமான மணிகளால் பிரகாசிக்கின்ற மணலுடன் கூடிய பால் கடலின் கரையில் முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட ஆஸனத்தில் அமர்ந்தவரும், ஸ்படிகமணிகள் போன்ற முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட அவயவங்களை உடையவரும், வெண்மை நிறம் உள்ளவையும், பலதரப்பட்டவையும், மேலே ஸஞ்ரிக்கின்றவையும், அம்ருதத் துளிகளை வர்ஷிக்கின்றவைகளுமான மேகங்களால்

ஆனந்தத்தை அடைந்தவரும், சக்ரம், தாமரை, க3தை3 (गदा), சங்கு இவைகளைக் கையில் உடையவருமான முகுந்தர் நம்மை பரிசுத்தமாக்க வேண்டும்.

भूः पादौ यस्य नाभिः वियदसुरनिलश्चन्द्र सूर्यौ च नेत्रे
कर्णावाशाशिशिरोद्यौः मुखमपिदहनो यस्य वास्तेयमग्निः।
अन्तस्स्थं यस्य विश्वं सुरनरखगगो भोगि गन्धर्व दैत्यैः
चित्रं रंरम्यतेतं त्रिभुवनवपुषं विष्णुमीशं नमामि।।२४

பூ:4 பாதௌ3 யஸ்ய நாபி:4 வியத்3ஸுரநிலஶ்
சந்த்3ர ஸூர்யௌ ச நேத்ரே
கர்ணாவாஶாஶ் ஶிரோத்3யௌ: முக2மபி த3ஹனோ
யஸ்ய வாஸ்தேயமக்3னி: ।
அந்தஸ்ஸ்த்த2ம் யஸ்ய விஶ்வம் ஸுரநரக2 க3கோ3
போ4கி3 க3ந்த4ர்வ தை3த்யை:
சித்ரம் ரம் ரம்யதே தம் த்ரிபு4வன வபுஷம்
விஷ்ணுமீஶம் நமாமி ।। 24

எவருக்கு பூமியானது கால்களோ, ஆகாசம் நாபியோ, காற்று பிராணனோ, சந்திர ஸூர்யர்கள் கண்களோ, திக்குகள் காதுகளோ, ஸ்வர்கம் ஶிரஸ்ஸோ, அக்னி வாக்கோ, எவருக்கு கடல் வஸ்திரமோ, எவருடைய உள்ளே இருக்கும் உலகமானது தேவர்கள், மனிதர்கள், பக்ஷிகள், பசுக்கள், பாம்புகள், கந்தர்வர்கள், அஸுரர்கள் இவர்களால் பலதரப்பட்டதாய் இருந்து கொண்டு மிகுந்த போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறதோ, அத்தகைய மூவுலகத்தையுமே சரீரமாக உடைய ஈசனான விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.

ப்ரணவ ரூபியும், பகவானுமான வாஸுதேவனை நமஸ்கரிக்கிறேன்.

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाकारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिहृद् ध्यान गम्यम्
वन्दे विष्णुं भव भयहरं सर्वलोकैक नाथम्।।२५

ஶாந்தாகாரம் பு4ஜக3 ஶயனம் பத்3மநாப4ம் ஸுரேஶம்
விஶ்வாகாரம் க3க3ன ஸத்3ருஶம்
மேக4 வர்ணம் ஶுபா4ங்க3ம் ।
லக்ஷ்மீகாந்தம் கமல நயனம்
யோகி3 ஹ்ருத்3 த்4யான க3ம்யம்
வந்தே3 விஷ்ணும் ப4வ ப4யஹரம்
ஸர்வ லோகைக நாத2ம் ।। 25

சாந்தமான உருவம் கொண்டவரும், ஆதிசேஷனை படுக்கையாகக் கொண்டவரும், நாபி1யில் (नाभि) தாமரையை உடையவரும், தேவர்களுக்கு ஈசனும், உலக வடிவமாக இருப்பவரும், ஆகாசத்தைப் போன்றவரும், மேகங்களின் நிறத்தை உடையவரும், அழகிய அங்கங்களை உடையவரும், மகாலக்ஷ்மிக்கு நாயகரும், தாமரை போன்ற கண்களை உடையவரும், யோகிகளின் ஹ்ருதயங்களில் த்யானத்தால் அறியத் தகுந்தவரும், ஸம்ஸார பயத்தைப் போக்குகின்றவரும், எல்லா உலகங்களுக்கும் நாதனுமான விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.

मेघश्यामं पीतकौशेय वासं
श्रीवत्साङ्कं कौस्तुभोद् भासिताङ्गम् ।
पुण्योपेतं पुण्डरीकायताक्षं
विष्णुं वन्दे सर्वलोकैक नाथम् ।। २६

மேக4ஶ்யாமம் பீ1த கௌஶேய வாஸம்
ஶ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபோ4த் பா4ஸிதாங்க3ம் ।
புண்யோபே1தம் புண்ட3ரீகாயதாக்ஷம்
விஷ்ணும் வந்தே3 ஸர்வ லோகைக நாத2ம் ।। 26

மேகம் போல் ச்யாமள வர்ணமானவரும், பீதாம்பரத்தை தரித்தவரும், ஶ்ரீவத்ஸம் என்ற மருவை உடையவரும், கௌ1ஸ்துப4ம் **(कौस्तुभम्)** என்ற மணியால் ப்ரகாசிக்கின்ற சரீரத்தை உடையவரும், புண்ய புருஷர்களால் சூழப்பட்டவரும், தாமரை போல் அகன்ற கண்களை உடையவரும், எல்லா உலகங்களுக்கும் நாயகருமான ஶ்ரீ மஹாவிஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

सशङ्ख चक्रं सकिरीट कुण्डलं
सपीत वस्त्रं सरसीरुहेक्षणम् ।
सहारवक्षस्थल शोभि कौस्तुभं
नमामि विष्णुं शिरसा चतुर्भुजम् ।।२७

ஸஶங்க2 சக்ரம் ஸகிரீட குண்ட3லம்
ஸபீ1த வஸ்த்ரம் ஸரஸீ ருஹேக்ஷணம் ।
ஸஹார வக்ஷஸ்த்த2ல ஶோபி4 கௌஸ்துப4ம்
நமாமி விஷ்ணும் ஶிரஸா சதுர்பு4ஜம் ।।27

சங்கு, சக்ரம் இவைகளோடு கூடியவரும், கிரீடம் குண்டலம் இவற்றை தரித்தவரும், பீதாம்பரத்தோடு கூடியவரும், தாமரை போன்ற கண்களை உடையவரும், முக்தா ஹாரத்தோடு கூடிய மார்பில் பிரகாசிக்கின்ற கௌ1ஸ்துப4 **(कौस्तुभम्)** மணியை உடையவரும், நான்கு கைகளை உடையவருமான ஸ்ரீமஹாவிஷ்ணுவை தலையால் வணங்குகிறேன்.

छायायां पारिजातस्य हेमसिम्हासनोपरि ।
आसीनमम्बुदश्यामं आयताक्षमलङ्कृतम् ।। २८
चन्द्राननं चतुर्बाहुं श्रीवत्साङ्कित वक्षसम् ।
रुक्मिणी सत्यभामाभ्यां सहितं कृष्णमाश्रये ।। २९

சா2யாயாம் பாரிஜாதஸ்ய ஹேம ஸிம்ஹாஸனோபரி ।
ஆஸீனமம்பு3த3ஶ்யாமம் ஆயதாக்ஷ மலங்க்ருதம் ।।28
சந்த்3ரானனம் சதுர்பா3ஹும் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம் ।
ருக்மிணீ ஸத்யபா4மாப்4யாம்
ஸஹிதம் க்ருஷ்ணமாஶ்ரயே ।। 29

பாரிஜாத விருக்ஷத்தின் நிழலில் தங்க ஸிம்மாஸனத்தின் மீது உட்கார்ந்தவரும், நீருண்ட மேகம் போல் கருநிறம் உள்ளவரும், அகன்ற கண்களை உடையவரும், அலங்கரிக்கப்பட்டவரும், சந்திரன் போன்ற முகத்தை உடையவரும், நான்கு கைகளை உடையவரும், ஸ்ரீவத்ஸமென்ற மருவால் அடையாளம் செய்யப்பட்ட மார்பை உடையவரும், ருக்மணி ஸத்யபாமா இவர்களுடன் கூடியவருமான ஸ்ரீ கிருஷ்ணரை ஆஶ்ரயிக்கிறேன்.

।। ओं विश्वस्मै नमः ।।

विश्वं विष्णुर्वषट्कारो भूतभव्य भवत्प्रभुः ।
भूतकृद्भूत भृद्भावो भूतात्मा भूतभावनः ।। ३०

।। ஓம் விஶ்வஸ்மை நம: ।।

விஶ்வம் விஷ்ணுர்வஷட்காரோ பூ^{4}தப^{4}வ்ய ப^{4}வத் ப்ரபு:^{4}।
பூ^{4}தக்ருத்^{3} பூ^{4}த ப்^{4}ருத்^{3} பா^{4}வோ
பூ^{4}தாத்மா பூ^{4}த பா^{4}வன: ।। 30

(1) விஶ்வம் **(विश्वम्)**-*உலக உருவாக இருப்பவர். (2) விஷ்ணு:* **(विष्णुः)** - *எங்கும் வியாபித்தவர். (3) வஷட்கார:* **(वषट्कारः)**-*யக்ஞத்தில் வஷட்காரம் முதலிய மந்திர ரூபமாக இருந்து தேவர்களை திருப்தி செய்துவைப்பவர். (4) பூ^{4}த ப^{4}வ்ய ப^{4}வத் ப்ரபு^{4}:* **(भूतभव्यभवत्प्रभुः)**- *சென்ற காலம், வருங்காலம், நிகழ்காலம், இம்மூன்றுக்கும் அதிபர். (5) பூ^{4}தக்ருத்* **(भूतकृत्)**-*ரஜோ குணத்தை அவலம்பித்து ப்ரம்மதேவன் உருவங்கொண்டு பூதங்களை ஸ்ருஷ்டிப்பவர். (6) பூ^{4}தப்^{4}ருத்* **(भूतभृत्)**-*ஸத்வ குணத்தை அவலம்பித்து பூதங்களை பரிபாலிப்பவர். (7) பா^{4}வ:* **(भावः)**-*எப்பொழுதும் இருப்பவர். (8) பூ^{4}தாத்மா* **(भूतात्मा)**-*ப்ராணிகளுக்கு அந்தர்யாமியாக இருப்பவர். (9) பூ^{4}தபா^{4}வன:* **(भूतभावनः)**-*ப்ராணிகளை விருத்^{3}தி^{4}* **(वृद्धि)** *பண்ணுகிறவர்.*

पूतात्मा परमात्मा च मुक्तानां परमागतिः ।
अव्ययः पुरुषः साक्षी क्षेत्रज्ञोऽक्षर एव च ।। ३१

பூ^{1}தாத்மா பரமாத்மா ச முக்தானாம் பரமாக^{3}தி: ।
அவ்யய: புருஷ: ஸாக்ஷீ க்ஷேத்ரஜ்ஞோऽக்ஷர ஏவ ச।।31

(10) பூ^{1}தாத்மா **(पूतात्मा)**-*பரிசுத்தமான ஸ்வரூபத்தை உடையவர். (11) பரமாத்மா* **(परमात्मा)**-*சிறந்த ஆத்மா. (12) முக்தானாம் பரமாக^{3}தி:* **(मुक्तानांपरमागतिः)**-*முக்தர்களுக்கு சிறந்த இடமானவர். (13) அவ்யய:* **(अव्ययः)**-*அழிவற்றவர். (14) புருஷ:* **(पुरुषः)**-*சரீரத்திலிருப்பவர். (15) ஸாக்ஷீ* **(साक्षी)**-*எப்பொழுதும் யாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பவர். (16) க்ஷேத்ரக்ஞ:* **(क्षेत्रज्ञः)**- *சரீரத்தை அறிபவர். (17) அக்ஷர:* **(अक्षरः)**-*அழிவற்றவர்.*

योगो योगविदां नेता प्रधान पुरुषेश्वरः ।
नारसिम्हवपुः श्रीमान् केशवः पुरुषोत्तमः ।। ३२

யோகோ[3] யோக[3]விதா[3]ம் நேதா ப்ரதா[4]ன புருஷேஶ்வர:।
நாரஸிம்ஹ வபு: ஶ்ரீமான் கேஶவ: புருஷோத்தம: ।। 32

(18) யோக[3]:**(योगः)**-ஜீவாத்மா, பரமாத்மா இவர்களை ஒன்றாக பா[4]விப்பதற்கு **(भावः)** உதவியான யோகமாக இருப்பவர். *(19)* யோக[3]விதா[3]ம் நேதா**(योगविदां नेता)**-யோகிகளின் யோகக்ஷேமங்களை நடத்துபவர். *(20)* ப்ரதா[4]ன புருஷேஶ்வர:**(प्रधानपुरुषेश्वरः)**- மாயைக்கும் ஜீவனுக்கும் ஈஶ்வரனாக இருப்பவர். *(21)* நாரஸிம்ஹ வபு:**(नारसिंहवपुः)**-நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டவர். *(22)* ஶ்ரீமான்**(श्रीमान्)**-மார்பில் மஹாலக்ஷ்மியை தரிக்கின்றவர். *(23)* கேசவ:**(केशवः)**-கேசி**(केशि)** என்ற அரக்கனைக் கொன்றவர். *(24)* புருஷோத்தம:**(पुरुषोत्तमः)**- புருஷர்களுக்குள் உத்தமர்.

सर्वः शर्वः शिवः स्थाणुः भूतादिर्निधिरव्ययः ।
सम्भवो भावनो भर्ता प्रभवः प्रभुरीश्वरः ।। ३३

ஸர்வ: ஶர்வ: ஶிவ: ஸ்தா[2]ணு: பூ[4]தாதி[3]ர் நிதி[4]ரவ்யய: ।
ஸம்ப[4]வோ பா[4]வனோ ப[4]ர்த்தா ப்ரப[4]வ: ப்ரபு[4]ரீஶ்வர:।।33

(25) ஸர்வ:**(सर्वः)** -எல்லாவற்றையும் உண்டு பண்ணு-கிறவராயும், எப்பொழுதும் எல்லாவற்றையும் அறிகின்ற-வராயும் இருப்பதால் எல்லாமாக இருப்பவர். *(26)* ஶர்வ:**(शर्वः)**-உலகங்களை அறிபவர். *(27)* ஶிவ: **(शिवः)**-சிவரூபியாக இருப்பவர். *(28)* ஸ்தா[2]ணு: **(स्थाणुः)**-நிலைத்திருப்பவர். *(29)* பூ[4]தாதி[3]:**(भूतादिः)**-ஸர்வ பூதங்களுக்கும் ஆதிகாரணமாக இருப்பவர். *(30)* நிதி[4]ரவ்யய:**(निधिरव्ययः)**-ப்ரளய காலத்தில் எல்லாவற்றிற்கும் இருப்பிடமானவர். இதனால் நிதி[4] **(निधिः)** எனப்படுவார். இந்நிதியும் அழிவற்றது. *(31)* ஸம்ப[4]வ: **(संभवः)**- தன் இச்சைப்படி ஸம்பவிக்கின்றவர் *(32)* பா[4]வன:**(भावनः)**-பலனை அனுபவிப்பவர். யாவருக்கும் பலனை கொடுப்பவர். *(33)* ப[4]ர்த்தா**(भर्ता)**-உலகத்துக்கு அதிஷ்டானமாக இருந்து தாங்குபவர். *(34)* ப்ரப[4]வ: **(प्रभवः)**-சிறந்த பிறப்பை உடையவர் (அதாவது ராமகிருஷ்ணாதிகளாய் அவதரிப்பவர்) *(35)* ப்ரபு[4]: **(प्रभुः)**-எல்லா காரியங்களையும் திறமையாக நடத்துபவர். *(36)* ஈஶ்வர: **(ईश्वरः)**-ஸ்வபாவமான ஐஶ்வர்யம் உள்ளவர்.

(குறிப்பு) நிதி³; அவ்யய: **(निधिरव्यय:)** *இந்த இரண்டு நாமாக்களும் ஒரே அர்ச்சனை.*

स्वयम्भू: शम्भुरादित्य: पुष्कराक्षो महास्वन: ।
अनादि निधनो धाता विधाता धातुरुत्तम: ।। ३४

ஸ்வயம்பூ⁴: ஶம்பு⁴ராதி³த்ய: புஷ்கராக்ஷோ மஹாஸ்வன:।
அநாதி³ நித⁴னோ தா⁴தா விதா⁴தா தா⁴துருத்தம: ।।34

*(37) ஸ்வயம்பூ⁴:***(स्वयंभू:)***-எல்லாவற்றிற்கும் மேலாக, தான் இருப்பவர். (38) ஶம்பு⁴:* **(शंभु:)***-பக்தர்களுக்கு ஸுகத்தைக் கொடுப்பவர். (39) ஆதி³த்ய:* **(आदित्य:)***-ஸூர்ய மண்டலத்தில் இருப்பவர். (40) புஷ்கராக்ஷ:* **(पुष्कराक्ष:)***-தாமரைக்கு ஒப்பான கண்கள் உள்ளவர். (41) மஹாஸ்வன:* **(महास्वन:)***-கம்பீரமான வேத சப்தத்தை உடையவர். (42) அனாதி³ நித⁴ன:* **(अनादिनिधन:)***-ஜனன மரணமற்றவர். (43) தா⁴தா* **(धाता)***-ஆதிஶேஷன் முதலிய ரூபத்தால் உலகத்தை தரிப்பவர். (44) விதா⁴தா* **(विधाता)***- காரியங்களையும் செய்வித்து பலன்களையும் அளிப்பவர். (45) தா⁴துருத்தம:* **(धातुरुत्तम:)***-அனந்த¹ன்* **(अनन्त:)** *முதலியோரையும் தரிப்பவர். (***धातुरुत्तम:*** என்று இந்த இரண்டு நாமாக்களும் ஒரே அர்ச்சனை).*

अप्रमेयो हृषीकेश: पद्मनाभोऽमरप्रभु: ।
विश्वकर्मा मनुस्त्वष्टा स्थविष्ठ: स्थविरो ध्रुव: ।।३५

அப்ரமேயோ ஹ்ருஷீகேஶ: பத்³மநாபோ⁴ऽமரப்ரபு:⁴ ।
விஶ்வகர்மா மனுஸ் த்வஷ்டா
ஸ்த²விஷ்ட:² ஸ்த²விரோ த்⁴ருவ: ।। 35

*(46) அப்ரமேய:***(अप्रमेय:)***- ப்ரமாணங்களால் அறியமுடியாதவர். (47) ஹ்ருஷீகேஶ:* **(हृषीकेश:)***-இந்திரியங்களுக்கு அதிபர். (48) பத்³மநாப⁴:***(पद्मनाभ:)***-ஜகத்தின் காரணமான தாமரையை நாபி⁴யில் உடையவர். (49) அமர ப்ரபு⁴:* **(अमरप्रभु:)***-தேவர்களுக்குத் தலைவர். (50) விஶ்வகர்மா***(विश्वकर्मा)***-விசித்திரமான ச்ருஷ்டி சக்தியை உடையவர். (51) மநு:* **(मनु:)***-மந்த்ரமாக இருப்பவர். (52) த்வஷ்ட்டா***(त्वष्टा)***-ப்ரளயத்தில் எல்லோரையும் அழிப்பவர். (53) ஸ்த்த²விஷ்ட்ட:* **(स्थविष्ठ:)***-மிகப்பருத்தவர். (54) ஸ்த²விரோத்⁴ருவ:* **(स्थविरोध्रुव:)***-வயது முதிர்ந்தும், நிலையாகவும் இருப்பவர். (இரண்டு நாமாக்களும் ஒரே அர்ச்சனை).*

अग्राह्यः शाश्वतः कृष्णो लोहिताक्षः प्रतर्दनः ।
प्रभूतस्त्रिककुब्धाम पवित्रं मङ्गलं परम् ॥ ३६

அக்[3]ராஹ்ய: ஶாஶ்வத: க்ருஷ்ணோ
லோஹிதாக்ஷ: ப்ரத[1]ர்த[3]ன: ।
ப்ரபூ[4]தஸ் த்ரிககுப்[3]தா[4]ம பவித்ரம் மங்க[3]ளம் பரம் ॥ 36

(55) அக்[3]ராஹ்ய:(**अग्राह्यः**)-இந்த்ரியங்களால் க்ரஹிக்க முடியாதவர். *(56) ஶாஸ்வத:*(**शाश्वतः**)-எப்பொழுதும் எல்லா காலத்திலும் இருப்பவர் *(57) க்ருஷ்ண:* (**कृष्णः**)-கறுத்த நிறமுடையவர். *(58) லோஹிதாக்ஷ:* (**लोहिताक्षः**)-சிவந்த கண்களை உடையவர். *(59) ப்ரதர்த[3]ன:*(**प्रतर्दनः**)-ப்ரளயகாலத்தில் ப்ராணிகளை அழிப்பவர். *(60) ப்ரபூ[4]த:*(**प्रभूतः**)-ஞானம் ஐஶ்வர்யம் முதலிய குணங்கள் நிரம்பியவர். *(61) த்ரிககுப்[3] தா[4]ம*(**त्रिककुब्धाम**)-மூவுலகங்களுக்கும் இருப்பிடமானவர். *(62) பவித்ரம்*(**पवित्रम्**)-எல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்தும் தேவதை. *(63) மங்க[3]ளம் பரம்*(**मङ्गलंपरम्**)- மங்களத்தைக் கொடுக்கும் ப்ரம்ஹம். (இந்த இரண்டு நாமாக்களும் சேர்ந்து ஒரே அர்ச்சனை).

ईशानः प्राणदः प्राणो ज्येष्ठः श्रेष्ठः प्रजापतिः ।
हिरण्यगर्भो भूगर्भो माधवो मधुसूदनः ॥ ३७

ஈஶான: ப்ராணத:[3] ப்ராணோ
ஜ்யேஷ்ட்ட:[2] ஶ்ரேஷ்ட்ட:[2] ப்ரஜாபதி: ।
ஹிரண்ய க[3]ர்போ[4] பூ[4]க[3]ர்போ[4]
மாத[4]வோ மது[4]ஸூத[3]ன: ॥ 37

(64) ஈஶான:(**ईशानः**)-எல்லா ப்ராணிகளையும் அடக்கி ஆள்பவர். *(65) ப்ராணத[3]:*(**प्राणादः**)-உயிரைக்கொடுப்பவர். *(66) ப்ராண:* (**प्राणः**)-உயிருக்கு உயிராக இருப்பவர். *(67) ஜ்யேஷ்ட்ட[2]:* (**ज्येष्ठः**)-எல்லோருக்கும் மூத்தவர். *(68) ஶ்ரேஷ்ட்ட[2]:*(**श्रेष्ठः**)-உலகில் சிறந்தவர். *(69) ப்ரஜாபதி:* (**प्रजापतिः**)-பிரஜைகளுக்குப் பதி. *(70) ஹிரண்யக[3]ர்ப[4]:* (**हिरण्यगर्भः**)- பிரம்மதேவனின் உருவமாக இருப்பவர். *(71) பூ[4]க[3]ர்ப[4]:*(**भूगर्भः**)-பூமியை தன் உள்ளே வைத்தவர். *(72) மாத[4]வ:*(**माधवः**)-மஹாலக்ஷ்மிக்கு பதி(**लक्ष्मीपति**). *(73) மது[4]ஸூத[3]ன:*(**मधुसूदनः**)-மது[4] என்னும் அஸுரனைக் கொன்றவர்.

ईश्वरो विक्रमी धन्वी मेधावी विक्रमः क्रमः।
अनुत्तमो दुराधर्षः कृतज्ञः कृतिरात्मवान् ।। ३८

ஈப்ஶவரோ விக்ரமீ த⁴ன்வீ மேதா⁴வீ விக்ரம: க்ரம: ।
அநுத்தமோ து³ராத⁴ர்ஷ: க்ருதஞ: க்ருதிராத்மவான்।।38

(74) ஈப்ஶவர:(ईश्वरः)-*ஸர்வ சக்தி வாய்ந்தவர். (75) விக்ரமீ*(विक्रमी)-*சூரர். (76) த⁴ன்வீ*(धन्वी)-*வில்லாளி. (77) மேதா⁴வீ*(मेधावी) -*புத்தியில் எல்லா சாஸ்திரங்களையும் தரிப்பவர். (78) விக்ரம:*(विक्रमः)-*கருடன் மீது ஏறிச் செல்லுபவர் வி*(वि)-*என்றால் பக்ஷி, க்ரம*(क्रम)-*என்றால் செல்லுவது) (79) க்ரம:*(क्रमः)-*நடப்பதற்குக் காரணமாயிருப்பவர். (80) அநுத்தம:*(अनुत्तमः)- *இணையற்றவர். (81) து³ராத⁴ர்ஷ:*(दुराधर्षः)-*அஸுரர் முதலியோரால் வெல்லமுடியாதவர். (82) க்ருதக்ஞ:*(कृतज्ञः)-*பக்தர் அன்புடன் கொடுக்கும் ப⁴த்⁴ரம்*(पत्रम्), *புஷ்பம் முதலிய சிறிய பொருள்களைப் பெற்று மோக்ஷத்தைக் கொடுப்பவர். (83) க்ருதி:*(कृतिः)- *செய்கையாக இருப்பவர். (84) ஆத்மவான்*(आत्मवान्)- *தன் மஹிமையில் நிலைத்திருப்பவர்.*

सुरेशः शरणं शर्म विश्वरेताः प्रजाभवः ।
अहः संवत्सरो व्यालः प्रत्ययः सर्वदर्शनः ।। ३९

ஸுரேஶ: ஶரணம் ஶர்ம விஶ்வரேதா: ப்ரஜாப⁴வ: ।
அஹ:ஸம்வத்ஸரோ வ்யால: ப்ரத்யய: ஸர்வத³ர்ஶன:।।39

(85) ஸுரேஶ:(सुरेशः)-*தேவர்களுக்கு ஈஶன். (86) ஶரணம்*(शरणम्)-*மனக்கவலையைத் தீர்ப்பவர். (87)ஶர்ம* (शर्म)-*பரமானந்த வடிவமாக இருப்பவர். (88) விஶ்வ ரேதா:*(विश्वरेताः)- *உலகிற்குக் காரணமாக இருப்பவர். (89) ப்ரஜாப⁴வ:*(प्रजाभवः)- *எல்லா ப்ரஜைகளையும் உண்டாக்குபவர். (90) அஹ:*(अहः)-*ப்ரகாச வடிவமானவர். (91) ஸம்வத்ஸர:*(संवत्सरः)- *காலரூபியாய் இருப்பதால் விஷ்ணுவே ஸம்வத்ஸரம். (92) வ்யாள:*(व्यालः)-*பெரிய பாம்பு போல் யாருக்கும் வசப்படாமல் ஸ்வதந்திரமாக இருப்பவர். (93) ப்ரத்யய:*(प्रत्ययः)-*ஞான ஸ்வரூபியாக இருப்பவர். (94) ஸர்வ த³ர்ஶன:*(सर्वदर्शनः)-*எல்லாவற்றையும் அறிகிறவர்.*

अजः सर्वेश्वरः सिद्धः सिद्धिः सर्वादिरच्युतः।
वृषाकपिरमेयात्मा सर्वयोग विनिःसृतः ।। ४०

அஜ: ஸர்வேஸ்வர: ஸித்[3]த:[4] ஸித்[3]தி:[4] ஸர்வாதி[3]ரச்யுத:।
வ்ருஷா கபிரமேயாத்மா ஸர்வயோக[3] வினி:ஸ்ருத:।।40

(95) அஜ: **(अजः)**-*பிறப்பற்றவர். (96) ஸர்வேஸ்வர:* **(सर्वेश्वरः)**-*பிரம்மாதி தேவர்களுக்கும் ஈச்வரர். (97) ஸித்[3]த[4]:* **(सिद्धः)**-*எப்பொழுதும் உள்ளவர். (98) ஸித்[3]தி[4]:* **(सिद्धिः)**-*பல(பயன்)ரூபமாக இருப்பவர். (99) ஸர்வாதி[3]:* **(सर्वादिः)**-*ஸர்வ பூதங்களுக்கும் ஆதிகாரணமானவர். (100) அச்[1]யுத:* **(अच्युतः)**-*தன் ஸ்வரூபத்தின் மஹிமையினின்றும் நழுவாதவர் (101) வ்ருஷாகபி:* **(वृषाकपिः)** *-தர்ம ஸ்வரூபியாயும், பூமியை ஜலத்தினின்று காத்த வராஹ மூர்த்தியாயும் இருப்பவர். (102) அமேயாத்மா* **(अमेयात्मा)**-*அளவிடமுடியாத ஸ்வரூபத்தை உடையவர். (103) ஸர்வ யோக[3] விநிஸ்ருத:* **(सर्वयोगविनिःसृतः)**-*எல்லாவித ஸம்பந்தமும் அற்றவர்.*

वसुर्वसुमनाः सत्यः समात्मा संमितः समः।
अमोघः पुण्डरीकाक्षो वृषकर्मा वृषाकृतिः ।। ४१

வஸுர் வஸுமனா: ஸத்ய: ஸமாத்மா ஸம்மித: ஸம:।
அமோக:[4] புண்ட[3]ரீகாக்ஷோ
வ்ருஷ கர்மா வ்ருஷாக்ருதி: ।। 41

(104) வஸு: **(वसुः)**-*ஸர்வ பூதங்களிடத்தும் வஸிப்பவர். (105) வஸுமனா:* **(वसुमनाः)**-*சிறந்த மனது படைத்தவர். (106) ஸத்ய:* **(सत्यः)**-*அழிவற்றவர். (107) ஸமாத்மா* **(समात्मा)**-*ராக த்வேஷமற்ற மனம் படைத்தவர். (108) ஸம்மித:* **(संमितः)**-*எல்லா பொருள்களாலும் (உபாதி பேதங்களாலும்) அளவிடப்பட்டவர். (109) ஸம:* **(समः)**-*'மா' என்ற மஹாலக்ஷ்மியோடு சேர்ந்திருப்பதால் ஸமன். (110) அமோக[4]:* **(अमोघः)**-*தன்னை பஜிக்கிறவர்களுக்கு நிச்சயம் பலனைக் கொடுப்பவர். (111) புண்ட[3]ரீகாக்ஷ:* **(पुण्डरीकाक्षः)**-*ஹ்ருதயத் தாமரையில் வ்யாபித்திருப்பவர். (112) வ்ருஷகர்மா* **(वृषकर्मा)**-*தர்மத்தைக் காக்கும் செய்கை உடையவர். (113) வ்ருஷாக்ருதி:* **(वृषाकृतिः)**-*தர்ம ரக்ஷணத்திற்காக அவதரிப்பவர்.*

रुद्रो बहुशिरा बभ्रुः विश्वयोनिः शुचिश्रवाः ।
अमृतः शाश्वतः स्थाणुः वरारोहो महातपाः ।।४२

ருத்^{3}ரோ பஹுஶிரா ப^{3}ப்^{4}ரு: விஶ்வயோனி: ஶுசிஶ்ரவா:।
அம்ருத: ஶாஶ்வத: ஸ்தா^{2}ணு:
வராரோஹோ மஹா தபா: ।। 42

(114) ருத்^{3}ர:(**रुद्रः**)*-துக்கத்தைத் போக்குபவர். (115) ப^{3}ஹுஶிரா:*(**बहुशिराः**)*-பல தலைகளை உடையவர். (116) ப^{3}ப்^{4}ரு:*(**बभ्रुः**)*-உலகத்தைத் தாங்குபவர். (117) விஶ்வயோனி:*(**विश्वयोनिः**)*-உலகத்துக்குக் காரணமாக இருப்பவர். (118) ஸுசி^{1}ஶ்ரவா:*(**शुचिश्रवाः**)*-பாவனமான நாமாக்களை உடையவர். (119) அம்ருத:*(**अमृतः**)*-மரணமற்றவர். (120) ஶாஶ்வத ஸ்தா^{2}ணு:* (**शाश्वत स्थाणुः**)*-என்றும் நிலைபெற்றிருப்பவர். (121) வராரோஹ:* (**वरारोहः**)*- தன்னை அடைந்தவர்களுக்கு மறுபிறப்பு இல்லாது செய்பவர். (122) மஹாதபா:* (**महातपाः**)*- ச்ருஷ்டி செய்வதில் தேர்ச்சி பெற்ற அறிவுள்ளவர்.*

सर्वगः सर्वविद्भानुः विष्वक्सेनो जनार्दनः ।
वेदो वेदविदव्यङ्गो वेदाङ्गो वेदवित् कविः ।।४३

ஸர்வக:^{3} ஸர்வவித்^{3}பா^{4}னு: விஷ்வக்ஸேனோ ஜநார்த^{3}ன:।
வேதோ^{3} வேத^{3}வித^{3}வ்யங்கோ^{3}
வேதா^{3}ங்கோ^{3} வேத^{3}வித் கவி:।। 43

(123) ஸர்வக^{3}: (**सर्वगः**)*- காரணமாக இருப்பதால் எங்கும் செல்லுபவர். (124) ஸர்வவித்^{3}பா^{4}னு:* (**सर्वविद्भानुः**)*-எல்லாவற்றையும் அறிந்தவராயும், பிரகாசிப்பவராயும் இருப்பவர். (125) விஷ்வக்ஸேன:* (**विष्वक्सेनः**)*- தனது யுத்த முயற்சியாலேயே அஸுர ஸைன்யத்தை ஓடச் செய்பவர். (126) ஜனார்த^{3}ன:* (**जनार्दनः**)*- துஷ்டர்களைத் துன்புறுத்துகிறவர். (127) வேத^{3}:* (**वेदः**)*- வேதரூபியாக இருப்பவர். (128) வேத^{3}வித்* (**वेदवित्**)*- வேதங்களையும், வேதப்பொருளையும் முறைப்படி அறிந்தவர். (129) அவ்யங்க^{3}:* (**अव्यङ्गः**) *-ஞானம், ஐஶ்வர்யம் இவை நிரம்பி இருப்பதால், குறைவற்றவர். (130) வேதா^{3}ங்க^{3}:* (**वेदाङ्गः**) *வேதங்களைத் தனது அங்கங்களாக உடையவர். (131) வேத^{3}வித்*(**वेदवित्**)*-வேத^{3}விசா^{1}ரம் செய்பவர். (132)க^{1}வி:* (**कविः**)*- எல்லாவற்றையும் கண்டறிந்தவர்.*

लोकाध्यक्षः सुराध्यक्षो धर्माध्यक्षः कृताकृतः ।
चतुरात्मा चतुर्व्यूहः चतुर्दंष्ट्रः चतुर्भुजः ।। ४४

லோகாத்^{4}யக்ஷ: ஸுராத்^{4}யக்ஷோ
த^{4}ர்மாத்^{4}யக்ஷ: க்ருதாக்ருத: ।
சதுராத்மா சதுர்வ்யூஹ: சதுர் த^{3}ம்ஷ்ட்ர: சதுர்பு^{4}ஜ:।। 44

(133) லோகாத்^{4}யக்ஷ: **(लोकाध्यक्षः)**-உலகங்களுக்குத் தலைவர். *(134) ஸுராத்^{4}யக்ஷ:* **(सुराध्यक्षः)**-திக்பாலகர் முதலிய தேவர்களுக்கு தலைவர். *(135) தர்மாத்யக்ஷ:* **(धर्माध्यक्षः)**-பலன்களைக் கொடுப்பதற்காக தர்மாதர்மங்களை நேரில் கண்டறிந்தவர். *(136) க்ருதாக்ருத:* **(कृताकृतः)**-காரியப்-பொருளாயும், காரணப்பொருளாயும் இருப்பவர். *(137) ச^{1}துராத்மா* **(चतुरात्मा)**-ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காலங்களில் நான்கு ரூபங்களாக இருப்பவர். அதாவது ஸ்ருஷ்டி காலத்தில் (1) பிரம்மா (2) தக்ஷர் (3)காலம் (4)பிராணிகள் ரூபமாயும்;. ஸ்திதி காலத்தில் (1) விஷ்ணு (2) மனு முதலானவர்கள் (3) காலம் (4) பிராணிகள் ரூபமாகவும்; ஸம்ஹார காலத்தில் (1) ருத்திரன் (2) காலம் (3) எமன் (4) பிராணிகள் ரூபமாயும் இருப்பவர் என்று விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. *(138) ச^{1}துர்வ்யூஹ:* **(चतुर्व्यूहः)**-வாஸுதேவ, ஸங்கர்ஷண, பிரத்^{3}யும்ன**(प्रद्युम्न)**, அநிருத்^{3}த^4 **(अनिरुद्ध)** என்கிற நான்கு வ்யூஹங்களை உடையவர். *(139) ச^{1}துர்த^{3}ம்ஷ்ட்ர:* **(चतुर्दंष्ट्रः)**-நான்கு தித்திப் பற்களுடன் அவதரித்த நரஸிம்ஹ ரூபியாக இருப்பவர். *(140) ச^{1}துர்பு^{4}ஜ:* **(चतुर्भुजः)**-நான்கு கைகளை உடையவர்.

भ्राजिष्णुर्भोजनं भोक्ता सहिष्णुः जगदादिजः ।
अनघो विजयो जेता विश्वयोनिः पुनर्वसुः ।।४५

ப்^{4}ராஜிஷ்ணுர் போ^{4}ஜனம் போ^{4}க்தா
ஸஹிஷ்ணு: ஜக^{3}தா^{3}தி^{3}ஜ: ।
அநகோ^{4} விஜயோ ஜேதா விஶ்வயோனி: புனர்வஸு:।।45

*(141) ப்^{4}ராஜிஷ்ணு:***(भ्राजिष्णुः)**- தேஜோ மயமாய் இருப்பவர். *(142) போ^{4}ஜனம்***(भोजनम्)**- அனுபவிக்கப்படும் மாயையாக இருப்பவர். *(143) போ^{4}க்தா***(भोक्ता)**-மாயையை அனுபவிக்கும் புருஷனாக இருப்பவர். *(144) ஸஹிஷ்ணு:***(सहिष्णुः)**-ஹிரண்யாக்ஷன் முதலிய அஸுரர்களை வென்றவர். *(145) ஜகதா^{3}தி^{3}ஜ:***(जगदादिजः)**- உலகம் உண்டாவதற்கு முன் ஹிரண்யக^{3}ர்ப^4 ரூபியாய் **(हिरण्यगर्भरूपिः)** தோன்றியவர். *(146) அனக^4:***(अनघः)** - பாபமற்றவர். *(147) விஜய:***(विजयः)**-ஞானம், வைராக்யம், ஐச்வர்யம், முதலிய குணங்களால் உலகை

வென்று விளங்குபவர். (148) ஜேதா(**जेता**)*-ஸ்வபாவத்தால் எல்லா உயிர்களுக்கும் மேலாக விளங்குபவர். (149) விஶ்வயோனி:*(**विश्वयोनिः**)*- உலகமாயும் அதன் காரணமாயும் இருப்பவர். (150) புனர்வஸு:*(**पुनर्वसुः**)*- திரும்பத் திரும்ப சரீரத்தில் க்ஷேத்ரக்ஞ ரூபனாக* (**क्षेत्रज्ञरूपः**) *வஸிப்பவர்.*

उपेन्द्रो वामनः प्रांशुः अमोघः शुचिरूर्जितः ।
अतीन्द्रः संग्रहः सर्गो धृतात्मा नियमो यमः ।। ४६

உபேந்த்3ரோ வாமன: ப்ராம்ஶு: அமோக:4 ஶுசிரூர்ஜித:।
அதீந்த்3ர: ஸங்க்3ரஹ: ஸர்கோ3
த்4ருதாத்மா நியமோ யம: ।। 46

(151) உபேந்த்3ர:(**उपेन्द्रः**)*-இந்திரனுக்குத் தம்பியாக ஆனவர். (152) வாமன:*(**वामनः**)*- வாமன மூர்த்தியாக மஹாபலி யாகத்துக்குச் சென்றவர். (153) ப்1ராம்ஶு:*(**प्रांशुः**)*- த்ரிவிக்ரமனாகத் தோன்றி விஶ்வரூப தரிசனம் கொடுத்தவர். (154) அமோக4:*(**अमोघः**)*- வீணாகாத செய்கையை உடையவர். (155) ஶுசி1:*(**शुचिः**)*- தன்னை பஜிப்பவர்களை பரிசுத்தமாக்குபவர். (156) ஊர்ஜித:*(**ऊर्जितः**)*-மிக்க பலம் வாய்ந்தவர். (157) அதீந்த்3ர:*(**अतीन्द्रः**)*- இயற்கையாக அமைந்த ஞானம், ஐஶ்வர்யம் முதலியவற்றால் இந்திரனுக்கு மேலாக இருப்பவர். (158) ஸங்க்3ரஹ:*(**संग्रहः**)*-பிரளய காலத்தில் எல்லோரையும் ஸம்ஹரிப்பவர்* (**भट्टभाष्यम्** *ப-பா) பக்தர்களால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படுகிறவர். (159) ஸர்க3:*(**सर्गः**)*-ஶ்ருஷ்டிக்குக் காரணமாக இருப்பவர். (160) த்4ருதாத்மா*(**धृतात्मा**)*- பிறப்பு, இறப்பு இல்லாததால் ஒரே மாதிரியாக இருப்பவர். (161) நியம:*(**नियमः**)*- அவரவர்களைத் தன்தன் வேலைகளில் ஏவுகிறவர். (162) யம:*(**यमः**)*- உள்ளே இருந்து அடக்குபவர்.*

वेद्यो वैद्यः सदायोगी वीरहा माधवो मधुः ।
अतीन्द्रियो महामायो महोत्साहो महाबलः ।। ४७

வேத்3யோ வைத்3ய: ஸதா3 யோகீ3
வீரஹா மாத4வோ மது:4 ।
அதீந்த்3ரியோ மஹா மாயோ
மஹோத்ஸாஹோ மஹாப3ல: ।। 47

(163) *வேத்^{3}ய:***(वेद्यः)**- மோக்ஷத்தைக் கோருபவர்களால் அறியத் தகுந்தவர். *(164)* *வைத்^{3}ய:***(वैद्यः)**- ஸர்வ வித்யைகளையும் அறிந்தவர். *(165)* ஸதா^{3}யோகீ^{3} **(सदायोगी)**- எப்பொழுதும் பிரகாசிக்கும் ஸ்வபாவம் உள்ளவர். *(166)* வீரஹா**(वीरहा)**-தர்ம ரக்ஷணத்திற்காக வீரர்களான அஸுரர்களைக் கொல்லுகிறவர். *(167)* மாத^{4}வ:**(माधवः)**- வித்யைக்குப் பதியாயிருப்பவர். *(168)* மது^{4}:**(मधुः)**- தேன் போல் இனிப்பை உண்டு பண்ணுபவர். *(169)* அதீந்த்^{3}ரிய:**(अतीन्द्रियः)**-இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். *(170)* மஹாமாய:**(महामायः)**- மாயாவிகளுக்கும் மாயாவி. *(171)* மஹோத்ஸாஹ: **(महोत्साहः)**-உலகத்தின் ஸ்ருஷ்டி முதலியவற்றில் மிக்க உத்ஸாஹம் உடையவர். *(172)* மஹாப^{3}ல: **(महाबलः)**- பலவான்களுக்கும் மேற்பட்ட பலவான்.

महाबुद्धीर्महावीर्यो महाशक्तिर्महाद्युतिः ।
अनिर्देश्यवपुः श्रीमान् अमेयात्मा महाद्रिधृक् ।।४८

மஹாபுத்^{3}தீ^{4}ர் மஹாவீர்யோ மஹாஶக்திர் மஹாத்^{3}யுதி:।
அநிர்தே^{3}ஶ்ய வபு: ஸ்ரீமான்
அமேயாத்மா மஹாத்^{3}ரி த்^{4}ருக்।। 48

(173) மஹாபு^{3}த்^{3}தி^{4}:**(महाबुद्धिः)**-புத்திமான்களுக்கும் மேற்பட்ட புத்திமான். *(174)* மஹாவீர்ய:**(महावीर्यः)**- உலகின் உற்பத்திக்குக் காரணமான அவித்யா ரூபமான வீர்யத்தை உடையவர். *(175)* மஹாஶக்தி:**(महाशक्तिः)**- சிறந்த ஸாமர்த்யத்தை உடையவர். *(176)* மஹாத்^{3}யுதி:**(महाद्युतिः)**- உள்ளும் புறமும் தேஜோமயமானவர். *(177)* அநிர்தேஶ்ய வபு:**(अनिर्देश्यवपुः)**- குறிப்பிட்டு எடுத்துரைக்க இயலாத சரீரத்தை உடையவர். *(178)* ஸ்ரீமான்**(श्रीमान्)**-மிகுந்த ஐஶ்வர்யம் உடையவர். *(179)* அமேயாத்மா**(अमेयात्मा)**- அளவிட முடியாத புத்தியை உடையவர். *(180)* மஹாத்^{3}ரித்^{3}ருக்**(महाद्रिधृक्)**- அம்ருதம் கடைந்து எடுத்த போதும் கோ(பசு) ரக்ஷண காலத்திலும், முறையே மந்த^{3}ர **(मन्दर)** மலையையும், கோ^{3}வர்த^{4}ன**(गोवर्धन)** மலையையும் தாங்கியவர்.

महेष्वासो महीभर्ता श्रीनिवासः सतां गतिः ।
अनिरुद्धः सुरानन्दो गोविन्दो गोविदां पतिः ।।४९

மஹேஷ்வாஸோ மஹீப[4]ர்த்தா ஸ்ரீனிவாஸ: ஸதாம் க[3]தி:।

அநிருத்[3]த:[4] ஸுரானந்தோ[3]
கோ[3]விந்தோ[3] கோ[3]விதாம் பதி: ।। 49

(181) மஹேஷ்வாஸ:(**महेष्वास:**)-*பெரிய வில்லை உடையவர். (182) மஹீப[4]ர்த்தா*(**महीभर्ता**)-*ப்ரளய காலத்தில் மூழ்கிய பூமியை தரித்தவர். (183) ஸ்ரீனிவாஸ:*(**श्रीनिवास:**)-*எப்பொழுதும் மார்பில் மஹாலக்ஷ்மியை தரிப்பவர் (184) ஸதாம் க[3]தி:*(**सतांगति:**)-*வேதத்தை நம்பிய ஸாதுக்களுக்குக் கதியாக இருப்பவர். (185) அநிருத்[3]த[4]:*(**अनिरुद्ध:**)-*எந்த அவதாரங்களிலும் எவராலும் தடுக்கப்படாதவர். (186) ஸுரானந்த[3]:*(**सुरानन्द:**)-*தேவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவர். (187) கோ[3]விந்த[3]:*(**गोविन्द:**)-*மறைந்த பூமியை எடுத்து வந்தவர். (188) கோ[3]விதா[3]ம்பதி:*(**गोविदांपति:**)-*வேதமறிந்தோருக்குப் பதியாக இருப்பவர்.*

मरीचिर्मदनो हंसः सुपर्णो भुजगोत्तमः ।
हिरण्यनाभः सुतपाः पद्मनाभः प्रजापतिः ।। ५०

மரீசிர்மத[3]னோ ஹம்ஸ: ஸுபர்ணோ பு[4]ஜகோ[3]த்தம:।
ஹிரண்யநாப:[4] ஸுதபா: பத்[3]மநாப:[4] ப்ரஜாபதி: ।। 50

(189) மரீசி[1]:(**मरीचि:**)-*தேஜஸ்விகளுக்கும் தேஜஸ்வியாக இருப்பவர். (190) த[3]மன:*(**दमन:**)-*எமன் முதலிய உருவங்கொண்டு குற்றவாளிகளை அடக்குபவர் (191) ஹம்ஸ:*(**हंस:**)-*அவனே நானென்று அபே[4]த புத்திவந்தவரின்* (**अभेदबुद्धि**) *ஸம்ஸார பயத்தைப் போக்குபவர் (192) ஸுபர்ண:* (**सुपर्ण:**)-*தர்மம், அதர்மம் என்னும் இரு அழகிய சிறகுகளை உடையவர். (193) பு[4]ஜகோ[3]த்தம:*(**भुजगोत्तम:**)-*ஸர்ப்பங்களுள் சிறந்தவர். (194) ஹிரண்ய நாப[4]:*(**हिरण्यनाभ:**)-*ஸ்வர்ணம்போல் அழகிய நாபி[4]யை* (**नाभि**) *உடையவர். (195) ஸுத[1]பா:*(**सुतपा:**)-*பத்ரிகாச்ரமத்தில் நர நாராயண ரூபியாக இருந்து தவம் செய்பவர். (196) பத்[3]மநாப[4]:*(**पद्मनाभ:**)-*தாமரை போல் அழகிய வட்டமான நாபி[4]யை*(**नाभि**) *உடையவர். (197) ப்ரஜாபதி:*(**प्रजापति:**)-*பிரஜைகளுக்குத் தந்தையானவர்.*

अमृत्युः सर्वदृक्सिंहः सन्धाता सन्धिमान्स्थिरः ।
अजो दुर्मर्षणः शास्ता विश्रुतात्मा सुरारिहा ।।५१

அம்ருத்யு: ஸர்வ த்[3]ருக் ஸிம்ஹ:
ஸந்தா[4]தா ஸந்தி[4]மான் ஸ்தி[2]ர: ।
அஜோ து[3]ர்மர்ஷண: ஶாஸ்தா
விஶ்ருதாத்மா ஸுராரிஹா ॥ 51

(198) அம்ருத்யு:(**अमृत्युः**)- *அழிவற்றவர். (199) ஸர்வத்[3]ருக்*(**सर्वदृक्**)- *எல்லா ப்ராணிகளின் செய்கைகளை இயற்கையான அறிவால் அறிந்து கொள்ளுபவர். (200) ஸிம்ஹ:* (**सिंहः**)-*ஹிம்சிப்பவர். (121) ஸந்தா[4]தா*(**सन्धाता**)- *கர்ம பலனைக் கொடுப்பவர். (ப-பா*(**भट्ट भाष्यम्**)*) ப்ரஹ்லாதன் முதலான பக்தர்களை தம்மிடம் சேர்ப்பித்துக் கொள்பவர். (202) ஸந்தி[4]மான்*(**सन्धिमान्**)- *அவரே பலனையும் அனுபவிப்பவர். (203) ஸ்த்தி[2]ர:*(**स्थिरः**)-*எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பவர். (204) அஜ:*(**अजः**) - *செல்லுகிறவர். (ப-பா* (**भट्ट भाष्यम्**)*) மற்றவர்களைப் போல் ஜனிக்காதவர்- தூணில் பிறந்தவர் என்பது கருத்து. (205) து[3]ர்மர்ஷண:*(**दुर्मर्षणः**)- *அஸுரர்களால் வெல்ல முடியாதவர் (206) ஶாஸ்தா*(**शास्ता**)- *வேதம், ஸ்மிருதி முதலியவைகளால் தர்மத்தை உபதேசிப்பவர். (207) விஶ்ருதாத்மா*(**विश्रुतात्मा**)- *வேதங்களில் ஸத்யம், ஞானம் என்ற லக்ஷணம் பொருந்தியவராக விசேஷித்துக் கூறப்பட்டவர். (208) ஸுராரிஹா*(**सुरारिहा**)- *தேவ சத்ருக்களான அஸுரர்களை கொல்லுகிறவர்.*

गुरुर्गुरुतमो धाम सत्यः सत्य पराक्रमः ।
निमिषोऽनिमिषः स्त्रग्वी वाचस्पतिरुदारधीः ॥५२

கு[3]ருர் கு[3]ருதமோ தா[4]ம ஸத்ய: ஸத்ய பராக்ரம: ।
நிமிஷோऽநிமிஷ: ஸ்ரக்[3]வீ வாசஸ்பதிருதா[3]ரதீ:[4] ॥ 52

(209) கு[3]ரு:(**गुरुः**)- எல்லா வித்யைகளையும் உபதேசிப்பவர். *(210) கு[3]ருத[1]ம:* (**गुरुतमः**)- ப்ரம்ஹா முதலியோருக்கும் ப்ரம்ஹ வித்யையை உபதேசித்தவர். *(211) தா[4]ம* (**धाम**)- ஜ்யோதி ஸ்வரூபியாக இருப்பவர். *(212) ஸத்ய:*(**सत्यः**)- ஸத்ய வசன தர்ம ரூபியாக இருப்பவர். *(213) ஸத்ய பராக்ரம:*(**सत्यपराक्रमः**)- ஸத்யமான பராக்ரமத்தை உடையவர். *(214) நிமிஷ:* (**निमिषः**)- யோக நித்திரையினால் கண்களை மூடிக்கொண்டிருப்பவர். *(215) அநிமிஷ:* (**अनिमिषः**)- இமை கொட்டுதல் இல்லாத மத்ஸ்யமாய் (மீனாக) அவதரித்தவர். *(216) ஸ்ரக்[3]வீ* (**स्त्रग्वी**)- பஞ்ச பூதங்களின் தன்மாத்ரை வடிவமான வைஜயந்தீ

என்னும் மாலையை தரித்தவர். (217) வாச[1]ஸ்பதிருதா[3]ரதீ[4]: **(वाचस्पतिरुदारधी:)**- *வித்யைக்குப் பதி - எல்லாப்பொருள்களையும் அறிந்தவர் (இந்த இரண்டு நாமாக்களும் ஒரே அர்ச்சனை).*

अग्रणीर्ग्रामणीः श्रीमान् न्यायो नेता समीरणः।
सहस्रमूर्धा विश्वात्मा सहस्राक्षः सहस्रपात् ।। ५३

அக்[3]ரணீர்க்[3]ராமணீ: ஸ்ரீமான் ந்யாயோ நேதா ஸமீரண:।
ஸஹஸ்ர மூர்தா[4] விஸ்வாத்மா
ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ।। 53

*(218) அக்[3]ரணீ:***(अग्रणी:)**- *மோக்ஷத்தை விரும்புவோர்களுக்கு சிறந்த ஸ்தானத்தை அளிப்பவர். (219) க்[3]ராமணீ:***(ग्रामणी:)**- *ப்ராணி ஸமூஹத்தை நடத்திச் செல்பவர். (220) ஸ்ரீமான்***(श्रीमान्)**- *சிறந்த காந்தியை* **(कान्ति)** *உடையவர். (221) ந்யாய:***(न्याय:)**- *ப்ரமாணங்களுக்கு அநுகூலமாக இருக்கும் அபே[4]தத்தை* **(अभेदम्)** *நிலை நிறுத்தும் யுக்தியாய் இருப்பவர். (222) நேதா***(नेता)**-*உலகமாகிற இயந்திரத்தை ஓட்டுகிறவர். (223) ஸமீரண:***(समीरण:)**-*மூச்சுக்காற்று ரூபமாக ப்ராணிகளை சேஷ்டிக்கச் (இயங்கச்) செய்கிறவர். (224) ஸஹஸ்ர மூர்தா[4]* **(सहस्रमूर्धा)**-*ஆயிரம் தலைகளை உடையவர். (225) விஸ்வாத்மா***(विश्वात्मा)**- *எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர். (226) ஸஹஸ்ராக்ஷ:***(सहस्राक्ष:)**-*ஆயிரம் கண்களை உடையவர். (227) ஸஹஸ்ரபா[1]த்***(सहस्रपात्)**- *ஆயிரம் கால்களை உடையவர்.*

आवर्तनो निवृत्तात्मा संवृतः संप्रमर्दनः ।
अहः संवर्तको वह्निरनिलो धरणीधरः ।। ५४

ஆவர்த்தனோ நிவ்ருத்தாத்மா ஸம்வ்ருத: ஸம்ப்ரமர்த[3]ன:।
அஹ: ஸம்வர்த்தகோ வன்ஹிரனிலோ த[4]ரணீத[4]ர: ।। 54

*(228) ஆவர்த்தன:***(आवर्तन:)**- *ஸம்ஸாரமாகிற சக்கிரத்தை சுழலச் செய்கிறவர். (229) நிவ்ருத்தாத்மா***(निवृत्तात्मा)**- *ஸம்ஸார பந்தமற்ற* **(बन्धम्)** *ஸ்வரூபம் உடையவர். (230) ஸம்வ்ருத:***(संवृत:)**- *அவித்யையால் மூடப்பட்டிருப்பவர் (231) ஸம்ப்ரமர்த[3]ன:***(संप्रमर्दन:)**- *ருத்ரன், காலன் முதலிய விபூதிகளால் ஸம்ஹரிக்கிறவர். (232) அஹஸ்ஸம்வர்த்தக:***(अहःसंवर्तक:)**-*பகலை நடத்தும்*

ஸூர்யனாக இருப்பவர் (233) வன்ஹி:(वह्निः)- ஹோமம் செய்யும் ஹவிஸ்ஸை தாங்குபவர். (234) அநில: (अनिलः)- நிச்சயமான வாஸ ஸ்தலமற்றவர். (235) த⁴ரணீத⁴ர:(धरणीधरः)- ஆதிசேஷன், திக்கஜங்கள் முதலிய ரூபமாகவும், வராஹ ரூபமாகவும் பூமியை தரிப்பவர்.

सुप्रसादः प्रसन्नात्मा विश्वधृग्विश्वभुग्विभुः ।
सत्कर्ता सत्कृतः साधुः जन्हुर्नारायणो नरः ।। ५५

ஸுப்ரஸாத:³ ப்ரஸன்னாத்மா
விஶ்வ த்⁴ருக்³ விஶ்வபு⁴க்³ விபு:⁴ ।
ஸத்கர்த்தா ஸத்க்ருத: ஸாது⁴:
ஜன்ஹுர் நாராயணோ நர: ।। 55

(236) ஸுப்ரஸாத³:(सुप्रसादः)-ஶிஶுபாலன் முதலிய அபசாரம் செய்தவர்களுக்கும் ப்ரஸாதம் செய்து மோக்ஷம் கொடுத்தவர். (237) ப்ரஸன்னாத்மா(प्रसन्नात्मा)- கருணையால் நனைந்திருப்பதால் தெளிந்த மனம் உடையவர். (238) விஶ்வத்⁴ருக்(विश्वधृक्)- உலகத்தை தரிப்பவர் (239) விஶ்வபு⁴க் (विश्वभुक्)- உலகைக் காப்பவர் (240) விபு:(विभुः)- பிரம்மன் முதலியோராக இருப்பவர் (241) ஸத்கர்த்தா(सत्कर्ता) - பெருமைப்படுத்துகிறவர். (242) ஸத்க்ருத:(सत्कृतः)- மிகச்சிறந்தவர்களாலும் பூஜிக்கப்பட்டவர் (243) ஸாது⁴:(साधुः)- ஸர்வ கார்யங்களையும் ஸாதித்துக் கொடுப்பவர் (244) ஜன்ஹு:(जन्हुः)- பக்தர்களை மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லுபவர் (245) நாராண:(नारायणः)- தன்னிடமிருந்து உண்டான கார்யங்களான ஆகாசம் முதலியவற்றில் காரண ரூபமாக வ்யாபித்திருப்பவர் (246) நர:(नरः)- அழைத்துச் செல்லுகிறவர்.

असंख्येयोऽप्रमेयात्मा विशिष्टः शिष्टकृच्छुचिः ।
सिद्धार्थः सिद्धसंकल्पः सिद्धिदः सिद्धिसाधनः ।।५६

அஸங்க்²யேயோऽப்ரமேயாத்மா
விஶிஷ்ட:² ஶிஷ்டக்ருச்சு²சி: ।
ஸித்³தா⁴ர்த:² ஸித்³த⁴ ஸங்க¹ல்ப:
ஸித்³தி⁴த:³ ஸித்³தி⁴ ஸாத⁴ன: ।। 56

(247) அஸம்க்[2]யேய:(असंख्येय:)-கணக்கிடக்கூடாத நாம ரூப பே[4]த[3]ம் (भेदम्) அற்றவர் (248) அப்ரமேயாத்மா(अप्रमेयात्मा)- அளவிட முடியாத ஸ்வரூபத்தை உடையவர் (249) விஶிஷ்ட[2]:(विशिष्ट:)- யாவற்றிற்கும் மேற்பட்டவர் (250) ஶிஷ்டக்ருத் (शिष्टकृत्)- ஆசாரத்துடன் இருப்பவர்களைக் காப்பவர் (251) ஶுசி[1]:(शुचि:)- தோஷமற்றவர் (252) ஸித்[3]தா[4]ர்த்த[2]:(सिद्धार्थ:)- வேண்டப்பட்ட பொருள்கள் யாவும் உள்ளவர் (253) ஸித்[3]த[4] ஸங்கல்ப: (सिद्धसङ्कल्प:)- நினைத்ததைப் பூர்த்தி செய்து கொண்டவர் (254) ஸித்[3]தி[4]த[3]:(सिद्धिद:)- கர்ம பலனைக் கொடுப்பவர் (255) ஸித்[3]தி[4] ஸாத[4]ன:(सिद्धिसाधन:)- கார்யத்தைச் சாதித்துக் கொடுப்பவர்.

वृषाही वृषभो विष्णुः वृषपर्वा वृषोदरः ।
वर्धनो वर्धमानश्च विविक्तः श्रुतिसागरः ।। ५७

வ்ருஷாஹீ வ்ருஷபோ[4] விஷ்ணு:
வ்ருஷ பர்வா வ்ருஷோத[3]ர: ।
வர்த[4]னோ வர்த[4]மானஶ்ச விவிக்த: ஶ்ருதி ஸாக[3]ர: ।। 57

(256) வ்ருஷாஹீ(वृषाही)-புண்யமான (பன்னிரண்டு ஸுத்யாஹஸ்ஸுள்ள(सुत्याहस्)) த்[3]வாத[3]ஶாஹம்(द्वादशाहम्) என்ற யக்ஞத்தை உடையவர் (ப-பா.भट्ट भाष्यम्) பகவானை பஜிக்க ஆரம்பிக்கும் நாளே புண்யமான நாள். (257) வ்ருஷப[4]: (वृषभ:)- பக்தர்களுக்கு கோரிய பொருளை வர்ஷிப்பவர் (258) விஷ்ணு: (विष्णु:)- உலகத்தை அளந்தவர் (259) வ்ருஷபர்வா(वृषपर्वा)- மோக்ஷத்துக்குப் போகிறவர்களுக்குப் படிக்கட்டாக இருப்பவர் (260) வ்ருஷோத[3]ர: (वृषोदर:)- ப்ரஜைகளை வர்ஷிப்பது போன்ற வயிற்றை உடையவர் (அதாவது ப்ரஜைகளை உண்டு பண்ணும் வயிற்றை உடையவர்) (261) வர்த[4]ன: (वर्धन:)-வ்ருத்[3]தி[4](वृद्धि) செய்பவர் (262) வர்த[4]மான: (वर्धमान:)- உலகரூபமாக வ்ருத்தி அடைகிறவர் (263) விவிக்த: (विविक्त:)- உலக ஸம்பந்தமற்று தனித்திருப்பவர் (264) ஶ்ருதி ஸாக[3]ர: (श्रुतिसागर:)- வேதங்களுக்கு ஸமுத்திரம் போல் இருப்பிடமானவர்.

सुभुजो दुर्धरो वाग्मी महेन्द्रो वसुदो वसुः ।
नैकरूपो बृहद्रूपः शिपिविष्टः प्रकाशनः ।। ५८

ஸுபு⁴ஜோ து³ர்த⁴ரோ வாக்³மீ
மஹேந்த்³ரோ வஸுதோ³ வஸு: ।
நைகரூபோ ப்³ருஹத்³ரூப: ஶிபிவிஷ்ட: ப்ரகாஶன:।।58

(265) ஸுபு¹ஜ:(**सुभुजः**)- உலகத்தைக் காக்கும் அழகிய கைகளை உடையவர் (266) து³ர்த⁴ர:(**दुर्धरः**)- த்யான காலத்தில் மிகுந்த சிரமத்துடன் யோகிகளால் ஹ்ருதயத்தில் பார்க்கப்படுகிறவர் (267) வாக்³மீ (**वाग्मी**)- வேத மயமான சொல்லை உடையவர் (268) மஹேந்த்³ர: (**महेन्द्रः**)- இந்திராதிகளுக்கும் இந்திரனாக இருப்பவர் (269) வஸுத³:(**वसुदः**)- செல்வத்தைக் கொடுப்பவர் (270) வஸு:(**वसुः**)-கொடுக்கப்படும் அந்தப் பொருளாயும் இருப்பவர் (271) நைக ரூப:(**नैकरूपः**)- பல ரூபங்களை உடையவர் (272) ப்³ருஹத் ரூப:(**बृहद्रूपः**)-பெரியதான வராஹம் முதலியவற்றின் உருவமுள்ளவர் (273) ஶிபிவிஷ்ட:(**शिपिविष्टः**)- யாகங்களில் உபயோகிக்கப்படும் பசுக்களிடத்தில் யக்ஞ ரூபியாக இருப்பவர் (274) ப்ரகாஶன:(**प्रकाशनः**)- எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்கிறவர்.

ओजस्तेजो द्युतिकरः प्रकाशात्मा प्रतापनः ।
ऋद्धः स्पष्टाक्षरो मन्त्रश्चन्द्रांशुः भास्करद्युतिः।।५९

ஓஜஸ்தேஜோ த்³யுதிகர: ப்ரகாஶாத்மா ப்ரதாபன: ।
ரித்³த:⁴ ஸ்பஷ்டாக்ஷரோ மந்த்¹ரஶ்
சந்த்³ராம்ஶு: பா⁴ஸ்கர த்³யுதி:।। 59

(275) ஓஜஸ்தேஜோ த்³யுதித⁴ர:(**ओजस्तेजोद्युतिधरः**)-ப்ராணபலம், வீர்யம் முதலிய குணங்கள், காந்தி(**कान्ति**), இவற்றை தரிப்பவர் (276) ப்ரகாஶாத்மா(**प्रकाशात्मा**)-ப்ரகாச ஸ்வரூபமான ஆத்மாவை உடையவர் (277) ப்ரதாபன:(**प्रतापनः**)- ஸூர்யன் முதலான தனது விபூ⁴தி(**विभूति**)களால் உலகத்தை தபிக்கச் செய்பவர் (278) ருத்த:(**ऋद्धः**)-தர்மம், ஞானம், வைராக்யம் முதலியவை நிரம்பியவர் (279) ஸ்பஷ்டாக்ஷர:(**स्पष्टाक्षरः**)- ஓங்காரத்தால் வெளியிடப்படும் மஹிமையை உடையவர் (280) மந்த்ர:(**मन्त्रः**)- வேதமந்த்ர ஸ்வரூபியாய் இருப்பவர் (281) சந்த்³ராம்ஶு:(**चन्द्रांशुः**)- ஸம்ஸார தாபத்தை அடைந்தவர்களுக்கு சந்திர கிரணம் போல் குளிர்ச்சியைத் தருபவர் (282) பா⁴ஸ்கர த்³யுதி: (**भास्करद्युतिः**)- ஸூர்யனின் காந்தி (**कान्ति**) போன்ற காந்தியை (**कान्ति**) உடையவர் (**श्रीभट्टभाष्यम्** ப-பா) ஸூர்யனைக் கண்ட இருள்போல் சத்ருக்களை விரட்டியடிக்கும் மஹிமையை உடையவர்.

अमृतांशूद्भवो भानुः शशबिन्दुः सुरेश्वरः ।
औषधं जगतःसेतुः सत्य धर्म पराक्रमः ।। ६०

அம்ருதாம்ஶூத்[3]ப[4]வோ பா[4]நு: ஶஶபி[3]ந்து:[3]ஸுரேஶ்வர:।
ஔஷத[4]ம் ஜகத:ஸேது: ஸத்ய த[4]ர்ம பராக்ரம: ।। 60

(283) அம்ருதாம்ஶூத்[3]ப[4]வ:(**अमृतांशूद्भवः**)- *பாற்கடலைக் கடைந்து சந்திரனை உண்டு பண்ணியவர் (284) பா[4]னு:*(**भानुः**)- *ஒளி வடிவமாக இருப்பவர் (285) ஶஶ பி[3]ந்து[3]:*(**शशबिन்दुः**)- *சந்திரனைப் போல் ப்ரஜைகளை போஷிப்பவர்.* **पुष्णामि चौषधीस्सर्वाः सोमो भूत्वा रसात्मकः** ''புஷ்ணாமி சௌஷதீ[4]ஸ்ஸர்வா: ஸோமோ பூ[4]த்வா ரஸாத்மக:'' என்று கீதை *(286) ஸுரேச்வர:*(**सुरेश्वरः**)- *நல்ல பயன்களைக் கொடுக்கும் தேவர்களுக்கும் ஈஶ்வரன் (287) ஔஷத[4]ம்* (**औषधम्**)- *ஸம்ஸார ரோகத்திற்கு மருந்தாக இருப்பவர் (288) ஜக[3]தஸ் ஸேது:*(**जगतः सेतुः**)-*உலகங்களிலுள்ள வர்ணாஶ்ரம தர்மங்களுக்கு அணையாக இருப்பவர் (289) ஸத்ய த[4]ர்ம பராக்ரம:*(**सत्यधर्म पराक्रमः**)- *ஸத்யமான ஞானம் முதலிய தர்மங்கள், பராக்ரமம் இவற்றை உடையவர்.*

भूतभव्य भवन्नाथः पवनः पावनोऽनलः ।
कामहा कामकृत्कान्तः कामः कामप्रदः प्रभुः ।।६१

பூ[4]தப[4]வ்ய ப[4]வன் நாத:[2] ப[1]வன: பா[1]வனோऽநல: ।
காமஹா காமக்ருத் காந்த: காம: காமப்ரத:[3] ப்ரபு:[4]।। 61

(290) பூ[4]த ப[4]வ்ய ப[4]வந்நாத[2]: (**भूतभव्यभवन्नाथः**)- *முக்காலத்திலுள்ள பிராணிகளுக்கும் ரக்ஷகனாக இருப்பவர் (291) ப[1]வன:* (**पवनः**)- *பரிசுத்தப்படுத்துகிறவர் (292) பா[1]வன:*(**पावनः**)-*காற்றை வீசச் செய்கிறவர். (293) அநல:*(**अनलः**)-*ப்ராணன்களை ஜீவ ரூபியாக இருந்து க்ரஹித்துக் காப்பவர்* (**श्रीभट्टभाष्यम्** *ப-பா) பக்தர்களுக்கு கொடுத்தது போதாது மேலும் மேலும் கொடுக்க வேண்டும் என நினைப்பவர் (294) காமஹா*(**कामहा**)- *மோக்ஷத்தை விரும்பும் பக்தர்கள், ஹிம்ஸையைச் செய்யும் துஷ்டர்கள் இவர்களின் காமத்தைப் போக்குபவர் (295) காமக்ருத்*(**कामकृत्**)- *ஸத்வ குணமுள்ளோரின் அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்பவர் (296) காந்த:*(**कान्तः**)- *மிக அழகு வாய்ந்தவர் (297) காம:*(**कामः**)- *நான்கு*

புருஷார்த்தங்களையும் வேண்டுபவர்களால் விரும்பப்படுகிறவர் (298) காமப்ரத³: (कामप्रदः)- பக்தர்களுக்கு அபீஷ்டங்களை நன்கு கொடுப்பவர் (299) ப்ரபு⁴:(प्रभुः)- சிறப்புடன் இருப்பவர்.

युगादिकृद्युगावर्तो नैकमायो महाशनः ।
अदृश्यो व्यक्तरूपश्च सहस्रजिदनन्तजित् ।। ६२

யுகா³தி³க்ருத்³ யுகா³வர்த்தோ நைகமாயோ மஹாஶன: ।
அத்³ருஶ்யோ வ்யக்த ரூபஶ்ச ஸஹஸ்ரசித³னந்தஜித் ।। 62

(300) யுகா³தி³ க்ருத்(युगादिकृत्)- யுகங்களை ஆரம்பித்தவர் (301) யுகா³வர்த்த:(युगावर्तः)-க்ருதயுகம் முதலிய யுகங்களை திரும்பத் திரும்ப வரச் செய்பவர் (302) நைக¹மாய:(नैकमायः)- பலவித மாயைகளை உடையவர் (303) மஹாஶன:(महाशनः)- ப்ரளயகத்தில் எல்லாவற்றையும் சாப்பிடுகிறவர் (304) அத்³ருஶ்ய:(अदृश्यः)- புத்தி, இந்திரியங்கள் இவற்றால் அறியமுடியாதவர் (305) வ்யக்த ரூப:(व्यक्तरूपः)- யோகிகளால் தெளிவாகப் பார்க்கப்படும் ஸ்வரூபத்தை உடையவர் (306) ஸஹஸ்ர ஜித்(सहस्रजित्)-ஆயிரக்கணக்கான அஸுர ஸேனையை ஜெயிப்பவர் (307) அனந்த ஜித்(अनन्तजित्)- தனது அபார சக்தியால் எல்லாவற்றையும் ஜெயிப்பவர் (श्रीभट्टभाष्यम् ப-பா) அளவிட முடியாத மஹிமையை உடையவர் என்று அர்த்தம் கூறி, ஸ்ரீ மார்க்கண்டேயர் குழந்தையான பகவா-னுடைய வயிற்றில் நூறு வருஷகாலமிருந்தும், அவருடைய மஹிமையை அறியமுடியவில்லை என ஸ்ரீ மஹாபாரதம் ஆரண்ய பர்வாவில் (आरण्यपर्वा) கூறப்பட்டிருக்கிறது.

इष्टोऽविशिष्टः शिष्टेष्टः शिखण्डी नहुषो वृषः ।
क्रोधहा क्रोधकृत्कर्ता विश्वबाहुः महीधरः ।। ६३

இஷ்டோऽவிஶிஷ்ட: ஶிஷ்டேஷ்ட:
ஶிக²ண்டீ நஹுஷோ வ்ருஷ: ।
க்¹ரோத⁴ஹா க்¹ரோத⁴க்ருத் க¹ர்த்தா
விஶ்வபா³ஹு: மஹீத⁴ர: ।। 63

(308) இஷ்ட:(इष्टः)- யாகங்களால் பூஜிக்கப்படுபவர் (309) அவிஶிஷ்ட: (अविशिष्टः)-எல்லோருக்கும் அந்தர்யாமியாய் (अन्तर्यामि) இருப்பதால் விசேஷமற்றவர். ப்ரளயகாலத்தில்

தன் உத^{3}ரத்தில் **(उदरम्-** *வயிறு) வஹிக்கப்பட்ட யாவரும், வித்யாஸமின்றித் தாய்போல் விரும்பும்படி இருப்பவர் (310) ஶிஷ்டேஷ்ட:***(शिष्टेष्टः)**- *நல்லோரிடத்தில் அன்புள்ளவர் (311) ஶிக^{2}ண்டீ^{3}***(शिखण्डी)**-*கோபால வேஷம் தரித்த கிருஷ்ணாவதாரத்தில் மயில் தோகையை அலங்காரமாக உடையவர் (312) நஹுஷ:***(नहुषः)**- *ப்ராணிகளை மாயையினால் கட்டுபவர் (313) வ்ருஷ:***(वृषः)**-*அபீஷ்டங்களை வர்ஷிப்பவர் (314) க்ரோத^{4}ஹா***(क्रोधहा)**-*ஸாதுக்களின் கோபத்தைப் போக்குபவர் (315) க்ரோத^{4}க்ருத் கர்த்தா* **(क्रोधकृत् कर्ता)**- *குரோதம் உடைய அஸுரர்களைக் கொல்லுகிறவர் (316) விஶ்வ பா^{3}ஹு:***(विश्वबाहुः)**-*நான்கு பக்கங்களிலும் கைகளை உடையவர் (317) மஹீத^{4}ர:***(महीधरः)**- *பூமியை தரிப்பவர்* **(श्रीभट्टभाष्यम्** *ப-பா) பூ^{4}பா^{4}ரமாக* **(भूभारम्)** *உள்ள துஷ்டர்களை நிக்ரஹம் செய்து பூமியைத் தாங்குகிறவர்.*

अच्युतः प्रथितः प्राणः प्राणदो वासवानुजः ।
अपां निधिरधिष्टानं अप्रमत्तः प्रतिष्ठितः ।। ६४

அச்யுத: ப்ரதி^{2}த: ப்ராண: ப்ராணதோ^{3} வாஸவானுஜ: ।
அபாம் நிதி^{4}ரதி^{4}ஷ்டாநம் அப்ரமத்த: ப்ரதிஷ்ட்டி^{2}த:।।64

*(318) அச்^{1}யுத:***(अच्युतः)**- *ஷட்^{3}பா^{4}வ***(षड्भाव)** *விகாரங்கள்* **(विकारम्)** *அற்றவர், (மறைந்திருப்பது, வெளிவருவது, விருத்தியடைவது, வளர்ச்சியின் முடிவை அடைவது, இளைப்பது, நசிப்பது இவை ஆறு விகாரங்களாகும்) (319) ப்ரதி^{2}த:***(प्रथितः)**-*ஸ்ருஷ்டி முதலியவைகளால் ப்ரஸித்தி அடைந்தவர் (320) ப்ராண:***(प्राणः)**- *மணிகளில் நூல் ஊடுருவி இருப்பது போல் ப்ராணிகளிடத்தில் பரவி உயிர்ப்பிப்பவர் (321) ப்ராணத^{3}:***(प्राणदः)**- *தேவர்களுக்கு பலத்தைக் கொடுப்பவர் (322) வாஸவானுஜ:* **(वासवानुजः)**- *அதி^{3}தி^{1}***(अदिति)***யினிடத்தில் கச்யபருக்குத் தோன்றி வாஸவனுக்குத் தம்பியானவர் (323) அபாம் நிதி^{4}:* **(अपांनिधिः)**- *ஜலங்களுக்கு இருப்பிடமான ஸமுத்ர ரூபியாக இருப்பவர் (324) அதி^{4}ஷ்டானம்***(अधिष्टानम्)**- *எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமானவர் (325) அப்ரமத்த:***(अप्रमत्तः)**- *அவரவர் செய்கைக்குத் தக்கவாறு பலனை அளிப்பதில் தவறாதவர் (326) ப்ரதிஷ்ட்டி^{2}த:***(प्रतिष्ठितः)**- *தனது மஹிமையில் நிலைத்திருப்பவர்.*

स्कन्दः सकन्दधरो धुर्यो वरदो वायुवाहनः।
वासुदेवो बृहद्भानुः आदिदेवः पुरन्दरः ।। ६५

ஸ்கந்த:^{3} ஸகந்த^{3}த^{4}ரோ து^{4}ர்யோ வரதோ^{3} வாயுவாஹன:।
வாஸுதே^{3}வோ ப்^{3}ருஹத்^{3}பா^{4}நு: ஆதி^{3}தே^{3}வ:புரந்த^{3}ர:।।65

(327) ஸகந்த^3:(**स्कन्दः**)- அம்ருதமயமாகப் பெருகுகிறவர் *(328) ஸ்கந்த^3 த^{4}ர:* (**स्कन्दधरः**)- தர்ம மார்கத்தை தரிப்பவர் *(329) து^{4}ர்ய:*(**धुर्यः**)-எல்லா ப்ராணிகளின் ஸ்ருஷ்டி முதலிய சுமையைத் தாங்குகிறவர் *(330)* வரத^3:(**वरदः**)- யாகத்தில் யஜமானனாக இருந்து வரனைக் (தக்ஷிணையை) கொடுப்பவர் *(331)* வாயு வாஹன:(**वायुवाहनः**)-ஸப்த மருத்துக்களையும் (**सप्त मरुत्**) நடத்திச் செல்லுபவர் *(332)* வாஸுதே^{3}வ:(**वासुदेवः**)- எல்லாப் பொருள்களிலும் வஸிக்கும் தேவர் *(333)* ப்^{3}ருஹத் பா^{4}னு:(**बृहद्भानुः**)- அதிகமான கிரணங்களை சந்திர ஸூர்யர்களுக்குக் கொடுத்து உலகத்தை பிரகாசிக்கச் செய்கிறவர் *(334)* ஆதி^{3} தே^{3}வ:(**आदिदेवः**)- உலகிற்குக் காரணமான தேவன் *(335)* புரந்த^{3}ர:(**पुरन्दरः**)- அஸுரர்களின் பட்டணங்களைப் பிளந்தவர்.

अशोकस्तारणस्तारः शूरः शौरिर्जनेश्वरः।
अनुकूलः शतावर्तः पद्मी पद्मनिभेक्षणः ।। ६६

அஶோகஸ் தாரணஸ்தார: ஶூர: ஶௌரிர் ஜனேஶ்வர:।
அனுகூல: ஶதாவர்த்த: பத்^{3}மீ பத்^{3}ம நிபே^{4}க்ஷண: ।। 66

(336) அஶோக:(**अशोकः**)- சோகம், மோஹம், ஜரை, மரணம், பசி, தாஹம், ஆகிய ஆறு வித பிணிகளும் அற்றவர் *(337)* தா^{1}ரண:(**तारणः**)- ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றுபவர் *(338)* தார:(**तारः**)- கர்ப வாஸம்(**गर्भवासम्**), பிறப்பு, மூப்பு, இறப்பு ஆகிய பயத்தினின்றும் கரையேற்றுபவர் *(339)* ஶூர:(**शूरः**)-பராக்ரமம் உடையவர் *(340)* ஶௌரி:(**शौरिः**)- சூர குலத்தில் பிறந்தவர் *(341)* ஜனேஶ்வர:(**जनेश्वरः**)- ஜனங்களுக்கு ஈஶ்வரர் *(342)* அனுகூல:(**अनुकूलः**)- எல்லோருக்கும் ஆத்மாவாக இருப்பதால் அனுகூலர் *(343)* ஶதா^{1}வர்த்த:(**शतावर्तः**)- தர்மத்தைக் காப்பதற்காக நூற்றுக்கணக்கான முறை அவதரிப்பவர் *(344)* பத்^{3}மீ(**पद्मी**)-கையில் தாமரையை உடையவர் *(345)* பத்^{3}ம நிபே^{4}க்ஷண:(**पद्मनिभेक्षणः**)- தாமரை போன்ற கண்களை உடையவர்.

पद्मनाभोऽरविन्दाक्षः पद्मगर्भः शरीरभृत् ।
महर्द्धिरृद्धो वृद्धात्मा महाक्षो गरुडध्वजः ।। ६७

பத்[3]மநாபோ[4]ऽரவிந்தா[3]க்ஷ: பத்[3]ம க[3]ர்ப:[4] ஶரீரப்[4]ருத் ।
மஹர்த்[3]தி[4]ர் ருத்[3]தோ[4] வ்ருத்[3]தா[4]த்மா
மஹாக்ஷோ க[3]ருட[3] த்[4]வஜ: ।। 67

(346) பத்[3]மநாப[4]: **(पद्मनाभः)**- *தாமரைப்பூவின் நடுக்காயில் இருப்பவர் (347) அரவிந்தா[3]க்ஷ:* **(अरविन्दाक्षः)**-*தாமரை போன்ற கண்களை உடையவர் (348) பத்[3]ம க[3]ர்ப[4]:* **(पद्मगर्भः)**- *ஹ்ருதயதமாகிற தாமரையில் உபாஸிக்கப்படுகிறவர் (349) ஶரீரப்[4]ருத்* **(शरीरभृत्)**- *உணவாக இருந்து ப்ராணிகளின் சரீரங்களைத் தாங்குபவர் (350) மஹர்த்[3]தி[4]:* **(महर्द्धिः)**-*பெருத்த ஐஶ்வர்யத்தை உடையவர் (351) ருத்[3]த[4]:* **(ऋद्धः)**-*உலக ரூபமாக இருப்பதால் வளர்ந்திருப்பவர் (352) வ்ருத்[3]தா[4]த்மா* **(वृद्धात्मा)**-*பழமையான ஆத்மாவை உடையவர் (353) மஹாக்ஷ:* **(महाक्षः)**-*பெரிய கண்களை உடையவர் (354) க[3]ருட[3] த்[4]வஜ:* **(गरुडध्वजः)**-*கருடனை அடையாளமாகக் கொண்ட கொடியை உடையவர்.*

अतुलः शरभो भीमः समयज्ञो हविर्हरिः ।
सर्वलक्षण लक्षण्यो लक्ष्मीवान् समितिञ्जयः ।। ६८

அதுல: ஶரபோ[4] பீ[4]ம: ஸமயஜ்ஞோ ஹவிர் ஹரி: ।
ஸர்வலக்ஷண லக்ஷண்யோ லக்ஷ்மீவான் ஸமிதிஞ்ஜய: ।।68

(355) அதுல: **(अतुलः)**- *இணையற்றவர் (356) ஶரப[4]:* **(शरभः)**- *சரீரங்களுள் ஆத்மாவாக இருப்பவர். (ப-பா.* **श्रीभट्टभाष्यम्**) *எல்லை மீறுகிறவர்களை அழிப்பவர் (357) பீ[4]ம:* **(भीमः)**- *எல்லாவற்றையும் பயப்படச் செய்கிறவர் (358) ஸமயக்ஞ:* **(समयज्ञः)**- *ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காலங்களை அறிபவர் (***श्रीभट्टभाष्यम्** *ப=பா) பக்தர்களுக்கு அபயம் கொடுப்பதாகிய வ்ரதத்தை மறவாதவர் (359) ஹவிர்ஹரி:* **(हविर्हरिः)**- *யக்ஞங்களில் ஹவிஸ்ஸை பெற்றுக் கொள்ளுபவர் (360) ஸர்வ லக்ஷண லக்ஷண்ய:* **(सर्वलक्षण लक्षण्यः)**- *எல்லா ப்ரமாணங்களாலும் அறியத் தகுந்தவர். (ப-பா* **श्रीभट्टभाष्यम्**) *மஹா புருஷ லக்ஷணங்கள் எல்லாவற்றினாலும் லக்ஷ்மீபதி என்று அறியத் தக்கவர் (361) லக்ஷ்மீவான்* **(लक्ष्मीवान्)**-*மார்பில் மஹாலக்ஷ்மியை தரிப்பவர் (362) ஸமிதிஞ்ஜய:* **(समितिञ्जयः)**- *போரில் வெற்றி காண்பவர்.*

विक्षरो रोहितो मार्गो हेतुर्दामोदरः सहः ।
महीधरो महाभागो वेगवानमिताशनः ॥ ६९

விக்ஷரோ ரோஹிதோ மார்கோ[3]
ஹேதுர் தா[3]மோத[3]ர: ஸஹ: ।
மஹீத[4]ரோ மஹாபா[4]கோ[3] வேக[3]வானமிதாஶன: ॥ 69

(363) விக்ஷர:(**विक्षरः**)- அழிவற்றவர் *(364) ரோஹித:*(**रोहितः**)- தன் இஷ்டப்படி சிவந்த ரூபத்தை உடையவர் *(365) மார்க[3]:* (**मार्गः**)-மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் தேடப்படுகிறவர் *(ப-பா.* **श्रीभट्टभाष्यम्***)* பக்தர்களால் தேடப்படுகிறவர் *(366)* *ஹேது:*(**हेतुः**)- ஸர்வ காரணமாக இருப்பவர் *(367) தா[3]மோத[3]ர:* (**दामोदरः**)- கிருஷ்ணாவதாரத்தில் யசோதையால் கயிறு கொண்டு வயிற்றில் கட்டப்பட்டவர் *(368) ஸஹ:*(**सहः**)- எல்லாவற்றையும் பொருத்துக் கொள்பவர் *(369) மஹீத[4]ர:* (**महीधरः**)-மலையின் ரூபமாய் இருந்து பூமியை தரிப்பவர் *(370) மஹாபா[4]க[3]:* (**महाभागः**)-சிறந்த ஆகாரங்களை உண்பவர் *(371) வேக[3]வான்*(**वेगवान्**)- வேகமுள்ளவர் *(372)* *அமிதாஶன:*(**अमिताशनः**)- ஸம்ஹார காலத்தில் பெரும் உணவை உண்பவர் *(ப-பா.* **श्रीभट्टभाष्यम्***)* கிருஷ்ணாவதாரத்தில் இடையர்கள் இந்த்ரனுக்காகச் செய்த அளவற்ற அன்னக் குவியலைத் தாம் உண்டவர்.

उद्भवः क्षोभणो देवः श्रीगर्भः परमेश्वरः ।
करणं कारणं कर्ता विकर्ता गहनो गुहः ॥ ७०

உத்[3]ப[4]வ: க்ஷோப[4]ணோ தே[3]வ: ஸ்ரீக[3]ர்ப:[4] பரமேஶ்வர:।
கரணம் காரணம் கர்த்தா விகர்த்தா க[3]ஹனோ கு[3]ஹ:॥70

(373) உத்[3]ப[4]வ:(**उद्भवः**)- ஸம்ஸாரத்தை விட்டு விலகியவர் *(374) க்ஷோப[4]ண:* (**क्षोभणः**)-ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரக்ருதி புருஷர்களின் உட்புகுந்து கலக்குபவர் *(375) தே[3]வ:*(**देवः**)- ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி முதலியவற்றால் விளையாடுகிறவர் *(376) ஸ்ரீக[3]ர்ப[4]:* (**श्रीगर्भः**)-உலக ரூபமான விபூ[4]தியை (**विभूति**) வயிற்றில் தரிப்பவர் *(377) பரமேஶ்வர:*(**परमेश्वरः**)- மேலான ஆளுகையை உடையவர் *(378) கரணம்*(**करणम्**)- ஸ்ருஷ்டிக்கு முக்கிய ஸாதனமான கருவியாக இருப்பவர் *(379) காரணம்*(**कारणम्**)- உபாதான நிமித்த காரணமாக இருப்பவர் *(380) கர்த்தா*(**कर्ता**)-ஸ்வதந்திரமாக இருப்பவர்

(381) விகர்த்தா(**विकर्ता**)*-விசித்திரமான உலகத்தை ஸ்ருஷ்டிப்பவர் (382) க³ஹன:*(**गहन:**)*- ஸூலபமாக அறிய முடியாத ஸ்வரூபத்தை உடையவர் (383) கு³ஹ:*(**गुह:**)*- தனது மாயையால் ஸ்வரூபத்தை மறைத்துக் கொள்ளுபவர்.*

व्यवसायो व्यवस्थानः संस्थानः स्थानदो ध्रुवः।
परर्द्धिः परमः स्पष्टः तुष्टः पुष्टः शुभेक्षणः ॥ ७१

வ்யவஸாயோ வ்யவஸ்த்தா²ன:
ஸம்ஸ்த்தா²ன: ஸ்த்தா²னதோ³ த்⁴ருவ: ।
பரர்தி:⁴ பரம: ஸ்பஷ்ட: து¹ஷ்ட: புஷ்ட: ஶுபே⁴க்ஷண: ॥71

(384) வ்யவஸாய:(**व्यवसाय:**)*- ஞான வடிவமாக உள்ளவர் (385) வ்யவஸ்த்தா²ன:*(**व्यवस्थान:**)*- பசு, பக்ஷி, மரம், மனிதன் முதலிய பிரிவை ஏற்படுத்தியவர் (386) ஸம்ஸ்த்தா²ன:*(**संस्थान:**)*- ஸர்வ பூதங்களுக்கும் சிறந்த இடமாக இருப்பவர் (387) ஸ்த்தா²னத³:*(**स्थानद:**)*- த்ருவன் முதலியோருக்கு அவரவர்கள் கர்மானுரூபமாக உயர்ந்த ஸ்தானத்தை கொடுப்பவர் (388) த்⁴ருவ:*(**ध्रुव:**)*-சாஶ்வதமாக இருப்பவர். (389) பரர்தி⁴:*(**परर्द्धि:**)*- சிறந்த விபூதியை உடையவர் (390) பரமஸ்பஷ்ட:*(**परमस्पष्ट:**)*-சிறந்த ஶோபையை உடையவராகவும் ஞானவடிவமாக இருப்பதால் ஸ்பஷ்டராகவும் இருப்பவர் (391) து¹ஷ்ட்ட:*(**तुष्ट:**)*-பரமானந்த ரூபியாக இருப்பவர் (392) புஷ்ட:*(**पुष्ट:**)*-எங்கும் நிரம்பி இருப்பவர் (393) ஶுபே⁴க்ஷண:*(**शुभेक्षण:**)*-ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய பார்வையை உடையவர்.*

रामो विरामो विरतो मार्गो नेयो नयोऽनयः।
वीरः शक्तिमतां श्रेष्ठो धर्मो धर्मविदुत्तमः ॥ ७२

ராமோ விராமோ விரதோ மார்கோ³ நேயோ நயோऽநய:।
வீர: ஶக்திமதாம் ஶ்ரேஷ்டோ²
த⁴ர்மோ த⁴ர்ம விது³த்தம: ॥72

(394) ராம:(**राम:**)*- யோகிகள் ரமிக்க இடமாக இருப்பவர் (395) விராம:* (**विराम:**)*- எல்லாப் பிராணிகளுக்கும் முடிவான இடமாக இருப்பவர் (396) விரத¹:*(**विरत:**)*-விஷயங்களை ஸேவிப்பதில் ஆசையற்றவர் (397)மார்க³:*(**मार्ग:**)*- யோகிகளுக்கு வழியாக இருப்பவர் (398) நேய:*(**नेय:**)*-*

ஞானத்தால் ஜீவனை பராமாத்மாவாக ஆக்குபவர் (399) நய:(नयः)- அழைத்துச் செல்லுபவர் (400) அனய:(अनयः)- எவராலும் அழைத்துச் செல்லப்படாதவர் (401) வீர:(वीरः)-பராக்ரமம் உள்ளவர் (402) ஶக்திமதாம் ஶ்ரேஷ்ட:(शक्तिमतां श्रेष्ठः)- சக்தி வாய்ந்த பிரும்மாதி தேவர்களுக்கும் மேல் சிறந்தவர் (403) த⁴ர்ம: (धर्मः)- தர்மங்களால் ஆராதிக்கப்படுகிறவர் (404) த⁴ர்ம வித்³த்தம: (धर्मविदुत्तमः)- வேதம், தர்ம சாஸ்திரம் முதலியவற்றை உபதேசித்திருப்பதால், தர்மம் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்.

वैकुण्ठः पुरुषः प्राणः प्राणदः प्रणवः पृथुः।
हिरण्यगर्भः शत्रुघ्नो व्याप्तो वायुरधोक्षजः ॥ ७३

வைகுண்ட:² புருஷ: ப்ராண: ப்ராணத:³ ப்ரணவ: ப்ருது:²।
ஹிரண்ய க³ர்ப:⁴ ஶத்ருக்⁴னோ
வ்யாப்தோ வாயுரதோ⁴க்ஷஜ: ॥ 73

(405) வைகுண்ட²:(वैकुण्ठः)- ஸ்ருஷ்டி காலத்தில் பஞ்ச மஹா பூதங்களும் தனி வழியில் செல்வதைத் தடுத்து, அவற்றை ஒன்று சேர்த்து ஸ்ருஷ்டியில் உபயோகிப்பவர் (406) புருஷ:(पुरुषः)- ஸர்வ பாபங்களையும் போக்குபவர் (407) ப்ராண:(प्राणः)- உயிராக இருப்பவர் (408) ப்ராணத³: (प्राणदः)- ப்ரளயகாலத்தில் உயிரை அழிப்பவர் (409) ப்ரணவ:(प्रणवः)- வேதங்களாலும் நமஸ்கரிக்கப்படுகிறவர் (410) ப்ருது²: (पृथुः)-உலக உருவமாய் வளர்ச்சியை அடைந்தவர் (411) ஹிரண்யக³ர்ப⁴: (हिरण्यगर्भः)-தங்கமயமான அண்டத்தை தன் உள்ளே வைத்திருப்பவர் (412) ஶத்ருக்⁴ன:(शत्रुघ्नः)- தேவசத்ருக்களான அஸுரர்களை அழிப்பவர் (413) வ்யாப்த:(व्याप्तः)- காரணமாக இருப்பதால் எல்லா காரியங்களிலும் வ்யாபித்திருப்பவர் (414) வாயு:(वायुः)- நல்ல மணத்தைச் செய்கிறவர் (415) அதோ⁴க்ஷஜ: (अधोक्षजः)- ஒருபொழுதும் குறைவை அடையாதவர்.

ऋतुः सुदर्शनः कालः परमेष्ठी परिग्रहः ।
उग्रः संवत्सरो दक्षो विश्रामो विश्वदक्षिणः ॥ ७४

ருது: ஸுத³ர்ஶன: கால: பரமேஷ்ட்டீ² பரிக்³ரஹ: ।
உக்³ர: ஸம்வத்ஸரோ த³க்ஷோ
விஶ்ராமோ விஶ்வ த³க்ஷிண: ॥ 74

(416) ருது:(**ऋतुः**)- கால உருவம் கொண்டு ருதுவாக இருப்பவர் *(417) ஸுத³ர்ஶன:* (**सुदर्शनः**)- பக்தர்களால் ஸுகமாய் பார்க்கப்படுகிறவர் *(418) கால:*(**कालः**)- எல்லாவற்றையும் அளந்தவர் (**कालः कलयतामहम्**-கால: கலயதாமஹம் என்கிறது கீதை) *(419) பரமேஷ்டீ²*(**परमेष्ठी**)- ஹ்ருதயாகாசத்தில் வஸிப்பவர் *(420) பரிக்³ரஹ:*(**परिग्रहः**)- பக்தர்கள் கொடுக்கும் ப'த்'ரம், புஷ்பம் முதலியவற்றை பெற்றுக் கொள்ளுகிறவர் *(421) உக்³ர:*(**उग्रः**)- ஸூர்யன் முதலியவர்களுக்கும் பயத்தைக் கொடுப்பவர் *(422) ஸம்வத்ஸர:*(**संवत्सरः**)- ஸர்வ பூதங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர் *(423) த³க்ஷ:*(**दक्षः**)-எல்லா கார்யங்களையும் சீக்கிரமாய் செய்கிறவர் *(424) விஶ்ராம:*(**विश्रामः**)- பசி, தாகம், சோகம், மோஹம், ஜரா, மரணம் என்ற ஆறு வகையான ஸம்ஸாரக் கடலின் அலைகளாலும் அவித்யை, காம, கர்மங்கள், என்ற மஹாக்லேசங்களாலும் (**महाक्लेशम्**), மத³ம்(**मदम्**) முதலிய உபக்லேசங்களாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாற விரும்புகிறவர்களுக்கு மோக்ஷமென்னும் இளைப்பாறுதலைக் கொடுப்பவர் (ப-பா. **श्रीभट्टभाष्यम्**) பாபங்களும் அதன் பலன்களும் அளவுக்கு மீறி துன்புறுத்துவதால் களைத்துப்போன ஜனங்களுக்கு விஶ்ராம ஸ்தானமாயிருப்பவர். அவர்கள் பகவானை அடைந்தவுடன் அவர்களின் பாபங்களும் துன்பங்களும் விலகி விடுகின்றன என்பது கருத்து. *(425) விஶ்வத³க்ஷிண:*(**विश्वदक्षिणः**)- எல்லா-வற்றைக் காட்டிலும் ஸாமர்த்தியம் வாய்ந்தவர்.

विस्तारः स्थावरः स्थाणुः प्रमाणं बीजमव्ययम् ।
अर्थोऽनर्थो महाकोशो महाभोगो महाधनः ॥७५

விஸ்தார: ஸ்தா²வர: ஸ்தா²ணு: ப்ரமாணம் பீ³ஜமவ்யயம் ।
அர்தோ²ऽனர்த்தோ² மஹா கோஶோ
மஹாபோ⁴கோ³ மஹாத⁴ன: ॥ 75

(426) விஸ்தார:(**विस्तारः**)- எல்லா உலகங்களும் விரிந்து இருப்பதற்கு இடமானவர் *(427) ஸ்தா²வர ஸ்த்தா²ணு:* (**स्थावरस्थाणुः**)- நிலைபெற்றும், பூமி முதலியவை நிலைத்திருப்பதற்கும் இடமானவர் *(428) ப்ரமாணம்*(**प्रमाणम्**)- ஞான வடிவமாய் இருப்பவர் *(429) பீ³ஜமவ்யம்*(**बीजमव्ययम्**)- முன்போலவே காரியங்களை உண்டுபண்ணும் காரண-மாய் இருப்பவர் *(430) அர்த்த²:* (**अर्थः**)- ஸுகவடிவமாக

இருப்பதால் எல்லோராலும் விரும்பப்படுகிறவர் (431) அனர்த்த²:(अनर्थः)- எல்லாவற்றையும் அடைந்திருப்பதால் ஒன்றையும் விரும்பாதவர் (432) மஹாகோஶ: (महाकोशः)- அன்னமயம் முதலிய கோசங்களாகிற பெரிய போர்வைகளால் மறைக்கப்பட்டவர் (433) மஹாபோ⁴க³: (महाभोगः)- மிகுந்த ஸுகானுபவத்தை உடையவர் (434) மஹாத⁴ன:(महाधनः)- போகங்களைக் கொடுக்கும் ஸாதனங்களை நிரம்ப அடைந்தவர்.

अनिर्विण्णः स्थविष्ठोऽभूः धर्मयूपो महामखः।
नक्षत्रनेमिर्नक्षत्री क्षमः क्षामः समीहनः ।। ७६

அநிர்விண்ண: ஸ்த²விஷ்டோऽபூ:⁴
த⁴ர்ம யூபோ மஹாமக:² ।
நக்ஷத்ர நேமிர் நக்ஷத்ரீ க்ஷம: க்ஷாம: ஸமீஹன: ।। 76

(435) அநிர்விண்ண:(अनिर्विण्णः)- விரும்பிய பொருளெல்லாம் இவரிடம் இருப்பதால் ஆசையற்றவர் (436) ஸ்த²விஷ்ட:(स्थविष्टः)- விராட்¹ ரூபியாக (विराट् रूपि) சிறந்து விளங்குகிறவர். அதாவது உலகம் முழுவதையும் தனது அவயவமாகக் கொண்டவர் (437) அபூ⁴:(अभूः)- பிறப்பற்றவர் (438) த⁴ர்மயூப¹:(धर्मयूपः)- யாக யூபத்தில் (यागयूपम्) பசுக்கள் கட்டுண்டு இருப்பது போல் தன்னை ஆராதிப்பதற்காகச் செய்யப்படும் தர்மாதர்மங்களால் கட்டப்பட்டவர் (439) மஹாமக²:(महामखः)- தன்னிடத்தில் அர்ப்பணம் செய்யப்படும் யாகங்களுக்கு மோக்ஷத்தை ப²லமாக(फलम्) கொடுக்கும்படிச் செய்கிறவர். (440) நக்ஷத்ரநேமி:(नक्षत्रनेमिः)- நக்ஷத்திரங்கள் அமர்ந்த சிம்சுமார சக்ரத்தின் நடுவில் குடம்போல் இருப்பவர் (441) நக்ஷத்ரீ(नक्षत्री)-நக்ஷத்திரங்களுள் சிறந்த சந்திரனாய் இருப்பவர் (442) க்ஷம:(क्षमः)- பொறுமை உள்ளவர் (443) க்ஷாம:(क्षामः)-உலகம் அழியும்போதும், தான் அழியாத ஆத்மாவாக இருப்பவர் (444) ஸமீஹன:(समीहनः)- ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்ய மிகுந்த ப்ரயத்னம் உள்ளவர்.

यज्ञ इज्यो महेज्यश्च क्रतुः सत्रं सतां गतिः।
सर्वदर्शी विमुक्तात्मा सर्वज्ञो ज्ञानमुत्तमम् ।। ७७

யஜ்ஞ இஜ்யோ மஹேஜ்யஶ்ச
க்ரது: ஸத்ரம் ஸதாம் க³தி: ।
ஸர்வ த³ர்ஶீ விமுக்தாத்மா
ஸர்வஜ்ஞோ ஞானமுத்தமம் ।। 77

(445) யக்ஞ:(**यज्ञः**)-*ஸகல யக்ஞ ரூபியாக இருப்பவர் (446) இஜ்ய:* (**इज्यः**)-*யாகங்களாலும் இவரே ஆராதிக்க வேண்டியவர் (447) மஹேஜ்ய:*(**महेज्यः**)-*மோக்ஷ ப²லத்தைக்* (**फलम्**) *கொடுப்பதால் மற்ற எல்லா தேவதைகளைக் காட்டிலும் அவசியம் பூஜிக்க வேண்டியவர் (448) க்ரது:* (**क्रतुः**)- *யூபத்துடன்* (**यूपम्**) *கூடிய யாகமாக இருப்பவர் (449) ஸத்ரம்*(**सत्रम्**)- *ஸாதுக்களைக் காப்பவர். (450) ஸதாம் க³தி:*(**सतांगतिः**)-*மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கு அதன் பயனாக இருப்பவர் (451) ஸர்வ த³ர்ஶீ* (**सर्वदर्शी**)- *எல்லா பிராணிகளின் புண்ய பாபச் செயல்களை இயற்கையான அறிவினால் அறிகிறவர் (452) விமுக்தாத்மா*(**विमुक्तात्मा**)- *இயற்கையாகவே எல்லா பற்றுதலும் அற்ற ஆத்மாவாக இருப்பவர் (453) ஸர்வக்ஞ:*(**सर्वज्ञः**)- *எல்லாமாகவும் ஞானம் உள்ளவராகவும் இருப்பவர் (454) ஞானமுத்தமம்*(**ज्ञानमुत्तमम्**)- *(இது ஒரே அர்ச்சனை) சிறந்த ஞானமாக இருப்பவர்.*

सुव्रतः सुमुखः सूक्ष्मः सुघोषः सुखदः सुहृत्।
मनोहरो जितक्रोधो वीरबाहुर्विदारणः ।। ७८

ஸுவ்ரத: ஸுமுக:² ஸூக்ஷ்ம:
ஸுகோ⁴ஷ: ஸுக²த:³ ஸுஹ்ருத் ।
மனோஹரோ ஜிதக்ரோதோ⁴ வீரபா³ஹுர்விதா³ரண: ।।78

(455) ஸுவ்ரத: (**सुव्रतः**)- *அண்டினவர்களைக் காப்பது என்ற நல்ல வ்ரதத்தை உடையவர் (456) ஸுமுக²:*(**सुमुखः**)- *தெளிந்த முகத்தை உடையவர். ராமாவதாரத்தில் ராஜ்யம் இழந்து காட்டுக்குப் போகும் போதும் முகமலர்ச்சி மாறாதவர் (457) ஸூக்ஷ்ம:*(**सूक्ष्मः**)-*தனக்கு காரணமில்லாமல் இருப்பதால் ஸூக்ஷ்மமாக இருப்பவர் (458) ஸுகோ⁴ஷ:*(**सुघोषः**)- *மங்களமான வேத சப்தத்தை உடையவர் (459) ஸுக²த³:* (**सुखदः**)-*நல்ல கர்மாக்களைச் செய்கிறவர்களுக்குச் சுகத்தைக் கொடுப்பவர் (460) ஸுஹ்ருத்*(**सुहृत्**)- *பதிலுக்கு உபகாரத்தை எதிர்பாராமலே உபகரிப்பவர்.* (**प्रत्युपकारं अनपेक्ष्य हितकारी सुहृत्**-ப்ரத்யுபகாரம் அனபேக்ஷ்ய

ஹிதகாரீ 'ஸுஹ்ருத்') (461) மனோஹர: (मनोहरः)-அளவற்ற ஆனந்த ரூபியாக இருப்பதால் மனதை அபஹரிப்பவர் (462) ஜித க்ரோத⁴:(जितक्रोधः)-கோபத்தை ஜெயித்தவர் (463) வீரபா³ஹு:(वीरबाहुः)-துஷ்டர்களை அழிக்கும் பராக்ரமத்துடன் கூடிய கைகளை உடையவர் (464) விதா³ரண:(विदारणः)-அதர்மம் செய்கிறவர்களைப் பிளப்பவர்.

स्वापनः स्ववशो व्यापी नैकात्मा नैककर्मकृत् ।
वत्सरो वत्सलो वत्सी रत्नगर्भो धनेश्वरः ।। ७९

ஸ்வாபன: ஸ்வ வஶோ வ்யாபீ
நைகாத்மா நைக கர்மக்ருத் ।
வத்ஸரோ வத்ஸலோ வத்ஸீ
ரத்ன க³ர்போ⁴ த⁴னேஶ்வர: ।। 79

(465) ஸ்வாபன:(स्वापनः)-பிராணிகளை மாயையினால் ஆத்மஞானமின்றி தூங்கும்படிச் செய்கிறவர் (466) ஸ்வவஶ:(स्ववशः)-ஸ்வதந்த்ரமாக இருப்பவர் (467) வ்யாபீ (व्यापी)-ஆகாசம்போல் எங்கும் வ்யாபித்திருப்பவர் (468) நைகாத்மா(नैकात्मा)-பல உருவங்களாக இருப்பவர் (469) நைக கர்மக்ருத்(नैककर्मकृत्)- ஸ்ருஷ்டி முதலிய பல கர்மாக்களைச் செய்கிறவர் (470) வத்ஸர: (वत्सरः)-எல்லாவற்றிற்கும் இருப்பிடமாக இருப்பவர் (471) வத்ஸல:(वत्सलः)-பக்தர்களிடம் அன்பு கொண்டவர் (472) வத்ஸீ(वत्सी) -க்ருஷ்ணாவதாரத்தில் கன்று மேய்த்தவர் (473) ரத்ன க³ர்ப⁴: (रत्नगर्भः)- ரத்னங்களை தன் உள்ளே வைத்திருக்கும் ஸமுத்ரமாக இருப்பவர் (474) த⁴னேஶ்வர:(धनेश्वरः)-செல்வங்களுக்கு ஈஶ்வரர்.

धर्मगुब्धर्मकृद्धर्मी सदसत्क्षरमक्षरम् ।
अविज्ञाता सहस्रांशुः विधाता कृतलक्षणः ।। ८०

த⁴ர்மகு³ப்³த⁴ர்ம க்ருத்³ த⁴ர்மீ ஸத³ஸத்க்ஷரமக்ஷரம் ।
அவிஞாதா ஸஹஸ்ராம்ஶு: விதா⁴தா க்ருதலக்ஷண:।।80

(475) த⁴ர்மகு³ப்(धर्मगुप्)- தர்மத்தைக் காப்பவர் (476) த⁴ர்ம க்ருத்(धर्मकृत्)-பிறர் செய்வதற்காக, (வழிகாட்டியாக), தான் தர்மத்தைச் செய்கிறவர் (477) த⁴ர்மீ (धर्मी)-தர்மங்களைத்

தாங்குகிறவர் (478) ஸத் (सत्)- மெய்ப்பொருளான ப்ரம்மமாக இருப்பவர் (479) அஸத் (असत्)-நாம ரூபத்துடன் கூடிய அபர ப்[3]ரம்மாக இருப்பவர் (अपरब्रह्म) (480) க்ஷரம்(क्षरम्)- ஸர்வ பூதங்களாக இருப்பவர் (481) அக்ஷரம்(अक्षरम्)- விகாரம் (विकारम्) அற்றவர் (482) அவிக்ஞாதா(अविज्ञाता)- ஜீவபா[4]வமற்ற (जीवभावम्) விஷ்ணுவாக இருப்பவர் (483) ஸஹஸ்ராம்ஶு:(सहस्रांशुः)-அளவற்ற கிரணங்களை உடையவர். அதாவது ஸூர்யன் முதலிய தேஜஸ்விகளுக்கும் கிரணங்களைக் கொடுப்பவர் (484) விதா[4]தா(विधाता)- பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் திக்கஜம் முதலியவற்றைத் தாங்குகிறவர் (485) க்ருத லக்ஷண:(कृतलक्षणः)-மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற லக்ஷணத்தை உடையவர்.

गभस्तिनेमिः सत्त्वस्थः सिंहो भूतमहेश्वरः ।
आदिदेवो महादेवो देवेशो देवभृद्गुरुः ॥ ८१

க[3]ப[4]ஸ்திநேமி: ஸத்வஸ்த:[2] ஸிம்ஹோ பூ[4]தமஹேஶ்வர:।
ஆதி[3]தே[3]வோ மஹாதே[3]வோ
தே[3]வேஶோ தே[3]வப்[4]ருத் கு[3]ரு:॥81

(486) க[3]ப[4]ஸ்திநேமி:(गभस्तिनेमिः)-வட்டமான கிரணங்களின் நடுவில் ஸூர்யனாக இருப்பவர் (487) ஸத்வஸ்த்த[2]:(सत्त्वस्थः)- ஸர்வ பிராணிகளிடத்திலும் இருப்பவர் (488) ஸிம்ஹ:(सिंहः)- நரஸிம்ஹமாக அவதரித்தவர் (489) பூ[4]தமஹேஶ்வர: (भूतमहेश्वरः)- ப்ராணிகளுக்குப் பெரும் தெய்வம் (490) ஆதி[3]தே[3]வ: (आदिदेवः)- ஸர்வ ப்ராணிகளையும் க்ரஹித்துக் கொள்ளும் தேவன் (491) மஹாதே[3]வ: (महादेवः)- ஸர்வ பாபங்களையும் விட்டு விட்டு ஆத்ம ஸ்வரூபத்தில் விளங்குகிறவர் (492) தே[3]வேஶ:(देवेशः)- தேவர்களுக்கு ஈச்வரர் (493) தே[3]வப்[4]ருத் கு[3]ரு: (देवभृद्गुरुः)- தேவர்களைக் காக்கும் இந்திரனுக்கும் ஆக்ஞை செய்கிறவர்.

उत्तरो गोपतिर्गोप्ता ज्ञानगम्यः पुरातनः ।
शरीरभूतभृद्भोक्ता कपीन्द्रो भूरिदक्षिणः ॥ ८२

உத்தரோ கோ[3]பதிர் கோ[3]ப்தா ஞானக[3]ம்ய: புராதன:।
ஶரீர பூ[4]தப்[4]ருத் போ[4]க்தா கபீந்த்[3]ரோ பூ[4]ரித[3]க்ஷிண:॥ 82

(494) உத்தர:(उत्तरः)- ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகிறவர் (495) கோ[3]பதி: (गोपतिः)-கிருஷ்ணாவதாரத்தில் கோபாலனாக இருந்தவர் (496) கோ[3]ப்தா(गोप्ता)-ஸர்வ ப்ராணிகளையும் காப்பவர் (497) ஞானக[3]ம்ய:(ज्ञानगम्यः)-

ஞானத்தினால் மட்டும் அறியத் தகுந்தவர் (498) புராதன: **(पुरातनः)**- கால வரம்பு அற்றவராதலால் முன்பே இருப்பவர் (499) ஶரீரபூ[1]தப்[1]ருத்**(शरीरभूतभृत्)** -சரீரங்களுக்குக் காரண-மான பஞ்ச மஹாபூதங்களை ப்ராண ரூபியாய் தரிப்பவர் (500) போ[4]க்தா**(भोक्ता)**- ஆனந்தத்தை அனுபவிப்பவர் (501) கபீந்த்[3]ர: **(कपीन्द्रः)**-ராமாவதாரத்தில் குரங்குகளுக்கு நாதனாக இருந்தவர் (502) பூ[4]ரி த[3]க்ஷிண:**(भूरिदक्षिणः)**- தர்ம மரியாதையை காப்பதற்காக யாகம் செய்கிறவராயும், அதில் கொடுக்கப்படும் மிகுந்த தக்ஷிணையை உடையவராயும் இருப்பவர்.

सोमपोऽमृतपः सोमः पुरुजित् पुरुसत्तमः ।
विनयो जयः सत्यसन्धो दाशार्हः सात्त्वतां पतिः ।।८३

ஸோமபோऽம்ருதப: ஸோம: புருஜித் புரு ஸத்தம:।
வினயோ ஜய: ஸத்ய ஸந்தோ[4]
தா[3]ஶார்ஹ: ஸாத்வதாம் பதி:।। 83

(503) ஸோமப:**(सोमपः)**-யாகங்களில் யாகம் செய்யும் யஜமான ரூபியாய் இருந்து ஸோம ரஸத்தை பா[1]னம் **(पानम्)** செய்கிறவர் (504) அம்ருதப:**(अमृतपः)**- அம்ருத மத[2]ன **(अमृतमथनम्)** காலத்தில் கிடைத்த அம்ருதத்தை தேவர்களைப் பா[1]னம் **(पानम्)** செய்வித்து தானும் பானம் செய்தவர் (505) ஸோம:**(सोमः)**- பார்வதியுடன் கூடிய பரமேஶ்வரனாய் இருப்பவர் (506) புருஜித்**(पुरुजित्)**- பலரை ஜெயிப்பவர் (507) புருஸத்தம: **(पुरुसत्तमः)**- விஶ்வரூபியும், மிகச் சிறந்தவருமாயும் இருப்பவர் (508) வினய: **(विनयः)**-துஷ்டர்களை தண்டிப்பவர் (509) ஜய:**(जयः)**-எல்லா பிராணிகளையும் ஜெயிப்பவர் (510) ஸத்யஸந்த[4]: **(सत्यसन्धः)**- ஸத்யமான ஸங்கல்பத்தை உடையவர். அதாவது நினைத்ததை நடத்துகிறவர் (511) தா[3]ஶார்ஹ: **(दाशार्हः)**- தானத்திற்கு உரியவர் (512) ஸாத்வதாம்பதி:**(सात्वतांपतिः)**- ஸாத்வத தந்திரத்தை **(सात्त्वत तन्त्रम्)** செய்தவர்களுக்கும், உபதேசித்தவர்களுக்கும் யோக க்ஷேமத்தை நடத்துகிறவர்.

जीवो विनयितासाक्षी मुकुन्दोऽमितविक्रमः ।
अम्भोनिधिरनन्तात्मा महोदधिशयोऽन्तकः ।। ८४

ஜீவோ வினயிதா ஸாக்ஷீ முகுந்தோ[3]ऽமித விக்ரம:।
அம்போ[4]நிதி[4]ரனந்தாத்மா மஹோத[3]தி[4]ஶயோऽந்தக:।।84

*(513) ஜீவ:***(जीव:)**-*க்ஷேத்ரக்ஞனாக இருந்து உயிர்களை தரிப்பதால் ஜீவனாக இருப்பவர் (514) விநயிதா ஸாக்ஷீ* **(विनयितासाक्षी)**-*பிரஜைகளின் வினய குணத்தை நேரில் காண்பவர் (515) முகுந்த[3]:* **(मुकुन्द:)**- *மோக்ஷத்தைத் கொடுப்பவர் (516) அமித விக்ரம:***(अमितविक्रम:)**-*த்ரிவிக்ரம அவதாரத்தில் அளவிட முடியாத அடிவைப்பைச் செய்தவர் (517) அம்போ[4]நிதி[4]:* **(अम्भोनिधि:)**- *ஸமுத்திரமாக இருப்பவர் (518) அனந்தாத்மா***(अनन्तात्मा)**- *ஒன்றாலும் அளவிட முடியாத ஆத்மாவாக இருப்பவர் (519) மஹோத[3]தி[4]ஶய:***(महोदधिशय:)**-*ப்ரளய ஸமுத்திரத்தில் படுத்திருப்பவர் (520) அந்த[1]க:***(अन्तक:)**-*ப்ராணிகளுக்கு முடிவைச் செய்கிறவர்.*

अजो महार्हः स्वाभाव्यो जितामित्रः प्रमोदनः।
आनन्दो नन्दनो नन्दः सत्यधर्मा त्रिविक्रमः ।।८५

அஜோ மஹார்ஹ: ஸ்வாபா[4]வ்யோ
ஜிதாமித்ர: ப்ரமோத[3]ன: ।
ஆனந்தோ[3] நந்த[3]னோ நந்த:[3]
ஸத்ய த[4]ர்மா த்ரிவிக்ரம: ।। 85

*(521) அஜ:***(अज:)**-*விஷ்ணுவினிடமிருந்து பிறந்த மன்மதனாய் இருப்பவர் (522) மஹார்ஹ:* **(महार्ह:)**-*பூஜிக்கத் தகுந்தவர் (523) ஸ்வாபா[4]வ்ய:***(स्वाभाव्य:)**- *நித்ய ஸ்வரூபியாக இருப்பதால் பிறக்காதவர் (524) ஜிதாமித்ர:***(जितामित्र:)**-*மனதில் இருக்கும் காமம் க்ரோதம் முதலிய சத்ருக்களையும், வெளியில் இருந்த ராவணன், கும்பகர்ணன், சிசுபாலன் முதலிய சத்ருக்களையும், ஜெயித்தவர் (525) ப்ரமோத[3]ன:* **(प्रमोदन:)**- *த்யானிப்பவர்களுக்கு த்யான மாத்திரத்தினால் ஆனந்தத்தைக் கொடுப்பவர் (526) ஆனந்த[3]:***(आनन्द:)**-*ஆனந்த ஸ்வரூபமாக இருப்பவர் (527) நந்த[3]ன:***(नन्दन:)**- *பக்தர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பவர் (528) நந்த[3]:***(नन्द:)**-*வேண்டிய எல்லா பொருள்களாலும் நிரம்பியவர் (529) ஸத்ய த[4]ர்மா***(सत्यधर्मी)**-*அழிவற்ற தர்மம், ஞானம், முதலிய குணங்களை உடையவர் (530) த்ரிவிக்ரம:***(त्रिविक्रम:)**-*மூன்று உலகங்களையும் ஆக்ரமித்தவர்.*

महर्षिः कपिलाचार्यः कृतज्ञो मेदिनीपतिः ।
त्रिपदस्त्रिदशाध्यक्षो महाशृङ्गः कृतान्तकृत् ।। ८६

மஹர்ஷி: கபிலாசார்ய: க்ருதஜ்ஞோ மேதி³நீ பதி: ।
த்ரிபத³ஸ் த்ரித³ஶாத்⁴யக்ஷோ
மஹாஶ்ருங்க:³ க்ருதாந்தக்ருத் ।। 86

*(531) மஹர்ஷி:கபிலாசா¹ர்ய:***(महर्षिःकपिलाचार्यः)***-மஹரிஷியான (எல்லா வேதங்களையும் உணர்ந்த) கபிலாசார்யராக இருப்பவர் (532) க்ருதஜ்ஞ:***(कृतज्ञः)***-உலகமாயும் சே¹தன-னான* **(चेतनः)** *ஆத்மாவாகவும் இருப்பவர் (533) மேதி³னீ பதி:***(मेदिनीपतिः)***- பூமிக்கு நாயகனாக இருப்பவர் (534) த்ரிபத³:* **(त्रिपदः)***-மூன்றடிகளால் உலகங்களை அளந்தவர் (535) த்ரிதஶாத்⁴யக்ஷ:***(त्रिदशाध्यक्षः)***- ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி இம்மூன்று அவஸ்தைகளையும் நடத்துகிறவர் (536) மஹாஶ்ருங்க³:***(महाशृङ्गः)***- ப்ரளய ஸமுத்திரத்தில் பெரிய தனது கொம்பில் ஓடமாகிய பூமியைக் கட்டி இழுத்த மத்ஸ்ய மூர்த்தியாய் இருந்தவர் (537) க்ருதாந்தக்ருத்***(कृतान्तकृत्)***-எமனுக்கும் முடிவைச் செய்கிறவர்.*

महावराहो गोविन्दः सुषेणः कनकाङ्गदी ।
गुह्यो गभीरो गहनो गुप्तश्चक्र गदाधरः ।। ८७

மஹாவராஹோ கோ³விந்த:³ ஸுஷேண: கனகாங்க³தீ³ ।
கு³ஹ்யோ க³பீரோ க³ஹனோ கு³ப்தஶ்சக்ர க³தா³த⁴ர: ।।87

*(538) மஹா வராஹ:***(महावराहः)***-பெரிய வராஹமாக அவதரித்தவர் (539) கோ³விந்த³:***(गोविन्दः)***-வேதங்களால் அறியப்படுகிறவர் (540) ஸுஷேண:***(सुषेणः)***- சிறந்த ஸேனையை உடையவர் (541) கனகாங்க³தீ³***(कनकाङ्गदी)***-தங்க தோள்வளைகளை தரித்தவர் (542) கு³ஹ்ய:* **(गुह्यः)***-ஹ்ருதய குஹையில் இருப்பவர் (543) க³பீ⁴ர:***(गभीरः)***-ஞானம், ஐஸ்வர்யம், பலம், வீர்யம் முதலியவைகளால் கம்பீரமாய் இருப்பவர் (544) க³ஹன:***(गहनः)***- (இவருக்குள்ளே) ஸுலப-மாய் பிரவேசிக்க முடியாதவர் (545) கு³ப்த:* **(गुप्तः)***-வாக்கு, மனம் இவைகளுக்கு எட்டாதவர் (546) ச¹க்ர க³தா³ த⁴ர:***(चक्रगदाधरः)***- மனஸ் தத்வமயமான சக்கிரத்தையும், புத்தி தத்வமயமான க³தை³யையும்* **(गदा)**, *உலகங்களைக் காப்பதற்காகத் தரிப்பவர்.*

वेधाः स्वाङ्गोऽजितः कृष्णो
दृढः सङ्कर्षणोऽच्युतः ।
वरुणो वारुणो वृक्षः पुष्कराक्षो महामनाः ॥ ८८

வேதா:3 ஸ்வாங்கோ3ऽஜித: க்ருஷ்ணோ
த்ருட:4 ஸங்கர்ஷணோऽச்யுத: ।
வருணோ வாருணோ வ்ருக்ஷ:
புஷ்கராக்ஷோ மஹாமனா: ॥ 88

(547) வேதா4:(**वेधाः**)*-ஸ்ருஷ்டிப்பர் (548) ஸ்வாங்க3:*(**स्वाङ्गः**)*-காரியங்களைச் செய்வதில் தானே உதவியாக இருப்பவர் (549) அஜித:*(**अजितः**)*-அவதாரங்களில் ஒருவனாலும் ஜெயிக்கப்படாதவர் (550) க்ருஷ்ண:*(**कृष्णः**)*- வ்யாஸரூபியாக இருப்பவர் (551) த்3ருட4:*(**दृढः**)*-ஸ்வரூபம், ஸாமர்த்தியம் இவற்றிலிருந்து நழுவாதவர் (552) ஸங்கர்ஷணோச்1யுத:* (**सङ्कर्षणोच्युतः**)*- ஸம்ஹார காலத்தில் பிரஜைகளை தன்னிடத்தில் இழுத்துக் கொள்பவராயும், தன் ஸ்வரூபத்தை விட்டு நழுவாதவராயும் இருப்பவர் (553) வருண:*(**वरुणः**)*-தனது கிரணங்களை மறைத்துக்கொள்ளும் ஸாயங்கால ஸூர்யனாய் இருப்பவர் (554) வாருண:*(**वारुणः**)*- வருணனுடைய பிள்ளையான வஸிஷ்டராக இருப்பவர் (555) வ்ருக்ஷ:*(**वृक्षः**)*-மரம்போல் அசையாமல் இருப்பவர் (556) புஷ்கராக்ஷ:*(**पुष्कराक्षः**)*-ஹ்ருதய கமலத்தில் சிந்திக்கப்பட்டு ப்ரகாசிக்கிறவர் (557) மஹாமனா:*(**महामनाः**)*- ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை மனதினாலேயே செய்கிறவர்.*

भगवान् भगहाऽनन्दी वनमाली हलायुधः ।
आदित्यो ज्योतिरादित्यः सहिष्णुर्गतिसत्तमः ॥ ८९

ப4க3வான் ப4க3ஹாऽனந்தீ3 வனமாலீ ஹலாயுத:4 ।
ஆதி3த்யோ ஜ்யோதிராதி3த்ய:
ஸஹிஷ்ணுர் க3தி ஸத்தம: ॥ 89

(558) ப4க3வான்(**भगवान्**)*-பூர்ணமான ஐஶ்வர்யம், தர்மம், யஶஸ்* (**यशः**)*, லக்ஷ்மி, ஞானம், வைராக்யம், இந்த ஆறு குணங்களையும் உடையவர் (559) ப4க3ஹா*(**भगहा**)*-ஸம்ஹார காலத்தில் ஐஶ்வர்யம் முதலியவற்றை அழிப்பவர் (560) ஆனந்தீ3* (**आनन्दी**)*-ஸுக ரூபமாக இருப்பவர் (561) வனமாலீ* (**वनमाली**)*-பஞ்சமஹா பூதங்களின் தன்மாத்ரை*

(तन्मात्रा) வடிவமான வைஜயந்திமாலையை தரித்தவர் (562) ஹலாயுத[4]:**(हलायुधः)**-கலப்பையை ஆயுதமாகக்கொண்ட பலராமராக இருப்பவர் (563) ஆதி[3]த்ய:**(आदित्यः)**- அதி[3]தி[1]**(अदिति)**யினிடத்தில் கஶ்யபருக்கு **(कश्यपः)** வாமனமூர்த்தியாக அவதரித்தவர் (564) ஜ்யோதிராதி[3]த்ய:**(ज्योतिरादित्यः)**- ஜ்யோதிர்மயமான ஸூர்ய மண்டலத்தில் ப்ரகாசிப்பவர் (565) ஸஹிஷ்ணு:**(सहिष्णुः)**- சீதோஷ்ணம், ஸுகதுக்கம் முதலியவைகளை ஸஹிப்பவர் (566) க[3]திஸத்தம:**(गतिसत्तमः)**-எல்லோருக்கும் கதியும் **(गति)** மிகச் சிறந்தவராயும் இருப்பவர்.

सुधन्वा खण्डपरशुः दारुणो द्रविणप्रदः ।
दिवस्पृक् सर्वदृग्व्यासो वाचस्पतिरयोनिजः ।। ९०

ஸுத[4]ன்வா க[2]ண்ட[3] பரஶு: தா[3]ருணோ த்[3]ரவிணப்ரத:[3]।
தி[3]வஸ்ப்ருக் ஸர்வத்[3]ருக்[3] வ்யாஸோ
வாசஸ்பதி ரயோநிஜ: ।। 90

(567) ஸுத[4]ன்வா**(सुधन्वा)**-இந்திரிய மயமான ஶார்ங்க[3]ம் **(शार्ङ्गम्)** என்ற நல்ல வில்லை உடையவர் (568) க[3]ண்ட[3] பரஶு:**(खण्डपरशुः)**- சத்ருக்களைக் கண்டிக்கும் கோடாலியை ஆயுதமாகக்கொண்ட பரசுராமராக இருப்பவர் (569) தா[3]ருண:**(दारुणः)**- வேதமார்கத்தைக் கெடுப்பவர்களுக்கு பயத்தைக் கொடுப்பவர் (570) த்[3]ரவிணப்ரத[3]:**(द्रविणप्रदः)**- பக்தர்களுக்குக் கோரிய பொருளைக் கொடுப்பவர் (571) தி[3]வஸ்ப்ருக்**(दिवस्पृक्)**-மேலுலகத்தைத் தொடுகிறவர் (572) ஸர்வ த்[3]ருக் வ்யாஸ:**(सर्वदृग्व्यासः)**- எல்லாம் அறிந்தவரும், நான்கு வேதங்களையும், இதிஹாஸ புராணங்களையும் பிரித்து விஸ்தாரம் செய்தவருமான பிரம்மதேவனாக இருப்பவர் (வ்யாஸரே ப்ரம்மா)-(ரிக்வேதம் 21 ஶாகை[2]கள்**(शाखा)**; யஜுர்வேதம் 101 ஶாகைள்; ஸாமவேதம் 1000 ஶாகைகள்; அதர்வண வேதம் 9 ஶாகைகள் உள்ளனவாகப் பிரிக்கப்பட்டன.) (573) வாசஸ்பதிரயோனிஜ:**(वाचस्पतिरयोनिजः)**- வித்யைக்குப் பதியாயும் **(पतिः)**, தாயிடத்தில் பிறக்காதவராயும் இருப்பவர் (இங்கு இரண்டு நாமாக்களும் ஒரு அர்ச்சனை).

त्रिसामा सामगः साम निर्वाणं भेषजं भिषक् ।
सन्यासकृच्छमः शान्तो निष्ठा शान्तिः परायणम् ।।९१

த்ரிஸாமா ஸாமக:³ ஸாம நிர்வாணம் பே⁴ஷஜம் பி⁴ஷக்।
ஸன்யாஸக்ருச்ச²ம: ஶாந்தோ
நிஷ்டா² ஶாந்தி: பராயணம் ।। 91

(574) த்ரிஸாமா(**त्रिसामा**)*-தே³வவ்ரதம்* (**देवव्रतम्**) *என்ற மூன்று ஸாமாக்களால் ஸ்துதிக்கப்படுகிறவர் (575) ஸாமக³:*(**सामगः**)*-ஸாம வேதத்தை கானம்* (**गानम्**) *செய்கிறவர் (576) ஸாம*(**साम**)*-ஸாமவேதமாய் இருப்பவர் (577) நிர்வாணம்*(**निर्वाणम्**)*-எல்லா துக்கங்களுமற்ற பரமானந்தமான ப்ரம்மமானவர் (578) பே⁴ஷஜம்*(**भेषजम्**)*-ஜனன மரண ரூபமான வியாதிக்கு மருந்தாக இருப்பவர் (ப-பா.***भट्टभाष्यम्***) சிகித்ஸை செய்ய முடியாத ஜனன மரண வியாதிக்குச் சிறந்த மருந்தாக இருப்பவர். ரிஷி கணங்களும், ஸித்தர்களும், நாகர்களும், தேவர்களும், தேவரிஷிகளும் ஸ்ரீநாராயணரிடத்திலிருந்து துக்கத்துக்கு மருந்தை அறிந்தனர் என்று பீ⁴ஷ்ம ஸ்தவராஜத்தில்* (**भीष्मस्तवराजम्**) *சொல்லப்பட்டிருக்கிறது (579) பி⁴ஷக்* (**भिषक्**)*-ஜனன மரண ரோகத்திலிருந்து விடுவிக்கும் ப்ரம்ம வித்யையை பகவத் கீதையில் உபதேசித்தவர். (ப-பா.***भट्टभाष्यम्***) ரோகத்திற்குக் காரணத்தையும் அதன் சிகித்சையையும் நன்கு உணர்ந்த வைத்யராகவும் இருப்பவர் (580) ஸன்யாஸக்ருத்*(**सन्यासकृत्**)*-மோக்ஷத்திற்காக நான்காவது ஆஶ்ரமமான ஸன்யாஸ ஆஶ்ரமத்தை உண்டு பண்ணினவர் (581) ஶம:*(**शमः**)*-ஸன்யாசிகளுக்குச் சிறந்த ஸாதனம் ஶமம்* (**शमः**) *என்று சொன்னவர் (582) ஶாந்த:*(**शान्तः**)*- விஷய ஸுகங்களில் பற்றற்றவர் (583) நிஷ்டா*(**निष्ठा**)*- ப்ரளயத்தில் எல்லாப் பொருள்களும் தங்கியிருக்கும் இடமானவர் (584) ஶாந்தி:*(**शान्तिः**)*- எல்லாவிதமான அவித்யா நிவ்ருத்தியாக இருக்கும் ப்ரம்மமானவர் (585) பராயணம்*(**परायणम्**)*- மறுபடி ஸம்ஸாரத்தில் திரும்பச் செய்யாமலிருக்கும் ஸ்தானமாக இருப்பவர்.*

शुभाङ्गः शान्तिदः स्रष्टा कुमुदः कुवलेशयः ।
गोहितो गोपतिर्गोप्ता वृषभाक्षो वृषप्रियः ।। ९२

ஶுபாங்க³: ஶாந்தித³: ஸ்ரஷ்டா குமுத³: குவலேஶய:।
கோ³ஹிதோ கோ³பதிர் கோ³ப்தா
வ்ருஷபா⁴க்ஷோ வ்ருஷப்ரிய: ।। 92

(586) ஸுபா⁴ங்க³:(**सुभाङ्गः**)*-அழகிய சரீரத்தை உடையவர் (587) ஶாந்தித:*(**शान्तिदः**)*- ராகத்வேஷத்தைப்* (**रागद्वेषम्**)

போக்கும் சாந்தியைக் கொடுக்கிறவர் (588) ஸ்ரஷ்டா(स्रष्टा)- ஆதியில் எல்லா பூதங்களையும் ஸ்ருஷ்டித்தவர் (589) குமுத³:(कुमुदः)-பூமியில் ஸந்தோஷத்தை அடைகிறவர் (590) குவலேஶய:(कुवलेशयः)- ஆதிசேஷன் வயிற்றில் படுத்திருப்பவர் (குவலம் (कुवलम्) என்று பாம்பின் வயிற்றுக்குப் பெயர்) (591) கோ³ஹித:(गोहितः)- கிருஷ்ணாவதாரத்தில் கோவர்தன மலையைத் தூக்கி பக்தர்களுக்கு நன்மையைச் செய்தவர் (592) கோ³பதி:(गोपतिः)- பூமிக்குப் பதியாயிருப்பவர் (593) கோ³ப்தா(गोप्ता)- மாயையினால் தன்னை மறைத்துக் கொண்டிருப்பவர் (594) வ்ருஷபா⁴க்ஷ:(वृषभाक्षः)-ஸர்வ அபீஷ்டங்களையும் வர்ஷிக்கும் கண்களை உடையவர் (595) வ்ருஷப்ரிய:(वृषप्रियः)- தர்மத்தில் அன்பு கொண்டவர்.

अनिवर्ती निवृत्तात्मा संक्षेप्ता क्षेमकृच्छिवः ।
श्रीवत्सवक्षाः श्रीवासः श्रीपतिः श्रीमतां वरः ।।९३

அநிவர்தீ நிவ்ருத்தாத்மா ஸங்க்ஷேப்தா க்ஷேமக்ருச்சி²வ:।
ஶ்ரீவத்ஸவக்ஷா: ஶ்ரீவாஸ: ஶ்ரீபதி: ஶ்ரீமதாம் வர: ।। 93

(596) அநிவர்த்தீ(अनिवर्ती)-தர்மத்தை விட்டுத் திரும்பாதவர் (597) நிவ்ருத்தாத்மா(निवृत्तात्मा)- இயற்கையாகவே விஷயப் பற்றற்ற மனம் உடையவர் (598) ஸம்க்ஷேப்தா(संक्षेप्ता)- விஸ்தாரமான உலகத்தை ப்ரளய காலத்தில் தன்னிடத்தில் ஸூக்ஷ்மமாக்கிக் கொள்ளுகிறவர் (599) க்ஷேமக்ருத்(क्षेमकृत्)- கிடைத்த பொருளைக் காப்பவர் (600) ஶிவ:(शिवः)-தனது நாமாவை நினைத்த மாத்திரத்தால் பரிசுத்தமாகச் செய்கிறவர் (601) ஶ்ரீவத்ஸ வக்ஷா:(श्रीवत्सवक्षाः)- ஶ்ரீவத்ஸம் என்ற மருவை மார்பில் உடையவர் (602) ஶ்ரீவாஸ:(श्रीवासः)-தன்னைவிட்டு விலகாத மஹாலக்ஷ்மி வஸிக்கும் மார்பை உடையவர் (603) ஶ்ரீபதி:(श्रीपतिः)- அம்ருத மத²ன (अमृतमथनम्) காலத்தில் மற்ற யாவரையும் விட்டு மஹாலக்ஷ்மியால் பதி(पति)யாக வரிக்கப்பட்டவர் (604) ஶ்ரீமதாம் வர:(श्रीमतांवरः)- வேதங்களாகிற ஶ்ரீயை உடைய ப்ரம்மாதி தேவர்களுள் சிறந்தவர்.

श्रीदः श्रीशः श्रीनिवासः श्रीनिधिः श्रीविभावनः ।
श्रीधरः श्रीकरः श्रेयः श्रीमांल्लोकत्रयाश्रयः ।।९४

ஸ்ரீத⁴: ஸ்ரீஶ: ஸ்ரீநிவாஸ: ஸ்ரீநிதி⁴: ஸ்ரீவிபா⁴வன: ।
ஸ்ரீத⁴ர: ஸ்ரீகர: ஶ்ரேய: ஸ்ரீமான் லோகத்ரயாஶ்ரய:।। 94

(605) ஸ்ரீத³:(श्रीदः)-பக்தர்களுக்கு ஸ்ரீயைக் கொடுப்பவர் *(606) ஸ்ரீஶ:*(श्रीशः)-மஹாலக்ஷ்மிக்குப் பதியாக இருப்பவர் *(607) ஸ்ரீநிவாஸ:*(श्रीनिवासः)- ஐஶ்வர்யம் உள்ளவர்களிடத்தில் நித்யமாக வஸிப்பவர் *(608) ஸ்ரீநிதி¹:*(श्रीनिधिः)-எல்லா ஸ்ரீகளும் இருப்பதற்கு இடமானவர் (ப-பா. भट्टभाष्यम्) ரத்தினத்திற்குப் பெட்டிபோல் மஹாலக்ஷ்மி தங்கும் இடமானவர் *(609) ஸ்ரீவிபா¹வன:* (श्रीविभावनः)- அவரவர்களது கர்மானுஸாரமாய் பலவித ஸ்ரீகளைக் கொடுப்பவர் *(610) ஸ்ரீத¹ர:* (श्रीधरः)- ஸர்வ பிராணிகளுக்கும் தாயான மஹாலக்ஷ்மியை மார்பில் தரிப்பவர் *(611) ஸ்ரீகர:*(श्रीकरः)- தன்னை தியானித்தும், துதித்தும் பூஜித்தும் வரும் பக்தர்களுக்கு எல்லா ஐஶ்வர்யங்களையும் உண்டு பண்ணுகிறவர் *(612) ஶ்ரேய:*(श्रेयः)-நித்ய ஸுக ரூபியாய் இருப்பவர் *(613) ஸ்ரீமான்*(श्रीमान्)-ஸர்வ ஸ்ரீகளையும் உடையவர் *(614) லோகத்ரயாஶ்ரய:* (लोकत्रयाश्रयः)- மூவுலகங்களுக்கும் ஆச்ரயமாக இருப்பவர்.

स्वक्षः स्वङ्गः शतानन्दो नन्दिर्ज्योतिर्गणेश्वरः ।
विजितात्माऽविधेयात्मा सत्कीर्तिश्छिन्नसंशयः ।।९५

ஸ்வக்ஷ: ஸ்வங்க³: ஶதானந்தோ³
நந்தி³ ஜ்யோதிர் க³ணேஶ்வர:।
விஜிதாத்மாऽவிதே⁴யாத்மா ஸத்³கீர்திஶ் சி²ன்னஸம்ஶய:।। 95

(615) ஸ்வக்ஷ:(स्वक्षः)-அழகிய கண்களை உடையவர் *(616) ஸ்வங்க:* (स्वङ्गः)- அழகான அவயவங்களை உடையவர் (ப-பா.भट्टभाष्यम्) மஹாலக்ஷ்மியும் அடிக்கடி ஆசைப்படத்தகுந்த திவ்ய மங்கள ரூபியாக இருப்பவர் *(617) ஶதா¹னந்த³:* (शतानन्दः)-ஒரே ஆனந்தம் உபா¹தி³பே⁴த³த்தில் (उपादिभेदम्) பலவிதமாக பிரிந்திருப்பதால் அளவற்ற ஆனந்தத்தை உடையவர் *(618) நந்தி³:*(नन्दिः)- பரமானந்த வடிவமாக இருப்பவர் *(619) ஜ்யோதிர் க³ணேஶ்வர:* (ज्योतिर्गणेश्वरः)-ஸூர்யன் முதலிய எல்லா தேஜஸ்ஸுகளுக்கும் ஈஶ்வரராக இருப்பவர் *(620) விஜிதாத்மா*(विजितात्मा)- நன்கு மனதை ஜெயித்தவர் *(621) அவிதே⁴யாத்மா*(अविधेयात्मा)-யாருக்கும் உட்படாத ஸ்வரூபத்தை உடையவர் *(622)*

ஸத்கீர்த்தி: **(सत्कीर्ति:)**- நல்லதான கீர்த்தியை உடையவர் (623)சி²ன்ன ஸம்ஶய:**(छिन्नसंशय:)**- எல்லாவற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பார்ப்பதால் ஸம்ஶயம் (ஸந்தேஹங்கள்) அற்றவர்.

उदीर्णः सर्वतश्चक्षुः अनीशः शाश्वतः स्थिरः ।
भूशयो भूषणो भूतिर्विशोकः शोकनाशनः ।। ९६

உதீ³ர்ண: ஸர்வத¹ஶ்சக்ஷு: அநீஶ: ஶாஶ்வத: ஸ்த்தி²ர:।
பூ⁴ஶயோ பூ⁴ஷணோ பூ⁴திர்விஶோக: ஶோகநாஶன:।।96

(624) உதீ³ர்ண:**(उदीर्ण:)**-எல்லா ப்ராணிகளுக்கும் மேலானவர் (625) ஸர்வதஸ் ச¹க்ஷு:**(सर्वतश्चक्षु:)**- தனது சிறந்த அறிவினால் எல்லாவற்றையும் பார்ப்பவர் (626) அநீஶ:**(अनीश:)**- தன்னைக்காட்டிலும் வேறு ஈஶ்வரனில்லாதவர் (627) ஶாஶ்வத ஸ்த்தி²ர:**(शाश्वतस्थिर:)**-எக்காலத்திலும் இருந்த போதிலும் மாறாமலிருப்பவர். (இது ஒரே அர்ச்சனை) (628) பூ⁴ஶய:**(भूशय:)**-ராமாவதாரத்தில் லங்கை செல்ல வழிகாண வேண்டி ஸமுத்ர ராஜனைக் குறித்து பூமியில் படுத்தவர் (629) பூ⁴ஷண: **(भूषण:)**- தனது இச்சையால் எடுத்த பல அவதாரங்களால் பூமியை அலங்கரித்தவர் (630) பூ⁴தி:**(भूति:)**- எல்லா ஐஶ்வர்யங்களுக்கும் காரணமானவர் (631) விஶோக:**(विशोक:)**-பரமானந்த ரூபியாக இருப்பதால் சோகமற்றவர் (632) ஶோக நாஶன:**(शोकनाशन:)**-நினைத்த மாத்திரத்தில் பக்தர்களின் சோகத்தைப் போக்குகிறவர்.

अर्चिष्मानर्चितः कुम्भो विशुद्धात्मा विशोधनः ।
अनिरुद्धोऽप्रतिरथः प्रद्युम्नोऽमितविक्रमः ।।९७

அர்ச்சி¹ஷ்மானர்ச்சி¹த: கும்போ⁴
விஶுத்³தா⁴த்மா விஶோத⁴ன: ।
அநிருத்³தோ⁴ऽப்ரதிரத²: ப்ரத்³யும்னோऽமிதவிக்ரம:।। 97

मन्त्रिणी दण्डिनीमुख्याः सेवार्थं यास्समागताः ।
शक्तयो विविधाकाराः तासां संख्या न विद्यते ।।३६
दिव्यौघा मानवौघाश्च सिद्धौघाश्च समागताः ।
तत्र श्रीललितादेवी सर्वेषां दर्शनं ददौ ।।३७
तेषु दृष्टोपविष्टेषु स्वे स्वे स्थाने यथाक्रमम् ।
ततः श्रीललितादेवी कटाक्षक्षेप चोदिताः ।। ३८
उत्थाय वशिनीमुख्या बद्धाञ्जलिपुटास्तदा ।
अस्तुवन्नाम साहस्रैः स्वकृतैः ललिताम्बिकाम् ।।३९

மந்த்ரிணீ த3ண்டி3னீமுக்2யா:ஸேவார்த்த2ம் யாஸ்ஸமாக3தா:
ஶக்தயோ விவிதா4காரா:
தா1ஸாம் ஸங்க்2யா ந வித்3யதே ।। 36
தி3வ்யௌகா4 மானவௌகா4ஶ்ச ஸித்3தௌ4காஶ்சஸமாக3தா:
தத்ர ஸ்ரீலலிதாதே3வீ ஸர்வேஷாம் த3ர்ஶனம் த3தௌ3 ।।
தேஷு த்3ருஷ்டோபவிஷ்டேஷு
ஸ்வே ஸ்வே ஸ்த்தா2னே யதா2க்ரமம் ।
தத: ஸ்ரீலலிதாதே3வீ கடாக்ஷ க்ஷேப சோதி3தா: ।। 38
உத்1தா2ய வஶினீமுக்2யா ப3த்3தா4ஞ்ஜலிபுடாஸ்ததா3 ।
அஸ்துவன் நாம ஸாஹஸ்ரை:
ஸ்வக்ருதை: லலிதாம்பி3காம் ।। 39

உண்டு பண்ணக்கூடியவைகளுமான எனது நாமங்களை அடையாளமாகக் கொண்ட மிகச்சிறந்த ஸ்தோத்ரத்தைச் செய்தனர். ஆகையால் தாங்கள் எனது ப்ரீதியை வளர்ப்பதற்கு இந்த ஸ்தோத்ரத்தை எப்பொழுதும் படியுங்கள். என்னுடைய இந்த ஸஹஸ்ரநாமத்தை பக்தர்களிடத்தில் பரவச் செய்யுங்கள். என்னுடைய இந்த ஸஹஸ்ர நாமத்தை அடிக்கடி எந்த பக்தன் படிக்கிறானோ அவன் எனக்கு ரொம்பவும் பிரியமானவன். அவனுக்கு எல்லா வரன்களையும் அளிக்கிறேன். *(38-44)*

ஸ்ரீ சக்ரத்தில் அர்ச்சனம் செய்து, ஸ்ரீ பஞ்ச த3ஶாக்ஷரியையும் ஜபித்து, பிறகு என்னுடைய ஸஹஸ்ரநாமத்தை என்னுடைய

श्रुत्वा स्तवं प्रसन्नाभूल्ललिता परमेश्वरी ।
ते सर्वे विस्मयं जग्मुः ये तत्र सदसि स्थिताः ।।४०

ततः प्रोवाच ललिता सदस्वान् देवतागणान् ।
ममाज्ञयैव वाग्देव्यः चक्रुः स्तोत्रमनुत्तमम् ।।४१
अङ्कितं नामभिः दिव्यैः मम प्रीतिविधायकैः ।
तत्पठध्वं सदा यूयं स्तोत्रं मत् प्रीतिवृद्धये ।।४२

ஶ்ருத்வா ஸ்தவம் ப்ரஸன்னாபூ^{4}ல்லலிதா பரமேஶ்வரீ।
தே ஸர்வே விஸ்மயம் ஜக்^{3}மு:
யே தத்ர ஸத^{3}ஸி ஸ்த்தி^{2}தா: ।। 40
தத: ப்ரோவாச லலிதா ஸத^{3}ஸ்வான் தே^{3}வதா க^{3}ணான்।
மமாஜ்ஞயைவ வாக்^{3} தே^{3}வ்ய:
சக்ரு: ஸ்தோத்ரமநுத்தமம் ।। 41
அங்கி^{1}தம் நாமபி^{4}: தி^{3}வ்யை: மம ப்ரீதி விதா^{4}யகை:।
தத் பட^{2}த்^{4}வம் ஸதா^{3} யூயம்
ஸ்தோத்ரம் மத் ப்ரீதி வ்ருத்^{3}த^{4}யே ।। 42

प्रवर्तयध्वं भक्तेषु मम नामसहस्रकम् ।
इदं नामसहस्रं मे यो भक्तः पठते सकृत् ।।४३
स मे प्रियतमो ज्ञेयः तस्मै कामान् ददाम्यहम् ।
श्रीचक्रे मां समभ्यर्च्य जप्त्वा पञ्चदशाक्षरीम् ।।४४
पश्चान्नामसहस्रं मे कीर्तयेन् मम तुष्टये ।
मामर्चयतु वा मा वा विद्यां जपतु वा न वा ।।४५

कीर्तयेन् नामसाहस्रं इदं मत् प्रीतये सदा ।
मत्प्रीत्या सकलान् कामान् लभते नात्र संशयः ।।४६
ப்ரவர்த்தயத்^{4}வம் ப^{4}க்தேஷு மம நாம ஸஹஸ்ரகம்।
இத^{3}ம் நாமஸஹஸ்ரம்மே யோ ப^{4}க்த: பட^{2}தேஸக்ருத்।।43

ஸ மே ப்ரியதமோ ஜ்ஞேய:
தஸ்மை காமான் த^{3}தா^{3}ம்யஹம் ।
ஸ்ரீசக்ரே மாம் ஸமப்^{4}யர்ச்ய
ஜப்த்வா பஞ்ச த^{3}ஶாக்ஷரீம் ।। 44
பஶ்சான் நாம ஸஹஸ்ரம் மே
கீர்த்தயேன் மம துஷ்டயே ।
மாமர்ச்சயது வா மா வா
வித்^{3}யாம் ஜபது வா ந வா ।। 45
கீர்த்தயேன் நாம ஸாஹஸ்ரம் இத^{3}ம் மத் ப்ரீதயே ஸதா^{3}।
மத் ப்ரீத்யா ஸகலான் காமான்
லப^{4}தே நாத்ர ஸம்ஶய: ।। 46

तस्मान्नामसहस्रं मे कीर्तयध्वं सदादरात् ।
इति श्रीललितेशानी शास्ति देवान् सहानुगान् ।।४७

तदाज्ञया तदारभ्य ब्रह्म विष्णु महेश्वराः ।
शक्तयो मन्त्रिणीमुख्या इदं नामसहस्रकम् ।।४८

पठन्ति भक्त्या सततं ललिता परितुष्टये ।
तस्मादवश्यं भक्तेन कीर्तनीयमिदं मुने ।।४९

தஸ்மான் நாம ஸஹஸ்ரம்மே கீர்த்தயத்^{4}வம் ஸதா^{3}த^{3}ராத்।
இதி ஸ்ரீலலிதேஶானீ ஶாஸ்தி தே^{3}வான்ஸஹாநுகா^{3}ன்।।47
ததா^{3}ஞயா ததா^{3}ரப்^{4}ய ப்^{3}ரம்ஹ விஷ்ணு மஹேஶ்வரா:।
ஶக்தயோ மந்த்ரிணீமுக்^{2}யா இத^{3}ம் நாமஸஹஸ்ரகம்।। 48
பட^{2}ந்தி ப^{4}க்த்யா ஸததம் லலிதா பரிது^{1}ஷ்டயே ।
தஸ்மாத^{3}வஶ்யம் ப^{4}க்தேன கீர்த்தனீயமித^{3}ம் முனே।। 49

திருப்தியின் பொருட்டு ஜபிக்க வேண்டும். என்னை அர்ச்சித்தாலும், அர்ச்சிக்காமல் போனாலும், என்னுடைய பஞ்சத^{3}ஶாக்ஷரியை ஜபித்தாலும், ஜபிக்காவிட்டாலும், இந்த ஸஹஸ்ரநாமத்தை என்னுடைய திருப்திக்காக எப்பொழுதும் ஜபிக்க வேண்டும். என்னுடைய திருப்தி ஏற்பட்டால் ஸர்வ அபீஷ்டங்களையும் அடைவான். இதில் சந்தேகமில்லை. ஆதலால் என்னுடைய ஸஹஸ்ரநாமத்தை அன்புடன் எப்பொழுதும் ஜபியுங்கள். *(45-47)*

आवश्यकत्वे हेतुस्ते मया प्रोक्तो मुनीश्वर ।
इदानीं नामसाहस्त्रं वक्ष्यामि श्रद्धया शृणु ।। ५०
।। इति ललितानामसहस्त्र पूर्वभागो नाम प्रथमोऽध्यायः ।।

ஆவஶ்யக[1]த்வே ஹேதுஸ்தே
மயா ப்ரோக்தோ முனீஶ்வர ।
இதா[3]னீம் நாம ஸாஹஸ்ரம்
வக்ஷ்யாமி ஶ்ரத்[3]த[4]யா ஶ்ருணு ।। 50

இதி லலிதாநாமஸஹஸ்ர பூர்வபா[4]கோ[3] நாம
ப்ரத[2]மோऽத்[4]யாய: ।।

பரிவாரங்களுடன் கூடிய எல்லா தேவர்களையும், ஸ்ரீ லலிதா தேவியானவள் இம்மாதிரி கட்டளை இட்டாள். ப்ரும்மா, விஷ்ணு, பரமசிவன், இவர்களும் மந்த்ரிணீயைப் பிரதானமாகக் கொண்ட சக்திகளும் அது முதற்கொண்டு அம்பாளுடைய ஆக்ஞையால் அம்பாளுடைய திருப்தியின் பொருட்டு எப்பொழுதும் பக்தியுடன் படிக்கிறார்கள். ஓ முனிவரே! ஆகையால் அவஶ்யம் பக்தனானவன் இந்த ஸஹஸ்ரநாமத்தை ஜபிக்க வேண்டும். ஓ முனீஶ்வரா! இது அவஶ்யமென்கிற காரணத்தினால் நான் தங்களுக்குச் சொன்னேன்.

இப்பொழுது ஸஹஸ்ரநாமத்தை சொல்லப்போகிறேன். சிரத்தையுடன் கேளும். *(48-50)*

अस्य श्री ललिता सहस्त्रनाम स्तोत्र महामन्त्रस्य। वशिन्यादि वाग्देवता ऋषयः । अनुष्टुप् छन्दः । श्री ललिता परमेश्वरी देवता । श्रीमद्वाग्भवकूटेति बीजम्। मध्यकूटेति शक्तिः । शक्ति कूटेति कीलकम्। मूलप्रकृतिरिति ध्यानम् । श्री ललिता महात्रिपुर सुन्दरी प्रसाद सिद्धि द्वारा चिन्तित फलावास्यर्थे जपे विनियोगः। मूलमन्त्रेण अङ्गन्यासं करन्यासं च कुर्यात्।

அஸ்ய ஶ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய । வஶின்யாதி3 வாக்3தே3வதா ரிஷய: । அநுஷ்டு2ப் ச2ந்த: । ஶ்ரீ லலிதா பரமேஶ்வரீ தே3வதா । ஶ்ரீமத்3 வாக்3ப4வ கூடேதி பீ3ஜம் । மத்4ய கூடேதி ஶக்தி:। ஶக்தி கூடேதி கீலகம் । மூல ப்ரக்ருதிரிதி த்4யானம் ।

ஶ்ரீ லலிதா மஹாத்ரிபுர ஸுந்த3ரீ ப்ரஸாத3 ஸித்3தி4 த்3வாரா சி1ந்தி1த ப2லாவாப்த்யர்த்தே2 ஜபே விநியோக3: । மூலமந்த்ரேண அங்க3ன்யாஸம் கரன்யாஸம் ச குர்யாத் ।

।। ध्यानम् ।।

सिन्दूरारुण विग्रहां त्रिनयनां माणिक्य मौलिस्फुर-
त्तारा नायक शेखरां स्मितमुखीमापीन वक्षोरुहाम् ।
पाणिभ्यामलिपूर्ण रत्न चषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थ रक्तचरणां ध्यायेत् परां अम्बिकाम् ।।

।। த்4யானம் ।।

ஸிந்தூ3ராருண விக்3ரஹாம் த்ரி நயனாம்
மாணிக்ய மௌலிஸ்ப்பு2ர-
த்தா1ரா நாயக ஶேக2ராம் ஸ்மிதமுகீ2-
மாபீன வக்ஷோருஹாம் ।

பாணிப்4யாமலிபூர்ண ரத்ன ச1ஷகம்
ரக்தோத்பலம் பி3ப்4ரதீம்
ஸௌம்யாம் ரத்ன க4டஸ்த்த2 ரக்த சரணாம்
த்4யாயேத் பராம் அம்பி3காம் ।।

இனி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் கூறப்படுகிறது.

।। श्रीललिता सहस्रनाम स्तोत्रम् ।।

।। ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ।।

श्रीमाता श्रीमहाराज्ञी श्रीमत् सिंहासनेश्वरी ।
चिदग्निकुण्डसम्भूता देवकार्य समुद्यता ।। १
उद्यद्भानु सहस्राभा चतुर्बाहु समन्विता ।
रागस्वरूप पाशाढ्या क्रोधाकारांकुशोज्वला ।। २
मनोरूपेक्षुकोदण्डा पञ्चतन्मात्रसायका ।
निजारुण प्रभापूरमज्ज्रद् ब्रह्माण्ड मण्डला ।। ३

ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேஶ்வரீ ।
சிதக்3னிகுண்ட3 ஸம்பூ4தா தே3வகார்ய ஸமுத்3யதா ।। 1

உத்3யத்3பா4னு ஸஹஸ்ராபா4 சதுர்பா3ஹு ஸமன்விதா ।
ராக3ஸ்வரூப பாஶாட்4யா
க்ரோதா4காராங்குஶோஜ்வலா ।। 2

மனோ ரூபேக்ஷுகோத3ண்டா3 பஞ்சதன்மாத்ர ஸாயகா ।
நிஜாருண ப்ரபா4பூர மஜ்ஜத் ப்3ரஹ்மாண்ட3மண்ட3லா ।।3

த்4யானம்

குங்குமம் போன்ற சிவப்பான சரீரம் உடையவளும், மூன்று கண்களை உடையவளும், மாணிக்கங்கள் வைத்து இழைத்த ரத்ன கிரீடத்தில் ப்ரகாசிக்கின்ற சந்திரனை ஶிரோ-பூ4ஷணமாக (**शिरोभूषणम्**) உடையவளும், புன் சிரிப்புடன் கூடியவளும், பெருத்த ஸ்தனங்களை உடையவளும், வண்டுகளால் சூழப்பட்ட ரத்ன கலசத்தையும், சிவந்த

अस्य श्री ललिता सहस्रनाम स्तोत्र महामन्त्रस्य। वशिन्यादि वाग्देवता ऋषयः । अनुष्टुप् छन्दः । श्री ललिता परमेश्वरी देवता । श्रीमद्वाग्भवकूटेति बीजम्। मध्यकूटेति शक्तिः । शक्ति कूटेति कीलकम्। मूलप्रकृतिरिति ध्यानम् । श्री ललिता महात्रिपुर सुन्दरी प्रसाद सिद्धि द्वारा चिन्तित फलावास्यर्थे जपे विनियोगः। मूलमन्त्रेण अङ्गन्यासं करन्यासं च कुर्यात्।

அஸ்ய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய । வஶின்யாதி3 வாக்3தே3வதா ரிஷய: । அநுஷ்டு2ப் ச2ந்த: । ஸ்ரீ லலிதா பரமேஶ்வரீ தே3வதா । ஸ்ரீமத்3 வாக்3ப4வ கூடேதி பீ3ஜம் । மத்4ய கூடேதி ஶக்தி:। ஶக்தி கூடேதி கீலகம் । மூல ப்ரக்ருதிரிதி த்4யானம் ।

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுர ஸுந்த3ரீ ப்ரஸாத3 ஸித்3தி4 த்3வாரா சி1ந்தி1த ப2லாவாப்த்யர்த்தே2 ஜபே விநியோக3: । மூலமந்த்ரேண அங்க3ன்யாஸம் கரன்யாஸம் ச குர்யாத் ।

।। ध्यानम् ।।

सिन्दूरारुण विग्रहां त्रिनयनां माणिक्य मौलिस्फुर-
त्तारा नायक शेखरां स्मितमुखीमापीन वक्षोरुहाम् ।
पाणिभ्यामलिपूर्ण रत्न चषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थ रक्तचरणां ध्यायेत् परां अम्बिकाम् ।।

।। த்4யானம் ।।

ஸிந்தூ3ராருண விக்3ரஹாம் த்ரி நயனாம்
மாணிக்ய மௌலிஸ்ப்பு2ர-
த்தா1ரா நாயக ஶேக2ராம் ஸ்மிதமுகீ2-
மாபீன வக்ஷோருஹாம் ।

பாணிப்4யாமலிபூர்ண ரத்ன ச1ஷகம்
ரக்தோத்பலம் பி3ப்4ரதீம்
ஸௌம்யாம் ரத்ன க4டஸ்த்த2 ரக்த சரணாம்
த்4யாயேத் பராம் அம்பி3காம் ।।

இனி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் கூறப்படுகிறது.

।। श्रीललिता सहस्रनाम स्तोत्रम् ।।

।। ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ।।

श्रीमाता श्रीमहाराज्ञी श्रीमत् सिंहासनेश्वरी।
चिदग्निकुण्डसम्भूता देवकार्य समुद्यता ।। १
उद्यद्भानु सहस्राभा चतुर्बाहु समन्विता ।
रागस्वरूप पाशाढ्या क्रोधाकारांकुशोज्वला ।। २
मनोरूपेक्षुकोदण्डा पञ्चतन्मात्रसायका ।
निजारुण प्रभापूरमज्जद् ब्रह्माण्ड मण्डला ।। ३

ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேஶ்வரீ ।
சிதக்3னிகுண்ட3 ஸம்பூ4தா தே3வகார்ய ஸமுத்3யதா ।। 1

உத்3யத்3பா4னு ஸஹஸ்ராபா4 சதுர்பா3ஹு ஸமன்விதா ।
ராக3ஸ்வரூப பாஶாட்4யா
க்ரோதா4காராங்குஶோஜ்வலா ।। 2

மனோ ரூபேக்ஷுகோத3ண்டா3 பஞ்சதன்மாத்ர ஸாயகா ।
நிஜாருண ப்ரபா4பூர மஜ்ஜத் ப்3ரஹ்மாண்ட3மண்ட3லா ।।3

த்4யானம்

குங்குமம் போன்ற சிவப்பான சரீரம் உடையவளும், மூன்று கண்களை உடையவளும், மாணிக்கங்கள் வைத்து இழைத்த ரத்ன கிரீடத்தில் ப்ரகாசிக்கின்ற சந்திரனை ஶிரோ-பூ4ஷணமாக (शिरोभूषणम्) உடையவளும், புன் சிரிப்புடன் கூடியவளும், பெருத்த ஸ்தனங்களை உடையவளும், வண்டுகளால் சூழப்பட்ட ரத்ன கலசத்தையும், சிவந்த

தாமரையையும் இரண்டு கைகளில் வைத்திருப்பவளும், அழகு வாய்ந்தவளும், ரத்னங்கள் நிரம்பிய குடத்தின் மீது வைக்கப்பட்ட சிவந்த கால்களை உடையவளும், பராசக்தியுமான ஸ்ரீஅம்பாளை த்யானம் செய்யவும்.

1. **श्रीमाता** - சிறந்த தாயாக விளங்குகிறவள், முதலில் தாய் எனக் கூறியது. தொட்டிலில் இருக்கும் சிறு குழந்தை தனக்குப் பசியோ, தாகமோ, ஏற்பட்டதும், "அம்மா" என்றே அழைப்பதைக் காண்கிறோம். அதுபோல் தாப த்ரயத்தால் **(तापत्रयम्)** தவித்து வாடும் நாம், நமது துயரத்தை நீக்கிக் கொள்ள சிறந்த தாயான ஸ்ரீ லலிதாதேவியை வாக்கினால் அழைக்க வேண்டும் என்பது வெளியாகிறது.

2. **श्रीमहाराज्ञी** -சிறந்த ராணியாக விளங்குகிறவள், அதாவது எல்லா உலகங்களையும் காக்கிறவள்.

3. **श्रीमत् सिंहासनेश्वरी** - சிறந்த ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருக்கிறவள்.

4. **चिदग्निकुण्डसम्भूता**-சி[1]த[3]க்[3]னிகுண்ட[3] **(चिदग्निकुण्डम्)**த்திலிருந்து உண்டானவள். பண்டாசுரனால் பீடிக்கப்பட்ட தேவர்கள் பத்து மைல் அகலமுள்ள ஓர் அக்னி குண்டத்தைச் செய்தனர். அதற்கு சிதக்னி குண்டம் எனப் பெயர். அதில் தங்கள் மாம்ஸத்தை ஹோமம் செய்து அம்பாளை வேண்டினர். அப்பொழுதும் அம்பாள் வராததால் தங்கள் சரீரத்தையே ஹோமம் செய்ய முயன்றனர். அது ஸமயம் அந்த குண்டத்திலிருந்து ஸ்ரீ அம்பாள் உண்டாகி பண்டாஸுரனை வதம் செய்தாள் என ப்ரம்மாண்ட புராணத்தில் கூறியதை அறியவும்.

5. **देवकार्य समुद्यता** - தேவர்களின் கார்யங்களில் முயற்சி கொண்டவள்.

6. **उद्यद्भानु सहस्राभा** - உதிக்கின்ற ஆயிரக்கணக்கான சூர்யர்களின் காந்தியை**(कान्तिः)** உடையவள்.

7. **चतुर्बाहु समन्विता** - நான்கு கைகளுடன் கூடியவள்.

8. **रागस्वरूप पाशाढ्या** - இச்சையாகிற பாசக் கயிற்றை வைத்திருப்பவள். (இடது பக்கத்தில் உள்ள இரண்டு கைகளில் கீழ் கையில் இந்தப் பாசக்கயிற்றைத் தரிக்கிறாள் எனக் கருத்து)

चम्पकाशोक पुन्नाग सौगन्धिक लसत्कचा ।
कुरुविन्दमणिश्रेणी कनत्कोटीरमण्डिता ।।४
अष्टमी चन्द्रविभ्राजदलिकस्थल शोभिता ।
मुखचन्द्र कलङ्काभ मृगनाभिविशेषका ।।५

ச1ம்பகாஶோக புந்நாக3 ஸௌக3ந்தி4க லஸத் க1சா1 ।
கு1ருவிந்த3 மணி ஶ்ரேணீ கனத்கோடீர மண்டி3தா ।। 4
அஷ்டமீ சந்த்3ர விப்4ராஜ த3லிகஸ்த்த2ல ஶோபி4தா ।
முக2 சந்த்3ர கலங்கா1ப4 ம்ருக3 நாபி4 விஶேஷகா1 ।। 5

---

9. **क्रोधाकारांकुशोज्वला** - கோப ரூபமான ஆயுதமாகிற அங்குசத்தால் ப்ரகாசிக்கிறவள். துஷ்டர்களை நிக்ரஹம் செய்ய வலது பக்கத்தில் உள்ள இரண்டு கைகளில் கீழ் கையில் அங்குசம் என்னும் இந்தக் கோடாரியைத் தரிக்கிறாள் எனக் கருத்து.

10. **मनोरूपेक्षुकोदण्डा** - மனதின் உருவமாகிய செங்கரும்பாகிற வில்லை, இடது பக்கத்தில் உள்ள மேல் கையில் தரிக்கிறவள்.

11. **पञ्चतन्मात्रसायका** - சப்தம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், க3ந்த4ங்களின் **(गन्धम्)** உருவமாகிய புஷ்பங்களை பாணங்களாக உடையவள். ஐந்து புஷ்பங்களான தாமரை, சிவப்பு ஆம்பல், செங்கழநீர், நீலோத்பலம், ஸஹகாரம் என்ற மாம்பூ இவைகளை வலது பக்கத்தில் உள்ள இரண்டு கைகளில் மேல் கையில் தரிக்கிறாள் எனக் கருத்து.

12. **निजारुण प्रभापूरमज्जद् ब्रह्माण्ड मण्डला** - தனது சிவப்பு நிறத்தின் காந்தியின் **(कान्ति)** பிரவாஹத்தில் பிரும்மாண்டங்கள் யாவற்றையும் முழுகச் செய்தவள்.

13. **चम्पकाशोक पुन्नाग सौगन्धिक लसत्कचा** - சம்பகம், அசோகம், புன்னாகம், ஸௌகந்திகம் என்ற புஷ்பங்களால் பிரகாசிக்கின்ற கூந்தலை உடையவள். ஸ்ரீஅம்பாளின் கூந்தலில் இயற்கையாகவே வாஸனை இருப்பதால் சம்பகம் முதலிய புஷ்பங்களால் பிரகாசிக்கின்ற கூந்தல் எனக் கூறப்பட்டுள்ளது. ஆதலால்தான் ஹாலாஸ்ய மஹாத்ம்யம் என்ற திருவிளையாடற்புராணத்தில்-

वदनस्मर माङ्गल्य गृहतोरण चिल्लिका ।
वक्त्र लक्ष्मी परीवाह चलन्मीनाभ लोचना ॥६
नवचम्पक पुष्पाभ नासादण्ड विराजिता ।
ताराकान्ति तिरस्कारि नासाभरण भासुरा ॥७
कदम्ब मञ्जरीक्लुप्त कर्णपूर मनोहरा ।
ताटङ्कयुगलीभूत तपनोडुप मण्डला ॥८

வத[3]னஸ்மர மாங்க[3]ல்ய க்[3]ருஹதோ[1]ரண சில்லிகா ।
வக்த்ர லக்ஷ்மீ பரீவாஹ சலன்மீனாப[4] லோசனா ॥ 6
நவசம்பக புஷ்பாப[4] நாஸா த[3]ண்ட[3] விராஜிதா ।
தாராகாந்தி திரஸ்காரி நாஸாப[4]ரண பா[4]ஸுரா ॥ 7
கத[3]ம்ப மஞ்ஜரீக்லுப்த கர்ணபூர மனோஹரா ।
தாடங்க[3]யுக[3]லீ பூ[4]த தபனோடு[3]ப மண்ட[3]லா ॥ 8

ज्ञानासि पुष्पगन्धान् भ्रमरत्वं ब्रूहि तत्वतो मेऽद्य।
ஞானாஸி புஷ்பக[3]ந்தா[4]ன் ப்[4]ரமரத்வம் ப்[3]ரூஹி தத்வதோ மேऽத்[3]ய

என்று நக்கீரன் என்ற மஹாகவியின் முன்னிலையில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேச்வரரின் பிரஸாதத்தை அடைந்த பக்தன் அம்பாளுடைய தலைப் பின்னலில் இயற்கையாகவே வாஸனை இருப்பதாகக் கூறினான்.

14. **कुरुविन्दमणिश्रेणी कनत्कोटीरमण्डिता** - *கு[1]ருவிந்த[3]ம்* **(कुरुविन्दमणि)** *என்ற பத்மராகக் கற்களின் வரிசையால் பிரகாசிக்கின்ற கிரீடத்தால் அலங்கரிக்கப்பட்டவள். இந்த கு[1]ருவிந்த[3]ம் என்ற பத்மராக மணியை நினைத்தாலே கோரியவைகள், யாவரிடத்திலும் அன்பு, மங்களம், விஷ்ணு பக்தி இவைகள் நிரம்ப உண்டாகும். இதைக் கூறிய கருட-புராண ஶ்லோகம்.*

कामानुरागाः कुरुविन्दजेषु शनैर्न तादृक् स्फटिकोद्भवेषु ।
माङ्गल्ययुक्ता हरिभक्तिदाश्च वृद्धिप्रदास्ते स्मरणाद्भवन्ति ॥

காமானுராகா[3]: கு[1]ருவிந்த[3]ஜேஷு
ஶனைர்ந தாத்[3]ருக் ஸ்ப[2]டிகோத்[3]ப[4]வேஷு ।
மாங்க[3]ல்ய யுக்தா ஹரிப[4]க்திதா[3]ஶ்ச
வ்ருத்[3]தி[4]ப்ரதா[3]ஸ்தே ஸ்மரணாத்[3]ப[4]வந்தி ॥

இந்த குருவிந்த என்ற பத்மராக மணிகள் பதிக்கப்பட்ட கிரீடத்தைத் தரித்த ஸ்ரீ அம்பாளை த்யானித்தால் காமம் (விரும்பிய) முதலிய ஸகல பாக்யங்களும் உண்டாகும் என்பது விளங்குகிறது.

15. **अष्टमी चन्द्रविभ्राजदलिकस्थल शोभिता** - அஷ்டமீ திதியில் உள்ள அர்த சந்திரனால் **(अर्धचन्द्रः)** பிரகாசிக்கின்ற நெற்றியோடு விளங்குகிறவள்.

16. **मुखचन्द्र कलङ्काभ मृगनाभिविशेषका** - சந்திர மண்டலத்தில் களங்கம் இருப்பது போல் முகமாகிற சந்திர மண்டலத்தில் களங்கம் போன்ற கஸ்தூரீ திலகத்தை உடையவள்.

17. **वदनस्मर माङ्गल्य गृहतोरण चिल्लिका** - அம்பாளுடைய முகமாகிற மன்மதனுடைய மங்கள க்ருஹத்திற்கு தோரணம் போல் அமைந்துள்ள புருவத்தை உடையவள். அதாவது அம்பாளுடைய முகம் மன்மதனுடைய க்ருஹம் போலும், அம்பாளுடைய புருவம் தோரணம் போலும் உள்ளது எனக் கருத்து.

18. **वक्त्र लक्ष्मी परीवाह चलन्मीनाभ लोचना** - முகத்தின் சோபையாகிற**(शोभा)** ஜல ப்ரவாஹத்தில் ஸஞ்சரிக்கின்ற இரண்டு மீன்கள் போன்ற கண்களை உடையவள். அதுபோல் அம்பாள் தன் கடைக்கண்களினாலேயே பக்தர்களை வளர்க்கிறாள் என்று பொருள்.

19. **नवचम्पक पुष्पाभ नासा दण्ड विराजिता** - புதிதாக மலர்ந்த சம்பகப்பூ போன்ற நாஸிகையினால் பிரகாசிக்கின்றவள்.

20. **ताराकान्ति तिरस्कारि नासाभरण भासुरा** - தாரகா தேவியின் காந்தியை **(कान्ति)** தோல்வியடையச் செய்யும் ரத்னமயமான மூக்குத்தியை உடையவள்.

21. **कदम्ब मञ्जरीक्लृप्त कर्णपूर मनोहरा**- கதம்பத் தளிரை, காதின் மேல்பாகத்தில் வைத்திருப்பதால் மனோஹரமாக இருப்பவள்.

22. **ताटङ्कयुगलीभूत तपनोडुप मण्डला** - சூரிய சந்திரர்களை இரண்டு தாடங்கங்களாகக் **(ताटङ्कम्)** கொண்டவள். ஸுமங்கலிகள் காதில் தரிக்கும் தோடுகளினால்தான் பர்த்தாவுக்கு ஆயுஸ் முதலிய க்ஷேமங்கள் வளர்கின்றன. அதே போல் மூக்குத்தி தரிப்பதாலும் ஸகல க்ஷேமங்களும் உண்டாகுமாம்.

पद्मनागशिलादर्श परिभावि कपोलभूः ।
नवविद्रुम बिम्बश्रीन्यक्कारि दशनच्छदा ॥९
शुद्धविद्याङ्कुराकार द्विजपङ्क्ति द्वयोज्वला ।
कर्पूरवीटिकामोद समाकर्षद्दिगन्तरा ॥१०

பத்3மநாக3 ஶிலாத3ர்ஶ பரிபாவி4 கபோலபூ4: ।
நவ வித்3ரும பி3ம்ப3ஸ்ரீன்யக்காரி த3ஶனச்ச2தா3 ॥ 9
ஶுத்3த4வித்3யாங்குராகார த்3விஜபங்க்தி
த்3வயோஜ்வலா ।
கற்பூர வீடிகாமோத3 ஸமாகர்ஷத் தி3க3ந்தரா ॥10

---

23. पद्मनागशिलादर्श परिभावि कपोलभूः - பத்மராகக் கல்லினால் செய்த கண்ணாடியை அவமதிக்கச் செய்யும் கன்னங்களை உடையவள்.

24. नवविद्रुम बिम्बश्रीन्यक्कारि दशनच्छदा - புதிதான பவழம், கோவைப்பழம், இவ்விரண்டையும் திரஸ்கரிக்கின்ற உதடுகளை உடையவள்.

25. शुद्धविद्याङ्कुराकार द्विज पङ्क्ति द्वयोज्वला - அக்ஞானத்தைப் போக்கும் ஷோட3ஶாக்ஷரீ **(षोडशाक्षरी)** வித்யையின் முனைபோன்ற பதினாறு (16) பற்களுள்ள இரண்டு வரிசைகளால் பிரகாசிக்கின்றவள்.

26. कर्पूरवीटिकामोद समाकर्षद्दिगन्तरा - ஏலம், லவங்கம், கஸ்தூரீ, குங்குமப்பூ முதலியவைகள் சேர்ந்த வாக்கிலுள்ள தாம்பூல விசேஷத்தின் வாஸனையினால் இழுக்கப்பட்ட பத்து திசைகளில் உள்ள தேவதைகளுடன் கூடியவள்.

27. निजसल्लाप माधुर्य विनिर्भर्त्सितकच्छपी - தனது பேச்சின் இனிமையால் ஸரஸ்வதியின் வீணையை தோல்வி அடையும்படிச் செய்தவள்.

28. मन्दस्मित प्रभापूरमज्जत् कामेशमानसा - சிறந்த புன்சிரிப்பின் காந்தி **(कान्ति)** ப்ரவாஹத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் காமேஶ ரூபத்தை **(कामेशरूपम्)** எடுத்து, ஸ்ரீலலிதையை விவாஹம் செய்து கொண்ட ஸ்ரீ பரமேஶ்வரரின் மனதை உடையவள். அதாவது ஸ்ரீபரமசிவனின் மனம் அம்பாளின் புன்சிரிப்பின் காந்தி **(कान्ति)** ப்ரவாஹத்தில் மூழ்கியுள்ளது.

निजसल्लाप माधुर्य विनिर्भर्त्सितकच्छपी ।
मन्दस्मित प्रभापूरमज्जत् कामेशमानसा ॥११
अनाकलितसादृश्य चुबुक श्रीविराजिता ।
कामेश बद्ध माङ्गल्य सूत्र शोभित कन्धरा ॥१२
कनकाङ्गद केयूर कमनीय भुजान्विता ।
रत्नग्रैवेयचिन्ताकलोल मुक्ताफलान्विता ॥१३

நிஜஸல்லாப1 மாது4ர்ய விநிர்ப4ர்த்ஸித க1ச்ச2பீ1 ।
மந்த3ஸ்மித ப்ரபா4பூர மஜ்ஜத் காமேஶ மானஸா ॥ 11
அநாக1லித ஸாத்3ருஶ்ய சு1பு3க ஶ்ரீ விராஜிதா ।
காமேஶ ப3த்த4 மாங்க3ல்ய ஸூத்ர ஶோபி4தகந்த3ரா ॥12
கனகாங்க3த3 கேயூர கமனீய பு4ஜான்விதா ।
ரத்னக்3ரைவேய சிந்தா கலோல முக்தாப2லான்விதா ॥13

---

29. अनाकलितसादृश्य चुबुक श्रीविराजिता - (வாக்தேவதை முதலியவர்களால் கூட) ஒப்பிட்டுச் சொல்ல முடியாத முகவாய்க் கட்டையின் அழகினால் விளங்குகிறவள்.

30. कामेश बद्ध माङ्गल्यसूत्र शोभित कन्धरा - காமேஶனான பரமசிவனால் விவாஹ காலத்தில் கட்டப்பட்ட மாங்கல்ய ஸூத்ரமாகிய திருமாங்கல்யத்தை உடையவள்.

31. कनकाङ्गद केयूर कमनीय भुजान्विता - தங்கமயமான அங்கதம், கேயூரம், என்ற தோள் வளைகளால் அழகு வாய்ந்த நான்கு கைகளை உடையவள்.

32. रत्नग्रैवेय चिन्ता कलोल मुक्ताफलान्विता - ரத்னங்கள் வைத்து இழைத்த அட்டிகையில் (க1ண்டா2ப4ரணத்தில்-कण्ठाभरणम्) தொங்குகின்ற பதக்கத்துடனும், அசைகின்ற முத்து மாலையுடனும் கூடியவள்.

33. कामेश्वर प्रेमरत्न मणिप्रतिपणस्तनी - காமேஶ்வரராகிய ஸ்ரீ பரமேஶ்வரரின் அன்பாகிற ரத்னத்திற்குப் பதிலாக மணிபோல் மிகச் சிறந்த இரண்டு ஸ்தனங்களையும் ஸ்ரீ பரமசிவனுக்கு கொடுத்தவள்.

कामेश्वर प्रेमरत्न मणिप्रतिपणस्तनी ।
नाभ्यालबाल रोमालि लता फल कुचद्वयी ।।१४
लक्ष्यरोमलताधारतासमुन्नेयमध्यमा ।
स्तनभारदलन् मध्यपट्टबन्ध वलित्रया ।।१५

காமேஶ்வர ப்ரேம ரத்ன மணிப்ரதி1 ப1ண ஸ்தனீ ।
நாப்4யால பா3லரோமாலி லதாப2ல கு1ச1 த்3வயீ ।। 14
லக்ஷ்ய ரோம லதாதா4ர தா1ஸமுன்னேய மத்4யமா ।
ஸ்தனபா4ர தலன் மத்4ய பட்டப3ந்த4 வலித்ரயா ।।15

---

34. नाभ्यालबाल रोमालि लता फल कुचद्वया - *தொப்புளாகிற பாத்தியிலிருந்து வளர்ந்த ரோமங்களின் வரிசையாகிற கொடியின் பழங்கள் போன்ற இரண்டு ஸ்தனங்களை உடையவள்.*

35. लक्ष्यरोमलताधार तासमुन्नेय मध्यमा - *நன்கு தெரிகின்ற ரோமங்களாகிற கொடிக்கு ஆதாரமாக இருத்தலால் யூகிக்கத் தகுந்த மத்ய பாகத்தை (இடுப்பை) உடையவள்.*

36. स्तनभारदलन् मध्य पट्टबन्ध वलित्रया - *ஸ்தனங்களின் சுமையினால் முறிந்து விடுமே என எண்ணி இடுப்பிற்காகத் தங்கப் பட்டங்கள் போல் விளங்குகிற மூன்று மடிப்புச் சதைகளை உடையவள். உத்தம ஸ்த்ரீ புருஷர்களுக்கு நெற்றி, கழுத்து, இடுப்பு, இம்மூன்று இடங்களிலும் மூன்று மடிப்புச் சதைகள் இருக்குமென்றும், அது சிறந்த பாக்யத்தை ஸூசிப்பிக்கக் கூடியதென்றும், ஸாமுத்ரிகா லக்ஷணத்தில் கூறியிருக்கும் ச்லோகமாவது-*

ललाटे च गळे चैव मध्येचापि वलि त्रयम् ।
स्त्री पुंसयोरिदं ज्ञेयं महासौभाग्य सूचकम् ।।

லலாடே ச க3ளே சை1வ மத்4யேசா1பி வளி த்ரயம் ।
ஸ்த்ரீ பும்ஸயோரித3ம் ஜ்ஞேயம்
மஹாஸௌபா4க்3ய ஸூச1கம் ।।

37. अरुणारुण कौसुम्भ वस्त्र भास्वत्कटीतटी - *ஸூர்யனின் தேரோட்டியான அருணனைப் போல் சிவந்த நிறமுள்ள குஸும்ப4 வஸ்திரத்தினால்* (कौसुम्भवस्त्रम्) *பிரகாசிக்கின்ற இடுப்பு ப்ரதேசத்தை உடையவள்.*

अरुणारुण कौसुम्भ वस्त्र भास्वत्कटीतटी ।
रत्नकिङ्किणिका रम्यरशनादामभूषिता ।। १६
कामेशज्ञात सौभाग्य मार्दवोरुद्वयान्विता ।
माणिक्य मकुटाकार जानुद्वय विराजिता ।। १७

அருணாருண கௌஸும்ப4 வஸ்த்ர பா4ஸ்வத்கடீ தடீ।
ரத்னகிங்கிணிகா ரம்யரஶனாதா3ம பூ4ஷிதா ।। 16
காமேஶஜ்ஞாத ஸௌபா4க்3ய மார்த3வோருத்3வயான்விதா।
மாணிக்ய மகுடாகார ஜானுத்3வய விராஜிதா ।। 17

---

38. रत्नकिङ्किणिका रम्यरशनादामभूषिता - ரத்னங்கள் பதிக்கப்பட்ட சின்ன மணிகளால் அழகு வாய்ந்த ஒட்டியாணத்தால் அலங்கரிக்கப்பட்டவள்.

39. कामेशज्ञात सौभाग्य मार्दवोरु द्वयान्विता - காமே-ஶனான ஸ்ரீ பரமசிவனால் மட்டிலும் அறியப்பட்ட தொடை-களின் அழகு, ம்ருதுவாக இருக்கும் தன்மை இவைகளை உடையவள்.

40. माणिक्य मकुटाकार जानुद्वय विराजिता - ஒரே மாணிக்கத்தால் செய்யப்பட்ட தொப்பி போன்ற இரண்டு முழங்கால்களால் பிரகாசிக்கின்றவள்.

41. इन्द्रगोप परिक्षिप्त स्मर तूणाभ जङ्घिका - மின்மினிப் பூச்சிகள் பதிக்கப்பட்ட மன்மதனின் அம்புறாத்தூணிகள் போன்ற இரண்டு கால் ஆடுதசைகளை உடையவள். அதாவது மன்மதன் பரமசிவனை ஜயிப்பதற்கு அம்புறாத்தூணிபோல் அமைந்துள்ளது.

42. गूढगुल्फा - சதைகளுடன் கூடின குதிகால்களை உடையவள்.

43. कूर्मपृष्ठ जयिष्णु प्रपदान्विता - ஆமையினுடைய முதுகை ஜெயிக்கின்ற புறங்கால்களை உடையவள்.

44. नखदीधिति संछन्न नमज्जन तमोगुणा - நகங்களின் காந்திகளால் (कान्ति), நமஸ்கரிக்கின்ற ஜனங்களின் தமோ குணத்தைப் (तमोगुणम्) போக்குகிறவள்.

45. पदद्वय प्रभाजाल पराकृत सरोरुहा - இரண்டு கால்களின் காந்தி (कान्ति) ஸமூஹத்தால் தோல்வி அடையும்படிச் செய்யப்பட்ட தாமரையை உடையவள்.

इन्द्रगोप परिक्षिप्त स्मरतूणाभ जङ्घिका ।
गूढगुल्फा कूर्मपृष्ठ जयिष्णु प्रपदान्विता ॥१८
नखदीधिति संछन्न नमज्जन तमोगुणा ।
पदद्वय प्रभाजाल पराकृत सरोरुहा ॥१९
शिञ्जान मणिमञ्जीर मण्डित श्रीपदाम्बुजा ।
मराली मन्द गमना महालावण्य शेवधीः ॥ २०

இந்த்3ரகோ3ப பரிக்ஷிப்த ஸ்மரதூணாப4 ஜங்கி4கா ।
கூடகு3ல்பா2 கூர்மப்ருஷ்ட2 ஜயிஷ்ணு ப்ரபதான்விதா ॥18
நக2தீ3தி4தி ஸஞ்ச2ன்ன நமஜ்ஜன தமோகு3ணா ।
ப1த3 த்3வய ப்ரபா4 ஜால பராக்ருத ஸரோருஹா ॥ 19
ஶிஞ்ஜா3ன மணிமஞ்ஜீர மண்டி3த ஶ்ரீபதா3ம்பு3ஜா ।
மராலீ மந்த3 க3மனா மஹா லாவண்ய ஶேவதீ4: ॥ 20

---

46. **शिञ्जान मणिमञ्जीर मण्डित श्रीपदाम्बुजा** - *சப்திக்கின்ற மணிகளை உடைய கொலுசுகளின் காந்தியுடன்* **(कान्ति)** *கூடிய தாமரை போன்ற கால்களை உடையவள்.*

47. **मराली मन्द गमना** - *பெண் ஹம்ஸம் போன்ற மந்தமான நடையை உடையவள்.*

48. **महालावण्य शेवधिः** - *சிறந்த அழகிற்கு இருப்பிடமாக உள்ளவள்.*

49. **सर्वारुणा** - *வஸ்திரம், ஆபரணம், புஷ்பம், காந்தி* **(कान्ति)** *எல்லாம் சிவப்பு நிறமாக உடையவள்.*

50. **अनवद्याङ्गी** - *குற்றமற்ற அவயவங்களை உடையவள்.*

51. **सर्वाभरण भूषिता** - *எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவள்.*

52. **शिव कामेश्वराङ्कस्था** - *அழகு வாய்ந்த பரமசிவனுடைய இடது மடியில் இருப்பவள்.*

53. **शिवा** - *பரமேஶ்வரருடைய இச்சா2 ரூபமாக* **(इच्छारूपम्)** *இருப்பவள். அல்லது மங்கள ஸ்வரூபமாக*

सर्वारुणाऽनवद्याङ्गी सर्वाभरण भूषिता ।
शिवकामेश्वराङ्कस्था शिवा स्वाधीन वल्लभा ।।२१
सुमेरु मध्यशृङ्गस्था श्रीमन्नगर नायिका ।
चिन्तामणि गृहान्तस्था पञ्चब्रह्मासनस्थिता ।।२२
महापद्माटवी संस्था कदम्ब वन वासिनी ।
सुधासागर मध्यस्था कामाक्षी कामदायिनी ।। २३

ஸர்வாருணாऽநவத்3யாங்கீ3 ஸர்வாப4ரண பூ4ஷிதா ।
ஶிவகாமேஶ்வராங்க3ஸ்தா2 ஶிவாஸ்வாதீ4னவல்லபா4 ।।21
ஸுமேரு மத்4யஶ்ருங்க3ஸ்த்தா2 ஸ்ரீமன் நக3ர நாயிகா।
சிந்தாமணி க்3ருஹாந்தஸ்த்தா2
பஞ்ச ப்3ரஹ்மாஸனஸ்தி2தா ।। 22
மஹாபத்3மாடவீ ஸம்ஸ்த்தா2 கத3ம்ப3 வன வாஸினீ।
ஸுதா4ஸாக3ர மத்4யஸ்த்தா2 காமாக்ஷீ காமதா3யினீ ।। 23

இருப்பவள்.

54. स्वाधीन वल्लभा - தனக்கு வசமாகச் செய்து கொண்ட பதியை உடையவள்.

55. सुमेरु मध्य शृङ्गस्था - சிறந்த மேரு பர்வதத்தின் நடுவில் விளங்கும் சிகரத்தில் இருப்பவள்.

56. श्रीमन्नगर नायिका - லக்ஷ்மீ விலாஸத்தோடு கூடிய நகரத்திற்கு நாயகியாக இருப்பவள்.

57. चिन्तामणि गृहान्तस्था - சிந்தாமணிக் கல்லினால் செய்யப்பட்ட வீட்டின் நடுவில் இருப்பவள். லலிதா ஸ்தவ ரத்னத்தில் (ललिता स्तवरत्नम्)

चिन्तामणि गणरचितं दूरीकरोतु मे सदनम् ।।
சி1ந்தா1மணி க3ணரசிதம் தூ3ரீகரோது மே ஸத3னம்।।

சிந்தாமணிக் கல்லின் கூட்டத்தினால் செய்யப்பட்ட ஸ்ரீ அம்பாளின் வீடானது என் கவலையைப் போக்க வேண்டியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

देवर्षिगण सङ्घात स्तूयमानात्म वैभवा ।
भण्डासुर वधोद्युक्त शक्ति सेनासमन्विता ।। २४
सम्पत्करी समारूढ सिन्धुर व्रजसेविता ।
अश्वारूढाधिष्ठिताश्व कोटिकोटिभिरावृता ।। २५

தே3வர்ஷிக3ண ஸங்கா4த ஸ்தூயமானாத்ம வைப4வா।
ப4ண்டா3ஸுர வதோ4த்3யுக்த ஶக்தி ஸேனா ஸமன்விதா।।
ஸம்பத்கரீ ஸமாரூட4 ஸிந்து4ர வ்ரஜ ஸேவிதா ।
அஶ்வாரூடா4தி4ஷ்டி2தாஶ்வ கோடிகோடிபி4ராவ்ருதா।। 25

---

58. **पञ्च ब्रह्मासन स्थिता** - ஐந்து ப்ரும்மாக்களாகிற ஆஸனத்தில் அமர்ந்தவள். அதாவது ஆக்னேயம், நிர்ருதி, வாயவ்யம், ஈஶானம், இந்த நான்கு திக்குகளிலும், பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈஶானன், இந்த நான்கு பேர்களும் காலாகவும், ஸதாசிவன் மேல் பலகையாகவும் உள்ள கட்டிலில் அம்பாள் ஸ்ரீ காமேஶ்வரரோடு இருப்பதாக "ப3ஹுரூபாஷ்டக தந்த்ர"த்திலும் **(बहुरूपाष्टक तन्त्रम्)**, "பை4ரவ யாமிள தந்த்ர"த்திலும் **(भैरव यामिळतन्त्रम्)** சொல்லப்பட்டிருக்கிறது.

59. **महापद्माटवी संस्था** - பெரிய தாமரை புஷ்பங்கள் நிரம்பிய காட்டில் இருப்பவள். இந்த வனமானது மேரு பர்வதத்தில் இருப்பதாக "லலிதா ஸ்தவரத்ன"த்தில் **(ललिता स्तवरत्नम्)** கூறியுள்ளது. இந்த தாமரை வனத்தை த்யானிப்பதே மிகுந்த பயனை அளிக்கும்.

60. **कदम्ब वन वासिनी** - கதம்ப மரங்களுள்ள வனத்தில் வஸிப்பவள். சிந்தாமணி க்ருஹத்தைச் சுற்றி மணி மண்டபமும், அதைச் சுற்றி கதம்ப வனமும் இருப்பதாக ருத்3ரயாமிளத்தில் **(रुद्रयामिळम्)** சொல்லப்பட்டிருக்கிறது.

61. **सुधा सागर मध्यस्था** - அம்ருதமயமான ஸமுத்ரத்தின் நடுவில் இருப்பவள்.

62. **कामाक्षी** - அழகிய கண்களை உடையவள். ஸ்ரீ பாஸ்கரராயர் ஸ்ரீ காஞ்சீ பீடத்தில் அமர்ந்திருக்கும் தேவிக்கு இது தனிப்பட்ட பெயர் என்று கூறி ப்ரும்மாண்ட புராணத்தில் இந்த தெய்வத்திற்கு "காமாக்ஷி" எனப் பெயரிட்டதையும், கூறியுள்ளார். மேலும் "கா-**का**" என்றால் ஸரஸ்வதி,

"மா-मा" என்றால் மஹாலக்ஷ்மி. இவ்விருவர்களையும் கண்களாக உடையவள் எனவும் அர்த்தம் கொள்ளலாம். அதாவது ஸ்ரீஅம்பாளின் கடாக்ஷத்தால் ஸரஸ்வதி லாபமும் மஹாலக்ஷ்மி லாபமும் கிடைக்குமெனக் கருத்து.

63. **कामदायिनी** - கோரிய பொருள்களை அளிப்பவள்.

64. **देवर्षिगण सङ्घात स्तूयमानात्म वैभवा** - தேவ கணங்கள், ரிஷி கணங்கள் இவர்களால் "ஸங்கா⁴தம்" என்னும் நரக பயம் விலகுவதற்காக துதிக்கப்பட்ட தனது மஹிமையை உடையவள்.

65. **भण्डासुर वधोद्युक्त शक्ति सेनासमन्विता** - பண்டாஸுரனை வதம் செய்ய முயற்சி கொண்ட சக்தி ஸேனைகளுடன் கூடியவள். பிரும்மாண்ட புராணத்தில் மன்மதனை பரமசிவன் பஸ்மமாக ஆக்கினார். அந்த சாம்பலைக் கொண்டு ஸ்ரீமஹாகணபதி ஓர் புருஷ பொம்மையைச் செய்தார். அதைப்பார்த்த பிரும்மதேவன் "ப⁴ண்ட³ ப⁴ண்ட³" **(भण्ड भण्ड)** (நன்றாக இருக்கு, நன்றாக இருக்கு) எனக் கூறினாராம். அதனால் ப⁴ண்ட³ன், எனப் பெயர் வந்தது. பரமசிவன் மன்மதனை எரித்த சாம்பலால் செய்யப்பட்டதாகையால் அவன் அஸுரனாகி விட்டான். இக் கதையைக் கூறும் ச்லோகங்கள்-

अथ तद्भस्म संवीक्ष्य चित्रकर्मा गणेश्वरः ।
तद्भस्मना तु पुरुषं चित्राकारं चकार सः ॥
एतद्दृष्ट्वा तु चरितं धाता भण्डिति मण्डिति ।
यदुवाच ततो नाम्ना भण्डो लोकेषु कथ्यते ॥

அத² தத்³ப⁴ஸ்ம ஸம்வீக்ஷ்ய சித்ரகர்மா க³ணேஶ்வர: ।
தத்³ப⁴ஸ்மனா து புருஷம் சித்ராகாரம் சகார ஸ: ॥
ஏதத் த்³ருஷ்ட்வா து சரிதம் தா⁴தா ப⁴ண்டி³தி மண்டி³தி ।
யது³வாச ததோ நாம்னா ப⁴ண்டோ³ லோகேஷு கத்²யதே ॥

66. **सम्पत्करी समारूढ सिन्धुर व्रज सेविता** - ஸம்பத்கரீ **(संपत्करी)** என்னும் தேவதையினால் ஏற்பட்ட யானையைத் தலைமையாகக் கொண்ட பல யானைக் கூட்டங்களால் ஸேவிக்கப்பட்டவள். லலிதோபாக்யானத்தில்-

ललिता परमेशान्या अङ्कुशास्त्रात् समुद्गता ।
सम्पत्करी नाम देवी ॥

லலிதா பரமேஶான்யா அங்குஶாஸ்த்ராத் ஸமுத்³க³தா ।
ஸம்பத்கரீ நாம தே³வீ ॥

चक्रराज रथारूढ सर्वायुध परिष्कृता ।
गेयचक्र रथारूढ मन्त्रिणी परिसेविता ।। २६
किरिचक्र रथारूढ दण्डनाथा पुरस्कृता ।
ज्वाला मालिनिकाक्षिप्त वह्नि प्राकारमध्यगा ।।२७

சக்ர ராஜ ரதா²ரூட⁴ ஸர்வாயுத⁴ பரிஷ்க்ருதா ।
கே³ய ச¹க்ர ரதா²ரூட⁴ மந்த்ரிணீ பரிஸேவிதா ।। 26
கி¹ரிசக்ர ரதா²ரூட⁴ த³ண்ட³நாதா² புரஸ்க்ருதா ।
ஜ்வாலா மாலினிகாக்ஷிப்த வன்ஹி ப்ராகார மத்⁴யகா³ ।।27

லலிதா தேவியின் அங்குசம் என்னும் ஆயுதத்தின் நுனியிலிருந்து உண்டான சக்திக்கு ''ஸம்பத்கரீ'' (संपत्करी) எனப்பெயர்.

67. **अश्वारूढाधिष्ठिताश्व कोटिकोटिभिरावृता** - *அஶ்வாரூடா¹* **(अश्वारूढा)** *என்னும் சக்தியைத் தலைவியாகக் கொண்ட கோடி கோடி குதிரைகளால் சூழப்பட்டவள். அஶ்வாரூடை அம்பாளின் பாசக்கயிற்றிலிருந்து உண்டானவள். ஸ்ரீ பாஸ்கர-ராயரை ஓர் அரசன் கோடி கோடி குதிரைகள் நிற்பதற்கு இந்த பூமி முழுவதும் போதாதே எனக்கேட்டாராம். உடனே உபாஸகரான ஸ்ரீ பாஸ்கரராயர் கமண்டலு ஜலத்தை எடுத்து அவன் முகத்தில் ப்ரோக்ஷித்து ஆகாசத்தைப் பார்க்கச் சொன்னாராம். ஆகாசம் முழுவதும் குதிரைகளாக இருந்ததை ஸ்ரீ அரசன் கண்டார் என உபாஸகர்கள் கூறுவது வழக்கம்.*

68. **चक्रराज रथारूढ सर्वायुध परिष्कृता** - *சக்ர ராஜம்* **(चक्रराजम्)** *என்ற தேரில் வைக்கப்பட்ட எல்லா ஆயுதங்களினாலும் பிரகாசிக்கின்றவள். ஸ்ரீஅம்பாளுடைய தேருக்கு ''சக்ரராஜம்* **(चक्रराजम्)**'' *எனப்பெயர். இதன் கொடி மரத்திற்கு ''ஆனந்த³ த்⁴வஜம்''* **(आनन्दध्वजम्)** *எனப் பெயர். இந்தத் தேரில் ஒன்பது தட்டுகள் உள்ளன. பத்து யோஜனை (நூறு மைல்) நீளம் உள்ளது. நான்கு யோஜனை (நாற்பது மைல்) அகலமுள்ளது. இது மஹாராக்ஞியான ஸ்ரீ அம்பாளின் சிறந்த தேரென லலிதோபாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது.*

आनन्द ध्वज संयुक्तः नवभिः पर्वभिर्युतः ।
दशयोजन मुन्नम्रश्चतुर्योजन विस्तृतः ।।

भण्डसैन्य वधोद्युक्त शक्ति विक्रम हर्षिता ।
नित्या पराक्रमाटोप निरीक्षण समुत्सुका ।।२८
भण्डपुत्र वधोद्युक्त बाला विक्रम नन्दिता ।
मन्त्रिण्यम्बा विरचित विषङ्गवध तोषिता ।।२९

ப⁴ண்ட³ஸைன்ய வதோ⁴த்யுக்த ஶக்தி விக்ரம ஹர்ஷிதா।
நித்யா பராக்ரமாடோ¹ப நிரீக்ஷண ஸமுத்ஸுகா ।। 28
ப⁴ண்ட³புத்ர வதோ⁴த்³யுக்த பா³லா விக்ரம நந்தி³தா।
மந்த்ரிண்யம்பா³ விரசித விஷங்க³வத⁴ தோ¹ஷிதா ।। 29

महाराज्ञाश्चक्र राज रथेन्द्रः प्रचलन् बभौ ।।
ஆனந்த³ த்⁴வஜ ஸம்யுக்த: நவபி⁴: பர்வபி⁴ர்யுத: ।
த³ஶயோஜன முன்னம்ரஶ் சதுர்யோஜன விஸ்த்ருத: ।।
மஹாராஜ்ஞாஶ்சக்ர ராஜ ரதே²ந்த்³ர: ப்ரசலன் ப³பௌ⁴ ।।

69. **गेयचक्र रथारूढ मन्त्रिणी परिसेविता** - ப்ரஸித்தமான சக்கடை உள்ள தேரில் இருக்கின்ற ஸ்ரீ வித்யோபாஸகர்களான யோகினிகளால் நான்கு பக்கங்களிலும் இருந்து ஸேவிக்கப்பட்டவள். அதாவது சூர்ய மண்டலத்தில் ஸ்ரீ அம்பாள் வஸிக்கிறாள். உபாஸகர்களான ஸ்த்ரீ தேவதைகள் ஸ்ரீ அம்பாளை அங்கு பூஜிக்கிறார்கள் எனக் கருத்து. இம்மாதிரி நாமும் சூர்ய மண்டலத்தில் த்யானிக்க வேண்டும்.

70. **किरिचक्र रथारूढ दण्डनाथा पुरस्कृता** - பன்றி போன்ற, சக்ரத்துடன் கூடிய தேரில் அமர்ந்த, தண்டம் தரித்த "வாராஹீ" என்னும் தேவியால் ஸேவிக்கப்பட்டவள்.

71. **ज्वाला मालिनिकाक्षिप्त वह्नि प्राकार मध्यगा** - ஜ்வாலா மாலினிகா என்னும் தேவதையால் செய்யப்பட்ட அக்னிமயமான ப்ராகாரத்தின் நடுவில் வஸிப்பவள்.

72. **भण्डसैन्य वधोद्युक्त शक्ति विक्रम हर्षिता** - பண்டாஸுரனின் சதுரங்க ஸைன்யத்தை வதம் செய்வதற்கு முயற்சியை அடைந்த "நகுலீ(**नकुली**)" முதலிய சக்திகளின் பராக்ரமத்தால் சந்தோஷத்தை அடைந்தவள்.

73. **नित्या पराक्रमाटोप निरीक्षण समुत्सुका** - "காமேஶ்வரீ" முதலிய பதினைந்து தி¹தி² நித்¹யா (**तिथिनित्या**) தேவ-

विशुक्र प्राणहरण वाराही वीर्यनन्दिता ।
कामेश्वर मुखालोक कल्पित श्रीगणेश्वरा ।। ३०

விபரூக்ர ப்ராண ஹரண வாராஹீ வீர்யநந்தி3தா ।
காமேப்ஸ்வர முகா2லோக கல்பித ஸ்ரீ க3ணேப்ஸ்வரா ।। 30

தைகளின் பராக்ரமத்தின் வளர்ச்சியைக் கண்டு சந்தோஷம் அடைந்தவள்.

74. **भण्डपुत्र वधोद्युक्त बाला विक्रम नन्दिता** - *ப4ண்ட3னின் புத்ரனைக் கொல்லுவதில் முயற்சி கொண்ட தனது பெண்ணான ''பா3லை''யின்* **(बाला)** *பராக்ரமத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவள். பண்டனின் பிள்ளைகள் சதுர்பா3ஹு முதல் உபமாயன் வரையுள்ள முப்பது பேர்கள் இருந்தனர். இவர்களைக் கொல்லுவதற்கு ஸ்ரீ அம்பாளின் ஒன்பது வயதுள்ள பா3லா* **(बाला)** *என்ற பெண் சென்றாள். அவள் யுத்தம் செய்த பெருமையை மந்த்ரிணீ முதலிய சக்திகள் வந்து சொல்லக் கேட்ட ஸ்ரீ அம்பாள் சந்தோஷம் அடைந்தாள் என ப்ரும்மாண்ட புராணத்தில் கூறியுள்ளது-*

ताभिर्निवेद्य मानानि सा देवी ललिताम्बिका।
पुत्र्या भुजा पदानानि श्रुत्वा प्रीतिं समा ययौ ।।

தாபி4ர்நிவேத்3ய மானானி ஸா தே3வீ லலிதாம்பி3கா ।
புத்ர்யா பு4ஜா பதா3னானி ஶ்ருத்வா ப்ரீதிம் ஸமாயயௌ ।।

75. **मन्त्रिण्यम्बा विरचित विषङ्गवध तोषिता** - *மந்த்ரிண்யம்பாளினால் செய்யப்பட்ட விஷங்க3ன்* **(विषङ्गः)** *என்னும், பண்டாஸுரனுடைய ப்ராதாவின் வதத்தால் சந்தோஷம் அடைந்தவள்.*

76. **विशुक्र प्राणहरण वाराही वीर्यनन्दिता** - *விசுக்ரன் என்ற பண்டாஸுரனின் மற்றொரு ப்ராதாவின் ப்ராணனை அபஹரித்த வாராஹீ என்னும் தண்டினீ சக்தியின் வீர்யத்தைக் கண்டு சந்தோஷம் அடைந்தவள்.*

77. **कामेश्वर मुखालोक कल्पित श्रीगणेश्वरा** - *காமேப்ஸ்வரரின் முகத்தைப் பார்ப்பதினால் ஸ்ரீ கணேப்ஸ்வரரை உண்டு பண்ணினவள். பிரும்மாண்ட புராணத்தில் மஹா கணபதியை அம்பாள் உண்டு பண்ணியதைக் கூறும் ச்லோகங்கள்.*

महागणेश निर्भिन्न विघ्न यन्त्र प्रहर्षिता ।
भण्डासुरेन्द्र निर्मुक्त शस्त्र प्रत्यस्त्र वर्षिणी ।। ३१

மஹாக[3]ணேஶ நிர்பி[4]ன்ன விக்[4]ன யந்த்ர ப்ரஹர்ஷிதா।
ப[4]ண்டா[3]ஸுரேந்த்[3]ர நிர்முக்த
ஶஸ்த்ர ப்ரத்யஸ்த்ர வர்ஷிணீ।।31

ततः सा ललिता देवी कामेश्वर मुखं प्रति ।
दत्ता पाङ्गा समहसन्नाति व्यक्त रदावलिः ।।
तस्या मन्दस्मितरुचः कुञ्जराकृतिमान् मुखे ।
कटक्रोडगलद्दानः कश्चिद्देवो व्यजृम्भते ।।

தத: ஸா லலிதா தே[3]வீ காமேஶ்வர முக[2]ம் ப்ரதி ।
த[3]த்தா பாங்கா[3] ஸமஹஸந்நாதி வ்யக்த ரதா[3]வலி: ।।
தஸ்யா மந்த[3]ஸ்மிதருச: குஞ்ஜராக்ருதிமான் முகே[2] ।
கடக்ரோட[3]கலத்[3]தா[3]ன: கஶ்சித்[3]தே[3]வோ வ்யஜ்ரும்ப[4]தே।।

78. **महागणेश निर्भिन्न विघ्न यन्त्र प्रहर्षिता** - மஹா கணபதியால் உடைக்கப்பட்ட ஜெயத்திற்கு விக்னத்தை அளிக்கும் யந்திரத்தைக் (**यन्त्रम्**) கண்டு மிகுந்த சந்தோஷம் கொண்டவள். பண்டனின் ப்ராதா, சுக்ராசாரிக்கு மேற்பட்ட சக்தி வாய்ந்தவன். ஆதனால் அவனுக்கு விஶுக்ரன் (**विशुक्रः**) எனப் பெயர். அவன் தேவியின் ஸைன்யத்தின் நடுவில் பூமிக்குள் 'ஜயவிக்'னம் (**जयविघ्नम्**)' என்கிற யந்திரத்தைப் (**यन्त्रम्**) புதைத்து வைத்தான். அதை மஹாகணபதி உடைத்துத் தூளாக்கி விட்டார். இதனால் சந்தோஷமடைந்தாள் என்கிற கதை லலிதோபாக்யானத்தில் உள்ளது.

79. **भण्डासुरेन्द्र निर्मुक्त शस्त्र प्रत्यस्त्र वर्षिणी** - பண்டாஸுரனால் விடப்பட்ட ஶஸ்திரங்களையும் அஸ்திரங்களையும், தடுப்பதற்காக, பதில் ஶஸ்திரங்களையும், அஸ்தி-ரங்களையும், வர்ஷிக்கிறவள். ஶஸ்த்ரம் என்பது கையில் வைத்து கொண்டு அடிப்பதற்கு உபயோகப்படுத்தும் ஆயுதம். அஸ்திரம் என்பது மந்திரத்தை ஜபித்து கையால் விடப்பட்ட பாணமாகும்.

80. **कराङ्गुलि नखोत्पन्न नारायण दशाकृती** - இரண்டு கைகளின் பத்து விரல்களிலிருந்தும், மத்ஸ்ய அவதாரம் முதலிய அவதாரங்களையும் உண்டுபண்ணினவள். பண்டாஸுரன் ஸ்ரீ அம்பாளுடன் யுத்தம் செய்யும் போது ''ஸர்வாஸுரா

करांगुलि नखोत्पन्न नारायण दशाकृतिः।
महापाशुपतास्त्राग्नि निर्दग्धासुरसैनिका ।। ३२

कामेश्वरास्त्र निर्दग्ध सभण्डासुर शून्यका।
ब्रह्मोपेन्द्र महेन्द्रादि देवसंस्तुत वैभवा ।। ३३

கராங்கு³லி நகோ²த்பன்ன நாராயண த³ஶாக்ருதி: ।
மஹாபா¹ஶுபதாஸ்த்ராக்³னி நிர்த³க்³தா⁴ஸுர ஸைனிகா।।

காமேஶ்வராஸ்த்ர நிர்த³க்³த⁴ ஸப⁴ண்டா³ஸுரஶூன்யகா।
ப்³ரஹ்மோபேந்த்³ர மஹேந்த்³ராதி³
தே³வ ஸம்ஸ்துத வைப⁴வா ।।33

அஸ்த்ரம்'' என்னும் அஸ்த்ரத்தை ப்ரயோகித்தான். அதிலிருந்து ஸோமகன், ராவணன், பலி, ஹிரண்யாக்ஷன் முதலிய அஸுரர்கள் உண்டானார்கள். அவர்களை நிக்ரஹம் செய்வதற்காக ஸ்ரீ அம்பாள் கைகளின் பத்து விரல்களிலிருந்து மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, பரஶுராம, ஸ்ரீ ராம, பலராம, ஸ்ரீக்ருஷ்ண, கல்கி, என்ற இந்த பத்து பேர்களையும், உண்டு பண்ணினாள் என்று பிரும்மாண்ட புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

81. महा पाशुपतास्त्राग्नि निदग्धासुर सैनिका - மஹா பாஶுபதம் (महापाशुपतम्) என்னும் ஸ்ரீ ஸதாசிவனுடைய அஸ்த்ரத்திலிருந்து கிளம்பிய அக்னியினால் பஸ்மமாக ஆக்கப்பட்ட அஸுர ஸைன்யத்தை உடையவள்.

82. कामेश्वरास्त्र निर्दग्ध सभण्डासुर शून्यका - காமேஶ்வர அஸ்த்ரத்தினால் பண்டாஸுரனுடன் கூடின ஶூன்யகம் (शून्यकम्) என்னும் பட்டிணத்தை எரித்தவள். பண்டாஸுரனின் பட்டணத்திற்கு ஶூன்யகம் என்று பெயர். அதை சூன்யமாக ஆக்கினாள் என்று ப்ரும்மாண்ட புராணத்தில் கூறியிருக்கும் சுலோகம்.

शून्यकं तत्पुरं नाम शून्यमासीद्यथार्थतः ।।
ஶூன்யகம் தத்புரம் நாம ஶூன்யமாஸீத்³ யதா²ர்த்த²த:।।

83. ब्रह्मोपेन्द्र महेन्द्रादि देवसंस्तुत वैभवा - ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலியவர்களால் துதிக்கப்பட்ட தனது மஹிமையை உடையவள்.

हरनेत्राग्नि सन्दग्ध कामसंजीवनौषधिः ।
श्रीमद्वाग्भव कूटैक स्वरूप मुखपङ्कजा ।।३४
कण्ठाधः कटिपर्यन्त मध्यकूट स्वरूपिणी ।
शक्तिकूटैक तापन्न कट्यधोभाग धारिणी ।।३५

ஹர நேத்ராக்[3]னி ஸந்த[3]க்[3]த[4] காமஸஞ்ஜீவநெளஷதி[4]:।
ஶ்ரீமத்[3]வாக்[3]ப[4]வ கூடைக ஸ்வரூப முக[2] பங்க[1]ஜா ।। 34
கண்டா[2]த[4]: கடிபர்யந்த மத்[4]யகூட ஸ்வரூபிணீ ।
ஶக்தி கூடைக தா[1]பன்ன கட்யதோ[4]பா[4]க[3] தா[4]ரிணீ ।। 35

---

84. हरनेत्राग्नि सन्दग्ध कामसंजीवनौषधी - பரமசிவனின் கண்ணினால் நன்கு எரிக்கப்பட்ட மன்மதனை பிழைக்கச் செய்த மூலிகை போன்றவள்.

85. श्रीमद्वाग्भव कूटैक स्वरूप मुखपङ्कजा - ஞானம் முதலியவற்றைக் கொடுக்கும் மஹிமை உள்ள ஸ்ரீ பஞ்ச த[3]ஶாக்ஷரீ (पञ्चदशाक्षरी) மந்திரத்தில் முதல் பாகமாகிய ஐந்து அக்ஷரங்களுடன் கூடின வாக்[3]ப[4]வ கூ[1]டத்தை (वाग्भवकूटम्) ஸ்வரூபமாக உடைய முக கமலத்தை உடையவள்.

86. कण्ठाधः कटिपर्यन्त मध्यकूट स्वरूपिणी - கழுத்துக்குக் கீழ் இடுப்புக்கு மேல் உள்ள நடுபாகத்தை பஞ்ச தஶாக்ஷரீ மந்திரத்தின் மத்ய பாகமாகிய காமராஜ கூடத்தை (कामराजकूटम्) ஸ்வரூபமாக உடையவள்.

87. शक्तिकूटैक तापन्न कट्यधोभाग धारिणी - பஞ்ச தசாக்ஷரியின் மூன்றாவது பாகத்தில் இருக்கிற நான்கு அக்ஷரங்களுள்ள சக்தி கூ[1]டத்துடன் அபே[4]த[3]மாய் (अभेदम्-ஒன்றாய்) உள்ள இடுப்புக்குக் கீழ் பாகத்தை தரிக்கின்றவள். பஞ்சதஶாக்ஷரீ மந்திரம் மூன்று பாகமாய் அமைந்துள்ளது. முதல் பாதத்தில் ஐந்து அக்ஷரமும், இரண்டாவது பாதத்தில் ஆறு அக்ஷரமும், மூன்றாவது பாதத்தில் நான்கு அக்ஷரமும், சேர்ந்து பதினைந்து அக்ஷரங்கள் (पञ्चदशाक्षरी-பஞ்சதஶாக்ஷரீ). இந்த மூன்று பாதங்களில் முதல் பாதத்தை ஸ்ரீ அம்பாளின் முகமாகவும், இரண்டாவது பாதத்தை ஸ்ரீ அம்பாளின் கழுத்துக்குக் கீழ் இடுப்புவரை உள்ள பாகமாகவும், மூன்றாவது பாதத்தை அதற்குக் கீழ் பாகமாகவும் கூறப்பட்டதாகக் கொள்ளவேணும்.

मूलमन्त्रात्मिका मूलकूटत्रयकलेबरा ।
कुलामृतैकरसिका कुलसंकेत पालिनी ।। ३६

மூல மந்த்ராத்மிகா மூல கூட த்ரய கலேப³ரா ।
குலாம்ருதைக ரஸிகா கு¹ல ஸங்கே¹த பா¹லினீ ।।36

---

88. **मूलमन्त्रात्मिका** - நான்கு வித புருஷார்த்தங்களுக்கும் மூலமான (காரணமான) ஸ்ரீ பஞ்சதபாக்ஷரீ மந்திரத்தை ஸ்வரூபமாக உடையவள்.

89. **मूलकूटत्रय कलेबरा** - புருஷார்த்தங்களுக்கு மூலமான பஞ்சதபாக்ஷரீ மந்த்ரத்தின் மூன்று கூ¹டங்களையும் சரீரமாக உடையவள்.

90. **कुलामृतैक रसिका** - சரீரத்திலிருக்கும் ஸஹஸ்ரார பத்மத்திலிருந்து பெருகும் அம்ருத ரஸத்தையே அனுபவிப்பவள்.

91. **कुलसंकेत पालिनी** - ஸ்ரீ அம்பாளுடைய உபாஸனைகளை போதிக்கும் சாஸ்திரங்களைக் காப்பவள்; அல்லது ப⁴விஷ்யோத்தர புராணத்தில் (**भविष्योत्तर पुराणम्**)

नकुलं कुलमित्याहुः आचारः कुलमुच्यते ।
आचार रहितो राजन् नेह नामुत्र विन्दति ।।

நகு¹லம் கு¹லமித்யாஹு: ஆசார: குலமுச்யதே ।
ஆசா¹ர ரஹிதோ ராஜன் நேஹ நாமுத்ர விந்த³தி ।।

''குலம் ஆசாரத்தாலே குலம் எனப்படும். ஆசாரமில்லாதவனுக்கு இவ்வுலகமுமில்லை. அவ்வுலகமுமில்லை'' என்று கூறியிருப்பதால் அந்த அந்த குலத்தில் உண்டான ஆசாரங்களைக் காப்பவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

92. **कुलाङ्गना** - நல்ல குலத்தைச் சேர்ந்த ஸ்த்ரீயாக இருப்பவள். பாதிவ்ரத்யம் முதலிய குணங்களுடன் கூடிய வம்சத்திற்கு ''குலம்'' எனப் பெயர். அந்த குலத்தைச் சேர்ந்த பெண் எப்படி லஜ்ஜை (வெட்கம்) முதலியவற்றால் அடங்கி மறைந்திருப்பாளோ, அதுபோல் இந்த பஞ்சதபாக்ஷரீ வித்யா ரூபிணியான ஸ்ரீ அம்பாள் அவித்யையாகிற திரையால் மறைக்கப்பட்டவளாக இருப்பதால் '**कुलाङ्गना**

कुलाङ्गना कुलान्तस्था कौलिनी कुलयोगिनी।
अकुला समयान्तस्था समयाचार तत्परा ।। ३७

குலாங்க[3]னா குலாந்தஸ்த்தா[2] கௌலினீ குலயோகி[3]னீ।
அகுலா ஸமயாந்தஸ்த்தா[2] ஸமயாசார தத்பரா ।। 37

குலாங்க[3]னா" எனக் கூறப்பட்டது. குலார்ணவத்தில் (कुलार्णवम्) மற்ற வித்யைகளெல்லாம் வேசியைப்போல் வெளியில் ப்ரகாசமாக உள்ளன. இந்த ஶாம்ப[4]வி வித்[3]யையோவெனில் (शाम्भवी विद्या) குலத்தில் பிறந்த பெண் போல் மறைந்திருக்கிறாள் எனக் கூறிய ச்லோகமாவது:

अन्यास्तु सकला विद्याः प्रकटागणिका इव ।
इयंतु शांभवी विद्या गुप्ता कुलवधूरिव ।।

அன்யாஸ்து ஸகலா வித்[3]யா: ப்ரகடா க[3]ணிகா இவ ।
இயந்து ஶாம்ப[4]வீ வித்[3]யா கு[3]ப்தா கு[1]லவதூ[4]ரிவ ।।

பாசுராம கல்பத்திலும்

अन्या विद्या वेश्या इवातिप्रकटा ।।

அன்யா வித்[3]யா வேஶ்யா இவாதி ப்ரகடா ।।

93. कुलान्तस्था - ஒவ்வொரு குலத்திலும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு வனத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தேஹத்திலும் பூஜிக்கத் தகுந்தவளாய் இருப்பவள். இப்படி ஸ்ரீஅம்பாள் இருப்பதைக் கூறிய பவிஷ்யோத்தர புராணம்:

पूजनीया जनैर्देवी स्थाने स्थाने पुरे पुरे ।
गृहे गृहे शक्तिपरैः ग्रामे ग्रामे वने वने ।।

பூஜனீயா ஜனைர்தே[3]வீ ஸ்த்தா[2]னே ஸ்த்தா[2]னே புரே புரே।
க்[3]ருஹே க்[3]ருஹே ஶக்திபரை:
க்[3]ராமே க்[3]ராமே வனே வனே ।।

94. कौलिनी - சிவன், சக்தி, இவ்விருவர்களின் சேர்க்கையின் ரூபமாய் இருப்பவள். இதை தந்த்ரத்தில் கூறியதாவது:

कुलं शक्तिरिति प्रोक्तं अकुलं शिव उच्यते ।
कुले कुलस्य संबन्धः कौलमित्यभिधीयते ।।

குலம் ஶக்திரிதி ப்ரோக்தம் அகுலம் ஶிவ உச்யதே ।
குலே குலஸ்ய ஸம்ப[3]ந்த[4]: கௌ[1]லமித்யபி[4]தீ[4]யதே ।।

मूलाधारैक निलया ब्रह्मग्रन्थि विभेदिनी ।
मणिपूरान्तरुदिता विष्णुग्रन्थि विभेदिनी ।। ३८

மூலாதா4ரைக நிலயா ப்3ரஹ்ம க்3ரந்தி2 விபே4தி3னீ ।
மணிபூராந்த ருதி3தா விஷ்ணு க்3ரந்தி2 விபே4தி3னீ ।। 38

---

95. **कुलयोगिनी** - ஸுஷும்னையின் மேல் பாகத்தில் ஆயிரம் இதழ்களுள்ள தாமரை இருப்பது போல் ஸுஷும்னையின் அடியிலும் சிவப்பு நிறமுள்ள ஓர் தாமரை அம்மாதிரி இருக்கிறது. அதன் ஸம்பந்தத்தை அடைந்தவள். அதாவது அதன் நடுவில் இருப்பவள்.

96. **अकुला** - தேஹம், வம்சம் முதலிய குலமில்லாதவள்.

97. **समयान्तस्था** - ஸமயத்தின் நடுவில் கூறப்பட்டவள். தஹராகாஶத்தில்**(दहराकाशम्)** அந்தர்முகமாய் ஸ்ரீ சக்கரத்தில் செய்யும் பூஜைக்கு 'ஸமயம்' **(समयम्)** எனப் பெயர். இம்மாதிரியான ஸமயத்தைக் கூறிய ''ஶுபா4க3ம பஞ்சகம்'' **(शुभागमपञ्चकम्)** முதலிய க்ரந்தங்களில் ஸ்ரீ அம்பாள் கூறப்பட்டவள் எனக் கருத்து.

98. **समयाचार तत्परा** - மேலே கூறிய ஸமய மார்கத்தால் செய்யும் பூஜையில் அன்பு கொண்டவள்.

99. **मूलाधारैक निलया** - மூலாதா4ரத்தில் **(मूलाधारम्)** முக்யமாக இருப்பவள். மூலாதாரம் என்பது நான்கு இதழ்களுடன் கூடின தாமரை. அங்கு குண்டலினீ சக்தியின் உருவாக ஸ்ரீ அம்பாள் எப்பொழுதும் நித்ரை செய்து கொண்டிருக்கிறாள். குண்டலினீ சக்திக்கு ஆதாரமாக இருப்பதாலும் முதுகு எலும்பின் நடுவிலிருக்கும் ஸுஷும்னை **(सुषुम्ना)** நாடிக்கு ஆதாரமாக இருப்பதாலும் இது மூலாதாரம் எனப்படும்.

100. **ब्रह्मग्रन्थि विभेदिनी** - மூலாதா4ரம் **(मूलाधारम्)**, ஸ்வாதி4ஷ்டானம் **(स्वाधिष्टानम्)** இவ்விரண்டிலும் இருக்கும் இரண்டு முடிச்சுக்களுக்கும் ப்3ரம்ம க்3ரந்தி2 **(ब्रह्मग्रन्थि)** என்று பெயர். அதைப் பிளந்து கொண்டு மேலே செல்பவள். அதாவது குண்டலினீ சக்தி ஸ்ரீ அம்பாளின் ஸ்வரூபம். தூங்கும் அந்த சக்திதான் முடிச்சைப் பிளந்து கொண்டு மேலே செல்லுகிறாள். இந்த முடிச்சில் ப்ரம்மா இருப்பதால் இதற்கு ப்ரம்ஹ க்ரந்தி எனப் பெயர்.

आज्ञाचक्रान्तरालस्था रुद्रग्रन्थि विभेदिनी।
सहस्त्राराम्बुजारूढा सुधासाराभि वर्षिणी।।३९
तठिल्लतासमरुचिः षट्चक्रोपरि संस्थिता ।
महाशक्तिः कुण्डलिनी बिसतन्तुतनीयसी।।४०

ஆஜ்ஞா சக்ராந்தராலஸ்த்தா2 ருத்3ர க்3ரந்தி2 விபே4தி3னீ।
ஸஹஸ்ராராம்பு3ஜாரூடா4 ஸுதா4ஸாராபி4 வர்ஷிணீ।। 39
த1டி1ல்லதா ஸமருசி1: ஷட்சக்ரோபரி ஸம்ஸ்த்திதா2 ।
மஹாஶக்தி: குண்ட3லினீ பி3ஸத1ந்து த1னீயஸீ ।। 40

---

101. **मणिपूरान्तरुदिता** - மணிபூரத்தின் நடுவில் வெளியாகிறவள். மணிபூரம் என்பது பத்து இதழ்கள் உள்ள தாமரை. ஸமய பூஜையில் அங்கு ஸ்ரீ அம்பாளை ரத்னங்களால் உபாஸகர்கள் அலங்கரிப்பதால் மணிபூரகம் **(मणिपूरकम्)** எனப் பெயர்.

102. **विष्णुग्रन्थि विभेदिनी** - மணிபூரகம், அனாஹதம் **(अनाहतम्)** இவ்விரண்டிலும் இருக்கும் விஷ்ணு க்3ரந்தி2யை **(विष्णुग्रन्थि)** (முடிச்சை) பிளந்து கொண்டு வெளியாகிறவள். இம்முடிச்சில் விஷ்ணு இருப்பதால் விஷ்ணு க்3ரந்த்தி2 எனப்படும்.

103. **आज्ञाचक्रान्तरालस्था** - ஆக்ஞா சக்ரத்தின் நடுவில் இருப்பவள். புருவங்களின் நடுவிலுள்ள இரண்டு இதழுடன் கூடிய தாமரை ஆக்ஞா சக்ரம் எனப்படும். ஞானத்தை அளிக்கும் ஸ்ரீ குருவுக்கு அது இருப்பிடமாகையால் அந்த தாமரைக்கு இப்பெயர்.

104. **रुद्रग्रन्थि विभेदिनी** - ருத்ர க்3ரந்தி2யைப் **(रुद्रग्रन्थि)** பிளந்து வெளி வருகிறவள். விஶுத்3தி4 **(विशुद्धि)**, ஆக்ஞை இவ்விரண்டுக்கும் மேலிருக்கும் முடிச்சுக்கு 'ருத்ர க்3ரந்தி4 **(रुद्रग्रन्थि)**' எனப் பெயர். அங்கு ருத்ரன் வஸிப்பதால் 'ருத்ர க்ரந்தி' எனப்படும்.

105. **सहस्त्राराम्बुजारूढा** - ஆயிரம் இதழ்களுள்ள தாமரையின் மீது அமர்ந்தவள். இந்தத் தாமரை ப்3ரம்ம ரந்த்4ரத்திற்குக் **(ब्रह्मरन्ध्रम्)** கீழ் உள்ளது. இந்த இடத்திற்குக் குண்டலினீ சக்தியை எழுப்பி அழைத்து வைத்து உபாஸகர்கள் தியானிப்பார்கள்.

भवानी भावनागम्या भवारण्य कुठारिका ।
भद्रप्रिया भद्रमूर्तिः भक्तसौभाग्य दायिनी ।।४१
भक्तिप्रिया भक्तिगम्या भक्तिवश्या भयापहा ।
शांभवी शारदाराध्या शर्वाणी शर्मदायिनी ।।४२

ப⁴வானீ பா⁴வனா க³ம்யா ப⁴வாரண்ய குடாரிகா ।
ப⁴த்ரப்ரியா ப⁴த்³ரமூர்த்தி: ப⁴க்த ஸௌபா⁴க்³ய தா³யினீ ।।
ப⁴க்திப்ரியா ப⁴க்திக³ம்யா ப⁴க்திவஶ்யா ப⁴யாபஹா ।
ஶாம்ப⁴வீ ஶாரதா³ராத்⁴யா ஶர்வாணீ ஶர்மதா³யினீ ।।42

---

106. **सुधा साराभि वर्षिणी** - *அம்ருத ப்ரவாஹத்தைத் தொடர்ந்து வர்ஷிப்பவள். ஸஹஸ்ரார பத்மத்தின்* **(सहस्रारपद्मम्)** *நடுவில் சந்திரனும் அமர்ந்திருக்கிறான். அதிலிருந்து பெருகும் அம்ருத தா⁴ரையை* **(अमृतधारा)** *ஸமஸ்த நாடிகளிலும் செல்லும்படி வர்ஷிப்பவள். இப்பொருளைக் கூறும் வேதம்:*

अमृतस्य धारा बहुधा दोहमानम् ।
चरणं नो लोके सुधितान् दधातु ।।

அம்ருதஸ்ய தா⁴ரா ப³ஹூதா⁴ தோ³ஹமானம் ।
ச¹ரணம் நோ லோகே ஸுதி⁴தான் த³தா⁴து ।।

107. **तटिल्लतासमरुची** - *மின்னல் கொடி போன்ற சக்தி உள்ளவள்* **विद्युल्लेखेव भास्वरा** வித்³யுல்லேகே²வ பா⁴ஸ்வரா = *என்று வேதமும் கூறியுள்ளது.*

108. **षट्चक्रोपरि संस्थिता** - *ஆறு அவயவங்களோடு கூடின சக்ரங்களுக்கு மேல் உள்ள ஸஹஸ்ரார பத்மத்தில் நன்கு அமர்ந்தவள். அந்த சக்ரங்களோவெனில் மூலாதா⁴ரம், ஸ்வாதி⁴ஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விஶுத்³தி⁴, ஆக்ஞா என்றவைகள். இந்த ஆறு சக்ரங்களின் ஸ்தானங்களானவன:- (i) குத* **(कुतम्)** *ஸ்தானத்திற்கும், லிங்க ஸ்தானத்திற்கும் நடுவில் உள்ளது மூலாதாரம். (ii) லிங்கத்தின் மூல ப்ரதேசத்தில் உள்ளது ஸ்வாதிஷ்டானம். (iii) தொப்புள் பிரதேசத்தில் உள்ளது மணிபூரகம் . (iv) ஹ்ருதய பிரதேசத்தில் உள்ளது அனாஹதம். (v) க¹ண்ட²* **(कण्ठम्)** *பிரதேசத்தில் உள்ளது விஶுத்³தி⁴ (vi) புருவங்களின் மத்ய பிரதேசத்தில் உள்ளது ஆக்ஞா.*

109. **महाशक्ती** - உத்ஸவத்தில் அதிக பிரியம் உடையவள். மூலாதாரத்திலிருந்து குண்டலினீ சக்தியாகிற ஸ்ரீ அம்பாள் ஸஹஸ்ரார பத்மத்திலிருக்கும் தனது பதியான பரமசிவனுடன் ரமித்துக் கொண்டு இருக்கும் உத்ஸவத்தில் ஈடுபட்டவள். ஸௌந்தர்ய லஹரியில்

सहस्त्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ।

ஸஹஸ்ராரே பத்[3]மே ஸஹ ரஹஸி ப[1]த்[1]யா விஹரஸே।

எனக் கூறியுள்ளது.

110. **कुण्डलिनी** - குண்டலம் போல் மூன்று சுற்றாக இருக்கும் ஸர்ப்பம் போன்ற உருவம் உள்ளவள்.

111. **बिसतन्तु तनीयसी** - தாமரைத் தண்டிலுள்ள நூல் போல் ஸூக்ஷ்மமான உருவம் உடையவள்.

नीवारशूकवत्तन्वी पीताभास्वत्यणूपमा ।

நீவார ஶூகவத் தன்வீ பீதாபா[4]ஸ்வத்யணூபமா ।

என்று ஶ்ருதியும் (**श्रुति**) கூறியுள்ளது.

112. **भवानी** - ப[4]வனை (**भवः**-மன்மதனை) பிழைக்கச் செய்தவள்.

113. **भावनागम्या** - பா[4]வனையினால் (தியானத்தினால்) அடையத் தகுந்தவள்.

114. **भवारण्य कुठारिका** - ஸம்ஸாரமாகிற காட்டை அழிப்பதில் கோடரி போன்றவள். காட்டில் கிளைகள் மென்மேலும் முளைப்பது போல், ஜனனமரணமும் திரும்ப திரும்ப வருவதால் காடாகக் கூறியுள்ளது.

115. **भद्रप्रिया** - பக்தர்களுக்கு மங்களத்தை அளிப்பதில் அன்பு கொண்டவள்.

116. **भद्रमूर्तिः** - மங்களமான சரீரத்தை உடையவள்.

117. **भक्त सौभाग्य दायिनी** - பக்தர்களுக்கு ஸகல வித ஸௌபாக்யங்களையும் கொடுப்பவள்.

118. **भक्तिप्रिया** - பக்தர்கள் செய்யும் பக்தியினால் சந்தோஷத்தை அடைகிறவள்.

119. **भक्तिगम्या** - பக்தியினால் அடையத் தகுந்தவள்.

120. **भक्तिवश्या** - *பக்திக்கு வசப்படுகிறவள்.*

121. **भयापहा** - *பயங்களை அடியோடு போக்குகிறவள். ஶ்ரீ அம்பாளின் நாமாவை ஜபித்தால் எந்த இடத்திலும் பயங்கள் நீங்கி விடும் என வாயு புராணம் கூறியுள்ளது.*

अरण्ये प्रान्तरे वापि जलेवापि स्थलेऽपिवा ।
व्याघ्र कुम्भीर चोरेभ्यो भयस्थाने विशेषतः ।।
आधिष्वपिच सर्वेषु देवीनामानि कीर्तयेत् ।

அரண்யே ப்ராந்தரே வாபி ஜலேவாபி ஸ்த்த²லேऽபிவா।
வ்யாக்⁴ர கும்பீ⁴ர சோரேப்⁴யோ ப⁴யஸ்த்தா²னே விஶேஷத:।।
ஆதி⁴ஷ்வபிச ஸர்வேஷு தே³வீ நாமானி கீர்த¹யேத் ।

122. **शांभवी** - *ஶம்பு¹வின் (**शंभु**) மனைவி அல்லது சிவ பக்தர்களுக்குத் தாய்.*

123. **शारदाराध्या** - *ஶாரதையால் (ஸரஸ்வதியால்) பூஜிக்கத் தகுந்தவள். அல்லது சரத்கால நவராத்ரியில் உபாஸகர்களால் பூஜிக்கத் தகுந்தவள்.*

124. **शर्वाणी** - *ஶர்வனான (**शर्वः**) ஶ்ரீ பரமசிவனின் மனைவி; அதாவது ஶ்ரீ பரமசிவனுக்கு எட்டு உருவங்கள் உள்ளன. அதில் பூமி ஒன்றாகும். அந்த பூமியின் உருவான ஶ்ரீ பரமசிவனுடைய மனைவியான ஶ்ரீ அம்பாளுக்கு ஸுகேசி (**सुकेशी**) எனப்பெயர். அவ்விருவர்களுக்கும் பிறந்த புத்ரனே அங்கா³ரகன் (**अङ्गारकः**) என்று லிங்க புராணத்தில் கூறியுள்ளது.*

125. **शर्मदायिनी** - *பக்தர்களுக்கு ஸுகத்தை அளிக்கும் சுபாவமுள்ளவள்.*

126. **शांकरी** - *சங்கருடைய மனைவி. ஸுகத்தைச் செய்கிறவர் சங்கரர்; அல்லது ஸுகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறவர். இவரது மனைவி.*

127. **श्रीकरी** - *லக்ஷ்மியை அளிப்பவள்; அல்லது ஶ்ரீகரனான நாராயணனின் சகோதரி.*

128. **साध्वी** - *பதிவ்ரதையாக இருப்பவள். முக்காலத்திலும் பதியான பரமசிவனுடன் விளங்குகிறவள்.*

129. **शरच्चन्द्र निभानना** - *ஶரத்கால சந்திரன் போன்ற முகத்தை உடையவள்.*

शांकरी श्रीकरी साध्वी शरच्चन्द्र निभानना ।
शातोदरी शान्तिमती निराधारा निरञ्जना ॥४३
निर्लेपा निर्मला नित्या निराकारा निराकुला ।
निर्गुणा निष्कला शान्ता निष्कामा निरुपप्लवा ॥४४

ஶாங்க[1]ரீ ஸ்ரீக[1]ரீ ஸாத்[4]வீ ஶரச் சந்த்ர நிபா[4]னனா ।
ஶாதோத[3]ரீ ஶாந்திமதீ[1] நிராதா[4]ரா நிரஞ்ஜ[3]னா ॥ 43
நிர்லேபா நிர்மலா நித்யா நிராகாரா நிராகுலா ।
நிர்கு[3]ணா நிஷ்கலா ஶாந்தா நிஷ்காமா நிருபல்லவா ॥44

---

130. **शातोदरी** - குறுகிய இடையை உடையவள்.

131. **शान्तिमती** - பொறுமை உள்ளவள். பக்தர்கள் செய்கிற குற்றங்களைப் பொறுத்துக் கொள்கிறதால் சாந்திமதீ (**शान्तिमती**).

132. **निराधारा** - ஆதாரமற்றவள்; அதாவது எல்லா உலகத்திற்கும் ஸ்ரீ அம்பாளே ஆதாரமானவள். இவளுக்கு வேறு ஆதாரம் தேவை இல்லை.

133. **निरञ्जना** - அவித்யை, மாயை இவைகளின் ஸம்பந்தமற்றவள்.

134. **निर्लेपा** - கர்ம ஸம்பந்தத்தால் ஏற்படும் தோஷம் அற்றவள்.

135. **निर्मला** - அஹங்காரம் என்னும் மலம் அற்றவள்.

136. **नित्या** - முக்காலத்திலும் இருப்பவள்.

137. **निराकारा** - ஆகாரம் அற்றவள். அதாவது ஞான வடிவாய் எங்குமுள்ளவள் எனக் கருத்து.

138. **निराकुला** - கலக்கம் அற்றவள். பக்தர்களுக்கும் கலக்கமில்லாமையைச் செய்கிறவள் எனக் கருத்து.

139. **निर्गुणा** - முக்குணமற்றவள்.

140. **निष्कला** - காலத்தைக் கடந்தவள்; அதனால் நிஷ்களா.

नित्यमुक्ता निर्विकारा निष्प्रपञ्चा निराश्रया ।
नित्यशुद्धा नित्यबुद्धा निरवद्या निरन्तरा ॥४५

நித்யமுக்தா நிர்விகாரா நிஷ்ப்ரபஞ்சா நிராஶ்ரயா ।
நித்யஶுத்[3]தா[4] நித்யபு[3]த்[3]தா[4] நிரவத்[3]யா நிரந்தரா ॥45

---

141. **शान्ता** - *சாந்தியை உடையவள்.*

142. **निष्कामा** - *ஆசையற்றவள்.*

143. **निरुपप्लवा** - *அழிவற்றவள்.*

144. **नित्यमुक्ता** - *ஒருவித ப[3]ந்த[1]மும்* **(बन्धम्)** *இல்லாமல் நித்யம் விளங்குகிறவள்.*

145. **निर्विकारा** - *மாறுபாடு அற்றவள்.*

146. **निष्प्रपञ्चा** - *உலக தர்மத்திற்கு உட்படாதவள்.*

147. **निराश्रया** - *யாரையும் அண்டாதவள். உலகிலுள்ள யாவரும் ஸ்ரீ அம்பாளையே அண்ட வேண்டும். அவளுக்கு வேறு ஆஶ்ரயம்* **(आश्रयम्)** *தேவையில்லை.*

148. **नित्यशुद्धा** - *முக்காலத்திலும் சுத்தமாக இருப்பவள்.*

149. **नित्यबुद्धा** - *எப்பொழுதும் ஞானத்துடன் விளங்குகிறவள். அதாவது ஞான வடிவமாக விளங்குகிறவள் எனக் கருத்து.*

150. **निरवद्या** - *குற்றமற்றவள். அதாவது அஞ்ஞானத்தினால் செய்யும் பாபம் அற்றவள்; அல்லது அவத்[3]யம்* **(अवद्यम्)** *என்னும் நரகத்தை, தன்னை ஸ்மரிக்கும் பக்தர்கள் அடையாமல் காப்பவள்.*

151. **निरन्तरा** - *இடைவெளி இல்லாதவள்; அதாவது எங்கும் நிறைந்தவள்.*

152. **निष्कारणा** - *தனக்கு வேறு எந்த காரணமும் இல்லாதவள். எல்லா உலகத்திற்கும் ஸ்ரீ அம்பாளே காரணம்.*

153. **निष्कलङ्का** - *பாபமற்றவள்.*

निष्कारणा निष्कलङ्का निरुपाधिर्निरीश्वरा ।
नीरागा रागमथनी निर्मदा मदनाशिनी ।।४६

நிஷ்காரணா நிஷ்கலங்கா[1] நிருபாதி[4]ர் நிரீஶ்வரா ।
நீராகா[3] ராக[3] மத[2]னீ நிர்மதா[3] மத[3] நாஶினீ ।। 46

शुद्धमपापविद्धम् ஶுத்[3]த[4]மபாபவித்[3]த[4]ம் என்று வேதம் கூறுகிறது.

154. **निरुपाधिः** - உபாதி அற்றவள். ஸ்ரீ அம்பாள் ஞான வடிவமாதலால் அவித்யையின் ஸம்பந்தமற்றவள்.

155. **निरीश्वरा** - வேறு ஆளுகைக்கு உட்படாதவள். ஸ்ரீ அம்பாளே உலகை ஆளும் ஈஶ்வரி.

156. **नीरागा** - ஆசையற்றவள். ஸ்ரீ அம்பாள் 'அவாப்த ஸமஸ்த காமை' ஆகையால் **(अवाप्तसमस्तकामा)** அடைய வேண்டிய வேறு ஒரு பொருளும் இல்லாதவள்.

157. **रागमथनी** - பக்தர்களுக்கு வைராக்யத்தை அளித்து ஆசையைப் போக்குகிறவள்.

158. **निर्मदा** - கர்வம் இல்லாதவள்.

159. **मदनाशिनी** - பக்தர்களின் கர்வத்தைப் போக்குகிறவள்; அல்லது மத[3]ன **(मदन)** - ஊமத்தம்பூவை, அஶினி **(अशिनी)** - சாப்பிடுகிறவள். ஊமத்தம் பூவில் ஆசை கொண்டவள்.

160. **निश्चिन्ता** - கவலை அற்றவள். பக்தர்களுடைய கவலையையும் போக்குகிறவள்.

161. **निरहंकारा** - அஹங்காரம் அற்றவள். பக்தர்களுடைய அஹங்காரத்தைப் போக்குகிறவள்.

162. **निर्मोहा** - மயக்கமற்றவள்.

163. **मोहनाशिनी**- பக்தர்களின் மோஹத்தைப் போக்குகிறவள்.

निश्चिन्ता निरहंकारा निर्मोहा मोहनाशिनी ।
निर्ममा ममताहन्त्री निष्पापा पापनाशिनी ।।४७

நிஶ்சிந்தா நிரஹங்காரா நிர்மோஹா மோஹநாஶினீ ।
நிர்மமா மமதா1 ஹந்த்ரீ நிஷ்பாபா பாப நாஶினீ ।। 47

---

164. **निर्ममा** - *மமதை இல்லாதவள். 'இது என்னுடையது' என்பது மமகாரம்* **(ममकारम्)**. *இது பே4த3 புத்தியால்* **(भेदबुद्धि)** *ஏற்படக்கூடியது. இந்த பேத புத்தி அற்றவள் எனக் கருத்து.*

165. **ममता हन्त्री** - *மமதையைப் போக்கடிப்பவள்.*

166. **निष्पापा** - *பாபமற்றவள்.*

167. **पापनाशिनी** - *பக்தர்களுடைய பாபத்தைப் போக்குகிறவள். ஸ்ரீ அம்பாளுடைய உபாஸனத்தையோ, ஜபத்தையோ, ஸ்தோத்ரத்தையோ, ஸ்ரீ அம்பாளுக்கு நமஸ்காரத்தையோ செய்கிற பக்தர்களிடம் பாபம் சிறிது கூட அணுகாது. இதைக் கூறும் வசனங்கள்:*

வசிஷ்டஸ்ம்ருதி: **(वसिष्टस्मृति)**

विद्या तपोभ्यां सम्युक्तं ब्राह्मणं जपनैत्यकम् ।
सदापि पापकर्माणमेनो न प्रतियुज्यते ।।
जापिनां होमिनां चैव ध्यायिनां तीर्थवासिनाम् ।
न संवसन्ति पापानि ये च स्नाताः शिरोव्रतैः ।।

வித்3யா தபோப்4யாம் ஸம்யுக்தம்
ப்3ராம்ஹணம் ஜபனைத்யகம் ।
ஸதா3பி பாபகர்மாண மேனோ ந ப்ரதியுஜ்யதே ।।
ஜாபி1னாம் ஹோமினாம் சைவ
த்4யாயினாம் தீர்த்த2 வாஸினாம் ।
ந ஸம்வஸந்தி பாபானி
யே ச ஸ்னாதா: ஶிரோ வ்ரதை: ।।

பத்மபுராணம் புஷ்கர காண்டத்தில்:

मेरुपर्वत मात्रोऽपि राशिः पापस्य कर्मणः ।
कात्यायनीं समासाद्य नश्यति क्षणमात्रतः ।।
दुर्गार्चन रतो नित्यं महापातक संभवैः ।
दोषैर्न लिप्यते वीर पद्मपत्रमिवाम्भसा ।।

निष्क्रोधा क्रोधशमनी निर्लोभा लोभनाशिनी ।
निःसंशया संशयघ्नी निर्भवा भवनाशिनी ॥४८

நிஷ்க்ரோதா4 க்ரோத4ஶமனீ நிர்லோபா4லோப4நாஶினீ।
நி:ஸம்ஶயா ஸம்ஶயக்4னீ நிர்ப4வா ப4வ நாஶினீ ॥ 48

மேருபர்வத மாத்ரோऽபி ராஶி: பாபஸ்ய கர்மண: ।
காத்யாயநீம் ஸமாஸாத்3ய நஶ்யதி க்ஷணமாத்ரத: ॥
து3ர்கார்ச்சன ரதோ நித்யம் மஹாபா1தக ஸம்ப4வை: ।
தோ3ஷைர்ந லிப்யதே வீர பத்3ம பத்ரமிவாம்ப4ஸா ॥

தேவீ பாகவதத்தில்:

छित्वा भित्वा च भूतानि दत्वा सर्वमिदं जगत् ।
प्रणम्य शिरसा देवीं न स पापैर्विलिप्यते ॥
सर्वावस्थागतो वापि युक्तोवा सर्वपातकैः ।
दुर्गां दृष्ट्वा नरः पूतः प्रयाति परमं पदम् ॥

சி2த்வா பி4த்வா ச பூ4தானி த3த்வா ஸர்வமித3ம் ஜக3த் ।
ப்ரணம்ய ஶிரஸா தே3வீம் ந ஸ பாபைர் விலிப்யதே ॥
ஸர்வாவஸ்த்தா2க3தோ வாபி யுக்தோவா ஸர்வபாத1கை:।
து3ர்கா த்3ருஷ்ட்வா நர: பூ1த: ப்ரயாதி பரமம் பத3ம் ॥

168. **निष्क्रोधा** - *கோபமற்றவள். கோபிக்கத் தகுந்த சத்ருவே இல்லாதவள் எனக் கருத்து.*

169. **क्रोधशमनी** - *பக்தர்களின் கோபத்தைப் போக்குகிறவள். ஒவ்வொரு ஜீவனுக்கும் ஆறு சத்ருக்கள் உள்ளன. அதில் ஒன்று கோபமாகும். கோபத்துடன் கூடியவன் செய்யும் நற்காரியங்கள் நற்பயனை அளிக்காது என்று ஆப1ஸ்தம்ப3ர்* **(आपस्तम्बः)** *கூறியதாவது:-*

क्रोधयुक्तो यद्यजति यज्जुहोति यदर्चति ।
स तस्य हरते सर्वमामकुम्भो यथोदकम् ॥

க்ரோத4யுக்தோ யத்3யஜதி யஜ்ஜுஹோதி யத3ர்ச்சதி ।
ஸ தஸ்ய ஹரதே ஸர்வமாமகும்போ4 யதோ2த3கம் ॥

170. **निर्लोभा** - *பேராசை அற்றவள். செல்வத்தில் இருக்கும் பெரிய ஆசையால் தர்மத்திற்குக்கூட தானம் செய்யாமலித்தல் லோப4ம்* **(लोभम्)** *எனப்படும். பக்தர்களுக்கு கோரிய பொருளை அளவுக்கு மேல் அள்ளிக் கொடுப்பதால் நிர்லோபா எனப்படுகிறாள்.*

निर्विकल्पा निराबाधा निर्भेदा भेदनाशिनी ।
निर्नाशा मृत्युमथनी निष्क्रिया निष्परिग्रहा ।।४९

நிர்விகல்பா நிராபா[3]தா[4] நிர்பே[4]தா[3] பே[4]த[3] நாஶினீ।
நிர்நாஶா ம்ருத்யுமத[2]னீ நிஷ்க்ரியா நிஷ்பரிக்[3]ரஹா।। 49

---

171. **लोभनाशिनी** - மேலே கூறிய பக்தர்களின் லோபத்தைப் போக்குகிறவள்.

172. **निःसंशया** - ஸந்தேகமற்றவள்.

173. **संशयघ्नी** - பக்தர்களின் ஸந்தேஹத்தைப் போக்குகிறவள்.

174. **निर्भवा** - இறப்பற்றவள்.

175. **भवनाशिनी** - பக்தர்களின் ஜனன மரணத்தைப் போக்குகிறவள்.

176. **निर्विकल्पा** - விகல்பம் அற்றவள். 'விகல்பம்' என்றால் எதிர்க்கும் கட்சி. ஸ்ரீ அம்பாளுக்கு அக்கட்சி இல்லை எனக் கருத்து

177. **निराबाधा** - மனக்கலக்கம் இல்லாதவள். கிளிஞ்சலைக்கண்டு வெள்ளி என நினைப்பது ஜீவனுடைய மனக்கலக்கம். ஸ்ரீ அம்பாள் ஸர்வக்ஞை. ஆகையால் அக்கலக்கம் அற்றவள்.

178. **निर्भेदा** - பேதமற்றவள். ஸ்ரீ அம்பாளைத் தவிர்த்து வேறு பதார்த்தம் இல்லாததால் நிர்பே[4]தா[3].

179. **भेदनाशिनी** - பேத புத்தியைப் போக்கடிப்பவள்.

180. **निर्नाशा** - முடிவு அற்றவள்.

181. **मृत्युमथनी** - பக்தர்களுக்கு ம்ருத்யுவை போக்குகிறவள்.

182. **निष्क्रिया** - செய்ய வேண்டிய கார்யமற்றவள்.

183. **निष्परिग्रहा** - பரிஜனங்கள் அற்றவள். அதாவது யாருடைய உதவியும் தேவை இல்லாதவள்.

184. **निस्तुला** - ஒப்பற்றவள்.

निस्तुला नीलचिकुरा निरपाया निरत्यया ।
दुर्लभा दुर्गमा दुर्गा दुःखहन्त्री सुखप्रदा ।।५०
दुष्टदूरा दुराचार शमनी दोषवर्जिता ।
सर्वज्ञा सान्द्रकरुणा समानाधिक वर्जिता ।। ५१

நிஸ்த்துலா நீலசி^{1}கு^{1}ரா நிரபாயா நிரத்யயா ।
து^{3}ர்லபா^{4} து^{3}ர்க^{3}மா து^{3}ர்கா^{3} து^{3}:க^{2}ஹந்த்ரீ ஸுக^{2}ப்ரதா^{3}।।50
து^{3}ஷ்டதூ^{3}ரா து^{3}ராசார ஶமனீ தோ^{3}ஷ வர்ஜிதா ।
ஸர்வஜ்ஞா ஸாந்த்^{3}ரகருணா ஸமானாதி^{4}க வர்ஜிதா।। 51

---

185. नीलचिकुरा - *கருத்த கூந்தலை உடையவள்.*

186. निरपाया - *அபாயமற்றவள். நாசமில்லாதவள்.*

187. निरत्यया - *எல்லையைத் தாண்டாதவள். தர்மத்தை மீறி நடக்காமல் பக்தர்களைக் காப்பவள்.*

188. दुर्लभा - *யோகிகளுக்குகூட சிரமப்பட்டுக் கிடைக்கக் கூடியவள்.*

189. दुर्गमा - *ஆதலால் பக்தியற்றவர்கள் அணுக முடியாதவள்.*

190. दुर्गा - *ஸங்கடங்களிலிருந்து காப்பவள்.*

191. दुःखहन्त्री - *பக்தர்களுக்கு துக்கத்தைப் போக்குகிறவள்.*

192. सुखप्रदा - *இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகத்தைக் கொடுப்பவள்.*

193. दुष्टदूरा - *துஷ்டர்களுக்குக் கிடைக்கக் கூடாதவள்.*

194. दुराचार शमनी - *கெட்ட ஆசாரத்தைப் போக்குகிறவள்.*

195. दोषवर्जिता - *காம க்ரோதம் முதலிய தோஷங்கள் இல்லாதவள்.*

196. सर्वज्ञा - *எல்லாவற்றையும் அறிந்தவள்.*

197. सान्द्रकरुणा - *கருணை நிரம்பியவள்.*

सर्वशक्तिमयी सर्वमङ्गला सद्गतिप्रदा ।
सर्वेश्वरी सर्वमयी सर्वमन्त्र स्वरूपिणी ।। ५२

ஸர்வஶக்திமயீ ஸர்வமங்க³ளா ஸத்³ க³தி ப்ரதா³ ।
ஸர்வேஶ்வரீ ஸர்வமயீ ஸர்வமந்த்ர ஸ்வரூபிணீ ।। 52

---

198. **समानाधिक वर्जिता** - *தனக்கு ஒப்பானவர்களோ, மேலானவர்களோ இல்லாதவள்.*

199. **सर्वशक्तिमयी** - *பா³லா* **(बाला)** *ப³க³ளா* **(बगळा)** *முதலிய சக்திகளாக இருப்பவள்.*

200. **सर्वमङ्गला** - *எல்லா மங்களங்களையும் உடையவள். தேவீபுராணத்தில், ஸ்ரீ அம்பாளின் ஹ்ருதயத்திலேயே ஸர்வ மங்களங்களும் இருப்பதாலும், பக்தர்களின் மனக்கவலையைப் போக்குவதாலும் 'ஸர்வமங்களா' எனக் கூறியதாவது:-*

सर्वाणि हृदयस्थानि मङ्गलानि शुभानिच ।
ईप्सितानि ददातीति तेन सा सर्वमङ्गला ।।

ஸர்வாணி ஹ்ருத³யஸ்த்தா²னி மங்க³லானி ஶுபா⁴னிச ।
ஈப்ஸிதானி த³தா³தீ¹தி¹ தேன ஸா ஸர்வம³ங்க³ளா ।।

शोभनानि च श्रेष्ठानि या देवी ददते हरे ।
भक्तानां आर्तिहरणी तेनेयं सर्वमङ्गला ।।

ஶோப⁴னானி ச ஶ்ரேஷ்ட்டா²னி யா தே³வீ த³த³தே ஹரே।
ப⁴க்தானாம் ஆர்த்தி ஹரணீ தேனேயம் ஸர்வமங்க³ளா ।।

201. **सद्गतिप्रदा** - *பக்தர்களுக்கு நல்ல க³தியை* **(गति)** *அளிப்பவள்; அல்லது ஸாதுக்களுக்கு கதியாக இருப்பவள். அதனாலேயே மகான்கள்,* **गतिस्त्वं मतिस्त्वं त्वमेका भवानी।** க³திஸ்த்வம் மதிஸ்த்வம் த்வமேகா ப⁴வானீ । *என்று கூறியுள்ளனர்.*

202. **सर्वेश्वरी** - *யாவருக்கும் எஜமானியாக உள்ளவள்.*

203. **सर्वमयी** - *எல்லா வஸ்துக்களாகவும் இருப்பவள்.*

204. **सर्वमन्त्र स्वरूपिणी** - *ஏழு கோடி மஹா மந்திரங்களின் ஸ்வரூபமாக இருப்பவள்.*

सर्वयन्त्रात्मिका सर्वतन्त्ररूपा मनोन्मनी ।
माहेश्वरी महादेवी महालक्ष्मीर्मृडप्रिया ।।५३
महारूपा महापूज्या महापातक नाशिनी ।
महामाया महासत्वा महाशक्तिर्महारतिः ।।५४

ஸர்வ யந்த்ராத்மிகா ஸர்வ த[1]ந்த்ர ரூபா மனோன்மனீ।
மாஹேஶ்வரீ மஹாதே[3]வீ மஹாலக்ஷ்மீர் ம்ருட[3]ப்ரியா।।53
மஹாரூபா மஹா பூஜ்யா மஹா பா[1]த[1]க[1] நாஶினீ ।
மஹாமாயா மஹாஸத்வா மஹாஶக்திர் மஹாரதி: ।। 54

சுலோகம் 53:- (205) **सर्वयन्त्रात्मिका** - *எல்லா யந்த்ரங்களின் ஆத்ம ஸ்வரூபமாய் இருப்பவள். (206)* **सर्वतन्त्ररूपा** - *வாமகேஶ்வரம்* **(वामकेश्वरम्)** *முதலிய சகல தந்திரங்களாலும், கூறப்படுவள். (207)* **मनोन्मनी** - *மனோன்மணி ரூபமாக இருப்பவள். வாமதேவன் என்ற பரமேஶ்வரனுடைய சக்திக்கு 'மனோன்மணி' என்று பெயர். மேலும் மனத்தில் ஸங்கல்ப, விகல்பம் இல்லாமல் இருக்கும் பொழுது தோன்றும் ஸ்வரூபத்திற்கு மனோன்மணி என்று பெயர். இதையே யோக சாஸ்த்ரத்தில்*

मनश्च सङ्कल्प विकल्प शून्यं मनोन्मनी सा मयि सन्निधत्ताम्

மனஶ்ச ஸங்கல்ப விக[1]ல்ப ஶூன்யம் மனோன்மனீ ஸா மயி ஸந்நித[4]த்தாம்

எனக் கூறப்பட்டுள்ளது. (208) **माहेश्वरी** - *மகேஶ்வரனின் மனைவி. (209)* **महादेवी** - *மிகப் பெருந்தெய்வம். (210)* **महालक्ष्मी** - *மஹாலக்ஷ்மியாக இருப்பவள். (211)* **मृडप्रिया**- *ஸுகத்தை அளிக்கும் ஈஶ்வரனுக்கு 'ம்ருடன்' என்று பெயர். அத்தகைய ஈஶ்வரனுக்கு மிகவும் பிரியமானவள்.*

சுலோகம் 54:- (212) **महारूपा** - *மஹத்தான ரூபத்தை உடையவள். (213)* **महापूज्या** - *பூஜிக்கத் தகுந்த பரமசிவன் முதலிய தெய்வங்களாலும் பூஜிக்கத்தகுந்தவள். (214)* **महापातक नाशिनी** - *பிரம்மஹத்தி முதலிய பாபங்களையும் போக்குபவள். ப்ரும்மாண்ட புராணத்திலும்*

कृतस्याऽखिल पापस्य ज्ञानतोऽज्ञानतोपिवा ।
प्रायश्चित्तं परं प्रोक्तं पराशक्तेः पदस्मृतिः ।।

க்ருதஸ்யாऽகி[2]ல பாபஸ்ய ஜ்ஞானதோऽஜ்ஞானதோபி[1]வா ।
ப்ராயஶ்சித்தம் பரம் ப்ரோக்தம் பராஶக்தே: பத[3] ஸ்ம்ருதி: ।।

महाभोगा महैश्वर्या महावीर्या महाबला ।
महाबुद्धिर्महासिद्धिः महायोगेश्वरेश्वरी ।। ५५

மஹாபோ⁴கா மஹைஶ்வர்யா மஹாவீர்யா மஹாப³லா।
மஹாபு³த்தி⁴ர் மஹாஸித்தி⁴: மஹாயோகே³ஶ்வரேஶ்வரீ।।

ஸ்ரீ பராசக்தியின் பாதங்களை ஸ்மரித்தால், தெரிந்தோ தெரியாததாலோ செய்த மஹாபாபங்களும் போகும் என்று கூறப்பட்டுள்ளது. பிரும்மோத்தர கண்டத்திலும் 'சிவ பூஜையினால் நூறு பிரும்மஹத்தி தோஷம் விலகும் என்றும், அதை அரை ஶ்லோகத்தால் கூறுகிறேன்' என்று கூறிய ஶ்லோகமாவது:-

बहुनात्र किमुक्तेन श्लोकार्धेन वदाम्यहम् ।
ब्रह्महत्या शतं वापि शिवपूजा विनाशयत् ।।

ப³ஹுநாத்ர கிமுக்தேன ஶ்லோகார்தே⁴ன வதா³ம்யஹம்।
ப்³ரஹ்ம ஹத்'யா ஶதம் வாபி ஶிவபூஜா விநாஶயத் ।।

(215) **महामाया** *- பிரம்மாதி தேவர்களுக்கும் மோஹத்தை அளிப்பதால் மஹா மாயா. (216)* **महासत्वा** *- மஹத்தான பலத்தை உடையவள். (217)* **महाशक्तिः** *- யாவரையும் காக்கும் சக்தி வாய்ந்தவள். (218)* **महारतिः** *- விஷயங்களில் இருக்கும் ஆசைக்கு மேற்பட்ட ஆசையை ஞானிகளால் வைக்கப்பட்டவள்.*

சுலோகம் 55:- (219) **महाभोगा** *- மஹத்தான ஸுகத்தை உடையவள். (220)* **महैश्वर्या** *- மஹத்தான ஐஶ்வர்யம் உள்ளவள். (221)* **महावीर्या** *- சிறந்த வீர்யத்தை உடையவள் (222)* **महाबला** *- சிறந்த பலம் வாய்ந்தவள்; அல்லது புஸுண்டன் முதலிய காக்கைகளை ஜீவன் முக்தர்களாகச் செய்தவள் (***बल**-ப³ல *என்பதற்குக் காக்கை என்றும் பொருள் உண்டு. இக்கதையை* யோக³வாஸிஷ்டம் **(योगवासिष्टम्)** *கூறுவதாவது:-*

प्रसाद परयाकाले भगवत्या ततः स्वयम् ।
तथैवानुगृहीताः स्मो येन मुक्ता वयंस्थिताः ।।

ப்ரஸாத³ பரயாகா¹லே ப⁴க³வத்யா தத: ஸ்வயம் ।
ததை²வாநுக்³ருஹீதா: ஸ்மோ யேன முக்தா வயம்ஸ்தி²தா:।।

(223) **महाबुद्धिः** *- சிறந்த புத்தியாக இருப்பவள் (224)* **महासिद्धिः** *- அணிமா முதலிய சிறந்த அஷ்ட ஸித்திகளாக இருப்பவள்.*

महातन्त्रा महामन्त्रा महायन्त्रा महासना।
महायाग क्रमाराध्या महाभैरव पूजिता ।। ५६
महेश्वर महाकल्प महाताण्डव साक्षिणी ।
महाकामेश महिषी महात्रिपुर सुन्दरी ।।५७

மஹாதந்த்ரா மஹாமந்த்ரா மஹாயந்த்ரா மஹாஸனா।
மஹாயாக^{3} க்ரமாராத்^{4}யா மஹாபை^{4}ரவ பூஜிதா ।। 56
மஹேஸ்வர மஹாக^{1}ல்ப மஹாதாண்ட^{3}வ ஸாக்ஷிணீ।
மஹாகாமேஸ மஹிஷீ மஹாத்ரிபுர ஸுந்த^{3}ரீ ।। 57

---

(225) **महायोगेश्वरेश्वरी** - *மஹான்களான யோகேஸ்வரர்களுக்கும் ஈஸ்வரியாக இருப்பவள்.*

ஸ்லோகம் 56:- (226) **महातन्त्रा** - *தன்னைக் கூறும் சிறந்த தந்த்ர சாஸ்த்ரங்களை உடையவள். (227)* **महामन्त्रा** - *தன்னைப் பற்றிக் கூறும்மஹா மந்திரங்களை உடையவள். அல்லது ஆசார்ய ரூபிணியாக இருந்து மஹா மந்த்ரங்களை உபதேசிப்பவள். (228)* **महायन्त्रा** - *மஹத்தான யந்த்ரங்களால் ஆராதிக்கத் தகுந்தவள். அதாவது பூஜிக்கும் அந்த யந்த்ரங்களே ஸ்ரீ அம்பாள் எனக் கருத்து. (229)* **महासना** - *ப்ருத்^{2}வீ* **(पृथ्वी)** *முதலிய முப்பத்தாறு தத்வங்களைச் சிறந்த ஆஸனமாகக் கொண்டவள் (230)* **महायाग क्रमाराध्या** - *மஹாயாகத்தின் முறையால் பூஜிக்கத் தகுந்தவள். ப்^{3}ராம்ஹி* **(ब्राह्मी)** *முதலிய மாத்ருகா***(मातृका)** *தேவதைகளின் அம்சங்களான அக்ஷோப்^{4}யா* **(अक्षोभ्या)** *முதலான அறுபத்துநான்கு யோகினிகளுடைய பூஜையுடன் கூடினது மஹாயாகம் எனப்படும். இதனால் ஸ்ரீ அம்பாள் ஆராதிக்கத் தகுந்தவள். (231)* **महाभैरव पूजिता** - *மஹா பைரவரான பரமசிவனால் பூஜிக்கப்பட்டவள். பரமசிவன் பூஜித்ததை பாத்^{3}மம்* **(पाद्मम्)** *கூறியதாவது:-*

शंभुः पूजयते देवीं मन्त्रशक्तिमयीं शुभाम् ।
अक्षमालां करे धृत्वा न्यासेनैव भवोद्भवः ।।

ஶம்பு^{4}: பூஜயதே தே^{3}வீம் மந்த்ர ஶக்திமயீம் ஶுபா^{4}ம் ।
அக்ஷமாலாம் கரே த்^{4}ருத்வா ந்யாஸேனைவ ப^{4}வோத்^{3}ப^{4}வ:।।

ஸ்லோகம் 57:- (232) **महेश्वर महाकल्प महाताण्डव साक्षिणी** - *மஹாப்ரளயத்தில் மஹேஸ்வரரால் செய்யப்படும்*

चतुःषष्ट्युपचाराढ्या चतुःषष्टि कलामयी ।
महाचतुःषष्टिकोटि योगिनी गणसेविता ।। ५८

சது:ஷஷ்ட்யுபசாராட்4யா சது:ஷஷ்டி க1லாமயீ ।
மஹாசது:ஷஷ்டி கோடி யோகி3னீ க3ண ஸேவிதா ।। 58

பெரிய தாண்டவத்திற்கு ஸாக்ஷியாக இருப்பவள். (233) **महाकामेश महिषी** - *மஹா காமேஶ்வரரான பரமேஶ்வரரின் பட்டமஹிஷி. (234)* **महात्रिपुर सुन्दरी** - *அறிகிறவள், அறிவு, அறியத் தகுந்தது என்ற த்ரிபுரத்தின் ஸ்வரூபமாக (சிறந்த த்ரிபுடி* **(त्रिपुटि)** *ஸ்வரூபமாக) இருப்பவள்.*

சுலோகம் 58:- (235) **चतुःषष्ट्युपचाराढ्या** - *அறுபத்து நான்கு உபசாரங்களைப் (பக்தர்கள் செய்வதைப்) பொருளாக உடையவள். (236)* **चतुःषष्टि कलामयी** - *அறுபத்து நான்கு வித்யைகளாக இருப்பவள். இந்த அறுபத்து நான்கு கலைகளும் சாருங்கதரரின் கதாகோசத்திலும், ஸ்ரீதாரின் லக்ஷ்மீ பீடிகா முதலிய க்ரந்தங்களிலும் கூறப்பட்டுள்ளன.*

अष्टादश लिपिबोधस्तल्लेखन शीघ्रवाचने चित्रम् । बहुविध भाषाज्ञानं तत्कविता श्रुतनिगदिता द्यूतम् ।। वेदा उपवेदाश्चत्वारः शास्त्राङ्ग षट्के द्वे । तन्त्र पुराण स्मृतिकं काव्यालङ्कार नाटकादि द्वे ।। शान्तिर्वश्याकर्षण विद्वेषोच्चाटन मारणानि च षट् । गतिजल दृष्ट्याग्न्यायुधवाग्रेतः स्तम्भसप्तकं शिल्पम् ।। गज हय रथ नर शिक्षाः सामुद्रिकमल्लसूदगारुडकाः । तत्तत्सुषिरानद्ध घनेन्द्र जालनृत्तानि गीतरसवादौ ।। रत्न परीक्षा चौर्यं धातु परीक्षाप्यदृश्यत्वम् । इति भास्करसुधियोक्ता निष्कृष्य कलाश्चतुःषष्टिः ।।

அஷ்டாத3ஶ லிபிபோ3த4ஸ் தல்லேக2ன ஶீக்4ரவாசனே சித்ரம் । ப3ஹுவித4 பா4ஷாஜ்ஞானம் தத்கவிதா ஶ்ருத நிக3தி3தா த்3யூதம் ।। வேதா3 உபவேதா3ஶ் ச1த்வார: ஶாஸ்த்ராங்க3 ஷட்கே த்3வே । த1ந்த்1ர புராண ஸ்ம்ருதிகம் காவ்யாலங்கார நாடகாதி3 த்3வே ।। ஶாந்திர் வஶ்யாகர்ஷண வித்3வேஷோச்சாடன மாரணானி ச ஷட் । க3திஜல த்3ருஷ்ட்யாக்3ன்யாயுத4வாக்3ரேத: ஸ்தம்ப4 ஸப்த1க1ம் ஶில்பம் ।। க3ஜ ஹய ரத2 நர ஶிக்ஷா:

ஸாமுத்[3]ரிக மல்லஸூதே[3]கா[3]ருட[3]கா: । தத்தத்ஸுஷிரானத்[3]த[4] க[4]னேந்த்[3]ர ஜால ந்ருத்தானி கீ[3]த ரஸவாதெள[3] ।। ரத்ன பரீக்ஷா சௌ[1]ர்யம் தா[4]து பரீக்ஷாப்யத்[3]ருஶ்யத்வம்। இதி பா[4]ஸ்க[1]ர ஸூதி[4]யோக்தா நிஷ்க்ருஷ்ய கலாஶ் சது:ஷஷ்டி: ।।

(1) பதினெட்டு விதமான பாஷைகளின் எழுத்துக்கள் தெரிவது (2) அவைகளை எழுதுவது (3) அவைகளை வேகமாக வாசிப்பது (4) சித்திரம் எழுதுவது (5) அனேகவிதமான பாஷைகள் தெரிவது (6) அவைகளில் க[1]வனம் **(कवनम्)** *செய்வது (7) அவைகளில் பிரஸங்கம் செய்வது (8) சூதாட்டம் (9-12) நான்கு வேதங்கள் (13-16) உபவேதங்கள் நாலு (17-28) சாஸ்திரங்கள் பன்னிரண்டு (29) தந்த்ர, புராண ஸ்ம்ருதிகள் (30) காவ்ய, அலங்கார நாடகங்கள் (31-36) சாந்தி, வச்ய, ஆகர்ஷண, வித்வேஷண, மாரண ப்ரயோகங்கள் (37-43) க[3]தி* **(गति-** *நடப்பது), ஜல, த்ருஷ்டி, அக்னி, ஆயுத, வாக், ரேதஸ் இவைகளை ஸ்தம்ப[4]னம்* **(स्तम्भनम्)** *செய்வது (44) சிற்பம் (45-48) கஜ, ஹய(குதிரை), ரத, நர சிக்ஷைகள் (இவைகளைப் பழக்குவது) (49) ஸாமுத்[4]ரிகா சாஸ்த்ரம் (50) மல்ல சாஸ்த்ரம் (51) ஸூத சாஸ்த்ரம் (சாப்பிடும் வஸ்துக்களைத் தயார் செய்வது) (52) கா[3]ருட[3] ப்ரயோகங்கள்* **(गारुडप्रयोगम्)** *(விஷங்களை இறக்குவது) (53) ததம் (தந்தி வாத்யங்கள் வாசிப்பது) (54) ஸுஷிரம் (புல்லாங்குழல் முதலான காற்று வாத்யங்கள் வாசிப்பது) (55) ஆனந்தம் (ம்ருதங்கம் முதலியவை வாசிப்பது) (56) கனம் (வெண்கலத்தினாலான தாளம் முதலியவை) அடிப்பது (57) இந்த்ரஜாலம் (58) ந்ருத்தம் (59) கீதம் (பாடுவது) (60) ரஸவாதம் (61) ரத்ன பரீக்ஷை (62) சௌ[1]ர்யம்* **(चौर्यम्)** *(திருடுவது) (63) தா[4]து பரீக்ஷை* **(धातु परीक्षा)** *(நாடி பார்ப்பது) (64) அத்[3]ருச்யத்வம்* **(अदृश्यत्वम्)** *(மறைந்து போகிறது)*

இவைகளில் சிலவற்றிற்குப் பதிலாக பின் வருபவைகளைச் சொல்வது வழக்கம். நகைகள் செய்வது, புஷ்பமாலை கட்டுவது. வாசனைப் பொடி தயார் செய்வது. புருஷர்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் யௌவனம் உண்டு பண்ணும் ஸாமக்ரியைகள் தயார் செய்வது, பொம்மலாட்டம், புதிர் போடுவது, அந்தாதி கூறுவது. ஸமஸ்யை பூர்த்தி செய்வது, தச்சு வேலை, வீடு கட்டுவது, தலையை வாரிப் பின்னுவது, தச்சு வேலை தேய்ப்பது, கோழி முதலியவைகளின் சண்டை முறையைத் தெரிவது, பூ முதலியவை

வைத்து ஆருடம் சொல்வது, பிறர் மனதிலிருப்பதை அறிவது, மாறுவேஷம் போடுவது, பட்டம் பறக்கவிடுவது, குழந்தை பொம்மைகள், யந்த்ரங்கள் முதலியவை செய்வது, படுக்கை தலையணை முதலியவை தயார் செய்வது, கிளி முதலியவைகளை பேசப்பழக்குவது, உடம்பைப் பிடித்து விடுவது முதலானவை. இவைகளில் பெரும்பாலானவை மிகவும் சில்லரையான விஷங்களைப் பற்றி இருப்பதினால் பாஸ்கரராயர் எழுதியதையே நாம் ஒப்புக் கொள்ள வேண்டும் (237) **महाचतुःषष्टिकोटि योगिनी गणसेविता** - மிகப் பெரியவைகளான அறுபத்து நான்கு யோகினீ கணங்களால் ஸேவிக்கப்பட்டவள். அதாவது ப்ராம்ஹீ முதலிய எட்டு மாத்ருகா சக்திகளான அறுபத்து நான்கு யோகினீ கணங்களால் ஸேவிக்கப்பட்டவள். அதாவது ப்ராம்ஹீ முதலிய எட்டு மாத்ருகா சக்திகள் ஸ்ரீ சக்ரத்தின் முதலாவது ஆவரணமாகிய த்ரைலோக்ய மோஹன சக்ரத்தில் **(त्रैलोक्य मोहन चक्रम्)** உள்ளனர். அந்த ஒவ்வொருவருக்கும் தனது அம்சமான அக்ஷோப்யா முதலிய எட்டு யோகினிகள் உள்ளனர். ஆக இவர்கள் அறுபத்து நான்கு சக்திகள், இந்த அறுபத்து நான்கு பேருக்கும் தங்கள் தங்கள் அம்சம் பொருந்திய கோடி யோகினிகள் உள்ளனர். ஆக அறுபத்து நான்கு கோடி யோகினிகளாகிறார்கள். இவர்களின் கூட்டங்களால் ஸேவிக்கப்பட்டவள்.

பெரியோர்கள் இந்த இடத்தில் பாஸ்கரராயரைப் பற்றி ஓர் கதை சொல்வது உண்டு. ஸ்ரீ பாஸ்கரராயர் கங்காதீரமான காசியில் சில நாட்கள் ஸ்ரீஅம்பாளை பூஜை செய்ய வேணுமென்று தங்கினார். அங்கு சில பண்டிதர்கள் இவரது ஆசாரத்தில் சந்தேகம் கொண்டு, வாதத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பாஸ்கரராயரை, ஒரு சாஸ்திரங்களிலும் கூறப்படாத இந்த அறுபத்து நான்கு கோடி யோகினீக்களின் உற்பத்தி, லக்ஷணம், சரித்திரம் முதலியவற்றை விபரமாய் சொல்லும்படி கேட்டார்கள். 'நான் சொல்லுகிறேன், தடங்கலில்லாமல் எழுதுங்கள்' என்று பாஸ்கரராயர் சொல்ல ஆரம்பித்தார். பிறகு அவர்களால் எழுத முடியாமல் கை சளைத்து, பாஸ்கரராயரை அவர் உபாஸிக்கும் 'ஸ்ரீ அம்பாளின் ஸ்வரூபமே இவர்' என நினைத்து பூஜித்தார்களாம்.

मनुविद्या चन्द्रविद्या चन्द्रमण्डल मध्यगा ।
चारुरूपा चारुहासा चारुचन्द्र कलाधरा ।। ५९
चराचर जगन्नाथा चक्रराज निकेतना ।
पार्वती पद्मनयना पद्मराग समप्रभा ।। ६०

மனுவித்^{3}யா சந்த்^{3}ரவித்^{3}யா சந்த்^{3}ரமண்ட^{3}ல மத்^{4}யகா^{3}।
சாரு ரூபா சாருஹாஸா சாருசந்த்^{3}ர கலாத^{4}ரா ।। 59
ச^{1}ராச^{1}ர ஜகந்நாதா^{2} சக்ர ராஜ நிகேத^{1}னா ।
பார்வதீ பத்^{3}ம நயனா பத்^{3}ம ராக^{3} ஸமப்ரபா^{4} ।। 60

ஸ்லோகம் 59:- (238) **मनुविद्या** - *மனுவினால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபிணியாக இருப்பவள். (239)* **चन्द्रविद्या** - *சந்திரனால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபிணியாக இருப்பவள். (240)* **चन्द्रमण्डल मध्यगा** - *சந்திரமண்டலத்தின் நடுவில் இருப்பவள். சந்திர மண்டலமே ஸ்ரீ சக்ரமென சாஸ்திரத்தின் உட்கருத்து. உபாஸகர்கள் ஸாயம் ஸந்த்^{4}யாவந்த^{3}னத்தில்* **(सायं सन्ध्यावन्दनम्)** *சந்திர மண்டலத்தில் ஸ்ரீ அம்பாளை தியானிப்பது வழக்கம். (241)* **चारुरूपा** - *சிறந்த அழகு வாய்ந்தவள். (242)* **चारुहासा** - *அழகிய புன் சிரிப்புள்ளவள். (243)* **चारुचन्द्र कलाधरा** - *அழகிய சந்திரகலையை சிரஸில் தரித்திருப்பவள்.*

ஸ்லோகம் 60:- (244) **चराचर जगन्नाथा** - *அசையும் பொருள், அசையாப் பொருள் இவ்விரண்டின் ரூபமான ஜகத்திற்கு ஈஶ்வரியாக இருப்பவள். (245)* **चक्रराज निकेतना** - *த்ரைலோக்ய மோஹனம்* **(त्रैलोक्य मोहनम्)** *முதலிய ஒன்பது சக்கரங்கள் அடங்கிய ஸ்ரீ சக்ரத்தையே இருப்பிடமாகக் கொண்டவள். (246)* **पार्वती** - *பர்வத ராஜனான ஹிமவானின் புத்ரி. (247)* **पद्मनयना** - *தாமரை போன்ற கண்கள் உடையவள். (248)* **पद्मराग समप्रभा** - *பத்மராக ரத்னத்திற்கு ஒப்பான சிவந்த நிறமுள்ளவள்.*

ஸ்லோகம் 61:- (249) **पञ्चप्रेतासनासीना** - *பஞ்சப்ரேதங்களால் செய்யப்பட்ட ஆஸனத்தில் வீற்றிருப்பவள். ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈஶானன், ஸதாசிவன்- இந்த ஐந்து பேர்களும் சேர்ந்த கட்டிலே ஆஸனம் எனப்படும். இந்த*

पञ्चप्रेतासनासीना पञ्चब्रह्म स्वरूपिणी ।
चिन्मयी परमानन्दा विज्ञानघन रूपिणी ।। ६१
ध्यान ध्यातृ ध्येय रूपा धर्माधर्म विवर्जिता ।
विश्वरूपा जागरिणी स्वपन्ती तैजसात्मिका ।।६२

பஞ்ச ப்ரேதாஸனாஸீனா பஞ்ச ப்[3]ரம்ஹ ஸ்வரூபிணீ।
சி[1]ன்மயீ பரமானந்தா[3] விஜ்ஞான க[4]ன ரூபிணீ ।। 61
த்[4]யான த்[4]யாத்ரு த்[4]யேய ரூபா த[4]ர்மாத[4]ர்மவிவர்ஜிதா।
விஶ்வரூபா ஜாக[3]ரிணீ ஸ்வபந்தீ[1] தை[1]ஜஸாத்மிகா ।। 62

ஐந்து பேர்களும் தங்களுடைய வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்[3]ரீ முதலிய சக்திகளுடன் சேராவிடில் ப்ரேதமாக (ஒன்றும் செய்ய முடியாதவர்களாக) இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளனர். *(250)* **पञ्चब्रह्म स्वरूपिणी** - ஈஶான(**ईशानः**), தத்புருஷ(**तत्पुरुषः**), அகோ[4]ர(**अघोरः**), வாமதே[3]வ(**वामदेवः**), ஸத்[3]யோஜாத (**सद्योजातः**) என்ற ஐந்து பேர்களையும் ப்ரும்மா எனச் சொல்லுவது வழக்கம். இந்த ரூபமாக இருப்பவள். *(251)* **चिन्मयी** -சை[1]தன்ய (**चैतन्यम्**) ரூபமாக இருப்பவள். *(252)* **परमानन्दा** - பரமானந்த ரூபமாக இருப்பவள். *(253)* **विज्ञानघन रूपिणी** - ஜீவ ஸமஷ்ட்யபி[4]மானி ஹிரண்யக[3]ர்ப[4]னின் (**जीव समष्ट्यभिमानिः हिरण्यगर्भः**) உருவமாக இருப்பவள். விஞ்ஞானம் என்றால் ஜீவர்களின் கூட்டம். கனம் என்றால் ஸமஷ்டி. இதன் ரூபமாக இருப்பவர் ஹிரண்யகர்பர். அந்த ரூபமாக ஸ்ரீ அம்பாள் விளங்குகிறாள்.

சுலோகம் 62:- *(254)* **ध्यान ध्यातृ ध्येय रूपा** - த்யானம், த்யானம் செய்கிறவன், த்யானம் செய்யப்படும் வஸ்து இம்மூன்று த்ரிபுடீ (**त्रिपुटी**) ரூபிணியாய் இருப்பவள். *(255)* **धर्माधर्म विवर्जिता** - தர்மம், அதர்மம், இவ்விரண்டும் அற்றவள். கோரிய பயனை அளிக்கும் கார்யங்கள் தர்மமென்றும், விரும்பப்படாத பயனை அளிக்கும் கார்யங்கள் அதர்மமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. உலகத்தைக் காப்பதாலும், மிகப்பெரியதாக இருப்பதாலும் தர்மம் எனப்பெயர் வந்தது. அதனால்கோரிய பொருளை தர்மம் அளிக்குமென்றும், அதர்மம் நமக்கு வேண்டாத பொருள்களை அளிக்குமென்றும் ஆசார்யர்கள் கூறுகின்றனர் என்று மத்ஸ்ய புராணம் கூறும் வாக்யம்:-

धर्मेति धारणे धातुर्महत्वे वै प्रपद्यते । धारणेन महत्वेन धर्म एव निरुध्यते ।। तेनेष्टप्रापको धर्म आचार्यैः उपदिश्यते । इतरोऽनिष्ट फलदस्त्वाचार्यैः उपदिश्यते ।।

த⁴ர்மேதி தா⁴ரணே தா⁴துர் மஹத்வே வை ப்ரபத்³யதே ।
தா⁴ரணேன மஹத்வேன த⁴ர்ம ஏவ நிருத்⁴யதே ।।
தேனேஷ்ட ப்ராபகோ த⁴ர்ம ஆசார்யை: உபதி³ஶ்யதே ।
இதரோऽநிஷ்ட ப²லத³ஸ்த்வாசா(ர்)யை: உபதி³ஶ்யதே ।।

ஸம்வர்த்த ஸ்ம்ருதியும் (**संवर्त्त स्मृति**) **देशे देशे** தே³ஶே தே³ஶே எந்த எந்த தேசத்திலும் வேதத்திற்கு விரோதமில்லாமல் பாரம்பரையாய் செய்துவரும் ஆசாரத்தை தர்மமெனக் கூறுகிறது. மேலும், யாக்ஞவல்க்ய முனிவரும் **इत्याचार** இத்யாசார யாகம், ஆசாரம், மனதை அடக்குவது, அஹிம்ஸை, தானம், வேதம் கற்பது, மற்றும் உள்ள நற்காரியங்களைச் செய்வது இவை யாவும் தர்மம் எனப்படும். ஆனால் எல்லா தர்மங்களுக்கும் மேற்பட்ட தர்மம் த்யான யோகத்தால் பரம் பொருளை உள்ளே பார்ப்பதுதான் என்று கூறியுள்ளார். இந்த தர்மம், அதர்மம், இவைகளுக்கு மேற்பட்டவள் ஸ்ரீ அம்பாள் என்றதால் பரப்ரும்மம் என வெளியாகிறது. (256) **विश्वरूपा** - உலகத்தின் உருவாகவே இருப்பவள். (257) **जागरिणी** - விழித்துக் கொண்டிருக்கும் அவஸ்தையில் (நிலையில்) இருக்கும் ஜீவனுடன் அபே⁴த³மாக (**अभेदम्**) இருப்பவள் (258) **स्वपन्ती** - ஸ்வப்ன அவஸ்தையில் இருக்கும் ஜீவனுடன் அபே⁴த³மாக (**अभेदम्**) இருப்பவள். (259) **तैजसात्मिका** - மேலே சொல்லிய தைஜஸர்களாகிய ஜீவர்களின் ஸமஷ்டியின் ரூபமான ஹிரண்யக³ர்ப⁴ரின் (**हिरण्यगर्भः**) ஸ்வரூபமாக இருப்பவள். ஸ்வப்ன தசையை அடைந்த தைஜஸன் என்று சொல்லப்படும் ஸூக்ஷ்ம சரீர அபிமானியான வ்யஷ்டியான ஜீவஸ்வரூபிணியாக மேலே கூறப்பட்டது. இங்கு ஸமஷ்டி ரூபியான ஹிரண்யகர்பரின் ரூபிணியாக சொல்லப்படுகிறது.

சுலோகம் 63:- (260) **सुप्ता** - ஸுஷுப்தி (தூக்கம்) அவஸ்தையை அடைந்த ஜீவனைக் காட்டிலும் வேறுபடா-தவளாக இருப்பவள். எந்த அவஸ்தையில் அஞ்ஞானம், அஹங்காரம், சுகம், இம்மூன்று வ்ருத்'தி'களும் (**वृति**) உள்ளனவோ, அதற்கு ஸுஷுப்தி என்று பெயர். இம்-மூன்றையும் நன்கு தூங்கி எழுந்தவனிடத்தில் காண்கிறோம். அதாவது 'நான்', 'சுகமாகத் தூங்கினேன்'. 'ஒன்றையும் நான்

सुप्ता प्राज्ञात्मिका तुर्या सर्वावस्था विवर्जिता।
सृष्टिकर्त्री ब्रह्मरूपा गोप्त्री गोविन्दरूपिणी।। ६३
संहारिणी रुद्ररूपा तिरोधानकरीश्वरी ।
सदाशिवानुग्रहदा पञ्चकृत्य परायणा ।।६४

ஸுப்தா[1] ப்ராஜ்ஞாத்மிகா து[1]ர்யா
ஸர்வாவஸ்த்தா[2] விவர்ஜிதா ।
ஸ்ருஷ்டி கர்த்ரீ ப்[3]ரஹ்ம ரூபா
கோ[3]ப்த்ரீ கோ[3]விந்த[3] ரூபிணீ ।। 63
ஸம்ஹாரிணீ ருத்[3]ர ரூபா தி[1]ரோதா[4]ன க[1]ரீஸ்வரீ ।
ஸதா[3]ஶிவானுக்[3]ரஹதா[3] பஞ்ச க்ருத்ய பராயணா ।। 64

அறியவில்லை' என்று. (261) **प्राज्ञात्मिका** - *மேலே கூறிய ஸுஷுப்தி அவஸ்தையை அடைந்த ஜீவர்களின் ஸமஷ்டி அபிமானியான ஈஸ்வரனைக் காட்டிலும் வேறுபடாதவள். மேலே கூறிய இம்மூன்று அவஸ்தைகளையும் அதை அனுபவிப்பவர்களையும் பிரித்து அறிவதனால் ஏற்பட்ட சுத்தவித்யையின் உற்பத்தி (சுத்த ஞானம்) துரீயாவஸ்தை* **(तुरीयावस्था)** *எனப்படும். (262)* **तुर्या** - *மேலே சொல்லிய துரீயாவஸ்தையை அடைந்த ஜீவனைக் காட்டிலும் வேறுபடாதவள். (263)* **सर्वावस्था विवर्जिता** - *மேலே கூறிய எல்லா அவஸ்தைகளிலிருந்தும் விடுபட்டவளாக இருப்பவள். (264)* **सृष्टिकर्त्री** - *ஜகத்தை நிர்மாணம் செய்யும் ரஜோகு[3]ணப்ரதா[4]னரான* **(रजोगुणप्रधानः)** *ஈஸ்வரனாக இருப்பவள். அவித்யைக்கு வசமாக இருப்பவன் ஜீவன். மாயையை தன் வசப்படுத்திக் கொண்டவன் ஈஸ்வரன். அப்படிப்பட்ட ஈஸ்வரனின் கார்யங்கள் இதிலிருந்து சொல்லப்படுகிறது (265)* **ब्रह्मरूपा** - *ப்ரும்மதேவனாகிற ஈச்வரனாக இருப்பவள். ப்ரும்மதேவனும் மாயையை தன் வசப்படுத்திக் கொண்டவராகையால் ஈஸ்வரனென்று சொல்லப்படுகிறார். (266)* **गोप्त्री** - *உலகத்தைக் காற்கும் ஸத்வகுண ப்ரதானரான* **(सत्वगुणप्रधानः)** *ஈஸ்வரனாக இருப்பவள் (267)* **गोविन्दरूपिणी** - *கோவிந்தன் என்கிற உலகத்தைக் காற்கும் விஷ்ணுவின் ரூபமாக இருப்பவள்.*

சுலோகம் 64:- (268) **संहारिणी** - *உலகத்தை அழித்து பரமாணுக்களாகிற (தூளாக செய்து) ஸம்ஹாரம்*

भानुमण्डल मध्यस्था भैरवी भगमालिनी ।
पद्मासना भगवती पद्मनाभ सहोदरी ।। ६५

பா⁴னுமண்ட³ல மத்⁴யஸ்தா² பை⁴ரவீ ப⁴க³மாலினீ ।
பத்³மாஸனா ப⁴க³வதீ பத்³மனாப⁴ ஸஹோத³ரீ ।।65

செய்யும் தமோகுண ப்ரதானரான **(तमोगुणप्रधान:)** ஈப்வரனாக இருப்பவள். (269) **रुद्ररूपा** - மேலே சொல்லிய ஸம்ஹாரத்தைச் செய்யும் ருத்³ரனாக இருப்பவள். ருத்³ரன் என்றால் ரோகத்தைப் போக்குகிறவன் என சிவரஹஸ்யம் கூறிய வசனம்:-

रुजं द्रावयते तस्मात् रुद्रः पशुपतिः स्मृतः ।

ருஜம் த்³ராவயதே தஸ்மாத் ருத்³ர: பஶுபதி: ஸ்ம்ருத: ।

மேலும் வாயவீய ஸம்ஹிதையில் **(वायवीयसंहिता)** துக்கத்தை அல்லது துக்கத்திற்குக் காரணமான பாபத்தைப் போக்குவதால் ருத்³ரன் எனப்படும் என்ற வசனம்:-

रुग् दुःखं दुःखहेतुर्वा तद्रावयति यः प्रभुः ।
रुद्र इत्युच्यते तस्मात् शिवः परमकारणम् ।।

ருக்³ து³:க²ம் து³:க²ஹேதுர்வா தத்³ராவயதி ய: ப்ரபு⁴: ।
ருத்³ர இத்யுச்யதே தஸ்மாத் ஶிவ: பரம காரணம் ।।

(270) **तिरोधानकरी** - பரமாணுக்களாகச் செய்யப்பட்ட உலகத்தை ப்ரக்ருதியில் திரோதானத்தை (லயத்தை) அடையும்படி செய்யும், பூர்ணமாயும் சுத்தமாயும் உள்ள ஸத்வ குணத்தை ப்ரதானமாகக் கொண்ட ஈப்வர உருவாக இருப்பவள். (271) **ईश्वरी** - மேலே சொல்லிய திரோதானத்தைச் செய்யும் ஈச்வர ரூபமாக இருப்பவள். (272) **सदाशिवा** - ஸதாசிவனாக இருப்பவள். திரோதானத்தை அடைந்த பரமாணுக்களை மறுபடி வெளிவரும்படி செய்கிறவர் ஸதாசிவன். (273) **अनुग्रहदा** - அனுக்ரஹத்தைச் செய்பவள். அதாவது மறைந்த பரமாணுக்களை மறுபடி திரும்பி வரும்படி அனுக்ரஹித்தவள். (274) **पञ्चकृत्य परायणा** - மேலே கூறிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்ற ஐந்து கார்யங்களையும் செய்வதில் மிக்க முயற்சி கொண்டவள்.

சுலோகம் 65:- (275) **भानुमण्डल मध्यस्था** - சூர்ய மண்டலத்தின் நடுவிலிருப்பவள். பொதுவாய் தியானத்தை கூறுமிடத்தில் சூர்ய மண்டலத்தின் மத்தியில் இருக்கும் ஸ்ரீ அம்பாளை தியானிக்கும்படி விதிக்கப்பட்டுள்ளது.

सूर्यमण्डल मध्यस्थां देवीं त्रिपुरसुन्दरीम् ।
पाशाङ्कुश धनुर्बाणान् धारयन्तीं शिवां भजे ।।

ஸூர்யமண்ட³ல மத்⁴யஸ்த்தா²ம் தே³வீம் த்ரிபுரஸுந்த³ரீம்।
பாஶாங்குஶ த⁴னுர் பா³ணான் தா⁴ரயந்தீம் ஶிவாம் ப⁴ஜே ।।

பாசம், அங்குசம், வில், பாணம், இவைகளை தரிக்கின்றவளும், சூர்ய மண்டலத்தின் நடுவில் இருக்கின்றவளும், தேவியுமான ஸ்ரீ த்ரிபுர ஸுந்தரியான அம்பாளை பஜிக்கிறேன் என்று. மேலும் ஸந்த்யா காலத்திலும் அம்பாளை சூர்ய மண்டலத்தில் தியானிக்கும்படி சாஸ்திரம் கூறுகிறது. (276) **भैरवी** - பை¹ர-வரான ஸ்ரீ பரமசிவரின் மனைவி. (277) **भगमालिनी** - ப¹க³த்தை மாலையாகக் கொண்டவள். ப¹க³ம் **(भगम्)** என்றால் நிறைந்த ஐம்வர்யம், தர்மம், யமஸ், ஸ்ரீ, சாஸ்திரீயமான ஞானம், அனுபவம், இந்த ஆறு குணங்களுமாகும். (278) **पद्मासना** - தாமரைப் பூவாகிற ஆஸனத்தில் அமர்ந்தவள். அதாவது பத்மத்தை ஆஸனமாகக் கொண்ட ப்ரும்ம தேவ-னாக இருக்கிறவள். அல்லது **पद्मां सनति** பத்³மாம் ஸனதி மஹாலக்ஷ்மியை பக்தர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பவள். (279) **भगवती** - ஐம்வர்யம் உள்ளவள். (280) **पद्मनाभ सहोदरी** - பத்மநாபனான ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸஹோதரி.

कात्यायनीति या जाता कंस शत्रोः सहोदरी ।

காத்யாயனீதி யா ஜாதா கம்ஸ ஶத்ரோ: ஸஹோத³ரீ ।

கம்ஸனுக்கு சத்ருவான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸஹோதரியாய் காத்யாயனீ **(कात्यायनी)** என்ற பெயருடன் பிறந்தாள் என்று புராணம் கூறுகிறது.

சுலோகம் 66:- (281) **उन्मेष निमिषोत्पन्न विपन्न भुवनावली** - தனது கண்களை திறந்ததால் உண்டானதும், மூடியதால் அழிந்ததுமான ப்ரும்மாண்டங்களின் கூட்டத்தை உடையவள். ஸ்ரீ அம்பாள் தேவதை ஆதலால் கண்களை மூடுவது என்பது இல்லை. ஆகிலும் ஜீவன்களின் கர்ம

उन्मेष निमिषोत्पन्न विपन्न भुवनावली ।
सहस्र शीर्षवदना सहस्राक्षी सहस्रपात् ।। ६६
आब्रह्मकीटाजननी वर्णाश्रम विधायिनी ।
निजाज्ञारूप निगमा पुण्यापुण्य फलप्रदा ।।६७

உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன பு⁴வனாவலீ ।
ஸஹஸ்ர பீர்ஷவத³னா ஸஹஸ்ராக்ஷீ ஸஹஸ்ரபாத் ।।66
ஆப்³ரம்ஹ கீடாஜனனீ வர்ணாப்ரம விதா³யினீ ।
நிஜாஜ்ஞாரூப நிக³மா புண்யாபுண்ய ப²லப்ரதா³ ।। 67

வசத்தால் உலகம் உண்டாவதாயும், அழிவதாயும் அறிந்து கொள்ள வேண்டும். அக்கர்மங்களின் பயனும் தடங்கலின்றி ஏற்படுவதற்கு காரணம் ஸ்ரீ அம்பாள் என்று கருத்து. (282) **सहस्र शीर्षवदना** - ஆயிரக்கணக்கான தலைகளையும், முகங்களையும் உடையவள். அதாவது எங்கும் நிறைந்த பரப்ரும்மமாக இருப்பவள். (282) **सहस्राक्षी** - ஆயிரக்கணக்கான கண்களை உடையவள். (284) **सहस्रपात्** - ஆயிரக்கணக்கான பாதங்களை உடையவள். ஆயிரக்கணக்கான ஶிரஸ் முதலியவைகள் உள்ளவள் என்பதை தேவீ பாகவதத்தில் கூறியதாவது:

सहस्र नयना रामा सहस्र कर संयुता ।
सहस्र शीर्ष चरणा भाति दूरादसंशयम् ।।

ஸஹஸ்ர நயனா ராமா ஸஹஸ்ர கர ஸம்யுதா ।
ஸஹஸ்ர பீர்ஷ சரணா பா⁴தி தூ³ராத³ஸம்ஶயம் ।।

சுலோகம் 67:- (285) **आब्रह्मकीटाजननी** - ப்ரும்மா முதல் புழு வரை உள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் தாயாக இருப்பவள். (286) **वर्णाश्रम विधायिनी** - பராம்மணன் முதலிய வர்ணங்களையும், ப்ரும்மசர்யம் முதலிய ஆச்ரமங்களையும் உண்டு பண்ணினவள். கர்ம காண்டம், ப்ரும்ம (ஞான) காண்டம் என வேதம் இருவகைப்படும். கர்ம காண்டத்தில் அதிகாரம் (தகுதி) ம்ருகங்களுக்கோ, தேவர்களுக்கோ கிடையாது. மனிதர்களுக்குத்தான் உண்டு. இப்படிப்பட்ட மனிதர்களை வர்ணாஶ்ரமம் முதலிவற்றால் தமது ஆக்ஞாரூபமான வேதத்தினால் பிரிவனை செய்தவள் எனக் கருத்து. இதுவே பின்வரும் நாமாவினால் கூறப்படும். (287) **निजाज्ञारूप निगमा** - தனது உத்தரவாக வேதங்களை

श्रुतिसीमन्त सिन्दूरीकृत पादाब्जधूलिका ।
सकलागम सन्दोह शुक्तिसम्पुट मौक्तिका ।। ६८

ஶ்ருதிஸீமந்த ஸிந்தூ3ரீக்ருத பாதா3ப்3ஜ தூ4லிகா ।
ஸகலாக3ம ஸந்தோ3ஹ ஶுக்திஸம்புட மௌக்திகா ।। 68

உடையவள். (288) **पुण्यापुण्य फलप्रदा** - புண்ய, பாபத்தின் பயனைக் கொடுப்பவள். புண்யத்தின் பயன் ஸ்வர்கம் முதலியவைகள். பாபத்தின் பயன் நரகம் முதலியவைகள்.

ஶ்லோகம் 68:-(289) **श्रुतिसीमन्त सिन्दूरीकृत पादाब्जधूलिका** - ஶ்ருதிகளாகிற ஸ்த்ரீகளின் சிரஸ்ஸிலுள்ள வகிட்டில் குங்குமம்போல் செய்யப்பட்ட தனது சரண கமலத்தின் தூளியை (பொடி) உடையவள். வேதங்கள் ஸ்ரீ அம்பாளுடைய சரணங்களை நமஸ்கரிக்கும்போது, சரண கமலங்களிலுள்ள செம்பங்கிக் குழம்பின் தூளிகள் ஸிந்தூரம் போல் வகுட்டில் விளங்குகிறது எனக் கருத்து. (290) **सकलागम सन्दोह शुक्तिसम्पुट मौक्तिका** - ஸகல வேத ஸமூஹங்களாகிற முத்துச் சிற்பி போன்ற பெட்டியில் இருக்கும் நல் முத்தாக இருப்பவள். இங்கு ஸ்ரீ பாஸ்கரராயர் வ்யாக்யானத்தில் **श्रुतिसीमन्त** (ஶ்ருதி ஸீமந்த) என்ற நாமத்தால் மூன்று வர்ணத்தார்களால் ஸ்ரீ அம்பாள் உபாஸிக்கத் தகுந்தவள் என்றும், **सकलागम सन्दोह** (ஸகலாக3ம ஸந்தோ3ஹ) என்ற நாமத்தால் ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஶ்ய, ஶூத்3ர என்ற நான்கு வர்ணங்களால் உபாஸிக்கத் தகுந்தவள் என்றும் கூறப்பட்டதாகச் சொல்லி ருத்ரயாமிளத்திலும், வேதங்களால் எந்தப் பயன் அடையப்படுகிறதோ, அதே பயன் தந்திரங்களாலும் அடையப்படுகிறது. அதனால் நான்கு வர்ணத்தார்களும் இதில் அதிகாரம் உள்ளவர்கள் என்றும் கூறிய வசனமாவது:-

यद्वेदैर्गम्यते स्थानं तत्तन्त्रैरपि गम्यते ।
ब्रह्म क्षत्रियविट् शूद्राः तेन सर्वेऽधिकारिणः ।।

யத்3வேதை3ர்க3ம்யதே ஸ்தா2னம் தத்தந்த்ரைரபி க3ம்யதே ।
ப்3ரஹ்ம க்ஷத்ரியவிட்1 ஶூத்3ரா: தேன ஸர்வேऽதி4காரிண: ।।

ஶ்லோகம் 69:- (291) **पुरुषार्थप्रदा** - நான்கு விதமான புருஷார்த்தங்களையும் அளிப்பவள். ப்ரும்மாண்ட புராணத்திலும்

पुरुषार्थप्रदा पूर्णा भोगिनी भुवनेश्वरी ।
अम्बिकाऽनादि निधना हरिब्रह्मेन्द्र सेविता ।। ६९

புருஷார்த[2]ப்ரதா[3] பூர்ணா போ[4]கி[3]னீ பு[4]வனேஶ்வரீ।
அம்பி[3]காऽனாதி[3] நித[4]னா ஹரிப்[3]ரம்ஹேந்த்[3]ர ஸேவிதா।।

येऽर्चयन्ति पराशक्तिं विधिनाऽविधिनापि या ।
न ते संसारिणो नूनं मुक्ता एव न संशयः ।।
तस्मादशेष वर्णानां त्रिपुराराधनं विना ।
न स्तो भोगापवर्गौ तु यौगपद्येन कुत्रचित् ।।

யேऽர்ச்சயந்தி பராஶக்திம் விதி[4]னாऽவிதி[4]னாபி யா ।
ந தே ஸம்ஸாரிணோ நூனம் முக்தா ஏவ ந ஸம்ஶய:।।
தஸ்மாத[3]ஶேஷ வர்ணானாம் த்ரிபுராராத[4]னம் வினா ।
ந ஸ்தோ போ[4]கா[3]பவர்கௌ[3] து யௌக[3]பத்[3]யேன குத்ரசித்।।

முறைப்படியோ, முறை இல்லாமலோ, எவர்களாகிலும் ஸ்ரீ அம்பாளை அர்ச்சிப்பார்களேயாகில் அவர்கள் திரும்ப ஜனன, மரணத்தை அடையமாட்டார்கள். ஜீவன் முக்தர்களாகவே ஆவார்கள். இதில் சந்தேஹம் இல்லையாகையால் எல்லா வர்ணத்தினர்களுக்கும் ஸ்ரீ அம்பாளுடைய ஆராதனையைச் செய்யாமல் போ[4]க[3]மோ (भोगम्), மோக்ஷமோ(मोक्षम्) கிடைக்காது. ஸ்ரீ அம்பாள் ஆராதனை ஒன்றினாலேயே இவ்விரண்டும் (போகமும், மோக்ஷமும்) கிடைக்கிறது. *(292)* **पूर्णा** - நிறைந்திருப்பவள். (தேசம், காலம் இவைகளுக்கு உட்படாதவள்) *(293)* **भोगिनी** - ஸுக ஸாக்ஷாத்காரத்தை உடையவள். *(294)* **भुवनेश्वरी** - பதினான்கு உலகங்களுக்கும் ஈஶ்வரியாக இருப்பவள் *(295)* **अम्बिका** - தாயாக இருப்பவள். *(296)* **अनादि निधना** - பிறப்பிறப்பு அற்றவள். *(297)* **हरिब्रह्मेन्द्र सेविता** - விஷ்ணு, ப்ரும்மா, இந்திரன் இவர்களால் ஸேவிக்கப்பட்டவள்.

சுலோகம் 70:- *(298)* **नारायणी** - நாராயணனின் ஸஹோதரீ. *(299)* **नादरूपा** - நாதத்தையே ரூபமாக உடையவள். *(300)* **नामरूप विवर्जिता** - நாம ரூபம் இல்லாதவள். *(301)* **ह्रींकारी** - ஹ்ரீம் என்ற புவனேஶ்வரீ பீஜ ஸ்வரூபமாக இருப்பவள். *(302)* **ह्रीमती** - லஜ்ஜையுடன் கூடியவள். *(303)* **हृद्या** - (முனிவர்களின்) உள்ளத்தில் வஸிப்பவள் அல்லது அழகு வாய்ந்தவள். *(304)* **हेयोपाधेय वर्जिता** - தள்ள

नारायणी नादरूपा नामरूप विवर्जिता ।
हींकारी हीमती हृद्या हेयोपाधेयवर्जिता ।। ७०
राजराजार्चिता राज्ञी रम्या राजीवलोचना ।
रञ्जनी रमणी रस्या रणत्किङ्किणि मेखला ।। ७१
रमा राकेन्दु वदना रतिरूपा रतिप्रिया ।
रक्षाकरी राक्षसघ्नी रामा रमणलम्पटा ।।७२

நாராயணீ நாத3ரூபா நாமரூப விவர்ஜிதா ।
ஹ்ரீங்காரீ ஹ்ரீமதீ ஹ்ருத்3யா ஹேயோபாதே4யவர்ஜிதா ।।
ராஜராஜார்ச்சிதா ராஜ்ஞீ ரம்யா ராஜீவ லோசனா ।
ரஞ்ஜனீ ரமணீ ரஸ்யா ரணத்கிங்கிணி மேக?லா ।। 71
ரமா ராகே1ந்து3 வத3னா ரதிரூபா ரதி ப்ரியா ।
ரக்ஷாக1ரீ ராக்ஷஸக்4னீ ராமா ரமண லம்படா ।। 72

வேண்டியதோ, எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதோ இல்லாதவள். இதைச் செய்ய வேண்டும். இதை செய்யக் கூடாது என்று உபதேசித்த சாஸ்திரமானது அவித்யையுடன் கூடியவர்களுக்கே ப்ரயோஜனப்படும். ஞான வடிவமான ஸ்ரீ அம்பாளிடத்தில் இவைகளுக்கு இடமில்லை எனக் கருத்து.

சுலோகம் 71:- (305) **राजराजार्चिता** - *அரசர்களுக்கெல்லாம் அரசர்களான மனு, குபேரன், இவர்களால் பூஜிக்கப்பட்டவள். (306)* **राज्ञी** - *ராஜ ராஜேஶ்வரரான ஸ்ரீ பரமேஶ்வரரின் பட்டமஹிஷீ. (307)* **रम्या** - *அழகு வாய்ந்தவள். (308)* **राजीवलोचना** - *தாமரை போன்ற கண்களை உடையவள். (309)* **रञ्जनी** - *பக்தர்களுக்கு சந்தோஷத்தை அளிப்பவள். (310)* **रमणी** - *பக்தர்களுடன் சேர்ந்து விளையாடுகிறவள். (311)* **रस्या** - *ரஸிக்கத்தகுந்தவள். அதாவது அநுபவிக்கத் தகுந்தவள். (312)* **रणत्किङ्किणि मेखला** - *சப்திக்கின்ற சலங்கைகளுடன் கூடின ஒட்டியாணத்துடன் கூடியவள்.*

சுலோகம் 72:- (313) **रमा** - *லக்ஷ்மீ ரூபமாக இருப்பவள். (314)* **राकेन्दु वदना** - *பூர்ணசந்திரன் போன்ற முகத்தை உடையவள். (315)* **रतिरूपा** - *ரதியின் ரூபமாக இருப்பவள். (316)* **रतिप्रिया** - *மன்தனுடைய மனைவியான ரதியினிடத்தில் அன்பு*

काम्या कामकलारूपा कदम्ब कुसुमप्रिया ।
कल्याणी जगतीकन्दा करुणारस सागरा ।।७३
कलावती कलालापा कान्ता कादम्बरी प्रिया ।
वरदा वामनयना वारुणीमदविह्वला ।।७४

காம்யா காமகலாரூபா கத3ம்ப3 குஸுமப்ரியா ।
கல்யாணீ ஜகதீ1க1ந்தா3 கருணாரஸ ஸாக3ரா ।। 73
கலாவதீ கலாலாபா1 காந்தா காத3ம்ப3ரீ ப்ரியா ।
வரதா3 வாம நயனா வாருணீ மத3விஹ்வலா ।। 74

கொண்டவள். (317) **रक्षाकरी** - ரக்ஷிக்கிறவள். (318) **राक्षसघ्नी** - ராக்ஷஸர்களைக் கொல்லுகிறவள். (319) **रामा** - யோகிகள் ரமிக்கும் தெய்வமாக இருப்பவள். (320) **रमणलम्पटा** - தனது பதியுடன் ரமிப்பதில் ஆவல் கொண்டவள்.

சுலோகம் 73:- (321) **काम्या** - மோக்ஷத்தைக் கோருகிறவர்களால் விரும்பப்படுகிறவள். அல்லது கிருஷ்ண பக்ஷ துவாதசியின் ராத்திரியாக இருப்பவள். (322) **कामकलारूपा** - காமங்களை (கோரியதை) அளிப்பவளாகவும், கலா ரூபியாகவும் இருப்பவள். (323) **कदम्ब कुसुमप्रिया** - அடம்ப புஷ்பத்தில் அன்பு கொண்டவள். (324) **कल्याणी** - மங்கள ரூபமாக இருப்பவள். அல்லது மங்களமான வாக்கைக் கொடுப்பவள். (325) **जगतीकन्दा** - உலகத்திற்கு மூலகாரண-மாக இருப்பவள். (326) **करुणारस सागरा** - கருணையாகிற ஜலம் நிரம்பிய ஸமுத்திரமாக இருப்பவள்.

சுலோகம் 74:- (327) **कलावती** - அறுபத்து நான்கு கலை-களை உடையவள். (328) **कलालापा** - அழகான சொற்களை உடையவள். (329) **कान्ता** - அழகுள்ளவள். அழகு முதலிய குணங்கள் ஸ்ரீ அம்பாளுக்கு உண்டு என்பதை பல இடங்களில் சொல்லுவதின் நோக்கம் பக்தர்கள் அந்த ஸ்வரூபத்தை திரும்பத் திரும்ப அனுபவித்து மங்களங்களை அடைவதற்கே ஆகும். அல்லது கிருஷ்ண பக்ஷ ஏகாதசி ரூபிணியாக இருப்பவள். (330) **कादम्बरी प्रिया** - சிறந்த மத்யத்தில் பிரியமுள்ளவள். (331) **वरदा** - உபாஸகர்களான ப்ருமா, விஷ்ணு, ருத்திரர் முதலியவர்களுக்கு வரன்களை அளிப்பவள். (332) **वामनयना** - அழகிய கண்களை உடையவள்.

विश्वाधिका वेदवेद्या विन्ध्याचल निवासिनी ।
विधात्री वेदजननी विष्णुमाया विलासिनी ।। ७५
क्षेत्रस्वरूपा क्षेत्रेशी क्षेत्रक्षेत्रज्ञपालिनी ।
क्षयवृद्धि विनिर्मुक्ता क्षेत्रपाल समर्चिता ।। ७६

விஶ்வாதி[4]கா வேத[3]வேத்[3]யா விந்த்[4]யாசல நிவாஸினீ।
விதா[4]த்[1]ரீ வேத[3]ஜனனீ விஷ்ணுமாயா விலாஸினீ ।। 75
க்ஷேத்ரஸ்வரூபா க்ஷேத்ரேஶீ க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞபாலினீ।
க்ஷயவ்ருத்[3]தி[4] விநிர்முக்தா க்ஷேத்ரபால ஸமர்ச்சிதா।। 76

---

(333) **वारुणी मद विह्वला-** *வருணனுக்கு பிரியமான பேரீச்சம் பழத்தின் ஸாரத்தை உட்கொண்டதால் ஏற்பட்ட மதத்தினால்* **(मदम्)** *கலங்கியவள்.*

சுலோகம் 75:- (334) **विश्वाधिका** *- உலகுக்கெல்லாம் மேற்பட்டவள். (335)* **वेदवेद्या** *- நான்கு வேதங்களாலும் அறியத்தகுந்தவள். (336)* **विन्ध्याचल निवासिनी** *- விந்தியம் என்னும் மலையில் வசிப்பவள். (337)* **विधात्री** *- உலகத்தைத் தாங்குகிறவள். (338)* **वेदजननी** *- வேதங்களுக்குத் தாயாக இருப்பவள். அதாவது வேதங்களை வெளிப்படுத்தியவள். (339)* **विष्णुमाया** *- மஹாவிஷ்ணுவின் மாயையாக இருப்பவள். (340)* **विलासिनी** *- விளையாட்டுடன் கூடியவள்.*

சுலோகம் 76:- (341) **क्षेत्रस्वरूपा** *- இருபத்து நான்கு தத்வங்களாக இருப்பவள். க்ஷேத்திரம் என்பதற்கு இருபத்து நான்கு தத்வம் என லிங்க புராணம் கூறியுள்ளது.*

चतुर्विम्शति तत्वानि क्षेत्र शब्देन सूरयः ।
आहुः क्षेत्रज्ञ शब्देन भोक्तारं पुरुषं तथा ।।

சதுர்விம்ஶதி தத்வானி க்ஷேத்ர ஶப்தே[3]ன ஸூரய: ।
ஆஹு: க்ஷேத்ரஜ்ஞ ஶப்தே[3]ன
போ[4]க்தாரம் புருஷம் ததா[2] ।।

(342) **क्षेत्रेशी-** *க்ஷேத்ரமான சரீரத்திற்கு ஈஶனான பரமசிவனின் மனைவி. (343)* **क्षेत्रक्षेत्रज्ञपालिनी** *- சரீரத்தையும் ஜீவனையும் காப்பவள். (344)* **क्षयवृद्धि विनिर्मुक्ता** *- குறைவு, விருத்[3]தி[4]* **(वृद्धि-***வளர்ச்சி***)** *இவைகளிலிருந்து விடுபட்டவள்.*

विजया विमला वन्द्या वन्दारुजन वत्सला।
वाग्वादिनी वामकेशी वह्निमण्डल वासिनी।। ७७

விஜயா விமலா வந்த்3யா வந்தா3ருஜன வத்ஸலா ।
வாக்3வாதி3னீ வாமகேஶீ வன்ஹிமண்ட3ல வாஸினீ ।। 77

சரீரத்தின் தர்மமான குறைவோ, வளர்ச்சியோ, ஸ்ரீ அம்பாளுக்கு இல்லை எனக் கருத்து. (345) **क्षेत्रपाल समर्चिता** - க்ஷேத்ரபாலனால் பூஜிக்கப்பட்டவள். தாருகாஸுரனை வதம் செய்வதற்காகப் பரமசிவனால் உண்டு பண்ணப்பட்ட காளியானவள் அவனை வதம் செய்தும் கோபம் அடங்காமல் இருந்தாள். அப்பொழுது பரமசிவன் சிறு குழந்தையாக வந்து காளியிடத்தில் அழுதார். அக்குழந்தைக்கு காளி ஸ்தன்யம் கொடுத்தாள். அப்பொழுது குழந்தையான பரமசிவன், ஸ்தன்யத்துடன் அவள் கோபத்தையும் சேர்த்து பானம் செய்து விட்டார். அந்த குழந்தை அவஸரத்திலுள்ள பரமசிவனுக்கு க்ஷேத்ரபாலர் என்று பெயர். அவனால் அம்பாள் பூஜிக்கப்பட்டவள் என்று லிங்க புராணம் முதலியவற்றில் கூறியுள்ளது. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்பவர்களின் பொருளை திருடியவனை வதம் செய்து பக்தர்களுக்கு அப்பொருளைத் திரும்ப அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

धनं यो हरते चोरैः नामसाहस्र जापिनः ।
यत्र कुत्र स्थितं वापि क्षेत्रपालो निहन्तितम् ।।

த4னம் யோ ஹரதே சோ1ரை: நாமஸாஹஸ்ர ஜாபின: ।
யத்ர குத்ர ஸ்த்தி2தம் வாபி க்ஷேத்ரபா1லோ நிஹந்திதம் ।।

சுலோகம் 77:- (346) **विजया** - சிறந்த ஜயத்தோடு கூடியவள். (347) **विमला** - அவித்யையால் ஏற்படும் மலம் இல்லாதவள். (348) **वन्द्या** - நமஸ்கரிக்கத் தகுந்தவள். (349) **वन्दारुजनवत्सला** - நமஸ்கரிக்கும் ஜனங்களை தன் குழந்தை போல் அனுக்ரஹிப்பவள். (350) **वाग्वादिनी** - வாக்கை பேசும்படி செய்கிறவள். (351) **वामकेशी** - அழகிய கேசங்களை உடையவள். (352) **वह्निमण्डल वासिनी** - சூரியன், சந்திரன், அக்னி இம்மூன்று ஸ்தானங்களிலும் இருப்பவள். வன்ஹி என்றால் மூன்று என்று பொருள் உண்டு. அதனால் இம்மாதிரி அர்த்தம் செய்யலாமென ஸ்ரீ பாஸ்கரராயர் கூறியுள்ளார். இப்படி அவர்கள் மூன்று என்று அர்த்தம்

भक्तिमत्कल्प लतिका पशुपाश विमोचिनी ।
संहृताशेषपाषण्डा सदाचार प्रवर्तिका ।। ७८

ப[4]க்திமத்கல்ப லதிகா பஶுபாஶ விமோசினீ ।
ஸம்ஹ்ருதாஶேஷ பாஷண்டா[3] ஸதா[3]சார ப்ரவர்த்திகா ।।

செய்து கொள்ளலாம் என்றதால் அக்னிஹோத்ரிகளின் த்ரேதாக்னிகளிலும் **(त्रेताग्नि)** (கார்ஹபத்யம் **(गार्हपत्यम्)**, ஆஹவனீயம் **(आहवनीयम्)**, த[3]க்ஷிணாக்[3]னி **(दक्षिणाग्नि)**) இம் மூன்று அக்னிகளிலும் ஸ்ரீ அம்பாள் வஸிப்பவள் என்று கொள்ளலாம்.

ச்லோகம் 78:- (353) **भक्तिमत्कल्प लतिका** - பக்தர்களுக்கு கல்ப விருக்ஷமாக இருப்பவள். அல்லது கல்ப என்ற பதத்தை கல்ப ப்ரத்யயமாக **(प्रत्यय)** வைத்துக் கொண்டு சிறிது பக்தி உள்ளவர்களுக்கும், அந்த பக்தியை கொடி போல் படரும்படி செய்பவள் என்றும் அர்த்தம் கொள்ளலாம். இதையே சக்தி ரஹஸ்யத்தில்

अक्रमेणार्ध भक्त्या वा भवान्याः कृतमर्चनम् ।
जन्मान्तरे क्रमप्राप्त्यै पूर्णभक्त्यै च कल्पते ।।

அக்ரமேணார்த[4] ப[4]க்த்யா வா ப[4]வான்யா: க்ருதமர்சனம் ।
ஜன்மாந்தரே க்ரமப்ராப்த்யை பூர்ணப[4]க்த்யை ச கல்பதே ।।

முறை இல்லாமலோ, அரை குறை பக்தியாலோ, ஸ்ரீ அம்பாளை அர்ச்சித்தால், அது அடுத்த ஜன்மாவில் முறையுடன் ஆராதிப்பதையும், பூர்ண பக்தியையும் அளித்துவிடும் என்று கூறப்பட்டுள்ளது. (354) **पशुपाश विमोचिनी** - பசுக்களின் பாசத்தை போக்குகிறவள். ப்ரும்மா முதல் அசையாத பொருள் வரை உள்ள யாவும் பசுக்கள். அவைகளின் அக்ஞானத்திற்கு பாசம் எனப்பெயர். அதை போக்குகிறவள். (355) **संहृताशेष पाषण्डा** - எல்லா நாஸ்திகர்களையும் அழித்தவள். வேத சாஸ்திரங்களுக்கு விரோதமான கார்யங்களை செய்கிறவர்கள் பாஷண்டர்கள். அவர்களை அழித்தவள். (356) **सदाचार प्रवर्तिका** - ஸாதுக்களின் ஆசாரத்தை அனுஷ்டிக்கும்படி செய்கிறவள்.

சுலோகம் 79:- (357) **तापत्रयाग्नि सन्तप्त समाह्लादन चन्द्रिका** - மூன்று தாபங்களாகிற அக்னியால் மிகுந்த தாபத்தை அடைந்தவர்களை குளிரச் செய்வதில் சந்திரிகையாக

तापत्रयाग्नि सन्तप्त समाह्लादन चन्द्रिका ।
तरुणी तापसाराध्या तनुमध्या तमोऽपहा ।। ७९
चितिस्तत्पद लक्ष्यार्था चिदेकरस रूपिणी ।
स्वात्मानन्दलवीभूत ब्रह्माद्यानन्द सन्ततिः ।। ८०

தாபத்ரயாக்3னி ஸந்தப்த ஸமாஹ்லாத3ன சந்த்3ரிகா।
தருணீ தாபஸாராத்4யா தனுமத்4யா தமோऽபஹா ।। 79
சிதிஸ்தத்பத3 லக்ஷ்யார்த்தா2 சிதே3க ரஸ ரூபிணீ ।
ஸ்வாத்மானந்த3லவீபூ4த ப்3ரம்ஹாத்3யானந்த3 ஸந்ததி:।।

இருப்பவள். *(358)* **तरुणी** - நித்ய யௌவனத்துடன் கூடியவள். *(359)* **तापसाराध्या** - தபஸ்விகளால் ஆராதிக்கத் தகுந்தவள். *(360)* **तनुमध्या** - சிறுத்த இடையை உடையவள். *(361)* **तमोऽपहा** - அவித்யையைப் போக்குகிறவள்.

சுலோகம் 80:- *(362)* **चितिः** - (அவித்யையப் போக்கும்) ஞானவடிவமாக இருப்பவள். *(363)* **तत्पद लक्ष्यार्था** - தத்(**तत्**) என்ற பதத்திற்கு லக்ஷ்யமான பொருளாக இருப்பவள். தத்வமஸி என்ற மஹா வாக்ய பதத்திலுள்ள, 'தத்' என்ற பதத்திற்கு ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்யும் பல ரூபங்களுள்ள ப்ரும்மம் என வாக்யார்த்தம். லக்ஷ்யார்த்தமோவெனில் க்ருத்யமற்றதும், கேவலம் சுத்த ஸ்வரூபமாயுள்ள ப்ரும்மம். *(364)* **चिदेकरस रूपिणी** - சி'த்துடன்(**चित्**) வேறுபடாத ரூபமாக இருப்பவள். *(365)* **स्वात्मानन्दलवीभूत ब्रह्माद्यानन्द सन्ततिः** - தனது ஸ்வரூபானந்தத்தால் ப்ரும்மா முதலியவர்களின் ஆனந்தப் பெருக்கை திவிலையாகச் செய்தவள். அதாவது அம்பாளின் ஸ்வரூபானந்தம் ஸமுத்திரம் போலுள்ளது. அதிலிருந்த தெளித்த திவிலை போலுள்ளது ப்ரும்மா முதலியவர்களின் ஆனந்தம் எனக் கருத்து.

சுலோகம் 81:- *(366)* **परा** - பரா என்ற வாக்காக இருப்பவள். பேச வேண்டும் என இச்சை கொண்டதும் மூலாதா4ரத்தில் (**मूलाधारम्**) ஏற்படும் காற்றினால் உண்டாகும் நாதத்திற்கு பரா என்று பெயர். அது காரண பி3ந்து3 (**कारणबिन्दु**) எனப்படும். இப்பொருளை கூறும் வசனம்:-

परा प्रत्यक्चितीरूपा पश्यन्ती परदेवता ।
मध्यमा वैखरी रूपा भक्तमानस हंसिका ।।८१
பரா ப்ரத்யக் சி[1]தீரூபா பஶ்யந்தீ பரதே[3]வதா ।
மத்[4]யமா வைக[2]ரீ ரூபா ப[4]க்தமானஸ ஹம்ஸிகா ।। 81

देहेऽपि मूलाधारेऽस्मिन् समुदेति समीरणः ।
विवक्षोरिच्छयोत्थेन प्रयत्नेन सुसंस्कृतः ।।
सव्यंजयति तत्रैव शब्द ब्रह्मापि सर्वगम् ।।
தே[3]ஹேऽபி மூலாதா[4]ரேऽஸ்மின் ஸமுதே[3]தி ஸமீரண: ।
விவக்ஷோரிச்ச[2]யோத்தே[2]ன ப்ரயத்னேன ஸுஸம்ஸ்க்ருத: ।।
ஸவ்யஞ்ஜயதி தத்ரைவ ஶப்த[3] ப்[3]ரம்ஹாபி ஸர்வக[3]ம் ।।

(367) **प्रत्यक्चितीरूपा** - *உள் நோக்கும்படி (அந்தர் முகமாக*(**अन्तर्मुखम्**) *இருக்கும்படி) செய்யப்படும் சித் ரூப (க்ஞான ரூப) மாக இருப்பவள். (368)* **पश्यन्ती** - *பச்யந்தீ என்ற வாக்*(**वाक्**) *ரூபமாக இருப்பவள். பரா*(**परा**) *என்ற சப்த ப்ரும்மமானது வாயுவினால் மேலே வரும் பொழுது நாபி[1]க்கு* (**नाभि**) *ஸமீபம் வந்தவுடன் அங்கே ஆராய்ந்து பார்க்கும் ரூபமான மனஸ்ஸுடன் கலந்து சிறிது சலனத்துடன் கூடிய கார்யபி[3]ந்து[3]* (**कार्यबिन्दु**) *மயமாக ஆகிறது. அதை பச்யந்தீ வாக்காக சொல்லப்படும். (369)* **परदेवता** - *சிறந்த தெய்வமாக இருப்பவள். அதாவது ஜன்மாவை அடைந்தவர்களால் ஸ்ரீ அம்பாள் உபாஸிக்க வேண்டிய தேவதை எனக் கருத்து. (370)* **मध्यमा** - *மத்[4]யமா என்ற வாக்* (**वाक्**) *ரூபமாக இருப்பவள். நாபியிலிருந்து ஹ்ருதயத்திற்கு வாயுவினால் கொண்டுவரப்பட்ட அந்த ஶப்த ப்ரும்மமானது நிஶ்சயாத்மிகையான* (**निश्चयात्मिका**) *புத்தியுடன் கூடி விசேஷமான சலனத்துடன் கூடிய நாதமயமாக ஆகிறது. அது* மத்[4]யமா வாக் (**मध्यमावाक्**) *எனப்படும். பச்யந்தீபோல் மேலே கிளம்பாமலும் வைகரீபோல் எல்லா அவயவங்களுடன் வெளியில் வராமலும் நடுவில் இருப்பதால் மத்யமா எனப் பெயர். இப்பொருளைக் கூறும் வசனம்:-*

पश्यन्तीव न केवल मुत्तीर्णा नापि वैखरीव बहिः ।
स्पुटतर निखिलावयवा वाग्रूपा मध्यमा तयोरस्मात् ।।
பஶ்யந்தீவ ந கேவல முத்தீர்ணா நாபி வைக[2]ரீவ ப[3]ஹி: ।

कामेश्वर प्राणनाडी कृतज्ञा कामपूजिता ।
शृङ्गार रससम्पूर्णा जया जालन्धरस्थिता ।। ८२

காமேஶ்வர ப்ராணநாடீ[3] க்ருதஜ்ஞா காமபூஜிதா ।
ஶ்ருங்கா[3]ர ரஸஸம்பூர்ணா ஜயா ஜாலந்த[4]ரஸ்தி[2]தா ।। 82

ஸ்புடதர நிகி[2]லாவயவா
வாக்[3]ரூபா[1] மத்[4]யமா தயோரஸ்மாத் ।।

(371) **वैखरी रूपा** - வைக[2]ரீ என்னும் வாக் ஸ்வரூபமாக இருப்பவள். 'விகரம்' என்ற ப்ராண வாயுவினால் வெளிப்படுத்தப் பட்டதால் வைகரீ எனப் பெயர். இதைக் கூறும் யோக சாஸ்திர வசனம்:-

प्राणेन विखराख्येन प्रेरिता वैखरी पुनः ।

ப்ராணேன விக[2]ராக்[2]யேன ப்ரேரிதா வைக[2]ரீ புன:।

ஹ்ருதயத்திலிருந்து வாயுவினால் க[1]ண்ட[2]த்திற்கு (தொண்டை) **(कण्ठम्)** கொண்டு வரப்பட்ட அந்த ஶப்த ப்ரும்மானது வாக்கிலிருந்து வெளியில் வந்து காதுகளால் கேட்கும்படியான 'அ'காரம் முதலிய வர்ணங்களோடு கூடி அறிவை உண்டு பண்ணுகிறது. இதற்கு வைகரீ எனப் பெயர்

(372) **भक्तमानस हंसिका** - பக்தர்களுடைய மனதாகிற மானஸ ஸரஸ்ஸில் விளங்கும் ஹம்ஸப் பேடாக இருப்பவள்.

ஶ்லோகம் 82:- *(373)* **कामेश्वर प्राणनाडी** - மஹா காமேஶ்வரரான பரமசிவனுக்கு ஜீவநாடியாக இருப்பவள். இதையே ஸ்ரீ ஆசார்யாள் ஸௌந்தர்யலஹரியில், அம்ருதத்தை சாப்பிட்ட தேவர்கள் கூட ப்ரளய காலத்தில் அழிந்து விடுகின்றனர். காலகூட விஷத்தைச் சாப்பிட்ட ஸ்ரீ பரமசிவன் அழியாமலிருப்பதற்குக் காரணம் ஓ தாயே, தங்கள் தா[1]ட[1]ங்கத்தின் **(ताटङ्कम्)** மஹிமையே எனக் கூறியுள்ளார்.

सुधामप्यास्वाद्य प्रतिभय जरा मृत्यु हरिणीं
विपद्यन्ते विश्वे विधिशतमखाद्या दिविषदः ।
करालं यत्क्ष्वेलं कबलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्क महिमा ।।

ஸுதா[4]மப்யாஸ்வாத்[3]ய ப்ரதிப[4]ய ஜரா ம்ருத்யு ஹரிணீம்
விபத்[3]யந்தே விஶ்வே விதி[4]ஶதமகா[2]த்[3]யா தி[3]விஷத[3]: ।

ओड्याणपीठनिलया बिन्दुमण्डल वासिनी।
रहोयागक्रमाराध्या रहस्तर्पण तर्पिता ।। ८३

ஓட்[3]யாண பீ[1]ட[2] நிலயா பிந்து[3] மண்ட[3]ல வாஸினீ ।
ரஹோயாக[3] க்ரமாராத்[4]யா ரஹஸ்தர்ப்பண தர்ப்பிதா ।।83

க்[1]ராளம் யத்க்ஷ்வேலம் கபளிதவத: கால கலனா
ந ஶம்போ[4]ஸ் தன்மூலம் தவ ஜனனி தாடங்க[1] மஹிமா ।।

(374) **कृतज्ञा** - செய்யப்பட்ட புண்ய பாபங்களை எல்லாம் அறிகிறவள் (375) **कामपूजिता** - மன்மதனால் பூஜிக்கப்பட்டவள். ஸ்ரீ அம்பாளை உபாஸித்த பன்னிரண்டு பக்தர்களில் மன்மதனும் ஒருவன். அப்பன்னிரண்டு பேர்களோவெனில்-

मनुश्चन्द्रः कुबेरश्च लोपामुद्रा च मन्मथः ।
अगस्तिरग्निस्सूर्यश्च इन्द्रः स्कन्दः शिवस्तथा ।
क्रोधभट्टारको देव्याः द्वादशामी उपासकाः ।।

மனுஶ்சந்த்[3]ர: குபே[3]ரஶ்ச லோபாமுத்[3]ரா ச மன்மத[2]: ।
அக[3]ஸ்திரக்[3]னிஸ்ஸூர்யஶ்ச இந்த்[3]ர: ஸ்கந்த[3]: ஶிவஸ்ததா[2] ।
க்ரோத[4]ப[4]ட்டாரகோ தே[3]வ்யா: த்[3]வாத[3]ஶாமீ உபாஸகா: ।।

மேலும் அருணத்தில்

पुत्रो निऋत्य वैदेहः।अचेता यश्च चेतनः स तं मणिमविन्दत् புத்ரோ நிருத்ய வைதே[3]ஹ: அசேதா யஶ்ச சேதன: ஸ தம் மணிமவிந்த[3]த்

அதாவது ஸ்ரீ லக்ஷ்மியின் புத்ரனான அனங்கனான மன்மதன், வித்யா ரத்னமாகிய ஸ்ரீ வித்யையை அடைந்தான் என்று கூறப்பட்டுள்ளது. (376) **शृङ्गार रससम्पूर्णा** - ச்ருங்கார ரஸத்தால் நன்கு பூர்ணமாக இருப்பவள். (377) **जया** - ஜய ஸ்வரூபமாக இருப்பவள். (378) **जालन्धरस्थिता** - ஜாலந்தரம் என்னும் பீட[2] **(पीठम्)** விசேஷத்தில் இருப்பவள். இதை பாத்ம புராணத்தில் ஜாலந்தரம் என்னும் க்ஷேத்திரத்தில் இருக்கும் அம்பாளுக்கு விஷ்ணுமுகீ எனப் பெயர் என்றும் கூறப்பட்டுள்ளது. **जालन्धरे विष्णुमुखी।** ஜாலந்த[4]ரே விஷ்ணுமுகீ[2]।

சுலோகம் 83:- (379) **ओड्याण पीठ निलया** - ஒட்டியாணம் என்னும் பீட[2] **(पीठम्)** விசேஷத்தில் இருப்பவள். (380)

सद्यः प्रसादिनी विश्वसाक्षिणी साक्षिवर्जिता।
षडङ्गदेवतायुक्ता षाड्गुण्य परिपूरिता ।। ८४
नित्यक्लिन्ना निरुपमा निर्वाणसुखदायिनी ।
नित्यषोडशिकारूपा श्रीकण्ठार्ध शरीरिणी ।। ८५

ஸத்³ய: ப்ரஸாதி³னீ விஶ்வ ஸாக்ஷிணீ ஸாக்ஷிவர்ஜிதா।
ஷட³ங்க³ தே³வதாயுக்தா ஷாட்³கு³ண்ய பரிபூரிதா ।।84
நித்யக்லின்னா நிருபமா நிர்வாண ஸுக² தா³யினீ ।
நித்யஷோட³ஶிகாரூபா ஶ்ரீகண்டா²ர்த⁴ ஶரீரிணீ ।।85

बिन्दुमण्डल वासिनी - பி³ந்து³வாகிய மண்டலத்தில் வஸிப்பவள். ஶ்ரீ சக்ரத்தின் நடுவிலிருக்கும் ஸர்வானந்தமய சக்ரத்திற்கு பிந்து என்று பெயர். அதாகிற மண்டலத்தில் இருப்பவள். (381) रहोयागक्रमाराध्या - மிக்க ரஹஸ்யமானது ஶ்ரீ வித்யை என்றும், அதனுடைய உபாஸனா முறையும் (யாக க்ரமமும்) ரஹஸ்யமென்றும், அவ்விதமான முறையில் ஆராதிக்கத் தகுந்தவள். यदि प्रविशेत्। मिथोचरित्वा प्रविशेत्। யதி³ ப்ரவிஶேத் । மிதோ²ச'ரித்வா ப்ரவிஶேத் । இந்த அருண வாக்யத்தின் பொருள் 'ஶ்ரீ வித்யா ஆராதனத்தில் இறங்கினால் ரஹஸ்யமாக க்ரஹித்து உபாஸிக்க வேண்டும்'. (382) रहस्तर्पण तर्पिता - மந்திரத்தின் அர்த்தத்தை அறிந்து செய்யும் பூஜையினால் திருப்தி செய்விக்கப்படுகிறவள். அதாவது மந்திரத்தினுடைய அர்த்தத்தை அறிந்து கொள்வது ரஹஸ்தர்பணம். அதனால் திருப்தி செய்விக்கப்படுகிறவள்.

சுலோகம் 84:- (383) सद्यः प्रसादिनी - உடன் அனுக்ரஹத்தைச் செய்கிறவள். (384) विश्वसाक्षिणी - எல்லாவற்றையும் நேராகக் காண்கிறவள். (385) साक्षिवर्जिता - தனக்கு வேறு ஸாக்ஷி இல்லாதவள். (386) षडङ्ग देवता युक्ता - ஶ்ருதியின் ஆறு அங்கங்களுடைய அபிமானி தேவதைகளால் சூழப்பட்டவளாக இருப்பவள். ஶிக்ஷா (शिक्षा), வ்யா-கரணம் (व्याकरणम्), ச²ந்த³ஸ் (छन्दस्), நிருக்தம் (निरुक्तम्), ஜ்யோதிஷம் (ज्योतिषम्), கல்பம் (कल्पम्), என்ற இந்த ஆறும் ஶ்ருதிக்கு (श्रुति-வேதத்திற்கு) அங்கங்களாகும். (387) षाड्गुण्य परिपूरिता - ஆறு குணங்களால் நிரம்பி இருப்பவள். அந்த ஆறு குணங்களோவெனில், 'பூர்ண ஐஶ்வர்யம், வீர்யம், யஶஸ் (यशः), ஶ்ரீ, சாஸ்திர ஞானம், அனுபவம்' எனப்படும்.

प्रभावती प्रभारूपा प्रसिद्धा परमेश्वरी ।
मूलप्रकृतिरव्यक्ता व्यक्ताव्यक्त स्वरूपिणी ।। ८६

ப்ரபா⁴வதீ ப்ரபா⁴ரூபா ப்ரஸித்³தா⁴ பரமேஶ்வரீ ।
மூலப்ரக்ருதிரவ்யக்தா வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ ।।86

ச்லோகம் 85:- (388) **नित्यक्लिन्ना** - *நித்யம் தயையால்* **(दया)** *நனைந்து இருப்பவள். (389)* **निरुपमा** - *ஒப்பற்றவள். (390)* **निर्वाणसुखदायिनी** - *இன்னதென்று குறிக்க முடியாத மோக்ஷ ஸுகத்தைக் கொடுப்பவள். (391)* **नित्य षोडशिका रूपा** - *பதினாறு திதி நித்யா* **(तिथिनित्या)** *தேவதைகளாய் இருப்பவள். ப்ரதமை முதல் பௌர்ணமி வரை உள்ள பதினைந்து திதிகளுக்கும் அதிஷ்டான தேவதை, திதி நித்யா தேவதை எனப்படும். இவர்களை அங்கமாகக் கொண்ட ஸ்ரீ லலிதாம்பாளை பதினாறாவது தேவதையாகக் கூறப்பட்டுள்ளது. இப்பதினாறு ஸ்வரூபமாயும் ஸ்ரீ அம்பாள் இருக்கிறாள் என இந்த நாமாவின் பொருள் (392)* **श्रीकण्ठार्ध शरीरिणी** - *நீலகண்டனான பரமசிவனின் பாதி சரீரமாய் இருப்பவள்.*

ச்லோகம் 86:- (393) **प्रभावती** - *அணிமாதி ஸித்திகளோடு கூடியவள். அம்பாளின் சரீரத்திலிருந்து வெளியில் வந்த தேஜஸ்ஸின் கிரணங்களே அணிமாதி ஸித்திகள். ஆதலால் அவைகளை ப்ரபை¹* **(प्रभा)** *என இங்கு கூறியிருக்கிறார் (394)* **प्रभारूपा** - *அணிமாதி³ ஸித்³தி⁴களின் உருவாகவே இருப்பவள் (395)* **प्रसिद्धा** - *எல்லோராலும் அறியப்பட்டவள். எல்லோராலும் 'நான்' எனச் சொல்லிக் கொள்ளும் 'நான்' என்கிற பதத்திற்கு ஸ்ரீ அம்பாளே பொருளாவாள். இதைக் கூறும் ஸ்ரீதேவீ பா⁴க³வத வச¹னம்:-*

तां अहं प्रत्यय व्याजात् सर्वे जानन्ति जन्तवः ।

மேலும்:

सर्व चैतन्यरूपां तां आद्यां विद्यां च धीमहि ।।

தாம் அஹம் ப்ரத்யய வ்யாஜாத் ஸர்வே ஜானந்தி ஜந்தவ:।

மேலும்:

ஸர்வசைதன்யரூபாம் தாம் ஆத்³யாம் வித்³யாஞ்ச தீ⁴மஹி।।

எல்லா ஜீவன்களிடத்திலும் உள்ள சைதன்ய ரூபமாக

व्यापिनी विविधाकार विद्याविद्या स्वरूपिणी।
महाकामेश नयन कुमुदाह्लाद कौमुदी ।। ८७
भक्तहार्दतमोभेद भानुमद्भानु सन्ततिः ।
शिवदूती शिवाराध्या शिवमूर्तिः शिवंकरी ।। ८८

வ்யாபினீ விவிதா^{4}கார வித்^{3}யாவித்^{3}யா ஸ்வரூபிணீ।
மஹாகாமேஶ நயன குமுதா^{3}ஹ்லாத^{3} கௌமுதீ^{3} ।। 87
ப^{4}க்த ஹார்த^{3} தமோபே^{4}த^{3} பா^{4}னுமத்^{3}பா^{4}னு ஸந்ததி:।
ஶிவதூ^{3}தீ ஶிவாராத்^{4}யா ஶிவமூர்த்தி: ஶிவங்க^{1}ரீ ।। 88

உள்ளவள். (396) **परमेश्वरी** *- ஸர்வோத்க்ருஷ்டமான* **(सर्वोत्कृष्टः)** *ஈஶ்வரீ. (397)* **मूलप्रकृतिः** *- எல்லாவற்றிற்கும் மூலகாரணமான ப்ரக்ருதி ரூபமாக இருப்பவள். (398)* **अव्यक्ता** *- அவ்யக்தமான ப்ரும்மமாக இருப்பவள். அவ்யக்தம் என்றால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது என்று பொருள். (399)* **व्यक्ताव्यक्त स्वरूपिणी** *- வ்யக்தமாயும் அவ்யக்தமாயும் உள்ள ஸ்வரூபத்தோடு கூடியவள். பக்தர்களுக்கு ஸ்ரீ அம்பாள் வ்யக்தம் என்றும், அபக்தர்களுக்கு அவ்யக்தம் என்றும் பொருள்.*

சுலோகம் 87:- (400) **व्यापिनी** *- எல்லா உலகத்திலும் வ்யாபித்திருப்பவள். (401)* **विविधाकारा** *- பலவிதமான ரூபங்களை உடையவள். (402)* **विद्याविद्या स्वरूपिणी** *- ஞான ரூபமாயும், கர்மரூபமாயும் இருப்பவள். அவித்யையால் (கர்மா) ம்ருத்யுவைத் தாண்டி வித்யையால் (ஞானத்தால்) மோக்ஷத்தை அடைகிறாள் என்று உபனிஷத்தில் கூறியுள்ளது.*

अविद्यया मृत्युं तीर्त्वा विद्यया अमृतम श्नुते ।

அவித்^{3}யயா ம்ருத்யுந்தீர்த்வா வித்^{3}யயா அம்ருதமஶ்னுதே।

என்று .(403) **महाकामेश नयन कुमुदाह्लाद कौमुदी** *- மஹாகாமேஶ்வரர் என்ற பரமேஶ்வரனுடைய கண்களாகிற ஆம்பல் புஷ்பத்தை மலரச் செய்வதில் சந்திரிகை போன்றவள்.*

சுலோகம் 88:- (404) **भक्तहार्दतमोभेद भानुमद्भानु सन्ततिः** *- பக்தர்களுடைய ஹ்ருதயத்தில் உள்ள அக்ஞானமாகிற*

இருட்டைப் போக்கடிப்பதில் சூரியகிரண வரிசைபோல் உள்ளவள். (405) **शिवदूती** - சிவனை தூதனாக அனுப்பினவள். அதாவது ஶும்ப, நிஶும்ப அசுர யுத்தத்திற்கு முன்பு ஸ்ரீ சிவனை தூதனாக அனுப்பினாள் என்று கூறப்பட்டுள்ளது. அல்லது புஷ்கரம் என்னும் க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ அம்பாளுக்கு சிவதூ³தீ என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்று பத்ம புராணத்தில் கூறியுள்ளது.

तेऽन्याः प्रवक्ष्यामि पुष्करे वा व्यवस्थिता ।

தேऽன்யா: ப்ரவக்ஷ்யாமி புஷ்கரே வா வ்யவஸ்தி²தா।

என்று ஆரம்பித்து

शिवदूती तथा वेदी क्षेमा क्षेमङ्करी सदा ।

ஶிவதூ³தீ ததா² வேதீ³ க்ஷேமா க்ஷேமங்கரீ ஸதா³ ।

அதாவது சிவதூ³தீ என்றும், யக்ஞ வேதீ³ (यज्ञवेदी) ரூபமென்றும், க்ஷேமரூபமென்றும், க்ஷேமத்தைச் செய்கிறவள் என்றும் கூறப்பட்டுள்ளது. (406) **शिवाराध्या** - சிவனால் உபாஸிக்கத் தகுந்தவள். அல்லது உபாஸிக்கப்பட்டவள். இப்பொருளைக் கூறிய ப்³ரும்மாண்ட³ புராண வசனம்:

शिवोऽपि यां समाराद्य ध्यानयोग बलेन च ।
ईश्वरः सर्वसिद्धीनां अर्धनारीश्वरोऽभवत् ॥

ஶிவோऽபி யாம் ஸமாராத்³ய த்⁴யானயோக³ ப³லேன ச।
ஈஶ்வர: ஸர்வஸித்³தீ⁴னாம் அர்த⁴நாரீஶ்வரோऽப⁴வத் ॥

அதாவது ஸ்ரீசிவன் எந்த அம்பாளை தியான யோக பலத்தால் ஆராதித்து, அணிமாதி ஸித்திகளுக்கு ஈஶ்வரனாகவும், அர்த⁴நாரீச்வரனாகவும், ஆனாரோ. (407) **शिवमूर्तिः** - சிவனுடைய ஸ்வரூபமாக இருப்பவள். (408) **शिवंकरी** - மங்களத்தைச் செய்கிறவள். அல்லது பக்தனைச் சிவனாகச் செய்கிறவள். அதாவது அவித்யையாகிற பாசத்தைப் போக்கி சிவ ஸ்வரூபமாகச் செய்கிறவள்.

சுலோகம்89:- (409) **शिवप्रिया** - சிவனுக்கு ப்ரியையான மனைவியாக இருப்பவள். (410) **शिवपरा** - சிவனுக்கும் மேலாக விளங்குகிறவள். (411) **शिष्टेष्टा** - ஆசாரபரர்களை இஷ்டர்களாகக் கொண்டவள். அல்லது அவரவர்களுக்கு

शिवप्रिया शिवपरा शिष्टेष्टा शिष्टपूजिता ।
अप्रमेया स्वप्रकाशा मनोवाचामगोचरा ।।८९
चिच्छक्तिश्चेतनारूपा जडशक्तिः जडात्मिका ।
गायत्री व्याहृतिः सन्ध्या द्विजबृन्द निषेविता ।।९०

ஶிவப்ரியா ஶிவபரா ஶிஷ்டேஷ்டா ஶிஷ்டபூஜிதா ।
அப்ரமேயா ஸ்வப்ரகாஶா மனோவாசாமகோ³சரா ।। 89
சிச்ச²க்திஶ் சே'தனா ரூபா ஜட³ஶக்தி: ஜடா³த்மிகா ।
கா³யத்ரீ வ்யாஹ்ருதி: ஸந்த்⁴யா
த்³விஜப்ருந்த³ நிஷேவிதா ।। 90

உபதேசிக்கப்பட்ட வர்ணாஶ்ரம தர்மங்களை ப⁴க³வத³ர்ப்பண புத்தியாய்ச் (भगवदर्पण बुद्धिः) செய்வதால் சந்தோஷத்தை அடைகிறாள். கந்தம், புஷ்பம், முதலியவற்றால் மட்டும் இல்லை என்று கூறும் வசனம்:-

स्वस्य वर्णाश्रमैर्धर्मैः संयक् भगवदर्पितैः ।
यत्पूजनं न तत् गन्ध माल्यादीनां समर्पणैः ।।

ஸ்வஸ்ய வர்ணாஶ்ரமைர் த⁴ர்மை: ஸம்யக் ப⁴க³வத³ர்பிதை: ।
யத்பூஜனம் ந தத் க³ந்த⁴ மால்யாதீ³னாம் ஸமர்ப்பணை: ।।

(412) **शिष्टपूजिता** - ஆசாரபரர்களால் (आचारपराः) பூஜிக்கப்பட்டவள். *(413)* **अप्रमेया** - அளவிட முடியாதவள். அல்லது ப்ரும்மா, விஷ்ணு, சிவன், இவர்களால் அறியத் தகுந்தவள். *(414)* **स्वप्रकाशा** - ஸ்வயம் ப்ரகாசமாகவே விளங்குகிறவள். *(415)* **मनोवाचामगोचरा** - மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவள்.

சுலோகம் 90:- *(416)* **चिच्छक्तिः** - சி'த்ஶக்தி ரூபமாக இருப்பவள். *(417)* **चेतनारूपा** - (எல்லோருடைய உள்ளிலும் இருக்கும்) சைதன்யரூபமாக (चैतन्यरूपम्) இருப்பவள். இதைப் கூறும் தேவீ பாகவத வசனம்:-

या देवी सर्वभूतेषु चेतनेत्यभिधीयते ।
नमस्तस्मै नमस्तस्मै नमस्तस्मै नमो नमः ।।

யா தே³வீ ஸர்வபூ⁴தேஷு சேதனேத்யபி⁴தீ⁴யதே ।
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம: ।।

(418) **जडशक्तिः** - ஜடமான ப்ரபஞ்சத்தின் சக்தி ரூபமாக இருப்பவள். அதாவது உலகை ஸ்ருஷ்டிப்பதற்காக உபயோகப்படும் மாயையின் மாற்றுருவ விசேஷத்தை ஜடசக்தி எனக்கூறுவது *(419)* **जडात्मिका** - ஜடமான வஸ்துவை ஸ்வரூபமாக உடைய மாயாசக்தி ரூபமாக இருப்பவள். *(420)* **गायत्री** - இருபத்து நான்கு அக்ஷரமுள்ள காயத்ரியாக இருப்பவள். காயத்ரீ கல்பத்தில், ப்ரத்வாஜ ஸ்ம்ருதியில் **(भरद्वाज स्मृति)** கூறியிருக்கும் வசனம்:-

गायन्तं त्रायते यस्मात् गायत्री तेन कथ्यते ।

கா[3]யந்தம் த்ராயதே யஸ்மாத் கா[3]யத்ரீ தேன க[1]த்[2]யதே ।

ஜபிப்பவனை ஆபத்துகளிலிருந்து காப்பதினால் காயத்ரீ எனப் பெயர். *(421)* **व्याहृतिः** - பூ[4]: **(भूः)** பு[4]வ: **(भुवः)** ஸுவ: **(सुवः)** என்ற மந்திரங்களாகிற வ்யாஹ்ருதி **(व्याहृति)** ரூபமாக இருப்பவள். இந்த மந்திரத்தை ஜபம் செய்வதால் மஹாபாபங்கள் விலகுமென சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதனால்தான் ஸந்த்[4]யோபாஸனத்தில் **(सन्ध्योपासनम्)** காயத்ரீ முதலிய மந்திரங்களுடன் இம்மந்திரத்தையும் ப்ரணவத்துடன் சேர்த்து ஜபிக்கப்படுகிறது. இம்மந்திரத்தை ஜபிக்கும் போது ஸ்ரீ அம்பாளுடைய ஸ்வரூபமென நினைத்து ஜபித்தால் அளவு கடந்த பயனை அளிக்கும். *(422)* **सन्ध्या** - ஸந்த்[4]யா ரூபமாக இருப்பவள். பகல், இரவு கூடும் ஸமயத்திற்கு 'ஸந்த்[4]யா' எனப் பெயர். இப்படிப் பெயர் வந்ததற்குக் காரணம்

सम्यक् ध्यायन्ती अस्यां इति सन्ध्या ।

ஸம்யக் த்[4]யாயந்தீ அஸ்யாம் இதி ஸந்த்[4]யா ।

இந்த ஸமயத்தில் மஹான்கள் நன்கு தியானம் செய்கின்றதால் ஸந்த்[4]யா எனப்படும். மேலும் சூரியனிடத்தில் இருக்கும் சைதன்யத்தையும், தன்னையும் ஒன்றாகப் பாவிப்பதாலும் ஸந்த்[4]யா எனப் பெயர். *(423)* **द्विजबृन्द निषेविता** - த்விஜர்களின் ஸமூஹத்தால் நன்கு ஸேவிக்கப்பட்டவள்.

ச்லோகம் *91:- (424)* **तत्वासना** - ப்ருத்வீ முதல் சிவன் வரை உள்ள இருபத்தைந்து தத்வங்களையும் ஆஸனமாக உடையவள். *(425)* **तस्मै** - எல்லோருடைய புத்தியிலும் சூழ்ந்திருப்பவள். *(426)* **तुभ्यै** - நீ என்று சொல்லக்கூடியவள். *(427)* **अयी** -

तत्वासना तत्त्वमयी पञ्चकोशान्तरस्थिता ।
निःसीममहिमा नित्ययौवना मदशालिनी ।।९१
मदघूर्णित रक्ताक्षी मदपाटल गण्डभूः ।
चन्दनद्रव दिग्धाङ्गी चाम्पेय कुसुमप्रिया ।।९२

தத்வாஸனா தத்த்வமயீ பஞ்சகோஶாந்தரஸ்த்தி²தா ।
நி:ஸீம மஹிமா நித்ய யௌவனா மத³ஶாலினீ ।। 91
மத³கூ⁴ர்ணித ரக்தாக்ஷீ மத³பாடல க³ண்ட³பூ⁴: ।
சந்த³ன த்³ரவ தி³க்³தா⁴ங்கீ³ சாம்பேய குஸுமப்ரியா ।।92

'அயி' என்று சொல்லப்படுகிறவள். அன்புடன் ஒருவரை அழைக்கும்போது அயீ என்ற சொல் கூறப்படுவது வழக்கம். ஸ்ரீஅம்பாள் உலகத்திற்கெல்லாம் தாயாகையால் அவளை அன்புடன் அயீ என்று அழைப்பது பொருத்தமேயாகும். *(428)* **पञ्चकोशान्तरस्थिता** - ஐந்து கோசங்களின் நடுவிலிருப்பவள். அதாவது: அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய என்று ஐந்து கோசங்கள் தம்மிடத்தில் உள்ளன. அதில் ஆனந்தமய கோசத்தில் ஸ்ரீ அம்பாள் அபே⁴த³மாய் **(अभेदम्)** இருக்கிறாள் எனக் கருத்து *(429)* **निःसीममहिमा** - எல்லையற்ற மஹிமை உடையவள். *(430)* **नित्ययौवना** - முக்காலத்திலும் யௌவனத்துடன் கூடியவள். *(431)* **मदशालिनी** - மத³த்தால் ப்ரகாசிக்கிறவள். வேறு விஷயமற்றதும், ஆனந்தம் ஒன்றையே விஷயீகரித்ததுமான மனோ நிலைக்கு **(मदम्**-மத³ம்) எனப் பெயர். இதனால் ப்ரகாசிக்கிறவள் எனக் கருத்து.

சுலோகம் 92:- *(432)* **मदघूर्णित रक्ताक्षी** - மதத்தால் **(मदम्)** சூழலுகின்ற சிவந்த கண்களை உடையவள். *(433)* **मदपाटल गण्डभूः** - மதத்தினால் வெண் சிவப்பு நிறமுள்ள கன்னப்ரதேசத்தை உடையவள். *(434)* **चन्दनद्रव दिग्धाङ्गी** - சந்தனக்குழம்பு பூசிய அங்கங்களை உடையவள். *(435)* **चाम्पेय कुसुमप्रिया** - ஜம்பக புஷ்பத்தில் பிரியமுள்ளவள்.

சுலோகம் 93:- *(436)* **कुशला** - ஸ்ருஷ்டி முதலியவைகள் செய்வதில் ஸாமர்த்யம் கொண்டவள். *(437)* **कोमलाकारा** - அழகிய அவயவங்களை உடையவள். *(438)* **कुरुकुल्ला** - கு¹ருகு¹ல்லா தேவி ரூபமாய் இருப்பவள். ஸ்ரீபுரத்தில்

कुशला कोमलाकारा कुरुकुल्ला कुलेश्वरी ।
कुलकुण्डालया कौलमार्ग तत्पर सेविता ।।९३
कुमारगण नाथाम्बा तुष्टिः पुष्टिः मतिर्धृतिः ।
शान्तिः स्वस्तिमती कान्तिः नन्दिनी विघ्ननाशिनी।।९४

குஶலா கோமலாகாரா கு¹ருகு¹ல்லா கு¹லேஶ்வரீ ।
குலகுண்டா³லயா கௌலமார்க³ தத்பர ஸேவிதா ।। 93
குமாரக³ண நாதா²ம்பா³ து¹ஷ்டி: புஷ்டி: மதிர்த்⁴ருதி:।
ஶாந்தி: ஸ்வஸ்திமதீ காந்தி: நந்தி³னீ விக்⁴னநாஶினீ।।94

அஹங்காரம், சித்தம் என்னும் இரண்டு ப்ராகாரத்தின் நடுவில் விமர்ஶ ரூபமான ஓடையில் அதிஷ்டானமாக இருப்பவள். (439) **कुलेश्वरी** - குலத்திற்கு ஈஶ்வரியாக இருப்பவள். (440) **कुलकुण्डालया** - குலகுண்ட³த்தை ஆலயமாக உடையவள். குலகுண்ட³ம் என்றால் மூலாதா⁴ர பத்³மத்தின் **(मूलाधारपद्मम्)** நடுவில் இருக்கும் த்வாரம் போலுள்ள பி³ந்து³விற்குப் **(बिन्दु)** பெயர். குண்டலினீ சக்தியானவள் அந்த குலகுண்ட³ம் என்ற துவாரத்தில் தலை வைத்துத் தூங்குகிறாள். அதனால் குலகுண்டாலயா எனப் பெயர். (441) **कौलमार्ग तत्पर सेविता** - தங்கள் குலத்தில் பரம்பரையாக வந்த மார்கத்தில் அன்பு கொண்டவர்களால் ஸேவிக்கப்பட்டவள்.

சுலோகம் 94:- (442) **कुमारगण नाथाम्बा** - ஸுப்ரமண்யர், மஹாகணபதி, இவர்களுக்குத் தாயாக இருப்பவள். (443) **तुष्टिः** - சந்தோஷ ரூபமாக இருப்பவள். (444) **पुष्टिः** - ஸம்ருத்தி **(समृद्धि)** ரூபமாக இருப்பவள். (445) **मतिः** - அறிவு உருவாக இருப்பவள். (446) **धृतिः** - தைர்ய உருவமாக இருப்பவள். (447) **शान्तिः** - ஶாந்தி (அமைதி) உருவாக இருப்பவள். (448) **स्वस्तिमती** - மங்களத்துடன் கூடியவளாக இருப்பவள். (449) **कान्तिः** - காந்தி **(कान्ति)** உருவமாக இருப்பவள். (450) **नन्दिनी** - நந்தகோபருடைய பெண்ணாக இருப்பவள். (451) **विघ्ननाशिनी** - இடையூறுகளைப் போக்குகிறவள்.

சுலோகம் 95:- (452) **तेजोवती** - தேஜஸ்ஸுடன் கூடியவள். சூரியன் முதலிய தேஜஸ்ஸுகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பதால் இம்மாதிரி சொல்லப்பட்டது. (453) **त्रिणयना** - சூரியன், சந்திரன், அக்னி இம்மூன்றையும் கண்களாக

तेजोवती त्रिणयना लोलाक्षी कामरूपिणी ।
मालिनी हंसिनी माता मलयाचलवासिनी ॥९५
सुमुखी नलिनी सुभ्रूः शोभना सुरनायिका ।
कालकण्ठी कान्तिमती क्षोभिणी सूक्ष्मरूपिणी॥९६

தேஜோவதீ த்ரிணயனா லோலாக்ஷீ காமரூபிணீ ।
மாலினீ ஹம்ஸினீ மாதா மலயாச[1]ல வாஸினீ ॥ 95
ஸுமுகீ[2] நலினீ ஸுப்[4]ரூ: ஶோப[4]னா ஸுரநாயிகா ।
காலகண்டீ[2] காந்திமதீ க்ஷோபி[4]ணீ ஸூக்ஷ்மரூபிணீ॥ 96

உடையவள். (454) **लोलाक्षी कामरूपिणी** - ஸ்த்ரீகளின் காமத்தின் ரூபமாக இருப்பவள். லோலாக்ஷீ என ஸ்த்ரீகளுக்குப் பெயர். (455) **मालिनी** - மாலைகளை தரித்திருப்பவள். (456) **हंसिनी** - ஹம்ஸங்களுடன் கூடியவள். ஸ்ரீ அம்பாளின் க்ருஹத்தில் ஹம்ஸ பக்ஷிகள் இருப்பதாகவும் அவைகள் ஸ்ரீ அம்பாளைப் போல் நடக்க வேண்டுமென ஆசைப்படுவதாகவும், அம்பாளின் கால்களிலுள்ள நூபுரத்திலிருக்கும் **(नूपुरम्)** சலங்கைகள் தங்கள் சப்தங்களால் அந்த ஹம்ஸங்களுக்கு ஸ்ரீ அம்பாளின் நடை விசேஷங்களை சொல்லிக் கொடுப்பதாகவும் ஸ்ரீ ஆசார்யாள் கூறியிருக்கிறார்கள். அல்லது ஹம்ஸ என்றால் அஜபா மந்திரத்திற்குப் **(अजपामन्त्रम्)** பெயர். அந்த மந்திரமாக இருப்பவள். அல்லது ஹம்ஸ என்றால் பரமஹம்ஸ ஸன்யாஸிகளுக்கும் பெயர். அவர்களாகவே ஸ்ரீ அம்பாள் இருக்கிறாள் என்றும் கூறலாம். (457) **माता** - தாயாக இருப்பவள். (458) **मलयाचल वासिनी** - மலய பர்வதத்தில் வஸிப்பவள்.

சுலோகம் 96:- (459) **सुमुखी** - அழகான முகத்தை உடையவள். (460) **नलिनी** - தாமரை புஷ்பம் போன்றவள். அல்லது கங்கைக்கும் நளினீ என்று பெயர் இருப்பதால் கங்கை உருவமாக இருப்பவள் என்றும், நளன் என்ற அரசன் ஸ்ரீ அம்பாளை உபாஸனை செய்து ஸ்ரீ அம்பாளாகவே ஆனான். அதனாலும் நளினீ என்றும் சொல்லலாம். (461) **सुभ्रूः** - அழகான புருவங்களை உடையவள். (462) **शोभना** - மிக்க அழகு வாய்ந்தவள். (463) **सुरनायिका** - தேவர்களுக்கு ஈஶ்வரியாக இருப்பவள். (464) **कालकण्ठी** - நீலகண்டரின் மனைவியாக இருப்பவள். (465) **कान्तिमती** - காந்தியுடன்

वज्रेश्वरी वामदेवी वयोऽवस्था विवर्जिता ।
सिद्धेश्वरी सिद्धविद्या सिद्धमाता यशस्विनी ।।९७
विशुद्धि चक्रनिलयाऽऽरक्तवर्णा त्रिलोचना ।
खट्वाङ्गादि प्रहरणा वदनैक समन्विता ।।९८

வஜ்ரேஶ்சரீ வாமதே^{3}வீ வயோऽவஸ்தா^{2} விவர்ஜிதா ।
ஸித்தே^{4}ஶ்வரீ ஸித்த^{4}வித்யா ஸித்த^{4}மாதா யஶஸ்வினீ ।।97
விஶுத்^{3}தி^{4} சக்ரநிலயாऽऽரக்தவர்ணா த்ரிலோசனா ।
க^{2}ட்வாங்கா^{3}தி^{3} ப்^{1}ரஹரணா வத^{3}நைக ஸமன்விதா ।।98

(कान्ति) *கூடியவள். (466)* **क्षोभिणी** - *க்ஷோபத்துடன் கூடியவள். மனக்கலக்கத்தால் தேவ கணங்களை உண்டு பண்ணினாள். ஆதனால் க்ஷோபி^{4}ணீ எனப் பெயர். (467)* **सूक्ष्म रूपिणी** - *சூலபமாக அறிய முடியாத உருவத்தை உடையவள். ஆசார்ய உபதேசத்தால் அறியலாம் எனக் கருத்து.*

ஸ்லோகம் 97:- (468) **वज्रेश्वरी** - *வஜ்ரேஶ்வரியாக இருப்பவள். ஷஷ்டீ திதியின் நித்யா தேவதைக்கு வஜ்ரேஶ்வரீ எனப் பெயர். அல்லது ஜாலந்த^{4}ர பீட^{2}த்தின்* **(जालन्धरपीठम्)** *அதி^{4}ஷ்டான தேவதைக்கு வஜ்ரேஶ்வரீ எனப் பெயராதலால் அந்த ரூபமாக இருப்பவள். (469)* **वामदेवी** - *வாம தேவரான பரமசிவனுடைய பத்னீ. (470)* **वयोऽवस्था विवर्जिता** - *வயதினால் ஏற்படும் நிலையற்றவள். (471)* **सिद्धेश्वरी** - *கோரக்ஷர், மத்ஸ்யேந்த்ரநாதர் முதலிய ஸித்தர்களுக்கு ஈஶ்வரியாக இருப்பவள். அல்லது காசியில் ஸித்தேஶ்வரீ என்று அம்பாள் இருப்பதால் அந்த ரூபமாக இருப்பவள். (472)* **सिद्धविद्या** - *அழிவற்ற வித்யாரூபிணியாக இருப்பவள். (473)* **सिद्धमाता** - *ஸித்தர்களுக்குத் தாயாக இருப்பவள் (474)* **यशस्विनी** - *மஹத்தான யஶஸ்ஸுடன் கூடியவள்.*

ஸ்லோகம் 98:- (475) **विशुद्धि चक्रनिलया** - *விஶுத்^{3}தி^{4} சக்ரத்தை இருப்பிடமாகக் கொண்டவள். விஶுத்^{3}தி^{4} சக்ரம் என்பது கழுத்திலுள்ளது. இது பதினாறு த^{3}ளத்துடன் கூடியது. இந்த பதினாறு தளங்களிலும் 'அ' முதல் விஸர்க^{3}ம் (அ:) வரை உள்ள பதினாறு ஸ்வரங்களும் உள்ளன. (476)* **आरक्तवर्णा** - *சிறிது சிவப்பு நிறமுள்ளவள். (477)* **त्रिलोचना** - *மூன்று கண்களை உடையவள். (478)* **खट्वाङ्गादि प्रहरणा** - *கட்டிற்கால் முதலிய*

पायसान्नप्रिया त्वक्स्था पशुलोक भयङ्करी ।
अमृतादि महाशक्ति संवृता डाकिनीश्वरी ॥९९

பாயஸான்னப்ரியா த்வக்ஸ்தா[2] பஶுலோக ப[4]யங்கரீ।
அம்ருதாதி[3] மஹாஶக்தி ஸம்வ்ருதா டா[3]கி[1]னீஶ்வரீ ।। 99

ஆயுதங்களை உடையவள். டா[3]கினீ தேவியின்(डाकिनीदेवी) நான்கு கையில் கட்வாங்கம், கட்டிற்கால், க[2]ட்[3]க[3]ம், ஶூலம், மஹா சர்மம் இவைகள் இருக்கின்றன. (479) वदनैक समन्विता - ஒரு முகத்தை உடையவள்.

சுலோகம் 99:- (480) पायसान्नप्रिया - (பாலினால் செய்த) பாயஸத்தில் ப்ரியமுள்ளவள். (481) त्वक्स्था - த்வக்கிலிருப்பவள். த்வக்தா[4]துவின்(त्वक् धातु) அபிமானி தேவதையாக இருப்பவள். (482) पशुलोक भयङ्करी - பசுக்களான ஜனங்களுக்கு பயத்தைக் கொடுக்கிறவள். ப்ரும்மமும், நாமும் ஒன்று என்ற அத்வைத ஞானம் இல்லாதவர்களே பசுக்கள். (483) अमृतादि महाशक्ति संवृता - அம்ருதை முதலிய பதினாறு மஹா சக்திகளால் சூழப்பட்டவள். மேலே சொல்லிய பதினாறு ஸ்வரங்களான 'அ'காராதி அக்ஷரங்களை முதல் எழுத்தாகக் கொண்ட பதினாறு மஹா சக்திகளின் பெயர்கள்:-

अमृता, आकर्षिणी, इन्द्राणी, ईशानी, उमा, ऊर्ध्व केशी, ऋद्धिदा, ॠकारा, ऌकारा, ॡकारा, एकपदा, ऐश्वर्यात्मिका, ओंकारा, औषधिः, अम्बिका, अक्षरा.

அம்ருதா, ஆகர்ஷிணீ, இந்த்[3]ராணீ, ஈஶானீ, உமா, ஊர்த்[4]வ கேஶீ, ருத்[3]தி[4]தா[3], ருகாரா, ல்ருகாரா, ல்ரூகாரா, ஏகபதா[3], ஐஶ்வர்யாத்மிகா, ஓம்காரா, ஔஷதி[4]:, அம்பி[3]கா, அக்ஷரா.

இவர்கள் ஒவ்வொருவரும் விஶுத்[3]தி[4] சக்ரத்தின் (विशुद्धि चक्रम्) பதினாறு தளங்களிலும் அமர்ந்து நடுவில் இருக்கும் ஸ்ரீ அம்பாளை சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (484) डाकिनीश्वरी - விஶுத்[3]தி[4] சக்ரநிலயா என்றது முதல், ஒன்பது விசேஷணங்களை உடைய டாகினீ ரூபிணியான ஈஶ்வரியாக இருப்பவள்.

சுலோகம் 100:- (485) अनाहताब्ज निलया - அனாஹத கமலத்தில் இருப்பவள். இந்த சக்ரம் ஹ்ருதய ப்ரதேசத்தில்

अनाहताब्ज निलया श्यामाभा वदनद्वया ।
दंष्ट्रोज्ज्वलाऽक्षमालादि धरा रुधिर संस्थिता ।।१००
कालरात्र्यादि शक्त्योघवृता स्निग्धौदनप्रिया।
महावीरेन्द्र वरदा राकिण्यम्बा स्वरूपिणी ।।१०१

அனாஹதாப்ஜ நிலயா ஶ்யாமாபா[4] வத[3]ன த்[3]வயா।
த[3]ம்ஷ்ட்ரோஜ் ஜ்வலாऽ-
க்ஷமாலாதி[3] த[4]ரா ருதி[4]ர ஸம்ஸ்த்தி[2]தா।।100

காலராத்ர்யாதி ஶக்த்யோக[4]
வ்ருதா ஸ்னிக்[3]தௌ[4] த[3]னப்ரியா ।
மஹாவீரேந்த்[3]ர வரதா[3] ராகி[1]ண்யம்பா[3] ஸ்வரூபிணீ।।101

பன்னிரண்டு தளங்களுடன் உள்ளது. ராகினீ (राकिणी) என்ற பெயருடன் ஸ்ரீ அம்பாள் இருக்கிறாள். (486) **श्यामाभा** - பதினாறு வயது யுவதிக்கு ஒப்பாக இருக்கிறவள். பதினாறு வயது பெண்ணிற்கு ஶ்யாமா எனப் பெயர். (487) **वदनद्वया** - இரண்டு முகங்களை உடையவள். (488) **दंष्ट्रोज्ज्वला** - கோரைப் பற்களால் ப்ரகாசிக்கிறவள். (489) **अक्षमालादि धरा** - அக்ஷமாலை முதலியவைகளை தரித்திருப்பவள். 'அ'காரம் முதல் 'க்ஷ'காரம் வரை உள்ள அக்ஷரங்களின் எண்ணிக்கையோடு கூடிய மாலைக்கு அக்ஷமாலை எனப் பெயர். ராகினீ தேவியின் நான்கு கைகளில் அக்ஷமாலை, சூலம், கபாலம், ட[3]மரு(**डमरू**) இவைகள் இருக்கின்றன. (490) **रुधिर संस्थिता** - ருதி[4]ர (ரத்த) தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்.

ஶ்லோகம் 101:- (491) **कालरात्र्यादि शक्त्योघवृता** - காளராத்ரீ முதலிய ட[4]ங்காரி (**ठङ्कारी**) வரை உள்ள பன்னிரண்டு சக்திகளின் கூட்டத்தால் சூழப்பட்டவள். இவர்களின் பெயர்கள்:

कालरात्री, खण्डिता, गायत्री, घंटाकर्षिणी, ङर्णा, चंडा,छाया, जया, झङ्कारिणी, ज्ञानरूपा, टङ्कहस्ता, ठङ्कारिणी ।

காலராத்ரீ, க[2]ண்டி[3]தா, கா[3]யத்ரீ, க[4]ண்டா[1]க[1]ர்ஷிணீ, ஙர்ணா, சண்டா[3], சா[2]யா, ஜயா, ஜங்கா[1]ரிணீ, ஜ்ஞானரூபா, டங்கஹஸ்தா, ட[2]ங்காரிணீ ।

मणिपूराब्ज निलया वदनत्रय संयुता ।
वज्रादिकायुधोपेता डामर्यादिभिरावृता ।।१०२
रक्तवर्णा मांसनिष्ठा गुडान्न प्रीतमानसा ।
समस्तभक्त सुखदा लाकिन्यम्बा स्वरूपिणी।।१०३

மணிபூராப்[3]ஜ நிலயா வத[3]ன த்ரய ஸம்யுதா ।
வஜ்ராதி[3]காயுதோ[4]பேதா[1] டா[3]மர்யாதி[3]பி[4]ராவ்ருதா ।।102
ரக்தவர்ணா மாம்ஸநிஷ்டா[2] கு[3]டா[3]ன்ன ப்ரீத மானஸா।
ஸமஸ்தப[4]க்த ஸுக[2]தா[3] லாகின்யம்பா[3] ஸ்வரூபிணீ।।103

இவர்கள் அனாஹத கமலத்தின் பன்னிரண்டு தளங்களில் வீற்றிருப்பவர்கள். (492) **स्निग्धौदनप्रिया** - *நெய் நிரம்பிய அன்னத்தில் ப்ரியமுமள்ளவள். (493)* **महावीरेन्द्र वरदा** - *மஹா வீரனான ப்ரஹ்லாதனுக்கும், இந்திரனுக்கும் வரமளித்தவள். ஸ்ரீதேவிபாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் இம்மாதிரி வரமளித்த கதையை சொல்லியிருப்பதை ஸ்ரீ பாஸ்கரராயரும் கூறியிருக்கிறார். (494)* **राकिण्यम्बा स्वरूपिणी** - *அனாஹதாப்[3]ஜநிலயா என்றது முதல் மஹாவீரேந்த்[3]ர வரதா[3] என்ற வரை உள்ள ஒன்பது நாமாவை விசேஷணமாகக் கொண்ட ராகி[1]னீ* **(राकिणी)** *என்ற ஸ்ரீ அம்பாள் ஸ்வரூபமாக இருப்பவள்.*

சுலோகம் 102:- (495) **मणिपूराब्ज निलया** - *மணிபூர பத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவள். மணிபூரபத்மம் பத்து தளத்துடன் நாபியில் இருக்கிறது. (496)* **वदनत्रय संयुता** - *மூன்று முகங்களோடு கூடியவள். (497)* **वज्रादिकायुधोपेता** - *வஜ்ரம் முதலிய ஆயுதங்களோடு கூடியவள். லாகினீ* **(लाकिनी)** *தேவியின் நான்கு கைகளில் வஜ்ரம், சக்தி, தண்டம், அபயமுத்ரை இவைகள் இருக்கின்றன. (498)* **डामर्यादिभिरावृता** - *டா[3]மரீ முதல் ப[2]ட்காரீ வரை உள்ள பத்து சக்திகளால் சூழப்பட்டவள். இவர்களின் பெயர்கள்:*

डामरी, ढङ्कारिणी, णार्णा, तामसी, स्थाण्वी, दाक्षायणी, धात्री, नारी, पार्वती, फट्कारिणी ।

டா[3]மரீ, ட[4]ங்காரிணீ, ணார்ணா, தாமஸீ, ஸ்தாண்வீ, தா[3]க்ஷாயணீ, தா[4]த்ரீ, நாரீ, பார்வதீ, ப[2]ட்[1]கா[1]ரிணீ ।

சுலோகம் 103:- (499) **रक्तवर्णा** - *சிவப்பு நிறமானவள். (500)*

स्वाधिष्टानाम्बुजगता चतुर्वक्त्र मनोहरा ।
शूलाद्यायुध सम्पन्ना पीतवर्णाऽतिगर्विता ।।१०४
मेदोनिष्ठा मधुप्रीता बन्दिन्यादि समन्विता ।
दध्यन्ना सक्त हृदया काकिनी रूपधारिणी ।।१०५

ஸ்வாதி4ஷ்ட்டானாம்பு3ஜக3தா சதுர்வக்த்ர மனோஹரா।
ஶூலாத்3யாயுத4 ஸம்பன்னா பீதவர்ணாऽதி1 க3ர்விதா।।104
மேதோ3நிஷ்டா2 மது4ப்ரீதா ப3ந்தி3ன்யாதி3 ஸமன்விதா।
த3த்4யன்னாஸக்த ஹ்ருத3யா காகினீ ரூபதா4ரிணீ ।। 105

मांसनिष्टा - *மாம்ஸத்தில் இருப்பவள். அதாவது மாம்ஸ தாதுவிற்கு அபிமானி தேவதையாக இருப்பவள். (501)* **गुडान्न प्रीतमानसा** - *வெல்லம் கலந்த அன்னத்தில் ப்ரியம் கொண்ட மனதை உடையவள். (502)* **समस्त भक्त सुखदा** - *எல்லா பக்தர்களுக்கும் ஸுகத்தை அளிப்பவள். (503)* **लाकिन्यम्बा स्वरूपिणी** - *லாகினீ என்ற அம்பாளின் ஸ்வரூபமாக இருப்பவள்.*

சுலோகம்:-104 (504) **स्वाधिष्टानाम्बुजगता** - *ஸ்வாதி1ஷ்டான பத்3மத்தில் இருப்பவள். ஸ்வாதி1ஷ்டானமென்ற பத்3மம் ஆறு த3ளங்களுடன் கு3ஹ்ய ஸ்தானத்திலிருக்கிறது. (505)* **चतुर्वक्त्र मनोहरा** - *நான்கு முகங்களுடன் அழகாக இருப்பவள். (506)* **शूलाद्यायुध सम्पन्ना** - *சூலம் முதலிய நான்கு ஆயுதங்களோடு கூடியவள். இந்த நான்கு ஆயுதங்கள் சூலம், பாஶம், கபாலம், அங்குஶம். (507)* **पीतवर्णा** - *பொன் நிறம் உள்ளவள். (508)* **अतिगर्विता** - *கர்வத்தோடு கூடியவள். மிகுந்த அழகாய் இருப்பதால் கர்வத்துடன் இருக்கிறாள் எனக் கருத்து.*

சுலோகம்:-105 (509) **मेदोनिष्ठा** - *(மேதஸ்) கொழுப்புக்கு அதி தேவதையாக இருப்பவள். (510)* **मधुप्रीता** - *தேனினால் த்ருப்தி அடைகிறவள். (511)* **बन्दिन्यादि समन्विता** - *பந்தினீ முதல் லம்போஷ்டீ வரை உள்ள ஆறு தேவிகளால் சூழப்பட்டவள். இவர்களின் பெயர்கள்:-*

बन्दिनी, भद्रकाली, महामाया, यशस्विनी, रक्ता, लम्बोष्ठी ।

ப3ந்தி3னீ, ப4த்3ரகாளீ, மஹாமாயா, யஶஸ்வினீ, ரக்தா, லம்போஷ்ட்டீ2 ।

मूलाधाराम्बुजारूढा पञ्चवक्त्राऽस्थि संस्थिता।
अङ्कुशादिप्रहरणा वरदादि निषेविता ।।१०६
मुद्गौदनासक्त चित्ता साकिन्यम्बा स्वरूपिणी।
आज्ञाचक्राब्ज निलया शुक्लवर्णा षडानना ।।१०७

மூலாதா⁴ராம்பு³ஜாரூடா⁴ பஞ்சவக்த்ராऽஸ்த்தி²ஸம்ஸ்த்தி²தா
அங்குஶாதி³ ப்¹ரஹரணா வரதா³தி³ நிஷேவிதா ।।106
முத்³கௌ³த³னாஸக்த சித்தா ஸாகின்யம்பா³ ஸ்வரூபிணீ।
ஆஜ்ஞாச¹க்ராப்³ஜ நிலயா ஶுக்லவர்ணாஷடா³னனா।।107

---

(512) **दध्यन्नासक्त हृदया** - *தயிர் கலந்த அன்னத்தில் அன்பு கொண்ட ஹ்ருதயத்தை உடையவள். (513)* **काकिनी रूपधारिणी** - *காகினீ என்ற அம்பாளின் ரூபத்தை உடையவள்.*

சுலோகம்:-106 (514) **मूलाधाराम्बुजारूढा** - *மூலாதாரத்திலிருக்கும் நான்கு த³ளம் உள்ள பத்மத்தில் ஏறி வஸிப்பவள். குதத்திற்கும், குஹ்யத்திற்கும் நடுவிலிருப்பது மூலாதார பத்மம். (515)* **पञ्चवक्त्रा** - *ஐந்து முகங்களுடன் கூடியவள். (516)* **अस्थि संस्थिता** - *எலும்பில் இருப்பவள். (517)* **अङ्कुशादिप्रहरणा** - *அங்குசம், தாமரை, புஸ்தகம், ஞானமுத்திரை, இந்த நான்கு ஆயுதங்களுடன் கூடியவள். (518)* **वरदादि निषेविता** - *வரதா முதல் ஸரஸ்வதீ வரை உள்ள சக்திகளால் ஸேவிக்கப்பட்டவள், இவர்கள் பெயர்கள்:-*

वरदा, श्रीः, षण्डा, सरस्वती ।

வரதா³, ஶ்ரீ:, ஷண்டா³, ஸரஸ்வதீ ।

சுலோகம்:-107 (519) **मुद्गौदनासक्त चित्ता** - *பயத்தம் பருப்பு கலந்த அன்னத்தில் ஆவல் கொண்ட மனமுடையவள். (520)* **साकिन्यम्बा स्वरूपिणी** - *ஸாகி¹னீ* **(साकिनी)** *என்ற அம்பாளின் ஸ்வரூபமாக இருப்பவள். (521)* **आज्ञाचक्राब्ज निलया** - *ஆக்ஞா சக்ரமாகிற கமலத்தில் இருப்பவள். ஆக்ஞா சக்ரம் இரண்டு தளங்களுடன் புருவங்களின் நடுவில் இருக்கிறது. (522)* **शुक्लवर्णा** - *வெளுப்பு வர்ணமாக இருப்பவள். (523)* **षडानना** - *ஆறுமுகத்துடன் கூடியவள்.*

சுலோகம்:-108 (524) **मज्जासंस्था** - *மஜ்ஜா தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள். மஜ்ஜை என்பது எலும்பு,*

मज्जासंस्था हंसवती मुख्यशक्ति समन्विता ।
हरिद्रान्नैकरसिका हाकिनी रूप धारिणी ।। १०८
सहस्त्रदल पद्मस्था सर्ववर्णोपशोभिता ।
सर्वायुधधरा शुक्ल संस्थिता सर्वतोमुखी ।।१०९
सर्वौदनप्रीतचित्ता याकिन्यम्बा स्वरूपिणी ।
स्वाहा स्वधा मतिर्मेधा श्रुतिः स्मृतिरनुत्तमा ।।११०

மஜ்ஜாஸம்ஸ்தா[2] ஹம்ஸவதீ முக்[2]யஶக்தி ஸமன்விதா ।
ஹரித்[3]ரான்னைக ரஸிகா ஹாகினீ ரூப தா[4]ரிணீ ।। 108
ஸஹஸ்ரத[3]ல பத்[3]மஸ்த்தா[2] ஸர்வ வர்ணோபஶோபி[4]தா ।
ஸர்வாயுத[4]த[4]ரா ஶுக்ல ஸம்ஸ்த்திதா[2] ஸர்வதோமுகீ[2] ।।109
ஸர்வெளத[3]ன ப்ரீதசி[1]த்தா யாகின்யம்பா[3] ஸ்வரூபிணீ ।
ஸ்வாஹா ஸ்வதா[4] மதிர்மேதா[4]
ஶ்ருதி: ஸ்ம்ருதிரனுத்தமா ।। 110

மாம்ஸம் இவைகளின் ஸாரம். (525) **हंसवती मुख्यशक्ति समन्विता** - *ஹம்ஸவதீ, க்ஷமாவதீ என்ற இரு சக்திகளுடன் கூடியவள். (526)* **हरिद्रान्नैक रसिका** - *மஞ்சள் கலந்த அன்னத்தில் மிகவும் பற்றுள்ளவள். (527)* **हाकिनी रूप धारिणी** - *ஹாகினீ என்னும் தேவியின் ரூபத்தை தரிப்பவள். ஞான முத்திரை, ட[3]மருகம், அக்ஷமாலை, கபாலம் இவைகளை ஹாகினீ தேவி தரிக்கிறாள்.*

சுலோகம்:-109 (528) **सहस्त्रदल पद्मस्था** - *(ப்[3]ரும்ம ரந்த்[4]ரத்திலுள்ள* **-ब्रह्मरन्ध्रम्)** *) ஸஹஸ்ரார பத்[3]மத்தில் இருப்பவள். (529)* **सर्ववर्णोपशोभिता** - *சித்ர வர்ணங்களால் மிகவும் சோபிக்கிறவள். (530)* **सर्वायुधधरा** - *எல்லா ஆயுதங்களையும் தரிப்பவள். (531)* **शुक्ल संस्थिता** - *சுக்ல (வீர்ய) தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள். (532)* **सर्वतोमुखी** - *எல்லா திக்குகளிலும் முகம் உள்ளவள்.*

சுலோகம்:-110 (533) **सर्वौदन प्रीतचित्ता** - *மேலே சொல்லிய பாயஸான்னம் முதல் ஹரித்[3]ரான்னம் வரை உள்ள எல்லா அன்னங்களிலும் ப்ரியமுள்ள மனமுடையவள். (534)* **याकिन्यम्बा स्वरूपिणी** '- *யாகினீ என்னும் ஸ்ரீ அம்பாளின்*

पुण्यकीर्तिः पुण्यलभ्या पुण्यश्रवण कीर्तना।
पुलोमजार्चिता बन्धमोचनी बर्बरालका ।।१११

புண்யகீர்த்தி: புண்யலப்[4]யா புண்யஶ்ரவண கீர்த்தனா।
புலோமஜார்ச்சிதா ப[3]ந்த[4]மோசனீ ப[3]ர்ப[3]ராலகா ।। 111

ஸ்வரூபமாக இருப்பவள். *(535)* **स्वाहा** - ஸ்வாஹா என்ற ரூபமாக இருப்பவள். இவள் அக்னி ரூபமான பரமசிவனின் மனைவி. இவளிடத்திலேயே ஸ்கந்தன் பிறந்தான். *(536)* **स्वधा** - ஸ்வதா[4] ரூபமாக இருப்பவள். தமது பித்ருக்களுக்கு ஹவிர்பா[4]க[3]ம் **(हविर्भागम्)** கொடுக்கும் சொல் இந்த 'ஸ்வதா' என்றது. *(537)* **अमतिः** - அவித்யா ரூபமாக இருப்பவள். இங்கு அமதி: என்று பதம் பிரிக்க வேண்டும். *(538)* **मेधा** - மேதா[4] (ஞாபக சக்தி) ரூபமாக இருப்பவள். *(539)* **श्रुतिः** - வேதங்களின் ரூபமாக இருப்பவள். *(540)* **स्मृतिः** - ஸ்ம்ருதிகளின் ரூபமாக இருப்பவள். முனிவர்கள் வேதங்களில் சொல்லிய கர்மங்களை நம்பி நன்கு செய்து நற்பயனை அடைந்து தங்கள் அனுபவத்தைக்கூறிய நூலுக்குத்தான் ஸ்ம்ருதி எனப் பெயர். மேலும் வாயு புராணத்தில், நடந்தது, நடப்பது, நடக்கப் போகிறது, இம்மூன்றையும் ஞானக்கண்ணால் அறிந்து சொல்லிய நூலுக்கு ஸ்ம்ருதி என சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வசனம்:-

वर्तमानान्यतीतानि तथैवानागतान्यपि ।
स्मरते सर्वकार्याणि तेनासौ स्मृतिरुच्यते ।।

வர்த்தமானான் யதீதானி ததை[2]வானா க[3]தான்யபி ।
ஸ்மரதே ஸர்வகார்யாணி தேனாஸௌ ஸ்ம்ருதிருச்யதே ।।

(541) **अनुत्तमा** - தனக்கு மேற்பட்ட தேவதை இல்லாதவள்.

சுலோகம்:-111 *(542)* **पुण्यकीर्तिः** - புண்யத்தை அளிக்கும் கீர்த்தி உள்ளவள். அம்பாளுடைய கீர்த்தியை ஸ்மரித்தாலும், சொன்னாலும், கேட்டாலும் புண்யம் ஏற்படும் எனக் கருத்து. *(543)* **पुण्यलभ्या** - ஜன்மாந்தரீயமான புண்யத்தால் அடையத்தகுந்தவள். *(544)* **पुण्यश्रवण कीर्तना** - புண்யத்தை அளிக்கும் சிரவணம், கீர்த்தனம் இவைகளை உடையவள். அதாவது அம்பாளுடைய கதையைக் கேட்பதாலும், நாமத்தைச் சொல்வதாலும் புண்யம் ஏற்படுமெனக் கருத்து. *(545)* **पुलोमजार्चिता** - இந்திராணியினால் பூஜிக்கப்பட்டவள்.

विमर्श रूपिणी विद्या वियदादि जगत्प्रसूः ।
सर्वव्याधि प्रशमनी सर्वमृत्यु निवारिणी ।।११२
अग्रगण्याऽचिन्त्यरूपा कलिकल्मष नाशिनी।
कात्ययनी कालहन्त्री कमलाक्ष निषेविता ।।११३

விமர்ஶ ரூபிணீ வித்[3]யா வியதா[3]தி[3] ஜக[3]த்ப்ரஸூ: ।
ஸர்வவ்யாதி[4] ப்ரஶமனீ ஸர்வம்ருத்யு நிவாரிணீ ।।112
அக்[3]ரக[3]ண்யாऽசிந்த்யரூபா கலிகல்மஷ நாஶினீ ।
காத்யயனீ காலஹந்த்ரீ கமலாக்ஷ நிஷேவிதா ।। 113

நஹுஷன் தேவலோகத்தை ஆளும் பொழுது இந்திராணி தேவேந்திரனை அடைவதற்காக குருவிடமிருந்து ஸ்ரீ வித்யா மந்திரத்தை உபதேசம் பெற்று ஸ்ரீ அம்பாளை ஆராதித்ததாக ஸ்ரீதேவீ பாகவதக் கதை கூறுகிறது. (546) **बन्धमोचनी** - *ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பவள். அல்லது ஜெயிலிலிருந்தும் விடுவிப்பவள். அனிருத்[3]த[4]னை* **(अनिरुद्धः)** *பா[3]ணாஸுரன்* **(बाणासुरः)** *ஜெயிலில் அடைத்தபோது ஸ்ரீ அம்பாளை ஶரணமடைந்து ஸஹஸ்ரநாமத்தை ஜபித்து விடுபட்டான் என்ற ஹரிவம்ஶத்திலுள்ள வாக்யம்:-*

एभिः नामभिरन्यैश्च कीर्तिताह्यसि शाङ्करि ।
त्वत्प्रसादादविघ्नेन क्षिप्रं मुच्येय बन्धनात् ।।
अवेक्षस्व विशालाक्षि पादौ ते शरणं व्रजे ।
सर्वेषामेव बन्धानां मोक्षानां कर्तुमर्हसि ।।
एवं स्तुता तदा देवी दुर्गा दुर्गपराक्रमा ।
बद्धं बाणपुरे वीरं अनिरुद्धं व्यमोचयत् ।।

ஏபி[4]: நாமபி[4]ரன்யைஶ்ச கீர்த்திதாஹ்யஸி ஶாங்கரி ।
த்வத்ப்ரஸாதா[3]த[3]விக்[4]னேன க்ஷிப்ரம் முச்யேய ப[3]ந்த[4]னாத் ।।
அவேக்ஷஸ்வ விஶாலாக்ஷி பாதௌ[3] தே ஶரணம் வ்ரஜே।
ஸர்வேஷாமேவ ப[3]ந்தா[4]னாம் மோக்ஷானாம் கர்துமர்ஹஸி ।।
ஏவம் ஸ்துதா ததா[3] தே[3]வீ து[3]ர்கா[3] து[3]ர்க[3] பராக்ரமா ।
ப[3]த்[3]த[4]ம் பா[3]ணபுரே வீரம் அநிருத்[3]த[4]ம் வ்யமோசயத் ।।

(547) **बर्बरालका** - *ப[3]ர்ப[3]ராளகையாக இருப்பவள். அதாவது சுருண்ட நுனிகளை உடைய, நெற்றியில் தொங்கும்*

கேசத்தை உடையவள். ப3ந்து4ராளகா **(बन्धुरालका)** என்றும் பாடமுண்டு. உபாஸகர்கள் பலர் **(बर्बरालका)** ப3ர்ப3ராளகா என்று ஜபிக்கின்றனர்.

ச்லோகம்:-112. (548) **विमर्श रूपिणी** - ப்ரகாச ரூபமாக இருப்பவள். *(549)* **विद्या** - வித்யா ரூபமாக இருப்பவள். *(550)* **वियदादि जगत्प्रसूः** - ஆகாசம் முதலிய ஜகத்திற்குத் தாயாக இருப்பவள். *(551)* **सर्वव्याधि प्रशमनी** - எல்லா வியாதிகளையும் நாசமாக்குகிறவள். *(552)* **सर्वमृत्यु निवारिणी** - அபம்ருத்யு, காலம்ருத்யு முதலிய எல்லா ம்ருத்யுக்களையும் நாசமாக்குகிறவள்.

ச்லோகம்:-113: (553) **अग्रगण्या** - முதலில் கணக்கிடத் தகுந்தவள். உலகம் உண்டாவதற்கு முன்னமேயே இருப்பவள். *(554)* **अचिन्त्यरूपा** - மனதிற்கு எட்டாத ரூபம் உடையவள். நிர்குணமாக இருப்பவள் எனத் தாத்பர்யம். *(555)* **कलिकल्मष नाशिनी** - கலியில் ஏற்படும் பாபங்களைப் போக்குகிறவள். கூர்ம புராணத்தில் அக்னியை அணைப்பதற்கு ஜலமும், இருட்டைப் போக்குவதற்கு சூரியனும் எப்படியோ, அதுபோல் கலியில் ஏற்படும் பாபங்களை போக்குவதற்கு ஸ்ரீ தேவியின் நாமஸங்கீர்த்தனமே போதும் என்று கூறிய வசனம்:-

शमायालं जलं वह्नेः तमसो भास्करोदयः ।
शान्त्यै कलेरघौघस्य देवीनामानुकीर्तनम् ।।

ஶமாயாலம் ஜலம் வன்ஹே: தமஸோ பா4ஸ்கரோத3ய:।
ஶாந்த்யை க1லேரகௌ4க4ஸ்ய தே3வீ நாமாநுகீர்த்தனம் ।।

(556) **कात्यायनी** - *க1த1ர்* **(कतः)** என்ற ரிஷிக்குப் பிறந்ததால் காத்யாயனீ என்ற பெயருடன் விளங்குகிறாள். காத்யாயனியின் ரூபமானது ஸகல தேவர்களுடைய தேஜஸ் என வாமன புராணம் கூறுகிறது:-

तच्चापि तेजो वरमुत्तमं महत् नाम्ना पृथिव्यामभवत्प्रसिद्धम् ।
कात्ययनीत्येव तदाबभौ सा नाम्ना च तेनैव जगत्प्रसिद्धा ।।

தச்சாபி1 தேஜோ வரமுத்தமம் மஹத்
நாம்னா ப்ருதி2வ்யாமப4வத் ப்ரஸித்3த4ம்।
காத்யயனீத்யேவ ததா3ப3பௌ4 ஸா
நாம்னா ச தேனைவ ஜகத் ப்ரஸித்3தா4 ।।

ताम्बूल पूरितमुखी दाडिमी कुसुमप्रभा ।
मृगाक्षी मोहिनी मुख्या मृडानी मित्ररूपिणी ।। ११४
नित्यतृप्ता भक्तनिधिः नियन्त्री निखिलेश्वरी ।
मैत्र्यादि वासनालभ्या महाप्रलय साक्षिणी ।।११५

தாம்பூ^{3}ல பூரிதமுகீ^{2} தா^{3}டி^{3}மீ குஸும ப்ரபா^{4} ।
ம்ருகா^{3}க்ஷீ மோஹினீ முக்^{2}யா ம்ருடா^{3}னீ மித்ரரூபிணீ ।।
நித்ய த்ருப்தா ப^{4}க்தநிதி^{4}: நியந்த்ரீ நிகி^{2}லேஶ்வரீ ।
மைத்ர்யாதி^{3} வாஸனாலப்^{4}யா மஹாப்ரலய ஸாக்ஷிணீ ।।115

ஒட்டியாண பீடத்தின் அதிஷ்டான தேவதை காத்யாயனீ. மேலும் தேஜினீவனம் என்னும் சிறந்த க்ஷேத்திரமாகிய திருவீழிமலை என்ற ஸ்தலத்தில் காத்யாயனீ என்ற பெயருடன் ஸ்ரீ அம்பாள் ஸ்ரீ பரமசிவனை விவாஹம் செய்து கொண்டு இன்றும் விளங்குகிறாள். அந்த ஸன்னிதியில் பிரார்த்தித்துக் கொண்டு அபிஷேகம், அர்ச்சனை செய்தால் உடன் விவாஹம் மங்களமாய் நடப்பதை இக்கலியிலும் காண்கிறோம். தஞ்சை ஜில்லா பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கு ஸமீபத்திலுள்ளது இந்த திருவீழிமலை (557) **कालहन्त्री** *- காலனை அழிப்பவள். (558)* **कमलाक्ष निषेविता** *- புண்டரீகாக்ஷனான ஸ்ரீமன் நாராயணனால் நன்கு ஸேவிக்கப்பட்டவள். பாத்^{3}மத்திலும்*

इन्द्रनीलमयीं देवीं विष्णुरर्चयते सदा ।

இந்த்^{3}ரநீலமயீம் தே^{3}வீம் விஷ்ணுரர்ச்சயதே ஸதா^{3} ।

என்று கூறப்பட்டிருக்கிறது.

சுலோகம்:-114 (559) **ताम्बूल पूरितमुखी** *- தாம்பூலம் நிறைந்த வாயை உடையவள். (560)* **दाडिमी कुसुमप्रभा** *- மாதுளம் பூவின் காந்தி* **(कान्ति)** *போன்ற காந்தியை உடையவள். (561)* **मृगाक्षी** *- மானின் கண் போன்ற கண்களை உடையவள். (562)* **मोहिनी** *- (ஸர்வ ஜகத்தையும் தனது ஸௌந்தர்யத்தினால்) மோஹிக்கும்படி செய்தவள். அல்லது தேவர்களின் கார்ய ஸித்திக்காக மோஹினீ ரூபம் தரித்த ஸ்ரீ மஹா விஷ்ணுவாக விளங்குகிறவள். (563)* **मुख्या** *- எல்லாவற்றிற்கும் முன்னமேயே இருப்பவள். (564)* **मृडानी** *- ஸுகத்தை அளிக்கும் பரமசிவனின் மனைவியாக இருப்பவள். (565)* **मित्ररूपिणी** *- (யாவருக்கும்) ஸுஹ்ருத் (நண்பன்) ஆக இருப்பவள்.*

परा शक्तिः परानिष्ठा प्रज्ञानघन रूपिणी ।
माध्वीपानालसा मत्ता मातृका वर्ण रूपिणी ।। ११६

பரா ஶக்தி: பராநிஷ்ட்டா2 ப்ரஜ்ஞான க4ன ரூபிணீ।
மாத்4வீபானாலஸா மத்தா மாத்ருகா வர்ண ரூபிணீ।। 116

சுலோகம்:-115 (568) **नित्यतृप्ता** - நித்ய த்ருப்தியோடு இருப்பவள். (567) **भक्तनिधिः** - பக்தர்களுக்கு பொக்கிஷமாக இருப்பவள். கோரிய பொருளை அளிப்பதால் இப்பெயர். (568) **नियन्त्री** - உலகத்தை இவ்விதம் நடக்க வேண்டும் என்று உத்திரவு செய்கிறவள். (569) **निखिलेश्वरी** - எல்லா உலகத்திற்கும் ஈச்வரியாக இருப்பவள். (570) **मैत्र्यादि वासनालभ्या** - மைத்ரீ, கருணா, முதி3தா (**मुदिता**), உபேக்ஷா (**उपेक्षा**), என்ற நான்கு சித்தவ்ருத்திகள் (**चित्तवृत्ति**). (ஸுகமாக இருப்பவர்களிடத்தில் ஸ்நேஹம், துக்கப்படுகிறவர்களிடத்தில் கருணா, புண்யசாலிகளிடத்தில் ஸந்தோஷத்தை அடைதல், பாபிகளிடம் கவனிக்காமலிருப்பது (**उपेक्षा**). பதஞ்சலி யோக ஸூத்ரத்திலும் (**पतञ्जलि योगसूत्रम्**):-

मैत्री करुणा मुदितोपेक्षाणां सुख दुःख पुण्यापुण्य विषयाणां भावनाथः चित्तप्रसादनम् ।।

மைத்ரீ கருணா முதி3தோபேக்ஷாணாம் ஸுக2 து3:க2 புண்யாபுண்ய விஷயாணாம் பா4வநாத2: சி1த்த ப்ரஸாத3னம்।।

இப்படிக் கூறி இருக்கிறது. (571) **महाप्रलय साक्षिणी** - மஹாப்ரளய காலத்தில் ஸாக்ஷியாக இருப்பவள்.

சுலோகம் 116:- (572) **परा शक्तिः** - சிறந்த சக்தியாக இருப்பவள். (573) **परानिष्ठा** - சிறந்த முடிவாக இருப்பவள். ஸர்வ கர்மங்களின் பயனாக இருப்பவள் எனக் கருத்து. (574) **प्रज्ञानघन रूपिणी** - நித்யமாயும், அவித்யா ஸம்பந்தம் சிறிதுகூட அற்றதுமான ஞான ரூபமாக இருப்பவள். (575) **माध्वीपानालसा** - திராக்ஷையிலிருந்து எடுத்த ரஸத்தை பானம் செய்ததால் ஆலஸ்யத்துடன் இருப்பவள். (576) **मत्ता** - அதனால் மயக்கத்துடன் இருப்பவள். (577) **मातृका वर्ण रूपिणी** - மாத்ருகா வர்ண ரூபமாக இருப்பவள். 'அ'காரம் முதல் 'க்ஷ'காரம் வரை உள்ள ஐம்பத்தோரு அக்ஷரங்களுக்கும் மாத்ருகா வர்ணமெனப் பெயர்.

महाकैलास निलया मृणाल मृदुदोर्लता ।
महनीया दयामूर्तिः महासाम्राज्य शालिनी ।। ११७
आत्मविद्या महाविद्या श्रीविद्या कामसेविता ।
श्रीषोडशाक्षरी विद्या त्रिकूटा कामकोटिका ।।११८

மஹாகைலாஸ நிலயா ம்ருணால ம்ருது³தோ³ர்லதா।
மஹனீயா த³யாமூர்த்தி: மஹாஸாம்ராஜ்ய ஶாலினீ ।। 117
ஆத்மவித்³யா மஹாவித்³யா ஸ்ரீவித்³யா காமஸேவிதா।
ஸ்ரீஷோட³ஶாக்ஷரீ வித்³யா த்ரிகூடா காமகோடிகா ।। 118

ஸ்லோகம் 117:- (578) **महाकैलास निलया** - *மஹா கைலாஸத்தை இருப்பிடமாகக் கொண்டவள். மஹா கைலாஸம் என்பது கைலாஸத்திற்கு மேல் இருக்கிறது. அதில்தான் பரமசிவன் வஸிக்கிறார். இம்மாதிரி சிவபுராணம் கூறுகிறது. (579)* **मृणाल मृदुदोर्लता** - *தாமரை தண்டிலிருக்கும் நூலைப்போல் ம்ருதுவான கொடி போன்ற கைகளை உடையவள். (580)* **महनीया** - *பூஜிக்கத் தகுந்தவள். (581)* **दयामूर्तिः** - *தயையின் உருவாகவே இருப்பவள். (582)* **महासाम्राज्य शालिनी** - *மஹத்தான ஸாம்ராஜ்யத்தால் விளங்குகிறவள்.*

ஸ்லோகம் 118:- (583) **आत्मविद्या** - *ஆத்ம ஞானமாக இருப்பவள். (584* **महाविद्या** - *அதனால் ஸர்வோத்க்ருஷ்டமான வித்யாரூபிணியாக இருப்பவள். எல்லா அனர்த்தங்களையும் ஸ்ரீ அம்பாள் போக்குவதால் மஹாவித்யை எனச் சொல்லப்பட்டது. (585)* **श्रीविद्या** - *பஞ்சத³ஶீ* **(पञ्चदशी)** *ஸ்வரூபமாக இருப்பவள். (586)* **कामसेविता** - *மன்மதனால் பூஜிக்கப்பட்டவள். (587)* **श्रीषोडशाक्षरी विद्या** - *மஹிமை வாய்ந்த ஷோடாஶாக்ஷரீ வித்யாரூபிணியாக இருப்பவள். உபாஸகர்கள் இந்த வித்யையின் பெருமையைச் சொல்லுமிடத்தில்-*

वक्त्र कोटिसहस्त्रैस्तु जिह्वाकोटि शतैरपि ।
वर्णितुं नैव शक्येयं श्रीविद्या षोडशाक्षरी ।।

வக்த்ர கோடி ஸஹஸ்ரைஸ்து ஜிஹ்வா கோடி ஶதைரபி ।
வர்ணிதும் நைவ ஶக்யேயம் ஸ்ரீவித்³யா ஷோட³ஶாக்ஷரீ।।

ஆயிரம் கோடி வாக்குகளினாலோ, நூறுகோடி

कटाक्ष किङ्करीभूत कमलाकोटि सेविता ।
शिरः स्थिता चन्द्रनिभा भालस्थेन्द्र धनुःप्रभा।।११९
हृदयस्था रविप्रख्या त्रिकोणान्तर दीपिका ।
दाक्षायणी दैत्य हन्त्री दक्षयज्ञ विनाशिनी ।।१२०

கடாக்ஷ கிங்கரீபூ⁴த கமலாகோடி ஸேவிதா ।
ஶிர: ஸ்தி²தா சந்த்³ரநிபா⁴ பா⁴லஸ்தே²ந்த்³ர த⁴நு:ப்ரபா⁴॥
ஹ்ருத³யஸ்தா² ரவிப்ரக்²யா த்ரிகோணாந்தர தீ³பிகா।
தா³க்ஷாயணீ தை³த்ய ஹந்த்ரீ த³க்ஷயஜ்ஞ விநாஶினீ॥

நாக்குகளினாலோ, இந்த ஸ்ரீ ஷோட³ஶாக்ஷரீ வித்³யையின் மஹிமையை வர்ணிக்க முடியாது எனக் கூறியுள்ளனர். ஸ்ரீ என்ற அக்ஷரத்துடன் இந்த வித்யை பதினாறு அக்ஷரங்களுடன் கூடியதாக ஆகிறது. *(588)* **त्रिकूटा** - வாக்பம் முதலிய மூன்று கூடங்களின் ஸ்வரூபமாக இருப்பவள். *(589)* **कामकोटिका** - பரமசிவனை ஏகதேசமாக உடையவள். அதாவது ஸ்ரீ அம்பாளும், ஸ்ரீ பரமசிவனும் வேறுபடாமல் ஒரே ஸ்வரூபமாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஶ்லோகம் 119:- *(590)* **कटाक्ष किङ्करीभूत कमलाकोटि सेविता** - தனது கடைக்கண் பார்வைக்கு வேலைக்காரிகளாக இருக்கும் கோடி மஹாலக்ஷ்மிகளால் ஸேவிக்கப்பட்டவள். *(591)* **शिरः स्थिता** - ப்³ரும்ம ரந்த்⁴ரத்தில் **(ब्रह्मरन्ध्रम्)** குருவின் ரூபமாக இருப்பவள். *(592)* **चन्द्रनिभा** - சந்திரன் போன்ற காந்தி **(कान्ति)** உள்ளவள். ப்ரும்ம ரந்திரத்திற்குக் கீழ்பாகத்தில் சந்திரன் இருக்கிறான். அவன் ஸ்ரீ வித்யையின் மூன்றாவது கூ¹டத்தின் ஸ்வரூபமாக இருப்பவன். அதனாலேயே சந்த்³ரநிபா⁴ என ஸ்ரீ அம்பாள் சொல்லப்படுகிறாள். *(593)* **भालस्था** - (ஹ்ருல்லேகையின் பி³ந்து³ ரூபமாக) நெற்றியில் இருப்பவள். *(594)* **इन्द्र धनुःप्रभा** - இந்திர த⁴னுஸ்ஸின் ப்ரபைகளைப் போன்ற ப்ரபைகளோடு இருப்பவள்.

ஶ்லோகம் 120:- *(595)* **हृदयस्था** - தியானம் செய்வதற்கு யோக்யமாய் ஹ்ருதயத்தில் இருப்பவள். *(596)* **रविप्रख्या** - சூரியனைப் போன்ற காந்தியை **(कान्ति)** உடையவள். *(597)* **त्रिकोणान्तर दीपिका** - த்ரிகோணத்திற்கு நடுவிலிருக்கும் தீபமாக இருப்பவள். மூலாதார பத்மத்தின் கர்ணிகையினுடைய

दरान्दोलित दीर्घाक्षी दरहासोज्ज्वलन् मुखी।
गुरुमूर्तिर्गुणनिधिः गोमाता गुहजन्मभूः ।।१२१
देवेशी दण्डनीतिस्था दहराकाश रूपिणी ।
प्रतिपन्मुख्यराकान्त तिथिमण्डल पूजिता ।। १२२

த³ராந்தோ³லித தீ³ர்கா⁴க்ஷீ த³ரஹாஸோஜ் ஜ்வலன் முகீ²।
கு³ருமூர்த்திர் கு³ணநிதி⁴: கோ³மாதா கு³ஹ ஜன்மபூ⁴: ।।121
தே³வேஶீ த³ண்ட நீதி¹ஸ்தா² த³ஹராகாஶ ரூபிணீ ।
ப்ரதிபன் முக்²யராகாந்த திதி²மண்ட³ல பூஜிதா ।।122

நடுவில் த்ரிகோணம் இருக்கிறது. அதில் அக்னி மண்டலம் இருக்கிறது. அதுதான் ஸ்ரீ அம்பாளுடைய ப்⁴ரம கூ¹ட¹ம் **(भ्रमकूटम्)**. *அந்த அக்னி மண்டலமாக ஸ்ரீ அம்பாள் இருப்பதால் த்ரிகோணாந்தர தீ³பிகா, என்று சொல்லப்பட்டது. (598)* **दाक्षायणी** *- தக்ஷனுடைய புத்ரியாக இருப்பவள். (599)* **दैत्य हन्त्री** *- ப¹ண்ட³ன் முதலிய அஸுரர்களைக் கொன்றவள். (600)* **दक्षयज्ञ विनाशिनी** *- தக்ஷனுடைய யக்ஞத்தை (சிவ ரூபமாக இருந்து) அழித்தவள்.*

ச்லோகம் 121:- (601) **दरान्दोलित दीर्घाक्षी** *- சிறிது சலனத்துடன் கூடியதும், காது வரையில் நீண்டதுமான கண்களை உடையவள் (602)* **दरहासोज्ज्वलन् मुखी** *- புன்சிரிப்பினால் ப்ரகாசிக்கின்ற முகத்தை உடையவள். (603)* **गुरुमूर्तिः** *- குருவின் ரூபமாக இருப்பவள். ஸுந்த³ர தாபினீயத்தில்:-*

यथा घटश्च कलशः कुम्भश्चैकार्थ वाचकाः ।
तथा मन्त्रो देवता च गुरुश्चैकार्थ वाचकाः ।।

யதா² க⁴ட¹ஶ்ச கலஶ: கும்ப⁴ஶ்சைகார்த்த² வாச¹கா¹: ।
ததா² மந்த்ரோ தே³வதா ச கு³ருஶ்சைகார்த்த² வாச¹கா¹: ।।

குடம், கலசம், கும்பம், எல்லாம் எப்படி ஒரே பொருளையே குறிப்பிடுமோ, அதுபோல் மந்திரம், தேவதை, குரு எல்லாம் ஒன்றையேதான் குறிக்கும். (604) **गुण निधिः** *- நற்குணங்களுக்கு பொக்கிஷமாக இருப்பவள். (605)* **गोमाता** *- பசுக்களின் தாயான காமதேனுவாக இருப்பவள். (606)* **गुह जन्मभूः** *- ஸ்கந்தனுக்கு தாயாக இருப்பவள்.*

कलात्मिका कलानाथा काव्यालाप विनोदिनी ।
सचामर रमावाणी सव्यदक्षिण सेविता ।।१२३
आदिशक्तिरमेयात्मा परमा पावनाकृतिः ।
अनेक कोटि ब्रह्माण्ड जननी दिव्य विग्रहा ।।१२४

கலாத்மிகா கலாநாதா[2] காவ்யாலாப[1] விநோதி[3]னீ ।
ஸசாமர ரமா வாணீ ஸவ்யத[3]க்ஷிண ஸேவிதா ।।123
ஆதி[3]ஶக்திரமேயாத்மா பரமா பா[1]வனாக்ருதி: ।
அநேககோடி ப்[3]ரஹ்மாண்ட[3] ஜனனீ தி[3]வ்யவிக்[3]ரஹா ।।124

ஸ்லோகம் 122:- (607) **देवेशी** - *தேவர்களுக்கு ஈஶ்வரியாக இருப்பவள். (608)* **दण्ड नीतिस्था** - *அர்த்த[2] ஶாஸ்திரத்தில்* **(अर्थशास्त्रम्)** *நிலைத்திருப்பவள். (609)* **दहराकाश रूपिणी** - *ஹ்ருதய குஹரத்திலிருக்கும் ஸூக்ஷ்மமான ஆகாசமாக இருப்பவள். (610)* **प्रतिपन्मुख्यराकान्त तिथिमण्डल पूजिता** - *ப்ரதமை முதல் பௌர்ணமி வரை உள்ள திதிகளின் ஸமூஹத்தில் பூஜிக்கப்பட்டவள். அந்த அந்த திதியில் செய்ய வேண்டிய முறைப்படி பூஜை செய்யப்பட்டவள்.*

ஸ்லோகம் 123:- (611) **कलात्मिका** - *கலையின் ஸ்வரூபமாக இருப்பவள். கலா என்றால், அக்னியினுடைய பத்து கலைகள், சூரியனுடைய பன்னிரண்டு கலைகள், சந்திரனுடைய பதினாறு கலைகள், இவைகளைத் தவிர பிரசித்தமான அறுபத்து நான்கு கலைகள் முதலியவைகளைக் குறிக்கும் அந்த ஸ்வரூபமாக இருப்பவள் எனக் கருத்து. (612)* **कलानाथा** - *(மேலே சொல்லிய) கலைகளுக்கெல்லாம் ஸ்வாமினீயாக இருப்பவள். அல்லது சந்திர மண்டல ஸ்வரூபமாக இருப்பவள். (613)* **काव्यालाप विनोदिनी** - *மஹா காவ்யங்களைக் கேட்பதால் மிகுந்த வினோதத்தை அடைகிறவள். வால்மீகி, காளிதாஸன் முதலியவர்களால் செய்யப்பட்ட காவ்யங்கள் 'மஹாகாவ்யம்' எனப்படும் (614)* **सचामर रमावाणी सव्यदक्षिण सेविता** - *சாமரங்களை கையில் வைத்துக் கொண்டு இடது புறத்திலும், வலது புறத்திலும் இருக்கிற லக்ஷ்மீ, ஸரஸ்வதீ இவர்களால் ஸேவிக்கப்பட்டவள்.*

ஸ்லோகம் 124:- (615) **आदिशक्तिः** - *ஆதி சக்தியாய் இருப்பவள். எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுவதற்குக் காரண-*

क्लीङ्कारी केवला गुह्या कैवल्य पददायिनी।
त्रिपुरा त्रिजगद्वन्द्या त्रिमूर्तिस्त्रिदशेश्वरी ।।१२५

க்லீங்காரீ கேவலா கு[3]ஹ்யா கைவல்ய பத[3] தா[3]யினீ।
த்ரிபுரா த்ரிஜகத்[3]வந்த்[3]யா த்ரிமூர்த்திஸ்த்ரித[3]ஶேஶ்வரீ।।

மாக முன்னமேயே இருப்பவள். (616) **अमेया** *- அளவிட முடியாதவள். (617)* **आत्मा** *- ஜீவாத்மாவாக இருப்பவள். (618)* **परमा** *- மிகச் சிறந்தவளாக இருப்பவள். ஆத்மா, பரமா, என்று கூறியதால் ஜீவாத்ம ரூபையாகவும், பரமாத்ம ரூபையாகவும் ஸ்ரீ அம்பாள் இருப்பதாகக் கொள்ள வேண்டும். (619)* **पावनाकृतिः** *- பரிசுத்தமாகச் செய்யும் சரீரத்தை உடையவள். ஸ்ரீ அம்பாளுடைய ச[1]ரண த்யானம் தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாபங்களையெல்லாம் போக்கிவிடும் என சாஸ்திரம் கூறியுள்ளது.*

कृतस्याखिल पापस्य ज्ञानतोऽज्ञानतोऽपिवा ।
प्रायश्चित्तं परं प्रोक्तं पराशक्तेः पदस्मृतिः ।।

க்ருதஸ்யாகி[2]ல பாபஸ்ய ஜ்ஞானதோऽஜ்ஞானதோऽபிவா ।
ப்ராயஶ்சித்தம் பரம் ப்ரோக்தம் பராஶக்தே: பத[3]ஸ்ம்ருதி:।।

भूतात्मनस्तपोविद्ये बुद्धेर्ज्ञानं विशो धनम् ।
क्षेत्रज्ञस्येश्वरज्ञानात् विशुद्धिः परमा मता ।।

பூ[4]தாத்மனஸ் தபோவித்[3]யே பு[3]த்[3]தே[4]ர் ஞானம் விஶோ த[4]னம்।
க்ஷேத்ரஜ்ஞஸ் யேஶ்வரஜ்ஞானாத் விஶுத்[3]தி[4]: பரமா மதா[1] ।।

சரீரத்தை தபஸ்ஸும், ஈஶ்வரபூஜையும் சுத்தம் செய்யும். புத்தியை ஞானம் சுத்தி செய்யும். ஜீவாத்மாவை ஈஶ்வர த்யானம் மிகவும் சுத்தி செய்யும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் அம்பாளை த்யானம் செய்தால் பரிசுத்தமாக ஆக்குகிறாள் எனக் கூறப்பட்டிருக்கிறது. (620) **अनेक कोटि ब्रह्माण्ड जननी** *- பல கோடி ப்ரும்மாண்டங்களுக்குத் தாயாராக இருப்பவள். (621)* **दिव्य विग्रहा** *- திவ்யமான (ரமணீயமான) தேஹத்தை உடையவள்.*

சுலோகம் 125:- (622) **क्लीङ्कारी** *- காம பீ[3]ஜ* **(कामबीजम्)** *ஸ்வரூபமாக இருப்பவள். க்லீம் என்பது காமபீ[3]ஜம் எனப்படும். (623)* **केवला** *- கேவல ஸ்வரூபத்தோடு இருப்பவள். வேறு எந்த சம்பந்தமும் இல்லாமல்*

त्र्यक्षरी दिव्य गन्धाढ्या सिन्दूर तिलकाञ्चिता।
उमा शैलेन्द्रतनया गौरी गन्धर्व सेविता ।।१२६

த்ர்யக்ஷரீ தி³வ்ய க³ந்தா⁴ட்⁴யா ஸிந்தூ³ர திலகாஞ்சிதா।
உமா ஶைலேந்த்³ரதனயா கௌ³ரீ
க³ந்த⁴ர்வஸேவிதா।।126

தனித்திருப்பவள் எனக் கருத்து. (624) **गुह्या** - ரஹஸ்யார்த்தமாக இருப்பவள். (625) **कैवल्य पददायिनी** - மோக்ஷத்தை அளிப்பவள். (626) **त्रिपुरा** - மும்மூர்த்திகளைக் காட்டிலும் முன்னமேயே இருப்பவள். (627) **त्रिजगद्वन्द्या** - மூன்று உலகங்களாலும் நமஸ்கரிக்கத் தகுந்தவள். (628) **त्रिमूर्तिः** - மூன்று வயதுள்ள கன்னிகையாக இருப்பவள்.

त्रिमूर्तिस्तु त्रिवर्षा स्यात् । த்ரிமூர்த்திஸ்து த்ரிவர்ஷா ஸ்யாத்।

என்று தௌ⁴ம்யர் கூறியுள்ளார். (629) **त्रिदशेश्वरी** - தேவர்களுக்கு ஈஶ்வரியாக இருப்பவள்.

ஶ்லோகம் 126:- (630) **त्र्यक्षरी** - மூன்று அக்ஷரங்களின் ஸ்வரூபமாக இருப்பவள். அதாவது சுத்த வித்யையான பா³லாமந்த்ர **(बालामन्त्रम्)** ரூபிணியாக இருப்பவள். எனக் கருத்து. கௌ³ட³பாத ஸூத்திரத்திலும் **(गौडपादसूत्रम्)**, **त्र्यक्षरी शुद्धविद्या कुमारी च**।த்ர்யக்ஷரீ ஶுத்³த⁴வித்³யா குமாரீ ச¹ । என்று கூறப்பட்டுள்ளது. (631) **दिव्य गन्धाढ्या** - திவ்யமான சந்தனம், குங்குமம், புஷ்பம், முதலிய வாஸனா த்ரவயங்களால் நிரம்பியவள். (632) **सिन्दूर तिलकाञ्चिता** - குங்கும திலகத்தால் அலங்கரிக்கப்பட்டவள். அல்லது சுமங்கலிகளாலும், யானைகளாலும் சூழப்பட்டவள் என அர்த்தம் கொள்ளலாம். ஸிந்தூர திலகத்தின் பொருளைக் கூறும் நிகண்டு³ வசனம் **(निकण्डुवचनम्)**:-

सिन्दूर तिलके नागे सिन्दूर तिलका स्त्रियाम् ।

ஸிந்தூ³ர தி¹லகே நாகே³ ஸிந்தூ³ர தி¹லகா ஸ்த்ரியாம் ।

(633) **उमा** - உமையாக இருப்பவள். (634) **शैलेन्द्रतनया** - பர்வதராஜனின் புத்ரியாக இருப்பவள். (635) **गौरी** - தங்க நிறமுள்ளவள். (636) **गन्धर्व सेविता** - விஶ்வாவஸு **(विश्वावसू)** முதலிய கந்தர்வர்களால் ஸேவிக்கப்பட்டவள்.

विश्वगर्भा स्वर्णगर्भा वरदा वागधीश्वरी ।
ध्यानगम्याऽपरिच्छेद्या ज्ञानदाज्ञानविग्रहा ।।१२७
सर्ववेदान्त संवेद्या सत्यानन्द स्वरूपिणी ।
लोपामुद्रार्चिता लीलाक्लृप्त ब्रह्माण्डमण्डला ।।१२८

விஶ்வக³ர்பா⁴ ஸ்வர்ண க³ர்பா⁴ வரதா³ வாக³தீ⁴ஶ்வரீ।
த்⁴யானக³ம்யாऽபரிச்சே²த்³யா ஞானதா³ ஜ்ஞானவிக்³ரஹா।।
ஸர்வவேதா³ந்த ஸம்வேத்³யா ஸத்யானந்த³ ஸ்வரூபிணீ।
லோபாமுத்³ரார்சிதா லீலா-
க்லுப்த ப்³ரஹ்மாண்ட³ மண்ட³லா ।। 128

சுலோகம் 127:- (637) **विश्वगर्भा** - *எல்லா உலகத்தையும் தன் கர்பத்தில் வைத்துக் கொண்டவள். (638)* **स्वर्णगर्भा** - *சோபனமான வர்ணங்களான மாத்ருகா வர்ணங்களின் கர்பத்தில் உள்ளவள். அதாவது மாத்ருகா வர்ணங்களால் நிரூபிக்கப்படுகிறவள் எனக் கருத்து. (639)* **अवरदा** - *அவரவர்களைக் கண்டிக்கிறவள். அவரவர்கள் என்றால் அனார்யர்களான அஸுரர்கள். (640)* **वागधीश्वरी** - *வாக்குகளுக்கெல்லாம் எஜமானியாக இருப்பவள். (641)* **ध्यानगम्या** - *தியானத்தால் அறியத் தகுந்தவள். (642)* **अपरिच्छेद्या** - *தேச காலங்களால் அளவிட முடியாதவள். அதாவது எங்கும் நிறைந்தவள் எனக் கருத்து. (663)* **ज्ञानदा** - *ஆத்ம ஞானத்தை அளிப்பவள். (664)* **ज्ञानविग्रहा** - *ஞானத்தையே சரீரமாக உடையவள்.*

சுலோகம் 128:- (645) **सर्ववेदान्त संवेद्या** - *எல்லா உபநிஷத்துக்களினாலும் நன்கு அறியத் தகுந்தவள். (646)* **सत्यानन्द स्वरूपिणी** - *ஸத்யத்தையும் ஆனந்தத்தையும் ஸ்வரூபமாக உடையவள். (647)* **लोपामुद्रार्चिता** - *அகஸ்த்யருடைய மனைவியான லோபாமுத்³ரையால் பூஜிக்கப்பட்டவள். (648)* **लीलाक्लृप्त ब्रह्माण्डमण्डला** - *விளையாட்டாகவே (அனாயாஸமாகவே) ப்ரும்மாண்ட மண்டலத்தை எல்லாம் நிர்மாணித்தவள்.*

சுலோகம் 129:- (649) **अदृश्या** - *கண்களுக்குப் புலப்படாதவள். (650)* **दृश्य रहिता** - *பார்க்கத் தகுந்த வஸ்துவின் ஸம்பந்தமில்லாதவள். (651)* **विज्ञात्री** - *நன்கு*

अदृश्या दृश्य रहिता विज्ञात्री वेद्यवर्जिता ।
योगिनी योगदा योग्या योगानन्दा युगन्धरा ।। १२९

इच्छाशक्ति ज्ञानशक्ति क्रियाशक्ति स्वरूपिणी।
सर्वाधारा सुप्रतिष्ठा सदसद्रूप धारिणी ।।१३०

அத்[3]ருஶ்யாத்[3]ருஶ்ய ரஹிதா விஞாத்ரீ வேத்[3]யவர்ஜிதா।
யோகி[3]னீ யோக[3]தா[3] யோக்[3]யா
யோகா[3]னந்தா[3] யுக[3]ந்த[4]ரா ।।129

இச்சா[2]ஶக்தி ஜ்ஞானஶக்தி க்ரியாஶக்தி ஸ்வரூபிணீ ।
ஸர்வாதா[4]ரா ஸுப்[1]ரதிஷ்டா[2] ஸத[3]ஸத் ரூப தா[4]ரிணீ ।।130

எல்லாவற்றையும் அறிகிறவள். (652) **वेद्यवर्जिता** - அறிய வேண்டிய வஸ்து ஒன்றும் இல்லாதவள். (653) **योगिनी** - யோக ஸ்வரூபமாக இருப்பவள். யோகம் என்பது ஏகத்வ பா[1]வனை **(एकत्वभावम्).** அந்த ரூபமாக ஸ்ரீ அம்பாள் இருக்கிறாள். (654) **योगदा** - யோகத்தைக் கொடுப்பவள். (ஏகத்வ பாவனையைத் தன் பக்தர்களுக்குக் கொடுப்பவள்) (655) **योग्या** - யோகத்திற்கு அர்ஹமானவள். (656) **योगानन्दा** - சிவ சக்தியின் சேர்க்கையில் ஆனந்தத்தை உடையவள். அல்லது யோகானந்த ந்ருஸிம்ம ரூபமாக இருப்பவள். (657) **युगन्धरा** - நுகத்தடியை தரிப்பவள். அதாவது காளைகள், குதிரைகள் பாரத்தை சுமப்பதற்கு நுகத்தடி தாங்குவதுபோல், உலகத்தைக் காக்கும் பாரத்தை ஸ்ரீ அம்பாள் வஹிக்கிறாள் எனக் கருத்து.

சுலோகம் 130:- (658) **इच्छाशक्ति ज्ञानशक्ति क्रियाशक्ति स्वरूपिणी** - 'இச்சா[2], க்ஞான, க்ரியா' சக்தி ஸ்வரூபமாக இருப்பவள். (659) **सर्वाधारा** - யாவருக்கும் ஆதாரமாக இருப்பவள். (660) **सुप्रतिष्ठा** - உலகத்திற்கு மங்களமான அதிஷ்டானமாக இருப்பவள். (661) **सदसद्रूप धारिणी** - ஸத்**(सत्)**, அஸத்**(असत्)**, இவ்விரண்டுகளின் ரூபத்தையும் தரிப்பவள்; அதாவது (ஸத்தான)ப்ரும்ம ரூபத்தையும். (அஸத்தான) ப்ரபஞ்ச ரூபத்தையும் தரிப்பவள்.

சுலோகம் 131:- (662) **अष्टमूर्तिः** - எட்டு விதமான மூர்த்திகளை உடையவள். அம்மூர்த்திகளை மத்ஸ்ய புராணம் கூறியுள்ளது.

अष्टमूर्तिरजा जैत्री लोकयात्रा विधायिनी ।
एकाकिनी भूमरूपा निर्द्वैता द्वैत वर्जिता ।।१३१
अन्नदा वसुदा वृद्धा ब्रह्मात्मैक स्वरूपिणी ।
बृहती ब्राह्मणी ब्राह्मी ब्रह्मानन्दा बलिप्रिया ।। १३२

அஷ்டமூர்த்திரஜா ஜைத்ரீ லோக யாத்ரா விதா4யினீ।
ஏகாகினீ பூ4மரூபா நிர்த்3வைதா த்3வைத வர்ஜிதா ।। 131
அன்னதா3 வஸுதா3 வ்ருத்3தா4
ப்3ரஹ்மாத்மைக ஸ்வரூபிணீ ।
ப்3ருஹதீ ப்3ராஹ்மணீ ப்3ராஹ்மீ
ப்3ரஹ்மானந்தா3 ப3லிப்ரியா ।।132

लक्ष्मीर्मेधा धरा पुष्टिः गौरी तुष्टिः प्रभा धृतिः ।
एताभिः पाहि तनुभिः अष्टाभिर्मां सरस्वती ।।

லக்ஷ்மீர்மேதா4 த4ரா புஷ்டி: கௌ3ரீ து1ஷ்டி: ப்ரபா4 த்4ருதி:।
ஏதாபி4: பா1ஹி தநுபி4: அஷ்டாபி4ர்மாம் ஸரஸ்வதீ ।।

(663) **अजाजैत्री** - *அவித்யையை ஜெயித்தவள். (664)* **लोकयात्रा विधायिनी** - *பதினான்கு லோகங்களின் ரக்ஷணத்தையும் செய்கிறவள். (665)* **एकाकिनी** - *ஒருவளாக இருப்பவள். அத்3விதீயையாக* **(अद्वितीया)** *இருப்பவள். (666)* **भूमरूपा** - *(ஆகிலும்) பூ4மரூபியாக (பல ரூபமாக) இருப்பவள். தேவீ புராணத்தில் கா3ர்ஹபத்யாக்3னி* **(गार्हपत्याग्नि)** *ஒன்றாக இருந்த போதிலும் த3க்ஷிணாக்னி, ஆஹவனீயம் என்ற ஸ்தா2ன பே4த3த்தால்* **(स्थानभेदम्)** *வேறு பெயர் முதலியவற்றை அடைவது போல், ஸ்ரீ அம்பாள், ரூபம் முதலிய பே4த3த்தால்* **(भेदम्)** *பூ4மாவாக (பலவிதமாக) இருப்பதாய்க் கூறப்படுகிறது.*

यथा वा गार्हपत्योऽग्निः अन्य संज्ञान्तरं व्रजेत्।
दक्षिणा हवनीयादि ब्रह्मादिषु तथैव सा ।।

யதா2வா கா3ர்ஹபத்யோऽக்னி: அன்ய ஸம்ஞாந்தரம் வ்ரஜேத்।
த3க்ஷிணா ஹவனீயாதி3 ப்3ரஹ்மாதி3ஷு ததை2வ ஸா ।।

என்று (667) **निर्द्वैता** - *த்3வைத பாவத்திலிருந்து* **(द्वैतभावम्)** *விடுபட்டவள். (668)* **द्वैत वर्जिता** - *எக்காலத்திலும் இரண்டாவது வஸ்து என்பது இல்லாதவள்.*

भाषारूपा बृहत्सेना भावाभाव विवर्जिता ।
सुखाराध्या शुभकरी शोभना सुलभागतिः ।। १३३

பா^{4}ஷாரூபா ப்^{3}ருஹத்ஸேனா பா^{4}வாபா^{4}வ விவர்ஜிதா।
ஸுகா^{2}ராத்^{4}யா ஶுப^{4}க^{1}ரீ ஶோப^{4}னா ஸுலபா^{4}க^{3}தி^{1}: ।।133

ஸ்லோகம் 132:- (669) **अन्नदा** - ஜனங்களுக்கு அன்னமளிப்பவள். (670) **वसुदा** - செல்வம். ரத்னம் முதலியவற்றை அளிப்பவள். (671) **वृद्धा** - வயது முதிர்ந்தவள். (672) **ब्रह्मात्मैक स्वरूपिणी** - ப்ரும்ம, ஜீவ ஐக்ய ஸ்வரூபமாக இருப்பவள். ப்ரும்ஹத்துடன் ஜீவாத்மாக்கள் ஒன்றாக இருக்கும் ஸ்வரூபமாக இருப்பவள். (673) **बृहती** - முப்பத்தாறு அக்ஷரங்களுள்ள ப்^{3}ருஹதீச^{2}ந்த^{3}ஸ்ஸாக **(बृहतीछन्दस्)** இருப்பவள்; அல்லது ப்^{3}ருஹதீஸாமாவாக **(बृहतीसामा)** இருப்பவள். தலவகாரர்களுடைய ஶாகை^{2}யில் **(शाखा)** உது^{3}த்யம், சித்ரம், இந்த இரண்டு ரிக்குகளிலும் கா^{3}னம் செய்யப்படும் ஸாமம் ஜ்யேஷ்ட^2 ஸாமம் எனப்படும். **(सत्वं नः चित्र)** 'ஸத்வம் ந: சித்ர' என்ற ரிக்கில் கானம் செய்யப்படும் ஸாமம், ப்^{3}ருஹத்ஸாமம் எனப்படும். (674) **ब्राह्मणी** - ப்ராம்மண ஸ்த்ரீ ரூபமாக இருப்பவள்; அல்லது பரமசிவன் ப்ராம்மண ஜாதியாகையால் அவருடைய மனைவி **त्वं देवेषु ब्राह्मणोऽसि ।** த்வம் தே^{3}வேஷு ப்^{3}ராஹ்மணோऽஸி । நீர் தேவர்களுக்குள் ப்ராம்மணனாய் இருக்கிறீர் என்று சா^{2}ந்தோ^{3}க்ய உபநிஷத்திலும் **(छान्दोक्य उपनिषत्)** கூறப்பட்டுள்ளது. (675) **ब्राह्मी** - ப்ரும்மாவின் மனைவியான ஸரஸ்வதியாக இருப்பவள். (676) **ब्रह्मानन्दा** - ப்ரும்மானந்தத்துடன் கூடியவள். (677) **बलिप्रिया** - பூஜையில் கொடுக்கும் ப^{3}லியில் ப்ரியம் உள்ளவள்.

ஸ்லோகம் 133:- (678) **भाषारूपा** - ஸம்ஸ்க்ருதம், ப்ராக்ருதம் **(प्राकृतम्)** முதலிய பாஷைகளின் ரூபமாக இருப்பவள். (679) **बृहत्सेना** - மிகப் பெரியதான சதுரங்க^3 ஸேனையுடன் கூடியவள். (680) **भावाभाव विवर्जिता** - உத்பத்தி, வினாஶம் இல்லாதவள். (681) **सुखाराध्या** - ஸு^{2}கமாக ஆராதிக்கத் தகுந்தவள்; அதாவது உபவாஸம் முதலியவற்றால் காயக்லேசங்களை அடையாமல் (சரீரத்தை வருத்தாமல்) ஆராதிக்கலாம். (682) **शुभकरी** - பக்தர்களுக்கு மங்களத்தைச் செய்கிறவள். (683) **शोभना सुलभागतिः** - சோபனமாயும், சுலபமாய் அடையக்கூடியதாயும் உள்ள பயனாக இருப்பவள்.

राजराजेश्वरी राज्यदायिनी राज्य वल्लभा ।
राजत्कृपा राजपीठनिवेशित निजाश्रिता ।।१३४
राज्यलक्ष्मीः कोशनाथा चतुरङ्ग बलेश्वरी ।
साम्राज्य दायिनी सत्यसन्धा सागर मेखला ।।१३५
दीक्षिता दैत्य शमनी सर्वलोक वशङ्करी ।
सर्वार्थ दात्री सावित्री सच्चिदानन्द रूपिणी ।।१३६

ராஜராஜேஶ்வரீ ராஜ்யதா[3]யினீ ராஜ்ய வல்லபா[4] ।
ராஜத்க்ருபா ராஜபீட[2] நிவேஶித நிஜாஶ்ரிதா ।। 134
ராஜ்யலக்ஷ்மீ: கோ[1]ஶநாதா[2] சதுரங்க[3] ப[3]லேஶ்வரீ ।
ஸாம்ராஜ்ய தா[3]யினீ ஸத்யஸந்தா[4] ஸாக[3]ர மேக[2]லா ।।135
தீ[3]க்ஷிதா தை[3]த்ய ஶமனீ ஸர்வலோக வஶங்கரீ ।
ஸர்வார்த[2] தா[3]த்ரீ ஸாவித்ரீ ஸச்சிதானந்த[3] ரூபிணீ ।।136

ஸ்லோகம் 134:- (684) **राजराजेश्वरी** - *ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவான குபேரனுக்கு ஈஶ்வரியாக இருப்பவள். (685)* **राज्यदायिनी** - *கைலாஸம், வைகுண்டம் முதலிய ராஜ்யத்தைக் கொடுப்பவள். (686)* **राज्य वल्लभा** - *ராஜ்யத்தை ஆளும் தனது பக்தர்களான ராஜாக்களிடத்தில் ப்ரியம் கொண்டவள். (687)* **राजत्कृपा** - *சோபிக்கின்ற க்ருபையுடன் கூடியவள். (688)* **राजपीठ निवेशित निजाश्रिता** - *ராஜாக்களுடையவும், இந்திராதி தேவர்களுடையவும் ஸிம்ஹாஸனங்களில் அமர்த்தப்பட்ட, தன்னை அண்டிய பக்தர்களை உடையவள்.*

ஸ்லோகம் 135:- (689) **राज्यलक्ष्मी** - *ராஜ்யத்திற்கு அபிமானி தேவதையான லக்ஷ்மியாக இருப்பவள். (690)* **कोशनाथा** - *ராஜாங்கத்திலுள்ள பொக்கிஷத்திற்கு எஜமானியாக இருப்பவள். (691)* **चतुरङ्ग बलेश्वरी** - *சதுரங்க பலங்களுக்கெல்லாம் ஈஶ்வரியாக இருப்பவள். (692)* **साम्राज्य दायिनी** - *பக்தர்களுக்கு ஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவள். (693)* **सत्यसन्धा** - *யாராலும் மீற முடியாத கட்டளையை உடையவள். (694)* **सागर मेखला** - *ஸமுத்ரங்களை ஒட்டியாணமாக உடைய பூமியின் ரூபமாக இருப்பவள்.*

ஸ்லோகம் 136:- (695) **दीक्षिता** - *தீ[3]க்ஷிதனாக இருப்பவள்.*

देशकालापरिच्छिन्ना सर्वगा सर्वमोहिनी ।
सरस्वती शास्त्रमयी गुहाम्बा गुह्यरूपिणी ।। १३७

தே³ஶ காலாபரிச்சி²ன்னா ஸர்வகா³ ஸர்வமோஹினீ।
ஸரஸ்வதீ ஶாஸ்த்ரமயீ கு³ஹாம்பா³ கு³ஹ்யரூபிணீ ।।137

சிஷ்யர்களுக்கு மந்த்ரோபதேசம் செய்து பாபங்களைப் போக்கி ஞானத்தை அளிப்பவள் என்ற பொருளை பரானந்த³ தந்திரத்திலும் **(परानन्द तन्त्रम्)** கூறியுள்ளது:-

शिष्येभ्यो मन्त्र दानेन पापं क्षपयतीतिवा ।
दीयते कृपया शिष्ये क्षीयते पापसंशयः ।
तेन दीक्षेति कथिता . . . . ।।

ஶிஷ்யேப்⁴யோ மந்த்ர தா³னேன பாபம் க்ஷபயதீதிவா।
தீ³யதே க்ருபயா ஶிஷ்யே க்ஷீயதே பாபஸம்ஶய: ।
தேன தீ³க்ஷேதி க¹தி²தா . . . . ।।

(696) **दैत्य शमनी** - ப⁴ண்டா³ஸுரன் முதலியவர்களை வதம் செய்தவள். *(697)* **सर्वलोक वशङ्करी** - எல்லா உலகங்களையும் தனக்கு வசமாகச் செய்து கொள்ளுகிறவள். *(698)* **सर्वार्थ दात्री** - நான்கு புருஷார்த்தங்களையும் **(धर्मार्थकाममोक्षम्)** கொடுப்பவள். *(699)* **सावित्री** - ஸாவித்ரீ ரூபமாக இருப்பவள். உலகத்தை உண்டுபண்ணுவதால் ஸ்ரீபரமசிவனுக்கு ஸவிதா **(सविता)** என்று பெயர். அவருடைய பத்னியாக இருப்பதால் இந்த பெயர் வந்தது. *(700)* **सच्चिदानन्द रूपिणी** - ஸத்¹ **(सत्)**, சித்¹ **(चित्)**, ஆனந்தம் இவற்றைத் தன் ரூபமாக உடையவள். ஸத்¹ என்பது நித்யம் என்பதையும், சித்¹ என்பது ஞானத்தையும், ஆனந்த³ம் என்பது துக்க ஸம்பந்தமற்ற பரமஸுகத்தையும் குறிக்கும்.

சுலோகம் 137:- *(701)* **देशकालापरिच्छिन्ना** - தேசம், காலம் இவைகளுக்கு உட்படாதவள். *(702)* **सर्वगा** - எங்கும் இருப்பவள். *(703)* **सर्वमोहिनी** - யாவரையும் மோஹிக்கச் செய்கிறவள். அதாவது பொய்யான வஸ்துக்கள் எல்லாம் ஸத்யமெனத் தோன்றுவது ஸ்ரீ அம்பாளின் மாயையால்தான். *(704)* **सरस्वती** - ஞானாபிமானி தேவதையான ஸரஸ்வதீ ரூபமாக இருப்பவள். *(705)* **शास्त्रमयी** - சாஸ்திரங்களுக்குள் பூர்ணமாக வ்யாபித்திருப்பவள். *(706)* **गुहाम्बा** - ஸ்கந்தருடைய

सर्वोपाधि विनिर्मुक्ता सदाशिव पतिव्रता ।
संप्रदायेश्वरी साध्वी गुरुमण्डल रूपिणी ।। १३८
कुलोत्तीर्णा भगाराध्या माया मधुमती मही ।
गणांबा गुह्यकाराध्या कोमलाङ्गी गुरुप्रिया ।।१३९

ஸர்வோபாதி[4] விநிர்முக்தா ஸதா[3]ஶிவ பதிவ்ரதா ।
ஸம்ப்ரதா[3]யேஶ்வரீ ஸாத்[4]வீ கு[3]ருமண்ட[3]ல ரூபிணீ ।।138
கு[1]லோத்தீர்ணா ப[4]கா[3]ராத்[4]யா மாயா மது[4]மதீ மஹீ ।
க[3]ணாம்பா[3] கு[3]ஹ்யகாராத்[4]யா கோ[1]மலாங்கீ[3] கு[3]ருப்ரியா ।।

(முருகனுடைய) தாயாக இருப்பவள். (707) **गुह्यरूपिणी** *- பரம ரஹஸ்யமான ரூபத்தை உடையவள். த்ருஷ்டிக்கு கோசரமில்லாதவள்* **(दृष्टिगोचरम्).**

சுலோகம் 138:- (708) **सर्वोपाधि विनिर्मुक्ता** *- எல்லா உபாதிகளிலிருந்தும் விடுபட்டவள். 706-வது அர்ச்சனையில் சொல்லிய ஸ்கந்தருக்குத் தாயாக ஆனது முதலிய உபாதிகளால் விடுபட்டவள் எனக் கருத்து. (709)* **सदाशिव पतिव्रता** *- ஸதாசிவனை விட்டு என்றும் பிரியாத மனைவி; அதாவது ஸதாசிவன் என்றால் பரப்ருமம். அந்த ப்ருமமத்தின் சக்தியே பதிவ்ரதையான ஸ்ரீ அம்பாள் எனக் கருத்து. (710)* **संप्रदायेश्वरी** *- முறைப்படி சிஷ்யர்களுக்கு மந்த்ரோபதேசம் செய்து வரும் ஸம்ப்ரதாயத்திற்கு ஈஶ்வரீ. (711)* **साधु** *- (ஸாது[4]) மேலே சொல்லியதற்கு உசிதமாக இருப்பவள். இங்கு 'ஸாது' என்ற பதம் நபும்ஸகம், ஸாத்[4]வி என்ற சொல்லை* **((साधु** *- ஸாது) (* **ई** *- ஈ) என்று இரண்டு நாமாவாகப் பிரிக்க வேண்டும். பின்னால் வரும்* **साध्वी सद्गतिदायिनी ।** **ஸாத்[4]வீ ஸத்[3]க[3]திதா[3]யினீ ।** *என்ற இடத்தில் 'ஸாத்[4]வீ' எனத் திரும்பச் சொன்ன தோஷம் வராது. இங்கு* **(साधुने नमः । ஸாது[4]னே நம: ।** *) என்று அர்ச்சனையில் சொல்ல வேண்டும். (712)* **ई** *- ஈ, நாராயணனுடைய ஸஹோதரியாக இருப்பவள். 'அ' என்பது விஷ்ணு. 'ஈ' என்பது அவரைச் சேர்ந்தவள். அதாவது ஸஹோதரி. அர்ச்சனையில்* **(यै नमः** *- யை நம:) என்று சொல்ல வேண்டும். (713)* **गुरुमण्डल रूपिणी** *- குருக்களால் பாரம்பரிய க்ரமமாக நிரூபணம் செய்யப்பட்ட ஸ்வரூபத்தை உடையவள். அதாவது பரமசிவன் முதல் நமது குரு வரை உள்ள பரம்பரையின் மூலம் அறிய வேண்டியவள்.*

இது புஸ்தகத்தில் எழுதிப் படிக்கக் கூடியதல்ல. இதையே யோகினீ ஹ்ருதயத்திலும் **(योगिनीहृदयम्)- कर्णात् कर्णोपदेशेन संप्राप्तं अवनीतले ।** கர்ணாத் கர்ணொபதே[3]ஶேன ஸம்ப்ராப்தம் அவனீதலே । என்று கூறப்பட்டுள்ளது.

சுலோகம் 139:- (714) **कुलोत्तीर्णा** - குல (இந்திரிய ஸமூஹங்களால்) உத்தீர்ணா (அறிய முடியாதவள்) இது முதல் நான்கு நாமாக்களில் ரஹஸ்யமாக இருப்பது சொல்லப்பட்டிருக்கிறது. (715) **भगाराध्या** - சூரிய மண்டலத்தில் உபாஸிக்கத் தகுந்தவள். அந்த மண்டலத்தில் உபாஸிப்பதும் ரஹஸ்யமாகவே ஆகும். `ப[4]க:[3] **(भग:)**' என்றால் சூரியன் எனப் பொருள். (716) **माया** - மாயாரூபிணியாக இருப்பவள். வேண்டிய பொருளை நன்கு உணர முடியாமல் மறைக்கும் சக்திக்கு மாயா எனப் பெயர். மேலும் இல்லாத பல வஸ்துக்களை இருப்பது போல் காட்டவும் செய்யும் இந்திரஜாலம், ஸ்வப்னம் முதலியவற்றைப் போல் ஆகும். இதையே தேவீ புராணத்திலும்,

विचित्र कार्यकरणा अचिन्तित फलप्रदा ।
स्वप्नेन्द्र जालवल्लोक माया तेन प्रकीर्तिता ।।

விசித்ர கார்யகரணா அசிந்தித ப[2]லப்ரதா[3] ।
ஸ்வப்நேந்த்[3]ர ஜாலவல்லோக மாயா தேன ப்ரகீர்த்திதா।।

என்று கூறப்பட்டிருக்கிறது. (717) **मधुमती** - மதுவுடன் இருப்பவள். ஸ்ரீஅம்பாளுக்கு பூஜா காலங்களில் கொடுக்கும் உபஹாரங்களில் தேன் ஒன்றாகையால் அதோடு இருப்பவள் எனக் கருத்து. (718) **मही** - பூமி ரூபமாக இருப்பவள். (719) **गणांबा** - பரமசிவனின் (பூத) கணங்களுக்குத் தாயாராக இருப்பவள். அல்லது கணபதிக்குத் தாயாராக இருப்பவள். (720) **गुह्यकाराध्या** - குஹ்யகர் என்று பெயருள்ள தேவ விசேஷர்களால் ஆராதிக்கத் தகுந்தவள். (721) **कोमलाङ्गी** - ஸுகுமாரமான அங்கங்களை உடையவள். (722) **गुरुप्रिया** - குருவினிடத்தில் பிரியம் உள்ளவள். அல்லது குருவான ப்ருஹஸ்பதியினிடத்தில் பிரியமுள்ளவள். அல்லது குருவின் (ஆசார்யனின்) மனைவியாக இருப்பவள்.

சுலோகம் 140:- (723) **स्वतन्त्रा** - (பிறருடைய உதவியைக் கோராமல்) ஸ்வதந்திரமாக இருப்பவள். (724) **सर्वतन्त्रेशी** - ஸகல அறுபத்தி நான்கு (64) தந்திரங்களையும்

स्वतन्त्रा सर्वतन्त्रेशी दक्षिणामूर्ति रूपिणी ।
सनकादिसमाराध्या शिवज्ञान प्रदायिनी ॥१४०
चित्कलानन्दकलिका प्रेमरूपा प्रियङ्करी ।
नामपारायणप्रीता नन्दिविद्या नटेश्वरी ॥१४१

ஸ்வதந்த்ரா ஸர்வதந்த்ரேஶீ த[3]க்ஷிணாமூர்த்தி ரூபிணீ।
ஸனகாதி[3] ஸமாராத்[4]யா ஶிவ ஜ்ஞான ப்ரதா[3]யினீ ॥ 140
சித்கலானந்த[3] க[1]லிகா[1] ப்ரேமரூபா ப்ரியங்கரீ ।
நாம பாராயண ப்ரீதா நந்தி[3]வித்[3]யா நடேஶ்வரீ ॥ 141

ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் செய்பவள். (725) **दक्षिणामूर्ति रूपिणी** - *த[3]க்ஷிணாமூர்த்தி ரூபமாக இருப்பவள். பிரும்மா, விஷ்ணு முதலிய தேவர்களுக்கு உபதேசம் செய்யும், தெற்கு நோக்கி இருக்கும் சிவனுடைய மூர்த்திக்கு த[3]க்ஷிணாமூர்த்தி எனப் பெயர். (726)* **सनकादि समाराध्या** - *ஸனகர் முதலிய முனிவர்களால் நன்கு ஆராதிக்கத் தகுந்தவள். இவர்கள் ஸ்ரீ அம்பிகா பக்தர்களில் முக்கியமானவர்கள். (727)* **शिवज्ञान प्रदायिनी** - *தன் பக்தர்களுக்கு சிவ விஷயகமான பூரணத்தை அளிப்பவள்.*

சுலோகம் 141:- (728) **चित्कला** - *ஞானகலையாக இருப்பவள். அதாவது அந்தஹ்கரணத்திலிருக்கும்* **(अन्तःकरणम्)** *ஞான-மாவது ஸ்ரீ அம்பாளின் அம்சமாகும். (729)* **आनन्दकलिका** - *ஜீவனின் ஆனந்தத்தின் அம்சமாக இருப்பவள். முன் நாமத்தில் ஜீவனின் ஞானமானது ஸ்ரீ அம்பாளின் ஒரு அம்சமென்று சொன்னது போல் இந்த நாமத்திலும் ஜீவனின் ஆனந்தமானது ஸ்ரீ அம்பாளின் ஒரு பாகமெனச் சொல்லப்பட்டது. (730)* **प्रेमरूपा** - *பக்தி ஸ்வரூபமாக இருப்பவள். (731)* **प्रियङ्करी** - *பிரியத்தைச் செய்கிறவள். ஜீவ சைதன்யமாக இருந்து கொண்டு, சக்ஷுராதி (கண் முதலிய) இந்திரியங்களின் மூலமாக ஸ்ரக் சந்தனாதிகளில் பிரியத்தை உண்டுபண்ணுகிறவள். (732)* **नाम पारायण प्रीता**- *தனது நாமங்களைப் பாராயணம் செய்வதால் பிரீதி அடைபவள். இந்த நாமத்தின் சூக்ஷுமமான பொருளை உபாஸகர்களிடமிருந்து தெரிந்து கொள்ளவும். (733)* **नन्दिविद्या** - *நந்திகேஶ்வரரால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபமாக இருப்பவள். (734)* **नटेश्वरी** - *சி[1]த்ஸபேஶரான* **(चित्सभेशः-** *சிதம்பர நடரான) பரமேஶ்வரருடைய பத்னீ.*

मिथ्या जगदधिष्ठाना मुक्तिदा मुक्तिरूपिणी।
लास्यप्रिया लयकरी लज्जारंभादि वन्दिता ।।१४२

மித்²யா ஜக³த³தி⁴ஷ்ட்டா²னா முக்திதா³ முக்திரூபிணீ।
லாஸ்யப்ரியா லயகரீ லஜ்ஜாரம்பா⁴தி³ வந்தி³தா ।।142

ச்லோகம் 142:- (735) **मिथ्या जगदधिष्ठाना** - பொய்யான உலகத்திற்கு அதிஷ்டானமாய் (**भानाधिकरण** பா⁴நாதி⁴கரண) (தோற்றத்திற்கு இருப்பிடமாய்) இருப்பவள். (736) **मुक्तिदा** - மோக்ஷத்தை அளிப்பவள்.

तस्माद्विमुक्तिमन्विच्छन् पार्वती परमेश्वरीम् ।
आश्रयेत् सर्वभूतानां आत्मभूतां शिवात्मिकाम्।।

தஸ்மாத் விமுக்தி மன்விச்ச²ன் பார்வதீ பரமேஶ்வரீம் ।
ஆஶ்ரயேத் ஸர்வபூ⁴தானாம் ஆத்மபூ⁴தாம் ஶிவாத்மிகாம்।।

(கூர்மபுராணம்)

नामानि ये महेशस्य गृणन्त्यज्ञानतोपि वा ।
तेषामपि शिवो मुक्तिं ददाति किमतः परम् ।।

நாமானி யே மஹேஶஸ்ய க்³ருணந்த்யஞானதோபி வா ।
தேஷாமபி ஶிவோ முக்திம் த³தா³தி கிமத¹: பரம் ।।

(சிவபுராணம்)

ஆதலால் மோக்ஷத்தை விரும்புகிறவன், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக இருக்கும் பரமேஶ்வரியான பார்வதியை ஆஶ்ரயிக்க வேண்டும். மேலும் சிவ நாமங்களை, அறியாமல் ஒருவன் ஜபித்தாலும் சிவன் முக்தியை அளிப்பார். இதற்கு மேல் என்ன வேண்டும்? (737) **मुक्तिरूपिणी** - முக்தி ஸ்வரூபமாக இருப்பவள். (738) **लास्यप्रिया** - லாஸ்யத்தில் பிரியமுள்ளவள். ஸ்த்ரீகள் செய்யும் நர்த்தனத்திற்கு 'லாஸ்யம்' எனப் பெயர். புருஷர்கள் செய்யும் நர்த்தனத்திற்குத் 'தா¹ண்ட³வம்' எனப் பெயர். (739) **लयकरी** - லயத்தைச் செய்கிறவள். சித்தத்தை ஒரே விதமாய் நிலை நிறுத்துவதற்கு லயமெனப் பெயர். **दशध्यान समो लयः** த³ஶத்⁴யான ஸமோ லய: இந்த லயத்தை பத்து த்யானத்திற்கு ஸமமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லது லயம் என்றால் கா³னம், நர்த்தனம், இவ்விரண்டையும் தாளங்களால் ஸம காலமாகச் செய்வதாகும். இதைச் செய்கிறவள் என்றும் சொல்லலாம்.

स्वतन्त्रा सर्वतन्त्रेशी दक्षिणामूर्ति रूपिणी ।
सनकादिसमाराध्या शिवज्ञान प्रदायिनी ।।१४०
चित्कलानन्दकलिका प्रेमरूपा प्रियङ्करी ।
नामपारायणप्रीता नन्दिविद्या नटेश्वरी ।।१४१

ஸ்வதந்த்ரா ஸர்வதந்த்ரேஶீ த[3]க்ஷிணாமூர்த்தி ரூபிணீ।
ஸனகாதி[3] ஸமாராத்[4]யா ஶிவ ஜ்ஞான ப்ரதா[3]யினீ ।। 140
சித்கலானந்த[3] க[1]லிகா[1] ப்ரேமரூபா ப்ரியங்கரீ ।
நாம பாராயண ப்ரீதா நந்தி[3]வித்[3]யா நடேஶ்வரீ ।। 141

ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் செய்பவள். (725) **दक्षिणामूर्ति रूपिणी** - த[3]க்ஷிணாமூர்த்தி ரூபமாக இருப்பவள். பிரும்மா, விஷ்ணு முதலிய தேவர்களுக்கு உபதேசம் செய்யும், தெற்கு நோக்கி இருக்கும் சிவனுடைய மூர்த்திக்கு த[3]க்ஷிணாமூர்த்தி எனப் பெயர். (726) **सनकादि समाराध्या** - ஸனகர் முதலிய முனிவர்களால் நன்கு ஆராதிக்கத் தகுந்தவள். இவர்கள் ஸ்ரீ அம்பிகா பக்தர்களில் முக்கியமானவர்கள். (727) **शिवज्ञान प्रदायिनी** - தன் பக்தர்களுக்கு சிவ விஷயகமான பூரணத்தை அளிப்பவள்.

ஸ்லோகம் 141:- (728) **चित्कला** - ஞானகலையாக இருப்பவள். அதாவது அந்தஹ்கரணத்திலிருக்கும் **(अन्तःकरणम्)** ஞானமாவது ஸ்ரீ அம்பாளின் அம்சமாகும். (729) **आनन्दकलिका** - ஜீவனின் ஆனந்தத்தின் அம்சமாக இருப்பவள். முன் நாமத்தில் ஜீவனின் ஞானமானது ஸ்ரீ அம்பாளின் ஒரு அம்சமென்று சொன்னது போல் இந்த நாமத்திலும் ஜீவனின் ஆனந்தமானது ஸ்ரீ அம்பாளின் ஒரு பாகமெனச் சொல்லப்பட்டது. (730) **प्रेमरूपा** - பக்தி ஸ்வரூபமாக இருப்பவள். (731) **प्रियङ्करी** - பிரியத்தைச் செய்கிறவள். ஜீவ சைதன்யமாக இருந்து கொண்டு, சக்ஷுராதி (கண் முதலிய) இந்திரியங்களின் மூலமாக ஸ்ரக் சந்தனாதிகளில் பிரியத்தை உண்டுபண்ணுகிறவள். (732) **नाम पारायण प्रीता**- தனது நாமங்களைப் பாராயணம் செய்வதால் பிரீதி அடைபவள். இந்த நாமத்தின் சூக்ஷ்மமான பொருளை உபாஸகர்களிடமிருந்து தெரிந்து கொள்ளவும். (733) **नन्दिविद्या** - நந்திகேஶ்வரரால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபமாக இருப்பவள். (734) **नटेश्वरी** - சி[1]த்ஸபேஶரான **(चित्सभेशः-** சிதம்பர நடரான) பரமேஶ்வரருடைய பத்னீ.

मिथ्या जगदधिष्ठाना मुक्तिदा मुक्तिरूपिणी।
लास्यप्रिया लयकरी लज्जारंभादि वन्दिता ।।१४२

மித்²யா ஜக³த³தி⁴ஷ்ட்டா²னா முக்திதா³ முக்திரூபிணீ।
லாஸ்யப்ரியா லயகரீ லஜ்ஜாரம்பா⁴தி³ வந்தி³தா ।।142

ஶ்லோகம் 142:- (735) **मिथ्या जगदधिष्ठाना** - பொய்யான உலகத்திற்கு அதிஷ்டானமாய் (**भानाधिकरण** பா⁴நாதி⁴கரண) (தோற்றத்திற்கு இருப்பிடமாய்) இருப்பவள். (736) **मुक्तिदा** - மோக்ஷத்தை அளிப்பவள்.

तस्माद्विमुक्तिमन्विच्छन् पार्वती परमेश्वरीम् ।
आश्रयेत् सर्वभूतानां आत्मभूतां शिवात्मिकाम्।।

தஸ்மாத் விமுக்தி மன்விச்ச²ன் பார்வதீ பரமேஸ்வரீம் ।
ஆஶ்ரயேத் ஸர்வபூ⁴தானாம் ஆத்மபூ⁴தாம் ஶிவாத்மிகாம்।।

(கூர்மபுராணம்)

नामानि ये महेशस्य गृणन्त्यज्ञानतोपि वा ।
तेषामपि शिवो मुक्तिं ददाति किमतः परम् ।।

நாமானி யே மஹேஶஸ்ய க்³ருணந்த்யஞானதோபி வா ।
தேஷாமபி ஶிவோ முக்திம் த³தா³தி கிமத¹: பரம் ।।

(சிவபுராணம்)

ஆதலால் மோக்ஷத்தை விரும்புகிறவன், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக இருக்கும் பரமேஸ்வரியான பார்வதியை ஆஶ்ரயிக்க வேண்டும். மேலும் சிவ நாமங்களை, அறியாமல் ஒருவன் ஜபித்தாலும் சிவன் முக்தியை அளிப்பார். இதற்கு மேல் என்ன வேண்டும்? (737) **मुक्तिरूपिणी** - முக்தி ஸ்வரூபமாக இருப்பவள். (738) **लास्यप्रिया** - லாஸ்யத்தில் பிரியமுள்ளவள். ஸ்த்ரீகள் செய்யும் நர்த்தனத்திற்கு 'லாஸ்யம்' எனப் பெயர். புருஷர்கள் செய்யும் நர்த்தனத்திற்குத் 'தா¹ண்ட³வம்' எனப் பெயர். (739) **लयकरी** - லயத்தைச் செய்கிறவள். சித்தத்தை ஒரே விதமாய் நிலை நிறுத்துவதற்கு லயமெனப் பெயர். **दशध्यान समो लयः** த³ஶத்⁴யான ஸமோ லய: இந்த லயத்தை பத்து த்யானத்திற்கு ஸமமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லது லயம் என்றால் கா³னம், நர்த்தனம், இவ்விரண்டையும் தாளங்களால் ஸம காலமாகச் செய்வதாகும். இதைச் செய்கிறவள் என்றும் சொல்லலாம்.

भवदा वसुधावृष्टिः पापारण्य दवानला ।
दौर्भाग्यतूलवातूला जराध्वान्त रविप्रभा ।। १४३

ப[4]வதா[3] வஸுதா[4]வ்ருஷ்டி: பாபாரண்ய த[3]வானலா ।
தௌ[3]ர்பா[4]க்[3]யதூ[1]லவாதூலா ஜராத்[4]வாந்த ரவிப்ரபா[4] ।। 143

---

(740) **लज्जा** - *லஜ்ஜா ரூபமாக இருப்பவள். லஜ்ஜை, நாணம் (அடக்கம்) இது பதிவ்ரதைகளுக்குச் சிறந்த லக்ஷணமாகும். (741)* **रंभादि वन्दिता** - *ரம்பை முதலிய அப்ஸரஸ் ஸ்த்ரீகளால் நமஸ்கரிக்கப்பட்டவள்.*

சுலோகம் 143:- (742) **भवदावसुधावृष्टिः** - *ஸம்ஸாரமாகிற காட்டுத்தீயிற்கு அம்ருதவர்ஷம் போல் இருக்கிறவள். 'தா'வ-* **दाव**' *என்ற பதத்திற்கு காடு என்ற பொருளும் உண்டு. எப்படி காடு மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருக்குமோ அது போல் ஸம்ஸாரமும் வளர்ந்து கொண்டிருக்கும். அந்த வளர்ச்சிக்கு ஸ்ரீ அம்பாள் அம்ருத வர்ஷம் போல் இருக்கிறாளென்றும் இந்த நாமத்திற்குப் பொருள் உண்டு. (743)* **पापारण्य दवानला** - *பாபமாகிற அரண்யத்திற்குக் காட்டுத் தீயாக இருப்பவள். பாபத்தைக் காடு எனக் கூறியதன் நோக்கம் பாபத்திற்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்யாவிடில், காட்டிலுள்ள மரம், செடி, கொடிகள் மேல்மேலும் தளிர், பூ, பழம், அதிலிருந்து உதிர்ந்த விதை, அதிலிருந்து கிளம்பிய செடிகள் என்று வளர்ந்தே வருமோ, அதுபோல் துக்கங்கள் மேல்மேலும் வளர்ந்து விடும். காட்டிலுள்ள மரம் முதலியவற்றை வெட்டி அழிப்பது போல், துக்கம் வராமல் பாபங்களைப் போக்கிக் கொள்ள ஸ்ரீ அம்பாளை உபாஸிக்க வேணுமென்பது கருத்து. இந்த நாமத்திற்கு கங்கா ரூபமாக ஸ்ரீ அம்பாள் இருக்கிறாள் என்றும் பொருள் கொள்ளலாம். இதை ப்[3]ருஹந்நாரதீ[3]யத்தில்* **(बृहन्नारदीयम्)**-

गङ्गायाः परमं नाम पापारण्य दवानलः ।
भवव्याधिहरी गङ्गा तस्मात्सेवा प्रयत्नतः ।।

க[3]ங்கா[3]யா: பரமம் நாம பாபாரண்ய த[3]வானல: ।
ப[4]வவ்யாதி[4]ஹரீ க[3]ங்கா[3] தஸ்மாத் ஸேவா ப்ரயத்னத: ।।

என்று, மேலும் பஞ்ச[1]த[3]ஶாக்ஷரீ **(पञ्चदशाक्षरी)** *மந்திரத்தை ஸ்நானம் செய்து ஜலத்தில் நின்று கொண்டு ஆயிரத்தெட்டு (1008) ஆவர்த்தி ஜபம் செய்தால் ஸகலவிதமான பாபங்களும் நீங்கிவிடும் என்று ப்[3]ரும்மாண்ட[3] புராணத்தில் கூறியுள்ளது-*

भाग्याब्धि चन्द्रिका भक्तचित्तकेकि घनाघना।
रोगपर्वत दंभोली मृत्यु दारुकुठारिका ।।१४४
महेश्वरी महाकाली महाग्रासा महाशना ।
अपर्णा चण्डिका चण्डमुण्डासुर निषूदिनी।।१४५

பா⁴க்யாப்³தி⁴ சந்த்³ரிகா ப⁴க்த சித்தகே¹கி க⁴னா க⁴னா।
ரோக³பர்வத த³ம்போ⁴லீ ம்ருத்யு தா³ரு குடாரிகா ।। 144
மஹேஶ்வரீ மஹாகாளீ மஹாக்³ராஸா மஹாஶனா ।
அபர்ணா சண்டி³கா சண்ட³ முண்டா³ஸுர நிஷூதி³னீ।।

इदं च शृणु देवेन्द्र रहस्यं परमं महत् ।
सर्वेषामेव पापानां यौगपद्येन नाशनम् ।।
भक्ति श्रद्धा समायुक्तः स्नात्वान्तर्जल संस्थितः।
अष्टोत्तर सहस्रं तु जपेत् पञ्च दशाक्षरीम् ।
आराध्य परमां शक्तिं मुच्यते सर्व किल्बिषैः ।।

இத³ம் ச ஶ்ருணு தே³வேந்த்³ர ரஹஸ்யம் பரமம் மஹத் ।
ஸர்வேஷாமேவ பாபானாம் யௌக³பத்³யேன நாஶனம் ।।
ப⁴க்தி ஶ்ரத்³தா⁴ ஸமாயுக்த: ஸ்னாத்வாந்தர்ஜல ஸம்ஸ்தி²த:।
அஷ்டோத்தர ஸஹஸ்ரம் து ஜபேத் பஞ்ச த³ஶாக்ஷரீம் ।
ஆராத்⁴ய பரமாம் ஶக்திம் முச்யதே ஸர்வ கில்பி³ஷை: ।।

என்று. *(744)* **दौर्भाग्यतूलवातूला** - கெட்ட பாக்யமாகிற பஞ்சுப் பொதிக்கு சுழல் காற்றாக இருப்பவள். *(745)* **जराध्वान्त रविप्रभा** - கிழத்தன்மை என்கிற இருட்டை போக்குவதில் சூர்யனின் காந்திபோல் **(कान्ति)** இருப்பவள்.

சுலோகம் *144:- (746)* **भाग्याब्धि चन्द्रिका** - பாக்யமாகிற ஸமுத்திரத்திற்கு சந்திரிகை போல் இருப்பவள். எப்படி சந்திரிகை ஸமுத்ரத்தைப் பெருகச் செய்யுமோ, அவ்விதம் ஸ்ரீ அம்பாள் ஸகல பாக்யத்தையும் பெருகச் செய்பவள் எனக் கருத்து. *(747)* **भक्तचित्त केकि घनाघना**- பக்தர்களுடைய மனங்களாகிற மயிலுக்கு மேக ஸ்வரூபமாக இருப்பவள். *(748)* **रोग पर्वत दंभोली** - ரோகங்களாகிற மலைகளுக்கு வஜ்ராயுதமாக இருப்பவள். *(749)* **मृत्यु दारु कुठारिका** - எமனாகிற மரத்தை வெட்டுவதில் கோடரி போன்றவள்.

சுலோகம் 145:- (750) **महेश्वरी** - மஹத்தான ஐச்வர்யமாக இருப்பவள். (751) **महाकाली** - மஹாகாளியாக இருப்பவள். காலனான எமனையும் அழிப்பவள் என்று கருத்து. உஜ்ஜயினீயிலிருக்கும் ஸ்ரீ பரமேஶ்வரருக்கு மஹாகாளர் என்று பெயர். அங்குள்ள ஸ்ரீ அம்பாளுக்கு மஹாகாளீ என்று பெயர். மேலும் காளிதாஸனும் ஸ்ரீ அம்பாள் காலனை நிக்ரஹம் செய்கிறவள் என்று கூறிய ச்லோகம்-

एतदम्ब सदिदं तु नेति नः शङ्कया हृदि विकल्प लक्षणः ।

यो यमः स खलु काल्यते त्वया भूतसंयमन केलिकोविदः ।।

ஏதத^{3}ம்ப^{3} ஸதி^{3}த^{3}ம் து நேதி ந:
ஶங்கயா ஹ்ருதி^{3} விகல்ப லக்ஷண: ।
யோ யம: ஸ க^{2}லு கால்யதே த்வயா
பூ^{4}தஸம்யமன கேலிகோவித^{3}: ।।

(752) **महाग्रासा** - பெரிதான கபளத்தை உடையவள். ப்ரளய காலத்தில் எல்லா உலகத்தையும் சாப்பிடுவதற்குக் கபளமாக (பிடியாக) செய்து கொள்பவள் என்று கருத்து. (753) **महाशना** - பெரியதான சாப்பாட்டை உடையவள். ப்ரளய காலத்தில் உலகத்தைத் தன்னிடத்தில் லயிக்கும்படி செய்கிறவள். (754) **अपर्णा** - (பக்தர்களுடைய) கடனைப் போக்கினவள். இங்கு ஸ்ரீ பாஸ்கரராயர் தேவீ ஸ்தவத்தில் சொல்லியிருக்கும் ஓர் ச்லோகத்தை ஆதாரமாக வைத்து கொண்டு உபாஸகர்கள் ஓர் சரித்திரத்தைக் கூறுவது வழக்கம். ஸ்ரீ பாஸ்கரராயர் காவேரி தீரத்திலுள்ள உத்தம க்ஷேத்திரமாகிய மத்^{4}யார்ஜுனத்தில் **(मध्यार्जुनम्)** (திருவிடைமருதூரில்) ஸ்ரீ ப்^{3}ருஹத் ஸுந்த^{3}ரகுசாம்பிகையுடன் **(बृहत्सुन्दरकुचाम्बिका)** கூடிய ஸ்ரீ மஹாலிங்கத்தை தர்சனம் செய்துகொண்டு ஸ்ரீ சக்ரத்தில் ஸ்ரீ அம்பாளையும் ஆராதிப்பதற்காக அங்கு வந்து வஸித்தார்களாம். இப்படிப் பலகாலம் வஸிக்கும் போது அந்த ஊரில் ஒருவரிடம் ஸ்ரீ அம்பாளுடைய பூஜைக்கு தங்கபாத்திரம், ஆபரணம் செய்யக் கடன் வாங்கியிருந்தார். அந்தக் கடன் கொடுத்தவர் சுக்ரவாரத்தன்று (வெள்ளிக்கிழமை) ஸ்ரீ அம்பாளை பூஜை செய்து, ஸஹஸ்ரநாம அர்ச்சனம் செய்து கொண்டிருக்கும் ஸ்ரீ பாஸ்கரராயரை, 'வாங்கிய கடனைக் கொடுக்காமல் பூஜை செய்கிறீரே! கடன் பத்திரம் காலாவதியாகப் போகிறதே!' என்று கடும் சொற்களைச் சொல்லிவிட்டு வீடு சென்றார். அப்பொழுது ஸஹஸ்ரநாமத்தில் 754-வது நாமாவான இந்த

'அபர்ணாயை நம' என்ற நாமத்தை உச்சரிக்கும் ஸமயமாம். உடன் அந்த நாமத்தைச் சொல்லாமல் ஸ்ரீ அம்பாளைப் பார்த்து ஸ்ரீ பாஸ்கரராயர் 'உன் நாமத்தை ஜபிக்கும் என்னை உனது பூஜைக்காக வாங்கிய கடனைக்கூட திருப்பிக் கொடுக்க முடியாமல் செய்திருக்கிறாயே! உனக்கு 'அபர்ணை' என்ற பெயரானது ரூடி^{4}யாக இருப்பது (அர்த்தத்துடன் கூடியிருப்பது) சுமையாகத் தோன்றவில்லையா?' என்ற பொருளுள்ள இந்த ச்லோகத்தைச் சொன்னாராம்-

ऋणमिष्ट मदत्वैव त्वन्नाम जपतो मम ।
शिवे कथमपर्णोति रूढिर्भारायते न ते ।।

ருணமிஷ்ட்ட மத^{3}த்வைவ த்வன் நாம ஜபதோ மம।
ஶிவே கத^{2}மபர்ணேதி ரூடி^{4}ர்பா^{4}ராயதே ந தே ।।

இதுதான் அவர் செய்த தேவீ ஸ்தவத்திலுள்ள ச்லோகம். இந்த ஸமயத்தில் கடன் கொடுத்தவருடைய மனைவி பத்திரத்தை வரவு வைத்துத் தன் புருஷன் கொடுக்கச் சொன்னதாய் ஸ்ரீ பாஸ்கரராயரிடம் கொடுத்தாளாம். யார் பணம் கொடுத்தார்? எப்படி வரவு வைத்து கொண்டீர்கள்? என்று அந்த அம்மாளை ஸ்ரீ பாஸ்கரராயர் கேட்டார். அந்த அம்மாள் 'தங்கள் மனைவிதான் பணம் கொண்டுவந்து கொடுத்தாள். என் பர்த்தா அதை வரவு வைத்து கொண்டு பத்திரத்தை தங்களிடம் கொடுக்கச் சொன்னார்' என்று சொன்னாள். என் மனைவி பணம் வாங்கிவர வட நாட்டுக்கல்லவா சென்றிருக்கிறாள்! அவள் வர இரண்டு மூன்று மாதங்கள் ஆகுமே! இப்பொழுது எப்படி வந்தாள்? என்று கேட்டார். 'எங்கள் வீட்டில் வந்து பாருங்கள்' என்று தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அங்கு போய்ப் பார்த்தால் அந்த அம்மாளைக் காணோம். பிறகுதான் ஸ்ரீ அம்பாளே அந்த ரூபத்தில் நேரில் வந்து கொடுத்திருப்பதாகத் தெரிந்து ஸ்ரீ பாஸ்கரராயர் ஆச்சர்யப்பட்டார். (755) **चण्डिका** - கோபம் உள்ளவள். அதாவது பக்தி அற்றவர்களிடத்தில் கோபம் கொள்ளுகிறவள் என்று கருத்து.

(756) **चण्डमुण्डासुर निषूदिनी** - சண்ட^{3}ன், முண்ட^{3}ன், என்ற அசுரர்களை வதம் செய்தவள்.

சுலோகம் 146:- (757) **क्षराक्षरात्मिका** - அழிவுள்ள ப்ரபஞ்சரூபமாயும், அழிவற்ற பரமாத்ம ஸ்வரூபமாயும்

क्षराक्षरात्मिका सर्वलोकेशी विश्वधारिणी ।
त्रिवर्गदात्री सुभगा त्र्यम्बका त्रिगुणात्मिका ।।१४६
स्वर्गापवर्गदा शुद्धा जपापुष्प निभाकृतिः ।
ओजोवती द्युतिधरा यज्ञरूपा प्रियव्रता ।।१४७

க்ஷராக்ஷராத்மிகா ஸர்வ லோகேஶீ விஶ்வதா[4]ரிணீ ।
த்ரிவர்க[3]தா[3]த்ரீ ஸுப[4]கா[3] த்ர்யம்ப[3]கா த்ரிகு[3]ணாத்மிகா ।।
ஸ்வர்கா[3]பவர்க[3]தா[3] ஶுத்[3]தா[4] ஜபாபுஷ்ப நிபா[4]க்ருதி: ।
ஓஜோவதீ த்[3]யுதித[4]ரா யஜ்ஞரூபா ப்ரியவ்ரதா[1] ।। 147

உள்ளவள். (758) **सर्वलोकेशी** *- எல்லா உலகங்களுக்கும் ஈஶ்வரியாக இருப்பவள். (759)* **विश्वधारिणी** *- எல்லா உலகங்களையும் தாங்குகிறவள். (760)* **त्रिवर्गदात्री** *- தர்மம், அர்த்தம், காமம், இம்மூன்றின் ஸமூஹத்தைக் கொடுப்பவள். (761)* **सुभगा** *- ஸௌபாக்யத்துடன் கூடியவள். (762)* **त्र्यम्बका** *- முக்கண்ணை உடையவள். அதாவது சந்திரன், சூரியன், அக்னி, இம் மூன்று பேர்களையும் ஸ்ரீ அம்பாள் கண்களாக உடையவள் எனக் கருத்து (763)* **त्रिगुणात्मिका** *- முக்குணங்களின் ஸாம்யமான ரூபத்தை உடையவள்.*

சுலோகம் 147:- (764) **स्वर्गापवर्गदा** *- ஸ்வர்க ஸுகத்தையும், மோக்ஷ ஸுகத்தையும் கொடுப்பவள். (765)* **शुद्धा** *- அவித்யையினால் ஏற்பட்ட அழுக்கற்றவள். (766)* **जपापुष्प निभाकृतिः** *- செம்பரத்தைப்பூ போன்ற நிறத்தை உடையவள். (767)* **ओजोवती** *- ஓஜஸ்ஸோடு கூடியவள். சரீரத்திலுள்ள ஒன்பது தாதுக்களில் எட்டாவது தாதுவுக்கு ஓஜஸ் என்று பெயர். (768)* **द्युतिधरा** *- காந்தியை* **(कान्ति)** *தரிப்பவள். (769)* **यज्ञरूपा** *- யாகங்களின் ரூபமாக இருப்பவள். (770)* **प्रियव्रता** *- வ்ரதங்களில் ப்ரியமுள்ளவள். அதாவது எல்லா தேவதைகளையும் குறித்துச் செய்யும் வ்ரதங்களினால் ஸ்ரீ அம்பாள் திருப்தி அடைகிறாள் எனக் கருத்து.*

சுலோகம் 148:- (771) **दुराराध्या** *- சிரமப்பட்டு ஆராதிக்கத் தகுந்தவள். அதாவது சபலேந்திரியர்களால்* **(चपलेन्द्रियाः)** *ஆராதிக்கவே முடியாதவள் எனக் கருத்து. ஸௌந்த[3]ர்யலஹரியிலும்* **तरल करणानां असुलभा** *தரல*

दुराराध्या दुराधर्षा पाटली कुसुम प्रिया ।
महती मेरुनिलया मन्दार कुसुमप्रिया ।। १४८
वीराराध्या विराड्रूपा विरजा विश्वतोमुखी।
प्रत्यग्रूपा पराकाशा प्राणदा प्राणरूपिणी ।। १४९

து3ராராத்4யா து3ராத4ர்ஷா பாடலீ குஸும ப்ரியா ।
மஹதீ மேருநிலயா மந்தா3ர குஸும ப்ரியா ।। 148
வீராராத்4யா விராட்3ரூபா விரஜா விஶ்வதோமுகீ2 ।
ப்ரத்யக்3ரூபா பராகாஶா ப்ராணதா3 ப்ராணரூபிணீ ।। 149

கரணானாம் அஸுலபா4 எனக் கூறப்பட்டுள்ளது. *(772)* **दुराधर्षा** - ஜெயிக்க முடியாதவள். *(773)* **पाटली कुसुम प्रिया** - பாதிரிப் புஷ்பங்களில் பிரியமுள்ளவள். பாத்3ம புராணத்திலும் ஸ்ரீ பரமசிவன், பில்வமரத்திலும், ஸ்ரீ பார்வதி, பாதிரி மரத்திலும் வஸிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. **श्री वृक्षे शङ्करो देवः पाटलायान्तु पार्वती** ஸ்ரீ வ்ருக்ஷே ஶங்கரோ தே3வ: பாடலாயாந்து பார்வதீ என்று. *(774)* **महती** - மஹதீயாக இருப்பவள். நாரத முனிவரின் வீணா வாத்யத்துக்கு மஹதீ என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள். *(775)* **मेरुनिलया** - மேரு பர்வதத்தை இருப்பிடமாகக் கொண்டவள். *(776)* **मन्दार कुसुमप्रिया** - மந்தார புஷ்பத்தில் பிரியமுள்ளவள். மந்தாரமென்பது தேவ லோகத்திலுள்ள மரம்.

சுலோகம் 149:- *(777)* **वीराराध्या** - வீரர்களால் ஆராதிக்கத் தகுந்தவள். ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்களுக்கு வீரர்கள் என்று பெயர். *(778)* **विराड्रूपा** - விராட் ஸ்வரூபமாக இருப்பவள். ஸ்தூல சரீர ஸமஷ்ட்யபிமானியான ஈஶ்வரனுக்கு 'விராட்' என்று பெயர். *(779)* **विरजा** - பாபம் இல்லாதவள். அல்லது உத்கல தேசத்திலுள்ள விரஜா என்னும் பெயருள்ள க்ஷேத்திரத்திலிருக்கும் ஸ்ரீ அம்பாளுக்கு ''விரஜா'' எனப் பெயர். அந்த அம்பாளாக இருப்பவள்-

विरजे विरजा माता ब्रह्मणा संप्रतिष्ठिता ।
यस्याः संदर्शनान्मर्त्यः पुनात्या सप्तमं कुलम् ।।

விரஜே விரஜா மாதா1 ப்3ரஹ்மணா ஸம்ப்ரதிஷ்ட்டி2தா ।
யஸ்யா: ஸந்த3ர்ஶனான் மர்த்ய: புனாத்யா ஸப்தமம் குலம் ।।

அந்த க்ஷேத்திரத்திலுள்ள விரஜாம்பாளை தர்சித்தால் ஏழுதலைமுறைகளில் உள்ள பாபம் விலகி விடுகிறதென்று ப்ரும்மாண்ட புராணம் கூறுகிறது. (780) **विश्वतोमुखी** - எல்லாப் பக்கங்களிலும் முகம் உள்ளவள். (**विश्वतश्चक्षुरुत विश्वतो मुखः** விஶ்வதஶ் சக்ஷுருத விஶ்வதோ முக2:) என்று வேதமும் கூறியுள்ளது. இதனால் உபாஸகர்கள் எந்த இடத்தில் விரும்பினாலும் த்யானத்தில் விஷயமாகக் கூடிய ரூபத்துடன் இருப்பவள் என்பது வெளியாகிறது. (781) **प्रत्यग्रूपा** - உள் நோக்கிப் பார்க்கக்கூடிய ரூபத்துடன் இருப்பவள். (782) **पराकाशा** - சிறந்த ஆகாச ஸ்வரூபமாக இருப்பவள். சி1த்3க4ன சந்திரிகையில் (**चिद्घनचन्द्रिका**) ஹ்ருதயத்திலிருக்கும் சூர்யசந்திரருக்கு நடுவிலுள்ள ஆகாசத்தில் அக்னி இருக்கிறது. அதன் சிகரத்திற்கு மேலிருக்கும் ஆகாசமே பராகாஶம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

हृत्क्रियात्म शशि भानु मध्यगः खेचरत्यनल दृष्टि धाम यः ।
यत्तदूर्ध्व शिखरं परं नभस्तत्र दर्शय शिवं त्वमम्बिके ।।

ஹ்ருத்க்ரியாத்ம ஶஶி பா4னு மத்4யக3:
கே2சரத்யனல த்3ருஷ்டி தா4ம ய:।
யத்ததூ3ர்த்4வ ஶிக2ரம் பரம் நப4ஸ்-
தத்ர த3ர்ஶய ஶிவம் த்வமம்பி3கே ।।

ஸ்வச்ச2ந்த3 ஸங்க்3ரஹத்திலோவெனில் (**स्वच्छन्दसंग्रहम्**)

द्वादशान्तं ललाटोर्ध्वं कपालोर्ध्वा वसानकम् ।
द्वयङ्गुलोर्ध्वं शिरोदेशात्परं व्योम प्रकीर्तितम् ।।

த்3வாத3ஶாந்தம் லலாடோர்த்4வம் கபாலோர்த்4வா வஸானகம்।
த்3வயங்கு3லோர்த்4வம் ஶிரோ-
தே3ஶாத்பரம் வ்யோம ப்ரகீர்த்திதம் ।।

லலாடத்திற்கு மேல், கபாலத்தின் உச்சிவரையிலுள்ள இடத்திற்கு த்3வாத3ஶாந்த ஸ்தா2னமென்றும் (**द्वादशान्तस्थानम्**), சிரோதேசத்திற்குமேல் இரண்டு அங்குலம் வரையிலுள்ள ஆகாசத்திற்கே ''பராகாஶம்'' எனச் சொல்லப்பட்டிருக்கிறது. (783) **प्राणदा** - ப்ராணனை அளிப்பவள். ப்ராணன் என்றால் பஞ்ச ப்ராணன்களுக்கும் இந்திரியங்களுக்கும் பெயர். (784) **प्राणरूपिणी** - ப்ராண ரூபமாக இருப்பவள். ப்ராண என்றால் பரமாத்மாவுக்குப் பெயரென சா2ந்தோ3க்யமும் (**छान्दोक्यम्**), கௌஷீதி3கீ

मार्ताण्ड भैरवाराध्या मन्त्रिणी न्यस्त राज्यधूः।
त्रिपुरेशी जयत्सेना निस्त्रैगुण्या परापरा ॥१५०

மார்தாண்ட[3] பை[4]ரவாராத்[4]யா
மந்த்ரிணீ ந்யஸ்த ராஜ்யதூ[4]: ।
த்ரிபுரேஶீ ஜயத்ஸேனா நிஸ்த்ரைகு[3]ண்யா பராபரா ॥150

ப்ராஹ்மணமும் (कौषिदिकी ब्राह्मणम्) கூறுகிறது. அதே போல் மனுவும் இந்த பரமாத்மாவை சிலர் அக்னியென்றும், மனுப்ரஜாபதி என்றும், சிலர் இந்திரன் என்றும், சிலர் ஸ்ரீ அம்பாளென்றும் கூறுகின்றனர் எனக் கூறியுள்ளார்.

சுலோகம் 150:- (785) **मार्ताण्ड भैरवाराध्या** - மார்த்தாண்ட[3] பை[4]ரவரால் ஆராதிக்கத் தகுந்தவள். அம்பாள் வஸிக்கும் ஸ்ரீபுரத்தில் 22, 23 இவ்விரண்டு ப்ராகாரங்களின் நடுவில் மார்தாண்ட[3] பை[4]ரவரென்ற ஸ்ரீ அம்பாள் உபாஸகர் இருக்கிறார். அவரால் உபாஸிக்கப்படுகின்றவள். (786) **मन्त्रिणी न्यस्त राज्यधूः** - மந்திரிணியிடத்தில் வைக்கப்பட்ட ராஜ்ய பா[4]ரத்தை உடையவள். (787) **त्रिपुरेशी** - த்ரிபுரேஶீ என்ற தேவியாக இருப்பவள். ஸ்ரீ சக்ரத்தின் ஒன்பதாவது பாகங்களில் 'ஸர்வாஶாபரிபூரகம்' என்ற சக்ரத்தில் **(सर्वाशापरिपूरक चक्रम्)** அதிஷ்டானமாக இருக்கும் தேவிக்கு த்ரிபுரேசி என்று பெயர். (788) **जयत्सेना** - (ப[4]ண்டா[3]சுரன் முதலிய அசுரர்களை வதம் செய்து) ஜெயத்துடன் விளங்கும் ஸேனைகளை உடையவள். (789) **निस्त्रैगुण्या** - மூன்று குணங்களற்ற ரூபத்துடன் இருப்பவள். (790) **परापरा** - பராபரையாக இருப்பவள். சிறந்த வஸ்துக்கள், கீழ்ப்பட்ட வஸ்துக்கள் என்ற எல்லா ரூபமாயும் உள்ள ப்ரும்மமாக இருப்பவள் எனக் கருத்து.

சுலோகம் 151:- (791) **सत्य ज्ञानानन्द रूपा** - ஸத்யம், ஞானம், ஆனந்தம் என்ற ரூபமாக இருப்பவள். (792) **सामरस्य परायणा** - ஸாமரஸ்யத்தையே சிறந்த ஸ்தானமாக உடையவள். கூடுதல், குறைவு, இவைகள் இல்லாமல் ஸமமான ரஸத்தோடிருக்கும் பா[4]வமானது **(भावम्)** ஸாமரஸ்யம் எனப்படும். இவ்விதமான ஸாமரஸ்யத்தோடு சிவசக்திகள் இருப்பதால் அதுவே அம்பாளுடைய உத்க்ருஷ்டமான ஸ்தானமாகச் சொல்லப்பட்டது. அல்லது அமரர்களுடன்

सत्यज्ञानानन्दरूपा सामरस्य परायणा ।
कपर्दिनी कलामाला कामधुक् कामरूपिणी ।।१५१
कलानिधिः काव्यकला रसज्ञा रसशेवधिः ।
पुष्टा पुरातना पूज्या पुष्करा पुष्करेक्षणा ।।१५२

ஸத்ய ஜ்ஞானானந்த[3]ரூபா ஸாமரஸ்ய பராயணா ।
க[1]பர்தி[3]னீ கலாமாலா காமது[4]க் காமரூபிணீ ।। 151
கலாநிதி[4]: காவ்யகலா ரஸஜ்ஞா ரஸ ஶேவதி[4]: ।
புஷ்டா புராதனா பூஜ்யா புஷ்கரா புஷ்கரேக்ஷணா ।। 152

கூடிய தேவ லோகத்திற்கு ஆச்ரயமாக இருப்பவள். (793) **कपर्दिनी** - க[1]பர்தீ[3] என்ற ஜடாதாரியான பரமசிவனுடைய பத்னீ. (794) **कलामाला** - (அறுபத்து நான்கு) கலைகளையும் மாலையாக உடையவள். (795) **कामधुक्** - காமங்களை (வேண்டியவற்றையெல்லாம்) கொடுப்பவள். (796) **कामरूपिणी** - இஷ்டப்பட்ட ரூபங்களை உடையவள்.

சுலோகம் 152:- (797) **कलानिधिः** - கலைகளுக்கு பொக்கிஷம் போன்றவள். (798) **काव्यकला** - காவ்யங்களை இயற்றும் கலாரூபமாக இருப்பவள். (799) **रसज्ञा** - ஶ்ருங்காரம் முதலிய ரஸங்களை அறிந்தவள். (800) **रसशेवधिः** - ரஸமான ப்ரும்மானந்தத்திற்கு நிதி[4]யாக (**निधि**) இருப்பவள். (801) **पुष्टा** - (ப்ராம்மணர்களால்) போஷிக்கப்பட்டவள். **ब्रह्मायुष्मत्तद् ब्राह्मणैरायुष्मत्** ப்[3]ரஹ்மாயுஷ்மத் தத்[3] ப்[3]ராஹ்மணைராயுஷ்மத்) என்று ஶ்ருதி கூறுகிறது. (802) **पुरातना** - யாவருக்கும் முன்பே உள்ளவள். (803) **पूज्या** - (அதனால்) பூஜிக்கத் தகுந்தவள். (804) **पुष्करा** - புஷ்கரம் என்னும் தீர்த்த ரூபமாக இருப்பவள். இந்த புஷ்கர தீர்த்தம் அஜ்மீருக்கு சமீபத்திலுள்ளது. இதில் ஸ்நானம் கிடைப்பது மிகவும் அரிது என ஸ்ரீ மஹாபாரதம் கூறுகிறது. **पुष्करन्तु सुदुष्करं** புஷ்கரந்து ஸுது[3]ஷ்கரம் என்று. (805) **पुष्करेक्षणा** - தாமரை போன்ற கண்களை உடையவள்.

சுலோகம் 153:- (806) **परस्मै ज्योतिः** - சிறந்த ஜ்யோதிஸ்ஸாக இருப்பவள். (807) **परस्मै धाम** - சிறந்த ஸ்தானமாக இருப்பவள். அல்லது சிறந்த தேஜஸ்ஸாக இருப்பவள். (808) **परमाणुः** - மிகவும் ஸூக்ஷ்மமான அணுவாக இருப்பவள். (809) **परात्परा** - சிறந்தவர்களான பிரும்ம, விஷ்ணு, ருத்ரர்களைக்

परंज्योतिः परन्धाम परमाणुः परात्परा ।
पाशहस्ता पाशहन्त्री परमन्त्र विभेदिनी ।। १५३
मूर्ताऽमूर्ता नित्यतृप्ता मुनिमानस हंसिका ।
सत्यव्रता सत्यरूपा सर्वान्तर्यामिनी सती।। १५४

பரஞ்ஜ்யோதி: பரந்தா⁴ம பரமாணு: பராத்பரா ।
பாஶஹஸ்தா பாஶஹந்த்ரீ பரமந்த்ர விபே⁴தி³னீ ।। 153
மூர்தா'ऽமூர்தா' நித்யத்ருப்தா முநிமானஸ ஹம்ஸிகா।
ஸத்யவ்ரதா ஸத்ய ரூபா ஸர்வாந்தர்யாமினீ ஸதீ' ।। 154

காட்டிலும் சிறந்தவள். (810) **पाशहस्ता** - பாஶத்தை கையில் உடையவள். இடது பக்கத்துக் கீழ் கையில் பாசக்கயிற்றை தரிப்பவள். (811) **पाशहन्त्री** - பாசங்களைப் போக்குகிறவள். அவித்யை, ஆசை முதலியன பாசங்களாகும். (812) **परमन्त्र विभेदिनी** - சத்ருகளால் ஆபி'சாரம் **(आभिचारम्)** செய்வதற்காகச் செய்த மந்திரங்களை அடியோடு நீக்குகிறவள்.

ஶ்லோகம் 154:- (813) **मूर्ता** - ரூபத்துடன் கூடிய எல்லா வஸ்துக்களாயும் இருப்பவள். (814) **अमूर्ता** - ரூபமில்லாத வாயு, ஆகாசம் முதலிய வஸ்துக்களாயும் இருப்பவள். (815) **अनित्यतृप्ता** - அநித்யமான வஸ்துக்களால் திருப்தி அடைபவள். அதாவது புஷ்பம், பழம், குங்குமம், வஸ்திரம், சந்தனம், நைவேத்யம், முதலிய பொருள்கள் சில தினங்களானால் வீணாக ஆகிவிடலாம். அப்படிப்பட்ட உபசார வஸ்துக்களால் அம்பாள் திருப்தியை அடைகிறாள் என்றதால் ஸ்ரீ அம்பாளுடைய ஸௌலப்⁴யமும் **(सौलभ्यम्),** கல்யாண குணங்களும், கருணை முதலியவைகளும் வெளியாகிறது. பக்தி ஒன்றே போதும் என்பதே இதன் கருத்து. (816) **मुनिमानस हंसिका** - முனிவர்களுடைய மனமாகிற மானஸ ஸரஸ்ஸில் ஹம்ஸப்பேடுபோல் இருப்பவள். (817) **सत्यव्रता** - ஸத்யமான நற்பயன்களை தன்னை வ்ரதங்களால் அனுஷ்டிப்பவர்களுக்கு சீக்கிரமாக அளிப்பவள். (818) **सत्यरूपा** - முக்காலத்திலும் அழியாத ரூபத்தை உடையவள். (819) **सर्वान्तर्यामिणी** - எல்லோருடைய அந்த:கரணங்களையும் **(अन्तःकरणम्)** நியமனம் செய்கிறவளாக இருப்பவள். (820) **सती** - சிறந்த பதிவ்ரதையாக இருப்பவள்.

ब्रह्माणी ब्रह्मजननी बहुरूपा बुधार्चिता ।
प्रसवित्री प्रचण्डाज्ञा प्रतिष्ठा प्रकटाकृतिः ।। १५५

ப்[3]ரஹ்மணீ ப்[3]ரஹ்ம ஜனனீ ப[3]ஹுரூபா பு[3]தா[4]ர்ச்சிதா।
ப்ரஸவித்ரீ ப்ரசண்டா[3]ஞா ப்ரதிஷ்ட்டா[2]ப்ரகடாக்ருதி:।।155

ஸ்லோகம் 155:- (821) **ब्रह्माणी-** *ப்ரும்ம பத்னியான ஸரஸ்வதி ரூபமாக இருப்பவள். (822)* **ब्रह्मणी** *- முக்தர்களால் அடையத் தகுந்த பிரும்மமாக இருப்பவள். (823)* **जननी** *- (எல்லா உலகிற்கும்) தாயாக இருப்பவள். (824)* **बहुरूपा** *- (ப[1]ண்ட[3]ன் முதலிய அஸுரர்களை வதம் செய்வதற்காக) பலவித ரூபங்களை உடையவள். (825)* **बुधार्चिता** *- ஞானிகளால் அர்ச்சிக்கப்பட்டவள். (826)* **प्रसवित्री** *- யாவரையும் படைத்தவள். (827)* **प्रचण्डा** *- மிகவும் கோபம் கொண்ட சிறந்த தூதர்களை உடையவள். எவனுக்கு சிறிதளவாவது கோபமில்லையோ, அந்த அரசனைக் கண்டு ப்ரஜைகள் பயப்பட மாட்டார்கள். எவனைக் கண்டு ஜனங்கள் பயப்படவில்லையோ, அவன் எப்படி நீதியை ரக்ஷிக்க முடியும்? இப்படி காமந்தகர் கூறிய ச்லோகம்-*

न यस्य कोपोऽणुरपि प्रजास्तस्य न बिभ्यति ।
सैतां नीतिं कथं रक्षेत्प्रजा यस्य न बिभ्यति ।।

ந யஸ்ய கோபோऽணுரபி ப்ரஜாஸ் தஸ்ய ந பி[3]ப்[4]யதி ।
ஸைதாம் நீதிம் கத[2]ம் ரக்ஷேத் ப்ரஜா யஸ்ய ந பி[3]ப்[4]யதி।।

என்று (828) **आज्ञा** *- (விதி[4]நிஷேத[3] ரூபமான -* **विधिनिषेदरूपम्***) கட்டளையாக இருப்பவள். (829)* **प्रतिष्ठा** *- எல்லா உலகத்திற்கும் அதிஷ்டானமாக இருப்பவள். (830)* **प्रकटाकृतिः** *- எல்லோருடைய அனுபவத்திற்கும் தெரிவதான ஸ்வரூபத்தை உடையவள். ஸூத[1] ஸம்ஹிதையிலும்* **(सूतसम्हिता)**-

तमहं प्रत्ययव्याजात् सर्वे जानन्ति जन्तवः ।
तथापि शिवरूपेण न विजानन्ति मायया ।।

தமஹம் ப்ரத்யய வ்யாஜாத் ஸர்வே ஜானந்தி ஜந்தவ:।
ததா[2]பி ஶிவ ரூபேண ந விஜானந்தி மாயயா ।।

அந்த பரப்ரம்மத்தை 'நான்' எனத் தோன்றும் அறிவின் காரணமாய் எல்லோரும் உணருகின்றனர். ஆனால்

प्राणेश्वरी प्राणदात्री पञ्चाशत् पीठरूपिणी ।
विसृङ्खला विविक्तस्था वीरमाता वियत्प्रसूः ।। १५६
ப்ராணேஶ்வரீ ப்ராணதா3த்ரீ பஞ்சாஶத் பீட2ரூபிணீ ।
விஸ்ருங்க1லா விவிக்தஸ்தா2 வீரமாதாவியத்ப்ரஸூ:।।156

அந்த அஹம்ப்ரத்யயம்தான் (अहंप्रत्ययम्) பரமேஶ்வரரென, மாயையினால் தெரிந்து கொள்ளவில்லை எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஶ்லோகம் 156:- (831) **प्राणेश्वरी** - இந்திரியங்களுக்கெல்லாம் அதிஷ்டானமாக இருப்பவள். (832) **प्राणदात्री** - ஸகல ஜகத்திற்கும் உயிரை அளிப்பவள். (833) **पञ्चाशत् पीठरूपिणी** - ஐம்பது பீடங்களின் ரூபமாக இருப்பவள். இங்கு ஐம்பது என்று சொன்னதானது ஐம்பத்தொன்று என அர்த்தம் கொள்ள வேண்டும். அந்த பீடங்களை வாமகேஶ்வர தந்த்ரத்தில் **(वामकेश्वर तन्त्रम्)** கூறிய ச்லோகங்கள்-

कामरूपं वाराणसी नेपालं पौण्ड्र वर्धनम् ।
पुरस्थिरं कान्यकुब्जं पूर्णशैलं तदाऽर्बुदम् ।।
आम्रातकेश्वरैकाम्रं त्रिस्रोतः कामकोटकम् ।
कैलासं भृगुनगरं केदारं चन्द्र पुष्करम् ।।
श्रीपीठमोङ्कारपीठं जालन्ध्रं मालवं तथा ।
अट्टहासञ्च विरजं राजगेहं महापदम् ।।
कोलापुरमेलापुरं कालेशश्च जयन्तिका ।।
उज्जयिन्यपि चित्राच क्षीरकं हस्तिनापुरम् ।
उड्डीशश्च प्रयागाख्यः षष्टी मायापुरी तथा ।।
जलेशो मलयः शैलः मेरुर्गिरिवरस्तथा ।
महेन्द्रो वामनश्चैव हिरण्य पुरमेव च ।।
महालक्ष्मी पुरोड्यानं छाया छत्रं अतः परम् ।
एते पीठाः समुद्दिष्टाः मातृकाः रूपकाः स्थिताः ।।

காமரூபம் வாராணஸீ நேபாளம் பௌ1ண்ட்3ர வர்த4னம்।
புரஸ்தி2ரம் கான்யகுப்3ஜம் பூர்ணஶைலம் ததா3ऽர்பு3த3ம் ।।
ஆம்ராதகேஶ்வரைகாம்ரம் த்ரிஸ்த்ரோத: காமகோடகம்।

मुकुन्दा मुक्तिनिलया मूलविग्रहरूपिणी ।
भावज्ञा भवरोगघ्नी भवचक्र प्रवर्तिनी ।।१५७
छन्दः सारा शास्त्रसारा मन्त्रसारा तलोदरी।
उदारकीर्तिरुद्दाम वैभवा वर्णरूपिणी ।।१५८

முகுந்தா³ முக்தி நிலயா மூலவிக்³ரஹ ரூபிணீ ।
பா⁴வஜ்ஞா ப⁴வரோக³க்⁴னீ ப⁴வசக்ர ப்ரவர்த்தினீ ।। 157
ச²ந்த³: ஸாரா ஶாஸ்த்ரஸாரா மந்த்ரஸாரா த¹லோத³ரீ।
உதா³ரகீர்த்திருத்³தா³ம வைப⁴வா வர்ண ரூபிணீ ।।158

கைலாஸம் ப்⁴ருகு³நக³ரம் கேதா³ரம் சந்த்³ர புஷ்கரம் ।।
ஶ்ரீபீட²மோங்காரபீட²ம் ஜாலந்த்⁴ரம் மாலவம் ததா² ।
அட்டஹாஸஞ்ச விரஜம் ராஜகே³ஹம் மஹாபத³ம் ।।
கோலாபுரமேலாபுரம் காலேஶஶ்ச ஜயந்திகா¹ ।।
உஜ்ஜயின்யபி சித்ராச க்ஷீரக¹ம் ஹஸ்திநாபுரம் ।
உட்³டீ³ஶஶ்ச ப்ரயாகா³க்²ய: ஷஷ்டீ மாயாபுரீ ததா² ।।
ஜலேஶோ மலய: ஶைல: மேருர் கி³ரிவரஸ்ததா² ।
மஹேந்த்³ரோ வாமனஶ்சைவ ஹிரண்ய புரமேவ ச ।।
மஹாலக்ஷ்மீ புரோட்³யானம் சா²யா ச²த்ரம் அத: பரம் ।
ஏதே பீடா²: ஸமுத்³தி³ஷ்டா: மாத்ருகா: ரூபகா: ஸ்தி²தா: ।।

என்று *(834)* **विसृङ्खला** - கர்மா முதலிய விலங்கற்றவள். *(835)* **विविक्तस्था** - பரிசுத்தமான இடத்தில் இருப்பவள். *(836)* **वीरमाता** - வீரர்களுக்குத் தாயாக இருப்பவள். ஶ்ரீ அம்பாளை உபாஸிப்பதில் நல்ல முயற்சி உள்ளவர்களுக்கு வீரர்கள் எனப் பெயர். *(837)* **वियत्प्रसूः** - ஆகாசத்தை உண்டு பண்ணினவள்.

ஶ்லோகம் 157:- *(838)* **मुकुन्दा** - மோக்ஷத்தைக் கொடுப்பவள். *(839)* **मुक्तिनिलया** - (ஐந்து விதமான) முக்திக்கு இருப்பிடமாக இருப்பவள். ஸாலோக்ய **(सालोक्य)**, ஸாமீப்ய **(सामीप्य)**, ஸாரூப்ய **(सारूप्य)**, ஸாயுஜ்ய **(सायुज्य)**, கைவல்யம் **(कैवल्य)** என்று முக்திகள் ஐந்து விதம். *(840)* **मूलविग्रह रूपिणी** - எல்லா சக்திகளுக்கும் மூல பூ⁴தமான **(मूलभूतम्)** ராஜராஜேஶ்வரீ ஸ்வரூபமாக இருப்பவள்.

(841) **भावज्ञा** - எல்லோருடைய அபிப்பிராயங்களையும்

जन्ममृत्यु जरातप्त जनविश्रान्ति दायिनी ।
सर्वोपनिषदुद्घुष्टा शान्त्यतीत कलात्मिका ।।१५९

ஜன்ம ம்ருத்யு ஜராத'ப்த ஜனவிஶ்ராந்தி தா³யினீ ।
ஸர்வோபநிஷது³த்³கு⁴ஷ்டா ஶாந்த்யதீதகலாத்மிகா ।।159

அறிகிறவள். (842) **भवरोगघ्नी** - ஸம்ஸாரமாகிற ரோகத்தைப் போக்குகிறவள். ஸ்ரீ ராமாயணத்திலும்,

नान्यं पश्यामि भैषज्यं अन्तरेण वृषध्वजम् ।

நான்யம் பஶ்யாமி பை⁴ஷஜ்யம் அந்த'ரேண வ்ருஷத்⁴வஜம்।

பரமசிவனை ஆராதிப்பதைத் தவிர்த்து, ஸம்ஸார ரோகத்திற்கு வேறு மருந்தில்லை என்று கூறியுள்ளது. (843) **भवचक्र प्रवर्तिनी** - ஸம்ஸார சக்கிரத்தை மேன்மேலும் நடக்கும்படி செய்கிறவள்.

சுலோகம் 158:- (844) **छन्दः सारा** - வேதங்களின் ஸாரமான உபநிஷத்துக்களின் ரூபமாக இருப்பவள். (845) **शास्त्रसारा** - சாஸ்திரங்களின் ஸாரமாக இருப்பவள். (846) **मन्त्रसारा** - மந்திரங்களின் ஸாரமாக இருப்பவள். (847) **तलोदरी** - கரதலம்போல் **(करतलम्)** சிறுத்த வயிற்றை உடையவள். (848) **उदारकीर्तिः** - மிகச் சிறந்த கீர்த்தியை உடையவள். (849) **उद्दाम वैभवा** - கட்டிலடங்காத வைபவத்தை உடையவள். (850) **वर्णरूपिणी** - வர்ணங்களின் ரூபமாக இருப்பவள். அதாவது வர்ணமென்றால் பிராம்மணர், க்ஷத்ரியர் முதலிய ஜாதிகளைக் குறிக்கும். அக்ஷரங்களையும் குறிக்கும். அந்தந்த ஜாதிகளை ஸ்ரீ அம்பாளாக பா⁴வித்தால் **(भावम्)** ஒரு ஜாதியினரிடத்திலும் த்வேஷம் வருவதற்கு இடமில்லை. அப்படி த்வேஷம் வந்தால் ஸ்ரீ அம்பாளையே த்வேஷிப்பதாகும். அதனாலேயே நமது பெரியோர்கள் ஸகல ஜாதியினரையும் தெய்வமாகவே பா⁴வித்து வருகிறார்கள்.

சுலோகம் 159:- (851) **जन्म मृत्यु जरातप्त जनविश्रान्ति दायिनी** - பிறப்பு, இறப்பு, கிழத்தனம் இம்மூன்றினாலும் வருந்திய ஜனங்களுக்கு சிரம பரிஹாரத்தை **(श्रमपरिहारम्)** அளிப்பவள் (852) **सर्वोपनिषदुद्घुष्टा** - ஸகல உபநிஷத்துக்களாலும் கொண்டாடப்பட்டவள். (853) **शान्त्यतीत कलात्मिका** - 'ஶாந்த்யதீதம்' என்ற கலையின் ஸ்வரூபமாக இருப்பவள்.

गम्भीरा गगनान्तस्था गर्विता गानलोलुपा ।
कल्पनारहिता काष्ठाऽकान्ता कान्तार्ध विग्रहा।। १६०
कार्यकारण निर्मुक्ता कामकेलि तरङ्गिता ।
कनत्कनकताटङ्का लीलाविग्रह धारिणी ।। १६१

க[3]ம்பீ[4]ரா க[3]க[3]னாந்தஸ்தா[2] க[3]ர்விதா கா[3]னலோலுபா ।
கல்பனாரஹிதா காஷ்டா[2]ऽகாந்தா காந்தார்த[4] விக்[3]ரஹா।।
கார்ய காரண நிர்முக்தா காமகேலி தரங்கி[3]தா ।
க[1]னத்க[1]னக தா[1]டங்கா[1] லீலா விக்[3]ரஹ தா[4]ரிணீ ।। 161

'ஶாந்த்யதீத கலை' என்பது ஆகாசத்தில் இருக்கும் கலைக்குப் பெயர் என்று ஶைவாக[3]மத்தில் **(शैवागमम्)** *சொல்லிய வசனம்* **शान्त्यातीत कलाद्वैत निर्वाणानन्द बोधदा ।** ஶாந்த்யாதீத கலாத்[3]வைத நிர்வாணானந்த[3] போ[3]த[4]தா । *அந்த கலையுடன் வேறு படாதவளாக இருப்பவள் எனக் கருத்து.*

சுலோகம் 160:- (854) **गम्भीरा** *- (பெரிய மடு போல்) கம்பீரமாக இருப்பவள். பெரிய மடு போல் ஸ்ரீ அம்பாளை த்யானம் செய்தால், மந்திரத்தின் வீர்யம் அனுபவத்தில் புலப்படுமென ஶிவஸூத்ரத்தில்* **(शिवसूत्रम्)** *கூறப்படுகிறது.*

महाह्रदानुसन्धानात् मन्त्रवीर्यानुभवः
மஹாஹ்ரதா[3]நுஸந்தா[4]னாத் மந்த்ரவீர்யாநுப[4]வ:

என்று. (855) **गगनान्तस्था** *- தகராகாசத்தின் நடுவிலிருப்பவள். (856)* **गर्विता** *- கர்வத்துடன் இருப்பவள். உலகத்தை நிர்மாணம் செய்யும் ஸ்ரீ அம்பாளின் பராஹந்தைக்கு கர்வமெனப் பெயர். (857)* **गान लोलुपा** *- கா[3]னத்தில் (பாட்டில்) விசேஷமான ஆவல் கொண்டவள். (858)* **कल्पनारहिता-** *கல்பனைகள் அற்றவள். விஷய வாஸனைகளுக்கு கல்பனை எனப்பெயர். (859)* **काष्ठा** *- காஷ்டையாக இருப்பவள். வேதாந்த வாக்யங்களின் நிர்ணயத்திற்குக் காஷ்டை எனப் பெயர் (860)* **अकान्ता** *- துக்கத்தையும், பாபத்தையும் போக்குகிறவள். (861)* **कान्तार्ध विग्रहा-** *பரமசிவனை பாதி சரீரமாக உடையவள்.*

சுலோகம் 161:- (862) **कार्यकारण निर्मुक्ता** *- கார்ய காரணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவள். (863)* **कामकेलि तरङ्गिता** *- ஶ்ருங்கார லீலையின் அலை போன்றவள். (864)*

अजा क्षयविनिर्मुक्ता मुग्धा क्षिप्र प्रसादिनी।
अन्तर्मुखसमाराध्या बहिर्मुख सुदुर्लभा ।।१६२
त्रयी त्रिवर्गनिलया त्रिस्था त्रिपुरमालिनी ।
निरामया निरालम्बा स्वात्मारामा सुधासृतिः।।१६३
संसारपङ्क निर्मग्न समुद्धरण पण्डिता ।
यज्ञप्रिया यज्ञकर्त्री यजमान स्वरूपिणी ।।१६४

அஜா க்ஷயவிநிர்முக்தா முக்[3]தா[4] க்ஷிப்ர ப்ரஸாதி[3]னீ।
அந்தர்முக[2] ஸமாராத்[4]யா ப[3]ஹிர்முக[2] ஸுது[3]ர்லபா[4] ।।162
த்ரயீ த்ரிவர்க[3] நிலயா த்ரிஸ்தா[2] த்ரிபுர மாலினீ ।
நிராமயா நிராலம்பா[3] ஸ்வாத்மாராமா ஸுதா[4]ஸ்ருதி:।।163
ஸம்ஸாரப[1]ங்க[1] நிர்மக்[3]ன ஸமுத்[3]த[4]ரண பண்டி[3]தா ।
யஜ்ஞப்ரியா யஜ்ஞகர்த்ரீ யஜமான ஸ்வரூபிணீ ।।164

कनत्कनक ताटङ्का - *பிரகாசிக்கின்ற ஸ்வர்ணமயமான தாடங்கத்தை உடையவள். (865)* **लीलाविग्रह धारिणी** - *லீலையாய் (அனாயாஸமாய்) பல அவதாரங்களில் சரீரங்களை தரிப்பவள்.*

சுலோகம் 162:- (866) **अजा** - *பிறப்பில்லாதவள். (867)* **क्षयविनिर्मुक्ता** - *(ஆதலால்) மரணமற்றவள். அல்லது வீட்டில் ஸ்ரீ அம்பாளை வைத்து உபாஸிப்பவர்களுக்கு வெளியில் கிளம்பிச் செல்ல வேண்டிய ஸன்யாசம் இல்லாமலேயே முக்தியை அளிப்பவள். க்ஷயம் என்ற பதத்திற்கு வீடு, மரணம் என்ற இரண்டு பொருளுண்டு. (868)* **मुग्धा** - *அழகு வாய்ந்தவள். (869)* **क्षिप्र प्रसादिनी** - *சீக்கிரத்தில் பக்தர்களுக்கு ப்ரஸாதத்தைச் செய்கிறவள். (870)* **अन्तर्मुख समाराध्या** - *உள்நோக்கிப் பார்ப்பவர்களால் நன்கு ஆராதிக்கத் தகுந்தவள். (871)* **बहिर्मुख सुदुर्लभा** - *வெளிப்பார்வை உள்ளவர்களுக்கு (விஷயங்களில் ஈடுபட்டவர்களுக்கு) மிகவும் கிடைப்பதற்கு அரிதாக இருப்பவள்.*

சுலோகம் 163:- (872) **त्रयी** - *மூன்று வேதங்களின் ரூபமாக இருப்பவள். (873)* **त्रिवर्गनिलया** - *தர்மார்த்தகாமங்களில் இருப்பவள். (874)* **त्रिस्था** - *மூவுலகத்தைக்காட்டிலும் வேறுபடாதவள். (875)* **त्रिपुरमालिनी** - *த்ரிபுரமாலினீ தேவியாக*

धर्माधारा धनाध्यक्षा धनधान्य विवर्धिनी ।
विप्रप्रिया विप्ररूपा विश्वभ्रमण कारिणी ।। १६५

த[4]ர்மாதா[4]ரா த[4]னாத்[4]யக்ஷா த[4]னதா[4]ன்ய விவர்தி[4]னீ।
விப்ரப்ரியா விப்ரரூபா விஶ்வப்[4]ரமண கா[1]ரிணீ ।।165

இருப்பவள். ஸ்ரீ சக்ரத்தின் அந்தர்த[3]ஶாச்[1]க்ர (**अन्तर्दशाचक्रम्**) அபிமானினி தேவதைக்கு த்ரிபுரமாலினீ எனப் பெயர். (876) **निरामया** - ரோகங்களைப் போக்கினவள். (877) **निरालम्बा** - பிடிப்பற்றவள். இவளே எல்லா உலகத்திற்கும் பிடிப்பாக இருப்பவள். (878) **स्वात्मारामा** - தனது ஸ்வரூபத்திலேயே ரமிப்பவள் (879) **सुधासृतिः** - அம்ருத ப்ரவாஹ ரூபமாக இருப்பவள்.

ஶ்லோகம் 164:- (860) **संसारपङ्क निर्मग्न समुद्धरण पण्डिता** - ஸம்ஸாரமாகிற சேற்றில் மூழ்கியவர்களைக் கரையேற்றுவதில் ஸாமர்த்யம் வாய்ந்தவள். எவர்கள் சிறிது காலமாவது அம்பிகையை ஶரணமென அடைகிறார்களோ அவர்கள் எல்லையற்றதும், ஆழம் கண்டு பிடிக்க முடியாததுமான ஸம்ஸார ஸாகரத்திற்கு உள்ளாவதில்லை எனக் கூர்ம புராணத்தில் (**कूर्मपुराणम्**) சொல்லியிருக்கிறது-

ये मनागपि शर्वाणीं स्मरन्ति शरणार्थिनः ।
दुस्तरापार संसार सागरे न पतन्ति ते ।।

யே மனாக[3]பி ஶர்வாணீம் ஸ்மரந்தி ஶரணார்த்தி[2]ன: ।
து[3]ஸ்த்தராபா[1]ர ஸம்ஸார ஸாக[3]ரே ந பதந்தி தே ।।

(881) **यज्ञप्रिया** - யாகங்களில் அன்பு கொண்டவள். (882) **यज्ञकर्त्री** - யக்ஞம் செய்கிறவரின் பத்னியின் ஸ்வரூபமாக இருப்பவள். யக்ஞம் செய்கிறவரை சிவனாயும், சிவனுடைய பத்னியை தீ[3]க்ஷா என்றும், அவளிடத்தில் பிறந்த புத்ரனை ஸந்தானம் என்றும் லிங்கபுராணம் கூறுகிறது. (883) **यजमान स्वरूपिणी** - யாகம் செய்யும் எஜமானனின் ஸ்வரூபமாக இருப்பவள்.

ஶ்லோகம் 165:- (884) **धर्माधारा** - தர்மத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பவள். (885) **धनाध्यक्षा** - தனங்களுக்கு (பொருள்களுக்கு) அதிபதியாக இருப்பவள். அல்லது குபேர ரூபமாக இருப்பவள். (886) **धनधान्य विवर्धिनी** - தனம், நெல்

முதலிய தான்யம் இவைகளை நன்கு வ்ருத்தி செய்கிறவள். (887) विप्रप्रिया -விப்ரர்களிடத்தில் ப்ரியமுள்ளவள். வேதம், சாஸ்திரம் முதலிய வித்யைகளை உடைய பிராம்மணர்களுக்கு விப்ரர்கள் எனப் பெயர் என்று ப்ரும்மவைவர்த்தம் **(ब्रह्मवैवर्तम्)** கூறுகிறது:

जन्मना ब्राह्मणो ज्ञेयः संस्कारैः द्विज उच्यते।
विद्यया याति विप्रत्वं त्रिभिः श्रोत्रिय उच्यते।।

ஜன்மனா ப்3ராஹ்மணோ ஜ்ஞேய:
ஸம்ஸ்காரை: த்3விஜ உச்1யதே ।
வித்3யயா யாதி விப்1ரத்வம்
த்ரிபி4: ஶ்ரோத்ரிய உச்1யதே ।।

(888) विप्ररूपा - (அப்படிப்பட்ட) ப்ராம்மண ரூபமாக இருப்பவள். அதாவது இம்மாதிரியான பெரியோர்களை பூஜித்தால் ஸ்ரீ அம்பாளை பூஜித்ததாக ஆகும். வேத வித்துக்களுடைய சரீரத்தில் ஸர்வ தேவதைகளும் வஸிப்பதாயும், அவர்களை நித்யம் நமஸ்கரித்து பூஜிக்க வேண்டுமென்றும் கூறுகிறது-

यावतीर्वै देवतास्तास्सर्वा वेदविदि ब्राह्मणे वसन्ति ।
तस्मात् ब्राह्मणेभ्यो वेदविद्भ्यो दिवे दिवे नमस्कुर्यात्।

யாவதீ1ர்வை தே3வதாஸ் தா1ஸ்ஸர்வா வேத3விதி3 ப்3ராஹ்மணே வஸந்தி । தஸ்மாத் ப்3ராஹ்மணேப்4யோ வேத3வித்3ப்4யோ தி3வே தி3வே நமஸ்கு1ர்யாத் ।

அல்லது 'விப்ரப்ரியா' என்பதற்கு ப்ராமணர்களை முன்பு இருந்ததைக் காட்டிலும் புஷ்டி அடையும்படி செய்கிறாள். அதாவது ஸ்ரீ அம்பிகையின் மந்திர ஜபாதிகளினால் மேன்மேலும் ப்ரும்ம தேஜஸ்ஸை வ்ருத்தியாகும்படி செய்கிறாள் எனக் கருத்து. ஆபஸ்தம்ப3 ஸ்ம்ருதியிலும் **(आपस्तम्बस्मृति)**, ப்ராம்மணர்களைப் பிறர் அவமதித்தால் ப்ராம்மணர்களுக்கு தேஜஸ் வளருமென்றும், பூஜித்தால் தேஜஸ் குறையும் என்றும், பால் கறந்ததும் பசு சோர்வை அடைகிறதென்றும், மறுபடியும் புல் முதலிய ஆஹாரத்தால் சோர்வை போக்கி மறுபடி பாலை வ்ருத்தி செய்வது போல் மந்திர ஜப, ஹோமங்களால் தேஜஸ்ஸை வ்ருத்தி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

विश्वग्रासा विद्रुमाभा वैष्णवी विष्णुरूपिणी।
अयोनिर्योनि निलया कूटस्था कुलरूपिणी ।। १६६
वीरगोष्टीप्रिया वीरा नैष्कर्म्या नादरूपिणी ।
विज्ञानकलना कल्या विदग्धा बैन्दवासना ।। १६७

விஶ்வக்[3]ராஸா வித்[3]ருமாபா[4]
வைஷ்ணவீ விஷ்ணு ரூபிணீ ।
அயோநிர் யோனி நிலயா கூடஸ்தா[2] குலரூபிணீ ।।166
வீரகோ[3]ஷ்டீப்ரியா வீரா நைஷ்கர்ம்யா நாத[3]ரூபிணீ।
விஞானக[1]லனா க[1]ல்யா வித[3]க்[3]தா[4] பை[3]ந்த[3]வாஸனா।।167

अपमानात् तपोवृद्धिः सन्मानात्तपसः क्षयः ।
अर्चितः पूजितो विप्रः दुग्धा गौरिव सीदति ।।
आप्यायते यथाहस्सु तृणैरमृत संभवैः ।
एवं जपैश्च होमैश्च पुनराप्यायते द्विजः ।।

அபமானாத் தபோவ்ருத்[3]தி[4]: ஸன்மானாத் தபஸ: க்ஷய: ।
அர்ச்சித: பூஜிதோ விப்[1]ர: து[3]க்[3]தா[4] கௌ[3]ரிவ ஸீத[3]தி ।।
ஆப்யாயதே யதா[2]ஹஸ்ஸு த்ருணைரம்ருத ஸம்ப[4]வை:।
ஏவம் ஜபைஶ்ச ஹோமைஶ்ச புனராப்யாயதே த்[3]விஜ: ।।

என்று (889) **विश्वभ्रमण कारिणी** - எல்லா ப்ரும்மாண்டங்களையும் சுற்றும்படிச் செய்கிறவள். அதாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், இவைகளை திரும்பத் திரும்ப வரும்படி செய்கிறவள்.

சுலோகம் 166:- (890) **विश्वग्रासा** - ப்ரளய காலத்தில் எல்லா உலகங்களையும் ஸம்ஹரிப்பவள். (891) **विद्रुमाभा** - பவழம் போல் சிவப்பு நிறத்தை உடையவள். (892) **वैष्णवी** - விஷ்ணுவின் சக்தியாக இருப்பவள். அதாவது மஹாலக்ஷ்மியாக இருப்பவள். (893) **विष्णुरूपिणी** - விஷ்ணுவின் ரூபமாக இருப்பவள். (894) **अयोनिः** - காரணமில்லாதவள். அதாவது எதிலிருந்தும் பிறக்காதவள் எனக் கருத்து. (895) **योनि निलया** - யோனியாயும் (காரணமாயும்) நிலயமாயும். (லயத்திற்கு ஸ்தான-மாயும்) இருப்பவள். அல்லது யோனி என்றால் மாயை. நிலயம் என்றால் அதில் இருப்பவள். மாயையினால்தான்

तत्वाधिका तत्त्वमयी तत्त्वमर्थ स्वरूपिणी ।
सामगानप्रिया सौम्या सदाशिव कुटुम्बिनी ।। १६८

தத்வாதி4கா தத்த்வமயீ தத்த்வமர்த்த2 ஸ்வரூபிணீ ।
ஸாமகா3னப்ரியா ஸௌம்யா ஸதா3ஶிவ குடும்பி3னீ ।। 168

